

# கலசக்தி

ஆண்டு மலர்

உழைப்பு, உறுதி, பிரகாசம், இவற்றிற்குப் புகழ் பெற்றவை




பெங்கால் பல்புகளே.

நாதப்பிரம்மத்தை உணர்த்தி அழியாப் புகழ்பெற்ற சாதுவின்

SRI RENUKA FILMS LTD. MADRAS

7 NOV 1946
MADRAS



நாகய்யா நடிக்கும்

# தியாகய்யா

டைரக்ஷன்
நாகய்யா

இன்றே பாருங்கள்


புது வருஷ பரிசு
ஜாப் தொல்லையை
அடியோடு ஒழிக்க
புத்தம் புதிய வழி
M.U.A.C'S
மானஸம்ரக்ஷணம்
S.D.சுப்புலக்ஷ்மி
காளி N.ரத்னம்.
T.R.ராமச்சந்திரன்
C.T.ராஜகாந்தம்.
G.பட்டு அய்யர்
V.N. ஜானகி
மகோன்னதமான
பிரசார
படம்!
S.I.P
ரிலீஸ்
PUBLICITIES
டைரக்ஷன்:— K.சுப்ரமண்யம் B.A., B.L. & C.S.V. அய்யர்.

தமிழ் நாடெங்கும் விரைவில் வெளிவருகிறது!




# NARASU PICTURES CIRCUIT,

*Head Office :*

**Jaya Mansions,**
**Poonamallee High Road, MADRAS.**

*Branch Office :*

**Gandhinagar,**
**BEZWADA**

# S. S. S.

இன்றைக்கு செய்ய முடியுமானதை, நாளைக்கு என்று ஒத்தி வைக்காதது, உங்கள் புது வருஷ சங்கற்பமாக இருக்கட்டும்.

## சேமித்து வைத்து

# தேசிய பாதுகாப்பு பத்திரங்களை வாங்குங்கள்

1. சாதாரண அறிவுக்குப் புலப்படக் கூடியது.
2. அது சிக்கன வழக்கத்தை ஊட்டுகிறது.
3. உங்கள் பணத்தைப் பாதுகாப்பான இடத்தில் வைக்கிறீர்கள்.
4. வருமான வரி இல்லாமல், நியாயமான வட்டியை நீங்கள் பெறுகிறீர்கள். உங்கள் பணம் 50-சத விகிதம் அதிகமாகிறது.
5. வேண்டும்போது பணத்தைப் பெறலாம்.
6. நீங்கள் உங்கள் எதிர்காலத்திற்கும், உங்கள் குழந்தைகளின் எதிர் காலத்திற்கும் தேடிவைக்கிறீர்கள்.

## இப்பொழுதே வாங்குங்கள்

போஸ்ட் ஆபீசுகள், சேவிங்ஸ் பீரோக்கள் அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளிட மிருந்து கிடைக்கும்.

# நவசக்தி



விலை ரூ. இரண்டு.

டிஸம்பர், '44—ஜனவரி, '45

தி
**பாங்க் ஆப் ஹிந்துஸ்தான்**
**லிமிடெட்**
120, அரமனைக்காரத் தெரு, சென்னை.
(ஸ்தாபிதம் 1929)

பிக்ஸெட் டிபாசிட்டுகளுக்கும் சேவிங்ஸ் டிபாசிட்டுகளுக்கும் நல்ல வட்டி யளிக்கிறது. செக் மூலம் பணம் வாங்கலாம்.

தென்னிந்தியாவில் ஏழு கிளைகள் உள்ளன.

வியாபாரிகளுக்கு அட்வான்ஸ் வசதிகள் அளிக்கிறது.

விபரங்களுக்கு எழுதுக.

டி. ராகவேந்திர ராவ்,
போன்: 2521. காரியதரிசி.



உத்திரவாதமுள்ள
வெள்ளிப் பாத்திரங்களுக்கும்
தங்க நகைகளுக்கும்

**கோட்டா**
**ஆள்வார் செட்டி & ஸன்ஸ்**
நகை வியாபாரிகள்
சைனா பஜார், மதராஸ்.

—:c:—

பாக்டரி:
11, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு
டெலிபோன். 2602.



இந்த மலரில் பிரசுரமாயிருக்கும் பிளாக்குகள் எல்லாம் எங்கள் கம்பெனியில் செய்யப்பட்டவை. பிளாக்குகள் நன்றாகவும் சுத்தமாகவும் விரைவாகவும் செய்து தரப்படும்.

★

விவரங்களுக்கு எழுதவும்:
**ஸ்பார்ட்டன் அண்டு கோ.**
10, பிராட்வே : சென்னை



பாரதி லீலை
ஒன்றுமில்லை சும்மா
புத்த பக்தி
சிற்பியின் கனவு

இன்னும் எல்லாவிதமான புத்தகங்களும் கிடைக்கும்

விபரங்களுக்கு எழுதுக:
**நவசக்தி காரியாலயம்**
மயிலாப்பூர் : மதராஸ்

5

சுவாமி



சுத்தானந்த பாரதியார்



பெ. நா. அப்புஸ்வாமி



ந. பிச்சமூர்த்தி

ராவ்சாகிப்



வையாபுரிப் பிள்ளை



கி. வா. ஜகந்நாதன்



ஏ. ஜி. வெங்கடாச்சாரி



“கல்கி”



கம்பதாசன்



க. நா. சுப்பிரமணியம்



பி. ஆர். நாராயணன்



கே. சுப்பிரமணியம்



ஏ. என். ஆர். சிரோன்மணி



டாக்டர். டி. எம். திருமூர்த்தி



க. குருசாமி



ஸ்ரீ. சதாசிவம்



எம். மன். எம். பாவலர்



கா. ஸ்ரீ ஸ்ரீ.



ரா. ஸ்ரீ. தேசிகன்



புரொபசர் அ. முத்தையா



ஆர். கே பார்த்தசாரதி



தங்கவேல்



ஆர். வி.



பூவாளூர் சுந்தரராமன்



'ராமி'



வி. ஜி. ஸ்ரீநிவாசன்



புரசு பாலகிருஷ்ணன்



ரா. வெங்கடாசலம்



சியாமளா பாலகிருஷ்ணன்



சரஸ்வதி பாக



எம். எஸ். கமலா



ரா. ஆறுமுகம்



கி. ரா.



கே. எம். ஷெரிப்



“பாசாக”



சம்பத்



பே. தூரன்

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ஜயபேரிகை - பாரதியார் ... | 1 |
| சங்கு முழங்கிடுவோம் - சுத்தானந்த பாரதி. | 2 |
| பாரத நாடு - கே. சுப்பிரமணியம் ... | 3 |
| பெண்களும் கல்வியும் - திரு வி. க. ... | 4 |
| விடுதலை இலக்கியம் - ஆசிரியர் ... | 5 |
| புத்தபகவான் அருள்மொழித் தொகை - ராவ் சாகிப் எஸ். வையாபுரிப்பிள்ளை ... | 9 |
| முயற்சி செய்வார்களா? - டாக்டர் பி. சுப்பராயன் ... | 12 |
| எக்ஸ்ரே கிரணங்கள் - ஜே. பி. மாணிக்கம், பெ. நா. அப்புஸ்வாமி ... | 13 |
| எல்லாரும் ஒரு குலம் - ராவ் பகதூர் டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி ... | 15 |
| காட்டுரோஜா - "கிருபா" ... | 16 |
| கவிதையும் பிறகலைகளும் - ரா. ஸ்ரீ. தேசிகன் | 17 |
| அந்திப் பறவை - ந. பிச்சமூர்த்தி ... | 20 |
| புது வாழ்வு - கே. ராமநாதன் ... | 21 |
| பசுவும் கன்றும் - கோவை என். லக்ஷ்மணன் | 23 |
| சோற்றுக் கவலை - ராமகிருஷ்ணன் ... | 25 |
| தமிழர் திருநாள் - "தமிழ் ஒளி" ... | 28 |
| மண்சுமந்த கதை - கி. வா. ஜகந்நாதன் ... | 29 |
| தென்றலின் தீர்ப்பு - விஜயரங்கள் ... | 32 |
| வாணமும் கவி உள்ளமும் - ஆர். கே. பார்த்தசாரதி, எம். ஏ., எல். டி. ... | 33 |
| தேசபக்தர் திருக்கூட்டம் - கூத்தன் ... | 37 |
| வாழ்வளிக்கும் வாழை - கே. எஸ். ஜம்புநாதன் ... | 38 |
| சினிமாக் கதை - பி. ஆர். நாராயணன், எம்.ஏ. | 41 |
| காதலர் கண்கள் - திருமலை இராமாநுஜன். | 43 |
| வெற்றிச் சின்னம் - "விஜயஸ்ரீ" ... | 45 |
| சந்தோஷமும் ஸௌக்கியமும் - ஏ. ஜி. வெங்கடாச்சாரி ... | 48 |
| பத்திரிகை நிருபர் - பண்டிட் ஏ. எஸ். ஆர். சிரோமணி ... | 50 |
| கலைந்த கோயில் - எஸ். பி. ராமச்சந்திரன் ... | 52 |
| மதுவிலக்கு - "கம்பதாஸன்" ... | 54 |

| | பக்கம் |
|---|---|
| புது வருஷ வாழ்த்து - "வங்கத் தமிழன்"... | 56 |
| நிர்விகற்ப சமாதி - "புதுமைப் பித்தன்"... | 57 |
| பொங்கல் கட்டுரை - க. நா. சுப்பிரமணியம். | 60 |
| வில்லினை யெட்டா - பாரதியார். | (படம்) |
| சிவாஜி படை எழுச்சி. | (படம்) |
| அபரஞ்சியின் பச்சை - பாசரசு ... | 62 |
| நவீன இலக்கியம் ... | 64 |
| நியாய வெறி - "சுகி" ... | 67 |
| ஆறுதல் - கா. ஸ்ரீ. ஸ்ரீ. ... | 69 |
| பொங்கல் பெருநாள் - கா. மு. ஷெரீப் ... | 72 |
| சொல்லும் செயலும் - ரோகிணி" ... | 73 |
| ஒட்டும் உறவும் - வி. ஜி. ஸ்ரீநிவாஸன் ... | 81 |
| ஏழையின் திருட்டு - "சங்கரராம்" ... | 83 |
| கலியாண சங்கடம் - பூவாளூர் சுந்தரராமன். | 86 |
| வருங்கால வாழ்வு - அ. முத்தையா, எம். ஏ. | 93 |
| வனப்பேச்சி - ரா. வெங்கடாசலம் ... | 90 |
| அழைப்பு - பெ. தூரன் ... | |
| குமாரி பாமாவின் நடனத் தோற்றங்கள் ... | |
| மாதாவின் முகம் - புரசு பாலகிருஷ்ணன் ... | 97 |
| ஐப்பசிப் பெருக்கு - சரசுவதி பாசு ... | 101 |
| வாழ்வு விளக்கம் - "ராமி" ... | 103 |
| அங்கம்மா - ஜி. சதாசிவம் ... | 109 |
| வாழ்வின் வெற்றி - சம்பத் ... | 112 |
| நிர்மலா - சு. ரா. ... | 121 |
| இந்தக் காதல் - என். நடராஜன் ... | 129 |
| ஆனந்தன் - எம். எஸ். கமலா ... | 130 |
| நந்திவர்மன் - ரா. ஆறுமுகம் ... | 134 |
| உதய தாரகைகள் | (படங்கள்) |
| பாரியின் பரி - அ. குருசாமி, பி.ஏ., எல்.டி. | 137 |
| கடைசி சந்திப்பு - சுந்தரம் ... | 141 |
| பிரச்னை - சியாமளா பாலகிருஷ்ணன் ... | 143 |
| ஸ்ரீலஸ்ரீ வாசகர் ஸ்வாமி - கி. ரா. ... | 145 |
| மீண்டும் வருமா? - பார்வதி சோதரன் ... | 147 |
| கதைக் காதல் - நாடகமணி எம். என். எம். பாவலர் ... | 149 |
| வாழிய செந்தமிழ் (மங்களம்) ... | 152 |

# சமர்ப்பணம்

தமிழ்த் தாயின் திருவடிகளில் இவ் வாண்டு மலரை சமர்ப்பிக்கின்றோம். இஃது எங்கள் கன்னி முயற்சி. ஆயினும் எங்கள் முயற்சியின வெற்றியைப் பார்க்கும்போது பெருமை கொள்கிறோம்.

ஆண்டு மலர் வெளியிடுவதென்று சொன்னால் அது ஒரு பெரிய காரியம். அளவு கடந்த வசதியுள்ளவர்களுங்கூட மலைப்பதுண்டு. எங்களுக்குப் போதுமான வசதி கிடையாது. ஆனால் எங்களிடம் வற்றாத பொக்கிஷமாயிருந்தது ஒன்றே ஒன்று. அதுதான் எங்கள் ஆர்வம்.

‘அன்பே தகழியா ஆர்வமே நெய்யாக என்புருகு சிந்தை இடுதிரியாக’க் கொண்டு இம் மலரைக் கொணர்ந்துளோம்.

முகப்புப் படமாக விளங்குவது இரவியின் தோற்றம். இப் படத்தின் மூலம் ஓவியர் ‘சாரதி’ கண்ணையும் கருத்தையும் கவர்கின்றார். இம் முகப்புப் படம் அன்பர் பலர் தம் சிந்தை பறித்துவிட்டது. ஆகவே, நமது அன்பர்களுக்கு இஃது ஒன்றே பூர்ண திருப்தி யளிக்கும் என நம்புகிறோம்.

‘ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்’ என்றார் இளங்கோ அடிகள். ஞாயிறு வணக்கம் தமிழரின் நெடுநாட் பழக்கம். ஒளி தருவது ஞாயிறு; உணர்ச்சி யளிப்பது ஞாயிறு; சோர்வு போக்குவது ஞாயிறு; அறிவு தருவது ஞாயிறு. ஆதலின் ஞாயிறை வணங்குவோம்.

பாரதியாரின் பாட்டல்கள் இரண்டுக்குச் சித்திரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. நாட்டியம், சங்கீதம் முதலிய துறைகளில் முன்னுக்கு வந்துகொண்டிருக்கும் இளைஞர் சிலரது படங்கள் இந்த மலரில் காட்சி யளிக்கின்றன.

இன்னும், கட்டுரைகளும் கதைகளும் ஏராளமா யிருக்கின்றன. அன்பர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் என்று நம்புகிறோம்.

# ஜய பேரிகை

பல்லவி

ஜய பேரிகை கொட்டடா—கொட்டடா
ஜய பேரிகை கொட்டடா!

சரணம்

பயமெனும் பேய்தனை யடித்தோம்—பொய்மைப்
பாம்பைப் பிளந் துயிரைக் குடித்தோம்
விய னுல கனைத்தையும் அமுதென நுகரும்
வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம். (ஜய பேரிகை)

இரவியி னொளி யிடைக் குளித்தோம்—ஒளி
யின் னமுதினை யுண்டு களித்தோம்
கரவினில் வந்துயிர்க் குலத்தினை யழிக்கும்
காலன் நடு நடுங்க விழித்தோம். (ஜய பேரிகை)

காக்கை, குருவி யெங்கள் ஜாதி—நீள்
கடலு மலையு மெங்கள் கூட்டம்
நோக்குந் திசை யெலாம் நாமன்றி வேறில்லை;
நோக்க நோக்கக் களி யாட்டம். (ஜய பேரிகை)



# சங்கு முழங்கிடுவோம்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

காம்போதி—ரூபகம்

1

சங்கு முழங்கிடுவோம்—வெற்றித்
தாரைகள் ஊதிடுவோம் . .
பொங்கும் புதுயுகத்தின்—வளர்
புன்னகை பூத்தது பார் !

2

சண்டைப் பிசாசுகளின்—குண்டுச்
சத்தமும் பித்தமுமே . .
மண்டை யுடைத்துக் கொண்டே—எல்லாம்
மண்ணாக மாறிவிடும்

3

நள்ளிரவிற் பகைக்கும்—புலி
நரிகளின் கூட்டம்—அன்பு
வெள்ளம் எழுந்ததுவும்—எங்கோ
விரைந்து சென்றொழியும்

4

கிழக்கு வெளுக்குதுபார்—புதுக்
கிளிகள் பேசிடக்கேள்
வழக்குத் தீர்ந்ததப்பா—இனி
வரும் புதுயுகமே

5

பொன்னிளங் காலையிலே—சுதந்தரம்
போரின் வெற்றி முழங்கும் . .
இன்னுங் கவலையிங்கேன்—மனிதா
இன்பத்தை நம்பிடுவாய் !

6

நெஞ்சில் உறுதிகொண்டே—மிக
நேரிய நன்னடையால்,
அஞ்சாத ஒற்றுமையால்—நாம்
அற்புதம் செய்திடுவோம்.

# பாரத நாடு

(தென்னு தமிழ்க்குதவு சீலன் என்ற காவடிச்சிந்து மெட்டு)

விண்ணவர் போற்றும் பாரத நாடு—உண்மை
வீரர்கள் தோன்றியதிந்த நாடு—எழில்
செழிய பொழில்களுள்ள —பெரிய
நதிகளுற்ற நாடு பாரத நாடு

மலைகளில் பெருத்த மலை நாடு—உயர்
மாமுனிகள் வாழ்ந்ததிந்த நாடு—நல்ல
வாணிப மிகுதியுள்ள—மாட்சிமை
படைத்ததிந்த நாடு பாரத நாடு

கற்புக் கரசிகளின் நாடு—தூய
கண்ணியம் மிகப்படைத்த நாடு—அருங்
கைத்தொழில் நலமலிந்த—கதர்
நெச்வு மிகுந்த நாடு பாரத நாடு

வேத சாஸ்திரம் நிறைந்த நாடு—பெரும்
வேள்விகள் முடித்த தீரர் நாடு—உலகில்
நாகரிக மென்ற கொடி—நாட்டியே
பறக்கவைத்த நாடு பாரத நாடு

நீதிநெறி அரசர்கள் நாடு—வாய்மை
நிறைந்துள்ள கவிகளின் நாடு—பல
மேதாவிகள் பிறந்துள்ள—தாதாக்களால்
நிறைந்த நாடு பாரத நாடு

தேசாபிமானிகளின் நாடு—உயர்
தேவர்கள் துணையைக்கொண்ட நாடு—உண்மை
வீரர்கள் பலர்பிறந்து—தீரச்செயல்
புரிந்த நாடு பாரத நாடு

தருமம் வளர்த்த திருநாடு—உயர்
தவத்திற் சிறந்ததிந்த நாடு—உலகில்
கல்வியெனும் செல்வமதைக்—கண்டு
மகிழ்ந்ததிந்த நாடு பாரத நாடு

வரஉரிமை யிழந்த நாடு—பெரும்
வன்மைச் சுதந்திரப்போர் செய்நாடு—புகழ்
காந்தி மகானைப்பற்றிச்—சாந்தியுடன்
உழைக்கும் நாடு பாரத நாடு.

திரு கே. சுப்பிரமணியம்

# பெண்களும் கல்வியும்

**திரு. வி. க.**

இப்பொழுது பெண் மக்கள் பல விடங்களில் ஆண்மக்களைப் போலவே கல்வி பயில்கிறார்கள்; உயர் கல்வியும் பெறுகிறார்கள். இக்கல்வி பெறுவோருட் சிலர், தாய்மைநிலை பெறுதற்கஞ்சி, வாளா காலங்கழிக்கின்றனர். இவரைக் கற்றவரென்று யான் கூறேன். பெண்வாழ்வின் நோக்கம் என்னை? தாய்மை நிலை பெறுதலன்றோ? இறைவன் படைப்பு நோக்கமும் அஃதே. இயற்கையின் நோக்கமும் அஃதே. இரண்டுக்கும் மாறுபட்டுப் பெண்ணை வாழச் செய்யுங் கல்வி கல்வியாகுங் கொல்! இயற்கையோடியைந்த வாழ்வை அளிக்கக்கூடிய கல்வியே பெண்ணிற்கு வேண்டற்பாலது. ஆணுக்கும் அத்தகைக் கல்வியே வேண்டற்பாலது. இளமையிலேயே இயற்கை நுட்பம் உணர்த்தக்கூடிய கல்வியைப் பெண்மக்கட்குப் பெற்றோர் ஊட்டுவது நலம்.

### இயற்கைக் கல்வி

பெற்றோர் தமது பெண்ணிற்கு இளமையிலேயே இயற்கையைக் காட்டிக் காட்டி, ஆடல் பாடல் அறிவுறுத்தல் வேண்டும். மரம், செடி, கொடி, மலை, நிலா, ஞாயிறு முதலிய இயற்கைப் பொருள் நினைவு தோன்றும் வழியில், பெண்ணை ஆடுமாறும் பாடுமாறும் பெற்றோர் வளர்த்தல் வேண்டும். நமது நாட்டில் பழைய தாய்மார் பனைப்பாட்டு, மலைப்பாட்டு, நிலாப் பாட்டு, வானப் பாட்டு, பறவைப் பாட்டு முதலிய இயற்கைப் பாடல்களைப் பாடிப் பாடிக் குழந்தைகளைத் தாலாட்டுவது வழக்கம். இயற்கையைப் பற்றிய பல கதைகள் பாட்டிமார் சொல்வதுமுண்டு. திருடன் கதை, கொலைக்கதை, குடியன்கதை, பேய்க்கதை, அச்சமூட்டுங் கதை முதலிய ஆபாசக் கதைகளைக் குழந்தைகட்கு எவருஞ் சொல்லுதலே கூடாது. மரஞ் செடிகள் அழகாக வளர்ந்து காய்கனிகள் தருவதையும், காற்று வீசுவதையும், ஞாயிறு ஒளி உமிழ்வதையும் காட்டி, 'இம்மரஞ் செடியும் காற்றும் ஞாயிறும் ஏதாவது பயன் கருதி இக்கடன்களாற்றுகின்றனவா' என்று பெற்றோர் அடிக்கடி இளம் பெண்ணுடன் பேசிப் பேசிப் பரோபகார சிந்தையை அவள் உள்ளத்தில் பெருக்கல் வேண்டும்.

### கடவுள் நினைவு

பின் தாயாகும் பெண்ணுள்ளத்தில் பயன் கருதாது தொண்டாற்றும் அன்புக் கடவுளைப் பதியச்செய்யத் தாய்தந்தையர் முயலல் வேண்டும். பெற்றோர் குழந்தையைத் தமது பிள்ளை என்று கருதுவதைப் பார்க்கினும், அதைத் தாய்மைக்குரிய ஒன்று என்று வளர்ப்பது சிறப்பு.

### போலி நாவல்களின் புன்மை

இளம்பெண்கள், தீய எண்ணங்களை ஊட்ட வல்ல களிக் கதைகளை - போலி நாவல்களை - மறக்கதைகளை இன்னோரன்ன பிறவற்றைக் கேட்டலுமாகாது; அவைகளைக் கையால் தொடுதலுமாகாது. இதில் பெற்றோர் பெருங்கவலை செலுத்தல் வேண்டும். போலி நாவல்கள் பெண்ணுலகையே கெடுத்து வருகின்றன. 'தங்கள் வாழ்வை நஞ்சென எரிப்பது போலி நாவல்' என்று பெண்மணிகள் கருதுவார்களாக. போலி நாவல்களையும் போலி நாடகங்களையும் படித்து,நல்வாழ்வையும் இழந்து, பின்னை வருந்தி வருந்தி மாண்ட சில பெண்மக்கள் கதைகள் எனக்குத் தெரியும். அருமைக் குழந்தைகளே! போலி நாவல்களைப் படியாதேயுங்கள்; தொடாதேயுங்கள்; உங்கள் வாழ்வு குலைந்து போகும்; நோய்வாய்ப்பட்டு வருந்தி வருந்திச் சாவீர்கள்; கடவுள் உங்களை ஏன் உலகிற்கு அனுப்பினார்? பிஞ்சில் பழுத்து உதிரவா? நோய் வாய்ப்பட்டு வருந்தவா? அண்ணன் தம்பி உற்றார் உறவினர் ஊரார் 'சீ சீ' என்று பேசிப் பேசி உங்களை ஒதுக்கவா? அன்று; அன்று, 'நீங்கள் தாயாதல்வேண்டும்; நல்வாழ்வு பெறல் வேண்டும்; பேரின்பம் பெறல் வேண்டும்' என்பது ஆண்டவன் நோக்கம். அப்பொருவாழ்விற்கெனப் பிறந்த நீங்கள், சிறு நாவல் பித்துக்கொண்டு வாழ்வையா குலைத்துக் கொள்வது? போலி நாவல்களைப் படியாதேயுங்கள்; படியாதேயுங்கள். போலி நாவல்கள் இளம்பெண்கள் கண்களிற் படாதவாறு பெற்றோரும் ஆசிரியன்மாரும் காப்பாராக.

### உடற்கூற்றுக் கல்வி

பெண் மக்கட்கு உடற்கூறு நன்றாகத் தெரிதல் வேண்டும். உடற்கூற்று நூல்கள் செவ்வனே பெண்மக்கட்குப் போதிக்கப்படல் வேண்டும். உடல்கூறு தெரியாது எத்துணையோ பெண்கள் பலவழியிலும் கெடுகிறார்கள். உடல் இயல்பு நன்றாகத் தெரிந்தால், அதற்கேற்ற வண்ணம் வாழ்வு நடாத்தல் அவர்களால் இயலும். கருக்குழியைப் பற்றியும், அதன் சினைகளாக உள்ள சிறு சிறு உறுப்புக்களைப் பற்றியும், அவைகளின் தொடர் உறுப்புகளைப்பற்றியும் பெண்மக்கள் போதிய உணர்வு பெறுதல் அவசியம். சில பெண்மக்கள் உறுப்புகளின் நிலையுணராது, வழிதுறை தெரியாது உழன்று, இன்பமிழந்து நிற்பதோடு,வேறு பல நோய்களையும் தேடிப் பாழ்படுகிறார்கள். உடற் கூற்றை உணர்ந்து கொள்வதோடு, அகத்திணை (உள்ளொழுக்கு - மனோதத்துவம்) தெரிந்து கொள்ள, அதைப்பற்றிய நூல்களைப் பெண்மக்கள் பயிலுதல் நலம். மக்கள் இயல்பை அளந்தறியும் ஆற்றல் பெண்மக்கட்கு இருத்தல் அவசியம்; அவசியம்.

(பெண்ணின் பெருமை)

# விடுதலை இலக்கியம்

ஆசிரியர்

சமீபகாலமாகத் தமிழ் இலக்கியத்தைப் பற்றிய சிந்தனை எல்லாருடைய மனத்தையும் அலைத்து வருகிறது. எந்த மாதிரியான இலக்கியம் தேவை? இதுதான் கேள்வி.

" எந்தமாதிரி இலக்கியமா? இது என்ன ஐயா! கேள்வி. அவரவர்களுக்கு எந்த எந்தமாதிரி எழுத முடியுமோ அந்த அந்த மாதிரி எழுதிவிட்டுப் போகட்டுமே இதற்குக் கட்டுப்பாடு என்ன? கேள்வி எதற்கு? நீ இப்படித்தான் எழுதவேண்டும் என்ற நிர்ப்பந்தம் எதற்கு? " என்கிறார்கள்.

இப்படிச் சொல்கிறவர்கள் மிகுந்த சாத்விகர்கள். அதனால் தான் இவ்வளவுடன் விட்டார்கள். இன்னும் சிலர் இருக்கின்றனர். அவர்கள் 'ஹர' என்று கிளம்பக் கூடியவர்கள். அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமோ?

" நீ யாரையா? எங்களைக் கட்டுப்பாடு செய்ய? இப்படித்தான் எழுத வேண்டும், அப்படித்தான் எழுதவேண்டும் என்பது என்ன உன் உத்திரவா? உன்னைக் கேட்டுத்தான் எழுத வேண்டுமோ? எங்கள் இஷ்டம். எது வேண்டுமானாலும் எழுதுவோம். எங்கள் கற்பனையில் காய்க்கும் கனிகளையெல்லாம் வழங்குவோம்." என்று சீறுகிறார்கள்.

மற்றுஞ் சிலர் இருக்கின்றனர். இவர்கள் காரியவாதிகள். இவர்கள் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா?

" நமக்கு ஏனையா வம்பு? நாம் யாருக்காக எழுதுகிறோம்? பொது மக்களுக்காக. அவர்கள் எதை அதிகமாக விரும்புகிறார்களோ அதை எழுதிக் குவிப்போம். புத்தகமும் ஏராளமாக விற்கும். காசும் புரளும்" என்கிறார்கள் இவர்கள்.



ஆனால் நமது கேள்வி என்ன? 'எந்தமாதிரி இலக்கியம் தேவை?' என்பது " இந்தமாதிரிதான் நீங்கள் எழுத வேண்டும்" என்று கட்டுப்படுத்துவது நம் வேலையன்று. ஆனால் இந்தமாதிரியான இலக்கியம் தேவை என்று சொல்ல நமக்கு உரிமை உண்டு. தேவையைப் பூர்த்தி செய்ய விருப்பமுள்ளவர்கள் அதன்படி எழுதலாம். இல்லாதவர்கள் எழுதவேண்டும் என்ற அடிபிடி கட்டாயமில்லை.

நோயாளிக்குள்ள நோய் இன்னது, அதற்கு இந்த மருந்து தேவை என்றுதான் சொல்லலாம்.

" நீ யாரையா! எனக்கு உத்தரவு போட? என் இஷ்டம் போலத்தான் மருந்து கொடுப்போன்." என்று சொன்னால் நாமென்ன செய்யலாம்? "மகனே! உன்சமர்த்து!" என்று கைவிட வேண்டியதுதான்.

அது போகட்டும். இப்போது நாம் எடுத்த விஷயத்துக்குப் போம். எந்தமாதிரி இலக்கியம் தேவை? யாருக்கு? நமக்கு! நாம் என்றால் யார்? தமிழராகிய நாம். பாரதநாட்டினராகிய நாம். நமக்கு எந்தமாதிரி இலக்கியம் தேவை?

நமது தேவையை எப்படி அறிய முடியும்? நமது நிலவரம் முதலில் தெரியவேண்டும். நாம் எந்த நிலையில் இருக்கிறோம். என்பதை அறிந்தால் தானே நமது தேவையை நிர்ணயிக்க முடியும்?

நாம் எந்நிலையிலிருக்கிறோம். அடிமைப்பட்டுக் கிடக்கிறோம். அரசியலில் அடிமை! பொருளாதாரத்தில் அடிமை! சமூகத்தில் அடிமை! இந்த மூன்று வகையிலும் அடிமைப் பட்டிருக்கிறோம்.

ஆக, இம்மூன்று வகை அடிமைத் தனத்தையும் ஒழிக்கும் இலக்கியம் எதுவோ அது நமக்குத் தேவை. இன்னும் சிறிது விரிவாகப் பேசலாம்.

இலக்கியம் இலக்கியம் என்று சொல்கிறார்களே! இதன் செயல் தான் என்ன? இதன் நோக்கம் என்ன?

வாழ்க்கையை உயர்த்துவது இலக்கியத்தின் நோக்கம். மனுஷ்யத் தன்மையை உயர்த்துவது இலக்கியத்தின் நோக்கம். வாழ்க்கையை உயர்த்துவது மனுஷ்யத் தன்மையை உயர்த்துவது என்று சொன்னால் இப்போதுள்ள வாழ்க்கை திருப்தியளிக்க வில்லை என்றுதானே அர்த்தம்? அதிலே மனுஷ்யத் தன்மை அவ்வளவாக இல்லை என்றுதானே பொருள்?

ரொம்ப சரி! இப்பேர்பட்டதொரு வாழ்க்கை முறையை ஆழக்குழி வெட்டிப் புதைக்கும் இலக்கியம் தேவை என்றுதான் நாம் சொல்கிறோம்.

வாழ்க்கை முறையில் அதிருப்தி ஏற்படக் காரணம் என்ன? நமது சமூக அமைப்பு தான். நமது சமூக அமைப்பு இப்படிச் சீர் கெடக் காரணம் என்ன? பொருளாதாரப் பித்தலாட்டம். பொருளாதாரத்தில் பித்தலாட்டம் ஏற்படுவானேன்? அரசியலில் தில்லு முல்லு நுழைந்ததால்.

ஆக, நமது வாழ்க்கை, சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகிய எல்லாவற்றிலும் அடிமைத்தனம் புரையோடி விட்டது. இந்த அழுகலை ஒழிக்கக் கூடிய

இலக்கியம் தேவை என்றுதான் சொல்கிறோம். இங்கேதான் பல நண்பர்கள் மருட்சி கொள்கிறார்கள்.

"ஹா! இலக்கியத்தில் அரசியலைப் புகுத்துவதா? சீச்சீ! கூடாது! கூடாது! அரசியலில்தான் ஆயிரம் பிளவிருக்கிறதே! அவ்வளவையும் கொண்டுவந்து இலக்கியத்திலும் புகுத்த வேண்டுமா? வேண்டாம் ஸ்வாமீ! வேண்டாம்! இலக்கியத்திலாவது பிளவில்லாம லிருக்கட்டும்." என்று உடனே ஆரவாரம் செய்கின்றனர் சிலர்.

"ஐயய்ய! இலக்கியத்திலே அரசியலைப் புகுத்தினால் அது வெறும் பிரச்சார இலக்கியமாகி விடுமே! சீச்சீ!" என்கின்றனர் மற்றுஞ் சிலர்.

ஐயா! இலக்கியத்தின் ஜோலி என்ன? பிரசாரம். உலக இலக்கியங்களை எல்லாம் ஆராய்ந்து பார்த்தால் முக்கால்வாசி பிரசார இலக்கியந்தான். நம் இலக்கியத்தை எடுத்துக் கொள்வோம். ராமாயண மகாபாரதங்கள் எல்லாம் பிரசார இலக்கியம் அல்லாது வேறு என்ன? பாஷையின் உற்பத்தியே பிரசாரம் தானே! இலக்கியத்தின் லக்ஷியம் வாழ்க்கை முறையை உயர்த்துவது—மனுஷ்யத் தன்மையை உயர்த்துவது—என்று சொன்னால்—பிரச்சாரம் மூலமாகத் தானே அதைச் செய்ய முடியும்? ஆகவே பிரச்சார இலக்கியமாகி விடுமே என்று மருள வேண்டியதில்லை.

நமது நாடு அடிமைப் பட்டுக் கிடக்கிறது. இந்த அடிமைத்தனத்தை ஒழிக்க வேண்டுவது இந்த தேசத்திலே பிறந்த ஒவ்வொருவருடைய முக்கிய கடமை. ஏதோ சில அரசியல் வாதிகள் செய்ய வேண்டிய வேலை அது என்று சொல்வது பைத்தியக்காரத்தனம். இந்த நாட்டு மனிதர் ஒவ்வொருவரும் அத்துறையில் உழைக்கவேண்டும். 'நீ என்ன ஐயா இப்படிச் சொல்கிறாய்? அரசியல் வாதி ஒருவன்தான் இந்த நாடு விடுதலை பெறவேண்டும் என்கிறானா? எங்களுக்கெல்லாம் அதிலே அக்கரையில்லை என்று நினைக்கிறாயோ? அந்தத் துடிப்பு எங்களுக்கும் இல்லாமலில்லை. நாங்களும் அந்த விடுதலை வேட்கையில் சிறிதும் குறைந்தவர்களல்ல" என்று நண்பர்கள் சொல்லலாம்.

ரொம்ப சரி! குருடன் வேண்டுவது கண்ணுக்குத்தான். ஆனால் அரசியல் வாதிக்கும், அதாவது பாரத நாட்டின் வீரசுதந்திரம் வேண்டும் தேச் பக்தனுக்கும் அவனுடைய தேசபக்தியில் எள்ளளவும் குறைபடாத நண்பர்களுக்கும் ஒரே ஒரு வித்தியாசம். என்ன? அரசியல்வாதி என்ன செய்கிறான். தேச விடுதலை என்ற ஒரே குறிக்கோள் மீது தாக்குகிறான். ஆனால் தேச விடுதலைக்காக ஆண்டவனுடன் அந்தரங்க மனுப்போடும் அன்பர்களோ பிரார்த்தனையுடன் நின்று விடுகிறார்கள். அவ்வளவுதான்.

அடிமைப்பட்டுக் கிடக்கும் பாரதமக்களின் விடுதலையே நம் முதல் லக்ஷியம். இரண்டாவது லக்ஷியமும் அதுவே. கடைசி லக்ஷியமும் அதுவே.

இந்த தேசம் அரசியல் விடுதலைபெற்று விட்டால் மாத்திரம் போதாது. அது ஒன்றினால் மாத்திரம் மக்களின் வாழ்க்கை முறை உயர்ந்து விடாது. பொருளாதார விடுதலையும் வேண்டும். சமூகவிடுதலையும் வேண்டும்.

அரசியல்வாதி, அரசியல் விடுதலை நோக்கிச் செல்லும்போது, மற்றவர்கள் என்ன செய்ய வேண்டும்? பொருளாதார, சமூக விடுதலைக்காகக் கிளர்ச்சி செய்ய வேண்டும். அது அரசியல் வாதிக்கு மிக்க உதவியா யிருக்கும். அது மாத்திரமல்ல அரசியல் வாதியின் உழைப்புக்குப் பரிபூரண வெற்றி யளிக்கும்.

இலக்கியமுனை, கலைமுனை, மென்கலைமுனை, பொருளாதார முனை, சமூக முனை ஆகிய பல்வேறு முனைகளிலும் நின்று தேசவிடுதலைக்கு அந்தரங்கப் பிரார்த்தனை பண்ணும் அன்பர்கள் கவனிக்க.

இப்படிச் சொல்லும்போது நமது அன்பர்கள் கோபங் கொள்வதில் பிரயோஜனமில்லை. "ஹர் ஹர!" என்று சண்டப் பிரசண்டமாகப் பேசிவிடலாம். அதனாலே வருகிற பயன் என்ன சாமீ? இருக்கிற விஷயம் எங்கேயாவது ஓடி ஒளிந்து போமா?

"இந்த நாட்டு அரசியல் வாதியைவிட நான் எந்த விதத்திலும் தேசபக்தியில் குறைந்தவனல்ல" என்று சொல்லும் அன்பர்களுக்குச் சொல்கிறோம். நல்லது. நமக்கு வேண்டுவதும் அதுவே.

ஆனால், இதிலே ஒரே ஒரு சின்ன விஷயம் கவனிக்கவேண்டும். உலகத்திலே மனிதர்கள் செய்யும் செயல்களை யெல்லாம் இரண்டு வகையில் பிரிக்கலாம். ஒன்று, புத்தி பூர்வமாகச் செய்வது. அதாவது, இந்தக் காரியம் செய்வதாலே இன்னது நேரும் என்று நன்றாக அறிந்து செய்வது. அதாவது, வேண்டுமென்றே செய்வது.

இன்னொன்று, அபுத்தி பூர்வமாகச் செய்வது. அதாவது என்ன? இந்தக் காரியம் செய்வதால் ஏற்படும் விளைவோ விபரீதமோ இன்னது என்று நன்றாக அறியாமல் செய்வது.

முன்னே கூறிய கோஷ்டியினரைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால்; நமது கவலையெல்லாம் யாரைப் பற்றித் தெரியுமோ? இரண்டாவதாகச் சொன்ன கூட்டத்தைப் பற்றியதுதான். இவர்கள் மிகவும் நல்லவர்கள்; அந்தரங்க பூர்வமாக இந்த தேசம் விடுதலை பெற வேண்டுபவர்கள்; இந்த நாட்டு மக்கள் எல்லாரும் மேல் நிலை எய்த விரும்புகிறவர்கள். அந்த ஆர்வத்தினாலே எவ்வளவோ வகையில் தொண்டு புரிகிறார்கள். இவர்கள் நோக்கம் என்னவோ மிக மிக உயர்ந்தது: மாசு படராதது. ஆனால், அதன் பலனோ விபரீதமா யிருக்கிறது.

மாதக் கணக்கில் அன்ன ஆகாரமில்லாமல் பட்டினியுடன் ஒருவன் வருகிறான். அவன் எதிரே கொண்டுபோய் சோற்றுப் பானையைக் கொடுக்கிறான் ஒருவன். சோற்றுப் பானை அளிப்பவனின் எண்ணம் என்னவோ மிக உயர்ந்தது. ஆனால், அதன் பலன்? விபரீதம்.

நமது தேசம் அடிமைப்பட்டு நீண்டகாலமாகிறது. நமது மக்களின் அறிவுச் சுதந்திரம், அரசியல் சுதந்திரம் எல்லாம் பறிபோய் பல காலமாகின்றது. அடிமைத்தனத்தின் விதை எது தெரியுமோ? தன்னம்பிக்கையில்லாதிருப்பதுதான்.

எந்த சமூகம் தன்னுடைய பலத்திலே நம்பிக்கையில்லாதிருக்கிறதோ - எந்த சமூகம் தனது சொந்த முயற்சியிலே உறுதி கொள்ளாது விதி என்றும், அதிர்ஷ்டம் என்றும் சொல்கிறதோ - எந்த சமூகம் பௌருஷத்தை இழந்து நிற்கிறதோ - அந்த சமூகம் அடிமைத்தனத்திலிருந்து மீள்வது அரிது.

தன்னம்பிக்கையின்மையாலே அடிமைத்தனம் ஏற்பட்டது என்று கூறினோம். அப்படியானால் அடிமைத்தனத்தை ஒழிக்க உபாயம் எது? தன்னம்பிக்கையூட்டுவது. சூரியன் வந்தால் இருள் தானே விலகாதா? தன்னம்பிக்கை ஏற்படுமானால் அடிமை விலங்கு தானே முறியாதா? ஆகவே, அரசியலில் கலவாது தேச்விடுதலைக்கு உழைப்பவர்கள் மக்களுக்குத் தன்னம்பிக்கையூட்டினால் அது விடுதலைக்குழைப்பதாகும்.

ஆனாலோ, இலக்கியத்திலே தீண்டாமை பாவிக்கும் அன்பர்கள் அப்படிச் செய்கிறார்களா? இல்லை. "நமது ச்க்தியில் என்ன ஐயா இருக்கிறது? எல்லாம் விதி. விதி வலிது. விதியின் முன் மனிதன் எம்மாத்திரம்?" இப்படியெல்லாம் சொல்வதும் - இம்மாதிரி கருத்துப்பட கதை எழுதுவதும் - நமது மக்களுக்குத் தோல்வி மனப்பான்மையுண்டு பண்ணும். தோல்வி மனப்பான்மையே அடிமைத் தனத்துக்கு ஆணிவேர்.

வாழ்வே ஒரு போராட்டம். 'விதி' என்று சொல்கிறார்களே! அதை மிதிப்பதில் போர். விதியை மிதிக்க வேண்டும். 'எடுத்த காரியம் யாவினும் வெற்றி' என்ற மன உறுதி கொண்டவர்கள் அதிலே வெற்றி காண்பார்கள். நமது பாரத தேசத்தின் பெண் திலகம் சாவித்திரி அதிலே வெற்றி பெற்றாள். நமது பாரத யுவர்களின் சிரோமணி மார்க்கண்டன் அதிலே வெற்றி பெற்றான்.

இந்த இரண்டுபேரின் கதைகளையும் பாரத ஸ்திரீகளும், யுவர்களும் தங்களின் வாழ்க்கைப் பாடமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

'விதி விதி' என்று பயப்படுவதெல்லாம் கையாலாகாதவன் பேசுகிற வார்த்தை. சோம்பேறிப் பேச்சு. ஓயாமல், சலியாமல் உழைப்பதற்கு முடியாதவன் தனது சோம்பேறித்தனத்தை - பேடித்தனத்தை - போர்த்திக் கொள்ள உபயோகிக்கும் போர்வை விதி.

ஆகவே! அரசியல் வாதியின் தேச பக்தியில் அணுவுங் குறையாத இலக்கிய அன்பர்களுக்குச் சொல்கிறோம். 'விதியின விளையாட்டு, விதி வலிது' என்றெல்லாம் மக்கள் மனதிலே பதியச் செய்வது, அடிமைத்தனத்தை நிரந்தரமாக்கும். ஆனால், இந்த 'விதி'க் கதைகளின் விளைவு இதுவாகும் என்று அறியாமல் செய்கிறார்கள்! பாவம்!

இன்னுமொரு விஷயம் என்ன தெரியுமா? இந்தத் தோல்வி ஏக்கம். "அவளை நான் காதலித்தேன். என்னை அவள் காதலித்தாள். அப்பா அம்மா வந்து காரியத்தைக் கெடுத்துவிட்டார்கள். அவள் தற்கொலை செய்து கொண்டாள். நான் தற்கொலை செய்து கொள்ளாமல் அவள் படத்தை வைத்துக் கொண்டு சாமியாராய் ஏங்கித் திரிகிறேன்" இந்த மாதிரியான கதைகள். இவை ஏராளம். அபுத்தி பூர்வமாகச் செய்கிற பிழை என்று சொன்னோமே! அந்த ரகத்தில் இந்தக் காதல் கதைகளும் சேரும்.

இம்மாதிரியான ஏக்கக் காதல் கதைகள் சமூகத்துக்கு விஷ வித்துக்கள். யுவர்களும், யுவதிகளும் ஏங்கித் திரியச் செய்பவை இக் காதல் கதைகளே! கலாசாலை மாணவர்கள் மாணவிகளைத் துன்புறுத்தத் தூண்டும் அஸ்திரங்கள் இக் காதல் கதைகளே! வாலிபர்களின் மன உறுதியைக் குலைப்பவை இக் காதல் கதைகளே! மலை புரண்டாலும் மனங் கலங்காதிருக்க வேண்டிய பாரத புத்திரர்கள் - 'கச்சணிந்த கொங்கை மாதர் கண்கள் வீசு போதினும் அச்சமில்லை' என்று கூறும் பாரத வீர வாலிபர்கள் மன ஏக்கங் கொண்டு - இரவு பகலாய் - உடல் நலிந்து - உளமுடைந்து நாசமாகச் செய்பவை இக் காதல் கதைகளே!

பார்த்தன், கர்ணன், பீமன் முதலிய வீரர்கள் வழிவந்த பாரத புத்திரர்கள் மனவலியின்றி மண் பூச்சிகளாய் பௌருஷமிழந்து வாழ வைப்பவை இக் காதல் கதைகளே!

நமது சமூகம் அடியோடு நாசமாக வேண்டுமா? நமது தேசத்திலே ஏராளமான பேடிகள் வேண்டுமா? நமது தேசத்திலே சொத்தைக் குழந்தைகள் கோடி கோடியாகப் பிறக்க வேண்டுமா? நமது தேசத்திலே இளைஞர்களும் பெண்களும் கோழிகளைப்போல் வாழ வேண்டுமா? கொடுங்கள் இந்த ஏக்கக் காதல் கதைகளை.

இந்தத் தோல்விக் காதல் நம் வாலிபர் இனத்தையே பாழாக்கும். வருங்கால சந்ததியை நாசமாக்கும். ஏக்கக் காதல் கதைகள் நம் வாலிபர்களை ஏக்கத்தில் ஆழ்த்தும்; வீரர்களாக்காது. நமது தேசத்துக்கு இப்போது வீரர் தேவை. எங்கும் காதலரல்ல.

"ஹஹ்ஹஹ்ஹா! இவன் யாரடா பைத்தியக்காரன். பத்தாம் பசலிப் பேர்வழி. 'காதல்' வேண்டாம் என்று சொல்வதைப் பாருங்கள்! காதல் இல்லாவிட்டால் உலகத்திலே என்ன ஐயா இருக்கிறது" என்று சில அன்பர்கள் கைகொட்டிச் சிரித்து ஆரவாரம் செய்வது கேட்கிறது!

மருந்து சாப்பிடுகிறோம். எதற்காக? உடம்பு குணமாயிருப்பதற்காக; சுகம் பெறுவதற்காக, ஆனால் அதே மருந்தை அளவுக்கு மீறி வழிதுறையில்லாமல் சாப்பிட்டாலோ! சுகம் உண்டாகுமா? விபரீதமே விளையும்.

"எதை நினைக்கிறாயோ அதே ஆகிறாய்" என்பது நம் நாட்டினர் கண்ட முடிபு. இந்தச் சிதைந்த காதல்களையே சதா படித்துப் படித்து நம் வாலிபர்களின் உள்ளம், உணர்ச்சி, உடல், வாழ்வு எல்லாம் சிதைகின்றன.

நமது நாட்டிலே தற்போது உள்ள கல்வி முறை, வாலிபர்களின் உள்ளம், உணர்ச்சி, உடல் வலி யாவற்றையும் சப்பி விடுகிறது என்று நம்மவர்கள் நீண்ட காலமாகக் கண்டித்து வருகிறார்கள்.

அந்தக் கல்வி முறை விட்டு வைத்திருக்கும் எஞ்சிய சக்தியையும் இந்தச் சிதைந்த காதல் சித்திரங்கள் கொள்ளை கொள்கின்றன.

இவ்வளவுக்கும் பலியான பின் நமது வருங்கால சந்ததி எப்படியிருக்கும்?

புத்தகங்களிலும், பத்திரிகைகளிலும் வருகின்ற' இந்தச் சிதைந்த சித்திரங்கள்தான் நமது வாழ்வைப் பாழ் பண்ணுகின்றன என்றால் சினிமாக்களோ அதைவிடப் படுமோசம்.

ஆபாசக்காதல் களஞ்சியம்! வாழ்வுக்கு ஒவ்வாத புராணக் குப்பைகள்! பூலோக வாசிகளை விட உயர்ந்தவர்கள்—தெய்வாம்சம் பெற்றவர்கள் -- என்று நம்மவர்கள் கருதும் தேவர்கள் இந்த சினிமாக்களிலே என்ன செய்கிறார்கள்? காதல் லீலை புரிகிறார்கள். கற்பு கற்பு என்று சொல்வதும், பிற மாதரைக் கண்ணெடுத்துப் பார்த்தலாகாது, என்பதும் இந்த 'தேவர்'களுக்கு விதி விலக்கு போலும்!

இந்த ஆபாசக் குப்பையை நம்மவர்கள் குழந்தை குட்டிகள், பெண்கள் சகிதம் சென்று பார்த்துவிட்டு வருகிறார்கள். இந்த இளம் குழந்தைகளின் மனதிலே பதிவது எது? ஆபாசக்காதல்!

இந்தமாதிரி ஆபாசமான படங்களைச் சிறுவர்கள் பார்க்கலாகாது என்று பிறநாடுகளிலே தடுக்கிறார்களாம். ஆனால் அடிமைப்பட்ட நம் பாரத நாட்டிலோ அதற்கு வழியில்லை.;

இந்த விஷக்காற்று இவ்வளவில் நிற்கவில்லை. சங்கீதம் நாட்டியம் ஆகிய இருகலைகளிலும் நம்மவர்களுக்கு அமோகமான ருசி ஏற்பட்டிருக்கிறது. இதை நாம் வரவேற்கிறோம். பள்ளிக்கூடங்களிலும் பிற இடங்களிலும் சிறுமிகளுக்கெல்லாம் நாட்டியம் கற்பிக்கப்படுகிறது. சுமார் ஐந்து வயதிலிருந்து 16 வயது வந்த பெண்கள் எல்லாம் இந்த நாட்டியம் பயில்கிறார்கள். பிறகு மேடைகளிலும் பொது மக்கள் முன் ஆடுகிறார்கள்.

அபிநயத்துக்காக இவர்கள் எடுத்துக் கொள்ளும் பாட்டுகள் எல்லாம் அநேகமாக சிருங்கார ரஸம் ததும்பும் பதங்களே!

> **வாசல் முன் நில்லாரே—ஒரு**
> **வாசகம் சொல்லாரே**
> **நேசமாகப் புல்லாரே.........**

என்று பதினெட்டு வயது இளம் பெண் ஒருத்தி அபிநயம் பிடித்தால் பார்க்கும் இளைஞர் மனத்திலே எத்தகைய உணர்ச்சி எழும்?

> **நேற்றந்தி நேரத்திலே**
> **நீராடுங் கரைதனிலே**
> **ஜாடைகாட்டி ............**

இம்மாதிரி அபிநயங்களுடன் ஒரு இளமங்கை சிருங்கார சேஷ்டை செய்தால் எப்படியிருக்கும்.

உண்மையில் சொல்கிறோம். பாரத தேசத்தின் விடுதலைக்கும் இந்த நாட்டியத்துக்கும் ஸ்னானப் பிராப்தி கூட இல்லை. காமம்! காமம்! நாட்டு மக்களையெல்லாம் காமுகர் கூட்டமாக்கும்! சிறு வயதிலிருந்தே இளம் பெண்களையெல்லாம் காமிகளாக்கும்! வேண்டாம்! வேண்டாம்! எது? இந்த சிருங்கார பாவம்!

திருவள்ளுவர் நினைத்தார் என்ன நினைத்தார்? பெண்ணைப் பற்றி நினைத்தார். பெண் என்றால் யார்! 'சோர்விலள் பெண்' என்றார். அதாவது என்ன? 'டைனமிக் போர்ஸ்' என்று ஆங்கிலத்திலே சொல்கிறார்களே! அம்மாதிரி இருக்கவேண்டும்.

சோர்வுற்றுக் கிடக்கும் மக்களுக்கு உற்சாகமும், வீரமும் ஊக்கமும் அளிப்பவள் பெண். அடிமைப் பட்டுள்ள பாரதத்துக்கு வீரமும், ஊக்கமும் ஊட்டும் நாட்டியம் நமக்குத் தேவை.

இதிலே வருந்தத்தக்க செயல் என்ன தெரியுமா? இந்த உளுத்துப்போன பதங்களைப்போல இக்காலத்திலும் பதங்கள் எழுதுகிறார்கள் சில பெரிய பெரிய அறிவாளிகள், நாட்டு மக்களுக்கு இதனால் எட்டுணையும் பயனில்லை.

ஐயா உங்கள் காதில் விழவில்லையா? பாரதத்தின் மக்கள் பஞ்சம் பஞ்சம், துன்பம், துன்பம் என்று கதறுவது காதில் விழவில்லையா? கட்டத் துணியில்லாமல் பிணத்தின் மீது கிடந்த துணியை எடுத்துக் கட்டும் துர்ப்பாக்கியம் நமது நாட்டில் ஏற்பட்டு விட்டதே! சோற்றுக்கில்லாமல் மக்கள் புழுக்கள் போல் துடித்துச் சாகிறார்களே! அம்மையும், காலராவும் மக்களை வாரிச் செல்கின்றனவே!

என்ன ஆட்டம்! என்ன கொம்மாளம்! என்ன களியாட்டம்!

இது விதியா? கடவுள் செயலா! விதி என்றும் கடவுள் செயல் என்றும் சொல்வது சோம்பேறித் தனம். மனிதன் செயல்.

மனிதன் செய்த விபரீதத்தை நாம் ஒழிப்போம்.

இந்த உலகத்திலே நம்மால் செய்ய முடியாதது ஒன்றுமில்லை. மலைகளைத் தாவுகிறான் மனிதன் கடல்களை அளக்கிறான் மனிதன் வானத்திலே பறக்கிறான் மனிதன் நதிகளின் போக்கையே திருப்புகிறான். மனிதன் உலகத்தையே ஆட்டி விடுகிறான் மனிதன்.

வாரீர் மனிதர்களே! நம்மால் ஆகாதது ஒன்றுமில்லை. நாம் செய்வோம்; செய்தே தீருவோம்.

பஞ்சத்தை ஒழிப்போம்! பசியைப் போக்குவோம். நோயை ஓட்டுவோம். அறியாமையைப் பொசுக்குவோம்! 'விதி' என்ற மாயையைப் பிளப்போம். விடுதலை அளிப்போம்! விடுதலை பெறுவோம். தன்னம்பிக்கை யூட்டுவோம் சிதைந்த பாரதத்தை ஒருங்கு சேர்ப்போம். வீழ்ந்த மக்களை வாழவைப்போம். கசந்த வாழ்வை இனிதாக்குவோம்.

# புத்த பகவான் அருள்மொழித் தொகை

ராவ்சாஹெப் எஸ். வையாபுரிப் பிள்ளை




புத்த பகவான் நமது பாரத நாட்டில் சுமார் கி. மு. 560-ல் அவதரித்தருளியவர். நமது நாட்டிற்கு என்றும் பெருமையளித்து வரும் பெரியோர்களுள் அவர் தலைசிறந்தவர். சமயத்தின் உண்மையான நோக்கத்தைக் கைவிட்டுப் புறத்துள்ள ஆசார அனுஷ்டானங்களிலே ஈடு பட்டு, மக்கள் சுயநலப் பிரியரராய் வாழ்ந்த காலத்தே, சமயத்தின் உண்மையான நோக்கம் இது என்று உபதேசித்து அதன்படி ஒழுகி அருள் - ஒழுக்கத்தையே அடிப்படையாகக் கொண்ட புதியதொரு மதத்தை நமது நாட்டில் நிலை நிறுத்தியவர். ஆனால், சுற்றிச் சூழ்ந்துள்ள சீனம் சிங்களம் முதலிய நாடுகளிலே இம்மதம் இன்றும் மக்களால் அனுசரிக்கப பட்டு வருகிறது. புத்தர் பிறந்த தாயகமாகிய நமது நாட்டிலோ அவரது பௌத்த மதம் வெகு காலமாக, கி. பி, 14-ம் நூற்றுண்டுவரை, அனுஷ்டானத்திலிருந்து பிற்பாடு முற்றும் மறைந்து விட்டது. இம் மறைவிற்குரிய காரணங்களை இங்கே ஆராய்தல் அவசியமன்று. ஆனால், அவற்றுள் ஒரு காரணத்தை மட்டும் கூறுமலிருக்க் முடியாது. நமது இந்து சமயத்தினர் பௌத்தக் கொள்கைக்களுள் சிறந்தனவற்றைத் தமது சமயத்தின் அடிப்படையாக்க் கொண்டு விட்டனர். ஆகவே, பௌத்த மதக் கொள்கைகளும் நமக்குரிய கொள்கைகளாகவே முடிந்தன. திருமாலின் அவதாரங்களுள் ஒன்றுகப் புத்த பகவானுங் கருதப் பட்டனர்.

பௌத்த மதக் கொள்கைகள் புத்த பகவானது அருளிச் செயல்களாகக் கருதப்படும் திரிபிடகம் முதலிய பாளி நூல்களில் அறியக்கிடக்கின்றன. எனினும் இவற்றினின்று மொழி பெயர்க்கப் பட்ட ஆங்கில நூல்களிலிருந்தே இவற்றைக் குறித்து நாம் தெரிந்து கொள்ள வேண்டுவதாயுள்ளது. நம்மவர்களுக்குப் பாளி மொழியைக் கற்கக் கூடிய வசதியிருந்தாலும் அதனுல் பயன் பெற்றுக்கொள்ள மறுக்கிருர்கள். தமிழில் இந் நூல்களின் மொழி பெயர்ப்புக்கள் அவசியமாகும்.

புத்த பகவானது அருளிச் செயல்கள் திரிபிடகம் என்று சொல்லப்படும் மூவகைத் தொகுதி நூல்களில் உள்ளன என்று மேலே கூறினேன். இம் மூவகைத் தொகுதி நூல்களும் முறையே விநய பிடகம், சுத்த பிடகம், அபிதம்ம பிடகம் என்று பெயர் பெறும். இவற்றின் அமைப்பும் பொருளும் பற்றி ஒன்பது அங்கங்களாகக் குறிப்பிடுதலு முண்டு. 1. சுத்தம் (சூத்ரம்) : வசன உபதேச மொழிகள் 2. கெய்யம் : வசனமும் செய்யுளும் கலந்து வந்த உபதேச மொழிகள் 3. வெய்யாகரணம் : விளக்க வுரைகள் 4. காதை : செய்யுட்கள் 5. உதானம் : நுண் மொழிகள் 6. இதிவுத்தகம் : 'இவ்வாறு புத்தர் கூறினுர்' என்று தொடங்கும் சிற்றுபதேசங்கள் 7. ஜாதகம் : புத்தரது முற் பிறப்புக்களின் சரித்திரம் 8. அற்புத தம்மம் : அற்புத நிகழ்ச்சிகளைப் பற்றிய வரலாறு 9. வெதல்லம் : வினுவிடையாக

அமைந்த உபதேசங்கள். இவ்வுபதேச மொழிகள் புத்த பகவானுடைய அருள் நிரம்பிய உள்ளப் பாங்கை நாம் உணரும்படியாகச் செய்கின்றன. ஓர் உதாரணம் தருகின்றேன்:

'அந்தக் காலத்தில் ஒரு பிக்ஷுவுக்கு வயிறு குழம்பிப் பேதியாயிற்று. அவர் தமது மலமூத்ராதிகளிலேயே விழுந்து கிடந்தார். புத்த பகவான் ஆனந்தருடன் பிக்ஷுக்கள் தங்கியிருக்கும் இடத்திற்கு வந்து முற்கூறிய பிக்ஷுவைக் கண்டார். அவரை யடுத்துச் சென்று, பிக்ஷுவே, உமக்கு உடம்பு என்ன செய்கிறது என்று கேட்டார்.

பிக்ஷு : பகவானே ! எனது வயிற்றுக் குழப்பத்தால் பேதியாகிறது.

புத்தர் : அப்படியானால் உம்மைப் பார்த்துக் கொள்ள யாராவது இருக்கிறார்களா ?

பிக்ஷு : இல்லை, பகவானே !

புத்தர் : மற்றப் பிக்ஷுக்கள் ஏன் உம்மைக் கவனிக்க வரவில்லை ?

பிக்ஷு : பகவானே ! மற்றப் பிக்ஷுக்களுக்கு ஒரு வகையிலும் நான் பயன படாதவன்.

அப்பொழுது ஆனந்தரிடத்தில் பகவான், 'ஆனந்தரே ! போய்க் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவாரும் ; நாம் இவரைக் கழுவி விடுவோம்' என்று சொன்னார். அப்படியே ஆனந்தரும் தண்ணீர் கொண்டு வந்தார். அப்போது பகவான் தண்ணீரை அந்தப் பிக்ஷுவின் மீது சொரிந்தார். ஆனந்தர் அவரை நன்றாகத் துடைத்துச் சுத்தம் செய்தார். பகவான் தலைப் பக்கத்தையும் ஆனந்தர் கால் பக்கத்தையும் தாங்கி அவரை எடுத்து அவருடைய படுக்கையிலே கிடத்தினார்கள். பின், பகவான் பிக்ஷு சங்கத்தைக் கூடச் செய்து அவர்களிடம் ' இன்ன இடத்தில் ஒருவர் நோயாளியாகப் படுத்திருக்கிறாரா ? ' என்று கேட்டார்.

பிக்ஷுக்கள் : இருக்கிறார், பகவானே !

புத்தர் : அப்படியானால் அவருக்கு என்ன நோய் ?

பிக்ஷுக்கள் : அவருக்கு வயிற்றுக் குழப்பத்தால் பேதி.

புத்தர் : அவரைக் கவனித்துக் கொள்ள யாராவது இருக்கிறார்களா ?

பிக்ஷுக்கள்: இல்லை, பகவானே!

புத்தர் : அப்படியானால் ஏன் உங்களில் ஒருவரும் அவரைக் கவனிக்கவில்லை ?

பிக்ஷுக்கள் : அந்த பிக்ஷு எங்களில் ஒருவருக்கும் பயன்படாதவர். அதனால் தான் ஒருவரும் அவரைக் கவனிக்கவில்லை.

புத்தர் : ஓ ! பிக்ஷுக்களே !! உங்களைக் கவனித்துக் கொள்ளத் தாயும் தந்தையும் இங்கே இல்லை. நீங்கள் ஒருவரை யொருவர் கவனித்துக் கொள்ளாமற் போனால், உங்களைக் கவனிப்பவர்கள் யார் ? எனக்கு வேண்டுவதைக் கவனிக்கும் ஒவ்வொரு பிக்ஷுவும் நோயாளியைக் கவனிக்க வேண்டும்.

இங்கே குறித்த சம்பாஷணை மிகவும் எளிமையாகவுள்ளது; ஆனால் நமது உள்ளத்தை அது தொட்டு விடுகிறது. அக்காலத்துப் பிக்ஷுக்களினுடைய தினசரி வாழ்க்கையில் ஓரம்சத்தைப் புலப்படுத்துகிறது. புத்த பகவானது அருள் நிரம்பிய உள்ளம் நமக்குத் தெளிவாகிறது. இது போன்ற சம்பாஷணைகள் உலக மக்களுக்கு எத்தனை பயன்பட வல்லன என்பதை எளிதில் உணர்ந்து கொள்ளலாம். சூத்திரங்களும் பாஷ்யங்களும் அறிவுக்குப் பயன்படலாம். ஆனால் உள்ளத்தைக் குழைவித்து நமது ஒழுக்கத்தைச் சீர்மைப் படுத்துவது புத்தர் கூறியதாக வழங்கும் அருள் மொழிகளேயாம்.

நமது முதற் பாவலரான வள்ளுவர் தம் பெருநூலில் புத்த பெருமானது அருள் மொழிகளில் ஒரு சிலவற்றைக் கையாண்டுள்ளாரெனின், இவ்வருள் மொழிகள் எத்தனை பெருமையுடையன! ஒழுக்கமே சிறந்தது என்றனர் புத்தர். வள்ளுவர் 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்று கூறினர். தமிழ் நீதி நூல்களில் மூன்று பொருள்கள் நான்கு பொருள்கள், ஐந்து பொருள்கள் என எண்முறைப் படுத்து அமைந்த நூல்கள் முறையே திரிகடுகம், நான்மணிக் கடிகை, சிறு பஞ்சமூலம், ஏலாதி என்பன. இம் முறையிலேயே புத்த பகவானது அருள் மொழிகள் சில தொகுக்கப் பட்டுள்ளன. இம்மொழிகள் 'அங்குத்தர நிகாயம்' என்று வழங்கும் தொகுதியில் அடங்கியுள்ளன. இந்த நிகாயம் சுத்த பிடகத்தில் நான்காவது தொகுதி. ஒன்று முதல் பதினொன்று பொருள் வரையுள்ள அருள் மொழித் தொகுதியை இந் நிகாயம் கொண்டுள்ளது. நான்கு விஷயங்களை உட்கொண்ட உபதேச மொழித் தொகுதியி லிருந்து ஓர் உதாரணம் தருகின்றேன்.

ஒரு முறை கிருஹபதியான அநாதபிண்டிகர் புத்த பகவானைத் தரிசிப்பதற்கு வந்தார். அவர் ஒரு புறமாக உட்கார்ந்திருக்க, பகவான் அவரைப் பார்த்துச் சொன்னதாவது :

கிருஹபதியே ! மிக விரும்பத்தக்கதும், அருமையானதும், மகிழத்தக்கதும் இவ்வுலகில் பெறுதற்கரியதுமான பேறு நான்கு உண்டு.

கிருஹபதி : நான்கு யாவை ?

புத்தர் : எனக்குச் செல்வம் நெறிதவறாத முறையிலே வருக என்று விரும்புவது ; இச் செல்வமே முதல் பேறு.

நெறிதவறாத முறையிலே செல்வம் பெற்று, நானும் எனது பந்து மித்திரர்களும் ஆசிரியர்களும் நல்ல புகழ் அடைக. இப்புகழே இரண்டாவது பேறு.

நெறிதவறாத முறையிலே செல்வம் பெற்று, அவ்வண்ணமே நல்ல புகழ் பெற்று, நீடித்த ஆயுளோடு வாழுக. இந் நீடித்த ஆயுளே மூன்றாவது பேறு.

நெறிதவறாத முறையிலே செல்வம் பெற்று, நல்ல புகழ் பெற்று, நீடித்த ஆயுள் பெற்று, நான் மரண மடைந்ததும் உயர்கதிக்குச் செல்ல வேண்டும். இவ்வுயர்கதியே நான்காவது பேறு.

கிருஹபதியே ! இவைகள் தாம் விரும்பத் தக்கதும் அருமையானதும் மகிழத்தக்கதுமான நால்வகைப் பேறுகள்.

இப்பேறுகளை எவ்வாறு அடைவது என்றால், அதற்கு நான்கு உபாயங்கள் உண்டு. அவைகள் நிறைந்த பக்தி, நிறைந்த ஒழுக்கம், நிறைந்த அருள், நிறைந்த அறிவு.

நிறைந்த பக்தியாவது யாது?

ததாகதனுடைய ஞானோதயத்தில் பூர்ணமான நம்பிக்கை யுடையனாவது. அதாவது, அவன் தான் ஒப்பாரும் மிக்காருமின்றிச் சிறந்தவன்; அவன்தான் அருகந்தன்; அவன்தான் ஞான பரிபூரணன்; அவன்தான் புத்தன்: என்பனவற்றை உறுதியாய் நம்பினவனாவது. இந் நம்பிக்கை தான் நிறைந்த பக்தி யென்று சொல்லப்படுவது.

நிறைந்த ஒழுக்கமாவது யாது?

உயிர்க்கொலை, சோர்வை யுண்டுபண்ணும் மது இவற்றை ஒழித்தல். இதுதான் நிறைந்த ஒழுக்கம் எனப்படுவது.

நிறைந்த அருளாவது யாது?

இல்வாழ்க்கையிலிருந்து லோபம் அற்ற உள்ளத்தோடு, தூய வள்ளன்மை பூண்டு, தான் என்பதை முற்றும் மறந்து, யாரும் விரும்பி ஒன்றைக் கேட்கும் தகுதியும் கொடுப்பதில் மனம் நிரம்பிய மகிழ்ச்சியு முடையனாக இருத்தலே நிறைந்த அருள் என்று சொல்லப்படுவது.

நிறைந்த அறிவாவது யாது?

லோபத்தினாலும் தீய அவாவினாலும் மீதூரப்பட்ட ஒருவன்தான் செய்யத் தகாதனவற்றைச் செய்வான்; தான் செய்ய வேண்டுவனவற்றைச் செய்ய மாட்டான். இக் காரணத்தால் அவனுக்கு நற்புகழும் இன்பமும் இலவாகின்றன. இங்ஙனமே வஞ்சகத்தினாலும் சோர்வினாலும் மடியினாலும் பலபட மனம் கவலுதலாலும் துணிவு இன்றிச் சஞ்சலப்படுவதாலும் ஒருவன் தான் செய்ய வேண்டுவனவற்றைச் செய்ய மாட்டான். இக் காரணத்தால் அவனுக்கு நல்ல புகழும் இன்பமும் இல்லையாய் ஒழியும்.

கிருஹபதியே! ஆரியனாயுள்ள சிஷ்யன் பற்றுள்ளமும் தீய அவாவும் மனத்தின் கீழ்மையிலிருந்து தோன்றுகின்றன என்பதனால் அவற்றையும், அங்ஙனமே வஞ்சகம், சோர்வு, கவலை, சஞ்சலம் முதலிய கீழ்மை விளைவுகளையும் நீக்கிவிடுவான். இவ்வாறு நீக்குகின்ற சிஷ்யனே அறிவு மிக்கவன்; பரந்த புகழ் பெறுபவன்; தெளிந்த காட்சி யுள்ளவன். இவனே நிறைந்த அறிவுள்ளவனாவான்.

இந்த நான்கு உபாயங்களும், கிருஹபதியே! முற்கூறிய, விரும்பத் தக்க, அரிய, மகிழத் தக்க, பெறுவதற்கு அரிய நான்கு பேறுகளையும் அடைவதற்கு உதவுகின்றன. கிருஹபதியே! இங்கே கூறிய வகையிற் சிறந்த ஆரிய சிஷ்யன் ஊக்க முள்ள முயற்சியினால் பெற்று, கைவலிமையினால் பெருகச் செய்து, மெய்வேர்வை நிலத்தில் சிந்த நெறிதவறு ஒழுக்கத்தினால் தூயதாக்கிய செல்வத்தினாலே நான்கு வகையான நற்செயல்களைச் செய்வான்.

இந்த நான்கு யாவை?

இங்குக் கூறியவாறு முயற்சியினால் பெற்ற செல்வத்தைக் கொண்டு ஆரிய சிஷ்யன் தானே இன்பமுற்று மகிழ்வான். நிறைந்த இன்பத்தைச் செய்து கொள்ளுவான். தன் தாய் தந்தையரையும் மனைவி மக்களையும் தன் ஏவலாளரையும் தன் சுற்றத்தார் தோழர்களையும் இன்புறுத்தி மகிழ்விப்பான். இவ்வகையாக நிறைந்த இன்பத்தைச் செய்து கொள்ளுகிறான். இது தான் முதற் செயல். கிருஹபதியே! பின்னும் இவ் ஆரிய சிஷ்யன் இவ்வாறு பெற்ற செல்வத்தினாலே எவ்வகைத் துன்பமும் தன்னை அணுகாதபடி செய்து கொள்ளுகிறான். நெருப்பினாலும் நீரினாலும் அரசனாலும் திருடனாலும் பகைவனாலும் தாயாதி முதலியோராலும் தனக்குத் துன்பங்கள் விளையாதபடி செய்து கொள்ளுகிறான். தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் முயற்சிகளைச் செய்து அரண் செய்து கொள்ளுகிறான். கிருஹபதியே! இது தான் இரண்டாவது செயல். இதனால் புண்ணியத்தைப் பெற்றுத் தக்க படி பலனை அடைகிறான்.

பின்னும் கிருஹபதியே! இவ்வாறு பெற்ற செல்வத்தினாலே இவ் ஆரிய சிஷ்யன் ஐந்துவேள்விகளையும் இயற்றுகிறான். சுற்றத்தார், விருந்ினர், பிதிர்க்கள், அரசன், தெய்வம் என்ற ஐவரைக் குறித்தனவே இவ்வேள்விகள். இதுதான் மூன்றாவது செயல். இதனால் புண்ணியத்தைப் பெற்றுத் தக்கபடி பலன் அடைகிறான்.

மீண்டும், கிருஹபதியே! இவ்வாறு பெற்ற செல்வத்தினாலே இவ் ஆரிய சிஷ்யன் நற்பாத்திரங்களான துறவிகளுக்கும் அந்தணர்களுக்கும் ஈகையைச் செய்கிறான். இத் துறவிகள் முதலியோர் சோம்பல் சோர்வு இல்லாதவர்களாயும் அன்பும் பொறையுங் கொண்டவர்களாயும் தம்மைச் சீலத்தில் பழக்கியவர்களாயும் இருத்தல் வேண்டும். இவர்களுக்குச் செய்யும் ஈகை எல்லாவற்றிலும் சிறந்த பயனைத் தரவல்லது. இது தான் தெய்வத் தன்மை பொருந்திய ஈகை; சுகத்தை அளித்து உயர் கதிக்குச் செலுத்துவது. இதுதான் நான்காவது செயல். இதனால் புண்ணியம் பெற்று நல்ல பலனை அடைகிறான்.

ஆகையால், கிருஹபதியே! இவ்வகையான ஆரிய சிஷ்யன் மேற்கூறியவாறு பெற்ற செல்வத்தினாலே இங்குக் கூறிய நால் வகைப் புண்ணியச் செயல்களைச் செய்கிறான். இந் நால்வகைப் புண்ணியச் செயல்களுக்கன்றிப் பிறவாறு செலவு செய்யப் பட்ட பொருள் 'நன்றியில் செல்வம்' என்றும் புண்ணியத்தையடைந்து அதனால் தக்கபடி பயன் பெறுதற்கு உதவாத செல்வம் என்றும்சொல்லப்படும். ஆனால், கிருஹபதியே! இந் நால்வகைப் புண்ணியச் செயல்களின் பொருட்டாகப் பொருள் செலவாகுமாயின், அது 'நன்றியுள் செல்வம்' என்றும் புண்ணியத்தை அடைந்து தக்கபடி பயன்பெறுதற்கு உதவும் செல்வம் என்றும் பெயர் பெறும்.

புத்த பகவானது அருள் மொழிகள் அனைத்தையும் தமிழில் மொழி பெயர்த்துத் தமிழ் மக்கள் பயனடையச் செய்ய வேண்டுவது இன்றியமையாததாகும். இம் முயற்சியில் தமிழறிஞர்கள் ஈடுபடும்படி இறைவன் அருள்புரிக.

# முயற்சி செய்வார்களா?

• டாக்டர் பி. சுப்பராயன் •

மகாத்மா காந்தி வெளியில் வந்ததிலிருந்து, தற்போதைய அரசியல் நிலைமையைத் திருத்துவதற்காகத் தம்மால் இயன்றது செய்து கொண்டிருக்கின்றார். முதல் முதலாக வைஸிராயிடத்தில் தாமும் காரியக் கமிட்டி அங்கத்தினர்களும் சந்திப்பதற்கு இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டார். தேசிய அரசாங்கம் அமைத்தால் அந்த அரசாங்கம் இந்த யுத்தத்தில் ஆங்கிலேயர்களுடனும் அமெரிக்கர்களுடனும் ஒன்று சேர்ந்து, ஜெர்மானியரையும், ஜப்பானியரையும் முறி''டிப்பதற்கு உதவி செய்யுமென்றும் வாக்களித்தார். ஆனால், வைஸிராய் காரணமில்லாமல், காந்திஜீயைப் பார்ப்பதிலோ, அல்லது காரியக்கமிட்டி அங்கத்தினர்களை சந்திப்பதிலோ யாதொரு பிரயோசனமுமில்லை என்று தள்ளிவிட்டார். காங்கிரஸுக்கும் லீகுக்கும் ஒற்றுமை இல்லாமல் யாதொன்றும் அரசாங்கத்தால் செய்ய முடியாதென்றும் சொல்லி விட்டார்.

இதற்காக மகாத்மாஜி அவர்கள், ராஜாஜியின் திட்டத்தை ஒத்துக்கொண்டு அதன்வழியாக ஜின்னா சர்கிபுடன் சமரசம் செய்து கொள்ள முயற்சி செய்தார். ஜின்னா சாகிப்பை பம்பாயில் பல நாட்கள் சந்தித்துப் பேசினார். ஆனால், ஜின்னாவோ, ராஜாஜியின் திட்டம் லாகூர் தீர்மானத்தின் முழு அம்சத்தையும் பூர்த்தி செய்யவில்லையென்று கூறியதினால், காந்தி-ஜின்னா பேச்சுகள் முறிவடைந்தன.

இதனால் இந்தியாவின் நிலைமை பழையபடியே இருந்து வருகிறது. வெளிவந்ததிலிருந்து காந்திஜி அவர்கள் நமது ஜனங்கள் படும் கஷ்டங்களை நன்றாய்த் தெரிந்து கொண்டிருக்கின்றார். வங்காளத்திலும் பீகாரிலும் உணவுப் பஞ்சத்தினாலும், அதிலிருந்து உண்டான நோய்களினாலும் அநேக ஜனங்கள் மடிந்து விட்டனர். இப்பொழுது பீகாரில் இருக்கும் நிலைமையைக் கவனித்தால், ராஜன் பாபு வெளியிலிருந்தால் ஜனங்களுக்கு எவ்வளவு உதவியாயிருக்குமென்று எல்லோரும் ஒத்துக் கொள்ளுகிறார்கள். அப்படி இருந்தும் அரசாங்கம் காரியக் கமிட்டி அங்கத்தினர்களை விடுவிக்கத் தயங்குகிறது, தற்போதிருக்கும் நிலைமையைக் கவனித்தால்,காரியக்கமிட்டி அங்கத்தினர்களை விடுவிப்பதால் யுத்த முயற்சிக்கு யாதொரு தடையும் உண்டாகாதென்று எல்லோரும் ஏகமனதாக ஒப்புக்கொள்ளுகிறார்கள். பாசிசத்திற்கு எதிரியாய் இவ்வுலகத்தில் ஒருவர் இருக்கிறார் என்றால் அவர் தான் ஜவஹர்லால் நேரு என்று உலகமே நன்றாய் அறிந்து கொண்டிருக்கிறது. அப்படி இருந்தும் அவரை வெளியில் விடுவதற்கு நமது அரசாங்கம் தயங்குகின்றது. அமெரிக்காவிலும் அவரை வெளியில் விடவேண்டுமென்று அநேக நிபுணர்கள் அமெரிக்க அரசாங்கத்தின் வழியாக முயற்சி செய்து வந்திருக்கிறார்கள்.

ஆனால் அரசாங்கம் அதற்கு ஒத்துக்கொள்ள முடியாதென்று ஏமெரி வாயிலாகப் பல தடவை சொல்லி வந்திருக்கின்றது. ஆனால் இந்தியாவிற்கு சுதந்திரம் கொடுப்பதற்கு ஆங்கில அரசாங்கம் தடை செய்யாதென்று ஏமெரியே சொல்லுகின்றார். அப்படிச் செய்வதற்குக் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் வெளிவந்து மற்றக் கட்சிகளுடன் கலந்து பேசினால் தான் இது முடியுமென்பதை மாத்திரம் அரசாங்கம் ஒத்துக் கொள்வதில்லை. இதற்கு இந்தியர்கள் என்ன செய்யலாம் என்பது தான் தற்போதைய பிரச்னை. முன்பு இம்மாதிரி கஷ்டங்கள் நேரிட்ட சமயங்களில் சர். டேஜ் பகதூர் சாப்ரூ முயற்சியால் கஷ்டங்கள் நிவர்த்திக்கப் பட்டிருக்கின்றன. இப்பொழுதும் இந்து முஸ்லீம் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக சர். டேஜ் பகதூர் முன் வந்திருக்கிறார். இதற்காக காந்திஜியின் ஆசீர்வாதத்துடன் ஒரு கூட்டமும் கூட்டி இதற்கு வழி கண்டு பிடிப்பதற்கும் பிரயத்தனம் செய்து வருகிறார். எல்லாக் கட்சித் தலைவர்களையும் சந்தித்து அவர்களின் உதவியால் தற்போதிலிருக்கும் நிலையை நிவர்த்திப்பதற்கு முயற்சி செய்து வருகின்றார். இதற்கு எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒரே முகமாய் உதவி செய்தால் ஏதோ வழி கண்டு பிடிக்கலாமென்பது எனது எண்ணம். தற்போதைய நிலைமை இந்தியாவிற்கு சரியில்லையென்பதை எல்லோரும் ஒத்துக் கொள்ளுகிறார்கள். ஆகையினால் சர். டேஜ்பகதூரின் முயற்சிக்கு உதவி செய்வது அத்தியாவசியம்.

இதை நமது தலைவர்கள் நன்றாக அறிந்து கொண்டு அதற்கு வேண்டிய உதவி செய்ய வேண்டுமென்பதுதான் எனது ஆவல். யுத்தம் முடிவதற்குள் நமக்குள் ஒற்றுமை ஏற்படாவிட்டால் யுத்தம் முடிந்து உலக நிலையை அமைக்கும் கூட்டத்தில் நமக்குப் பங்கு கிடைப்பது முடியாத காரியம். உலகத்தில் சண்டைகள் நிறுத்தப்பட வேண்டுமென்றால் அதற்கு காந்திஜியின் வழியே சரியானவழி. ஆகையானால் நமது மகாகனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் சொல்லுகின்ற பிரகாரம் யுத்தம் முடிந்து அமைதியை நிறுவுவதற்காகக் கூட்டப்படும் கூட்டத்தில் காந்திஜி பங்கெடுத்துக் கொள்வது அவசியம். அதற்காகவாவது நமக்குள்ளிருக்கும் வேற்றுமையை ஒழிக்க வேண்டுவது அவசியம். இதற்கான முயற்சியை நமது ஜனங்கள் செய்வார்களா?

இன்ஷியூர் செய்ய வேண்டுமா?



லக்ஷ்மியைக் கலந்து ஆலோசியுங்கள்

எங்கள் திட்டங்களும், சேவையும்,
பல்லாயிரக் கணக்கானவர்களுக்குத் திருப்தியளித்துள்ளன.

## அதேமாதிரி உங்களுக்கும் திருப்தி ஏற்படும்

## :: 1943-ம் வருஷத்திய தொழில் ::

*2 கோடியே 20 லக்ஷத்துக்குமேல் சென்ற வருஷத்தைவிட 76% அதிகம்*
*இது ஒன்றே பொது ஜனங்களின் திருப்திக்கு அறிகுறி.*

*"பதினேழாவது வருஷ முடிவிலே 1½ கோடி ரூபாய்க்கு மேற்பட்ட ஆயுள் நிதியும் வருஷ வருமானம் 40 லக்ஷத்துக்கு மேலும் உள்ள இன்ஷியூரன்ஸ் கம்பெனி வேறு ஒன்றையும் யான் அறியேன். லக்ஷ்மி, செல்வத்தின் அதிதேவதை என்று பூஜிக்கப்படுவது மிகவும் சரி!"*

*இப்படியாக 1940 வருஷத்திய லாபநஷ்டக் கணக்கைப்பற்றி விமர்சனம் எழுதும்போது "இந்தியன் பைனன்ஸ்" பத்திரிகை குறிப்பிடுகிறது.*

**சமூக சேவையில் ஆர்வம் மிக்க வாலிபர்கள் ஏஜண்டுகளாயிருக்கத் தேவை.**
**கண்யமாக நடத்தப்படுவார்கள், :: நல்ல வருமானமும் கிடைக்கும்.**

## லக்ஷ்மி இன்ஷியூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

சென்னை ஆபீஸ்:

அரமனைக்காரத் தெரு, சென்னை.

## தி யுனைடெட் இந்தியா
### பயர் & ஜெனரல்
# இன்ஷியூரன்ஸ் கம்பெனி
### லிமிடெட்

நெருப்பு, மோட்டார், கப்பல்,
விபத்து முதலிய எல்லாவித
இன்ஷியூரன்சுகளும் செய்து
உங்களுக்குப் பாதுகாப்பளித்து
சேவை செய்கிறது.

தலைமை ஆபீஸ்:

**யுனைடெட் இந்தியா பில்டிங்ஸ்**

எஸ்பிளனேட், சென்னை

தந்தி: யூனிஜன் — போன்: 4241

பிராஞ்சுகள்:

பம்பாய் — கல்கத்தா
கராச்சி — லாகூர்



ஆரோக்கியமான அறுசுவை
உணவுக்கு ஏற்றது

# எல். ஜி. மிஸ்கி

## பெருங்காயமே!

# L. G.

எல். ஜி. மார்க்கையே
எப்போதும் கவனித்து
வாங்குங்கள்

## லால்ஜி கோது & கோ,

சௌகார்பேட்டை, மதராஸ்

தலைமை ஆபீஸ்: பம்பாய் — கிளை ஆபீஸ்: கும்பகோணம்



# வெ. சாமிநாத சர்மா
# எழுதிய நூல்கள்

**புதிய சீனு** — ரூ. 6-8-0

சீருவும் சீன நாகரிகமும் மிகப் பழமையானவை. சென்ற நாலாயிரம் வருடங்களாகவே சீனர்கள் உலகத்தில் இருந்து வருகிறார்கள். அதற்கு நிகரான நாகரிகம் வேறு எதுவும் இல்லை. அன்பையும் அறத்தையுமே லட்சியங்களாகக்கொண்டு, புத்தர் பிரானின் போதனைகளை நடைமுறையில் கடைப்பிடித்து ஒழுகியவர்கள் சீனர்கள். அத்தகையவர்கள் இன்று வீழ்ச்சியுற்றிருப்பதற்குக் காரணம் என்ன? அதன் எதிர்காலம் எவ்வாறிருக்கும்? சீனாவின் ஆரம்பகால சரித்திரத்திலிருந்து, புதிய சீனாவின் தோற்றம்வரை எல்லா விபரங்களும் இந்நூலில் அடங்கியிருக்கின்றன.

பிளேட்டோ எழுதிய
**அரசியல்** — ரூ. 6-0-0

பிளேட்டோ எழுதிய நூல்களுள் இதுவே மிகவும் சிறந்ததென்று உலகம் புகழுகிறது.
இதில் அரசியலின் ஒவ்வொரு பிரிவும் வெகு தெளிவாக சம்பாஷணை மூலம் விளக்கப்பட்டிருக்கிறது. தேசத்துக்கும் மக்களுக்குமுள்ள தொடர்பு; எந்த மாதிரியான மக்களுக்கு எத்தகைய அரசியல் இருக்க வேண்டும்? நீதி வழங்குதல் என்றால் என்ன? என்பன போன்ற விஷயங்களை பிளேட்டோ தெளிவாக விளக்கியிருக்கிறார். (அச்சில்)

**கார்ல் மார்க்ஸ்** — ரூ. 3-0-0

மார்க்ஸ் பொதுவுடைமைத் தத்துவத்தின் தந்தை. இந்நூல் அவருடைய வாழ்க்கை வரலாற்றை விவரிக்கிறது.

**ரூஸ்ஸோ** — ரூ. 1-12-0

ஜனநாயக சித்தாந்தத்துக்கு அடிகோலிய ஐரோப்பியப் பேரறிஞருடைய வாழ்க்கை வரலாறு.

ரூஸ்ஸோ எழுதிய
**சமுதாய ஒப்பந்தம்** — ரூ. 3-4-0

வெ. சாமிநாத சர்மா மொழிபெயர்ப்பு
இரண்டு பெரும் புரட்சிகள் நடைபெறுவதற்குக் காரணமாயிருந்த நூல். ஜனநாயக வாதிகளுக்கு வேதப் புத்தகம்போல.

தபால் செலவு தனி

## சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை : : சென்னை

# எக்ஸ்-ரே கிரணங்கள்

பேராசிரியர் ஜே. பி. மாணிக்கம் — பெ. நா. அப்புஸ்வாமி

எக்ஸ்-ரே கிரணங்களைக் கண்டுபிடித்து இன்னும் ஐம்பது வருஷங்கள் ஆகவில்லை. அவற்றைக் கண்டுபிடித்தவர் ரெண்ட்கென் என்பவர். அவர் அக் கிரணங்களைக் கண்டுபிடித்த காலத்திலே அவற்றின் தன்மை என்ன என்பது அவருக்குச் சற்றும் விளங்கவில்லை. தெரியாத பொருள்களையோ மனிதர்களையோ குறிப்பிட வேண்டுமானால் ஆங்கிலத்தில் அவற்றை மொட்டையாக "எக்ஸ்" என்னும் எழுத்தால் குறிப்பிடுவது வழக்கம். அந்த வழக்கப்படி, தன்மை புலப்படாத இந்தக் கிரணங்களுக்கு "எக்ஸ்-ரே" என்ற பெயர் அவரால் வைக்கப்பட்டது.

எக்ஸ்-ரே கிரணங்களின் சக்தியைப்பற்றி விஞ்ஞானிகள் அங்கங்கே ஆச்சரியத்தோடு பேசி வந்தார்கள். சாமானிய ஜனங்கள் அவ்விஞ்ஞானிகளின் பேச்சை அரைகுறையாகக் கேட்டுவிட்டு வியப்படைந்தார்கள்; அதோடு பயமும் கொண்டார்கள். எக்ஸ்-ரே கிரணங்களின் உதவியால் மனிதனுடைய உடலின் உட்புறத்திலே இருக்கும் எலும்புகளையும் பெட்டிக்குள்ளிருக்கும் பொருள்களையும் கூடப் படம் பிடிக்க முடியும் என்று விஞ்ஞானிகள் கூறக்கேட்டார்கள். இதைப் போன்ற விஷயங்களை அவர்கள் கேள்விப் பட்டதும், இனிமேல் தாங்கள் அமைதியாயும் அந்தரங்கமாயும் வாழ முடியாதென்று ஜனங்கள் பயந்தார்கள்.

ஜனங்கள் மட்டுமல்லாமல், சில பத்திரிகைகளும் எக்ஸ்ரே கிரணங்களின் உதவியைக் கண்டித்து எழுதின. அக்காலத்து லண்டன் பத்திரிகை ஒன்றில் கீழ்க் கண்ட விஷயம் வெளிவந்தது.



ரெண்ட்கென்.

"எக்ஸ்-ரேயின் பெயரைக் கேட்டவுடனேயே எரிச்சல் வருகிறது. எக்ஸ்-ரே என்ற ஒன்றை ஒருவர் கண்டுபிடித்தது போதாது என்று எடிஸன் என்பவரும் வேறு ஏதோ ஒன்றைக் கண்டுபிடித்து விட்டாராம். கால்ஸியம் டங்ஸ்டேட் என்று ஏதோ ஒன்றும்; அது 'எக்ஸ்-ரே கிரணக் கிராஹக் சக்தி' வாய்ந்த வஸ்துவாம். அப்படியென்றால் அதற்குப் பொருள் என்னவோ கடவுளுக்குத் தான் தெரியும். அதன் பெயரே நமது வாய்க்கு வழங்கவில்லை; காதுக்கும் நாராசம்போல் இருக்கிறது. அந்தப் பொருளுக்கு உள்ள சக்தியால் என்ன வென்ன வெல்லாம் நேரப் போகின்றன தெரியுமா? மற்றவர்களுடைய உடலில் உள்ள எலும்புகள் அனைத்தையும் நம்முடைய சாமானியக் கண்களால் பார்க்க முடியுமாம்; எட்டு அங்குல கனமுள்ள மரத்துக்கும் மறுபுறத்திலுள்ள பொருள்களைப் பார்க்க முடியுமாம்! இதனால் எவ்வளவு வெட்கக் கேடான நிலை ஏற்படக்கூடும் என்பதைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. அந்தரங்கம் என்பதே இல்லாமற் போய்விடும். ஆதலால் அரசாங்கத்தார் இதை உடனே கவனிக்க வேண்டியது அவசியம் என்று நாம் வற்புறுத்திச் சொல்லுகிறோம். இந்தக் கால்ஸியம் டங்ஸ்டேட் என்னும் பொருளை எல்லாரும் உபயோகித்து விடாதபடி மிகவும் கடுமையான தடை விதிகளை அரசாங்கத்தார் ஏற்படுத்த வேண்டும்? இப்பொழுது செய்வதற்கு உரியவை யாவை என்று எங்களைக் கேட்டால், இவ்வுலகத்திலுள்ள நாகரிக மக்கள் யாவரும் ஒன்று கூடி, எக்ஸ்-ரே கிரணங்களைப்



சாதாரண போட்டோவில் இப்படி இருப்பவர்......



எக்ஸ்-ரே போட்டோவில் இப்படி இருப்பார் என்று பத்திரிகைகள் புரளி செய்தன.

பற்றி எழுதிய நூல்கள் அனைத்தையும், ஒன்றுகூடப் பாக்கியில்லாமல், எரித்துவிட வேண்டும் என்போம். இவற்றைக் கண்டு பிடித்தவர்கள் அனைவருக்கும் மரண தண்டனை விதிக்க வேண்டும் என்போம். உலகத்திலுள்ள கால்ஸியம் டங்ஸ்டேட் முழுவதையும் திரட்டி எடுத்துக் கொண்டுபோய், நடுக்கடலில் ஆழமான இடத்தைத் தேடிப் பிடித்து அங்கே கொட்டிவிட வேண்டும் என்போம். இப்படிச் செய்தால்தான் உலகத்துக்கு க்ஷேமம் உண்டாகும். அங்குள்ள மீன்கள் வேண்டுமானால் தங்கள் உடலின் உட்புறத்திலுள்ள எலும்புகளைப் பார்த்து ஆனந்தம் அடையட்டும்; அந்த ஆனந்தம் நமக்கு வேண்டவே வேண்டாம்.''

இவ்வாறு பலர் அருவருத்துப்பேசி வந்த போதிலும், விஞ்ஞானிகள் மட்டும் ஆராய்ச்சிகளை நிறுத்தாமல் மேன்மேலும் செய்து கொண்டே வந்தார்கள். அவர்களுடைய ஆராய்ச்சிகளின் பயனாக எக்ஸ்-ரே கிரணங்கள் இப்பொழுது பல துறைகளிலும் நமக்கு உதவி புரிந்துவருகின்றன. அவை இல்லாவிட்டால் நாம் சுக வாழ்வு வாழ்தல் இயலாது என்றாகிவிட்டது.

இக்காலத்திலே விதவிதமான சிறந்த கருவிகளின் உதவியால் பலவகைப்பட்ட எக்ஸ்-ரே கிரணங்களை இயற்றிவருகிறார்கள். இந்தக் கருவிகளில் சில பத்து லக்ஷம் வோல்ட்டு அழுத்தம் உள்ள மின்சார சக்தியைக் கொண்டு வேலை செய்பவை; நுட்பமான பல துணைக் கருவிகளை உடையவை. இவ்வளவு வல்லமையுள்ள கருவிகளாயிருப்பதால் அவை கல்லையும், இரும்பையும் ஊடுருவிச் செல்லக்கூடிய அபார சக்தி வாய்ந்த கிரணங்களை இயற்றுகின்றன. இந்தக் கருவிகள் இக்காலத்தில் பல துறைகளிலும் பயன்பட்டு வருகின்றன. எந்தக் கருவியாலும் நன்மையைப் போலவே தீமையும் விளையக்கூடும் அல்லவா? இக் கருவிகளாலும், இக் கருவிகள் இயற்றும் கிரணங்களாலும் அவ்வாறே நன்மையும் தீமையும் உண்டாகின்றன. அறிவும் ஆற்றலும் உடைய விஞ்ஞானிகள் இவற்றின் குணாகுணங்களை அறிந்து, ஒதுக்குவனவற்றைத் தக்க முறைகளால் ஒதுக்கி, பயன் தருவனவற்றை ஏற்ற முறைகளைக் கையாண்டு பயன்படுத்தி மக்களுக்கும் மக்கள் தொகுதியாகிய சமூகத்துக்கும் மேன்மேலும் நன்மை இயற்ற முயன்று வருகிறார்கள்.


கலியாண காலங்களுக்கு உங்களுக்கு என்ன வேண்டும்

உயர் ரகப் பட்டுப் புடவைகள், நவீனமுறையில் புது டிஸைனுகள் ரகங்கள்
அமைந்த அருமையான ஜவுளி டிஸைனுகள் சரஸமான விலையில்
சௌகரியம்போல் கிடைக்கும்.

நேரில் விஜயம் செய்யுங்கள்

P. B. லக்ஷ்மணஸா & பிரதர்ஸ்

99. ஐயர் முதலித் தெரு, சிந்தாதிரிப் பேட்டை, சென்னை.

# எல்லாரும் ஒரு குலம்

ராவ் பகதூர் டி. எஸ். திருமூர்த்தி

சில வருஷங்களுக்கு முன்பு சுவிட்ஸர்லாண்ட் தேசத்தில் லெளசான் நகரத்திலிருந்து ஜினீவா நகரத்திற்கு ரெயில் பிரயாணமாகப் போய்க்கொண்டிருந்தேன். என் அறையில், மற்ற பிரயாணிகளுடன் அந்த தேசத்துக்காரர் ஒருவர் என் அருகில் உட்கார்ந்து இருந்தார். ஆஜானுபாகுவாக வாட்ட சாட்டமாக தோற்றம் அளித்தார். வசிகரமான முகம், 45 வயது இருக்கலாம். நல்ல தேக திடமும் சுகமும் படைத்தவர். உடையிலிருந்து நடுத்தர வாழ்க்கையில் இருப்பவராகவும், புஸ்தகமும், பத்திரிகையும் கையில் இருந்ததால் படிப்பாளியாகவும் காணப்பட்டார். இவருடன் சம்பாஷணை செய்ய என் ஆவலை அறிந்தவர்போல், 'நீர் எவ்விடம் போகிறீர்' என்று ஆங்கில பாஷையில் கேட்டார். என் முகத்தையும் நிறத்தையும் பார்த்த போதே நான் அயல் நாட்டான் என்றும் அநேகமாக இந்தியனாகத்தான் இருக்கவேண்டும் என்றும் தெரிந்துகொண்டிருக்கவேண்டும். 'ஜினீவாவுக்குப் போகிறேன்' என்றேன். அவர் தாய் ஓர் இன்ஜினீயர் என்று தெரிவித்துக்கொண்டார். பிற்கு நடந்த சம்பாஷணை பின்வருமாறு:

“உங்கள் தேசத்தில் அநேகருக்கு ஆங்கில பாஷை தெரிந்து இருப்பதால் எங்களைப் போன்றவர்களுக்கு அதிக சௌகரியம் ஏற்படுகிறது”

“ஆம், எங்கள் தேசத்தில் மூன்று பாஷைகள்—பிரெஞ்சு, ஜெர்மன், இட்டாலியன்—முறையே மூன்று பாகங்களில் உண்டு. அநேகமாக எல்லாருக்கும் 3 பாஷைகளும் தெரியும், உயர்தரப் படிப்பு உள்ளவர்களும் வியாபாரம் செய்பவர்களும், ஹோட்டல் தொழில் நடத்துபவர்களும், அதன் வேலையாட்களும் ஆங்கில பாஷையையும் கற்றுக் கொள்ளுகிறார்கள். இவர்கள் தொழில்களுக்கு ஆங்கிலமும் அவசியமாகவே இருக்கிறது”

இந்தச் சிறு தேசத்தில் எல்லாரும் 3, 4 பாஷைகளைக் கற்றுக் கொள்ள அநேகமாக எல்லா நகரங்களிலும் பாஷைகள் கற்றுக் கொடுக்கும் கல்லூரிகள் நிறுவப்பட்டிருக்கின்றன. உலகத்தில் எல்லா நாடுகளினின்றும் ஆயிரக்கணக்காக பிரயாணிகள் சுவிட்ஸர்லாண்டு தேசத்திற்கு ஓய்வு எடுத்துக்கொள்ளவும், வியாதி நிவாரணத்திற்கும், இயற்கை அழகைக் கண்டு களிக்கவும் ஒவ்வொரு வருஷமும் வந்துகொண்டிருப்பதால், சுவிட்ஸர்லாண்டுக்காரர்கள் பல பாஷைகளிலும் பயின்று எல்லா நாட்டினர் நன்மதிப்பையும், சிநேகத்தையும் பெற்று செல்வாக்கு உடையவர்களாக விளங்குகிறார்கள். இது எனக்குத் தெரிந்த விஷயம்.

ஆனாலும் அப்பொழுது என் மனம் நம் இந்தியா தேசத்தை நினைத்து வருந்தியது. ஹிந்தி பாஷையை தென் இந்தியாவில் எல்லாரையும் தங்கள் தாய் பாஷையுடன், கற்றுக்கொள்ளும்படி செய்யவேண்டும் என்று மகாத்மா காந்தி செய்யும் முயற்சி இன்னும் தடைப்பட்டு வருகிறதே! இந்த நாட்டில் 3, 4 பாஷைகள் எல்லாரும் கற்றுக் கொண்டு முன்னேறி வரும்போது நமது நாட்டில்மட்டும் தாய் பாஷையுடன், சம்பாஷணை செய்வதற்காவது போதுமான ஹிந்தி பாஷையைக் கற்றுக் கொள்ளாமல் இருக்கிறார்களே! இந்தியா தேசம் முழுவதும் ஒன்றுபட ஒரு தேச பாஷை அவசியம் அல்லவா? பிற நாட்டினரை அண்டிப் பிழைக்கும் சுவிட்ஸர்லாண்ட் பல பாஷைகளைக் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்தை அறிந்து அதற்குச் சகல வசதிகளையும் ஏற்படுத்தி வருகிறது. அது பழங்காலம் தொட்டு சுய ஆட்சி தேசமாக விளங்கி வருகிறது. நமது இந்தியாவிலோ ஒற்றுமை உணர்ச்சி உண்டாவதற்கு முக்கியமான ஒரு பெரிய சாதனம் ஒரு பொது பாஷை இருக்கவேண்டும் என்று அறிந்தும் அதற்கு அதிகப்படி அரசாங்க ஆதரவு அற்று இருக்கிறதே என்ற எண்ணம் வருத்தத்தை உண்டாக்கியது. ஜன ஆட்சி இருந்தால், இந்த விஷயத்தைக் குறித்து கவனம் செலுத்தி சட்ட திட்டங்களை வகுத்து, தீவிரமாக ஹிந்தி அல்லது இந்துஸ்தானி பாஷையைப் பரப்பி, ஒற்றுமை உணர்ச்சிக்கு அடிகோல முடியும்.

பிறகு நடந்த சம்பாஷணையில் அவர் தேசத்தின் அழகும் வசிகரமும் நிரம்பிய தோற்றத்தையும் பல நகரங்களின் பிரபலமான இடங்களையும், ஏரிகளையும், மலைகளையும் பற்றிப் பேசி முடிவில் ஐரோப்பாவில் எல்லா நாடுகளையும் விட அவர் நாடுதான் தொன்று தொட்டு ஜன நாயக சுய ஆட்சி நாடாக விளங்கி வருகிறது; அன்னியர் ஆட்சியில் சிக்கிக்கொள்ளாமல் இருந்து அகில தேச அரசாங்கத்தினரின் கூட்டுறவு சங்கமும் ஜினிவாவில் ஸ்தாபிக்கப்பட்டு இருப்பது சுவிட்ஸர்லாண்டுக்காரர் களுக்கு விசேஷ பெருமையை அளிக்கிறது என்றேன். நான் சொன்னது அவரை கௌரவப்படுத்தியது என்பதை அவர் முகத்திலும் பேச்சுத் தோரணையிலும் கண்டேன். "ஆம். எங்கள் நாட்டில் மன்னர் என்றும் மக்கள் என்றும் இரு பிரிவினர் கிடையாது. நாங்கள் ஒவ்வொருவரும் இந் நாட்டு மன்னர்" என்றார். இந் நாட்டு மக்கள் என்று சொல்லவில்லை, இந்நாட்டு மன்னர் என்றார். என்ன பெருமிதம்! "சுயராஜ்ஜியம்" எத்தனை விதமான சக்திகளைப்பிறப்பிக்கிறது. அவர் பெருமை கொண்டது மிகவும் பொருத்தமே. ஆனால் அவர் பேசியது என் மனத்திலும் அலைகளை எழுப்பாமல் போகமுடியுமா? உடனே என் மனத்திற்கு தேசிய கவி சுப்பிரமணிய பாரதியாரின் பாட்டுக்களை ஞாபக மூட்டிற்று.

"மனிதர் யாரும் ஒரு நிகர் சமான
மாக வாழ்வம் இந்த நாட்டிலே".
"எல்லாரும் ஓர் குலம்
எல்லாரும் ஓர் இனம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்."

பாரதியார் கனவில் கண்டார். அந்த சுவிட்ஸர்லாண்ட்காரன் இரத்தத்தில் சுயராஜ்ஜிய தத்துவம் ஊறி இருக்கிறது. ஜனநாயக சுய ஆட்சியானது மக்களை என்ன என்ன விதமாக வெல்லாம் மாற்றவும், பேசவும் மந்திர சக்தியை உண்டாக்கி விடுகிறது! தாரக மந்திரம் அது. நவசக்தியை ஊட்டுகிறது.

சுவிட்ஸர் லாண்டில் நான் பெற்ற இந்த அனுபவத்தை நான் மறக்க முடியுமா? வருஷப் பிறப்பு 'நவசக்தி' மலரில், இச் சிறு சம்பவத்தை வரைந்து அதனால் வாசிப்போர் மனத்திலும் தேசபக்தியாகிய நவசக்தியைக் கிளப்பலாம் என்பது உசிதமாகவே இருக்கும் என்று நம்புகிறேன். ஒன்று பட்டால்தான் வாழ்வு உண்டு என்னும் உண்மையை நாம் எப்பொழுது கடைப்பிடிக்கப் போகிறோம்? அது வரை உலகில் நாம் உயர்வு தேடுவது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதை தான்.

## 'காட்டு ரோஜா'

"[illegible]"

விரிந்த வெளியிடையே
விண்ணையெட்டும் உயரமதில்
வானத் திடையனுடைய
வாகான ஆட்டினம்போல்
விம்மித் தோள் தூக்கி விட்ட
வெண்பாறைக் கூட்டமதில்

காட்சிதரும் காட்டுரோஜா!
கட்டிளமைப் பூங்காவில்
இயற்கைத் தாய் இன்மடியில்
இடரு றுத்தும் மனித குலம்
காண முடியாத கள்ளியடி
கள்ளியுன் ஊரென்ன? பேரென்ன?

'காட்டு ரோஜா' என்று பெயர்
கற்பனையின் விந்தையடி
பாட்டன் பூட்டன் காலமெலாம்
கன்னியுனை அழைத்த தென்ன?
உன்னைப் படைத்தவனின்
உயர் மொழியுந் தானெதுவோ?

பள்ளித் தலம்தனிலே பண்டு
படித்த தாவரப் படலம்
உள்ளத் திருக்குதடி
உளறுபடி பாஷையெலாம்
லத்தீனோ ரோமாபுரி வதிந்த
சுத்தவீரர் சொல்லடுக்கோ?

பத்தினியாள் உன் பெயரை
பட்டபட வென்றுச் சரித்தேன்
பாலைச் சிரிப்பு மின்னல்
பசுமை தரு கண் சிமிட்டால்
பொத்தி ஒளிர் முகத்தை
புறத்தே திரும்பி நின்றாய்

கண் படாக் கவினுருவே
காதலெனுந் தென்மட்லே
பண்படாப் பசுந்திடலின்
பாராளும் ராணியடி
உன்னெழிலின் காந்தியிலே
ஒளி மயங்கித் தலை கவிழ்ந்தேன்

இச்சை எனும் இமைக்கண்ணால்
அச்சி உன் வனப்பையெல்லாம்
நச்சி இன்ப வெறியேறிப்
பிச்சனாகி விட்டேனடி
கச்சணிந்த நங்காய்! எனைத்
துச்சமென எண்ணாதே.

எழிற்குடமாய் இன்கனியாய்
ஏகாங்கியாய் இருந்தாய்
பழியுலகப் பாமரன்கண்
பாவாத பாவையடி! உன்
சுழற்கண்ணில் பட்டுமனம்
சூறையாய்ப் போனதடி

இதயமெனும் இனியபொழிலில்
இணைபிரியா வாழ்க்கைக்கொடி
பதம் பிடித்துப்பாடுகிறாய்
பல்லாண் டென்றாடுகிறாய்
மலைத்தடத்தின் மலர்குலத்தின்
மகாராசி மங்கையே நீ!

# கவிதையும் பிற கலைகளும்

ரா. ஸ்ரீ. தேசிகன்

கவிதையை, கலைகளின் சிகரமென்று கூறலாம். அது தோன்றுவதற்கு இரண்டு காரணங்களுண்டு. ஒன்றைப் பார்த்து ஒன்று செய்கின்ற தன்மை, மனித உள்ளத்தில் இயற்கையாய் ஆழ்ந்து கிடக்கிற சீரும் லயம் - இவ்விரு சக்திகளும் சேர்ந்து கவிதையை உண்டு பண்ணுகின்றன.

அனுகரண சக்தியையும் லயத்தையும் ஒரு குழந்தையினிடத்தில் பார்க்கலாம். கலியாணம், கார்த்திகை, சாக்காடு, இழவு, வீடு கட்டுதல், அம்மா விளையாட்டு, அப்பா விளையாட்டு முதலிய எல்லா வாழ்க்கைச் சித்திரங்களையும் அது நடித்துக் காட்டுகிறது. ஒரு சீரில் கை கொட்டினாலும், காலை நீட்டி 'டக் டக்' என்று நடந்தாலும் இவைகளுக்கேற்ப, குழந்தைகள் தங்களையறியாமல் தாளம் போட ஆரம்பித்து விடுகின்றன. இதே அனுகரண சக்தியும் லயமும் ஒரு கவியினிடத்திலும் காணப் படுகின்றன. ஆகவே அனுகரண சக்தி மூலம் ஒரு கவியின் சித்திரம் அலர்கிறது. அச் சித்திரம் ஒரு சீரில் அமைய வேண்டும். சீர்க்கோப்புத்தான் செய்யுளையும் உரைநடையும் பிரிக்கிறது. உரைநடையிலும் ஒரு லயமும் சீரும் ஏற்படலாம். அது தொடர்ந்து உரை நடையில் வந்தால் அருவருப்பைத் தரும். தொடர்ந்தே வரவேண்டும் கவிதையில், அதுதான் அதற்கு அழகு. உரைநடை மூலம் உயர்ந்த கருத்துக்களை வெளியிடலாம். ஆனால் கருத்துக்கள் ஒலிக் கட்டோடும் சீரோடும் சேர்கிற பொழுதுதான் கவிதை என்று கூறுகிறோம்.

அனுகரண சக்தியென்று சொன்னேனல்லவா? அது என்ன? அது எத்தன்மையுடையது? அதைப் பற்றிச் சற்று ஆராய்வோம்.

அனுகரண சக்தி என்பது ஒன்றைப் பார்த்து அப்படியே வரைந்து விடுகிறதில்லை. புகைப் படத்திற்கும் கவியின் சித்திரத்திற்கும் வித்தியாசமுண்டு. கவிக்கு மனத்திலே ஒரு கருத்து உதயமாகிறது. அக் கருத்துக்கு உருக் கொடுக்கிறான் அவன். ஒருவன் மனத்திலே அது தங்கி விடுமேயானால், அவனைக் கவி என்று சொல்ல முடியாது. இவ் விஷயத்தைப் பற்றி கிரோசை என்ற பெரிய இத்தாலிய தேசத்துக் கலா விமர்சகர் தம் கலா விமர்சனத்தில் நன்கு பதியும்படி கூறியுள்ளார். ஆகையால் 'ஊமை வால்மீகி', 'ஊமைக் கம்பன்' 'ஊமை மில்டன்' என்ற சொற்களுக்கு அர்த்தமே இல்லை. கவி தன் உள்ளத்தைக் கொட்டியே தீரவேண்டும்.

உலகத்திலுள்ள பல அம்சங்களைத் தேடி உள்ளபடி தன் கருத்தை அமைக்கிறபடியால் அவன் அனுகரணம் செய்கிறான் என்று மொழியலாம். அம்சங்கள் தனித் தனியாய் உலகத்தில் அகப்படும். எல்லாம் ஒருங்கு சேர்ந்து வருகிறபொழுது தான், அவை ஒரு தனிச் சிருஷ்டியாக எழுகின்றன.

ஆங்கிலத்தில் 'பொயட்' என்ற சொல்லிற்குப் படைக்கிறவன் என்ற பொருள். கவி என்ற சொல் 'கு' என்ற தாதுவிலிருந்து, பகுதியிலிருந்து உண்டாயிற்று. 'கு' என்றால் கூவுதல்-இசைத்தல் என்று பொருள்படும். ஒழுங்கான முறையில் உள்ளக் கருத்தை இசைத்துக் காட்டுகிறவனைக் 'கவி' என்று கூறலாம். கவியினுடைய காரியம் 'காவியம்' என்று மொழிகிறார்கள் வடநூல் வல்லோர்கள்.

'செய்யுள்', 'யாப்பு', 'தூக்கு', 'பாட்டு' முதலிய சொற்களை நாம் வழங்குகின்றோம். ஒவ்வொரு சொல்லும் கவிதையின் ஒவ்வொரு அம்சத்தைக் குறிக்கிறது. 'செய்யுள்' என்ற பதத்திற்கு உண்டாக்குதல் என்ற பொருள். அதாவது படைத்தல் என்று கூறினாலும் பொருந்தும். கவி ஒரு தனிச் சிருஷ்டி செய்கிறான் என்ற விஷயம் இதிலிருந்து தோன்றுகிறது.

'யாப்பு' என்பது அமைக்கப் படுகிறது - சொற்களினால் கட்டப் படுகிறது. கவிதை என்பது சொற்களின் தனிப் பிரயோகம்

தூக்கு என்பது அளவு. ஒரு சீரில் ஓரளவில் அமைக்கப் படுகிறது. 'மெஷர்' 'பாட்டர்ன்' முதலிய ஆங்கிலப் பதங்களும் நம் முன் நிற்கின்றன. 'பாட்டு' என்று கவிதையை அழைக்கிறோம். கவிதையில் கானத்தின் இன்பமிருக்கிறபடியால் அதை அப்படிக் கூறுகிறோம் என்ற விஷயம் நமக்கு விளங்காமல் போகவில்லை.

கவிதை என்பது ஒரு தனிச் சிருஷ்டி. அது வார்த்தைகளால் ஆக்கப் படுகிறது. ஒரு சீரில் அமைக்கப் படுகிறது. அதிலிருந்து உள்ளத்தைக் கவர்கிற இன்னிசை எழுகிறது. இவை போன்ற விஷயங்களை மேலே குறிக்கப்பட்ட பதங்கள் நன்கு காட்டுகின்றன. வால்மீகியும இராமாயணத்தில் "சுலோக பத்தாம் மனோரமாம்" என்று கூறுகிறார்.

ஒழுங்கான முறையிலே, - ஒரு 'ரி'தத்திலே, - ஒரு கான வடிவிலே கவி தன்னுள்ளத்தை வெளிக் காட்டுகிறான். கவிக்கு எந்த உணர்ச்சி பொங்கி வருகிறதோ, அதே உணர்ச்சியை

அவன் தந்த அம்சங்களைக் கொண்டு அனுபவிக்கிற பொழுது சகிருதயர்களான, - ஒத்த உள்ளம் உடையவர்களான நாமும் அனுகரணம் செய்கிறோம். இதற்கும் அனுகரணந்தான் என்று ஆபர் கிராம்பி கூறுகிறார்.

இத்தனைக்கும் அனுகரணம் என்ற சொல் இடங்கொடுக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

கவி கையாளுகிறவை உலகத்திலுள்ள அம்சங்கள்தான். ஆனால் அவன் கையில் ஒரு தனிச் சிறப்பை அவை அடைகின்றன.

உதாரணமாக: கர்ப்பந்தரித்த சுதக்ஷிணையின் தேக வெளுப்பை 'இரகு வம்சத்தில்' காளிதாசன் வர்ணிக்கிறான். சுதக்ஷிணை சில ஆபரணங்களைத்தான் அணிந்து கொண்டிருக்கிறாள். முகமும் தேகமும் இருள் கலந்த வெளுப்பைக் காட்டுகின்றன. கவிக்குத் தான் பார்த்த விடியற்காலைச் சித்திரம் ஒன்று மனத்தில் எழுகிறது. இருளும் காலை ஒளியும் கலக்கிற வேளை; சுருங்கிய ஒளியையுடைய தாரகைகள் சிதறிக் கிடக்கின்றன. சந்திரன் தேய்ந்து ஒளி மங்கியிருக்கிறான். . . சந்திரன், நக்ஷத்திரங்கள், வெளுப்பான லோத்திர புஷ்பம், விடியற்கால இருட்டில் தோய்ந்த வெளுமை - இவைகளைத் தனித் தனியாய்ப் பார்த்து அனுபவித்திருப்போம். எல்லாவற்றையும் குழைத்துச் சுதக்ஷிணையின் தேகவெளுப்பைக் காட்டுகிற சித்திரத்தைப் பார்க்கிற நமக்குக் கவி கண்ட விடியற்காலக் காட்சி மனக்கண்முன் வருகிறது. அவன் நுகர்ந்தது போல நாமும் நுகர்கிறோம். இது ஒருவித அனுக்ரணம் என்று ஆபர்கிராம்பி சொல்லுவது உண்மையே. இது அனுக்ரண சக்தியா? - இல்லை - அனுசிருஷ்டி என்றே சொல்லலாம். கவியைப் போல நுகர்கிறவனும் கவியாகி விடுகிறான்.

“அனுக்ரண சக்தியைக் காண்பிக்கிற கவிதையையொத்த சிற்பம் போன்ற கலைகளுக்கும் கவிதைக்கும் என்ன வித்தியாசம்?” என்று ஒருவர் உசாவலாம். உள்ளக் கிளர்ச்சிக்கு உருக் கொடுக்கிற விஷயத்தில் எல்லாக் கலைகளும் ஒரே நெறியைப் பின்பற்றுகின்றன.

ஓர் ஓவியக்காரன் சித்திரக் கிழியில் தன் மனத்தில் தோன்றிய உணர்ச்சிக்கு உருவத்தை அழகுபெற பல வர்ணங்களைக் கொண்டு அமைத்து விடுகிறான். சிற்பியோ தன் கனவைக் கல்லிற் செதுக்கிவிடுகிறான். ஆனால் பலவித ரசங்களைக் காண்பிப்பதில் ஓவியக்காரனுக்கும் சிற்பிக்கும் சிரமம் ஏற்படும். அவர்கள் கையாளுகிற கருவிகள் மனத்தின் எல்லாவிதச் சாலங்களையும் சிறை செய்யமுடியா. மனோதர்மத்திற்கேற்ப அவைகள் இணங்குகிறதில்லை. மானோலிசாவைப் போலச் சித்திரங்கள் உண்டு. அதில் அநேக பாவங்களைக் காண்கிறார் பேடர் - அதை வரைந்த லியானார்ட்டார்வின்சியைப்போலக் கோடியில் யாரேனும் ஒருவர் இருக்கலாம். கவியோ தன் சொற்களை வைத்துக் கொண்டு சிற்பி சாதிக்கிற காரியத்தையும், ஓவியக்காரன் தீட்டுகிற சித்திரத்தின் நயத்தையும் காண்பிக்கிறான். சங்கீதத்தின் இன்சுவையை வடித்துப் பிழிந்து தருகிறான். இவனுக்குக் கருவியாயுள்ள சொற்கள் இவன் போனவழி இணங்குகின்றன. மலை மீது போகிற ஓட்டத்தைக் காண்பிக்கின்றன. மலையைவிட்டுக் கீழே இறங்குகிற நிலையைச் சித்திரிக்கின்றன. அன்னத்தோடு விளையாடுகிற ஒருத்தியின் சலனத்தைத் தெரிவிக்கின்றன.

ஒங்குமர னோங்கிமலை யோங்கி மண
லோங்கிப்
பூங்குலை குலாவு குளிர்சோலை புடை
விம்மித்
தூங்குதிரை யாறுதவழ் சூழலதோர்
குன்றின்
பாங்கரு ளதாலுறையுள் பஞ்சவடி
மஞ்ச.
கன்னியிள வாழை கனியீவ கதிர்
வாலின்
சென்னெல்லுள தேனெழுகு போது
முளதெய்வப்
பொன்னியெனலாய புனலாறு முள
போதா
அன்ன முள பொன்விவளோடன்
பின்விளையாட.”

[கம்பன்]

குலசேகராழ்வார் இசைத்த இரண்டு பாடல்களை யெடுத்துக் கொள்வோம். தேவகி கண்ணனுடைய பால்ய லீலைகளை அனுபவிக்கப் பெறாத வருத்தத்தில் வழிந்த நிகழ்ச்சிகளைக் காண்பிக்கும் பாடல்கள் இவை. குழந்தை முலைப்பால் உண்பதை நேரில் கண்ணால் பார்த்துக் கையால் தொட்டு அனுபவிக்கிறது போலப் பாட்டலை அமைத்திருக்கிறார். இதுதான் கவிதைக்கு முக்கியமான அம்சம்.

குழந்தை குடங்கையில் மன்னிக் கிடக்கின்றது. இளந்தளிர் போல உள்ள ஒரு கையால் ஒரு முலையை நெருடிக் கொண்டிருக்கிறது. இள நகை இடைஇடையே தோன்றுகிறது. வாயிலே முலையிருக்கத் தாய் முகம் நோக்குகிறது அக் குழந்தை:

குழகனே! என்றன்
கோமளப் பிள்ளாய்
கோவிந்தா! என்
குடங்கையில் மன்னி
ஒழுகு பேரெழில்
இளஞ்சிறு தளிர் போல்
ஒரு கையால் ஒரு முலை
முகம் நெருடா
மழலை மென்னகை
யிடை யிடை யருளா
வாயிலே முலையிருக்க
என் முகத்தே
எழில் கொள் நின்
திருக் கண்ணினை
நோக்குந் தன்மையும்
இழந்தேன் இழந்தேனே.

மேலே குறிக்கப்பட்ட பாட்டில் காணப்படுகிற அம்சங்களை வைத்துக்கொண்டு ஒரு சித்திரத்தை வரைந்து விடலாம். சித்திரத்தின் தன்மை அதில் அடங்கியிருக்கிறது. பல பாவங்களைக் காட்டுகிற பின் வரும் பாட்டை வைத்துக்கொண்டு சித்திரத்தில் அமைப்பது கடினம்.

சொற்களினால் படத்திற்கு மேல் படமாகக் காண்பித்துக்கொண்டு போக முடிகிறது.

வெண்ணெய் அளந்த சிறு தாமரைக்கை, தாம்புகொண்டு அடிக்கப் போகும்பொழுது நயந்து போகிற சுபாவம், வெண் தயிர் தோய்ந்த செவ்வாய், அழுகை, அஞ்சி நோக்குகிற பார்வை நெளிக்கிற வாய், தொழுகை — இவைகளெல்லாம் சொல்லில் சிக்கிவிடுகின்றன.

"முழுதும் வெண்ணெய்
அளைந்து தொட்டுண்ணும்
முகிழிளஞ் சிறுத்
தாமரைக் கையும்
எழில் கொள் தாம்பு
கொண்டடிப்பதற்கு
எள்கு நிலையும் வெண் தயிர்
தோய்ந்த செவ்வாயும்
அழுகையும் அஞ்சி
நோக்கும் அந்நோக்கும்
அணிகொள் செஞ்
சிறுவாய் நெளிப்பதுவும்
தொழுகையும் இவை
கண்ட யசோதை
தொல்லை யின்பத்
திறுதி கண்டாளே.

ஓவியக் கிழியில் இம்முழுச் சேஷ்டைகளை அமைப்பது சாதாரண காரியமில்லை. மாரி மலைக் குகையிலிருந்து அறிவுற்று தீ விழித்து மூரி நிமிர்ந்து வருகிற சிங்கத்தின் தோற்றத்தை ஆண்டாள் படமாகத் தந்திருக்கிறாள். அது இங்கு நோக்கத் தகுந்தது.

"மாரி மலை முழைஞ்சில்
மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்க
மறிவுற்றுத் தீ விழித்து
வேரி மயிர் பொங்க
எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து
முழங்கிப் புறப்பட்டு
போதருமா போலே.........

நடனத்தின் செயலையும் கவி தருகிற காட்சியில் காணலாம். சூர்ப்பணகை வருகிற பொழுது அவள் தருகிற நட்னந்தான் பாட்டிற்கொரு குதிப்பை அளிக்கிறதா? அல்லது சொற்களின் துள்ளல்களிலேதான் அவள் நடனத்தைப் பார்க்கிறோமா?— விளங்கவில்லை. அவ்வளவு அழகாய்ப் பாட்டு அமைந்து கிடக்கிறது.

பஞ்சியொளிர் விஞ்சு
குளிர்ப் பல்லவ மனுங்கச்
செஞ்செவி யகஞ்ச
நிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென
வன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென
வஞ்ச மகள் வந்தாள்.

யாழொத்த இன்னிசையைக் கவியின் பாட்டில் கேட்கிறோம். அப்பர் ஆண்டவன் திருவருளைச் சித்திரிக்கிறார். அதில் ஓசை நயந்தான் ஓங்கி நிற்கின்றது. கான வடிவை அது அடைந்துவிட்டது. சொல்லும் பொருளும் இரண்டறக் கலந்து கானமாய் வழிகிற நிலையில்தான் கவிதை முதிர்ச்சி பெறுகிறது. மாசில் வீணையும், மாலைச் சந்திரனும், மெல்ல வீசுகின்ற தென்றலும், இன்ப வேனிற்காலமும் பண்பாடும் வண்டொலி நிறைந்த பொய்கையும் போன்றதே அவன் திருவடி நீழல் என்று உள்ளம் கரைந்து பாடுகிற பாட்டு செவியிலும் நம் சிந்தையிலும் தொனிக்கின்றது.

"மாசில் வீணையு
மாலை மதியமும்
வீசு தென்றலும்
வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை
பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை இணை
யடி நீழலே."

எல்லாக் கலைகளுக்கும் உயிர் நாடியாயுள்ளது கவிதை. அது படுத்தால் எல்லாம் மண்ணோடு மண்ணாய் விடும். 'உண்ணுஞ் சோறும், பருகு நீரும், தின்னும் வெற்றிலையும்' எல்லாம் கவிதைதான். அக் கற்பகச் சோலையை "வறிஞன் ஓம்புமோர் செய்யெனக் காப்போமாக".




அழகுக்கும் உறுதிக்கும் நீண்டகால உழைப்பிற்கும் புகழ் பெற்ற
ஷண்முகம் பிராண்டு
ஸ்டீல் டிரங்குகளும் சூட்கேஸ்களும்
கண்ட்ரோல் விலையில் கிடைக்கும்
ஷண்முகம் பிராண்டை கவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர்:—
சி. ஞானசுந்தர நாயகர்.
ஆபீஸ் : 1/14 பேகர் தெரு. ஷோ ரூம்
பிராஞ்சு : 340,43 எஸ்பிளனேட் சென்னை. 341 எஸ்பிளனேட்

# அந்திப் பறவை

ந. பிச்சமூர்த்தி

[நிகழ்ச்சி]

கோலவான் கோமான் அண்ணன்
கனக ஒளிபாய் பருந்து
சர்லைக்கு நிழல்கள் தந்து
சகத்திற்கு ஒளியைத் தருவான்.
காலையில் கோவைப் பழத்தைக்
கிழக்கிலே குதறும் வேளை
வேலைக்குச் சென்று வாரேன்
வீட்டிலே இருப்பாய் என்றான்.

2

உருவற்ற வான வெளியில்
ஊகமாய்ப் பாதை கண்டான்
திருவுற்ற நீண்ட சிறகால்
தேசுபோன் காற்றுச் செய்தான்.
ஒருவனே கூடப் பிறந்தான்
உறுதுணை வேறு இல்லை
பெருமயாய் அண்ணன் வேலை
பார்த்து நான்மகிழ்ந் திருந்தேன்.

3

பொழுதெலாம் போறுத் திருந்தேன்
போனவன் திரும்ப வில்லை
பழுதுகள் சிறகில் உண்டோ,
பாவிகள் வழியில் உண்டோ?

அழுதுநான் சாம்பல் ஆகி
ஓடியே பார்க்க வந்தேன்
தொழுதுநான் தரணி எங்கும்
தமயனைத் தேடி வந்தேன்.

4

மேற்கிலே செந்தீ மலையில்
மயங்கியே ஒடுங்கு சிறகின்
நேர்த்தியைக் கண்ணால் கண்டு
நானுக் இங்கு வந்தேன்
யாருடன் தங்கப் போந்தான்?
ஈர்த்திட்ட மோகம் ஏதோ?
நேர்பட மீள்வேன் என்றான்
நினைவழித் தவரார், பாவி?

5

பெண்துயர் பொல்லா தென்று
பேசு வார் வாய் இனிக்க
அண்ணனை ஒளித்துச் சோக
அலைகளில் என்னை விடவோ?
கண்ணொளி கொன்று விட்டார்
குருவிநான் சாப மிட்டேன்
“விண் மணும் என்போல் ஆக்
விள்ளரும் சோகம் தோய.”

[விளைவு]

அந்தியில் சோதரி
கண்ணைக் கசக்குருள்
விந்தை விழித்துயர்
உண்ணுது பாரை.

தாமரை சாம்பின
நீரலை நின்றன
சாமரைக் காற்றுகள்
நேர்த்தியும் மாய்ந்தன.

இருள்பை அவிழ்ந்தது
சோகம் மணத்தது
கருமரக் கொம்பிலே
காகம் பதுங்கின.

நக்ஷத்திரத்துளி
நவத்துயர் வீசின
பக்ஷித்துச் சந்திரன்
சவமாய்ச் சிரித்தான்.

சொல்லொணு வேதனை
சூழ்ந்தது எங்கும்.
சொல்லொணு ஏக்கம்
வீழ்ந்தது நெஞ்சில்.

# புது வாழ்வு

கே. ராமநாதன்

கொலைகாரன்! கொள்ளைக்காரன்! திருடன்! குழந்தையைக் கொன்ற கொடும் பாவி! என்ற குற்றப் பட்டம்.

சிறைவாசம்! கடுங்காவல்! அந்நியத் தீவினிலே அஞ்ஞாத வாழ்வு! தூக்குமேடை! மின்சார நாற்காலி! புகை போட்டுப் புதைத்தல்! என்ற தண்டனைப் பட்டம்.

சித்திர குப்தன் கணக்கிலே சிந்தனையை மாட்டிவிட்ட நம் நாட்டில் - மேல் நாடுகளில் நடக்கிற நிகழ்ச்சிகள் இவை.

சிறை மீண்டும் வந்தாலோ! ஏளனம்! கேவல வாழ்வு! சமூக பகிஷ்காரம்! ஓயாத வெறுப்பு! தீராத தூஷணை!

எனவே திருடனும் கொலைக்காரனும் திருந்த வழியில்லை. சாகும் வரையில் சதா இந்த சாபக் கேடுதான்.

சமூக சீர்திருத்தக்காரர்கள் - உத்தாரகர்கள் - யாரும் எந்த மாற்றும் காணவில்லை. குற்றம் என்னும் குட்டையிலே கால்இடறி ஒருவன் விழுந்துவிட்டாலாம். சந்தர்ப்ப வசத்தால் - சட்டத்தின் கோணலால் - நீதி எடுத்துரைக்க நேர்மை வழியில்லாமல் குற்றவாளி என்று பட்டஞ் சூட்டப் பட்டாம். ஆனால் குற்றம் என்ற குகைக்குள் பட்டவன் பட்டவனே. உய்யும் வழி ஏதுமில்லை. குற்றமே வாழ்வாக வாழ்ந்து குற்றமே காலனுக்கு இறக்கும் கோரம் அவன் ஜீவியம்.

ஆனால் உலகத்தில் ஒரு நாட்டில் சோவியத் திருநாட்டில் இந்தக் கொடுமை இல்லை. குற்றங்கள் எதிலிருந்து பிறக்கின்றன? வறுமை, பசி, சுரண்டல் கொடுமை, ஆதிக்கப் பேயாட்டம். பொல்லாத பெண்ணடிமை, பொருந்தாத ஜாதி நிறத்திமிர், கோணல் மாணல் சமூக அமைப்பு இவற்றால். குற்றங்களின் பிறப்பிடமாக உள்ள இந்த சமூக அவக்கேட்டை அடியோடு சுட்டுப் பொசுக்கி சுடு சாம்பலாக்கி விட்டனர் சோவியத் மக்கள். இன்று அங்கே சோஷலிஸப் புத்தாட்சி மலர்ந்து விட்டது. மனித வாழ்வு பூரணமாக விகசித்து விளங்குகின்றது.

குற்றங்களுக்கு அஸ்திவாரமாக உள்ள கொடுமைகளைத் தகர்த்தெறிந்ததோடு குற்றவாளிகளுக்குப் புனர் ஜன்மம் அளிக்கும் புனிதப் பணியையும் சோவியத் எடுத்துக்கொண்டிருக்கிறது. அந்த ஜீவித மறுமலர்ச்சி யக்ஞத்தின் சிறப்பு மகத்தானது. உலகில் மகான்கள், வேதாந்திகள் கண்ட கற்பனைகள் கனவுகள் இன்று உயிர்ப்புடன் உலகில் செயலாகத் திகழும்படி திட்ட மிட்டு விட்டது சோவியத் சர்க்கார்.

இன்று சோவித் நாட்டில்! கன்னக்கோல் பிடித்த கரம் கவிதை எழுதுகின்றது - ஜேப்படி சூரன் சிற்பியாகச் சிறக்கிறான். வழிப்பறி செய்தவன் விஞ்ஞானியாக வளர்கிறான். கொலைகாரனாயிருந்தவன் கலைக்காரனாகக் காட்சி தருகிறான். பொய்யின் பீடத்திருந்தவன் மெய்மைக் கூடம் வகுக்கிறான். குழந்தையைக் கொன்ற கொடும் பாதகி குழந்தை வைத்தியத்தில் நிபுணியாகிறாள். கற்பினை விற்றுத் தாழ்ந்தவள் பொறுப்புடன் பதவியேற்று வாழ்கிறாள். குற்றம் என்னும் கன்னங்கரிய கருங்கறை கரைந்து மறைந்து அற்புதப் புது வாழ்வு ஆனந்த நடனம் புரிகிறது.

இந்த 'இந்திர ஜாலம் மாயா மாற்றம்' எப்படி நிகழ்கின்றது? புது வாழ்வுதரும் பெரும் சடங்கு எப்படி நடக்கிறது? வாழ்க்கையைப் புடம் போட்டுப் புத்தம் புது சொக்குத் தங்கமாக்கும் பணி சாதாரணமானதல்ல. குற்றம் கெடுத்த குறை வாழ்விலிருந்து ஏற்றம் மிகுந்த புது வாழ்வுக்குச் செல்லவேண்டிய பாதை சாமான்யமானதல்ல, நெடுங்கானகங்கள், பாலை மணற் காடுகள், விரிந்த அலைகடல்கள் பல கடந்தாகவேண்டும். சோதனைகள் பல தாண்டும் சாதனை வேண்டும். சோவியத் நாடு போட்ட திட்டங்கள் எவை என்று காண்போம்.

சிறைவாசம் தூக்குமேடை, நாடு கடத்தல் என்ற நஞ்சான தண்டனைத் தமுக்கின் ஒலியிலே உடல் வெம்பி, உள்ளம் வெதும்பிக் கிடக்கும் குற்றவாளிகளுக்கு சோவியத் நாடு வாவென்றழைத்துக் கூறும் வாகான மொழிகள் எவை.

'உழை உருவாக்கு உயிரூட்டு'

என்ற உன்னதச் சொற்கள் தான்.

எல்லாருக்கும் உழைப்பு என்ற திட்டத்தின் கீழ் குற்றவாளிகளுக்கும் வேலை தரப்படுகிறது. சிறைக் கதவு மட்டுமே வாவென்றழைத்த காலம் போய் சீர்திருந்திய வாழ்வின் விரிந்த கதவு வாவென்று அறை கூவுது. பால்டிக் கடலுக்கும் கருங் கடலுக்கும் இடையே கால்வாய் வெட்டும் வேலை - மாஸ்கோவுக்கு வோல்கா நதியில் கால்வாய் வெட்டும் வேலை போன்ற தொழில்களில் முதலிலே குற்றவாளிகள் வேலைக் கமர்த்தப் பட்டனர். அங்குதான் தூய வாழ்வுக்கென்று துல்லியமான வழி தென்பட்டது.

இயற்கையின் சக்திகளுடன், சீற்றத்துடன் இடைவிடாத போர். மண் குவியல் முதுகை அமுக்கும் மடைதிறந்த வெள்ளம் சீறிப் பாயும். இவற்றுடன் மலைந்து மனவுரம் பெற்றனர் இவர்கள். வோல்கா நதியின் கதியை (போக்கை) மனித இச்சைப்படி சமூகத்துக்கு உபகாரமாக மாற்றி விடுந் திறமை படைத்த நாம் நமது கதியை ஏன் திருத்தி சமூகத்தின் மதிப்புக்கும பாத்திரமாகக் கூடாது! என்ற எண்ணம் அலைபோட்டெழுந்தது அவர்கள் மனத்திலே.

உழை, உருவாக்கு, உயிரூட்டு'

என்ற உன்னத மந்திரம் உத்வேகம் கொடுத்தது, அங்கேயே வாழ்வு மறுமலர்ச்சியடைந்தது. ஊதியமும் கௌரவமும் தானே தேடி வந்தன. நேற்றைய திருடன், நேற்றைய கொலைகாரன் புது மனிதனாகி விட்டான். அவனது பழைய இருள் வாழ்வு பாழடைந்த சரித்திரமாகியது. தீம்பு பிடித்த வாழ்வு தீக்கிரையானது. திருந்திய வாழ்விலே திளைத்த அவர்கள் தீங்கவிகள் தீட்டலாயினர். அவர்களது அனுபவத்தை அவர்கள் வாயிலாகவே கேளுங்கள்.

"கட்டணங்கள் செலுத்தாமல்
காரணங்கள் சொல்லாமல்
கால் நூற்றாண்டு காலம்
கழித்து விட்டேன் பட்டணத்தில்

கள்ளக் கையொப்ப மிட்டேன்
களவு பல பல புரிந்தேன்
குள்ளச் சதிகள் எல்லாம்
குறையாது செய்திருந்தேன்

என்று தன் பழங்கால வாழ்வை வருணிக்கிறான். அப்புறம் கேளுங்கள்.

பட்சமுள்ள தோழர்களே
பழமைச் சிழக்கதெல்லாம்
தட்சணமே மாய்ந்திடாது
தயங்கி நின்றுமை மயக்கும்

ரத்தத்தில் புகுந்துவிட்ட
ரணகாளிக் கிருமிபோல
நித்தம் பகலிரவாய்க்
குத்தி வருத்திடுமே.

பாசிபோலப் படர்ந்த பழம் கறை பட்டழிய எத்தனை சிரமம் என்பதை எடுத்துப் புகட்டுகிறது இந்தப் பாடல். அவனே தன்னை ஏற்றுக்கொள்க என்று வேண்டுகிறான்:

செங்கொடி உயரத் தூக்கி
செருக்குடன் தலை நிமிர்ந்து
பங்கமில் ஆட்சி கண்ட
பட்டணத் தலைமைப் பீடம்

வோல்கா நதிப் பரப்பின்
பாங்கான புனித நீரால்
நீங்காக் கலி மடித்து
மீண்ட எமை வாவென்பாய்!

கால்வாய் வெட்டுகின்ற கடுமையான வேலையில் புடம் போடப்பட்டுப் புத்தம் புதுப் பாதையில் வாழ்க்கைப் படகைத் திருப்பிவிட்டனர் இவர்கள். "திருடர்களின் சர்வ கலாசாலை" என்று இந்தப் புனிதப் பணிக்கு நாமஞ் சூட்டினர்.

உழைக்கும் உரிமை, வாழும் உரிமை, சுதந்திர சோவியத் பிரஜைகளாக சுகிக்கும் உரிமை யாவும் பெற்று இந்த சமூகத்தின் தீண்டாத ஜாதி புதிய உருவெடுத்திருக்கிறது:—

புத்தம் புதுக் கால்வாயில்
பொங்கி ஓடும் வோல்காவே
நித்தம் எங்கள் வாழ்வுடனே
நீங்காமல் ஓடாயோ!

எங்கள் புகழ் எங்கள் இன்பம்
துங்க முயர் சோவியத் தின்
மங்காத நவ வாழ்வின் சாதனையே
பேரிகை முழக்கு வோல்கா மணியாறே!

எனப் புதுவாழ்வின் பொன்னூஞ்சலிலே இன்பத் தாலாட்டுப் பாடுகின்றனர். உழை, உருவாக்கு. உயிரூட்டு என்ற வேத மணிவாக்குகளை நம் சமூக இருள் களைய நாமும் பின்பற்றுவோமாக.

# பசுவும் கன்றும்

**கூட்டுறவு ஆசிரியர் கோவை என். லக்ஷ்மணன்**

பகவத் கீதையில் சொல்லப்பட்ட அபயம், சாந்தம் முதலிய நற்குணங்கள் அழகாக அமையப் பெற்ற தியாக மூர்த்தியாக விளங்குவதால் காந்தியடிகளை நாகரீக உலகம் ஏற்றிப் போற்றுகிறது. அவர் ஒரு கவி என்று நான் சொன்னால் யாராவது நம்புவார்களா? ஆனால் அவர் எழுதிய ஒரே ஒரு வரியானது கவிதா உலகின் சிகரத்தைத் தொட்டுக் காட்டுகிறது என்பது மட்டும் உறுதி.

பசு ஒரு செய்யுள் என்கிறார் அவர் - அளவில்லாத செய்யுள் - அதிலும் ஜீவதயையாக உருவெடுத்தது என்கிறார் மகாகவி காந்தி. இந்த இதய சித்திரம் ஒன்றே போதுமானது. குருதேவர் என்று காந்திஜி போற்றுகிற மகாகவி ரவீந்தரநாத தாகூரின் செய்யுள்களில் குழந்தை இன்பம் ததும்புகிறது. ஆனால் பசு இனத்தைக் குறித்து குருதேவர் பாடிய பாட்டு ஒன்றாவது சென்ற முப்பது ஆண்டுகளாக அவர்கள் செய்யுள்களை வாசித்து வருகிற எனக்குக் கிடைக்கவில்லையே. The cow is a vast poem of pity என்கிற காந்தி பாட்டு, பிரென்சு நாட்டு மேதாவியாகிய ரோமெய்ன் ரோலந்தின் புகழுக்கு உரித்தாயிருக்கிறது.

தமிழ்நாட்டிலுள்ள கவிகளின் கவனத்தை சிசுவும் பசுவும் கவர்ந்திருக்கின்றன. திருவாங்கூர் தமிழ இசைச செல்வர் லக்ஷ்மண பிள்ளை அவர்கள் பசுவைக் குறித்து எழுதியது உள்ளத்தை உருக்குகிறது. பணக்காரர் வீட்டுக் குழந்தையின் ஐம்பத்தை கவி மணி தேசிக விநாயகம் பிள்ளை சுட்டிக் காட்டுகிறார் :—

பத்துப் பசுக்களெம்
வீட்டிலுண்டு—நல்ல
பாலுக்கு யாதொரு
பஞ்சமில்லை
நித்தம் சுகமாக
வாழ்ந்திடுவோம்—இந்த
நீணிலத் தெம்மை
யொப்பாரு முண்டோ!

இது ரொம்ப, ரொம்ப சரி. மேலும் ஏழைப் பிள்ளைகளின் கதி என்ன என்பதை விளக்குகிறார் கவி மணி :—

அன்னப்பால் காணாத
ஏழைகட்கு—நல்ல
ஆவின்பால் எங்கே
கிடைக்குமம்மா
என்னப்பா யாம்படும்
பாட்டையெலாம்—சென்று
யாரிடம் சொல்லி
அழுவோமம்மா.

இதுபோல, சுவாமி சுத்தானந்த பாரதியாரும், கவி ராமலிங்கம் பிள்ளை அவர்களும் தமிழர் இதயத்தில் குழந்தை இன்பம் ததும்பும்படி பல செய்யுட்களை இயற்றியிருப்பது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும்.

இனி, சில புள்ளி விவரங்களை கவனிப்போம். உலகமெங்குமுள்ள கால் நடைகளின் தொகையில் மூன்றில் ஒரு பாகம் இந்தியாவிலேயே காணப்படுகிறது. ஜனத் தொகையின் தேவைக்கு அதிகமாகவே பசு இனங்கள் நமது நாட்டில் வளர்ந்துவருகின்றன. என்று ஒரு சில "நிபுணர்கள்" புகார் செய்து வந்தார்கள். இப்போதுள்ள நிலைமையில் அவர்களுடைய பேச்சு முட்டாள் பேச்சாகி விட்டது. ஏனென்றால், பால் வற்றின மாடுகளை உழவிற்கு உபயோகப் படுத்தும்படி சர்க்கார் அதிகாரிகளே அவர்களுடைய மாதச் சஞ்சிகையின் மூலம் பிரசாரம் செய்து வருகிறார்கள். [மேழிச் செல்வம் டிசம்பர் 1944, பக்கம் 19.] இது ஒரு மோசமான நிலைமையைத்தான் வெளிப்படுத்துகிறது.

சராசரிக் கணக்குப்படி தினம் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்குக் கிடைக்கிற பாலின் அளவு எவ்வளவு என்பதைக் கவனித்தால் இந்திய மக்களின் நிலைமை ஒருவாறு விளங்கும்.

பால் பெருக்கம்

| | | |
|---|---|---|
| பின்லந்து | 63 | அவுன்ஸ் |
| ஸ்வீடன் | 61 | ,, |
| நியூசிலந்து | 56 | ,, |
| இங்கிலாந்து | 39 | ,, |
| ஐக்ய அமெரிக்கா | 35 | ,, |
| பிரான்ஸ் | 30 | ,, |
| இந்தியா | 7 | ,, |

தமிழ்நாட்டில் காங்கயம் பசு நாளொன்றுக்கு (பட்டணம் படி) $1\frac{1}{2}$ படி பால் கறக்கும். ஓங்கோல் அல்லது நெல்லூர் பசு நாளொன்றுக்கு $2\frac{1}{2}$ முதல் 3 படி பால் கறக்கும். மைசூர் ஹலிக்கார் பசு தினம் ஒன்றுக்கு ஒருபடி அல்லது $1\frac{1}{4}$ படி பால்தான் கறக்கும் என்பது சர்க்காரின் மதிப்பு. சென்னை மாகாணத்தில் பெயர் பெற்றிருக்கிற இந்த மூன்று பசு இனங்களின் நிலைமை இதுவே. மற்ற பாகங்களில் நமது ஏழைக் குடியானவர்கள் வளர்க்கிற மாடுகளின் நிலைமை இன்னும் மோசமானது என்பது அவரவர் நேரில் கவனித்துத் தெரிந்துகொள்ளக் கூடிய விஷயம். மலபாரில் மோர் சாப்பிடும் வழக்கமே கிடையாது என்று சட்டசபையில் ஒரு தலைவர் பேசினார்.

போதுமான பால் நமது நாட்டில் கிடைக்காததாலும் சத்துணவுக் குறைவு, சுகாதாரக் குறைவு, மருத்துவக் குறைவு முதலிய காரணங்களாலும் தாய்மார்களின் மரணமும் சிசு மரணமும் அதிகரித்து வருகின்றன. பிறந்து ஒருவருடம் ஆவதற்குள்ளாக ஒரு ஆயிரம் குழந்தைகளில் 167 குழந்தைகள் சராசரி நமது நாட்டில் மடிகின்றன. ஆனால் ஏழைமக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிற அயல்நாடுகளின் நிலைமை வெகுதூரம் திருந்தியிருப்பதை புள்ளி விவரங்கள் ருசுப்படுத்துகின்றன.

சிசு மரணம்

| | |
|---|---|
| கானடா | 61 |
| ஐக்ய அமெரிக்கா | 48 |
| ஜெர்மனி | 60 |
| இங்கிலாந்து | 53 |
| ஆஸ்திரேலியா | 38 |
| ஜப்பான் | 114 |
| இந்தியா | 167 |

பசு இனங்களை வளர்ப்பதில் ஆஸ்திரேலியா நாடு தலை சிறந்து விளங்குகிறது. எல்லா நாடுகளையும் விட அந்த நாட்டில் சிசு மரணம் மிகவும் குறைந்திருப்பதற்குக் காரணம் பால் பெருக்கம் என்று சொல்லுவது மிகையாகாது. மாபெரும் தலைவர்களான ரவீந்திரநாத தாகூர், காந்தி அடிகள், பண்டித மாளவியா, ஆச்சாரிய பிரபல சந்திர ரேய், கவி அரசி சரோஜினி நாயுடு முதலியவர்கள் பசுவளர்க்கும் இயக்கத்திற்குப் பேராதரவு அளித்துள்ளார்கள். தமிழர் பக்தி இத்துறையில் அவ்வளவாக வளரவில்லை. செட்டிநாட்டைச் சார்ந்த உத்தமர் சிலர் சிலகோயில்களில் பசுமடம் அமைத்து நடத்துகிறார்கள். அவர்களும் மற்ற வள்ளல்களும் இந்தப் புனிதமான வேலையைத் தீவிரமாகத் தமிழ்நாடெங்கும் நடத்தி வழி காட்டினால் நலமாயிருக்கும்.

ஜனக்கட்டு, பணக்கட்டு முதலிய வசதிகளில்லாதவர்களுக்கு கூட்டுறவு இயக்கமானது ஒரு சஞ்சீவியாக உதவுகிறது. சென்னை, கோயமுத்தூர், மதுரை முதலிய பல நகரங்களில் கூட்டுறவு பால் பண்ணைகள் சிறப்பாக நடைபெறுவதால் நாடு—நகரங்களைச் சார்ந்தவர்கள் ஒருங்கே பயனடைந்து வருகிறார்கள். காங்கயம் கால் நடைகளை அபிவிருத்தி செய்து, ஏழை மக்களுக்கு உதவும் நோக்கத்துடன் ஒரு பெரிய கூட்டுறவு சங்கம் திருப்பூரில் பதிவு செய்யப்பட்டு இந்தப் பொங்கல் வாரத்தில் வேலை துவக்கப்படும். இதன் வளர்ச்சியானது தமிழ்நாட்டின் மற்ற இடங்களுக்கு வழிகாட்டியாக உதவக்கூடும். பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.


**ஆர். ஆர். பிரதர்ஸ் & கோ.,**

மெஷினரி மர்சண்ட்ஸ்

306, லிங்கி செட்டி தெரு, ஜி. டி., மதராஸ்.

நெல் அல்லர். மாவு, மிளகாய், சீயக்காய் அரைக்கக்கூடிய மிஷின்களும், அவைகளுக்கு வேண்டிய சில்லரை சாமான்களும், பேல்டு வகையறுக்களும் எங்களிடம் கிடைக்கும்.

சகாயமான விலை உறுதியான வேலைப்பாடு

**R. R. BROTHERS & CO.,**

MACHINERY MERCHANTS,

306. LINGI CHETTI ST., G. T. MADRAS.

# சோற்றுக் கவலை

• ராமகிருஷ்ணன் •

"சோழ வளநாடு சோறுடைத்து" என்பது பழமொழியாகிவிட்டது.

"ஒரு பிடிபடியும் சீரிடம் ஏழு
களிறுபுரக்கும் நாடு கிழவோயே"

என்கிறார் ஒரு புறநானூற்று புலவர், சோழ வேந்தனைப் பார்த்து. அவர் பெயர் ஆவூர் மூலங்கிழார் என்று ஞாபகம். சோழ நாட்டின் நிலவளத்தை இவ்வளவு அழகாக வர்ணிக்கிறார். "யானையைக் கட்டி தினி போடுவது" என்ற வசனம் உங்களுக்கு தெரியுமல்லவா? செல்வந்தர்களாலேயே யானை வைத்துக் கொள்ள முடியும். சோழநாட்டில் ஒரு பெண் யானை படுத்துக் கொள்ளக் கூடிய நிலத்தை வைத்துக்கொண்டு ஏழு ஆண் யானைகளுக்கு தினி போடலாமாம்! தமிழகத்தின் செழிப்பு தான் என்னே!

விளைந்தால் போதுமா? எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமே! தற்கால நாகரிகத்தில் நாம் காண்பதைப்போல, ஒரு பக்கம் விளைபொருள்களும் செய் பண்டங்களும் வீணாகிக் கொண்டிருக்க இன்னொரு பக்கத்தில் ஏழை மக்கள் ஒரு கவளம் அன்னத்துக்காக. ஒரு முழத் துண்டுக்காக. கதறவேண்டியிருந்ததா? பழம் தமிழகத்தில் பசித்தவர் என்பது கிடையாது என்கிறார் ஔவைத்தாய்.

ஒருநாள் ஒருபொழுதொருவன்
ஊணொழியப்பார்க்கும் நேர்

நிறை நில்லா தென்றுமென் மனனே
நேர் நிறை நில்லா தென்னும்
[மனனே!

என்பது ஔவையின் பாட்டு. "ஒரு வேளைகூட ஒருவனுக்கு உணவில்லை யென்றால் அந்நிலையை என்னால் தாங்கமுடியாது" என்கிறார்!

அதனால்தான் இந்த புராதன பரம்பரையில் பிறந்த புதுமைக் கவி, பாரதி,

"தனியொருவனுக்குணவில்லையெனில்
ஜகத்தினை யழித்திடுவோம்"

என்று போர்ப்பறை கொட்டுகிறார்.

"இல்லை யென்ற கொடுமையை
உலகில் இல்லை யாகச்
செய்வேன்"

என்று வைராக்கியம் எடுத்துக் கொள்கிறார். இதைச் செய்யாதவர் "நடிப்பு சுதேசி" என்பது அவர் கருத்து.

"பஞ்சத்தும் நோய்களிலும்
பாரதர் புழுக்கள்போல்
துஞ்சத் நம் கண்ணாற்கண்டும் -
[கிளியே
சோம்பிக் கிடப்பாரடி"

என்று அத்தகைய நடிப்பு சுதேசிகள்மீது காரி உமிழ்கிறார்.

"என்ன பீடிகை பலமாக போடுகிறீர்களே?" என்று கேட்கிறீர்களா? பதட்டப்படாதீர்கள். விஷயத்தைச் சொல்லப் போகிறேன். இந்த சேவை பரம்பரையில் பிறந்த தமிழ் மக்கள் இன்று அந்த பாதையில் செல்ல வேண்டுமென்பதே என் கட்சி.

நாட்டின் அலங்கோல நிலையைப் பாருங்கள். வங்கப்பஞ்சத்தைப்பற்றி கேள்விப்பட்டோம். லக்ஷக்கணக்கான விவசாயிகள் உடமை யெல்லாம் விற்று அகதிகளாகி, கல்கத்தாவுக்கு நடந்து, நகர தெருக்களிலே, ஒருவாய் கஞ்சிக்காக ஓலமிட்டபடியே உயிர் நீத்தார்களென்பது நீங்கள் கேட்ட செய்தி; நான் நேரில் கண்டகாட்சி. அத்தகைய விபரீதம் தமிழகத்துக்கும் நேரும் போலிருக்கிறதென்றால் நாம் விழிப்புக் கொள்ளவேண்டாமா? அதைத் தடுக்க பகீரத பிரயத்தனம், பிரம்ம பிரயத்தனம் எல்லாம் செய்யவேண்டாமா?

தமிழ் நாட்டில் 12 ஜில்லாக்கள். சென்னையையும் சேர்த்துச் சொல்கிறேன். தஞ்சைதான் தென்னாட்டு நெற்களஞ்சியம் எனப் பெயர் பெற்றது. திருச்சி, தென்னாற்காடு ஜில்லாக்களும் உபரி ஜில்லாக்கள்தான், அதாவது, ஜில்லாவின் சுயதேவைகளைப் பூர்த்தி செய்துவிட்டு ஏற்றுமதியும் செய்யமுடியும். நெல்லை, ராமநாதபுரம், சேலம், கோவை, நீலகிரி பற்றாக்குறை ஜில்லாக்கள் தேவைக்கு குறைவாகவிளையும் பிரதேசங்கள். சென்னைக்குதான் விளைவேயில்லை. செங்கல்பட்டு, வடாற்காடு, மதுரை - சுய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளக் கூடிய ஜில்லாக்கள். பிறருக்கு லாபமுமில்லை, நஷ்டமுமில்லை.

யுத்தத்துக்கு முன்னால் சென்னை ராஜதானி 120,800 டன் அரிசி இறக்குமதி செய்தது. கிட்டத்தட்ட பாதி தமிழ் நாட்டின் உபயோகத்துக்கு செலவாயிற்று. ஆனால் அதேசமயம் தமிழ் நாட்டு அரிசி கேரளத்துக்கு ஏற்றுமதியாயிற்று.

1939-லிருந்து விலைகளை எடுத்துக்கொள்ளுங்கள். ராமநாதபுரத்தில் ரங்கூன் அரிசி ரூபாய்க்கு 7, 8 படி விற்றது, நெய் 10, 11 படி விற்றது. ஸ்தலத்தில் அறுவடையாகும் அரிசி 4, ⅞ படி விற்றது.

யுத்தம் வந்தது; விலைகள் ஏறின. 1940-ல் ரங்கூன் அரிசி 5 படி; உள்ளூர் அரிசி 3 படி.

பிறகு ஜப்பான் சண்டையிலிறங்கியது; பர்மா விழுந்தது. நெருக்கடியும் வந்தது.

1942 ஆகஸ்டில் ராமனுதபுரத்தில் ரூபாய்க்கு 1½ படியிலிருந்து 2½ படிவரை; அதற்குமேலில்லை.

1942 நவம்பர் - டிஸம்பர், 1943 ஜனவரி - பிப்ரவரியில், உணவு தட்டு சென்னையிலேயே ஏற்பட்டு விட்டது. டிப்போக்களில், "க்யூ"க்களில் நிற்கவேண்டி வந்தது! 3 மணி நேரம் நின்று விட்டு, வெறும் கூடையுடன் திரும்பவும் நேர்ந்தது.

1943-ல் கவர்ன்மெண்ட் சில கட்டுப்பாடு உத்திரவுகளை பிரயோகித்தது. ஆனல் அவைகள் ஏட்டளவில் நின்றுவிட்டன. இதை பின்னர் கவனிப்போம்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை அதன் தேவைகளை அதால் பூர்த்தி செய்துகொள்ள முடியும். தஞ்சையிலிருந்து 3,14,000 டன் ஏற்றுமதி செய்யக் கூடுமென்பது சர்க்கார் கணக்கு. குறைந்தபட்ச புள்ளி விவரம். திருச்சியில் 45000 டன் உபரி. தென்னுற்காட்டில் சுமார் 1 லட்சம் டன் உபரியிருக்குமெனத் தெரிகிறது. இதெல்லாம் அரிசியைப் பொறுத்தவரை. அதாவது, இந்த மூன்று உபரி ஜில்லாக்களிடமிருந்து 5 லட்சம் டன் அரிசி கிடைக்கும். சென்னைக்கு தேவை மாதம் 10000 டன்; கோவைக்கு வருடதேவை ஒரு லட்சம் டன். ராமனுதபுரத்துக்கு வருடதேவை 12000 டன். நெல்லைக்கு 25000 டன். சேலத்துக்கு கிட்டத்தட்ட 60000 டன். நீலகிரி பிரதேச தேவை வேறு. மொத்தத்தில் தமிழகத்தின் தேவைகளை நாமே ஈடு செய்துகொள்ள முடியும்.

ஆனல் இதைச் செய்யக்கூடிய ஸ்தாபன அமைப்புவேண்டும். உபரி ஜில்லாக்களில் ஒரு மணி தானியம்கூட விடாமல் சேகரித்து அதை பாழாக்கவிடாமல், சர்க்கார் ஸ்டோர்களில் காப்பாற்றி, உடனுக்குடனே பற்றுக்குறை பிரதேசங்களுக்கு அனுப்பவேண்டும். இதன் வெற்றிகொள் முதல் வினியோக திட்டங்களிலும் போக்கு வரத்தையும் பொறுத்திருக்கிறது.

1942-43; 43-44—இந்த 2 வருஷங்களில் நடந்திருப்பது என்ன? உபரிஜில்லாக்களில் கொள்முதல் திட்டம் வெற்றி காணவில்லை. கடந்த மூன்றுமாதங்களாக சர்க்காரின் ஸிவில் சப்ளை நிர்வாகி என்ன கூறுகிருர்? "உபரிஸ்டாக்குகள் மார்க்கெட்டுக்கு வரவில்லை" என்ற அதே "பிளேட்" தான்!

1942-43 ல் ராமனுதபுரம் கிராமங்களில் மக்கள் கஷ்டப்பட்டது உங்களுக்கு ஞாபகமூட்ட வேண்டியதில்லை. பிண்ணுக்கு, கொள்ளு இவையெல்லாம் ஆகாரமாயின. சந்தைகளுக்கு சென்று பார்த்தால், 500 கடைகள் இருக்குமிடத்தில் 5, 10 கடைகள்தான். ஒன்றுக்கு நான்கு விலை கொடுத்தால் தரகனின் தயவுமிருந்தால், புழக்கடை வழியாய் தானியம் வரும்.

கவர்ன்மெண்ட் திட்டம் கைகூடவில்லை; கொள்ளை லாப வியாபாரிகள் தானியத்தை அமுத்திக் கொண்டு விட்டனர். இதனல் தான் கள்ள மார்க்கெட் சிருஷ்டிக்கப்படுகிறது. இதனல்தான் மக்களுக்கு உணவு தட்டு! பாரதி பிறந்த நெல்லையிலே டிப்போ சீட்டு இருந்தால் வாரத்துக்கு 3 ஆழாக்கு அரிசி கிடைக்கலாம்! பக்கத்திலுள்ள ராமனுதபுரத்தில் பஞ்சம் கதவைத் தட்டுகிறது! "கோவையில் பட்டினிப் பட்டாளங்கள் பெருகி பட்டினிச் சாவுகள் ஏற்படலாம்" என்று ஜில்லா காங்கிரஸ்வாதிகள் கூட்டம் எச்சரிக்கிறது. ரேஷனிங் வந்த நகரங்களில் அரிசி ரேஷன் 6 ல் 5 பங்காக குறைக்கப்பட்டுவிட்டது.

இந்த நிலைமை நீடிக்கலாகாது. இதைத் தவிர்க்க, ரேஷனிங் அவசியம் என்பதைச் சகலரும் உணர்கின்றனர். பற்றுக்குறை ஜில்லாக்களில் நாட்டுப்புறங்களிலும் பங்கீடு முறை அமுலுக்கு வரவேண்டுமென்ற கிளர்ச்சி வலுக்கிறது. காங்கிரஸ் வாதிகள் இதை கேட்கிருர்கள்; 14-11-44 ல் கூடிய சென்னை மாகாண முஸ்லீம் லீக் மாகாண முழுவதும் ரேஷனிங் கோரியிருக்கிறது.

சர்க்காரும் இதை உணர்கின்றனர். 11-11-44 ல் பத்திரிகை நிருபர் மகாநாட்டில், மாகாணத்தின் 6 பற்றுக்குறை ஜில்லாக்கள் பூராவிலும், அடையாளச் சீட்டுகள் மூலமாக தேவையான வர்களுக்கு உணவு தானியம் வழங்கும் முறை அமுலுக்கு வரும் என்று அட்வைஸர் பிரீஸ்ட்லீ கூறினர்.

இந்த திட்டம் ஒரு மகத்தான முன்னேற்றமாகும். ஆனல் இது அமுலுக்கு வர, சர்க்காரிடம் ஸ்டாக் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் திட்டம் ஏட்டளவில் தான். பொது ஜன ஒத்துழைப்பைப் பெருது, கொள்ளை லாபக்காரர்களை நம்பியது சர்க்கார்; அதனல் கள்ள மார்க்கெட் ஏற்பட்டது. பொது மக்களின் ஒத்துழைப்பு — அதனல் கொள் முதல் திட்ட வெற்றி இதுவே ரேஷனிங் திட்டத்தின் சூத்திரம். பானையிலில்லாவிட்டால் அகப்பையிலேறுமா?

இதை உணர்ந்து சர்க்கார் ஒரு புதிய திட்டத்தைக்கொண்டு வந்திருக்கிறது. திருச்சி, கோவை, ராமனுதபுரம், நெல்லை ஜில்லாக்களிலுள்ள உபரி நெல்லையும், நீலகிரி, கோவை, ராமனுதபுரம், நெல்லை ஜில்லாக்களிலுள்ள உபரி புஞ்சை தானியங்களையும் சர்க்கார் நேரடியாய் வாங்க திட்டமிட்டிருக்கிறது.

இத்திட்டம் நிறைவேறினல், கோவை முதலிய பற்றுக்குறை ஜில்லாக்களில் ரேஷனிங் முறையை கடைப்பிடிக்க முடியும். இது நிறைவேரு விட்டால், தமிழகம் வங்காளத்தின் பாதையில் செல்லும். பொது மக்கள்தான் திட்டத்தை நிறைவேற்ற முடியும்.

"உணவு வேலையில் ஈடுபட்டால் சர்க்காருடன் ஒத்துழைப்பதாகும்" என்று சிலர் கருதுகின்றனர். ஆம்! ஒத்துழையாமை காங்கிரஸ் வாதிகள்தான். அந்த கண்ணேட்டம் தவறு. லட்சக்

கணக்கான மக்கள் பசியென்னும் கோரப்பிணிக்கு இரையாகும் காலையில், "சைத்தான் சர்க்காருடன் ஒத்துழைப்பதாகும் உணவு வேலை" என்று ஜபித்துக் கொண்டு வாளாவிருப்பதா தேசபக்தி? அதுவா காங்கிரஸ் பரம்பரை? 1934ல் பீகார் பூகம்ப காலத்தில் ராஜன் பாபு நிர்வாகத்துடன் ஒத்துழைக்கவில்லையா? இன்று பீகார் காங்கிரஸ் வாதிகள் தொத்து நோய்களை எதிர்த்துப் போராடுகையில், நிர்வாகத்தின் ஒத்துழைப்பை ஏற்றுக் கொள்ள வில்லையா?

தவிர, இந்த வர்தத்துக்கு காந்திஜியே முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்.

"லக்ஷக் கணக்கான மக்கள் பசியில் பதறுவது, பொதுவாழ்வில் நடக்கும் கள்ள மார்க்கெட் என்ற சூதாட்டம், இவை என்னை வருத்துகின்றன. பட்டினியின் பிடிப்பில் வேதனைப்படும் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு தொண்டாற்றுவதுதான் முதற் கடமை என்று உணர்ந்து சிரத்தை எடுத்துக்கொண்டால் நிலைமையை நிவர்த்திக்க முடியுமென்பது திண்ணம்" என்று கூறுகிறார் காந்திஜி. பேராசிரியர் ரங்கா கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில், மக்களுக்கு உதவ, சர்க்காரால் நியமிக்கப்படும் உணவு கவுன்ஸில்களில் அங்கம் வகிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்,

இந்த சூழ் நிலைமையில், எந்த கட்சியைச் சேர்ந்தவனாயினும் சரி, தேச பக்தன், உண்மைத் தமிழன் உணவு பிரச்னையை அலட்சியம் செய்ய முடியாது. இதுவே நமது ஜீவ மரண பிரச்னை. இதில் அரசியல் வேட்டைக்கு சந்தர்ப்பமில்லை. சகல கட்சிகளையும் அணைத்துப் போகக்கூடிய உணவு கமிட்டிகள் தமிழ் நாட்டில் ஒவ்வொரு கிராமத்திலும் தோன்றவேண்டும். ரேஷனிங் கொள்முதல் திட்டங்களைப்பற்றி தப்பெண்ணங்களைப் போக்கி, பொதுமக்கள் இவைகளை நிறைவேற்ற முன்வருமாறு தூண்டவேண்டும். உபரி தானியத்தை கவர்ன்மெண்ட் ஏஜண்டுகளிடம் விற்கச் செய்தல் வேண்டும். கள்ள மார்க்கெட்டில் சம்பந்தமுள்ளவர்களை, சமூக பகிஷ்காரம் செய்ய வேண்டும்; நீதிமன்றத்திலும் தண்டிக்கவேண்டும்.

இக்கடமைகளைச் செய்யாமல், "நான்தான் சுத்த சுயம்பிரகாச தேசபக்தன்" என்று சொல்லிக் கொண்டிருப்பதால், எவனும் அவன் கடமையைச் செய்தவனாக மாட்டான். பாரதியின் பாட்டில் வேறொரு அடி எனக்கு ஞாபகத்துக்கு வருகிறது.

"தாயைக்கொல்லும் பஞ்சத்தைத்
தடுக்க முயற்சி யுறார்
வாயைத்திறந்து சும்மா—கிளியே
வந்தேமாதர மென்பார்"

என்று அவர் பாடினார். அப்படிப் பட்டச் நடிப்பு சுதேசிகளல்ல; தாய்க்கு தக்க தனயர்கள் என்பதை நடைமுறையில் நிரூபிப்போம்! காங்கிரஸ், லீக், கம்யூனிஸ்ட் தேசபக்தர்கள், ஏன், தமிழர்கள் அனைவரும் ஒருமுகமாக திரண்டெழுந்து பஞ்சப்பேயைக் கொல்லுவோம்.



# தமிழர் திருநாள்

"தமிழ் ஒளி"

தென்னை இளங்கு ருத்துச்
சித்திரப் பின்னல், முற்றல்
கன்னல்நன் மஞ்சள் கொத்து
மாவிலைக் கோவை எங்கும்

மின்னின ! வேயின் தோளார்
மலர்முகம் நிறைத்தார் ஆங்கே
மென்னிதழ் விரியும் தூய
தமிழிசைத் தேன்க டல்மேல் !

பொங்கலோ பொங்கல் ! என்பார் !
புதுவாழ்வு தழைக என்பார் !
பொங்குக புதுப்பால் என்பார் !
பொலிகவே ருழவர் என்பார் !

செங்கனி யும்க ரும்பும்
சேர்ந்ததைப் போலே எங்கும்
மங்கையர் ஆண்பா லாரும்
மகிழ்ந்தாடிப் பாட லானார் !

தையேந்தி வந்த பொங்கல்
திருநாளைத் தமிழ கத்தோர்
கையேந்தி யேசு ளித்தார்
காரிருள் அகன்ற தென்றே,

நெய்யேந்தும் திருவி ளக்கை
நிறைத்தனர் புதுநெல் குத்தி
மெய்யேந்தும் உயிர்வ ளர்க்கும்
ஆவின்பால் விட்டுப் பொங்கி

பயிர்க்கோளி நீரைப் பாய்ச்சும்
பரிதியின் முன்ப டைத்தே
உயர்வுறும் தமிழர் நன்னாள்
பொங்கலே எனவொ லித்தார் !

பயன்கூட்ட உதவி தந்த
படைவலி எருது கட்கும்
துயர்தீர் ஆவினத்தி னுக்கும்
குளிர்நீரால் தூய்மை சேர்த்தே

மஞ்சளின் சாந்து பூசி
மணமூட்டி யேஅ வற்றின்
நெஞ்சத்தில் மகிழ்ச்சி தன்னை
நிலைத்திடச் செய்து மாலை

கொஞ்சிடும் தென்றல் தன்னில்
குதித்தோடி னார்கள் பல்லோர் !
எஞ்சினின் றாரோ பொங்கல்
ஏற்றத்தை இசைத்தி ருந்தார் !

ஓடினோர் மீண்டார் பாட்டின்
உட்பொருள் காணு தற்கே !
தேடிச்சென் றி யாவ ருக்கும்
பொங்கலைத் தந்தார், யாரும்

கூடியே உண்ண லானார் ;
குளிர்பனி யாலே வையம்
வாடிய தொழித்த திங்கே
வறுமையும் தீர்ந்த தாமே !

புதுப்பானை தன்னில் பொங்கல்
பொங்கிற்றா ? உங்கள் வீட்டில்
புதுப்பாலின் சுவை பொங்கிற்றா ?
பொங்கிற்றா மகிழ்ச்சி ? என்றே

புதுப்பேச்சு தொடங்க லானார்
ஒருவரோ டொருவர் ; பொங்கும்
புதுப்பாலில் உறவு சேர்த்தார்.
புதுமணம் வாய்க்கப் பெற்றார் !

வந்தது தைத்திங் கள்தான் !
வண்மைசேர் நலங்கள் யாவும்
தந்தது ; தமிழர் ஆற்றல்
தழைத்திட மேலும் ஊக்கம்

தந்தது ; பொங்கல் என்னும்
அமுதினைத் தந்த(து!) உண்டு
சிந்தையில் தமிழின் பத்தைச்
சேர்த்தனர் தமிழ கத்தோர் !

# மண் சுமந்த கதை

கி. வா. ஜகந்நாதன்

அழகிய மலர், மணம் செறிந்து தளதள வென்று கண்ணையும் கருத்தையும் கவர்கிறது. அதைக் கண்டவுடனே மனசுக்கு ஏதோ ஒரு தனி உல்லாச உணர்ச்சி உண்டாகிறது. மணத்தின் மோகன சக்தியும் நிறத்தின் கவர்ச்சியும் நம்மை ஆட்கொள்கின்றன.

மலரின் நிறத்திலே ஈடுபட்டால் அதை அப்படியே சிறிது நேரம் பார்த்து அநுபவிக்கிறோம்; அதன் மணம் நமக்குப் புலப்படும்போது இன்னும் சிறிது அதிகமாக நம் மனத்தை அதன்பால் செலுத்தி இன்புறுகிறோம். அதனிடம் இயற்கையாக உள்ள மென்மையை அநுபவிக்க ஆரம்பித்தாலோ சில நேரம் பிரமித்து நின்றுவிடுகிறோம்.

மலரின் நிறம் எல்லோருடைய கண்ணிலும் சட்டென்று படும்; அதன் மணம் சற்றுக் கூர்ந்து கவனிப்பவர்களுக்குத் தெரியும்; அதன் மென்மையோ நன்றாகக் கவனிப்பவர்களுக்குத்தான் புலப்படும். மலரின் முழு அழகையும் நுகர வேண்டுமானால் நன்றாகக் கவனித்து உள்ளத்தை அதன்கண்ணே செலுத்தித்தான் பார்க்க வேண்டும்.

அழகுக்கு இருப்பிடமாகிய கலைப்பொருள்கள் எல்லாவற்றையும் நறுமண மலர்களாகச் சொல்லிவிடலாம். தெய்வத்தைப் பூஜிக்க மலர்கள் உதவுகின்றன. கலைப்பொருள்களும் மிகச் சிறந்த மதிப்பை உடையனவாய் உயர்ந்த இட்த்திலே விளங்கக் கூடியவை. எவ்வளவுக்கெவ்வளவு அழகுணர்ச்சியோடும் அன்போடும் மனிதன் அவற்றை நுகரத் தலைப்படுகிறானோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவற்றின் இனிமை பெருகிக் கிட்க்கும்.

கலைப்பொருள்களிலே சிறந்தது கவிதை. கலை மரத்திலே விளைந்த பல பல பொருள்களிலே மலரைப்போல நிற்பது அது. தன்னுடைய சுகந்தத்தினாலே வண்டினங்களை அழையாது அழைக்கும் ஆற்றல் வாய்ந்தது. அதன் கண் ஈடுபட ஈடுபட இன்பம் சுரக்கும். “நவில்தொறும் நூல்நயம் போலும்” என்று திருவள்ளுவர் சொல்கிறார். மரத்தில் இலைக் கூட்டத்துக்கு நடுவே மலர்கள் விளங்குவது போலச் செய்யுட்களின் கூட்டத்தில் சுவையுடைய கவிதைகள் விளங்குகின்றன. மணமில்லாத மலரையும் மணமுள்ள மலரையும் வைத்து ஒப்பு நோக்கும்போது மணமுள்ள மலரின் சிறப்பு நன்றாகத் தெரிகிறது. கவியுலகத்திலும அப்படிப் பார்க்க வ்ழி இருக்கிறது.

ஒரே கருத்தைப் பல புலவர்கள் எடுத்து ஆண்டிருப்பார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரியத்திற்காக ஒவ்வொரு முறையில் அந்தக் கருத்தைக் கோலம் செய்திருப்பார்கள்; சில புன் கவிகள் அதை அலங்கோலம் செய்வதும் உண்டு. உபயோகமில்லாத பொருளென்று நாம் நினைக்கும் ஒன்றைக் கவியுலகத்திலே கவிஞன் மிக்வும் சிறந்ததாகக் காட்டிவிடுவான். மாயா ஜால மந்திரசக்தியை விஞ்சிய அவனுடைய மோகன வித்தை உலகில் எங்கும் இல்லை.

## 2

மதுரையில் ஸ்ரீ சொக்கநாதக் கடவுள் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் புரிந்தருளினார். அடியார்களிடத்தில் அப்பிரானுக்கு உள்ள கருணையைப் புலப்படுத்துவன அவை. அவற்றுள் மண் சுமந்த திருவிளையாடல் என்பது ஒன்று. மாணிக்கவாசகரைச் சிறையில் அடைத்த பாண்டியனுக்கு அப்பெரியாருடைய பெருமையை இறைவர் புலப்படுத்த எண்ணினார். வையையிலே பெருவெள்ளம் வரச்செய்தார். மதுரைமா நகரில் வையைக் கரையை உயர்த்தும் முயற்சியில் நகரமக்கள் ஈடுபட்டனர். ஒவ்வொருவருக்கும் அந்த வேலையில் பங்கு அரசனால் வரையறுத்து அளிக்கப்பட்டது. அங்கே பிட்டுச் சுட்டு வியாபாரம் செய்து வந்த ஒரு கிழவிக்குச் சொக்கநாதக் கடவுளே வேலையாளாக வந்து வேலையைக் கவனிக்காமல் பேசிக்கொண்டே இருந்தார். மேற்பார்வை பார்த்து வந்த பாண்டியன் அவரைக் கண்டு தன் கைப் பிரம்பால் அவர் முதுகில் அடித்தான். அவ்வடி சர்வ சராசரங்களின் மேலும் பட்டது. வேலையாளாக வந்த சொக்கநாதர் ஒரு கூடை மண் கொட்டி உடைப்பை அடைத்து மறைந்தருளினார். எல்லா உயிர்களிடத்திலும் உறையும் சிவபெருமானே வேலையாளாக வந்தது தெரிந்து பாண்டியன் மனமுருகினான். அன்பர்களெல்லாம் சொக்கநாதரைத் துதித்தனர்.

இந்தக் கதை தமிழில் பிற்காலத்து இலக்கியங்களில் அடிக்கடி வரும். எத்தனையோ புலவர்கள் இந்தத் திருவிளையாட்டுச் செய்தியைச் சாதுரியமாக எடுத்து ஆண்டிருக்கிறார்கள்.

மாணிக்கவாசகர் பொருட்டாகவே வையையில் வெள்ளம் வரச் செய்ததாக அசரீரி சொல்லப் பாண்டியன் அவரை விடு

வித்து வழிபட்டான் என்பது புராணம்.

மாணிக்கவாசகர் சிறந்த சிவ பக்தர். சைவ சமய ஆசாரியர்களில் ஒருவர். அவர் மனம் உருகிப் பாடிய பாடல்களைத் திருவாசகத்திலே காணலாம். இறைவன் தமக்காக மண் சுமந்து அடிபட்டுப் புண் சுமந்த செய்தியை அவர் பல இடங்களில் சொல்லியிருக்கிறார். "மண்ணைச் சுமந்து பிட்டு விற்பவளிடத்தில் பிட்டையே கூலியாக வாங்கிப் பாண்டியனுடைய பிரம்பினால் அடிபட்டுப் புண் சுமந்த பொன்மேனியைப் பாடுவோம்" என்று ஓரிடத்தில் பாடுகிறார். மண் சுமப்பது எத்தனை இழிவான வேலை? அதற்குக் கூலி வாங்குவது அதைவிடக் கேவலம்; ஒருவன் அடிக்க அடிபடுவது சகிக்க முடியாத இழிவு. இவ்வளவையும் அப்பெருமான் பக்தர் பொருட்டுச் செய்தான். சிறிது நாகரிகம் படைத்த மனிதன் கூடச் செய்ய அருவருக்கும் இந்த வேலையைச் செய்தவன் எத்தகையவன்? அவன் பெருமையைப் பண் சுமந்த பாடல்கள் எத்தனையோ காலமாகப் பாடி வருகின்றன. கருணையே திருவுருவாக உடைய எம்பெருமாட்டியை வாமபாகத்தில் ஏற்றிருக்கிறவன். திருப்பெருந்துறையில் இருப்பவன். வானுலக மெல்லாம் பரவிய கீர்த்தியை உடையவன். எல்லா உலகங்களுக்கும் ஈசன். நெற்றியிலே கண் படைத்த பெரியவன். —அவன் மதுரையிலே மண் சுமந்தான், கூலி வாங்கினான், அடிபட்டான் என்றால் எவ்வளவு பெருங் கருணை அவன்பால் இருக்க வேண்டும்! இந்தச் செய்தியைக் கேட்கும்போதே அன்பர்களுடைய உள்ளம் கசியும். இதற்குக் காரணமான மாணிக்க வாசகர் உருகுவதற்குச் சொல்ல வேண்டுமா? பெண்களையெல்லாம் அழைத்து, "அந்தப் புண் சுமந்த திருமேனியைப் பாடுதுங் காண் அம்மானாய்" என்று அம்மானைப் பாட்டாகப் பாடுகிறார்.

பண்சுமந்த பாடற்
    பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன்
    பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி
    வியன்மண் டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக்
    கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு
    அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி
    பாடுதுங்காண் அம்மானாய்!

[பண்--ராகம். மண்டலம்—உலகங்கள். கலி—முழக்கம். கோ—அரசன்.]

பக்தர்களுக்கு இனிக்கும் பாட்டு இது.

## 3

மண் சுமந்த கதையில் பல கட்டங்கள் இருக்கின்றன. வந்தியின் பிட்டுக்காக இறைவன் வந்தது, மண் சுமந்தது, கூலி வாங்கினது, அடிபட்டது, அடித்த பாண்டியன் உட்பட எல்லோருடைய முதுகிலும் அந்த அடி பட்டது, பிறகு பாண்டியன் உணர்வு பெற்று மாணிக்கவாசகரை விடுதலை செய்தது என்று கதை படர்ந்து நடக்கிறது. இதில் கடைசிப் பகுதியை ஒருவர் நினைத்தார். இறைவன் முதுகிலே அடித்த அடி எங்கும் பட்டது. ஆகையால் அவன் எவ்வுயிரிலும் நீங்காது உறைபவன் என்ற உண்மை வெளியாயிற்று. இப்படிச் சொன்னாலே போதும். ஆனால் அவருக்கு இந்தச் செய்தியைப் பின்னும் நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நினைத்தார். 'கடவுள் எங்கும் பரந்தவர் என்று இதனால் தெரியவில்லையா?' என்று கேட்டிருக்கலாம். அதற்கு மேலும் போனால், 'எங்கள் சிவபெருமான் எங்கும் நிறைந்தவர் என்பது தெளிவாகிறது' என்று சொல்லியிருக்கலாம். அதுவும் அவருக்குப் போதவில்லை. சமய அறிவிலே ஊறினவர் அவர்; சமயவாதி. இந்தச் செய்தியைக் கொண்டு வாதம் செய்ய, வாய்ச் சண்டை போட எண்ணினார். "உங்கள் சாமி உலகமெல்லாம் நிறைந்தவர் என்று சொல்ல முடியுமா? பிரமா, விஷ்ணு, சிவன் என்று வரிசையாக எண்ணுகிறீர்களே. பிரமன் ஒரு சமயம் அடிபட்டான். முருகன் நறுக்கென்று அவன் தலையிலே குட்டினான். பிரமதேவன் எங்கும் நிறைந்தவனாக இருந்தானானால் அந்தக் குட்டு எல்லோருடைய தலையிலும் பட்டிருக்க வேண்டுமே! அப்படி நடக்கவில்லையே! கிடக்கட்டும். மகாவிஷ்ணுவின் கதை என்ன? இடைச்சி கையில் அடிபட்டாரே. அந்த அடி யார்மேல் பட்டது? எங்கள் பசுபதிமேல் பட்ட அடி எல்லார் மேலும் பட்டது பாருங்கள். இதனால் யார் பெரியவர் என்று தெரிகிறது?" - இப்படியெல்லாம் அவருடைய கற்பனை ஓடியது. அதை ஒரு வெண்பாவாகச் சொல்லிவிட்டார்.

எண்கணனைக் குட்டியகுட்டு
    எங்கேனும் பட்டதோ
மங்கைஅரி மேல்அடித்த
    மத்தடி போய் - எங்கேனும்
பட்டதோ எங்கள்
    பசுபதிமேற் பட்டஅடி
பட்டதே எவ்வுயிர்க்கும் பார்.

[எண்கணன்- எட்டுக் கண்ணையுடைய பிரமன். அரி - கண்ணன்.]

மண் சுமந்த கதையில் இறைவன் தான் பட்ட அடியை மறந்தாலும் இவர் மறக்கவில்லை. கடவுள் மேனி புண்பட்டதோ இல்லையோ, மற்றத் தெய்வங்களை வழிபடும் அன்பர் மனம் புண்படும்படி பாட்டால் அடிக்கிறார், இந்தச் சமய வாதி.

## 4

ஒரு கவிஞன் இந்தச் செய்தியைக் கேட்டான். அவன் பக்தனாக இருந்திருக்கலாம். ஆனால் நிச்சயமாகச் சமயவாதியல்ல. அவனுடைய கவிதை உள்ளம் வேலை செய்ய ஆரம்பித்தது. சொக்கநாதப் பெருமானைக் கடவுளென்றோ, எல்லாத் தெய்வங்களிலும் உயர்ந்தவரென்றோ சித்தாந்தம் செய்ய அவன் வரவில்லை. மண் சுமந்த கதையில் சொக்கநாதர் அடிபட்டது கூட அவன் நினைவுக்கு வரவில்லை போலும்! அவர் மண் சுமந்து ஒரே கூடையினால் வையை உடைப்பை அடைத்தார் என்ற காட்சியை மாத்திரம் அவன் அநுபவித்தான்.

'கவிக்கு உபயோகமான பொருள் அல்லவா இது? இதைக் கொண்டு சொக்கநாதரையே அழைத்து வந்துவிடலாமே!' என்று கவிஞன் நினைத்திருக்க வேண்டும். அவருக்கு மற்றவர்கள் கொடுத்திருந்த வேஷத்தை யெல்லாம் களைந்து விட்டுக் காதலனாக வேஷம் புனைந்து விட்டான். காதலன் என்றால் காதலி இல்லாமலா?

காதலன் காதலியைப் பிரிந்து இருக்கிறான். "அவன் இன்னும் வரவில்லையே!" என்று அவள் உருகுகிறாள். கண்ணீர் ஆறாகக் கடலாகப் பிரவகிக்கிறது. அதைப் பார்த்துத் தோழி சொக்கநாதராகிய காதலனிடம் முறையிடுகிறாள்.

'வேலைப் போலக் கூர்மையான பார்வையையுடைய கண்களை உடையவள் இந்தக் கன்னிகை. இந்தக் கண்கள் இப்போது கூர்மையை இழந்து அழுகின்றன. கண்ணீர் பிரவாகமாகப் பொங்கிக் கடலைப் போலப் பெருகுகிறது. இதற்கும் எல்லையுண்டு. இது பெருகி உடைத்துவிட்டால் அப்புறம் அடைக்க முடியுமா என்ன? அதற்கும் உபாயம் உண்டோ? .... ஓகோ! வையையாற்று வெள்ளத்தை அடைத்த பேர்வழியல்லவா நீ! அதுமாதிரி இதை அடைத்து விடலாமென்று நினைக்கிறாயா? அது இங்கே நடக்காது. அங்கே சும்மாடு இல்லாமலே ஏதோ ஒரு கூடை மண்ணைக் கைலாகவத்திலே சட்டென்று போட்டாய்; அடைந்து விட்டது. இங்கே அந்த தந்திரம் பலியாது. சும்மாடு கட்டிக்கொண்டு சுமந்து சுமந்து கூடைமேல் கூடை போட்டு அடைத்தாலும் இது அடைபடாது. அடைபட இது வையை ஆறல்ல சுவாமி, வையை ஆறு அல்ல பரவை, கண்ணீர்ப் பிரவாகக் கடல்என்பது ஞாபகம் இருக்கட்டும். ஆற்றிலே செய்த தந்திரத்தைக் கடலிலே செய்ய முடியாது."

இப்படிச் சொல்கிறாள் தோழி.

படைத்தாரை வேற்கண்ணி கண்ணீர்
ப்ரவாகப் பரவைபொங்கி
உடைத்தால் அடைக்க உபாயம்
உண் டோநறை ஊற்றுக்கொன்றைத்
தொடைத்தாம வேணியில் சும்மாடு
கட்டிச் சுமந்துசுமந்து
அடைத்தால் அடைபடச் சொக்கே
இதுவையை ஆறல்லவே!

[படைத்தாரைவேல் - ஆயுதமாகிய நீண்ட வேல்போன்ற. பரவை - கடல். நறை - தேன். தொடைத்தாமம் - தொடுத்த மாலை. வேணி - தலை. சொக்கே - சொக்கநாதக் கடவுளே.]

சொக்கநாதக் கடவுளை எங்கோ கைலாசத்தில் இருக்கும் கண் காணாத தெய்வமாகத் தோழி நினைக்கவில்லை. தன் அருகில் தன் சொல்லைக் கேட்கும் நிலையில் பவ்யமாக நிற்பதாகத்தான் அவள் பாவிக்கிறாள். "சொக்கே!" என்ற அருமைப் பெயரால் சுதந்திரமாக அழைக்கும் வார்த்தையே அதைத் தெரிவிக்கிறது.

தலைவியின் துக்கத்தை அழகாகச் சொல்லிவிடுகிறாள்; சாதுரியமாகவும் கூறுகிறாள்.

மண் சுமந்த கதையைக் கொண்டு இப்போது கவிஞன் ஒரு நாடகத்தை யல்லவா நடத்திவிட்டான்! காதலைக் கொண்டு வந்து கலந்து இனிமை யூட்டி, கதையையும் அதிலே கரைத்துக் கவிதையைப் பாடியிருக்கிறான். "சொக்கே! இது வையை யாறல்லவே!" என்ற அடி உள்ளத்துள்ளே கேட்டுக் கொண்டே இருக்கிறது. சொல்லுக்குச் சொல் சுவை பொங்கும் இந்தப் பாடலைத் தனியே படித்து இன்புற்றாலே இதன் அருமை விளங்கும்; மேலே சொன்ன பாடல்களோடு வைத்துப் பார்த்தால் அந்தச் சுவை இன்னும் அதிகமாகும்.

முதல் பாட்டிலே மாணிக்கவாசகர் பக்தி மணக்கிறது. இறைவனது பெருங்கருணையை அவர் பாராட்டுகிறார். சிவபக்தர்கள் பாட்டை மிகவும் நன்றாக ரஸிக்கலாம். மண் சுமந்த கதையை நம்பாமல் உள்ள அயல் மதத்தினர் ஒருவர் அந்தப் பாட்டைப் படித்தால் சிவபக்தரைப் போல அவ்வளவு இன்பத்தை அடைய முடியாது; தமிழ்ப்பா இனிமையை ஓரளவு தெரிந்து கொள்ளலாம்.

இரண்டாவது செய்யுளிலே சமயவாதி கதையைத் தமக்கு ஆயுதமாக்கிக் கொண்டிருக்கிறார். மற்றச் சமயங்களை இழித்துப் பேசுவதிலே இன்பங்காணும் உள்ளத்திற்கு அந்தப் பாட்டு இனிக்கும். எல்லாரிடத்திலும் அதைப் பாடமுடியாது.

இறுதிப் பாடலோ, கதையை நம்பா விட்டாலும், தெய்வமாகக் கொள்ளாவிட்டாலும், தமிழ் நயம் தெரிபவர் யாராயினும் இன்பத்தைத் தருகிறது. மண் சுமந்து ஆற்றில் உடைப்பை அடைத்தவன் என்ற செய்தியைக் கற்பனைக்காகவாவது ஒப்புக் கொள்ளலாம். அந்தச் சிறு செய்தியை அகத்துறைப் பாட்டிலே பொருத்திக் கவிதை செய்கிறான் கவிஞன். இதைச் சைவர் மாத்திரமல்ல, கிறிஸ்தவர்கூட அநுபவிக்கலாம். "சொக்கே இது வையை ஆறு அல்லவே" என்று சொல்லிச் சொல்லி அநுபவிக்கலாம்.

ரூக் இங்க்

எல்லாவித பவுண்டன் பேனுக்களுக்கும் ஏற்ற இங்க்

நேஷனல் ப்ராடக்ட்ஸ் கார்ப்பரேஷன்
126, ராயப்பேட்டை ஹைரோடு, மயிலாப்பூர், சென்னை

# தென்றலின் தீர்ப்பு

விஜயரங்கன்

**மண் போட்டியைத் தொடங்குகிறது :**

மண் சொல்லும் : மலை, அருவி, இனிய தென்றல்
மணமிக்க மலர் சோலை, ஏரி ஆறு
தண்கடல்,நல் வயல்,பச்சைப் புல்நி லங்கள்.
தருக்கூட்டம் - இவைகளிடை வாழ்கின் றேன்நான்!
எண்ணற்ற உயிரினங்கள் என்வ யிற்றில்
இருந்துபிறந் தெழிலுடனே வளரும் ; ஆனால்
" விண்ணென்பார் ! நீலவான் என்பார் !"—அந்த
'வெறும்வெளியைப்' புகழ்வார்கள் மனிதர் எல்
[லாம் !

**விண்ணின் விருப்பு :**

விண்ணியம்பும் : மண்ணுக்கு வாய்த்த 'இன்ப
விதை'என்றன் விழியொளியின் வீச்சுத் தானே !
கண்ணேது மண்ணுக்கு ? நான்ஈன் றிட்ட
கதிர்ப்புதல்வன் இல்லானேல் ஒளிதான் ஏது ?
தண்திங்கள் என்புதல்வி இல்லா விட்டால்
தமிழ்போன்ற இன்பமதற் கேது—மற்றும்
கண்பறிக்கும் என்'மீனின்' காட்சி எங்கும்
காணரிய நல்லழகுக் காட்சி யன்றோ !

சூடேறிக் கொதிக்கின்ற மண்ணில் நல்ல
சுவைபொருள்கள் சேர்ப்பதென் வியர்வை யன்றோ!
காடாகிக் கிடக்கின்ற அங்கே எழிலைக்
காட்டுகின்ற கண்ணாடி நான்தான் அன்றோ !
மேடு,பள்ளம் என்னிடத்தில் இல்லை யன்றோ !
விரிவென்றே என் நோக்கம் ! பொருள் இருந்தும்
மூடாத பெட்டிநான் அன்றோ ! அந்த
முதுவையம் ஈதொப்ப மறுப்ப தென்னே !

**தென்றல் உண்மையை விளக்கி, தீர்ப்புக் கூறுகிறது :**

காற்றுதன் வேகத்தைக் குறைத்துக் கொண்டு
கனிவுமிகும் நியதிஎனுந் தென்றல் ஆகி
சாற்றும் இருவரிடையும் நீதி : சற்றே
தயவுசெய் தென்சொல் கேளும் ! இயற்கை அன்னை
மாற்றுயர்ந்த செம்பொன்னின் ஆடை போர்த்து
மண்மீதில் படுத்திருப்பாள் ; வானில் சென்று
காற்சிலம்பொ லிக்க நடம் ஆடி இன்பம்
கண்டிடுவாள்! விண்,மண்ணை உடலாய்ப் பெற்றாள்!
" இயற்கைத் தாய் உறைவிடம்நீர் இருவருந்தான்!
ஏனிந்தப் போட்டிஉ மக்குள் ? மனிதர்
செயல்தன்னை நாம்செய்யத் துணியலாமோ ?
சிந்திப்பீர் !" எனத்தென்றல் சிரித்துச் சொல்லும் !
வியப்புடனே விண்,மண்ணை நோக்கும் !—மண்ணும்
விரிக்குந்தன் பசுங்கரத்தைத் தென்ற லாலே
ஐயமெலாம் நீங்கிற்று !—விண்ணும் மண்ணும்
அகம்மகிழ்ந்து தென்றலோ டுறவு கொள்ளும் !

நான் எப்போதும்

சூரஜ்மல்ஸ்

வைரங்களையே

வாங்குகிறேன்




"சூரஜ்மல்ஸ் வைரங்கள்தான் சிறந்தவை;
நம்பிக்கையானவை;
நம்பிக்கைக்கு ஏற்ற இடம்"

# சூரஜ்மல்ஸ்

133, எஸ்பிளனேட், சென்னை.


32A

# தி பீர்தான் ஜுஹார்மல் பாங்க் லிமிடெட்

ஸ்தாபிதம் 1933

தலைமை ஆபீஸ்:

"பீர்தான் பில்டிங்ஸ்" திருச்சிராப்பள்ளி

உள்ளூர் கிளைகள்

மலைக்கோட்டை, வரகனேரி, உரையூர்

இதர கிளைகள்:

சென்னை, காரைக்குடி, புதுக்கோட்டை
கண்டனூர் & ஸ்ரீரங்கம்

சென்னை ஆபீஸ், 191, சைனுபஜார், ஜி.டி.

டிபாஸிட் விகிதம்

**பிக்செட் டிபாஸிட்:**

6 மாதம் 3½% வட்டி
12 ,, 4% ,,
24 ,, 4½ ,,

**கரண்டு அக்கவுண்ட்:**

ரூ. 20,000 வரையில் வருஷத்திற்கு 1% வட்டி

**சேவிங்க்ஸ் பாங்கு கணக்கு:**

3% வட்டி ஒரே செக்மூலம் ஒரே நாளில் ரூ. 250 வாங்கலாம்
ஒரு வாரத்துக்கு ரூ. 500 எடுக்கலாம்.

**ரெக்கரிங் டிபாஸிட்:**

4½% வருஷ வட்டி.

மற்ற எல்லாவிதமான பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும்.

**V. T. வீரப்ப செட்டியார்**
சேர்மன்

**J. ஷ்ரம் சந்த் சேட்**
மானேஜிங் டைரெக்டர்



# Books of General Interest

AND FOR

**High Schools, Colleges & Public Libraries**

| No. | Title | Rs. A. P. |
|---|---|---|
| 1. | All about Lokamanya Tilak ... | 4 0 0 |
| 2. | From Colombo to Almora: Vivekananda ... | 3 0 0 |
| 3. | Young India, Vol. 3 (1927-'28) ... | 3 0 0 |
| 4. | Autobiography of Jawaharlal Nehru (Tamil) by V. R. ... | 3 0 0 |
| 5. | Satyakama by S. E. Stokes ... | 3 0 0 |
| 6. | Gandhiji in England and the Proceedings of 2nd R.T.C. ... | 1 8 0 |
| 7. | Life of Barrister Savarkar ... | 1 8 0 |
| 8. | The Music of Orient and Occident by Mrs. M. E. Cousins ... | 2 0 0 |
| 9. | H. H. Sankaracharya Swami of Kamakoti Peedam by Paul Brunton ... | 0 5 0 |
| 10. | The Social and Political Life in the Vijayanagara Empire by Dr. B. A. Saletore, 2 Vols. ... | 12 0 0 |
| 11. | The Aravidu Dynasty of Vijayanagara by Rev. Henry Heras ... | 10 0 0 |
| 12. | Studies in Pallava History by Rev. H. Heras ... | 3 8 0 |
| 13. | The History of Jehangir by Francis Gladwin. Edited by K.V. Rangaswami Iyengar ... | 5 0 0 |
| 14. | India as a federation by K. V. Punniah ... | 3 8 0 |
| 15. | The Maukharis by Edward A. Pires. | 6 0 0 |
| 16. | The University of Nalanda by H. D. Sankalia ... | 5 0 0 |
| 17. | The Gita Idea of God by Brahmachari Gitananda ... | 5 0 0 |
| 18. | Dialogue, Divine and Dramatic by Brahmachari Gitananda ... | 1 0 0 |
| 19. | The Political Philosophies since 1905 by B. K. Sarkar ... | 4 0 0 |
| 20. | Economic Development by B. K. Sarkar ... | 8 0 0 |
| 21. | Introduction to the Science of Education by B. K. Sarkar ... | 1 4 0 |
| 22. | The Science of History and the Hope of Mankind by B. K. Sarkar ... | 1 0 0 |
| 23. | Changing Views on Marriage and Family by K. T. Merchant ... | 3 8 0 |
| 24. | The Law and Theory of Railway Freight Rates by K. C. Srinivasan. | 10 0 0 |
| 25. | A Primer of Malayalam Literature by T. K. Krishna Menon ... | 1 0 0 |
| 26. | Gangas of Talkad by M. V. Krishna Rao ... | 3 0 0 |

**B. G. PAUL & CO.,** Booksellers,
**4, Francis Joseph Street, Madras.**

# வர்ணமும் கவி உள்ளமும்

ஆர். கே. பார்த்தஸாரதி, எம். ஏ., எல். டி.

கலைகள் யாவற்றிலும் வர்ணங்களுக்கு ஓர் உயர்ந்த இடம் அளிக்கப் பட்டிருப்பது கண்கூடு. அங்ஙனம் தனித்த வர்ணங்களும் வர்ணச்சேர்க்கைகளும் கலைகளில் உன்னத பதவி பெற்றிருத்தலுக்கு முக்கிய காரணங்கள் யாவும் இயற்கையின் பிரதிபலிப்புகளாக இருப்பதுதான். இயற்கையை, ரசிக உள்ளத்துடன், கவனித்தால் அதிலுள்ள வண்ணப் புதுமை புலப்படும். உதாரணமாக வானவில்லை எடுத்துக் கொள்வோம். விண்ணில் வானவில் வாரியிறைக்கும் வர்ண விநோதம் தான் என்ன? நீருண்ட மேகத்தின் மீது வர்ண சமூகம் தவழ்ந்து விளையாடும் வகை தான் என்ன? அல்லது செழிப்பான வயல்களை எடுத்துக் கொள்வோம். அங்குத் தோன்றும் பசுமையின் பாங்கு தான் என்ன? அல்லது மனிதனின் கைபடாது - அவனது செயற்கைச் சூழ்ச்சி படாது - "காட்டகத்தே கட்டிலடங்காமல் வளர்ந்து, கவினுடை மலர்கள் மண்டி நிற்கும் மரங்களை எடுத்துக் கொள்வோம். அப்பப்பா! மனதை மயக்கும் மகரந்தம் பயக்கும் மலர்களின் மாண்பு மீக்கூறும் வர்ண விசித்திரத்தை என்னவென்று விளம்புவது! எனவே இயற்கையின் வர்ண எழில் வார்த்தையிலடங்காத ஒன்று. இயற்கையெனும் தெய்விக ஓவியனின் வர்ணக் குழம்புகள் வெகு வசீகரமானவை.

மேற்கூறிய வர்ணச் சேர்க்கைதான் கலைகள் யாவற்றையும் இடைவிடாமல் இயக்குகின்றது. இயற்கையின் படங்கள் தாம் கலைகள். இயற்கையின் வர்ணக் கிறுக்குதான் சித்திரக் கலை. இயற்கையின் அசைவுதான் நாட்டியம். இயற்கையின் சொல்லாக் கிளவிதான் கவி. எனவே, இயற்கை யன்னையின் மடிமீது வளரும் கலைஞன், அன்னையின் வர்ணப் புதுமையைத் தன்னுடைய சிருஷ்டிகளில் புகுத்துவதில் ஆச்சரியமொன்றுமில்லை. அன்னையின் அரிய பொக்கிஷத்தை எந்த நன் மகன்தான் போற்றமாட்டான்? வளர்க்க மாட்டான்?

இயற்கையின் பிரதி பிம்பங்களான கலைகளுள் தலையாயது கவிதை. கலைஞருள் தலை சிறந்தவன் கவி. பிற கலைஞர்கள் இயற்கையின் வர்ண நிறைவை வர்ணங்கள் மூலமாகவே வெளிக் காட்டுவர். ஆனால் கவியோ வர்ணக் கவர்ச்சியை வார்த்தைகளின் மூலமாகவே வெளிப்படுத்துவான். அத்துணை ஆற்றல் படைத்தவன்; இந்திர ஜாலம் புரிபவன். ஆனாலும் இந்த விசேஷ சாமர்த்தியமுடைய கவிகள் வெகு சிலரே. ஈண்டு அத்தகைய பேராற்றல் படைத்த இரு கவிகள் - கம்பனும் காளிதாசனும் - வர்ணங்களை வாரித் தெளிக்கும் வன்மையை ஆராய்வோம். உண்மையில் வர்ணங்களின் பூரிப்பு இவர்களை ஆட்கொண்டிருப்பது போல் வேறு எவரையும் கவரவில்லை என்று அறுதியிட்டுக் கூறலாம். இவ்விருவருடைய கவிதைகள் யாவும் வர்ணக் கவிதைகள் தாம் என்றாலும் மிகையாகாது.

கம்ப நாடனின் இராமாயணம் முழுவதிலுமே மேற்கூறிய வர்ணச் சரடு ஊடுருவிச் செல்கின்றது. இராமனைப்பற்றிப் பேசும் பொழுதெல்லாம் அவனுடைய வர்ண நேர்த்திதான் கவியின் அகத்தே காட்சி தருகின்றது; பின் சொற்சித்திரமாகப் பரிணமிக்கின்றது.

கம்பன், காளிதாசன் ஆகிய இருவர்ண கவி யுள்ளங்களையும் ஆராய்கிறார் இக்கட்டுரையாளர்; இவ்விரு கவிகளின் உள்ளங்களும் வர்ணச்சேர்க்கையில் எவ்வளவு தூரம் ஈடுபட்டுள்ளன என்பதை எடுத்துக் காட்டுகிறார். இயற்கையின் வர்ணஜாலங்கள் எவ்வளவு தூரம் கவி யுள்ளங்களைக் காந்தம்போல் இழுக்கின்றன என்பதை விவரிக்கிறார்.



"மய்யோ மரகதமோ
மறிகடலோ மழைமுகிலோ
அய்யோ இவன் வடிவென்பதோர்
அழியா அழகுடையான்"

என அயோத்தியா காண்டத்தில் கங்கைப் படலத்தில் காணப்படும் கவிதை இராமனின் வர்ண அழகின் மீது கம்பன் கொண்டுள்ள காதலை நன்கு தெளிவாக்குகின்றது: இராமனின் வர்ணப் பொலிவு கம்பன் மனதை மயக்குகின்றது. அந்த வண்ணத்திற்கு ஈடான தொன்றைக் கூற முடியாமல் 'ஐயோ' என்று கம்பன் வருந்திக் கலங்கும் வகைதான் என்ன? 'ஐயோ' என்ற இடைச்சொல்லில் கம்பனின் துயரந் தோய்ந்த பேரானந்தம் பொங்குகின்றது. இம்மாதிரியே இராமனைக் குறிப்பிடும் பொழுதெல்லாம் 'அஞ்சன வண்ணன்' 'நீலமாமுகிலன்' 'மரகதக் கிரியனையன்' என்று பாடுவது அவனுடைய வர்ண திருஷ்டியைக் காட்டுகின்றது.

இன்னும் கம்பன் வர்ணங்களை அற்புதமாகக் கலந்து கவிதைக் கிழியில் தீட்டும் கண்கொள்ளாக் காட்சியைக் காண்போம். எந்தக் காட்சியைச் சொற்களால் சித்தரித்தாலும், அங்கெல்லாம் வர்ண வைசித்திரியத்தைப் புகுத்துவது கம்பனின் தனிக்கலை.

மேற்கூறிய வர்ணக் கலப்பை - இரு வர்ணங்களின் இணையிலாச் சேர்க்கையை கீழ்க்கண்ட பாட்டில் காண்கின்றோம்.

மங்கை வார்குழற்
கற்றைமழைக்குலந்
தங்கு நீரிடைத்
தாழ்ந்து குழைப்பது
கங்கை யாற்றிடை
யோடுங் கரியவள்
பொங்கு நீர்ச்சுழி
போவன போன்றதே.

இங்கு கருமையும் வெண்மையும் - ஒன்றிற்கொன்று நேரிடையான இருவர்ணங்களும்- கலந்து காட்டும் கவினைக் கவி எத்துணை அழகுடன் சித்தரித்துள்ளான்! ஓவியத்திலும், புகைப்படக் கலையிலும் கருமை வெண்மையின் கலப்பு நனி சிறந்த ஓர் அம்சம். இச்சிறந்த வர்ண விலாசத்தைத்தான் கவி கம்பன் மேற்கண்ட கவிதையில் எழுப்பியிருக்கின்றான்.

கங்கையின் நீர் தூய வெண்ணிறமுடைய தென்பது கவி சம்பிரதாயம். அவ்வெள்ளிய நீர்ப்பரப்பிடை, சீதை புனலாடும் பொழுது அவளது கேசபாசம் அவிழ்ந்து தாழ்ந்து ஓடுகின்றதாம். வெண்மையினூடே செல்லும் ஓர் கருமைக் கோடு. கம்பன் கங்கையையும் மறக்கின்றான். சானகியின் குழலையும் மறக்கின்றான். இப்பொழுது அவன் மனத்தகத்தே விரிகின்றவை கருமையும் வெண்மையுந்தான். இந்த வர்ணச் சேர்க்கை உவமையாக உருவெடுக்கின்றது. கங்கையின் வெண்மையும் கரியவளின் - யமுனையின் - கருமையும் காட்சியளிக்கின்றன. முதற்கூறிய வர்ணக் கலப்பு பின்னர்க்கூறிய வர்ணக் குழம்பை ஞாபகப் படுத்துகின்றது. இதைப் போன்ற கருமை வெண்மைக் காட்சிகள் இராமாயணத்தில் எண்ணிறந்தவை.

வடமொழிச் செல்வன் காளிதாசனும் கருமை வெண்மைக் கலப்பில் கட்டிலடங்காக் காதல் கொண்டவன். இந்த வர்ணப் பொலிவைக் காளிதாசன் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதங்களில் தோற்றுவித்திருக்கின்றான். ஓர் உதாரணம் மட்டும் எடுத்துக் காட்டுவேன். ரகுவம்சத்தின் ஆறாவது சர்க்கத்தில் இந்துமதியின் சுயம்வரம் விவரிக்கப்பட்டுள்ளது. தீபத்தின் சிகை போல முன்னே நடந்து செல்லும் இந்துமதியின் சேடி அவையில் வீற்றிருக்கும் மன்னர்களின்

மாண்பை தலைவிக்கு அறிவுறுத்துகின்றாள். யமுனை நதி பாயும் தேசத்தவன் ஓர் அரசன். அவனுடைய அந்தப் புரத்துப் பெண்மணிகள் யமுனையில் நீராடும் கோலத்தை விவரிக்கப் புகும் சேடி காளிதாசன் மூலமாக - ஓர் வர்ணப் புதுமையைக் காண்கின்றாள் - காண்பிக்கின்றாள். கரியவளின் - யமுனையின் - நீரிடையே வெண்மைக் கோடுகள் கோலமிடுகின்றனவாம். இது எங்ஙனம்? பெண்கள் புனலாடும் பொழுது அவர்களுடைய மார்பில் திகழும் தூய வெண்ணிறச் சந்தனம் கரைந்து பெருகுகின்றதாம். எனவே கருமையினிடையே வெண்மை யருவி ஓடுகின்றதாம். இவ்வர்ணக் குழம்பு இடமில்லா இடத்தில் யமுனை, கங்கையைத் தழுவிச் செல்லும் தகைமையைத் தோற்றுவிக்கின்றதாம். என்ன கவர்ச்சிகரமான வர்ணக் கலப்பு!

கவி ரவீந்திரநாதரையும் இக் கலப்பு 'கலகலக்க' வைக்காமலில்லை. தம் கவிதையொன்றில் இச்சேர்க்கையைச் சிந்தனையில் செவ்விதாகச் செதுக்கியுள்ளார். நடு யாமத்தில், பாரெலாம் பேரிருளில் பதுங்கியிருக்கும் காலையில் ஓர் ஓடம் சமுத்திரத்தைக் கடந்து செல்கின்றதாம். கருமை மேலும் கரியதாகிவிட்டது. அப் பயங்கரமான காரிருளை-கருமைப் பரப்பை - வெள்ளைத் துகில் போர்த்த பாய் மரங்கள் - வெண்மைப் படலங்கள் - வெட்டிச் செல்கின்றனவாம். எத்தகைய அதிசயத் தோற்றம்!

கவிகளின் கற்பனைக் கிழியில் செக்கர் வானம் தீட்டும் செம்மை விந்தையானது. செக்கர் வானத்தின் செவ்விய நிறத்தில் சிந்தனையைப் பறிகொடுத்தவன் சிரிய கம்பன். அந்தி மாலையில் சிகப்பை மட்டும் காணாது கருமையையும் காண்கின்றனன் கவி. ஒரு பக்கம் செம்மை படருகின்றது; அதனை அழித்துக் கொண்டே முன்னேறுகிறது கருமை. இது மற்றுமோர் வண்ணச் சாந்து. மிதிலைக் காட்சிப் படலத்தில் 'எரிநிறச் செக்கரும் இருளும்' கலந்து காணும் காட்சியைக் 'கரிநிறச் செம்மயிர்க் காலன்' எனவும் 'உதிரச் செக்கரும் பாதக இருள் செய் கஞ்சுகமும்' என வர்ணிக்கும் கம்பனின் நிறச் சித்திரம் தான் என்ன! "இனங் கெரிபுகையோடு மெழுந்த தென்னவே" என்பது அந்திமாலையின் மற்றுமோர் சித்திரம்.

காளிதாசனும் கருமை செம்மைக் கலப்பின் கவர்ச்சியை நன்கு உணர்ந்தவன். கரிய நிறம் வாய்ந்த காரின் கண் செக்கர் படரும் காட்சியில் இவ் வர்ணக் கலப்பைதான் காண்கின்றான். மேக சந்தேசத்தில் இந்த அபூர்வ வர்ணக் கலப்பு இயங்குகின்றது. மேகத்தின் மீது உலர்வும் அந்திமாலையின் சிகப்பு திருநீறு பூசிய பரமசிவனின் மேனி மீது இலங்கும் கன்னங்கரேலென்ற கரித்தோலையும் அதனின்றும் பெருகும் குருதி யருவிகளையும் ஞாபகப்படுத்துகின்றது.

மீண்டும் செக்கர் வானம் - இங்கும் தனித்த செம்மையல்ல. ஆனால் பழுப்பு. கருமை மீது பாய்ந்தது பயந்த செம்மை. இது ஓர் புதிர் போல் தோற்றலாம். எனவே விவரிப்போம். கரிய மேகங்கள் தங்கும் மலை! எனவே கருமை. அதன் மீது மலைக் கதிரவனின் பழுப்புக் கிரணங்கள் பாய்கின்றன - யானைமீது சிங்கம் பாய்வது போல். அதினின்றும் வெளிப்படுகின்றது செம்மை - யானையின் உடலிருந்து பொங்கும் குருதி போல. ஆகா! இவ் வர்ணத் தயாரிப்பு ஓர் அதிசயக் கலை நுட்பமாக அல்லவோ இருக்கின்றது! இவ்விந்தை கீழே காணப்படும் பாட்டில்தான் ஒளிந்து நிற்கின்றது.

மஞ்சார்மலை வாரணமொத்ததுவாளி
ஏறும்
வெஞ்சாயை யுடைக்கதிரங்கதன்
மீதுபாயும்
பஞ்சா னனமொத் ததுமற்றது பாய
ஆறுஞ்
செஞ்சோரி யெனப் பொலிந்தது
செக்கர் வானம்.





காளிதாசனும் இம்மாதிரியான ஓர் அதிசய வர்ணக் கலப்பு முறையைக் கையாண்டிருக்கிறான். இவனது தயாரிப்பில் சாம்பல் நிறக் கருமை வெண்மை மீது பாய்ந்து சிகப்பைப் பயக்கின்றது. ஆம்! சீதையின் மங்கல மணவினை நடக்கும் பொழுது வேதியினின்றும் எழுபுகை - கரிய கோடு - அவளுடைய விழிக்கடைகளில் - வெண்மையில் - கலந்து வெண்மையை மாற்றிச் செம்மையைத் தோற்றுவிக்கின்றது; சீதையின் கண்கள் சிவக்கின்றன. ரகு வம்சத்தில் பதின்மூன்றாவது சர்க்கத்தில் இவ்வர்ண விநோதம் குறிக்கப்பட்டிருக்கிறது.

இனிப் பல வண்ணங்கள் ஒருங்கே கூடிக் கதிர்விடும் கவிதையைக் காண்போம். பல வண்ணங்களைத் தன்னகத்தே கொண்டு விசும்பில் வர்ணமாயம் விளைவிக்கும் வண்மை வாய்ந்தது வானவில். இத்தகைய வானவில்லின் வரம்பிலா வனப்பில் ஈடுபடுவதோடல்லாமல் தாமே வானவில்களாக விளங்கும் வரகவிகள் கம்பனும் காளிதாசனும்.

'வானவில்லை நிகர்த்தது வாரியே' என்று பாலகாண்டத்தில் ஆற்றுப் படலத்தில் கவி பாடும் கம்பன் உள்ளத்தில் - நாவிலும் - வானவில்லின் வர்ண சௌந்தரியம் தான் தாண்டவமாடுகின்றது. அங்ஙனமே மேக சந்தேச காவியத்தில் வானவில்லின் வர்ணப் பூரிப்புதான் காளிதாசனை மயக்குகின்றது. யக்ஷனுடைய தூதனைச் செல்லும் கருமேனி மாமுகிலின் மீது தவழும் வானவில் - கருமை மீது செங்கோல் செலுத்தும் வர்ண அரசு-கண்ணனிடமல்லவோ - மற்றுமோர் வர்ண சமூகத்தினிடமல்லவோ - நம்மை அர்ப்பணிக்கின்றது! மாமுகிலன்ன கண்ணனின் - கருமையின் - திருமுடியிலிருக்கும் - மயிற்பீலியினிடமன்றோ - நம் மனதை நிறுத்துகின்றது!

இனி இவ்விரு கவிகள் தாமே பற்பல வர்ணங்களை ஒரே சமயத்தில் வாரியிறைப்பதால் வானவில்களாக விளங்கும் விசித்திரத்தைக் கவனிப்போம்.
கம்பன்

வரப்பறு மணியும் பொன்னு
மாரமுங் கவரிமானும்
சுரத்திடையகிலு மஞ்ஞைத்
தோகையும் தும்பிக் கொம்பும்

என்று இசைக்கும் பொழுது நம் கண்முன் தோன்றும் வர்ணங்களைக் கற்பனை செய்து பார்ப்போம்.

இரத்தினங்களின் சிவந்த கதிர்கள் எங்கும் ஒளி பாய்ச்சுகின்றன. அவற்றின் மீது பொன்னின் மஞ்சள் நிறம் மனோகரமாகப் படிகின்றது. இவற்றை ஊடுருவிப் பாய்கின்றது, வெண் முத்துக்களின் ஒளிக்கூட்டம் இவற்றையெல்லாம் வெட்டிக் கொண்டு செல்கின்றது. அகிற்கட்டையின் காரொளி. இந்த வர்ணக் குடும்பத்திற்கு அழகு செய்ய மயிற்றோகையின் பல நிறப்பகட்டு. கம்பனுடன் 'ஐயோ! இத்தகைய வர்ணக்கற்றையைக் கற்பனை செய்வது எங்ஙனம்?' என்று நம் மனமும் இரங்குகின்றது. இதைக் கற்பனை செய்யக் கவியுள்ளம் வேண்டாமா?

நம் உள்ளவெளியில்,

'பங்கயம் குவளையாம்பல்
படர்கொடி வெள்ளை நீலஞ்
செங்கிடை.........' என்னும் பாட்டு, சிகப்பு, நீலம், வெளுப்பு இவைகளுடன் 'கண்ணாமூச்சி' விளையாடுகின்றது.

காளிதாசனும் இத்துறையில் தேர்ச்சி பெற்ற தெய்விக சைத்திரிகன். ஓர் யக்ஷன் அளகாபுரியிலிருக்கும் தன் காதலிக்குத் தூது அனுப்புகின்றான்-பிரிவாற்றாமையால். தூது செல்லும் மேகத்திடம் அளகாபுரியிலுள்ள தன் அரண்மனையை வர்ணித்துக் கூறுகின்றான். அவ்வர்ணனை மூலமாகக் காளிதாசனும் கம்பனைப் போல் - ஓர் வர்ணக் கட்டடத்தை சிருஷ்டிக்கின்றான். அவ்வர்ணனையைப் பார்ப்போம். "மரகதமணிகளால் அமைக்கப்பட்ட ஓர் மேடையாம். அம் மேடைமீது பொன்னாலான ஓர் தூணும். அத்தூணின்கண் பக்ஷிகள் தங்குவதற்கான ஓர் பளிங்குப் பலகையாம். அதன் பக்கத்தில் யக்ஷனும் அவன் காதலியும் அன்புடன் வளர்த்த ஓர் மயிலாம்." ஆகா! என்ன நேர்த்தியான வர்ணச் சிறப்பு! பரந்த பசுமை; அதன் மீது ஓர் மஞ்சளொளிப் பிழம்பு. அதன் நுனியில் ஓர் வெள்ளி விரிப்பு. இவை போதாவென வண்ணத்தோகை விரித்தாடும் மயிலின் வண்ணக் கோவை! அப்பப்பா! தலை கிறுகிறுக்கிறது; சிந்தனை சிதறுகின்றது.

மேற்கூறிய உதாரணங்களிலிருந்து கம்பனுடையவும் காளிதாசனுடையவும் வர்ண திருஷ்டி - வண்ணப் பொலிவு - ஓவிய உள்ளம் - ஒருவாறு புலப்படும். முன்னரே கூறியபடி இவ்விருவருடைய கவிகள் யாவும் உண்மையில் வண்ணக் கவிகள். ரசிகன் ஒவ்வொருவரும் கலையுணர்ச்சியுடன் ஆராய்ந்து அனுபவிக்கத் தக்கவை அவை. அவற்றை உண்மையாகத் துய்த்துணர வேண்டிச் சிறிது வழி காண்பித்துக் கட்டுரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.



# தேச பக்தர் திருக்கூட்டம்

கூத்தன்

தேச பக்தர் திருக் கூட்டம்—இந்தத்
தேச வாழ்விலெங்கள் நாட்டம்
ஆசிலாத திருக்கூட்டம்—இந்த
அன்னை மாண்பிலெங்கள் நாட்டம்.

தெய்வ மெங்களுக்குத் தேசம்—அருட்
செல்வ மெங்களுக்குத் தேசம்
உய்யும் மூச்சுமிந்தத் தேசம்—வே
றொன்றி லில்லையெங்கள் பாசம்

பெண்டு பிள்ளை இந்தத் தேசம்—எமைப்
பெற்ற தாயுமிந்தத் தேசம்
அண்டு முறவுமிந்தத் தேசம்—எமை
அடுத்த நேயரிந்தத் தேசம்

காசு பணமுமிந்தத் தேசம்—எங்கள்
கலையும் வாழ்வுமிந்தத் தேசம்—வீடு
வாசல் யாவுமிந்தத் தேசம்—தந்தை
வைத்த வைப்புமிந்தத் தேசம்

சோறும் நீருமிந்தத் தேசம்—பூணும்
துணியும் மணியுமிந்தத் தேசம்—மலை
ஆறு மல்குமிந்தத் தேசம்—எமக்
காவி யாகுமிந்தத் தேசம்

தேச பக்தர் திருக் கூட்டம்—ஒரு
தினைக்கு மின்னல்செய மாட்டோம்
ஆசிலாத திருக்கூட்டம்—ஒரு
அணுவுக் கின்னல்செய் மாட்டோம்

சூது வாது செய்ய மாட்டோம்—ஒரு
துடுக்கு வார்த்தை சொல்ல மாட்டோம்
பாதி யுலகு கிடைத்தாலும்—பிறர்
பழிக்கும் செய்கை செய்ய மாட்டோம்.

சாதி சமயமென மாட்டோம்—ஒரு
தாழ்வு யார்க்கும்சொல மாட்டோம்
வேதன் மைந்தரென மாட்டோம்—கீழ்
வேலைக்கார னென மாட்டோம்

ஆதி யரசர்குல மேனும்—தீயர்
அருகில் அண்டவிட மாட்டோம்
நாதி யற்றவர்க ளேனும்—மனம்
நல்ல ரென்னில்விட மாட்டோம்

பாரத ஜாதி எங்கள் ஜாதி—தேச
பக்திச் சமயமெங்கள் சமயம்—நடு
விரத நீதி எங்கள் நீதி—மனம்
வெல்லும் நியமமெங்கள் நியமம்

அன்னை போதமெங்கள் வேதம்—அவள்
அன்பை வளர்ப்பதெங்கள் வேள்வி--இந்த
அன்னை பெற்றமகர்க் கெல்லாம்—உடல்
ஆவி தருவதெங்கள் தருமம்

உடலைக் குன்றவிட மாட்டோம்—உள்ள
உணர்வை மங்கவிட மாட்டோம்
இடரிற் கலங்கியழ மாட்டோம்—இன்பம்
எதிலும் மயங்கிவிழ மாட்டோம்

ஆசை பாசங்களை வெட்டி—நல்ல
அறிவு வேலிகளைக் கட்டி
தேச பக்திவிதை நட்டு—அதைத்
தினமும் காத்துப் பயிரிட்டு

சுதந்தரக் கதிரறுத்து—எங்கும்
சுபிக்ஷமாம் மணி நிறைத்து
இதந்தரும் பதங்கள் பெற்று—இங்கு
யாரும் மன்னரென வாழ்வோம்

தேசபக்தர் திருக் கூட்டம்—இந்தத்
தேச வாழ்விலெங்கள் நாட்டம்
ஆசிலாத திருக்கூட்டம்—இந்த
அன்னை மாண்பிலெங்கள் நாட்டம்



# வாழ்வளிக்கும் வாழை

கே. எஸ். ஜம்புநாதன்

"ஸார் மார்க்கட்டுக்கா போரேள், வரபோது ரெண்டு வாழைக்காய் வாங்கிண்டு வரேளா, இந்தாங்கோ ரெண்டணா. அப்படியே மிச்சமிருக்கற காசுக்கு, பச்சைமிளகாய் வாங்கிண்டு...."

"ஸ்வாமி, நீர் எந்த லோகத்திலே இருக்கேள்? நாலு நாளா ஒரு வாழைக்காய் ஒண்ணரையணுன்னு விக்கறது...."

"ராம ராமா, அதுக்குக்கூடவா கிராக்கி. சரி, ரெண்டணவானுலும் சரி, ரெண்டு வாழைக்காயும் ஒரு இலையும் வாங்கிண்டு வாங்கோ. அமாவாசையும் அதுவுமா.........".

"அதெல்லாம் பழைய காலங்காணும். அமாவாசைக்கு வாழைக்காய் சேத்துக்கிறது. இந்தக் காலத்திலே ஒழுங்காய்..."

இது சென்னையிலே சகஜமாக நடக்கும் பேச்சு. மாதம் ஒரு முறையாவது கட்டாயமாக வாழைக்காய் உணவு அருந்த வேண்டுமென்று நமது முன்னோர்கள் நிச்சயித்தார்கள். அதனால் அதற்கும் அமாவாசைக்கும் ஒரு முடிபோட்டு ஒரு பிராதான்யம் கொடுத்து விட்டார்கள். பிதுரு காரியங்களுக்கு வாழைக்காய் மிகவும் முக்கியமான ஒரு பொருளாகி விட்டது. அதற்கு வைதீக வர்ணத்தில் ஏற்பட்டிருக்கும் முக்கியத்துவம் இருக்கட்டும். உணவு சாஸ்திரப்படி பார்த்தாலும் அது மனிதனுக்கு மிகவும் அவசியமான பொருள்தான். ஊன் வளர்ப்பதற்கு வேண்டிய எல்லா சத்துக்களும் வாழையி லிருக்கின்றன. வாழையிலே சுமார் இரு நூறுக்கும் அதிகமான இனுசுகள் உண்டு. என்றாலும் விஞ்ஞான ரீதிப்படி அடிப்படையில் ஒரே சத்துக்கள் கொண்டவை தான், எல்லாம்.

> நமது தமிழ் நாட்டிலே வாழையில்லாத ஊரோ, வீடோ, அநேகமாக இல்லை எனலாம். எனினும் நாம் அதை அவ்வளவு சிறந்த ஒன்ருக மதிப்பதில்லை. பிற நாடுகளில் வாழையை மக்கள் எப்படி விரும்புகிருர்கள் என்பதை இக்கட்டுரையாசிரியர் விவரிக்கிருர்.

வாழையின் தாய்நாடு இந்தியா தான். ஆனல் யுத்தம் ஆரம்பமாகும் வரை அது ஒரு தேசத்திற்கு முக்கிய உணவாகவும், மற்ருெரு தேசத்திற்கு பிரதான கைத் தொழிலாகவுமிருந்து வந்தது. இந்தியாவிலோ, 'பிதுருக்களை' எண்ணிச் சாப்பிடுவதுடன் நாம் திருப்தியடையும் நிலைமையிலேயே நின்றுவிட்டோம். பொருளாதார முறையிலே வாழை ஒரு கற்பக விருக்ஷம். உலகிலே இருக்கும் தாவர வர்க்கங்களிலே, ஒவ்வோர் அம்சமும், துணுக்கும் மனிதனுக்குப் பிரயோஜனமாகும்படி வளரும் மரங்கள் இந்தியாவில்தான் அதிகம். ஆனல் அதன் பூரண பலனை, அரசியல் விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப, பெருக்கிக்கொண்டு, அனுபவிக்கும் வன்மை இந்தியனுக்கு இல்லை. அதற்கு அவன் காரணமில்லை. அவனது அடிமைத்தனம் தான் காரணம். வாழையின் ஒவ்வொரு பாகமும் விஞ்ஞான வசதியிலே காசாக மாறி விடுகிறது. இங்கு நாம், வாழையின் பல்வேறு பாகங்களை உணவுப் பொருளாக உபயோகிப்பதுடன் திருப்தியடைந்து விடுகிருேம். ஏன்! விஞ்ஞான உதவியின்றியே கிடைக்கும் வாழைப் பழங்களை, இந்தியா முழுவதும் வெளி நாடுகளுக்கும் கூட—அனுப்பி வியாபாரம் செய்தாலே குபேரனுகிவிடலாமே. அதற்குக் கூட நம்மால் முடியவில்லை. அதற்கு விவசாயிகளின் பிற்போக்கும் ஞானசூனியமும்தான் காரணம். லாபமுண்டு என்று அவர்களுக்கு யாராவது எடுத்துக் காட்டினுல்தான் அந்தத் துறையில் முயலுவார்களே தவிர தனிமையாக, திடசித்தத்துடன், புதுமுறையைக் கையாள அவர்களுக்கு மனமும் வராது, தைரியமும் வராது.

ஆனல், இந்தியாவிலிருந்து வெளியேறிய வாழையின் கன்றுகள், வாழையடி வாழையாகப் பெருகி, மத்திய அமெரிக்காவிலும், ஜமைக்காவிலும் ஒரு முக்கியமான விவசாயமாக வளர்ந்து விட்டது. அங்கிருந்து வாழைப் பழத்தை ஏற்றிக்கொண்டு கப்பல்கள் இங்கிலாந்திற்கும் ஐரோப்பாவுக்கும் வருகின்றன. ஒன்றிரண்டு கப்பல்களல்ல; வாரம் ஒருதடவை பத்துப் பன்னிரண்டு கப்பல்கள்! இங்கிலாந்துத் துறைமுகங்களிலே, பழ வியாபாரிகள், வார இறுதியிலே கூடி 'பனை பிளீட்டை' (Banana Fleet) வாழைப்பழக் கப்பல்களை எதிர் பார்ப்பார்கள். இறக்குமதியான சிலமணி நேரங்களிலே இங்கிலாந்து முழுவதும் அவை பரவி விடும். உடனே செலவாகிவிடும். மீண்டும் வியாபாரிகள் 'பனை

பிளீட்'டை எதிர் பார்த்துத் துறைமுகங்களுக்கு வந்து விடுவார்கள். அவ்வளவு சூடாக இங்கிலாந்திலே விற்கிறது வாழைப் பழம். 'அது எங்கள் தேசிய உணவு' என்று ஒரு ஆங்கிலேயன் பெருமையாகச் சொல்லிக் கொள்வானாம். யுத்தம் ஆரம்பமாகி, அட்லாண்டிக் சமுத்திரத்திலே நிர்ப்பயமாகக் கப்பல்கள் வரமுடியாதபோதுகூட, யுத்தக் கப்பல்கள் புடைசூழ 'பனானா பிளீட்' இங்கிலாந்திற்கு வந்தது. சமீபத்தில்தான் அது நின்றுவிட்டுவிட்டது. வாழைப்பழ இறக்குமதி நின்றதும் இங்கிலாந்திலே அநேக இடங்களில் கொந்தளிப்பு ஏற்பட்டது. சர்க்காரின் செய்கையைக் கண்டித்துக் கூட்டம் போட்டனர். 'வாழைப்பழ ஒப்பாரி' ஒருவன் பாடினான். அவன் பாட்டுக்கு 'மௌஸ்' ஏற்பட்டுவிட்டது. எங்கு சென்றாலும் அந்தப் பாட்டுக்கள் கேட்டன. கிராமபோன் ரிகார்டுகளிலும், சினிமா கொட்டகைகளிலும் அந்தப் பாட்டுத்தான்.

ஐரோப்பிய ஏற்றுமதி அசாத்தியமானதும் ஜமைக்கா விவசாயிகள் பாடு திண்டாட்டமாகி விட்டது. அதுதான் அவர்களுடைய பிரதான விவசாயம். அந்த விளை பொருளுக்கும் மார்க்கட் இல்லாவிட்டால் என்ன செய்வது? விவசாயிகளின் பிரமிப்பைக் கண்டு விஞ்ஞானிகள் அவர்களுக்கு உதவி செய்ய முன் வந்தார்கள். பின்பு! வாழைப் பழங்கள் மாத்திரம் காசாகிக் கொண்டிருந்த ஊரிலே, வாழையின் ஒவ்வொரு பாகமும் காசாகிவிட்டது. பழங்கள் டின்களில் அடைக்கப்பட்டன. வாழைப்பட்டையிலிருந்து நார் எடுக்கப்பட்டு ஆடைகளாக மாறின. வாழையிலைகள்கூட சாமான் கட்டுமாறு பக்குவம் செய்யப்பட்டன. மீண்டும் அங்கு பொருளாதார சுபிக்ஷம் ஏற்பட்டுவிட்டது.

விஞ்ஞான வசதியும், சர்க்காரின் உதவியும் இந்திய விவசாயிகளுக்குக் கிடைத்தால் உலகத்தில் உள்ள விவசாயிகளைவிட பணக்காரர்களாக இவர்கள் வாழ முடியும். ஏன்! உலகிலேயே பரம்பரை விவசாயிகள் இவர்கள் தானே! இங்கிருந்துதானே, பிஜி முதல் மேற்கிந்திய தீவுகள் வரை, பூமியைப் பண்படுத்தி விவசாயம் செய்யக் 'கூலிகள்' ஏற்றுமதி செய்யப்பட்டார்கள்?

விவசாயிகளின் கதையிருக்கட்டும். வாழையின் கதையைப் பார்ப்போம். உலகின் நாற்புறங்களிலும் அது பரவிய கதையே ஒரு புராணம். ஆனாலும் அதை நாம் ஞாபகப்படுத்திக்கொள்வது அவசியம் தான். இங்கிருந்து மேல் நாடுகளுக்கு வாழையைக் கொண்டு போனவன் கிரீஸ் தேச அரசன் மகா அலெக்ஸாண்டர் தான். அவன் இந்தியாவிலிருந்து பொன்னும் மணியும் கொள்ளைகொண்டு போகவில்லை. இந்தியாவின் கலைச்செல்வத்தையும், கல்வியையும், 'பொருளும் புத்தியும்' தரும் வாழைக் கன்றுகளையும் எடுத்துச் சென்றான்.

ஸிந்து நதி தீரத்திலே மகா அலெக்ஸாண்டர் முகாமிட்டிருக்கும்போது, இந்தியாவின் அறிவாளிகளைச் சந்தித்தான். "நான் பார்க்கும் ஒவ்வொரு இந்தியனும் மேதையாகத்தானே காணப்படுகிறான். அதற்குக் காரணம் என்ன?" என்று வினவினான் அரசன்.

வேதாந்த விசாரமும், உணவும் தான் அவர்களை மேதையாக்குகின்றன என்றான் ஒரு பிரதானி. "அப்படியா, இந்திய வேதாந்திகளை அழைத்து வா. அவர்களோடு பேசவேண்டுமென்ற ஆவலுண்டு எனக்கு. சரி, அவர்களுடைய உணவு என்றாயே. ..." "ஆம் அரசே, நம்போல் அவர்கள் தட்டுக்களில் உணவு அருந்துவதில்லை. ஆள் சயனிக்கும்படி வளரும் ஓர் இலையைத் துண்டாக்கி, அதில் உணவருந்துகிறார்கள். அதே மரம் ஓர் அபூர்வமான பழத்தையும் கொடுக்கிறது. தினசரி போஜனத்தில் அது கட்டாயம் இருக்கும். அந்த பழங்கள் தான் வசீகரமும், மேதையும் அளிக்கின்றன".

"அப்படியா! அது என்ன பழம்".

வாழைப் பழத்தைத் தருவித்தான் பிரதானி. அதன் ருசியிலே மயங்கிவிட்டான் அரசன். நாட்டிற்குத் திரும்பும்போது இங்கிருந்து, வாழைக் கட்டைகளையும் எடுத்துச் சென்றான். அங்கு அதற்கு என்ன பெயர் வைத்தான் தெரியுமோ? 'தேவாமிருதக்கனி', 'முனிவர்களின் உணவு' என்றெல்லாம் அர்த்தம் தரும்படி லத்தின் பெயரை வைத்தான். அதுதான் இன்றும் வழங்குகிறது.

கிரீஸிலிருந்து சில வருஷங்களில் ஆபிரிக்காவின் பல பாகங்களுக்கும் வாழைக்கட்டையை எடுத்துச் சென்றனர். ஆப்பிரிக்காவில் இதை எடுத்துச் சென்ற பெருமை அரேபியர்களைத்தான் சேரும். அதன் பின்புதான் ஒரு வேடிக்கையான சம்பவம் நடந்தது. கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்ததும், ஒவ்வொரு நாடும், தன் மக்களை அங்கு அனுப்பி வைத்தன. முக்கியமாக போர்ச்சுகீஸியரும் ஸ்பானியரும் தான் அமெரிக்காவில் பெரும் பகுதியைப்பற்றிக் குடியேறினார்கள். புது உலகிலே சென்று வாழ்கிறவர்கள் ஆண்டவனை மறந்துவிட்டால் என்ன செய்வது? ஒரு பாதிரியார் புது உலகத்திலே வாழும் மக்களுக்கு பைபிளைச் சொல்லி ஆண்டவனை ஞாபகப்படுத்தப் பிரயாணமானார். அவரது பிரயாணத்தைக் கேள்விப்பட்டு, ஸ்பானிஷ் சர்க்காரும் சந்தோஷத்துடன் பொருளும் உதவியும் செய்ய முன் வந்தது. ஆனால் தாமஸ் டி பேர்லாங்கா (Thomas de Berlanga) என்ற அந்தப் பாதிரியார் சர்க்காரின் உதவியை ஏற்றுக்கொள்ளாமல் தானே பிரயாண வசதியைச் செய்துகொண்டார். 'இரண்டு மாற்றுடைகள், ஒரு பைபிள், நாலு சிப்பு வாழைப்பழம், ஆறு வாழைக் கட்டைகள்... இது போதும், கப்பலிலே கொடுக்கும் உணவுடன் இந்தப் பழங்களைப் புசிப்பேன். அங்கு சென்றதும் இந்தக் கட்டைகள் பழங்கள் தரும். உணவுப் பஞ்சம் தீர்ந்தது. அறிவுப்பஞ்சம் தீர கையிலே வேத புத்தகம் உண்டு" என்று

சொல்லிவிட்டார் பெர்லாங்கர் பாதிரியார்.

பெர்லாங்கர் பாதிரியாருக்குப் பிறகு, அமெரிக்கா சென்ற ஒவ்வொரு பாதிரியும், கையில் வேத புத்தகமும், வாழைக்கட்டையும் எடுத்துச் செல்வது வழக்கமாகி விட்டது. அவர்கள் கொண்டு சென்ற வாழை, வாழையடி வாழையாகத் தழைத்து மத்திய அமெரிக்காவிலும், மேற்கிந்திய தீவுகளிலும் தான் செழிப்பாக வளர்ந்தன. அழித்தாலும் கூட, மாளாது, ராக்ஷசன் போன்று வளர்ந்து ஏராளமாகப் பழங்கள் கொடுத்து வந்தன. வேறு சாகுபடி செய்யக்கூட முடியாது. இது 'களைபோல' வளர்ந்து விவசாயிகளுக்குத் தொந்தரவு தந்தது. உற்பத்தியாகும் பழங்களை சேமித்து வைக்கவோ வெளி நாடுகளுக்கு கெட்டுப் போகாமல் அனுப்பவோ வழி தெரியாது தவித்தனர் மக்கள். பிரிட்டனுக்கு வாழைப்பழ மோகம் ஏற்பட்டது. அவர்களது பஞ்சமும் தீர்ந்தது. இந்த நாற்பதாண்டுகளுக்குள், அது பிரிட்டனின் தினசரி ஆகாரமாக மாறிவிட்டதுடன், 'பனானா பிளீட்டை' எதிர்பார்த்து வியாபாரிகள் துறைமுகங்களுக்கே வந்து நிற்கும் காலமும் வந்தது.

முதன் முதலிலே பிரிட்டனுக்கு வாழைப்பழம் வந்த விதமே ஒரு வேடிக்கை. அதன் பிறகு அது பிரபுக்களின் உணவாக மாறி, தினசரி வாழ்க்கையிலேயும் ஒரு நிரந்தர ஸ்தானம் வகித்தது.

அப்போது இரண்டாவது சார்லஸ் இங்கிலாந்தை ஆண்டுவந்தான். ஒருநாள் அவசர அவசரமாக ஒரு மாலுமி குதிரையில் ஏறிக்கொண்டு அரண்மனைக்கு ஓடி வந்தான். வாசலிலே காவல்காரன் தடுத்தும் கூட நிற்காது அவன் ஓடி அரசனைக்கண்டு, அவன் முன்பு ஒரு கூடையை காணிக்கையாக வைத்து வணங்கினான். அவ்வேளையில் தன்னைப் பேட்டி காண வந்தவனைக் கண்டு அரசனுக்கு அதிசயம் ஒருபுறம், கோபம் ஒருபுறம்.

அதற்குள் மாலுமி "அரசே, நான் இப்போதுதான் திரும்பி வந்தேன். வரும் வழியிலே கானரித் தீவுகளில் இந்த அதிசயமான பதங்களைக் கண்டேன். அது தேவர்களின் உணவாம். தாய் நாட்டிற்குத் திரும்பும் மாலுமி, அரசனுக்கு அபூர்வ பொருளை காணிக்கை செலுத்தும் வழக்கத்தை அனுசரித்து நான் இதைத் தங்களுக்குக் கொண்டு வந்தேன். வழியிலே பாதி அழுகிவிட்டது. அரசே, இதைச் சாப்பிடுங்கள். உண்மையிலே இது தேவர்களின் உணவுதான்" என்று படபடப்புடன் கூறினான். ஆனால் அரசன் அவற்றைத் தொடவில்லை. காட்டுப் பழமோ என்னமோ விஷமாயிருந்தால், என்ன செய்வது என்று பயம். பக்கத்திலிருந்த பிரபுவைச் சாப்பிடச் சொன்னான். அவரும் மறுத்துவிடவே, அரசன் கூடையை அப்படியே மடப்பள்ளிக்கு அனுப்பி விட்டு மாலுமிக்குப் பரிசுகள் அளித்து அனுப்பினான். மடப்பள்ளியிலே ஒரு சுயம்பாகி அதை ருசித்துப் பார்த்துக் கூத்தாடினான். பின்பு ஒவ்வொருவராகத் தின்று அரசன் வரை வந்தது. அதன் பின்பு வெளிநாடு சென்று திரும்பி வரும் ஒவ்வொரு கப்பலும் வாழைப்பழங்களை ஏற்றி வந்தன. பவுன் ஒன்றுக்கு ஒரு பழம் வீதம் வாங்கி பிரபுக்கள் சாப்பிட்டார்கள்.

*1901*-ம் ஆண்டு ஜோஸப் சேம்பர்லேன் காலனி மந்திரியாக இருக்கும் பொழுது, மேற்கிந்திய காலனிகளில் மக்களின் வறுமையையும், அங்கு வாழையின் அபரிமிதத்தையும் கண்டு ஓர் ஏற்பாடு செய்தார். சில கப்பற் கம்பெனிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, சர்க்கார் மானியமும் அளித்து மேற்கிந்திய தீவுகளிலிருந்து வாழைப் பழத்தை இங்கிலாந்துக்குக் கொண்டு வந்தார். ஆனால் வெளிநாட்டில் அந்த வியாபாரம் பெருகி, விவசாயிகளுக்கு லாபம் கொடுத்ததுடன், இங்கிலாந்திலும், கப்பற் கம்பெனிகளுக்கு மானியம் அளித்ததுமாறி, இறக்குமதி வரி விதித்து, சர்க்காருக்கு ஒரு நிரந்தர வருமானம் கிடைக்கும்படி ஆகிவிட்டது.

அலெக்ஸாண்டர் காலத்திலே இந்தியாவை விட்டுக் கிளம்பி, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பிரதான வியாபாரமாக வளர்ந்து விட்டது வாழைப்பழம். ஆனால் இந்தியாவில், இந்த இரண்டாயிரம் வருஷங்களில் நாம் அடைந்த பலன் என்ன?. "அழுத பிள்ளைக்கு வாழைப் பழம்" "வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல" என்ற பழமொழிகளும், அடிமைத்தனமும் தான்.

வாழைப்பழத்தைப் பற்றி நினைக்கும் போது இன்னொரு சம்பவத்தையும் ஞாபகப் படுத்திக் கொள்ளலாம். சில ஆண்டுகளுக்கு முன்பு ரயில்வே பிளாட்பாரத்தில் ஒரு வாழைப் பழத்தோல் வழுக்கி விடவே, இப்போது சிறையில் வாடும் ராஷ்டிரபதி ஆஸாத், கீழே விழுந்து, நொண்டிக் காலுடன் சில மாதங்கள் கஷ்டப் பட்டார். அப்போது சில இடங்களில்கூட வாழைப் பழத்திற்கு 'ஆஸாத்' என்ற பேர் ஏற்பட்டது. இன்று இந்திய அரசியலிலும் சுதந்தரம் கேட்கும் முரட்டுக் குழந்தைகளுக்கு, சர்க்கார் செப்படி வித்தை காட்டியும் காரே போன்ற குழந்தைகளுக்கு அழுகல் வாழைப்பழம் போன்ற வேலைகளும் தந்து, சமாதானப் படுத்த முயல்கிறது.





# சினிமாக் கதை

பி. ஆர். நாராயணன், எம். ஏ.

"கதைகளுக்கு என்ன குறைச்சல்? படம் பிடிக்கத் தான் ஆள்களைக் காணோம்!" - என்கிற இந்தக் கூப்பாட்டை இலக்கிய சிருஷ்டி கர்த்தாக்களிடமிருந்து அடிக்கடி கேள்விப்படுகிறோம். கதைகளுக்கும் சிருஷ்டி கர்த்தாக்களுக்கும் தான் பஞ்சமா? அல்லது படம் பிடிக்கக் கூடிய முதலாளிகளுக்கும், வேஷம் போடத் தகுந்த நடிகர்களுக்கும் தான் பஞ்சமா - என்பது உண்மையில் ஓர் புதிர்தான்.

சென்ற இருபது வருஷ காலத்தில் தமிழ் இலக்கியத் துறையில் எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. எத்தனையோ உயர்ந்த காவியங்கள், நாடகங்கள், நவீனங்கள், சிறுகதைகள், பெருங்கதைகள் எல்லாம் தோன்றி யிருக்கின்றன. இவற்றுள் ஸினிமாப் படப்பிடிப்பிற்கு லாயக்கானவை எத்தனை என்பதை விரல்விட்டு எண்ணி விடலாம்.

இந்நிலைக்குக் காரணம் என்ன? ஸினிமாப் படப் பிடிப்பிற்கு கதைக் கோப்பை எந்த முறையில் அமைக்கவேண்டும் - சம்பவங்களை எந்த முறையில் புகுத்தினால் தொடர்ச்சி கெடாமலிருக்கும் - எந்தெந்த விதமான நாடக பாத்திரங்களால் ஸ்வாரஸ்யம் ஏற்படும் - எந்தெந்த விதமான கதைகளை எப்படிப்பட்ட வேகத்தில் அல்லது நிதானத்தில் நிர்ணயிக்கவேண்டும் - என்னும் இப்படிப்பட்ட ப்ரச்னைகளில் இலக்கிய சிருஷ்டி கர்த்தாக்களும், நவயுக எழுத்தாளர்களும் தங்கள் கவனத்தைச் செலுத்தாமல், பொதுவாக, ஸினிமாத் தொழிலைப் பற்றியே அலக்ஷியமாக இருந்துவந்ததுதான், பட உலகில் தற்போதைய 'கதைப் பஞ்ச'த்திற்குக் காரணம் என்று ஓர் வகையில் கூறலாம்.

ஸினிமாவிற்குக் கதை எழுதுவது ஓர் தனிக்கலை; இலக்கியக் கதைக்கும் ஸினிமாக் கதைக்கும் அடிப்படையான வித்தியாசங்கள் அனேகம் உண்டு. இலக்கியக் கதையில் நாம் படிப்பது அழகிய வர்ணனைகள். சினிமாக் கதைகளில் நாம் பார்ப்பவை அழகிய பிம்பங்கள். சினிமாக் கதையில் காட்சி யழகே பிரதானம்.

சாதாரண கற்பனையும், திறமையும் உள்ள எவரும் இலக்கியக் கதை யொன்றைச் சிருஷ்டிக்கலாம். ஆனால் சினிமாக் கதை சிருஷ்டிக்கவோ தனித் திறன் வேண்டும். இலக்கியப் பண்பாடுடன் உலகானுபவம், கற்பனை, நாடகபாவம், ரஸிகத் தன்மை - மற்றும் சினிமாப் படப் பிடிப்பு சம்பந்தமான ஞானமும், அனுபவமும் வேண்டும். சுருங்கச் சொன்னால், ஒரு நல்ல சினிமாக் கதையை நாம் படித்து முடித்ததும், அந்தப் படத்தையே நேரில் பார்ப்பது போல் நமக்கு உணர்ச்சி ஏற்படவேண்டும். அப்படி அமைந்தால் தான், அதைப் படப்பிடிப்பிற்கு ஏற்றுக் கொள்ளலாம்.

சினிமாக் கதையின் லக்ஷணங்கள் தான் என்ன?

முதலில் கதைக்கு ஒரு தத்துவம் வேண்டும். எதற்காக இந்தக் கதை? இந்தக் கதையினால் ஜனங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன?

எல்லாக் கதைகளுக்கும் போல் சினிமாக் கதைகளுக்கும் ஆரம்பம், நடு, முடிவு - என்னும் மூன்று கட்டங்களும் உண்டு. கதையின் ஆரம்ப பாகத்தில் படத்தில் வரப் போகும் முக்கிய கதா பாத்திரங்களை ஜனங்களுக்கு அறிமுகப்படுத்தி, ஜனங்கள் மனதில் பதியும்படி செய்ய வேண்டும். கதையின் தத்துவத்திற்கும் இப்போதே பலமான அஸ்திவாரம் போட்டாக வேண்டும். இதே பகுதியில் தான் கதையின் சிக்கலும் ஆரம்பமாகின்றது. இனி இந்தச் சிக்கலைத் தீர்க்க அந்தந்த பாத்திரங்கள் என்னென்ன உதவி செய்கிறார்கள், எந்தெந்த காரணங்களால் எந்தெந்த சம்பவங்கள் ஏற்படுகின்றன, என்னும் விவரங்களைத் தான் ஜனங்கள் ஊன்றி கவனிக்க ஆரம்பிப்பார்கள்.

> இக் கட்டுரையாளர் சினிமாத் துறையில் அநுபவமுள்ளவர்; சினிமாவுக்குக் கதை எழுதுவது பற்றி இக் கட்டுரையில் விவரிக்கிறார்.

அடுத்த நடுப் பகுதிதான் கதையின் நெருக்கடியான பாகம். இப்போது சிக்கல் வலுத்து விட்டது. கதை எப்படி முடியப் போகிறது என்கிற ஆவல் ஏற்பட்டுவிடும். இனி கதையின் ஆரம்பப் பகுதி அவ்வளவு ஸ்வாரஸ்யமா யில்லாவிட்டாலும் கூட, இந்தப் பகுதி நன்றாக வாய்த்து விட்டால் கதை தேறிவிடும்.

அடுத்தது தான் முடிவு. கதை நிஜமாகவே இங்கு முடிகிறதா? இதை முதலில் பார்த்துக் கொள்ள வேண்டும். கதையின் ஆரம்பத்தில் ஏற்பட்ட பல சங்கடங்களும் இந்தக் கடைசி கட்டத்தில் தீர்ந்து, கதா பாத்திரங்கள் தங்கள் பூர்ண ஸ்வரூபத்தோடு வெளிப்பட வேண்டும். கதையின் தத்துவமும் இப்போது தான் பூர்த்தியடைகிறது. இந்தப் பகுதியில்தான் கதாசிரியர் தன் பூரு சாதுர்யத்தையும் காட்ட வேண்டும். கதையின் போக்கையே மடக்கி முடிவை மாற்றி விடலாம். 'கதை எப்படி

முடியப் போகிறது?' 'எப்படி முடியப் போகிறது?' - என்கிற ஆவலை படம் பார்ப்பவர்களின் உள்ளங்களில் தூண்டிவிட்டு, அவர்கள் எதிர்பார்க்காத ஓர் விதத்தில் கதையை முடித்து ப்ரமிக்கச் செய்யலாம். ஆனால், முடிவு பொருத்தமாக இருக்க வேண்டும்.

சினிமாக் கதையில் முக்கியமான மற்றொரு அம்சம் தொடர்ச்சி. சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் வரும் சம்பவங்கள் அருவருப்பையும் குழப்பத்தையுமே உண்டு பண்ணும். தவிர, கதாபாத்திரங்களுக்கும் தகுந்த சம்பந்தம் இருக்கவேண்டும். ஒவ்வொரு பாத்திரத்திற்கும் தனித் தன்மையும் நிச்சயப்பட வேண்டும். ஒவ்வொரு பாத்திரத்திற்கும் ஒரு நோக்கம் எவ்வளவிற் கெவ்வளவு பலமாக் வற்புறுத்தப் படுகிறதோ - அவ்வளவிற் கவ்வளவு அந்தக் கதாபாத்திரத்தின் தன்மை ஜனங்கள் மனதில் ஆழமாகப் பதிகிறது. ஜனங்களின் கவனத்தையும, அனுதாபத்தையும் ஆகர்ஷிக்கக் கூடிய கதாபாத்திரங்கள் எத்தனைக் கெத்தனை ஒரு கதையில் அதிகமாக இருக்கின்றனவோ, அவ்வளவிற் கவ்வளவு, கதை வெற்றி பெறும்.

ஒவ்வொரு கதாபத்திரத்திற்கும் ஒவ்வொரு நோக்கம் எவ்வளவு அத்தியாவசியம் என்பதை நிரூபிக்க, பாஸகவியின் ஸ்வப்பன வாஸவதத்தாவை ஒரு உதாரணமாகச் சொல்லலாம். வாஸவதத்தையை மறுபடி எப்போது அடையப் போகிறோம் என்கிற ஒரே சிந்தனை வத்ஸ ராஜனுக்கு. வாஸவதத்தைக்கோ தனது அஞ்ஞாதவாஸம் அரசனுக்கு வெளிப்படாமலிருக்க வேண்டும் என்கிற கவலை. யௌகந்தராயனருக்கோ, எப்படியாவது பத்மாவதியை வத்ஸ ராஜனுக்கு மணம் முடித்து மகதராஜ்ஜியத்திற்கும் கோசல நாட்டிற்கும் அரசியல் நட்பை நிலைநாட்ட வேண்டும் என்னும் ஒரே நோக்கம். இம் மூவரின் நோக்கங்களையும் கவி எவ்வளவு அற்புதமாக நிலைநாட்டி யிருக்கிறார்!

இதேபோல் கதையில் சில சம்பவங்களை மர்மமாகவே அமைப்பதன் மூலம் நாடகத்தை எவ்வளவு உயர்வடையச் செய்யலாம் என்பதற்கு ஹர்ஷராஜனின் ப்ரியதர்சிகையைச் சொல்லலாம். வத்ஸ ராஜன் மோகிக்கும் இளநங்கை ஆரண்யகா உண்மையில் வாஸவதத்தையின் உடன் பிறந்த தங்கை தான் என்னும் மர்மத்தை கவி எவ்வளவு அற்புதமாகக் கடைசியில் வெளிப்படுத்துகிறார்! நாடகமும் எவ்வளவு சோபிதமாக முடிகிறது!

அற்புதமான ஒரு கதையை தவறான 'டெம்போ'வில் அமைத்து, அடியோடு குட்டிச்சுவரடிக்கலாம். கதாசிரியர் இவ்விஷயத்திலும் அதிஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

ஆனால், ஒரு சினிமாக் கதையின் வெற்றியும் தோல்வியும் அதன் ஆசிரியருடைய தனிப் பொறுப்பல்ல. அது பலருடைய ஒத்துழைப்பை ஒட்டி யிருக்கிறது. இவர்களில் முக்கியமானவர்கள் - டைரெக்டர், நடிகர், படமுதலாளி. இவர்களால் ஏற்படும் பல முட்டுக்கட்டைகளாலேயுங்கூட ஒரு நல்ல கதை பாழாய்ப் போகலாம்.

சமீப காலத்தில் வெளிவந்த ஆங்கிலப் படங்களில் கற்பனைப் பொக்கிஷங்கள் என்று சொல்லக்கூடிய சிலவற்றில் - ராண்டம் ஹார்வெஸ்ட், ஷ்யூமன் காமெடி, மிஸஸ் மினிவர், ப்ரின்ஸெஸ் ஒர்க் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

ஹிந்தியிலும் சில நல்ல கதைகள் சினிமாவில் வெளிவந்திருக்கின்றன. இவற்றுள் தேவதாஸ், ப்ரெஸிடெண்ட், ஆத்மி, படோஸி, அச்சுத்கன்யா முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

ஆனால் நம் நிலைமை என்ன?

கற்பனைக் கதைகள் என்று நாம் சொல்லிக் கொள்ளும், பதி பக்தி, பாலயோகினி, மேனகா, சந்திரகாந்தா, தியாகபூமி, ஜலஜா ஆகியவற்றின் கதி என்னவாயிற்று? அவற்றின் சிருஷ்டி கர்த்தாக்கள் என்ன சொல்கிறார்கள்?

'நாடக மேடையிலிருந்த விறுவிறுப்பு படத்திலில்லை.'

'என் அசல் கதையில் பூகம்பமே கிடையாது. படத்தில் மட்டும் எதற்காக?'

'என் அழகிய வர்ணனைகள் எல்லாம் எங்கே? - இது என் கதைதானா?'

'என் கதையில் இவ்வளவு ஆபாசங்கள் கிடையவே கிடையாது. இது சத்தியம்.'

'அற்புதமான என் கதையை டைரக்டர் எப்படித்தான் குட்டிச் சுவரடித்து விட்டார்!'

'இந்தக் கதையின் கற்பனையை அனுபவிக்க இந்த ஜனங்களுக்கு மூளையில்லை.'

வெள்ளி, தங்க, வைர விழாக்கள் கொண்டாடி ஜெயக்கொடி நாட்டியிருக்கும் நமது பட முதலாளி பிரபு என்ன சொல்கிறார்?

"கற்பனைக்கதையே எனக்குத் தேவையில்லை. என் படங்களுக்கு ஜனங்கள் அளித்துவரும் அமோகமான ஆதரவைப் பார்த்தால், பழைய 'அத்தைப் பாட்டி' கதைகள்தான் அவர்களுக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது என்பது வெட்ட வெளிச்சமாய்த் தெரிகிறது. கந்தசாமி கோயில் புத்தகக் கடைகளில், பன்னிரண்டு மந்திரிக் கதை, ஏழு பக்கிரி கதை, மூன்று மராட்டியர் கதை முதலிய பொக்கிஷக் குவியல்கள் பெரிய கொட்டை எழுத்துக்களில் அச்சிட்டு லகுவாகக் கிடைக்கும் வரையில், எனக்குக் கதைப் பஞ்சமில்லை. படத்தின் நீளத்தைப் பதினாயிரம் அடிக்குக் குறைத்து, சர்க்கார் இப்போது என் மூளைக்கு அனாவசியமான உபத்திரவம் கொடுத்து வருகிறார்கள். யுத்தம் முடிந்ததும் பழையபடி இருபதினாயிரம் அடி நீளத்திற்கு, பெரிய கொட்டை எழுத்துப் புத்தகங்களைப் பக்கம் பக்கமாகப் படம் பிடித்து, என் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்வேன்."...

ஹா! நம் துர்ப்பாக்கியம் தான் என்னே! உண்மையில் எதற்குப் பஞ்சம்? கற்பனைக் கதைகளுக்கா அல்லது படம் பிடிக்கும் மூளைகளுக்கா?

# காதலர் கண்கள்

· திருமலை இராமாநுஜன் ·

'காதலுக்குக் கண்ணில்லை' என்பார்கள். ஆனால்! காதலர்களுக்கு அப்படி இல்லை; கண்ணுண்டு. 'உண்டு' என்று மட்டும் சொன்னால் போதாதென்று தோன்றுகிறது. ஏன்?

'காதல் நாடகத்திலேயே கண்கள்தான் முக்கிய பாத்திரங்களாக நடிக்கின்றன.

'சர்வேந்திரியாணாம் நயனம் பிரதானம்' என்பது வடமொழி வழக்கு. 'கண்ணிற் சிறந்த உறுப்பில்லை' என்பது அதன் தமிழ் மொழி பெயர்ப்பு. அப்படி என்ன சிறப்பு அதற்கு!

நம் மனக் கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்கக் கருவியாகத்தான் ஒரு பாஷையை நாம் உபயோகிக்கிறோம். அப்பாஷையாலும் விளங்காத - விளக்க முடியாத - விளக்கக் கூடாத விஷயங்களும் சில உண்டு: இல்லையா?

காதலருலகில் நடைபெறும் விவகாரங்கள் எல்லாமுமே அநேகமாய் இப்படித்தான்; கண் பார்வையிலேயே நடைபெறும் விஷயங்கள்.

என்ன இது! 'கண்ணிற் சொல்லுவதா? அது எப்படி இயலும்! என்றெல்லாம் நீங்கள் யோசிக்கத் தொடங்குகிறீர்கள்! ஆம். அப்படித்தான்! நாம் வாய்விட்டுச் சொல்லி, 'பிறர் காது கொடுத்துக் கேட்க வேண்டிய விஷயங்களை, 'கண் பார்வை' என்ற குறிப்பாலேயே உணர்த்தி, பிறரையும் குறிப்பு வழியாலேயே தெரிந்துகொள்ளும்படி செய்துவிடுவார்களாம் அவர்கள். இதை ஒரு 'தெய்வீக சக்தி' என்றும் குறிப்பிட விரும்பும் அதே கவிஞன், 'புண்ணியத்தின் பாலது' என்று வேறே குறிப்பிடுகின்றான்.

காதல் ஒன்றிலேதான், இந்த 'அமரத்துவத்தை' நாம் அடைகிறோம்.

இக்காதலுணர்ச்சிகளை படம் பிடித்துக் காட்டுவது போல் காட்டி உணர்ச்சியூட்டுவதில், நம் தமிழ் முன்னோர்கள் தலைசிறந்தவர்கள்.

அதில் ஒரு கலித்தொகைச் செய்யுள். கண் பார்வை - தலைவனது, கள்ளப்பார்வை, அதிலும் கடைக்கண் பார்வை, ஒரு இளம் பெண்ணினது மனதையே மாற்றி, காதலிலே கவர்ச்சியேற்றி, நிறை யழியச் செய்ததாம். அந்த வரலாறு முழுவதையும் அவள் தன் தோழியிடம் சொல்லுகிறாள். அதில் காதலின் இயல்பு, அதன் நுட்பதிட்டமான மாறுதல், அதன் விளைவு, அதனால் ஏற்படும் மனமாற்றம் ஆகிய இவைகள் வெகு நல்லமுறையிலே சிறிதுசிறிதாக சித்திரிக்கப்பெற்றிருக்கின்றன.

'கண் பார்வை' மாற்றிற்று தலைமகளது உள்ளத்தை என்றேன். வெறும் பார்வை மட்டும் இல்லை, அதோடு சிறிது புன்னகையும் சேர்ந்து கொண்டதாம்; சோற்றுக்கு ஊறுகாய்போலே.''

இந்த விஷயத்தினை தனியிடத்தில் நின்று அதிரகசியமாகத் தன் தோழியோடு பேசும் அவள்.

''கடைக்கண்ணாற்
கொல்வான் போல் நோக்கி நகைக்
கூட்டம்
செய்தான்! அக்கள்வன் மகன்''

என்று மனம் விட்டுச் சொல்லி நிற்கின்றாள்.

நோக்கம்-கண் பார்வை, 'உன்னைக் கொல்வேன்' என்று சொல்லிற்றாம்! அது எப்படிச் சொல்லும்!—இப்படி எண்ணம் நமக்கு. நமக்கென்ன தெரியும்? அவள் அநுபவித்த கஷ்டம் அல்லவா அது.

அவள், முழு விருத்தாந்தத்தையும் தன் வாயாலேயே சொல்லுகிறாள், கேளுங்கள்!

தலைவனை, 'பட்டி - துஷ்டன்' என்று கூறுகிறாள். என்ன துஷ்டத்தனம் அவன் செய்திருப்பான்! ஒன்று மில்லை:

தெருவில் - அதுவும் பலர்க்கும் பொதுவான இடத்தில்; தான் மட்டும் தனியாக இல்லை: பல தோழியரோடும் சிறு வீடு - மணற் சிறுவீடு - விளையாடும் நோக்கம் தான், இடை வழியை மறிக்கவும் இல்லை; இப்படி விளையாடினால் வழியிலே போகும் அந்த துஷ்டனுக்கு என்ன நஷ்டம்! தானே நேரில் வந்து காலாலே சிதைத்துவிட்டு ஓடுவானாம். பந்து விளையாடும் நேரங்களிலே வந்து, 'கோதைவரிப்பந்தை'க் கொண்டோட்டம் எடுப்பானாம்!

இப்படி இவள் விரும்பாத காரியங்களை எல்லாம் செய்து வந்தான், காதலை விரும்புமவன். இந்த யுக்தி பலிக்குமா? அவள் விரும்பும் செயலைச் செய்து திருப்திப் படுத்தினால் அல்லவா, அவள் வழிக்கு வருவாள்! அதிகார தோரணையிலே, துன்புறுத்தி, பயமூட்டிக் காதலைக் கவர முடியுமா? உள்ளக் கனவிலே விளைவது காதல்' என்றதை அந்த இளம்பருவ வாலிபன் எப்படி அறிவான், பாவம்.''

அறியாது நின்ற அவனை அவள், 'சிறு பட்டி' என்று சொல்லா

மல் வேறு எப்படிச் சொல்ல முடியும்? துஷ்டப்பட்டம்தான் அவன் பெற்றது.

ஆனால்! இப்படி, 'வெறுத்த துஷ்டன்' கண் வலையிலே தான், அவள் கடைசியில் சிக்குண்டாள். நாணமும், நிறையும் பறி கொடுத்தாள். அவன் பார்வைதான் தன்னைக் கொன்று வருத்தியது என்று தோழியிடம் குறிப்பிட்டாள்.

இந்த 'நிலை மாற்றம்' ஏற்பட்டதெப்படி ?

ஒரு நாள், தாயும் மகளுமாய், வீட்டினுள்ளே, தனித்து இருக்கும்போது, முற்கூறிய வாலிபன் வாயிலில் வந்து நின்றானாம். இவளுக்கும் பயம் ! அவனோ சிறு பட்டி! என்ன எல்லாம் சொல்வானோ, செய்வனோ யார் கண்டது?

நல்ல வேலை. " தண்ணீர்த்தாகம். அம்மா நீர் வேண்டும். தயவு செய்து கொண்டுவந்து கொடுங்கள்" என்று பொதுவாகத்தான் கேட்டான்.

தவித்த வாய்க்குத் தண்ணீர் இல்லை என்பது தருமமாகுமா? தாயார், இவளையே விட்டு, 'புதிய அவன்: நீர் வேட்டேன் என்கிறான்; குவளையில் நீரூட்டி வா' என்று அந்தத் தரும கைங்கரியத்திலே ஈடுபடுத்துகிறாள்.

சரி, விஷயத்தை முடிப்போம், விரைவிலே! இவள் சென்றாள். குவளையும் கையுமாய் நீர் எடுத்துச் சென்றாள்.

நீருள்ள குவளையை அல்லவா பிடித்து வாங்க வேண்டும்? அப்படி அவன் செய்யவில்லை. நீர் வேட்கையா அவனுக்கு !

வளையணிந்த முன்கையைப் பற்றி யிழுத்தான். காமத்தால் மதிமயங்கி, செய்வது இன்னதென்று தெரியாமல் முகத்தை முகத்தைப் பார்த்து விழித்து நிற்கிறான். இவள்தான் அவனை விரும்பாதவள் ஆயிற்றே !

'அன்னாய்! இவன் துஷ்டன், செய்த அநீதத்தைப் பார், ஓடிவா' என்று உரக்கக் கத்தினாள். ஊர்க்கூட்டம் போட்டு அந்தத் துஷ்டனைத் தண்டிக்க நினைவு, அவளுக்கு !

உடனே துஷ்டன், 'கொல்லும் விழி'யால் நோக்கினான். புன்சிரிப்பும் செய்தான். உடனே, இரண்டின் வலிய சக்திகளும் சேர்ந்தன. கேட்கவும் வேண்டுமா? அவனது, காதலுக்கு இரையானாள்.

இதற்கிடையிலே, தாயார் அலறிப் புடைத்து அருமை மகளுக்கு என்ன நேர்ந்ததோ என்று பார்க்க ஓடோடிவந்தாள். ஆனால் இவள் . . . . ?

என்ன சொன்னாள் தெரியுமா ? " ஒன்றுமில்லை. உன் சொற்படி நீரூட்டினேன். இடையிலே விக்கல் உண்டாகி, பொரை ஏறிற்று. பயந்து அவன் உயிருக்கு என்ன கெடுதி நேரிடுமோ என்றுதான் உன்னைக் கூப்பிட்டேன் " என்று ஆறத் தீர யோசித்துப் பதில் சொன்னாள். என்ன முழுவுண்மை பார்த்தீர்களா ? எப்படிப் 'பெண் புத்தி'? பின் புத்தியா யிருந்தால் தான் என்ன ? இவ்வளவு சாதுரியம் யாருக்கு வரும் !

தாயார் நம்பினாள். அவன் பொரை யேறிப் பேச்முடியாமையால் தான் பாத்திரமுள்ள தனது மகள் கையைப் பிடித்து நிறுத்தி இருக்கிறான், "வேண்டாம்" என்ற குறிப்பைக் கண்ணால் காட்டத்தான் அவள் முகத்தை நோக்கி விழித்துச் சாடை செய்து நிற்கிறான் என்று கருதினாள் ; அப்படிக் கருத அத்தோற்றங்களே ஆதாரமாக இருந்தன. சொன்ன பொய் அவ்வளவு பொருத்தம் என்பதுதான் இதன் அர்த்தம்! தாயாரும் அவன் முதுகைத் தடவிக் கொடுத்து பொரை மேலும் ஏறுமல் பார்த்துக் கொண்டாள்.

முதலிலே அவனைப் பிடிக்கவில்லை. 'பட்டி, துஷ்டன்' என்றென்னென்ன வெல்லாமோ சொல்லித் திட்டினாள். பின் அவன் மீது காதல் விழுந்தது. உடனே வார்த்தையை மாற்றி, அன்னையை வஞ்சித்து, விஷயத்தைச் சரிப்படுத்திவிட்டாள். இப்படி க்ஷண நேரத்தில் மனமாற்றம் எப்படி நேரிட்டது. இதன் காரணத்தைத்தான் முன் கூட்டிய அடிகளின் மூலம், தன் தோழியிடம் தனிமையிலே தலைவி தெரிவித்தாள்.

கண்கள் தான், அந்த வேலையைச் செய்தன. இவனது கடைக்கண் பார்வைக்கு அவ்வளவு சக்தி.

சமயோசித புத்தி, யுக்தி, சற்று முரட்டுத் தனமாகத்தன் செயல் முடிக்க விரும்பும் 'ஆண் கண்களுக்கே' இவ்வளவு உண்டானால், பெண்மணிகளின் ' கண் வீச்சு 'ப் பலனைக் கேட்பானேன் ?

பெண்களின் கண்வீச்சு மனமிருந்தால், நம்மைத் தேவர்களாக ஆக்கும் ; இல்லையோ, அதிபாதாள நரகத்திலே தள்ளி, நஞ்சூட்டித் துன்புறுத்தும். கண்ணை - பெண்கள் கண்ணை, கவிஞர்கள் கடலுக்குவமையாக்கி, 'மெல்லியலார் கண்ணையே அனைய கருங்கடல்" என்று கூறுவதுண்டு. நஞ்சையும் அமுதையும் அளிக்க வல்ல கடலை, முற்கூறியபடி தீங்கும் நலனும் பயக்கவல்ல பெண் கண்ணுக்கு உவமித்தது மிக நன்று என்று கருதி நாம் மகிழலாகும்.

இல்லாவிட்டால் வீரக்கவி பாரதி,

" மாதர் கன்கள் வீசுபோதிலும் அச்சமில்லை ! அச்சமில்லை !! அச்சம் என்பதில்லையே !!! - என மும்முறை சொல்லுவாரா ?

காதலுக்குக் கண்ணில்லை என்பதென்னவோ உண்மை. ஆனால் காதலர்கள் 'கண் செய்த வேலை' என்ன என்பதை நாம் உணர்ந்தோம். உணர்ந்த நாம், 'காதலுக்குக் கண்ணில்லை' என்று நினைந்து அநீதி புரியும் உலகிற்குக் ' கண்ணுண்டு ' என்று மட்டும் எப்படி நம்ப முடியும் ?

இப்படிக் 'காதல் சித்திரம்' பல கலித்தொகை முதலிய சங்க நூல்களிலே உண்டு. இது கருதியாவது, அந்நூல்களை முறையாக நாம் படிக்கத் தொடங்கினால், தமிழ் வளரும்.

NOV 1945

# வெற்றிச் சின்னம்

"விஜயஸ்ரீ"

**வ**ஸந்த காலத்தின் சோபை எங்கும் பரவிக்கொண்டிருந்தது. இயற்கையன்னை, தன் சௌந்தரிய நடனத்தை அரங்கேற்றிக் கொண்டிருந்தாள்.

குமரனுடைய உடம்பில் ஒரு புது விறுவிறுப்பு. வஸந்தம் அவனுடைய நெஞ்சினுள்ளும் புகுந்து விட்டதோ என்று சொல்லும்படியான குதூகலம் அவனுடைய ஒவ்வோர் அங்கத்தையும் பிடித்து உலுக்கியது.

குமரன் ஓர் இளம் ஓவியன்; திறமை வாய்ந்தவன். அவன் எழுதும் ஓவியங்களிலே உண்மை மிளிரும்; வாழ்வுச் சுடர் கொழுந்து விட்டெரியும்......

சட்டென நின்றான். இனிய சங்கீதத்தினொலி தென்றலிலே மிதந்து வந்தது; அவனைக் காந்தமெனக் கவர்ந்தது. அசைவற்று நின்றான்; உள்ளத்தை நெகிழவிட்டான்......

புற்றரையில் ஒரு பெண்ணழகு அமர்ந்திருந்தது. வசந்த காலத்தின் எழில் அவளுடைய அழகிலே தாண்டவம் புரிந்தது. பூங்குயிலின் இனிய கானம் அவள் சங்கீதத்திலிருந்தது.

கை ஒரு படத்தைத் தீட்டியவாறு இருந்தது. வர்ண ஜாலங்கள் குழைத்து வைக்கப்பட்டிருந்தன. அணிந்திருந்த வளையல்கள் கலகலவென்று நகைக்க ஓவியம் தீட்டிக்கொண்டிருந்தாள் கன்னி.

அவளைப் பார்த்துக்கொண்டே வெகுநேரம் நின்றான் குமரன். காலடியோசை கேட்டது. வயது முதிர்ந்த வயோதிகர் ஒருவர் பெண்ணை நெருங்கி அவளருகில் அமர்ந்து கொண்டார். இளைஞனை அவ்விருவரும் பார்க்கவில்லை.

பெண் அவரை நோக்கினாள். பிறகு, "அப்பா! இன்னும் கொஞ்சநேரம் தான்" என்றாள் புன்சிரிப்புடன். அதன் பின்பு ஓவியம் அவளுடைய முழு கவனத்தையும் கவர்ந்து விட்டது. பெருமூச்சு விட்டபடி அவளைப் பார்த்துக் கொண்டிருந்தார் வயோதிகர்.

"ஜலஜா!" என்று கூப்பிட்டார் அன்பொழுக.

"என்னப்பாவேணும்?" என்று கேட்டாள் பூங்கொடி, படத்திலிருந்து கண்ணை எடுக்காமல்.

"நான் கண் மூடுவதற்குள் உனக்குக் கலியாணம் செய்து பார்த்தால்தான் என் நெஞ்சு வேகும்" என்றார் உணர்ச்சியுடன்.

ஜலஜா வெட்கப்படவில்லை. பெரியவரை நேராகப் பார்த்தாள். அவளுடைய பார்வையில் சம்மதம் புதைந்து கிடந்தது.

சிந்தனைச் சுழலில் அகப்பட்டு விட்டான் குமரன். ஜலஜா! - எவ்வளவு அழகான பெயர்; நீலக்கடலின் வர்ணத்தை யொத்த விழிகளையுடையவளுக்கு எவ்வளவு பொருத்தமான பெயர்! குமரன் ஒரு ஓவியப் பித்தன். அவனைக் கலியாணம் செய்து கொள்ளும்படி எவ்வளவோ வற்புறுத்தினர் ஊரார். அவனோ, "என் போன்ற ஓவியப் பித்துள்ள பெண்ணைத் தான் மணப்பேன். இல்லையெனில், ஓவியமே என் மனைவி" என்று கூறுவான். ஆனால் கலியாணத்தைப் பற்றி ஒன்றும் சிரத்தை எடுத்துக்கொண்டதே கிடையாது.

இன்றோ, தன் திருமணத்தைப் பற்றிய யோசனைகள் முளைக்க ஆரம்பித்துவிட்டன. அதுவும் ஜலஜாவைப் பார்த்த பிறகு அவ்வெண்ணம் தலைதூக்கி நின்றது. அவன் ஓவியன். அவள் ஓவியப் பித்து பிடித்த கன்னிகை. இருவரும் இளைஞர்கள்.

ஜலஜாவும் குமரனைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தாள். மணந்தால் அவனை மணப்பது, இல்லையெனில் ஓவியத்தில் தன் வாழ்நாட்களைச் செலவிடுவது என்ற தீர்மானம் அவளுடைய பெண்மையுள்ளத்தில் மறைந்து கிடந்தது......

**அ**வள் தன் தகப்பனாரை நோக்கி "நான் தங்களிடம் ஒன்றையும் மறைத்தது கிடையாது. ஓவியர்மணி குமரனிடம் என் மனம் லயித்துவிட்டது. அவரையே நான் மணம் செய்து கொள்ள வேண்டும்?" என்றாள்.

"ஜலஜா! அப்படியே ஆகட்டும்மா?" என்று கூறினார் பெரியவர். இருவரும் எழுந்தனர், வீடு செல்லும் நோக்கத்துடன்.

புதர் மறைவில் நின்றிருந்த குமரனின் நெஞ்சம் சந்தோஷத்தால் விம்மியது. மறைவிடத்திலிருந்து வெளிவந்தான். அவனைக் கண்ட ஜலஜா வெட்கித் தலை குனிந்தாள்.

"எனக்கும் ஜலஜாவை மணம் செய்து கொள்ள மிக்க ஆசை" என்று பெரியவரிடம் கூறினான் இளைஞன்.

"சரி, கலியாணத்தைச் சீக்கிரமே நடத்தி விடலாமே!" என்றார் கிழவர். வளர்த்துவானேன். ஜலஜாவுக்கும் குமரனுக்கும் விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.

தன் கணவனின் இன்பத்துக்காக யாதும் செய்வதாக ஜலஜா தீர்மானம் கொண்டாள்.

* * *

ஒருநாள் தன் அறையில் அமர்ந்தவண்ணம் படம் வரைய யோசனை செய்து கொண்டிருந்தான் குமரன். அப்பொழுது அறையினுள் ஜலஜா நுழைந்தாள்.

"இதோ பாருங்களேன்! எவ்வளவு அழகான படம்" என்று கூறி அவனுடைய கையில் ஓர் ஓவியத்தைக் கொடுத்தாள். அவன் அதை அன்புடன் வாங்கி பரவசக் கண்களுடன் பார்த்தான்.

"யார் வரைந்தது?" என்று கேட்டான்.

"நான்தான் எழுதினேன். நன்றாய் இருக்கா?" என்று கேட்டாள் பெருமையுடன்.

"கேட்பானேன்; அழகுள்ளவள் வரைந்தால் பட்டும்......" என்று சொல்லிக் கொண்டே அவளுடைய ரோஜாக் கன்னத்தில் ஒரு தட்டு தட்டினான்.

"போங்கோ எப்பொழுது பார்த்தாலும் பரிகாசம் தானா?... உங்களுடைய சிஷ்யையாக இருப்பதாலே தான் சித்திரம் நீங்கள் சொன்னபடி அழகாய் இருக்கிறது" என்றாள் பெருமிதம் தோன்ற.

"குருவுக்கு மிஞ்சிய சிஷ்யையாகிவிட்டாய், ஜலஜா!" என்று சந்தோஷத்துடன் அவளுடைய கரத்தைப் பற்றினான்......

அவன் அவ்வாறு வேடிக்கைக்காகச் சொல்லிவிடவில்லை. உண்மையிலேயே ஓவியம் மிக அழகாக அமைந்துவிட்டது. குமரன் எவ்வளவோ சித்திரங்கள் வரைந்திருக்கிறான். அவைகளில் ஒன்றாவது அவள் வரைந்த படத்தைப் போன்று இருக்கவில்லை. அவனுடைய சைத்ரிக உள்ளம் பெருமிதத்தால் விம்மியது. கண்கள் மின்னின. ஆனால்—? அவனுடைய இருதயத்தின் ஒரு மூலை[illegible]லே, அந்தகாரத்திலே, ஒரு நஞ்சு அமர்ந்து அழுத்திக் கொண்டிருந்தது. பொறாமை! அவ்வெண்ணத்தை அடக்க அரும்பாடு பட்டான். பெரும்பாலும் அடக்கியே விட்டான். ஆனால் மீண்டும் மீண்டும் அவ்வரக்கன் மறுபடியும் மறுபடியும் துளிர்த்துக்கொண்டே யிருந்தான். குமரன் ஜலஜாவுடன் கொஞ்சம் கொஞ்சமாக மாறுபட்டான். உயிரொன்று உடலிரண்டென்ற நிலை பயங்கரமாக மாறியது. சிறு விஷயங்களெல்லாம் அருவை வளர்ந்தது. பொறுமையை இழந்தான். சில சமயங்களில் கண்டபடி தூற்றவும் செய்தான்.

ஜலஜாவுக்கு இதெல்லாம் புதிதாக இருந்தது. "இவர் ஏன் எதற்கெடுத்தாலும் எரிந்து விழுகிறார்?" என்று யோசித்தாள். அவளுக்குத் தெரியவில்லை. தான் எழுதிய ஒரு சித்திரத்தால்தான் விபரீதம் விளைந்து விட்டது என்று மட்டும் அவளுக்குத் தெரியவில்லை. பாவம், வெள்ளையுள்ளம் படைத்தவள்!

இப்படியாக நாட்கள் பல சென்றன. ஜலஜாவுக்கும் குமரனுக்கும் இடையிலிருந்த அகழி மெதுவாக விரிந்துகொண்டே இருந்தது. அதை இன்னும் அதிகமாக்க மற்றொரு சம்பவமும் நிகழ்ந்தது.

ஒரு நாள், மத்தியானம், கடும் வெயில். ராஜாங்கப் பறை முழங்கிற்று! கூட்டம் கூடியவுடன் பறையறிவிப்போன் சொன்னான்:

"மகா ஜனங்களே! கேளுங்கள்! நமது தலை நகரில் அரசர் ஒரு சித்திரக் காட்சியை ஆரம்பித்து வைத்திருக்கிறார். காட்சியில் முதற்பரிசு பெறுவோர், அரசரால் கௌரவிக்கப்பட்டு அரசாங்க ஓவியராவார்...! இன்னும் முப்பது நாட்களுக்குள் ஓவியர் தங்கள் படங்களுடன் அங்கு வரலாம்."

இவ்வாறு சொல்லிவிட்டு வேறொரு இடத்திற்குச் சென்றான் பறையறிவிப்போன்.

தன் அறையில் பொறாமைத் தீயினால் தகிக்கப்பட்டு ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருந்த குமரன் துள்ளிக் குதித்தான். பல நாட்களாகப் புன் சிரிப்பையே கண்டிராத அவனுடைய முகம் மலர்ந்தது.

"சரி, ஒரு அழகியபடம் எழுதி, இக்காட்சிக்கு அனுப்பி முதற் பரிசு பெறவேண்டும்" என்று அவன் எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில் ஜலஜா பரபரப்புடன் அறையினுள் நுழைந்தாள்.

"கேட்டீர்களா, சித்திரக் காட்சியைப் பற்றிய சேதியை?" என்று கேட்டாள் அன்புடன்.

அவன் பதில் பேசவில்லை. தலையசைத்தான். ஆனால் அவள் சும்மா இருந்தாளா?

"முன்பு ஒரு படம் வரைந்தேனே, நீங்கள் கூட அது வெகு நன்றாக இருக்கிறதென்று சொன்னீர்களே? அதைப் போட்டிக்கு அனுப்பலாம் என்று தீர்மானித்து இருக்கிறேன்" என்று கூறினாள் சந்தோஷத்துடன்.

குமரனுக்குத் தூக்கி வாரிப் போட்டது! அந்தப் படமா' அதன் முன் அவன் வரையும் ஒரு படமும் நிற்க முடியாதே. இச்சிந்தனை அவனைப் பொறாமைப்படுகுழியின் ஆழத்தில் தள்ளியது. ஆனால் அவன் தன் உணர்ச்சிகளைக் காட்டிக்கொள்ளவில்லை. இருப்பினும், சிலந்திக் கூடுபோன்ற கவலைத்திரை தன் கணவனின் முகத்தை மறைப்பதை ஜலஜா கவனித்துவிட்டாள். அறையைவிட்டு மௌனமாக வெளியேறினாள்.

மனைவியின் சித்திரத்தின் முன் தன் விலையுயர்ந்த சித்திரம் கூட பிச்சையெடுக்க வேண்டும் என்பதை யுணர்ந்த குமரன் துடிதுடித்தான். "ஜலஜாவைப் போட்டியில் கலக்கவேண்டாம் என்று கட்டளை யிட்டுவிடலாமா? சே, சே, அது உண்மைக் கலைஞனுக் கழகல்லவே!" என்றெல்லாம் அவன் எண்ணமிடுவான். "அரசாங்க ஓவியனாவதற்கு எதையும் செய்யலாம்" என்று அவனுக்குத் தோன்றிவிடும் சில வேளைகளில். ஐந்[illegible]று நாட்கள் இவன் இத்தகைய மனப் போரால் மிக்க அவஸ்தைப் பட்டான். கடைசி

யில் அவனுடைய தியாக உணர்ச்சியும் கலை உள்ளமுமே வெற்றி பெற்றன. தன் மனைவியைப் போட்டியில் கலந்து கொள்ள வேண்டாமென்று அவன் சொல்லவில்லை. அவள் வரைந்த படத்தைவிட் சிறந்த படத்தை வரைவதில் ஈடுபட்டான்.

சித்திரமும் முடிந்தது; நன்ருகவே இருந்தது. தன் கலைத் திறமை முழுமையுமே அந்த ஒரு சித்திரத்தில் காண்பித்திருந்தான் குமரன். இருந்தாலும். "ஜலஜாவின் படத்தை விட் எவ்விதத்திலும் குறைந்தது தான் இச்சித்திரம்" என்ற எண்ணம் மட்டும் அவன் மனதில் பதிந்து விட்டது. கடைசியில் தன் சித்திரத்தைப் போட்டிக்கும் அனுப்பிவிட்டான்.

நாட்கள் பல சென்றன. குமரன் சித்திரக்காட்சியை மறந்தே போய்விட்டான். ஒரு நாள் தன்னறையிலிருந்து தெருவை நோக்கிக்கொண்டிருந்தான்.

மணிகள் குலுங்க வீட்டினெதிரே ஒரு யானை வந்து நின்றது. குமரனின் இருதயம் வேகமாக அடிக்க ஆரம்பித்து விட்டது.

பரிசு பெற்ற ஓவியனை அரச சபைக்கு அழைத்துச்செல்ல வந்திருந்த யானை தான் அது. ஒரு வேளை ஜலஜா பரிசைத் தட்டிக் கொண்டு போய்விட்டாளோ?

குமரனுக்கு உடல் வியர்த்தது. அரசாங்க உத்தியோகஸ்தர் ஒருவர் அறையினுள் நுழைந்தார்.

"குமரன் என்பவர் நீங்கள் தானே?" என்று கேட்டார்.

"ஆமாம்; நான் தான் ஓவியன்."

"அரச சபைக்குத் தாங்கள் உடனே வரவேண்டும். சித்திரக் காட்சியில் முதற் பரிசு தங்களுக்குக் கிடைத்திருக்கிறது." என்று விளக்கினர் உத்தியோகஸ்தர். குமரன் துள்ளிக் குதித்துக் கொண்டு உள்ளே ஓடினன்.

"ஜலஜா! ஜலஜா! சித்திரக் காட்சியில் முதற் பரிசு எனக்குக் கிடைத்திருக்கிறது" என்று கூறி ஜலஜாவின் கரத்தை அன்பொழுகப் பற்றினன். ஜலஜா பதில் பேசவேயில்லை.

"என் வெற்றியின் சின்னம் அரசாங்க உத்தியோகம் ஜலஜா...... உன் மிகச் சிறந்த படத்தையும் மீறி எனக்குப் பரிசு விழுந்திருக்கிறது......" என்று மூச்சு விடாமல் சொல்லிக்கொண்டே போனன் குமரன்.

ஜலஜா தன்னறையினுள் நுழைந்தாள். ஒரு தந்தப்பேழையுடன் வெளி வந்தாள். "அதற்குள் என்ன?" என்று கேட்டான் குமான்.

"உங்களுக்கு நான் அளிக்கும் பரிசு" என்று மோகனப் புன்னகையுடன் அப் பேழையைத் திறந்து தரையில் கவிழ்த்தாள் ஜலஜா.

குமரன் ஸ்தம்பித்துப் போய் விட்டான்! அதை அவன் எதிர் பார்க்கவே யில்லை!

ஜலஜா, அப்பேழைக்குள் தான் வரைந்திருந்த படத்தைச் சுக்கு நூருக்க் கிழித்துப்போட்டிருந்தாள்! தன் கணவனின் ஆச்சரியத்தைக் கண்டவுடன் அவள், "உங்களுடைய வெற்றிச் சின்னம் சித்திரக் காட்சி முதற் பரிசும் அரசாங்க உத்தியோகமும், என் வெற்றிச் சின்னம் - கிழிந்த இப்படமும், அத்துடன் இணைந்திருக்கும் நம் ஆனந்த வாழ்வும்" என்ருள். அவள் கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருகியது.




பிறந்த சிசுக்கள் ஈக்களைப்போலே நம் தேசத்தில் மாய்கின்றன.

இந்தக் கண்ருவியில் உலகிலேயே இரண்டாவது இடம் இந்தியாவுக்கு.

# சந்தோஷமும் ஸௌக்கியமும்

• ஏ. ஜி. வெங்கடாச்சாரி •

மனிதனுடைய உயிர் அவனுக்குச் சொந்தமன்று. தற்கொலை செய்து கொள்வதற்கு சட்ட பூர்வமான உரிமை உலக சரித்திரத்தில் யாருக்கும் எக்காலத்திலும் அளிக்கப்பட்டதேயில்லை. உயிர்வாழ்வதற்கு உரிமையுண்டே தவிர அதை விடுவதற்கு அதிகாரம் கிடையாது. உயிர் வாழ்வதற்கு உரிமையுண்டென்றால் எத்தகைய உயிரை வாழ்வதற்கு என்ற பிரச்னை கிளம்புகிறது. பிறருடைய சுகபோகத்துக்காக உழைத்து, தான் பசையற்றுப் போய் நடைப் பிணமாகக் காலந் தள்ளும்படியான அவல வாழ்க்கைதான் மனிதனின் உரிமை என்று யாரும் துணிந்து கூற மாட்டார்கள். ஆனால், உலக மக்களில் பெரும் பகுதியினர் நடத்தும் பிரத்தியட்ச வாழ்க்கை இதுவே.

பணமும் அந்தஸ்தும் அதிகாரமும் படைத்த சிலர் எல்லா சுகபோகங்களையும் அனுபவிப்பதற்காக, மிகப் பெரும்பான்மையோர் இடைவிடாத வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டுத் தவித்து வருகின்றனர். எல்லோரும் சௌக்கியமாகவும் சந்தோஷமாகவும் வாழ்வதற்கு தர்ம நியாயமான உரிமையுண்டு என்ற நிலைமை போய், நாளடைவில், அன்ன விசாரமே மனித சமூகத்தில் பெரும்பாலோருக்குப் பெரிய விசாரமாகி விட்டது. அப்படியிருக்கையில் பகுத்தறிவு பெற்ற சாமான்ய மனிதன் மிருகங்களின் வேலையைச் செய்து, அவற்றைவிட அதிகமான வேற்றுமையில்லாமல், கல்வி கேள்வியின்றி, ஓய்வின்றி, சுகதுக்கங்களின்றி, வாழ்க்கையில் வெறுப்புத் தட்டியவனாக்க் காலந் தள்ளுகிறான். ஆனால் உலகின் சில பகுதிகளில் மக்கள் இந்த அக்கிரமத்தின் அட்டூழியத்தைச் உணர்ந்து, அந்த தாபத்தை செயலாக மாற்றி தாங்களும் சந்தோஷமாகவும் சௌக்கியமாகவும் வாழ உரிமையுள்ளவர்கள் என்பதை நிலை நாட்டப் போரிட்டு வந்திருக்கிறார்கள்.

இவற்றின் விளைவாக வெவ்வேறு தேசங்களில், பாமர மக்களின் வாழ்க்கை கஷ்டங்களை சகிக்கக்கூடிய அளவுக்குக் குறைப்பதற்கு முயற்சிகள் நடந்து வந்திருக்கின்றன. வேலையில்லாதவர்களுக்கும் திக்கற்ற வயோதிகர்களுக்கும் உபகாரச் சம்பளங்களைக் கொடுப்பதன் மூலம் பட்டினிச் சாவுகளுக்கு இடங் கொடாமல் பல மேற்கத்திய நாடுகள் பார்த்துக் கொண்டன. வேலை நிலைமைகளையும் வசதிகளையும் ஒழுங்கு படுத்த முற்பட்டதன் மூலம், வரம்பற்ற சுரண்டலுக்கு ஒரு வேலி போட முடிந்தது. சில இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள் மூலம் தேக சுகம் கெட்டால் நாதியற்றுப் போக வேண்டிய அவசியமில்லாத நிலைமையை சில தேசங்களில் தோற்றுவித்தனர். கல்வி வசதிகளைப் பெருக்கியதன் மூலம், பரம மூடனாயிருக்கும் நிலையிலிருந்து குழந்தைகள் கொஞ்சம் விடுபடுவது சாத்தியமாயிற்று.

ஆனால், இவையெல்லாம் முற்போக்குப் பாதையிலுள்ள பிரிட்டன், அமெரிக்கா அல்லது ஸ்காண்டிநேவிய தேசங்களில் கூட, வாழ்க்கைப் போராட்டத்தின் சிரமத்தை இவை வெகுவாகக் குறைத்தனவே ஒழிய, சமுதாயத்தில் உள்ள ஆண், பெண், குழந்தை அத்தனைப் பேரும் சந்தோஷமும் சௌக்கியமும் நிறைந்த வாழ்க்கையைப் பூர்ணமாய் அனுபவிப்பதற்குள்ள உரிமையையும், அதன் உள்ளடக்கமாயுள்ள வரம்பற்ற சம சந்தர்ப்பங்களையும் அளிக்கவேயில்லை.

உலக சரித்திரத்திலேயே முதல் தடவையாக இந்தக் கனவை நினைவாக்கி உலகிற்கு வழி காட்டியாயுள்ள தனிப் பெருமை சோவியத் யூனியனைத் தான் சேரும். எல்லோரும் வேலை பெறுவதற்கும் அதற்கு உரித்தான ஊதியம் பெறுவதற்கும் உரிமையுள்ளவர்கள் என்ற கோட்பாடு உலகில் வேறு எந்த நாட்டின் சட்டத்திலும் இல்லை. இந்த விதி தனிப் புதுமைதான். ஆனால், இதைவிட முக்கியமானவை கல்வி, சமாதானம், சமுதாய வாழ்க்கை - இவை பற்றி அங்கே செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் தாம். உத்தரவாதம் செய்யப்பட்டுள்ள வாழ்க்கையை சந்தோஷமும் சௌக்கியமும் நிறைந்ததாகச் செய்பவை இவையே.

உற்பத்தி சாதனங்களெல்லாம் சமுதாயச் சொத்துக்களாகி விட்டதால் சுரண்டல் முறை ஒழிந்துவிட்டது. பரசிரமஜீவிகள் அநேகமாய் அற்றுப் போய்விட்டனர் என்று சொல்லலாம். 19 கோடியே 50 லக்ஷம் ஜனங்கள் வசிக்கும் சோவியத்தில் 1939-ம் ஆண்டில் 32/2 o/o பேர் ஆலைத் தொழிலாளராகவும், 44/6 o/o கிருஷிகர்களாகவும் 17/5 o/o ஆபீஸ் உத்தியோகங்களிலுமிருந்தனர். சுரண்டல் முறையின் மூலபலம் எழுத்தறிவின்மை. எனவே முதலாளித்துவத்தை வேரறுத்த புரட்சிக்காரர்கள் மனதிலிருந்து அந்தகாரத்தை அகற்றும் கைங்கரியத்தில்



PAID-UP CAPITAL
Rs. 71,21,055

TOTAL FUNDS
Rs. 5,5630,654

# The NEW INDIA ASSURANCE COMPANY LTD.

HEAD OFFICE: BOMBAY.

**FOR 25 YRS. THE FOREMOST NAME IN INDIAN INSURANCE**

## முன்னணியில் நிற்கிறது!

டாடா குடும்பத்தினரின் ஆதரவில் ஆரம்பிக்கப்பட்டு, பிரசித்திபெற்ற டைரக்டர்களால் கண்காணிக்கப்பெற்று, திறமை மிக்க நிபுணர்களால் நிர்வகிக்கப்பெற்று 'நியூ இந்தியா' மகத்தான செல்வாக்குப் பெற்றுவிட்டது; எதிர் காலத்தில் இன்னும் அமோகமான வளர்ச்சி பெறப்போகிறது.

இந்திய ஏகாதிபத்தியத்திலேயே சகலவித இன்ஷூரன்சும் செய்யும் கம்பெனிகளுள் மிகப் பெரிது. ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார்கார், தொழில் ஜாமீன் பத்திரம் (Fidelity Bonds) தொழிலாளர் நஷ்டஈடு (Workmen's Compensation) முதலிய இன்ஷூரன்சுகளை நடத்தப்படுகின்றது.

### ஆயுள் இன்ஷூரன்ஸ் வளர்ச்சி

புதிய தொழில்




அமுலில் உள்ள மொத்த பாலிஸி



# Oriental Mercantile Agency

**99-A, Armenian Street, MADRAS**
**Fort West Road : : PALGHAT**

**Manufacturers' Representatives, Importers & Exporters**

*AGENTS FOR*

British Made Customers' own-brand Fountain Pens and Pencils, Carbons, Stencil Papers, Type-writer Ribbons etc., "Sheaffer's Lifetime Pens and Pencils, "Venus" Blacklead, Copying and Coloured Pencils; Macniven and Cameron's "Waverley", "Hindoo", "Goldwing" &c., Steel Pen Nibs; "Reeves" Artists' Materials; "Bourjois", "Evening in Paris" &c., series of Perfumery and Toilet Requisites; Chuit Neaf & Co's Synthetic Perfumery and Aromatic Chemicals from Switzerland; Angliss & Co., (Australia) "Imperial" Canned Meats; Australian Canned Fruits; Canadian Sardines (Canned Fish) in Oil; "Rosco's Perfumed Castor Oil; Pray's Peroxide Cream; Pearline Products (viz.,) "Vitex", "Hennol" etc., "Kopran" Tooth Pastes etc., etc.

We hold offers from America for all varieties of PAPER. Interested importers holding import licences are invited to apply to us for details.

Also representing a large group of American Automobile Replacement parts manufacturers. Enquiries invited from importers holding licences.

*INSURANCE DEPARTMENT*

Handling all sorts of Insurance—Life, Fire, Marine, Motor, Workmen's Compensation etc., including War Risks Insurance—as Government's Agents.

For MAXIMUM PROTECTION
at MINIMUM COST
with 100% SECURITY

WISE MEN INSURE WITH

# CROWN LIFE

PREPARE now for eventualities and for old age. A Crown Life policy banishes the danger of poverty for you and your dearones.

BECAUSE of its wonderful financial position CROWN LIFE is able to offer a remarkable range of life insurance policies and deferred annuities incorporating most liberal unusual benefits at surprisingly low rates of premium.

IN many cases payment of only 5 Annual Premiums enables protection for the full sum assured for entire 20 years, without deduction of unpaid premiums in event of death.

*Civilians in India are still covered against War Risk without any extra premium*

**It will pay you to ask for details or Consult the**

**CROWN LIFE AGENT**
**Mr. V. R. Subramaniam,**
**Chief Agent for Southern India,**
**99A, Armenian Street, G. T., Madras**

முதலாவதாக கவனம் செலுத்தினர்.

போல்ஷிவிக் புரட்சி நிலைத்து, தழைத்தோங்கியதற்குக் காரணம் அறியாமை மீது தொடுத்து பத்து வருஷங்களில் சம்பாதித்த இணையற்ற வெற்றி தான் என்று சொல்வது மிகையாகாது. சுமார் 180 பாஷைகளை பேசிக்கொண்டிருந்த அம்மக்களில் கிட்டத்தட்ட 87 o/o 1917-ம் ஆண்டில் அறிவிலிகளாயிருந்தனர். பத்து வருஷங்களில் தொண்டு கிழவர்கள் தவிர மற்ற எல்லோரும் நன்றாக எழுதப் படிக்கத் தெரிந்து கொண்டு விட்டனர். அதே சமயத்தில், குழந்தைகளின் கல்வி முறையையும் அங்கே புரட்சிகரமாக மாற்றியிருக்கிறார்கள்.

தாய் பாஷைகளில் நூல்களை இயற்றி அவை மூலம் எல்லாக் குழந்தைகளுக்கும் கற்பிக்கத் தொடங்கினர். 4 வருஷம் ஆரம்ப பாடசாலைப் படிப்பு, பிறகு 7 வருஷம் செகண்டரி படிப்பு கட்டாயமாய் எல்லோருக்கும் அளிக்கப்படுகிறது. 38-39-ல் இம்மாதிரி படித்த குழந்தைகள் 334 லக்ஷம். (1913-ல் இது 80 லக்ஷமாக இருந்தது.) 1933 முதல் 1940 வரை சோவியத்தில் புதிதாக 23,000 பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டன. இவற்றில் 18,000 கிராமாந்தரங்களில் அமைந்தன. மொத்தம் 38-39-ல் 1,72,000 பாடசாலைகள் இருந்தன (1915-ல் 1,05,000) இவை தவிர உயர்தரப் பாடசாலைகள் உண்டு. இவற்றில் 110 லக்ஷம் பேர் 38-39-ல் படித்துக் கொண்டிருந்தனர். ஆரம்ப, செகண்டரி பாடசாலைகளில் கல்வி இலவசமாய் போதிக்கப்படுகிறது. பொதுப் பாடங்களுடன் கூட, தொழில்களைப் பற்றியும் கற்பிக்கிறார்கள். உபயோகமான ஒரு தொழிலையும் மாணவன் படிக்கும் போதே கற்றுக் கொள்கிறான்.

குழந்தைகளின் பெற்றோருக்கும் பாடசாலை உபாத்தியாயர்களுக்கும் நெருங்கிய அன்னியோன்யத் தொடர்பு உண்டு. குழந்தை அறிவு வளர்ச்சி பெற்று, ஆரோக்கிய திடகாத்திரனாய் வாழ்வதில் பெற்றோரும் உபாத்தியாயர்களும் சம அக்கறை காட்டுகின்றனர். இவை தவிர, தொழிற் சாலைகளை அடுத்தாற்போல தொழிற் கல்வி பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன. அங்கே பொதுக் கல்வியும் தரப்படுகிறது. இந்தப் பள்ளிக்கூடங்களில் படிப்போருக்கு சாப்பாடு, துணி மணிகள் இடவசதி போன்ற எல்லா வசதிகளையும் சர்க்காரே இலவசமாகச் செய்து கொடுக்கின்றனர், ஜெர்மன் போரில் இறங்கிய பிறகு, 1940 டிசம்பரிலிருந்து 1943 அக்டோபருக்குள் 15½ லக்ஷம் தொழிற் கல்விப் பட்டதாரிகளை இந்தப் பள்ளிக்கூடங்கள் தயாரித்துக் கொடுத்தன.

வயது வந்தவர்களுக்காக வென்று 1939-ல் 10,000 பாடசாலைகள் நடந்து கொண்டிருந்தன. சராசரி 7,50,000 பேர் இவற்றில் படித்துக் கொண்டிருந்தனர்; 86,000 புத்தகாலயங்கள், 1.50,000 ரீடிங் ரூம்கள், 800 கண்காட்சி சாலைகள் பரவலாக நிறுவப்பட்டு அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி வருகின்றன. 1980-ல் கல்விக்காக ஒதுக்கப்பட்ட பணம் 2,300 கோடி ரூபிள் (1911-ல் 9, கோடி ரூபிள்) சோவியத் பூராவிலுமாக எல்லா பள்ளிக் கூடங்களிலும் 1939-ல் மொத்தம் 474 லக்ஷம் பேர் படித்துக் கொண்டிருந்தனர். இது மகத்தான புரட்சி யென்பதை மறுக்கமுடியாது.

சோவியத் ஆட்சி ஏற்பட்டவுடன் மக்களின் திட வாழ்க்கையில் உடனடியாக கவனம் செலுத்தப்பட்டது. இலவச வைத்திய உதவி எல்லோருக்கும் கிடைப்பதற்கு வழி செய்தனர். ஜனங்களின் சுகாதாரத்துக்காக 1942-ல் செலவழிக்கப்பட்ட தொகை 1650 கோடி ரூபிள் (1915-ல் 12·8 கோடி ரூபிள்). 25 வருஷ சோவியத் ஆட்சியில் ஆஸ்பத்திரிகளின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரித்தது. ஆஸ்பத்திரிகள் கிராமாந்தரங்களில் நிறைய ஏற்பாடாயுள்ளன. ஆங்காங்கு பெரிய ஆஸ்பத்திரிகளுடன் கிராம ஆஸ்பத்திரிகள் போதிய வசதிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. கர்ப்பிணிகளின் பரிபாலன,பிரசவ ஆஸ்பத்திரிகள் மட்டும் 1,42,000 இருக்கின்றன. (1913-ல் 6,800). எல்லா தாய்மார்களுக்கும் சகல சௌகர்யங்களும் செய்து தரப்படுகின்றன. பெரிய குடும்பிகளாயுள்ள தாய்களுக்கு சர்க்கார் பணவுதவி செய்கின்றனர். 1936 முதல் 1941 வரை 400 கோடி ரூபிள் இத்தகைய மான்யமாக அளிக்கப்பட்டிருக்கிறது. ஆஸ்பத்திரி வசதிகளை அமைத்துக் கொடுப்பதுடன் சமுதாயத்தின் பொறுப்பு நின்று விடுவதில்லை. டாக்டர்கள் வீடுகளுக்கு விஜயம் செய்து, செய்ய வேண்டிய சீர்திருத்தங்களையும் கவனிக்க வேண்டிய விஷயங்களையும் எடுத்துரைப்பார். எல்லா எல்லா ஆரோக்கிய வசதிகளும் இலவசமானவை.பிறந்தது முதல் மரண பரியந்தம் தனிப் பிரஜையின் தேக சுகத்துக்கே சமுதாயம் பூராவுமே பொறுப் பேற்கிறது. சாதாரண தொழிலாளர், சுகவாச ஸ்தலங்களுக்குச் சென்று தேக திடம் பெற வசதியுண்டு. ஓய்வை சௌகரியமாக குடும்பத்தினர் ரஷ்யாவில் எங்கு வேண்டுமானாலும் கழிக்க ரயில் வசதி உட்பட எல்லா சௌகரியங்களும் அளிக்கப் படுகின்றன. ஏழை என்ற காரணத்தால் எந்த மருந்தோ, வைத்தியமோ கிடைக்காமற் போவதென்ற பேச்சே ரஷ்யாவில் கிடையாது. மற்றவர்களை விட இவ் விஷயங்களில் பாட்டாளி மக்களுக்கு சலுகைகள் கொஞ்சம் அதிகம் உண்டு என்று வேண்டுமானால் சொல்லலாம்.

கூட்டுறவுப் பண்ணை முறையும்; தொழில் அபிவிருத்தியுமாகச் சேர்ந்து எல்லோருக்கும் தேவைக்கு அதிகமான உணவும், ஓய்வும், வாழ்க்கையை ரஸிக்கக்கூடிய எல்லா சாதனங்களும் இடைப்பதை சாத்தியமாக்கி யுள்ளன. எனவே அங்கு எல்லோரும் சந்தோஷமும் சௌக்கியமும் நிறைந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். எந் நாட்டு மக்களாயினும் உண்மையில் இன்புற்றிருக்க வேண்டுமென்றால் சோவியத் காட்டிய வழியில் சென்றாகவேண்டும். இந்த லட்சியத்தை அடைய வேறு குறுக்கு வழியோ மாற்று வழியோ கிடையாது.

# பத்திரிகை நிருபர்

**பண்டிட். எ. எஸ். ஆர். சிரோமணி**

உலகில் மக்களுக்குத் தொண்டு செய்யும் ஸ்தாபனங்களுள், பத்திரிகைக்குத்தான் முதன்மை ஸ்தானம். பத்திரிகை ஆசிரியர், நேர்மையும், ஆணித்தரமும் கொண்ட தலையங்கங்களை எழுதி மக்களுக்கு வழி காட்டுகின்றனர். அவைகளுள் அதிகத் தொண்டு செய்பவை "தினசரி"ப் பத்திரிகைகளே. அவை அன்றாடச் செய்திகளை வெளியிடும் விளம்பர யந்திரமல்ல, மக்களின் எண்ணத்தை உருவாக்கும் சக்திகள். கலங்கிய மக்களுக்கு நேர் வழியைக் காட்டும் தீபஸ்தம்பங்கள்.

இவ்விதப் பத்திரிகைகள் கண்யமும், உயர்வும் கொண்டு வளர்வதற்கு அப்பத்திரிகைகளின் நிருபர்களே காரணர்.

உலகெங்கு முள்ள பல நிருபர்களின் பேனா முனையில் உதிர்ந்த முத்துக்களே செய்தியாக மாறி பத்திரிகையின் பத்திகளை நிறப்புகின்றன. பல்லாயிரக் கணக்கான மக்களின் மனதைக் கவர்கின்றன.

நிருபர்களாலளிக்கப்பட்ட செய்திகளுள் மிக முக்கியமும், மக்களின் கவனத்திற்குப் பாத்திரமானதுமான ஓர் விஷயத்தைப் பற்றியதுதான் ஆசிரியரின் "தலையங்கம்".

சலியாது ஆடும் மின்சார விசிறிகளின் கீழ், சுழலும் நாற்காலியிலமர்ந்து, நிருபர் தரும் செய்தியை வைத்துக்கொண்டு, அச்சம், தயை, தாக்ஷிண்யமின்றி தலையங்கத்தை வெளுத்துக் கட்டுகிறார் ஆசிரியர்.

ஆனால் அச்செய்தியை உருவாக்க, நேர்மையான பாதையில் பெற அந்த நிருபர் எவ்வளவு கஷ்டப்பட்டானோ? எங்கு எங்கு ஓடினானோ?

நிருபர்களது நிலை தேன் வண்டைப் போன்றது. செய்தி தேனாகிறது. பத்திரிகை ஆசிரியர் தேன்காரராகிறார். மக்கள் தேனைப் புசிப்பவர்களாகிறார்கள்.

தேன் வண்டோ, தேன்காரனோ தேனைப் பருகுவதில்லை. மக்கள் தான்! பல இடங்களில் சிதறிக் கிடக்கும் தேனை ஒன்று சேர்த்தளிக்கும் பாக்கியம் பெறுகிறது தேன் வண்டு.

அதை ஒரே இடத்திலிருந்து பெற்று, வடிக்கட்டி, சுத்தமாக்கி உருவாக்கி நல்ல விலைக்கு விற்றுவிடுகிறான் தேன்காரன்.

தேன்காரனோ, தேனைப் புசிப்பவர்களோ ஓடித் திரிந்து தேனைச் சேமித்தளித்த வண்டை நினைப்பதில்லை.

இதே கதிதான் நிருபருடையதும். தேன் கெட்டுப்போயிருந்தால் (வீணாகிவிட்டால்) தேன்காரனது நினைப்பு வரும். அப்பொழுது தேன்காரன் வண்டை நிந்தனை செய்வான். அதேபோல ஓர் நிருபராலளிக்கப்பட்ட விஷயம் தவறுதலாக இருந்து, அதைப்பற்றி ஆசிரியரும் தலையங்கமெழுதியிருந்தால் உண்மையறிந்த மக்கள் அப்பத்திரிகையை எவ்வளவு கேவலமாக எண்ணுவார்கள்? எனவே 'பத்திரிகையின் உயிர் நாடி நிருபர்தான்' என்பது விளங்குகிறது.

'கோலெடுத்தவனெல்லாம் தடிகாரன்' என்று எண்ணிக்கொள்வது போல், இப்பொழுது எழுது கோலெடுப்பவரெல்லாம் எழுத்தாளராகிவிட வசதி இருக்கிறது. நல்ல ஊக்கமளிக்கப்படுவதால் எழுதி, எழுதிப் பயிற்சி பெற்று எழுத்தாளராகிவிடலாமல்லவா? ஆனால் எழுத்தாளரெல்லாம் 'நிருபரா'கிவிட முடியாது. ஆழ்ந்த சிந்தனையும் நிறைந்த அறிவும், சமயத்திற்கேற்ற புத்தியும், சஞ்சலமற்ற மனமும், ஊஹிக்கும் திறனும், ஒழுக்கமும் சலியா உழைப்பும் நிறைந்தவனே நல்ல நிருபராக முடியும். தேன் வண்டிற்கொழிவு உண்டோ? ஓச்சலுண்டோ?

அவனுக்குள்ள பொறுப்பு அளவிட முடியாதது. நிருபரது பொறுப்பில் ஊசலாடுகிறது ஆசிரியரின் உயிர். ஓர் நிருபர் ஒரு தவறான செய்தியை வெளியிட்டு விட்டால் அதனால் நேரும் தீங்கு, முதலில் ஆசிரியரைச் சார்கின்றது.

ஓர் நிருபருக்குப் பலதரப்பட்ட அரசியல், சமூகங்களைச் சார்ந்தவர்களது தொடர்பும், அரசாங்கத்தினர்களது தொடர்பும் அவசியமாகிறது.

> இக் கட்டுரையாளர் ஒரு சமஸ்கிருத பண்டிதர்; ஹிந்தி பண்டிதருங்கூட. அதிலே ஆச்சரியம் என்ன வென்றால், சென்னையிலுள்ள இரு தமிழ் தினசரிகளுக்கும் ஓர் ஆங்கில தினசரிக்கும் இவர் நிருபர்!

தனிப்பட்ட முறையில் ஓர் நிருபர் எக்கக்ஷியைச் சார்ந்தவருக விருப்பினும், 'செய்தி அனுப்பும் நிருபர்' என்ற முறையில் அவர் அனைவரிடமும் வேற்றுமையின்றிப் பழக நேரிடுகின்றது. அப்பொழுதுதான் எல்லா இடங்களிலிருந்தும் செய்தியைப் பெற முடியும். மற்றோர் பொறுப்பும் நிருபருக்குண்டு. அரசாங்கத்தினரோ பொது மக்களோ தன்னிடம் வெறுப்படையாமல், ரகசியங்களைச் சரியான காலம் வரும் வரை காப்பதுதான் அது. பல விஷயங்கள் நன்கு தெரிந்திருந்தும தக்க அங்கீகாரம் பெறாமல் அதை வெளியிட முடிவதில்லை. அங்கிகாரம் கிடைப்பதுமில்லை. பொதுமக்களிடத்திலுள்ள ஓர் தவறை எடுத்துக் காட்டினால் அவர்களுக்கு எவ்வளவு கோபம் பொங்குகிறது! இத்தனை கோப தாபங்களுக்கும் பாத்திரனாகும் பாக்கியம் நிருபருக்குக் கிடைக்கின்றது. நல்ல விஷயங்களைக் கூறினால் வாழ்த்துவதற்கு ஆள் இல்லை. தவறை எடுத்துக் காட்டினால், ஊழலை வெளிப்படுத்தினால் திட்டு, தண்டனை!

“ஒரு வியாபாரி ஜனங்களுக்கு அத்தியாவசியமான ஓர் பொருளைத் தேக்கி வைத்துக்கொண்டு அதிக லாபத்திற்கு விற்க, 'கள்ள மார்க்கட்டை' சிருஷ்டிக்கிறான்.” என்று வைத்துக் கொள்வோம். அதைப் பற்றி ஒரு வரி எழுதி விட்டால், (பொதுஜன நன்மைக்காகத்தான்) அவருக்கு வரும் கோபத்திற்களவில்லை.

ஓர் அதிகாரி, பட்டம் பதவி மோகத்தால் மக்களிடத்தில் கண்ணியமற்ற முறையில் நடந்து கொள்கிறாரென்று கற்பனை செய்து கொள்வோம். அவ்விஷயத்தைத் தக்க ஆதாரத்துடன் வெளிப்படுத்தினால் பல தீமை விளைகின்றன.

பல தரப்பட்ட அரசியல்வாதிகளிடமும் சில குறைகள் சில சமயத்தில் காணப்படுகின்றன.

உற்சாகத்தில் மேடையில் ஒன்றைப் பேசுகின்றனர். பத்திரிகையில் அவ்விஷயத்தைப் பார்க்கையில் மனம் பதைத்து 'மறுப்பு' விடுத்து விடுகின்றனர், இவ்வளவு ஆபத்துக்களை எதிர் நோக்கி, நிமிர்ந்து வேலை செய்யும் ஓர் கண்ணிய நிருபர், பத்திரிகாலயத்திலிருக்கும் எழுத்து அச்சுக்கோப்பவர்களிடம் பயந்து நடக்க வேண்டியிருக்கிறது.

ஓர் நிருபர் அவ்சரமாகச் செய்தியை உருவாக்கி அனுப்புகையில் “தவலை போயிற்று” என்று எழுதியிருந்தால், சில சமயம் கம்பாஸிடர்கள் 'தலை போயிற்று' என்று அச்சுக் கோத்துவிடுகின்றனர். உதவி ஆசிரியர், “தலை போயிற்றாம்!” என்று பிரமாதமாக தலையங்கமும் கொடுத்துவிடுவார், செய்தி வந்ததும் 'நிருபர்' தலைபோக வேண்டியது தான்! இது போன்ற பல உதாரணங்களைக் கொடுக்கலாம். விஷயம் ஒன்று தானே.

அன்றாடச் செய்தியை அன்றன்றே அனுப்புவது, கூடுமான விரைவில் அனுப்புவது ஆகியவை நிருபரின் திறனை வளர்க்கும். ஆனால் சில பத்திரிகாலயங்கள் அது போன்ற செய்திகளை 'ஊறுகாய்' போடுவது போல் சேர்த்து வைத்து, தேதி வாரியாக வெளியிடும். அப்பொழுது தான் நிருபர் மனம் நோகும்.

நிருபர் நிலை உயரவேண்டும். அவன் கண்யமாக வாழ வேண்டும். அது ஓர் பெரிய கலை. அதை வளர்க்க சர்வ கலாசாலைகள் முன்வரவேண்டும். நிருபர்களது கண்ணீரைப் போக்குவதோ, வளர்ப்பதோ ஆசிரியர்களது கையில். ஆனால் ஆசிரியர்களது கண்யம், மதிப்பு எல்லாம் 'நிருபர்'களது கையில். சங்கலித் தொடர்போன்றது இப்பின்னல். எனவே ஆசிரியர் தங்கள் அன்பையும், ஆதரவையும் மட்டுமின்றி கண்யமாக உயிர் வாழ்வதற்கான வசதிகளையும் செய்து தருவது கடமையாகும்.

ஆசிரியர்களுக்கே இப்பொழுது தான் 'கதி மோக்ஷ' மேற்பட்டிருக்கிறது. இனியேனும் அவர்கள் அஞ்சாமல் நிருபர்கள்பால் மானேஜரது கவனத்தைத் திருப்பவேண்டும்.

அப்பொழுது தான் பத்திரிகைத் தொழில் மேன்மையுற்று வளரும்.

கல்யாண்
பல்பொடியை
உபயோகியுங்கள்

# கலைந்த கோயில்

எஸ்.பீ.ராமச்சந்திரன்

எண்பத்தேழு பக்கங்கள். மிக அழகான புத்தகம்! பக்கம் போனதுகூடத் தெரியவேயில்லை. அவ்வளவு சுவாரஸ்யமாயிருந்தது. சமூகத்திலே பெண்மையின் இழிநிலைமையை காண்டேகர் அரைப் பார்வையோடு பார்த்து எழுதியது 'வெறும் கோயில்' என்ற புத்தகம். ஜன்னல் வழியே பார்த்தேன். என்றுமில்லாதபடி அந்தப் பாழடைந்த வீடு என் மனதைக் கவர்ந்தது. ஒரு காலத்தில் அதுபெருமிதத்தோடு கம்பீரமாய் நின்றிருக்கவேண்டும். வெறிச்சென்றிருந்த என் மனதைப்போல, அர்த்தமற்ற நகையோடு தன் கேவல நிலை கண்டு தளர்வது போலிருந்தது அது. வானத்தில் கருமேகங்கள் சூழ்ந்துகொண்டிருந்தன. மணி எட்டு என்பதை அறிவிக்க அலறியது ஆலையின் ஊதுகுழாய். மீண்டும் புத்தகத்தைப் படிக்கலானேன்.

ஆனால், ஏனோ மனம் புத்தகத்தில் ஈடுபடவில்லை. எங்கெங்கோ சுழன்றது. 'படபட' வென்று மழை வந்தது. மழைத்துளிகளைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தேன். என் மனதின் சிந்தனை அலைகள் கலைந்தன. ஏதோ ஒரு குழந்தையின் அலறல் என் செவியைப் பிளந்தது. என்ன சத்தம் போடுகிறது, சனியன்! சற்று நேரத்தில் குழந்தை ஒன்றை ஏந்தி மலையாளத்து மங்கை ஒருத்தி பாழடைந்த அந்தத் திண்ணையை ஆக்ரமித்துக் கொண்டாள். குழந்தை பசியோ என்னமோ கதறியவண்ணமிருந்தறு. தாய் சமாதானப் படுத்த முயன்றாள். அவள் இதயத்தில் சுரந்த அன்பு குரலில் இழைந்தது. நான் கூர்ந்து கவனித்தேன்.

அவ்வேழைப் பெண்ணுக்கு வயது இருபதுக்கு மேலிராது. எலும்பும் தோலுமான அழகிய உருவம். கண்களில் ஏக்கம்; இதயத்தில் தாபம். கன்னங்கள் ஒட்டியிருந்தன. கரிய கூந்தல் புழுதி படிந்து சிதறிக் கிடந்தது. அரையில் ஓர் ஒற்றை வேஷ்டி. தாய்க்கும் சேய்க்குமாக மேலே ஒரே துண்டு. அவள் சாப்பிட்டு இரண்டு, மூன்று நாட்களாவது ஆயிருக்கும். குளிரினால் அவள் உடம்பு வெடவெட வென்று நடுங்கிக்கொண்டிருந்தது; குழந்தையின் குரலிலும் நடுக்கம். பரிதாபமாயிருந்தது.

உள்ளே சென்றேன். சாப்பாடு தயாராகியிருந்தது. அன்னையறியாமலே அதை இரண்டு இலைகளில் பரிமாறினேன். என் கை ஆட்டம் கண்டது. யாராவது பார்த்தால்?..........பர்த்தால்? வெறும் கோயில் எதிரே கிடந்தது. பெண்! கோயிலில் வைத்து பூஜிக்கப்பட வேண்டிய அவள் மிதிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டுக் கிடக்கிறாள். பார்த்தால் என்ன?

"ஏய், ஏய்!"

கைதட்டிக் கூப்பிட்டேன். மழையில் நனைந்துகொண்டே அவள் வந்தாள். குழந்தை அலறிக்கொண்டிருந்தது. நான் கொண்டுவந்திருந்ததைக் கொடுத்தேன்.

"சாப்பிடு".

அவள் பெற்றுக்கொண்டாள். குழந்தைக்கு இரண்டு வாய் ஊட்டிவிட்டு, அவளும் உண்டாள். நானும் சாப்பிட்டேன். பரிதாபமாக அவள் என்னைப் பார்த்தாள். அவள் கண்களில் விவரிக்க முடியாத ஏக்கம் ஏன்?

நான் உணர்ந்து கொண்டேன். விஷமனப்பான்மை யுடையவர்களால் எதிர் பார்க்கப்படுவது என்ன? தன் மகவிற்காக ஒரு கவள அன்னத்திகும் தன் கற்பை விற்று விடத் துணிந்திருந்தாள். ஆனால்,— அவள் மனம் கிலி பிடித்திருந்தது. குழந்தை அவள் கன்னங்களைத் தடவியது. அவள் கண்களில் நீர் கிளம்பியது.

"ஏனம்மா?" என்று பரிவோடு கேட்டேன்.

"இந்த ஏழைக்கு யர்ரய்யா ஒரு வேளை சர்ப்பாடு போர்டுகிறார்கள்?" என்று மலையாள பாஷையில் சொன்னாள். என் மனம் குமுறியது. எண்ணற்ற சகோதரிகள் கேரளத்திலே, வங்கத்திலே இந்தியா முழுவதிலுமே பஞ்சத்தால் துடிக்கின்றனர். ஏனென்று கேட்பாரில்லை, உலையில் கொதிக்க வேண்டிய தானியம், கேட்பாரற்று கள்ள மார்கெட் நடத்தும் கயவர்களின் குகையிலே உளுத்துக் கிடக்கிறது.

"நீங்கள் எல்லோரும் நாட்டை விட்டு எப்பொழுது புறப்பட்டீர்கள்?" என்று கேட்டேன். அவள் மலையாளத்தில் தன் துயரம் நிரம்பிய கதையைக் கூறினாள். அதைச் சுருக்கி இங்கே தமிழில் தருகிறேன்.

"அவள் மலையாளத்தில் மேனன் வகுப்பைச் சேர்ந்த பெண். ஒரு பிராமண வாலிபன் அவளைக் காதலித்து மணந்து கொண்டான். அது அந்நாட்டில் வழக்கமும் கூட. அவனுக்கு ஒரு சிறிய தோப்பு, நிலமெல்லாம் இருந்தன. அவர்கள் ஒரு நாளின் பெரும் பாகத்தைத்

தோப்பிலேதான் கழிப்பார்கள்; அதுதான் அவர்களுக்கு இஷ்டம். வாழ்ந்த சில நாட்களிலே இன்பமாய்த்தான் வாழ்ந்தார்கள். அவன் அவளை அடிக்கடி மலைக்கு மேலே உள்ள கோயிலுக்கு அழைத்துச் செல்வான். நாயர்ப் பெண்டிரை மணந்து கொண்ட மற்றப் பிராமணர்கள் அம் மகளிர் தொட்டதைச் சாப்பிடாமலிருந்தாலும், அவனுக்கு அவள் கையாறச் சமைத்துப் போட்டால்தான் திருப்தி. அப்படியே தான் செய்து வந்தான். இதை யறிந்த மற்ற பிராம்மணர்கள் இவனை சாதிப்பிரஷ்டம் செய்துவிட்டனர். அதற்காக அவன் கவலைப்படவுமில்லை. அவர்கள் இன்ப வாழ்வில் சிறு பிறையாகத் தோன்றியவன் தான் சந்திரன். அதுதான் அந்தக் குழந்தையின் பெயர். அவள் மடியில் தவழும் சந்திரனைப் பிடிக்கத் தாவி வருவான் அவன். கொஞ்சலும் குலாவலுமாகக் கழிந்தது காலம்.

காலம்! அது வஞ்சிக்கும் சதிகாரப் பேயல்லவா? பொல்லாத பஞ்சம் வந்தது. சத்தற்ற உணவு. அதுவும் போதாத அளவு. ஊரெங்கும் கொள்ளை நோய்கள், எத்தனையோ சிறுவர், பெரியவர்களைக் கொள்ளை நோய் வாரிச் சென்றது. அதில் அவள் கணவனும் அவள் வாழ்வின் மேல் துக்கம் நிறைந்த கருப்புப் போர்வையைப் போர்த்திவிட்டுப் போய்விட்டான். கொழுகொம்பற்ற கொடி எத்தனை நாளைக்கு உயிரோடிருக்கும். அவனுடைய தம்பி, அவளை வெளியே துரத்திவிட்டான்.

நிர்க்கதியான அவள் மரத்தடியில் தூளியில் குழந்தையைப் போட்டுவிட்டு மரவள்ளிக் கிழங்குகளைப் பிடுங்கிக் கொண்டுவந்து மண் கலயத்தில் வேகவைத்துத் தின்றாள். ஒட்டி உலர்ந்து போனாள். அவளுடைய அம்மான் மகன் "தென்னாட்டில் போய் எங்காவது மில்லில் வேலை செய்து பிழைக்கலாம், வா" வென்றழைத்தான். அவள் அவனை மறுமணம் செய்து கொண்டாள். கால் நடையாய்க் கையில் கிடைத்ததைத் தின்று கொண்டு, பயண மானார்கள். நடு வழியில் அவனுக்கும் காலராக் கண்டது. அவள் நடுநடுங்கினாள். ஆனால், என்ன செய்வது? குழந்தையைக் காப்பாற்றவேண்டுமே!......எங்கோ நடுவழியில் ஒரு வறண்ட நாளில் தழைத்துக் கொண்டிருந்த மரத்தடியில் அவன் விழுந்து இறந்தான்.

பிச்சை எடுத்து வயிற்றையும் குழந்தையையும் மானத்தையும் காத்துக்கொண்டே இவ் வூர் வந்து சேர்ந்துவிட்டாள். மூன்று நாட்களாக் ஒன்றும் கிடைக்கவில்லை. காமக் கண்களோடு பார்க்கும் மனிதர்களைக் கண்டால் அவளுக்குப் பிடிப்பதில்லை. "இனி தெய்வம் விட்ட வழி" என்று அவள் கூறி முடித்தாள். ஒரு பாய் எடுத்துப் போட்டுப் படுத்துக்கொள்ளச் சொன்னேன். ஒரு வேஷ்டியும் கொடுத்தேன். அவள் முடக்கிப் படுத்துக் கொண்டாள்.

நான் பலவற்றையும் சிந்தித்துக்கொண்டிருந்தேன். எப்பொழுது தூங்கினேனோ எனக்கே தெரியாது. கனவும் அமைதியும் இல்லாத ஏதோ ஒரு நித்ரா லோகத்தில் நான் இருந்தேன். என் கால்களை ஏதோ ஸ்பர்சிக்கும் உணர்ச்சியால் விழித்தேன். மீண்டும் அவள் என் கால்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

"நான் போய் வறேன், சாமீ! ......என்னைப் போல் அபலைகள் எத்தனையோ வரும்......போகும் ......நிங்களைப் போல இனிமையான ஸ்வபாவக்காரரே யான் கண்டிட்டில்லா......" என்று கூறியவாறே போய்விட்டாள். அவள் தலை மறையும் வரை பார்த்துக்கொண்டே இருந்தேன்.

எதிரே பாழடைந்த வீட்டுத் திண்ணை பாழாகவே நின்றது. காகங்கள் கரைந்துகொண்டிருந்தன. என் வெறும் கோயில், புத்தகம் பிரிந்து கலைந்த கோயிலாய்க் கிடந்தது.


"ஒவிங்க்"

சித்திரம் வரைவதற்குச் சிறந்த இங்க் இதுவே.

விவரங்களுக்கு எழுதவும்:

நேஷனல் ப்ராடக்ட்ஸ் கார்ப்பரேஷன்

126, ராயப்பேட்டை ஹைரோடு,

மயிலாப்பூர் : சென்னை



ஹைனல் (பினல்)

பினல்களில் சிறந்தது

நோய்க் கிருமிகளைக் கொல்லும் காரம் மிக்கது

நேஷனல் ப்ராடக்ட்ஸ் கார்ப்பரேஷன்

126, ராயப்பேட்டை ஹைரோடு

மயிலாப்பூர் : சென்னை

# மதுவிலக்கு

"கம்பதாஸன்"

இடம் : கர்வேரி ந்திக்கரை. தனியான ஒரு குடிசை.

காலம் : இரவுநேரம்.

பிகபானன் கட்டழகு வாய்ந்த இருபது வயதுக் காளை; எனில் ஏழை. எனினும், இனிமையாகப் பாடும் தன்மை, தனது வாழ்க்கையின் தேவையாகவும், லட்சியமாகவும் கொண்ட தொழில் யாழ் வாசித்தல்:

இரண்டர்ண்டுகளுக்கு முன் பூம்புகார் மன்னனின் சங்கீத மஹாலை அணிபெறச் செய்தவர்களில் அவனும் ஒருவன்.

இன்றோ ?... அவன் அரச ஆதரவை தர்னே ராஜிநாமா செய்து விட்டர்ன்.

இப்போது வருவாயில்லை, வறுமை அவனை வாட்டுகிறது. எனினும், எவ்விதமோர் நர்ள் தவறாமல ஒவ்வொரு நாழிகையிலும் மது வருந்துகிறான். ஏன் ?......

காவேரி நதிக்கரையில் தனியர்க ஓர் குடிசையில் வசித்து வருகிறான். அவன் பெயர் தான் பிகபானன்.

அவன் வழக்கப் படுத்திக் கொர்ண்டபடி கலசத்திலிருக்கும் மதுவை கிண்ணத்தில் வார்த்து ஒரு முடர் குடித்தான். வானிலே இருளில் உதயமாகிக் கொண்டிருந்த சந்திரனைத் தன் இமைகளைக் குலுக்கிக் கொண்டு கவனித்தான். நட்சத்திரங்களை கணக் கெடுப்பவன் பேர்ல உற்று உற்றுப் பார்த்தான். பிறகும் ஒரு முடர் மது வருந்தினான். வெண் மேகமும் கருமுகிற் துண்டுகளும் பின்னிப் பெருகி ஓடுவதை நோக்கினான்.

மறுபடியும் ஒரு முறை மதுவைசுவை பார்த்தான். இதழின் மேல் நாவை நீட்டி சுருட்டி நெளித்தான்; ஒரு பவளக் க்ல்லில் மர்ணிக்க வாளைத் தீட்டுவது போல.

ஒரு விநாடி சென்றது.

(அவனது நெஞ்சில் முணு முணுப்பாக பிறந்த நாதம், தூரத்தில் காணும் கடலலை வர வரப் பூரண உருவத்தைக் காட்டுவது போல வந்தது.)

பிகபானன் : (பாடுகிறான்).

நாகத் திலேநன் மணி வைத்தனன்
நடுங்கும் இருளில் நிலா வைத்தனன்
வேக மதுவில் சுவை வைத்தனன்
விண்ணும் மண்ணும் ஒன்றுருதே ! ......

(எதிரே இருந்த மகிழ மரத்தடியி லிருந்து அம் மர நிழலே தேங்கித் தேங்கி வருவது போல கறும் போர்வை அணிந்த ஓர் உருவம் அவனைச் சமீபித்தது.)

உருவம் : விண்ணும் ம்ண்ணும் ஒன்றுகிறதா ?

(குரலைக் கேட்டு, மேலும் பாடுவதை நிறுத்தினான் பிகபார்ணன். தன் முன்னே வந்து நின்ற உருவத்தை, பயங்கலந்தத் தெளிவுடன் நோக்கினான். இருளில், குளத்தில் மூழ்கிக் குளித்தவொருவன் நீரினுள் வெறுமையைக் க்ண்டு, நீர் மட்டத்திற்கு வந்து தலையை நீட்டிப் பார்க்கும் போது, அங்கிருந்த வெள்ளாம்பல் பூவைக் கண்டு கண் மலர்ச்சியடைந்தது போல, பிகபாணன் அவ்வுருவத்தின் முகத்தை ஊடுருவிப் பார்த்தான்.)

பிக : நான் பிதற்றுகிறேனா ? ......

ஆம், நான் பிதற்றுகிறேன். பிதற்றும் சொற்கள் என்னுடையதுதான். ஆனால் அந்த சொற்கள் உன் நாவினிலிருந்தே பிறக்கிறது.

உரு : என்ன ! என் நாவிலிருந்து உங்கள் பிதற்றல் பிறக்கிறதா ? அப்படியானால் நீங்கள் குடிக்கும் மதுவும் என் வயிற்றில் தான் சேருகிறதாக நான் ஏன் கருதக்கூடாது ?

பிக : நீயா அப்படிக் கருதுகிறாய் ! ...

கருதிப் பார்க்கும் தன்மை காற்றிற்கு ஏது ?... எந்த ஒரு காற்று ஓர் மலர் மொட்டின் மூச்சாக வெளிப்பட்டு தன்னை மணப் படுத்திக் கொண்டதோ அந்த க்காற்றே மொட்டவிழ்ந்த அம் மலர் மீது மோதி, இதழ்களை உலுக்கி, உதிரச் செய்து விடுகிறதே !... இதைப் பற்றி நீ எண்ணி பார்த்திருக்கிறாயா ? ...

உரு : நீங்கள் ஏன் உங்கள் கோபத்தை இப்படி உவமை உருவத்தில் காட்டுகிறீர்கள் ? நாமிருவரும் ஒரே குரு குலத்தில் பயின்றோ மென்பது

உண்மைதான். நம்மிருவரின் விழிகளும் நினைவிலும் கனவிலும் ஒன்றின் பாஷையை ஒன்று புரிந்து கொண்டு ஒற்றுப்போனதும் வாஸ்தவந்தான். ஏன் ?... நம்மிருவரின் இதயங்களும் காவிரியும் கொள்ளிடமும் போல ஒரே கடலை நோக்கிச் சென்றன என்பது சத்தியந்தான். ஆனால், கடமையின் கை என் கல்யாண ரூபத்தில் வந்து, நாரிகேளம் போல ஒன்றாக இருந்த நம் உள்ளத்தை இரு மூடிகளாக உடைத்து விட்டதே!... அதற்கு, பெண் ஜென்மம் எடுத்த என்னால் என்ன செய்யமுடியும்?

ஒரு பெண் தனது இஷ்டப்படி நடக்க இந்து சமூகத்தில் இடமேது? சட்டமேது? இதை நீங்கள் எண்ண வேண்டாமா? நான் அரசன் மகள். நீங்கள் யாழ்ப்பாணர். சூரியனும் சந்திரனும் போல பிரிந்து கிடக்கிறோம். ஆனால் என் மனம் ....

(அவ்வுருவம் விட்ட பெருமூச்சு, அப்போது உதிர்ந்த மகிழம் பூவுடன் மண்ணில் புதைந்தது. நெஞ்சில் ஒரு விம்மல் குமிழ் விட்டது.)

மஞ்சத்தில், என்னைத் தாலிகட்டிய கணவன் கண் அயர்ந்திருக்கிறார்... நானோ என் நெஞ்சில் சுமை தாங்கி, நீரில் நடப்பவளைப் போல இந்த நடு இரவில் உங்களை நாடி வந்திருக்கிறேன். தாதியர்களின் கட்டுக்காவலை கடந்து வந்திருக்கிறேன்.. சகத்தோர்கள் நாளை என்ன சொல்வார்களோ அந்த இழிச் சொற்களின் மீது நடந்து இங்கு வந்திருக்கிறேன். எதற்காக? என் தேவைக்காகவா? எரிக்கும் நிலாமீது ஆணையிட்டுச் சொல்கிறேன்...

[அவ்வுருவத்தின் கண்களிலிருந்து கொட்டிய நீர்த்திவலைகளி லிருந்த உஷ்ணம் வீசிய தென்றற் காற்றில் கலந்தது. இரண்டொரு விநாடி ஆகாயத்திலிருந்த மௌனம் அங்கே பிரதிபலித்தது.]

பிக : இரண்டாண்டுகளுக்கு முன், உன் தந்தை அந்நிய நாட்டு யுத்த வெற்றியை கொண்டாடிய சமயம், சங்கித மஹாலில், வெண் மேகம் போன்ற திரைக்கு பின்னே கண்ட உன் முகத்தை இப்போது தான் காண்கிறேன் என்பது எனக்கு ஞாபகமிருக்கிறது. அது மறக்கக்கூடியதா? இருண்ட மழை மேகத்தில் மின்னல் தோன்றி மறைந்தாலும் மின்னலில் ஒளியில்லாமல போகுமோ?... ஆம்.... இந்த சந்திரனைப் போல தான் நீயும் இருளில் தனித்து வந்திருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். கொலையாளியின் உள்ளத்தைப் போன்ற காட்டின் வழியாகத் தான் நீ விரைந்து வந்திருக்கிறாய் என்பதும் தெரியும். இவை எல்லாவற்றையும் விட நீ வந்திருக்கும் முக்கியக் கருத்து என்ன என்பதும் எனக்கு மிக மிகத் தெளிவாகத் தெரியும்.

உரு : என்ன?

பிக : அன்று நீ சங்கீத மஹாலை நோக்கி வந்த போது, உன் கால் தண்டையின் நாதச் சிரிப்பிலே உன் கை வளையின் குலுக்கின் மெல்லிசை இழைத்தது..... அதைக் கேட்ட என் உள்ளத்திலே உணர்ச்சி ஊற்றெடுத்தது, என் நாவின் அணையையும் கடந்து அது காதல்கானமாகி காற்றை முத்த மிட்டது!

அந்த கானத்தின் உட் சக்தி உன்னுடையது என்று பரிசு கேட்க வந்திருக்கிறாய். அதற்காக, சுருதி கலைந்துள்ள என் இதய யாழை நினைவின் விரல்கள் அலுக்கும் வரை மீட்டி, விதியால் பிணைக்கப் பட்டிருக்கும் அந்த நரம்பை அறுத்துவிட வந்திருக்கிறாய்... ஏன்? நான் சொல்வது நிஜந்தானே?..

[குடிசையின் வாயிலில், பழுத்த கனிகளைத் தாங்கி நின்ற ஒட்டு மாஞ் செடியிலிருந்து சருகுகள் கீழே வீழ்ந்தன...]

உரு : இது நிஜமா! ஒருபோது மில்லை.

உங்கள் அறிவுகூடவா இந்த முடிவிற்கு வந்தது? உலகத்தோர்களின் அநுமானத்தை விட உங்கள் சிந்தனை வேறுபட்டதாக இருக்கு மென்று நம்பினேன். ஏன், இப்போதும் நம்புகிறேன். எதிர்காலத்திலும் கூட நம்புவேன்.....

பிக : உனது நம்பிக்கை விசித்திரமாகவே இருக்கிறது.....!

உரு : நம்பிக்கை எப்போதும் வீண்போவதில்லை என்றே நான் நம்புகிறேன். இது உண்மை.

பிக : உண்மை. உயரிய தத்துவம் கொண்டது தான். அதற்காக அளிக்க என்னிடம் என்ன இருக்கிறது.

உரு : அதற்காக நீங்கள் உங்கள் யாழை அளிக்க வேண்டாம்; இந்த ஊரிலிருந்தும் போக வேண்டாம்; உயிரைத் தர வேண்டாம்....

பிக : அப்படியானால் நான் உதவ வேண்டுவது ஒன்றுமே யில்லை... ஆம்..... காதல், மனிதனை கள்வனாக்கி விடுகிறது. அதை அடைந்தவன் தன்னிடமிருந்தே கொள்ளையடிப்பதைத் தவிர ஒன்றும் கொடுக்க சக்தியற்றவனாகி விடுகிறான்; கொடியவனாகி விடுகிறான்; மது குடியனாகி விடுகிறான்.. ஆ! மது எவ்வளவு மகிமை வாய்ந்ததாக இருக்கிறது!..

(கலசத்தில் இருந்த கொஞ்சம் மதுவையும், படபடப்புடன், கிண்ணத்தில் வார்க்கிறான். உருவத்தின் முகத்திலே துடித்துக் கொண்டிருக்கும் உதட்டை கவனிக்கிறான்.)

பிக : மதுவில் மறைந்திருக்கும் சுவை ஒரு மகா கவியின் சிந்தனை ஏட்டில் பதிந்திருப்பதை விட மேலானதாக இருக்கிறது. மது ஒன்றுதான் கொடுமையின் அச்சத்தை எதிர்க்கும் வலிமை கொண்டிருக்கிறது. மது மனதை மட்டுமல்ல

மண்டலத்தையே மயக்குகிறது. மதுவே நீ வாழ். . . .

[உருவத்தின் இருகைகள், மதுக் கிண்ணம் ஏந்திய பிகபாணன் கையை உறுதியுடன் பற்றின.]

பிக : ஏன் தடுக்கிருய்?. அதோ பாராய்! வானம் சந்திர வள்ளத்திலே ஒளி மதுவை ஏந்தியிருக்கிறது... மகிழ மரமும் நட்சத்திரம் போன்ற தன் மலர் கிண்ணத்தில் மது தான் ஏந்தி நிற்கிறது. விண்ணும் மண்ணும் ஒரு மதுவையே பருகுகின்றன.

உரு : விண்ணும் மண்ணும் குடித்து வெறியேறி நிலைதவறி வீழ்ந்து சாகட்டும். நீங்கள் இதை அருந்தாதிர்கள்.

பிக : பழக்கத்தின் பழய ருசி இதை கூவி அழைக்கிறதே! என் வாய்க்கும் மது நிறைந்த இந்த கிண்ணத்திற்கும் இடையே இருக்கும் தூரம், கட்லை பிரிந்திருக்கும் ககனத்தின் தூரத்தை காட்டுகிறதே!..

உரு : என்னவானுலும் சரி. குடிக்கக் கூடாது. இதைச் சொல்லவே நான் வந்தேன்.

பிக : எந்த விதமான அதிகாரத்தில்? காதலிலா?

உரு : "......"

பிக : அரசன் மகள் என்ற அதிகாரத்திலா?

உரு : ஆம்.

பிக : நல்லது மன்னனே கடமை என்னும் கை கொண்டு என் காதலைத் தடுத்தான். மன்னன் மகளாகிய நீயோ என் மதுவை தடுத்து விட்டாய்! தடுப்பவரிடம் கொடுப்பவர் என்ன செய்யக் கூடும்? இதோ மதுவை கொட்டி விட்டேன்...!

[கிண்ணத்திலிருந்த மதுவை மண்ணின் மேல் ஊற்றி விடுகிருன். உருவம் விரைவாக நடந்து மகிழ மர நிழலுடன் கலந்துவிடுகிறது. அந்த இடமெல்லாம் கவிந்த மூடு பனியிலே சவத்தின் மீது சல்லா போர்த்தியது போலாகியது. காட்டுப் பறவைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக கத்துவது கேட்டது. பிகபாணனும் கத்தினுன். ஆனுல் அது ஒரு பாட்டாக அமைந்தது.]

பிக : (பாடினுன்.)

கிண்ணி நிகர் கண்ணே — உனது
கண்ணீர் மதுவையெல்லாம்
மண்ணிலே கொட்டிவிடு — வெள்விய
மல்லிகை பூத்திடவே!...

[இதற்கு மேல் அவன் கத்தலோ, பாட்லோ, அதிகப் பட்டுக் கொண்டு வந்த பறவைகளின் ஒலியிலே கேட்கவில்லை.]

## புதுவருஷ வாழ்த்து

வங்கத்தமிழன்.

வருக! வருக!
புது வருஷமே!
வெற்றிமாலைகொண்டு
வருக! வருக!

உள்ளமுரைக்குது
கள்ளமேதுமின்றி
மங்களத்தைக்கோரி
பள்ளொன்றுபாடிட

தருக! தருக!
தரணிமுழுதும்
தழைத்திடவின்பத்
தன்மைகள்யாவும்.

உலகமாமிந்தத்
தருவின் கிளைகளில்
பட்சிகள் பறந்து
எத்தனை வந்தன!

என்னென்னகீதங்கள்
அன்னவை பாடின!
அத்தனையுமின்றி
பழமையாயின!

நேற்றுநடந்தவை
பற்றிப்பின்போகிருர்

விந்தை மனிதர்கள்
சிந்தை சிறிதின்றி!

இன்பதுன்பங்கள்
விருப்பு வெறுப்பு

விம்மல்தும்மல்சேர்
வேகத்திவலையுளர்!

துக்கத்தைத் துரத்திக்
கண்ணீரைத் துடைத்துப்

புத்துணர்ச்சிகொண்டு
பாடின்றுமனமே.

விட்டுக்குவிடின்று
கட்டுக்கடங்காத

இன்பக்குறியொன்று
தோன்றுதுகீதத்தில்

நின்வெற்றிமாலையின்
வாசத்தினேர்துளி

நுகர்ந்திடவெண்ணி
நாடுதனுக்களெலாம்.

புவனமுழுவதும்
அன்புமாதரவும்

பொங்கிப்பொழிந்திட
வந்தருள் செய்க!

அச்சமுந்துன்பமும்
அழிந்திட, யெல்லோரும்

உச்சிநிலைபெற
இச்சையுடன் வருக!

நூதன ஜோதியே! .
புவனக் கோயிலின்

சோபன ரூபியே!
வருக! வருக!

புது வருடமே!
மகா புருடனே!

அபயகரமாட
ஆசிகூற வருக!


501
SPECIAL
Makes washing easy
501
SPECIAL
HOUSEHOLD SOAP
A TATA PRODUCT
THE TATA OIL MILLS CO. LTD., TATAPURAM & BOMBAY

# நாகய்யா நடிக்கும் தியாகய்யா



ராமுடு பாகவதர் அவர்களுடன் காட்சி யளிக்கிருர்

இவ்வருஷம் திருவையாற்றிலே நடைபெற்ற தியாகய்யர்வாள் உற்சவத்தின்போது ரேணுகா பிலிம்ஸார் மும்முரமாகச் சில இடங்களைப் படம் பிடித்திருக்கிருர்கள். ஸ்ரீ தியாகய்யர் அவர்களின் சகோதரரின் சந்ததியாரான ராமுடு பாகவதர் அவர்களுடன் இப்படத்தில் காட்சியளிக்கிருர்கள் பாருங்கள்.

ஸ்ரீ தியாகய்யரவர்கள் வசித்த வீடு இப்போதும் திருவையாற்றிலே இருக்கிறது. ராமுடு பாகவதர் அதிலே வசிக்கிருர். அந்த வீட்டையும் படம் பிடித்திருக்கின்றனர் ரேணுகா பிலிம்ஸார்.

இன்னும் ஐயரவர்கள் வாழ்க்கையில் தொடர்பு கொண்ட பல காட்சிகள்! ஸ்ரீ தியாகப் பிரும்மத்தின் சமாதி, ஐயரவர்கள் பூஜித்த விக்கிரகங்கள் முதலிய பலவற்றையும் இவர்கள் விட்டு படம் பிடித்திருப்பதிலிருந்து படத்தின் சிறப்பை நன்கு தெரிந்துகொள்ளலாம்.



ஸ்ரீ தியாகய்யரவர்கள் வசித்த வீடு



நாகய்யா

# நிர்விகற்ப சமாதி

'புதுமைப் பித்தன்'

ஸ்ரீமான் உலகநாத பிள்ளை பரம வேதாந்தி. தம்முடைய பரம்பரைத் தன்மைக்கு மாறாக சைவ சித்தாந்தத் தத்துவங்களை ஒதுக்கி, மட்டத்துச் சைவம் ஏகான்மவாதம் என்று ஒதுக்கிய அத்வைதத்துக்குள் தம்மை இழந்தார். ஊர்க் குருக்களையாவுக்கு அவரைக் கண்டால் பிடிக்காது. காரணம் அவரது ஏகான்மவாதம் அல்ல. பணம் இன்மை.

கிராமத்துத் தபாலாபீஸில் போஸ்ட் மாஸ்டராக உத்தியோகம் பார்ப்பதில் உள்ள சங்கடங்களும் சௌகரியங்களும் பல. எந்நேரத்துக்கு வந்தாலும் ஆபீஸ் மூடிவிட்டது என்று சொல்லி, தபால் பில்லைகள் விற்பதற்கு மறுக்க முடியாது. மாதத்தில் இருபத்தியொன்பது நாளும் தபால் தான் கிடையாதே என்று மத்தியானம் இரண்டு மணி சுமாருக்கு வெளியே நடந்துவிட முடியாது. வெற்றுப் பையை அரக்கு முத்திரை வைத்து ஒட்டி, 'ரன்னர்' எப்போது வந்து தொலைவான் என்று காத்திருக்க வேண்டும். அவனிடம் காலிப் பையைக் கொடுத்துவிட்டு, மற்றொரு காலிப் பையை வாங்கிக்கொள்ள வேண்டும்.

நிற்க, எப்போதோ ஏதோவென்று தபால் பெட்டியில் வந்து விழும் காகிதங்களை குருக்களையாவுக்கு வாசித்துக் காட்ட வேண்டும். குருக்களையாவுக்கு கடுதாசி வாசிக்கும் பழக்கம், பட்டணத்துக்காரரின் பேப்பர் படிக்கும் தன்மையை ஒத்திருந்தது என்று சொல்லவேண்டும். காந்திஜி பட்டினி கிடக்கிறார் என்றால் ஊரே அல்லோல கல்லோலப்படும்; பத்திரிகையும் மகாலிங்கய்யர் ஒட்டல் இட்டிலி மாதிரி விற்பனையாகும். ஆனால், அதற்காக ஊர்க்காரர்கள் எல்லாம் பட்டினி கிடந்து உயிரை விட்டு விடுவார்கள் என்பது அர்த்தமா? அப்படி ஒன்றும் ஆபத்து நேர்ந்து விடாது இந்தத் தமிழ் நாட்டிலே. சட்டத்தின் பேரிலும் ஒழுங்கின் அடிப்படையிலும் பிரிட்டிஷார் 150 வருஷங்களாகக் கட்டி வைத்த ஏகாதிபத்தியக் கோயில் தமிழ் நாட்டாரின் ஆவேசத்தினால் ஆட்டமெடுத்து விடாது. திலகர் கட்டத்தில் கூடி நீண்ட பேருரைகள் செய்வோம்; நீண்ட அறிக்கைகள் வெளியிடுவோம்; கோழைத்தனத்துக்கு அஹிம்சைப் போர்வை போர்த்திக்கொள்ளுவோம்; கருத்து வேற்றுமைகளை நயமாக சுசிப்பிப்போம்; ஆவேசம் காட்டிய "ஒரு சிலர்" கொலை, ஆபத்தில்லையெனவும், சௌகரியம் உண்டு எனவும் பொழிந்து பாராட்டுவோம்; தனிப்பட்ட முறையில் 'இந்தப்பசங்களே இப்படித்தான் சார்' என்று சொல்லுவோம்; இதற்கெல்லாம் பேப்பர் அவசியம்! மேலும் ஹோர்ம் மாத்திரைக்கு விலாசம் தெரிந்து கொள்ள பேப்பர் ரொம்பவும் முக்கியம். இதே மாதிரிதான் குருக்களையாவுக்கு வேற்றூரின் கடுதாசிகளும் கார்டுகளும்.

உலகநாத பிள்ளைக்கு சோம்பல் ஜாஸ்தி; அதனால் தான் கடுதாசி படிக்கும் வழக்கம் வேப்பங்காய்.

குருக்களையா வந்துவிட்டார் என்றால் ஐயாவுக்கு சிம்ம சொப்பனந்தான்.

வரும்போதே, "என்னவே, அந்த மேலத் தெரு கொசப் பய, பணத்துக்கு எழுதினானே, பதில் வந்ததா?" என்று கேட்டுக்கொண்டு தான் நடைப்படியை மிதிப்பார். 'மேலத் தெரு கொசப் பயல்' என்று சூட்சுமமாகக் குறிப்பிடுவது சுப்பையர் என்ற மூக்காணிப் பிராமணனைத்தான்.

தென்னாட்டில், திருச்செந்தூர் பிராமணர்கள் முன் குடுமி வைத்திருப்பார்கள்; குலத் தொழிலில் ஈடுபட்டுள்ள வகுப்பினரும் முன் குடுமி வைத்திருப்பார்கள். இதனால் தான் இந்த ஏச்சு.

நிற்க, ஸ்மார்த்தர்கள் யாவரும் ஏகான்ம வாதிகள்; ஆகையால் அவர்களை வைவது சங்கர சித்தாந்தத்தை நோக்கி எய்யும் பாசுபதாஸ்திரம் என்பது குருக்களையாவின் அந்தரங்க நம்பிக்கை. இம்மாதிரி சொல்வதால் இவரை சைவசித்தாந்த பவுண்டுக்குள் அடைத்து விடலாம் என்பது அதற்கு அடுத்தபடியான நம்பிக்கை.

உலகநாத பிள்ளைக்கு இது தைக்காது; ஏனென்றால், சுப்பையரிடம் ஏதோ பாக்கி தண்டவேண்டும் என, சென்ற பத்து வருஷங்களாக குருக்களையா சொல்லிவரும் புகார், மனசை அந்தத் திசையிலேயே திருப்பிவிடும்.

சுப்பையர் ஏன் பணத்துக்கு கடிதம் எழுத வேண்டும்? அதற்கு இதுவரை பதில் ஏன் வராதிருக்க வேண்டும் என்பதைப் பற்றி உலகநாதபிள்ளை சிந்தித்தது கிடையாது. சிந்திக்கும்படி மனம் தூண்டியதும் கிடையாது. வேலாயுதத் தேவரின் தாயார் மருதி, கொளும்பில் உள்ள தன்

பேரனுக்கு முக்காலணா கார்டில் மகாபாரதத்தில் ஒரு சர்க்கத்தையே பெயர்த்து எழுதுகிற மாதிரி, ஒருமாத விவரங்களை எழுதுவதற்கு பிள்ளையவர்கள் வீட்டு நிழலை அண்டி நிற்பதும் அதை எழுதி முடிப்பதை ஹட யோகஸித்தியாக நினைத்து பெருமைப்படுவதுடன் மறந்துவிடுவதும் பிள்ளையவர்கள் குணம்.

அதேமாதிரிதான் வேலாயுதத் தேவரின் எதிர்வீட்டு பண்ணையரான தலையாரித் தேவரின் தேவைக்கும் ஊரில் உள்ள கேட்லாக்குகளை எல்லாம் வாங்கிக் கொண்டுவந்து, சாம்பிள், காலண்டர் இனும் என்று இடங்களுக்கு எல்லாம் காலணா கார்ட் காலத்திலிருந்து முக்காலணா கார்ட் சகாப்தம் வரை எழுதித் தீர்த்துக் கொண்டிருக்கும் வைபவத்துக்கு உலகநாத பிள்ளையின் ஒடிந்துபோன இங்கிலீஷ் அத்யாவசியம். பூர்வஜென்மாந்திரவாசனை போல எங்கோ உள்ளூர ஒட்டிக்கொண்டிருக்கும் ஷெப்பர்ட் இலக்கண பாஷைப் பிரயோகத்தை அனுசரிப்பதாக நினைத்து ரிலீப் நிப் பேனா வைத்து வாட்டசாட்டமாக உட்கார்ந்து எழுதி, தபாலை எடுத்து வந்து பையில் போட்டு, அரக்கு முத்திரை வைத்து ஊர் வழி அனுப்புவது உலகநாத பிள்ளையின் கடமை. பிறகு ஒரு வாரமோ அல்லது பத்து நாளோ கழித்து ரன்னர் மத்யானம் இரண்டு மணிக்குக் கொண்டுவரும் பட்டணத்துக் கடுதாசி வைபவங்களைக் கொண்டுபோய் தேவரவர்கள் சன்னிதானத்தில் காலட்சேபம் செய்யவேண்டும். இங்கிலீஷ் வருஷ முடியும் கட்டம் வந்துவிட்டால், அதாவது டிஸம்பர் மாதத்தில் உலகநாதபிள்ளையின் 'இலக்கிய சேவைக்கு' ரொம்ப கிராக்கி உண்டு. பண்ணைத் தேவர் வாங்கின ரவிவர்மாப் படம்போட்டு வெளியான காலண்டர் நன்றாக இருந்து விட்டால், டி கம்பெனிக்கு இன்னும் சில கடிதங்கள் எழுத வேண்டியேற்படும். ஆனால் அவற்றிற்கு இந்தப் பத்து வருஷங்களாக பதில் வராத காரணம் உலகநாத பிள்ளைக்கு புரியவில்லை. ஏக காலத்தில் பல விலாசத்தில் ஒரே கையெழுத்தில் இலவச காலண்டர்களுக்கும் சாம்பிள்களுக்கும் கடிதம் போனால் கம்பெனிக்காரன் சந்தேகப்படக் கூடுமே என்பதை உலகநாத பிள்ளை அறிவார். அவ்வாறு அறிந்திருந்ததினால்தான் ஒவ்வொரு கடிதத்தின் கீழும், 'கடிதம் எழுதுகிறவருக்கு காலண்டர் தேவை இல்லை. விலாசதாரர்களுக்கு இங்கிலீஷ் தெரியாததினாலும், தாம் ஒருவர் மட்டுமே அந்த பாஷையை அறிந்தவரானதினாலும், அவர்களுக்காக கடிதம் எழுதவேண்டியிருக்கிறது' என்பதை ஸ்பஷ்டமாகக் குறிப்பிடுவார். அப்படி எழுதியும் அந்தக் கம்பெனிக்காரர்கள் நம்பாத காரணம் அவருக்குப் புரியவில்லை. ஆனால் பண்ணையாருக்கு தவிர வேறு யாருக்கும் அச்சடித்த படம் எதுவும் வந்தது கிடையாது.

இதிலே கொஞ்ச நாள் உலகநாத பிள்ளை பேரில் சந்தேகம் ஜனித்து, அவர் தபால் பைக்குள் கடிதங்களைப் போட்டு முத்திரையிடும் வரை ஒரு கோஷ்டி அவரைக் கண்காணித்தது. கடிதத்தை அவர் கிழித்தெறிந்துவிட்டு பண்ணையாருக்குப் போட்டியாக வேறு யாரும் ஏற்பட்டுவிடாதபடி பார்த்துக் கொள்ளுகிறாரோ என்ற சந்தேகம் அர்த்தமற்ற சந்தேகமாயிற்று. அதன் பிறகுதான் பண்ணைத் தேவர் அதிர்ஷ்டசாலி என்ற நம்பிக்கை ஊர் ஜனங்களிடை பலப்பட்டது. அவர் எடுத்த காரியம் நிச்சயமாக கைகூடும் என்று ஊர் ஜனங்கள் நினைப்பதற்கு இந்தக் காலண்டர் விவகாரமே மிகுந்த அனுசரணையாக இருந்தது. இதன் விளைவாக விதைப்பதானாலும், வீடு கட்டுவதானாலும் தேவரின் கைராசி நாடாத ஆள் கிடையாது.

பண்ணைத்தேவர் பண்ணைத் தேவரல்லவா; இந்த விவகாரங்களில் எல்லாம் ஜனங்களின் ஆசைக்கு சம்மதித்து இடம் கொடுப்பது, தமது அந்தஸ்துக்கு குறைவு என்று நினைத்தார். உலகநாதபிள்ளையின் கைராசி என்றும் கடிதம் எழுதும் லக்னப் பொருத்தமே அதற்குக் காரணம் என்றும் சொல்லித் தட்டிக் கழித்துப் பார்த்தார். நம்பிக்கையும் வெறுப்பும் கொடுக்கல் வாங்கல் விவகாரமா? நினைத்தால் நினைத்த நேரத்தில் மாறக்கூடியதா?

உலகநாதபிள்ளை இவ்வளவு செய்கிறாரே இத்தனை வருஷ காலங்களில் தமக்கு என்று சொந்தமாக ஒரு காலணா செலவழித்து கார்ட் எழுதியது கிடையாது. இப்போது முக்காலணா கார்ட் யுகத்தின் போது கடிதம் எழுதிவிடப் போகிறாரா?

குருக்களையாவின் சேர்க்கையினால் அவருக்கு ஊர் விவகாரமும் முழுவதும் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் அதுதான் அவருக்குத் தெரியாது. ஏன்! சொல்லப் போனால் அவருடைய சொந்த வீட்டு விவகாரமே தெரியாது.

சர்க்கார் கொடுக்கும் சம்பளம் ஜீவனத்துக்கு போதுமா? அதற்குள் ஜீவனம் நடத்த முடியுமா என்று அவர் சிந்தித்தது கிடையாது. சிந்திக்க முயன்றதும் கிடையாது. எல்லாம் மாயை; உள்ளூர நிற்கும் ஆத்மா மாசுபடவில்லை. தான் வேறு இந்த மாயை வேறு. தான் இந்தப் பிரபஞ்சத்தை ஆட்டி வைக்கும் சக்தியின் ஒரு அம்சம் என்று திடமாக நம்பியிருந்தார். ஏனென்றால், அவரது ஆத்ம விசாரத்தை சோதனை போட்டுப் பார்க்க, இதுவரை தெய்வத்துக்கோ, மனுஷனுக்கோ அவகாசம் கிடைத்ததில்லை. மனுஷ வர்க்கம் முழுவதுமே தன்னைப் படைத்தவனுடைய தன்மையை ஸ்புடம்போட்டுப்பார்ப்பதுபோல தவறுக்குமேல், தவறு செய்து கொண்டிருந்தும் அவர்களை பொருட்படுத்தாது நின்ற கடவுள், ஏதோ எப்போதோ ஒரு சங்கரர் சொன்னதை உலகநாத பிள்ளை வாஸ்தவமாக நம்புகிறாரா? இல்லையானால் சோதிக்கவா மூட்டைக் கட்டிக்கொண்டு வரப் போகிறார்?

கடவுள் தமது நம்பிக்கையை பரிட்சை பண்ணி சுமார் முப்பத்தி ஐந்து சத விகிதமாவது பாஸ் மார்க்கெடுக்க வர வேண்

டும் எனவோ அல்லது வருவார் எனவோ எதிர்பார்த்தது கிடையாது.

வராமலிருக்க வேண்டுமே என அவர் எதிர்பார்ப்பது எல்லாம் இரண்டுபேரைத்தான். ஒன்று ரன்னர், இரண்டாவது குருக்களையர். ரன்னரைக்கூட சமாளித்துவிடலாம்; குருக்களையாவை சமாளிக்கவே முடியாது.

அன்று நால்வர் ஏககாலத்தில் வந்து சேர்ந்தார்கள். "ஐயாவோ" என்று கூப்பாடு போட்டுக் கொண்டு வெளியே வந்து நின்ற ரன்னர் முத்தையா தொண்டைமான்.

இரண்டாவது ஆசாமி கார்டும் கவர் கூடும் வாங்க வந்த சுப்பையர்.

மூன்றாவது ஆசாமி குருக்களையர். அவர் தமது வழக்கப் பிரகாரம் 'பத்திரிகை' படிக்க வந்திருந்தார்.

நாலாவது ஆசாமி ஏதோ ஊருக்குப் புதிது. பட்டணத்துப் படிப்பாளி போல இருந்தது. சுமார் நாற்பது நாற்பத்தி ஐந்து வயசிருக்கும். அவரும் ஏதோ ஸ்டாம்பு வாங்குவதற்காக உலகநாதபிள்ளை வீடு தேடி வந்து வெளியில் சைக்கிளை சாத்திவிட்டு உள்ளே நுழைந்தார்.

"யாரது?" என்று கேட்டார் உலகநாத பிள்ளை.

"ஸ்டாம்பு வேணும். வாங்கலாம் என்று வந்தேன்" என்றார் வந்தவர்.

"என்னடே முத்தையா கடுதாசி எதுவும் உண்டுமா?" என்று முழங்காலைத் .தடவினார் குருக்களையா.

"எனக்கென்ன் தெரியும்? பைக்குள்ள என்னவோ, ஆனா எசமானுக்கு சர்க்கார் கடுதாசி வந்திருக்கு" என்றான் முத்தையா.

"பிள்ளைவாள், நமக்கு ஒரு காலணா கார்ட் குடுங்க; கடையிலே யாருமில்லே; சுருக்கா போகணும்" என்றார் சுப்பையர்.

"சுப்பையர்வாள்! என்னமோ செவல்காரன் உங்கள் பாக்கியை குடுத்துடுவான்னு விடேன்தொடேன்னு கடுதாசி எழுதினியளே, பாத்திரா? ஒரு பதில், உண்டு, இல்லை என்று வந்துதா?" என்று அதட்டினார் குருக்களையா.

"நான் எழுதினது உமக்கு எப்படித் தெரியும்; பதில் வரவில்லை என்று உமக்குக் கெவுளி அடித்ததோ" என்றார் சுப்பையர்.

"ஊர்த் தபால் எல்லாம் உலகநாத பிள்ளை வாசல் வழியாகத்தான் போகவேண்டும்! தெரியுமா? எனக்குக் கெவுளி வேறே வந்து அடிக்கணுமாக்கும்!" என்றார் குருக்களையா மிதப்பாக

"தாலூக்கா எசமானை மாத்தியாச்சு; நாளைக்குப் புது ஐயர் வராரு; இங்கே நாளண்ணைக்கி செக்குப் பண்ண வருவாகண்ணு சொல்லுக்கிடுராவ" என்றான் முத்தையா.

"அது யாருடா புது எஜமான்!" என்று சற்று உறுமினார் குருக்களையா.

"போடுகிற கடுதாசியை யெல்லாம் படிக்கிற வழக்கமுண்டா" என்று புதியவர் உலகநாத பிள்ளையை வினயமாகக் கேட்டார்.

"நாங்க படிப்போம், படிக்கலை; நீர் யார் கேட்கிறதுக்கு. படிக்கிறோம்; நீர் என்ன பண்ணுவீர்; ஏன் பிள்ளையவாள், மக்காந்தை மாதிரி உக்காந்திருக்கீர்; தபால் ஸ்டாம்பு குடுக்கமுடியாதுன்னு சொல்லி அய்யாவெ வெளியேற்றும்" என்று அதட்டினார் குருக்களையா.

"நீங்க சும்மா இருங்க; ஸார் ஸ்டாம்பு ஸ்டாக்கு ஆயிட்டுது. கையிலே இரண்டு ஒரணா ஸ்டாம்புதானிருக்கு; கார்டு தரட்டுமா?" என்றார்.

"ஏன் முன் கூட்டியே வாங்கி வைக்கவில்லை?" அதட்டினார் வந்தவர்.

"என்னவே அதட்டுரே?" என்று பதில் அதட்டு கொடுத்தார் குருக்களையா.

"ஏனா, நான் தான் புது போஸ்ட்மாஸ்டர்; உம்மை செக் பண்ண வந்தேன். உம்ம மீது 'பிளாக் மார்க்' போட்டு வேலையை விட்டு நீக்க ஏற்பாடு செய்கிறேன்; கடுதாசி படிக்கிற வழக்கமா?" என்றார் புதியவர்.

"எனக்குக் குத்தம் என்று படல்லே; இது வரை புகார்....."

"பரம ஏகாந்ம வாதமோ....... பகிர் நோக்கு இல்லையாக்கும்" என்று குத்தலாகக் கேட்டார் புதியவர்.

"நான் அப்பவே இந்த ஏகாந்ம மாயா வாதம் வேண்டாம் என்று சொன்னேனே; கேட்டீரா; இனிமேலாவது......" என்று தலையில் அடித்துக் கொண்டார் குருக்களையர்.

உலகநாத பிள்ளை பகிர்முக மற்று பேச்சற்று நிர்விகற்ப சமாதியில் ஒடுங்கினார். அந்த மௌனத்திலும் தம் நட்டத்தை குற்றம் என்று படவில்லை அவருக்கு.

"என்ன பிள்ளையவாள்! அந்தப் பய காலண்டர் அனுப்பலியே" என்று கேட்டுக் கொண்டே, வேலாயுதத் தேவர் உள்ளே நுழைந்தார்.

எல்லாரும் மௌனம் சாதிப்பது கண்டு, "என்ன விசேஷம்?" என்றார்.

"இவுகதான் புதுசா தாலுகாவுக்கு வந்த போஸ்ட் மாஸ்டராம்! உலகநாத பிள்ளை வேலையெ போக்கிடுவோம் என்று உருக்குதாவ" என்று ஏளனம் செய்தா குருக்களையா.

"இவுகளா? சதி. இந்த ஊரு எல்லையெத் தாண்டி கால் வச்சாத்தானே நம்ப அய்யாவுக்கு வேலை போகும். இங்கே வேலாயுதத் தேவன் கொடியல்ல பறக்குது" என்று துண்டை உதறிப் போட்டுக் கொண்டு மீசையில் கை வைத்தார் வேலாயுதத் தேவர்.

"ஊர் எல்லை தாண்டினாத்தான் என் அதிகாரம்; நான் போகணும்னு அவசியம் இல்லெ; என் பொணம் போனாலும் போதும்" என்றார் புதியவர்.

"மயானத்துக்குக் கால் மொளைச்சு நடந்துபோன காலத்தில் பாத்துக்குவம்; இப்ப, பேசாமே சோலியெ பாத்துக்கிட்டு போம்!" என்றார் தேவர்.

"சதி, சதி விடுங்க. குருக்களையர்வாலே இவ்வளவும். எவனையா வேலெ மெனக்கட்டு வேறொருத்தன் கடுதாசியைப் படிப்பான்" என்றார் சுப்பையர்.

# பொங்கல் கட்டுரை

க. நா. சுப்பிரமணியம்

பொங்கல் இதழுக்குக் கட்டுரை எழுதித்தான் ஆகவேண்டும் என்றும், எதைப்பற்றி எழுதுவது என்றும், வழக்கம் போலவே, சிந்தனையில் ஆழ்ந்தேன். பொங்கல் இதழுக்குப் பொங்கல் கட்டுரையே சிறந்தது என்று தீர்மானிக்க வெகு நேரம் ஆகவில்லை.

பொங்கல் கட்டுரை எழுதுவது மிகவும் சுலபம் என்றுதான் தோன்றுகிறதில்லையா? பொங்கலைப் பற்றி ஏதாவது வேடிக்கையாக விந்நியாசமாக அர்த்தபுஷ்டியாக நாலு வாக்கியங்கள் எழுதிவிட்டால் பொங்கல் கட்டுரை முடிந்துவிடும். வேடிக்கையாகவும் விந்நியாசமாகவும் அர்த்தபுஷ்டியாகவும் எழுதுவது சுலபம்தான் என்று தோன்றுகிறதில்லையா?

ஆனால் அதுவும் அப்படி ஒன்றும் சுலபம்போலத் தோன்றவில்லையே, அப்படிச் சுலபமாக இருந்திருந்தால் நீங்களே இந்தக் கட்டுரையை எவ்வளவு அழகாக, அற்புதமாக, எழுதி முடித்திருப்பீர்கள் என்று கட்டுரையைப் படித்து முடித்துவிட்டு வாசகர்கள் கேட்கலாம். ஆனால் நான் தான் கட்டுரையை இன்னும் எழுதியே முடிக்கவில்லை; நீங்கள் எப்படிப் படித்து முடித்திருக்கமுடியும்?

நன்றாயில்லை, 'சே' என்று சப்புக் கொட்டத்தயாராக இருக்கும் விமரிசகர்களிடமிருந்தும் தப்புவதற்குச் சரியான வழி ஒன்று தோன்றுகிறது எனக்கு, கட்டுரையைப் படித்து முடித்தால் தானே நன்றாயில்லை என்று சொல்லலாம்—முடிக்காத வரையில் இப்படித்தான் இருக்கும், போகப் போக அற்புதமாக இருக்கும் என்ற நம்பிக்கை பிறக்கும்படியாக எழுதிக்கொண்டே இருக்கலாம் அல்லவா?—முடியாத கட்டுரை ஒன்றை எழுத முடியாதா என்ன? கட்டுரை முடிந்தபின் தானே விமரிசகன் நின்று விமரிசனம் செய்ய முடியும்!

எப்படி என் யோசனை?

ஆனால் என் யோசனை முற்றிலும் எனக்கே சொந்தமானது என்று சொல்வதற்கில்லை. தமிழ் நாட்டுப் பத்திரிகை உலகில் உலவிவரும் திருட்டுச் சரக்குகளைப் போலவே (முழுவதுமல்ல, சற்றே, லேசு) திருட்டுச் சரக்குத்தான் என்று ஒப்புக்கொள்ளுகிறேன்.

இந்த யோசனையை நான் சொல்வதற்குமுன்...யார் சொல்லிச் செய்திருக்கிறார்கள், தெரிகிறதா? சொல்லுங்கள் பார்க்கலாம்.

கடவுள் என்கிற பேராசிரியன் காலம் என்கிற முடிவில்லாத கட்டுரையை எழுதி நம்மை எல்லாம் வாயடைத்துப் போகச் செய்திருக்கிறானே; அதைத்தான் குறிப்பிடுகிறேன்.

காலத்தை விமரிசனம் செய்ய யாராலாவது முடியுமா? முடிந்தால் தான் அது சரியான விமரிசனம் என்று யாராவது ஒப்புக்கொள்வோமா?

காலத்தைப் பல பகுதிகளாகவும், நூற்றாண்டுகளாகவும் பகுத்து ஒவ்வொரு பகுதியையும் பற்றி பாரத காலம் என்றும், கிறிஸ்தவர் காலம் என்றும், தனித்தனியே விமரிசனம் செய்ய முயன்றிருக்கிறார்கள். இவர்களை நாம் சரித்திராசிரியர்கள் என்று சொல்லுகிறோம்.

காலத்தை வேறு விதமாகப் பகுத்து கலிகாலத்திலே சத்ய யுகத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பவர்களை நாம் மகாத்மாக்கள் என்றும், கவிகள் என்றும் சில சமயம் பைத்தியக்காரர்கள் என்றும் போற்றுகிறோம்.

சாதாரண மனிதர்களுக்கு என்று வேறுவிதமான பாகுபாடும் உண்டு—போறாத காலம் என்றும், கலிகாலம் என்றும் பகுதிகள் உண்டு. போறாத காலத்திற்கு எதிரிடையாக நல்ல காலம் என்று ஒன்று இருக்கிறது என்று தத்துவாசியர்கள் எவ்வளவு தான் சத்தியம் செய்தாலும் அதை ஒப்புக்கொள்ள சாதாரண மனிதன் தயாராக இருப்பதில்லை.

நண்பர் ஒருவர் சொல்லுகிறார்—"காலத்துக்கு அதெல்லாம் சரியான விமரிசனம் அல்ல. என் கைக் கெடியாரமே சரியான விமரிசனம். மற்ற கெடியாரங்களில் பன்னிரண்டு மணியாகும்போது என் கெடியாரத்தில் ஒன்பது இருபத்தைந்து ஆகும். மாலையில் மணி நாலு என்று மற்ற கெடியாரங்கள் சொல்லும்போது, என் கெடியாரத்தில் மணி ஆறேகால் ஆகியிருக்கும். நான் நினைத்துப் பார்க்க நினைத்துப் பார்க்க இதுவே காலத்துக்கு மிகவும் சிறந்த விமரிசனம் என்று தோன்றுகிறது.



வில்லினை யெடடா—கையில்
வில்லினை யெடடா—அந்தப்
புல்லியர் கூட்டத்தைப் பூழ்தி செய்திடடா. (வில்லினை)

வாடி நில்லாதே;—மனம்
வாடி நில்லாதே;—வெறும்
பேடியர் ஞானப் பிதற்றல் சொல்லாதே. (வில்லினை)

பாரதியார்.


K.R.SARMA
SPARTAN&C.


60c

# சிவாஜி படை எழூச்சி

மானமொன் றறியா ஞானமெய்ப் பூமி!
வானவர் விழையு மாட்சியார் தேயம்!
பாரத நாட்டிசை பகர யான் வல்லனோ?
நீரதன் புதல்வர்; இந் நினைவகற்றா தீர்!

தாய்த்திரு நாட்டைத் தறுகண் மிலேச்சர்,
பேய்த்தகைகொண்டோர், பெருமையும் வன்மையும்
ஞானமு மறியா நவைபுரி பகைவர்,
வானக மடக்க வந்திடு மரக்கர் போல்

இந்நாட் படைகொணர்ந் தின்னல்செய் கின்றார்!
ஆலய மழித்தலு மருமறை யொழித்தலும்
மாதர்கற் பழித்தலும் மறையவர் வேள்விக்
கேதமே சூழ்வது மியற்றிநிற் கின்றார்!

சாத்திரத் தொகுதியைத் தாழ்த்து வைக்கின்றார்!
கோத்திர மங்கையர் குலங்கெடுக் கின்றார்!
எண்ணில துணைவர்காள்! எமக்கிவர் செயுந்துயர்:
கண்ணிய மறுத்தனர்; ஆண்மையுங் கடிந்தனர்;

பொருளினைச் சிதைத்தனர்; மருளினை விதைத்த
[னர்;
திண்மையை யழித்துப் பெண்மையிங் களித்தனர்;
சோதரர் தம்மைத் துரோகிக ளழிப்ப
மாதர் நலத்தின் மகிழ்பவன் மகிழ்க!

நாடெலாம் பிறர்வசம் நண்ணுதல் நினையான்
வீடுசென் றொளிக்க விரும்புவோன் விரும்புக!
பாசமே பெரிதெனப் பார்ப்பவன் செல்க!
நாட்டுளார் பசியினால் நலிந்திடத் தன் வயி

றூட்டுதல் பெரிதென உன்னுவோன் செல்க!
ஆணுருக் கொண்ட பெண்களு மலிகளும்
வீணிலிங் கிருந்தெனை வெறுத்திடல் விரும்பேன்.
ஆரிய ரிருமின்! ஆண்களிங் கிருமின்!

வீரிய மிகுந்த மேன்மையோ ரிருமின்!
மானமே பெரிதென மதிப்பவ ரிருமின்!
ஈனமே பொருத வியல்பின ரிருமின்!
தாய்நாட் டன்புறு தனையரிங் கிருமின்!

மாய் நாட் பெருமையின் மாய்பவ ரிருமின்!
புலையர்தம் தொழும்பைப் பொறுக்கிலா ரிருமின்!
கலையறு மிலேச்சரைக் கடிபவ ரிருமின்!
ஊரவர் துயரில்நெஞ் சுருகுவீ ரிருமின்!

சோர நெஞ்சிலாத் தூயவ ரிருமின்!
தேவி தாள்பணியுந் தீரரிங் கிருமின்!
பாவியர் குருதியைப் பருவா ரிருமின்!
உடலினைப் போற்றா வுத்தம ரிருமின்!

கடல் மடுப்பினுமனங் கலங்கல ருதவுமின்!
வம்மினோ துணைவீர்? மருட்சி கொள்ளாதீர்!
நம்மினோ ராற்றலை நாழிகைப் பொழுதெனும்
புல்லிய மாற்றலர் பொருக்கவல் லார்கொல்?

மெல்லிய திருவடி வீறுடைத் தேவியின்
இன்னருள் புகழுடைப் பார்த்தனும் கண்ணனும்
வீமனும் துரோணனும் வீட்டுமன் றானும்
ராமனும் வேறுள இருந்திறல் வீரரும்

நற்றுணை புரிவர்; வானக நாடுறும்;
வெற்றியே யன்றி வேறெதும் பெறுகிலேம்.
செற்றினி மிலேச்சரைத் தீர்த்திட வம்மின்!

பாரதியார்.



# திருப்பூர் வீரன்



வீரத்தியாகி திருப்பூர் குமரன். 1932-ம் ஞு ஜனவரி 11-ந் தேதி
தேசப்பணியில் போலீஸ் குண்டாந்தடிக்குப் பலியானர்
வாழ்க குமரன் நாமம்!

காலத்தை அளக்க கெடியாரம் என்று ஒன்று கண்டு பிடித்ததே மனிதனுடைய அறியாமைக்கு மிகவும் சிறந்த விமரிசனமாக அமைகிறது. இந்த அறியாமைக்கு ஈடாக வேறு ஓர் அறியாமையைச் சொல்ல வேண்டுமானால் பஞ்சாங்கத்தையும் காலண்டரையும் தான் சொல்லலாம்.

பஞ்சாங்கத்தையும் காலண்டரையும் பற்றிச் சொல்ல நிறைய இருக்கிறது. ஆனால் வேண்டாம். பொங்கல் கட்டுரை இனிப்பாகவே இருக்கட்டும்.

ஆனால் இனிப்பில்லாத பொங்கல்களும் உண்டு என்று தான் சொல்லவேண்டும். ஏழைகளின் பொங்கல், அவர்கள் அந்த சமயத்துக்கு எவ்வளவு தான், எப்படித்தான், எதைத் தான் மறந்துவிட்டுக் குதூகலிக்க முயன்றாலும் எப்போதுமே இனிப்பில்லாததாகத் தான் இருக்கிறது. அரிசிப் பஞ்சம் வருமோ, அடுத்த பொங்கல் என்னவாகுமோ என்று எண்ணும்போது பகீர் என்கிறது. சமீபத்தில் உற்றார் உறவினர்களைப் பறிகொடுத்தவர்கள் பொங்கல் கொண்டாடக் கூடாது என்பது நியாயமாகத்தான் தோன்றுகிறது.

ஆனால் இதை எல்லாம் மனசில் வைத்துக்கொண்டு, சில சமயம் பொங்கல் விழாவே 'இனிப்பில்லாத' விழாவாகப் போகும்போது என் கட்டுரை மட்டும் இனிப்பாக இருக்கவேண்டும் என்று சொல்வது என்ன நியாயம் என்று கேட்டால் நண்பர்கள் சண்டைக்கு வரக்கூடும். இனிக்காத கட்டுரை எழுதுவதை விட, எழுதாமலேயே இருந்து விடுவது நல்லது என்று எனக்கு வற்புறுத்துவார்கள். அவர்கள் செய்வதும் சரிதான்.

பொங்கல்களிலே — அதாவது சாப்பிடுகிற பொங்கல்களிலே இனிப்பான பொங்கல்களும் உண்டு; இனிக்காத பொங்கல்களும் உண்டு. நான் சென்னைக்கு வந்துசேரும் வரையில் கசக்கிற பொங்கல் கிடையாது என்று தான் எண்ணிக் கொண்டிருந்தேன்.

புத்தனும் ஏசுவும் மற்றும் பல மகாத்மாக்களும் வாழ்க்கையில் உள்ள பல அனுபவங்களையும் சிந்தித்துச் சிந்தித்தே கரை கண்டு ஒரு வாழ்க்கை வழியை ஸ்தாபிக்க முயன்றிருக்கிறார்கள். காலை வேளையில், 1945-ல், சென்னை ஹோட்டல்களில் இட்டிலி சட்டினிக்காகக் காத்துக் கொண்டிருக்கும் அனுபவம் அவர்களுக்கும் ஏற்பட்டிருக்குமேயானால் அவர்கள் வகுத்த வாழ்க்கை வழி இன்று உபயோகமற்றதாகப் போயிராது என்றே நான் நினைக்கிறேன்.

பார்த்தீர்களா? உங்கள் பொங்கல் விழாவைப் போலவே, என் பொங்கல் கட்டுரையும் சாப்பாட்டிலேதான் முடிகிறது.

சாப்பாடு என்கிற விஷயம் நேரடியாகக் கட்டுரையில் வந்துவிட்டதல்லவா? சாப்பாட்டைப் பற்றி எழுதியதினால் சமீபகாலத்தில் எனக்கு நேர்ந்த ஓர் அனுபவத்தை இங்கு சொல்ல விரும்புகிறேன்.

'சாப்பாட்டுராமன்' என்று சில மாசங்களுக்குமுன் நான் ஒரு பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதினேன். சென்ற ஏழெட்டு வருஷங்களில் நான் பல அற்புதமான (ஆச்சரியப் படாதீர்கள்) கதைகளும் கட்டுரைகளும் எழுதியிருக்கிறேன். அவற்றை யாரும் படித்ததாகவே தெரியவில்லை; யாரும் பாராட்டியோ அல்லது குறை கூறியோ ஒரு வரிகூட எனக்கு எழுதியது கிடையாது. அப்படியிருக்க இந்த சாப்பாட்டு ராமன் கட்டுரையை மட்டும் யாரோ ஒருவன்—அவனைச் சாப்பாட்டு ராமன் என்று சொல்லலாமா?—"சே; இவ்வளவு நல்ல விஷயத்தைப் பற்றி இவ்வளவு மட்டமாகச் சொல்லியிருக்கிறீர்களே! நீங்களும் ஆசிரியரா?" என்று மறுதபாலிலேயே ரோஷமாக எனக்கு ஒரு கண்டனம் எழுதியிருந்தான்.

எதற்காகச் சொல்ல வந்தேன் என்றால், தமிழ் நாட்டிலே விழாக்களுக்கும் சாப்பாட்டு ராமன்களுக்கும் எப்போதுமே பஞ்சம் இருந்ததில்லை. இப்போது வேறு என்னதான் பஞ்சம் வந்தாலும், விழாக்களுக்கும் சாப்பாட்டு ராமன்களுக்கும் மட்டும் பஞ்சமே வராது.

என் கட்டுரையைக் கண்டித்து வந்த கடிதத்திலே இன்னொரு விஷயமும் கண்டிருந்தது. நான் அப்போது சிதம்பரத்தில் வாசித்துக்கொண்டிருந்தேன். "சிதம்பரத்தில் இருக்கிறீர்களே, அந்தக் கல்கண்டுப் பொங்கலும் வெண்பொங்கலும் சாப்பிட்டதுண்டா நீங்கள்? சாப்பிட்டிருந்தால் ஏன் அது பற்றிக் கட்டுரையில் எழுதவில்லை? சாப்பிடாவிட்டால், நீங்களும் மனிதன் தானா? என்று கேட்கிறேன்" என்று கேட்டிருந்தான் சாப்பாட்டுராமன், அந்தக் கடிதத்தில்.

ஆமாம், தவறுதான். சாப்பாட்டுராமன் கட்டுரையில் விட்டுப்போன பொங்கல் விஷயத்தை இங்கு பொங்கல் கட்டுரையில் எழுதி விடுகிறேன். முன் ஒரு காலத்தில் ஒரு கவி "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே" என்று எழுதி வைத்தது கல்கண்டுப் பொங்கலையும், வெண் பொங்கலையும் உத்தேசித்துத்தான் என்பதே தீர்மானமான என் சரித்திர சமய ஆராய்ச்சி முடிவு.



# அபரஞ்சீயின் பச்சை

'பாசரக'

அபரஞ்சி ஆதி திராவிடப் பெண். எங்களுடைய பண்ணைக்கார்ரன் மகள். நல்ல கறுப்பு நிறம். இருந்தாலும் உலகத்திலுள்ள மற்ற எல்லாப் பெண்களையும் விட அவள் தான் அதிக அழகி என்பது என் அபிப்பிராயம். அவள் முகத்தினழகைக் கண்டு மயங்காதவர்கள் யாருமில்லை. ஆனால் அவளுக்கு என் மீது தான் அத்தியந்தப் பிரேமை. வயலில் வேலை செய்யும் ஒரு குடியானப் பெண் தன் எஜமானன் மகன் மீது ஒரு தனிப்போக்கான அன்பு கொண்டிருந்தாள் என்றால் ஆச்சரியம் தான். சமூகம் என்னையும் அவளையும் ஒன்று சேர்க்காது என்பது எனக்கு அப்பொழுது தெரியாது. எனக்கும் அவளுக்கும் இடையில் ஜாதி அந்தஸ்து முதலியவைகள் கடக்க முடியாத பெரிய ஆறுகளாக் ஓடுகின்றன என்பதை நான் அறியவில்லை. அவளைத் தவிர வேறு ஒருவரையும் மணந்து கொள்வதில்லை என்று சபதம் கூடச் செய்து கொண்டேன். என் இஷ்ட தெய்வங்களுக் கெல்லாம் பிரார்த்தனைகள் செய்து கொண்டேன். எனக்கு இருந்த நம்பிக்கையில் அவளுக்குக் கொஞ்சமாவது இருந்ததாகத் தெரியவில்லை. இருந்தாலும் அவளுக்கு உள்ளூர என் மீது இருந்த பிரியத்தினால் என் பின்னே "ஆண்டே ஆண்டே," என்று சொல்லிக் கொண்டே, நாய்க்குட்டியைப் போல் தொடர்ந்து வருவாள்.

அன்று களத்து மேட்டில் நெல் அம்பாரத்திற்குக் காவல் இருந்தேன். அப்பொழுது அபரஞ்சி அங்கு ஓடி வந்து, "ஆண்டே ஆண்டே, அதோ குறத்தி போறா. கொஞ்சம் நெல் குடுக்கிறியா ஆண்டே. பச்சை குத்திக்க ஆசையாயிருக்குது ஆண்டே" என்று கொஞ்சும் தோரணையில் கேட்டாள்.

"இந்த அம்பாரம் பூராவையும் வேண்டுமானாலும் உனக்கு கொடுப்பேனே. ஆனால் அப்பா... ......சரி. குறத்தியைக் கூப்பிடு" என்றேன்.

அபரஞ்சிக்கு முதல் முதலாக ஏற்பட்ட ஆசையைப் பூர்த்தி செய்யப் போகிறோமே என்று எனக்குஉள்ளூர சந்தோஷம். அபரஞ்சி குதித்தோடி, குறத்தியை அழைத்துக் கொண்டு வந்துவிட்டாள்.

"அபரஞ்சி, கையிலே என்ன குத்திக்கொள்ளப் போறே?" என்று கேட்டேன்.

"ஏன் ஆண்டே கேக்கறே?" என்று என் முகத்தைப் பார்த்துக் கேட்டாள்.

"இல்லை, சும்மாதான் சொல்லேன்."

"நா என்ன குத்திக்குவேன், நீ தான் சொல்லேன், ஆண்டே."

"தேள்!"

"ஹா ஹாம்."

"கோலம்!"

"ஹா ஹாம்."

"லேடி பொம்மை!"

"ஹா ஹாம்."

"சரி, நீதான் சொல்லு. எனக்குத் தெரியாது."

"ஒரு பாப்பா படம் குத்திக்கப் போறேன்."

"சே, வேண்டாம். நான் சொல்றேன். அதைக் குத்திக்கிறியா?" மௌனம்.

"என்மேல் உனக்கு ஆசை தானே?"

பதிலில்லை. ஆனால் தலையை மட்டும் ஆமாம் என்பதற்கு அறிகுறியாக அசைத்தாள்.

"உன் கையிலே என்னுடைய பெயரைக் குத்திக்கொள்..." என்கிறேன்.

நான் அதைச் சொன்னதும் அபரஞ்சியின் முகம் திடீரென்று வெளுத்துவிட்டது. அவள் மனம் எதனாலேயோ பயந்துபோய் படபடவென்று அடித்துக்கொண்டது. அவள் தலை குனிந்து கொண்டு, "வேண்டாம் ஆண்டே..." என்றாள்.

"இதோ பார், அபரஞ்சி... என் பெயரைக் குத்திக்கொள்ள மாட்டியே?" என்று கேட்டுவிட்டு அவளை முறைத்துப் பார்த்தேன்.

அவள் மௌனஞ் சாதித்தாள்.

"என்ன, குத்திக்கொள்ள மாட்டியே?" என்று திரும்பவும் கேட்டேன்.

'மாட்டேன்' என்று வாயால் சொல்லாமல் தலையை மட்டும் அசைத்தாள்.

நான் கோபித்துக்கொண்டு இருந்த இடத்தைவிட்டு எழுந்து, "சரி, நான் போகிறேன்," என்று சொல்லிவிட்டு இருபது அடி தூரம் நடந்திருப்பேன். அபரஞ்சி என்ன நினைத்துக் கொண்டாளோ, கைகளைத் தட்டி, "ஆண்டே, ஆண்டே," என்று கூப்பிட்டாள்.



அங்கிருந்தபடியே அவளைத் திரும்பிப் பார்த்தேன். அவள் முகத்தில் துக்கத்தின் சாயை படர்ந்திருந்தது.

"என்ன?" என்று கொஞ்சம் முடுக்காகவே கேட்டேன்.

'இதைக் கேட்டுவிட்டுப் போங்கள்' என்று கூப்பிடுவது போல் தலையை அசைத்தாள். களத்து மேட்டை யடைந்ததும், "என்ன?" என்று மறுபடியும் கேட்டேன்.

"குத்திக் கொள்றேன், ஆண்டே," என்றாள் அபரஞ்சி.

மண் தரையில் ஒரு குச்சியைக் கொண்டு என் பெயரை எழுதினேன். அதைப் பார்த்து குறத்தி அபரஞ்சியின் அழகிய, மிருதுவான கரத்தில் என் பெயரைப் பச்சை குத்தினாள். குறத்தி என் பெயரை அவள் கையில் ஊசியோடு குத்தும்பொழுது அபரஞ்சி முகத்தைச் சுளித்துக் கொண்டாள். நோய் பொறுக்க முடியாதவளாய்த்தான் அப்படி அவள் முகத்தைச் சுளித்துக் கொண்டாள் என்று நான் நினைத்தேன். அவள் கண்களிலிருந்து இரண்டு சொட்டு கண்ணீர் உதிர்ந்தன. குறத்தி நெல்லைப் பெற்றுக் கொண்டு போய் விட்டாள்.

"ஒங்க பெயரை என் கையிலே குத்திட்டீங்களே, பாக்கறவங்க என்ன சொல்லுவாங்கோ?" என்று தழு தழுத்த குரலில் அபரஞ்சி கேட்டாள்.

அவள் கேட்டது சரியென்றே என் மனதில் பட்டது. "யாருக்கும் காட்டாதே. கையை மறைத்து வைத்துக் கொள்," என்று சொல்லிவிட்டு, அம்பாரத்தைப் பார்த்துக்கொள்ள வேறு ஆள் வந்ததும் நான் போய்விட்டேன்.

நாட்கள், மாதங்கள், வருஷங்கள் ஓடி மறைந்தன. வயதாக ஆக நான் அவளை மணப்பது என்பது முடியாத காரியமென்பதை அறிந்தேன். அபரஞ்சி ஒருநாள் திடீரென்று ஒரு கல்லையெடுத்துப் போட்டாள். அவளுக்குக் கலியாணமாகப் போகிறது என்று அவள் என்னிடம் சொன்னபொழுது எனக்கு துக்கம் மேலிட்டது. வேறு வழியில்லை. "சந்தோஷமாக உன் புருஷனுடன் இரும்மா அபரஞ்சி," என்று சொல்லுவதைத் தவிர வேறு என்ன இருக்கிறது. அபரஞ்சிக்கு கலியாணமாய் கணவன் வீட்டுக்குப் போய்விட்டாள். வருஷங்கள் ஓடின. கல்லூரிப் படிப்பு முடிந்ததும் ஊருக்குத் திரும்பியிருந்தேன். ஊருக்கு வந்ததும் அபரஞ்சியைப் பற்றித்தான் நினைவு வந்தது. அவள் ஊருக்கு வந்திருந்து மறுபடியும் கணவன் ஊருக்குப் போய்விட்டதாக அறிந்ததும் அவளைப் பார்க்க வேண்டுமென்று ஆவலோடு கட்டிய மனக்கோட்டைகள் இடிந்து பாழாய்ப் போயின. ஆனால் அந்த துக்கம் நீடித்திருக்கவில்லை அவள் பொங்கலுக்கு வருவாள் என்று எனக்குத் தெரிய வந்த பொழுது, கொஞ்சம மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டேன்.

பொங்கல் வந்தது. வருஷா வருஷம் பொங்கலன்று வேலைக்காரர்கள் பண்ணையாட்கள் முதலியவர்களுக்கு புதுத் துணி வழங்குவது சம்பிரதாயம். பொங்கலுக்கு துணி வாங்க அப்பா என்னையே அனுப்பினார். வேஷ்டி புடவைகள் வாங்கினபொழுது அபரஞ்சிக்கு என்று ஒரு விலையுயர்ந்த புடவையும் வாங்கி வந்தேன். அன்று மாலை துணிகளை வழங்க வேண்டிய நேரம் வந்தது. பண்ணையாட்கள், வேலைக்காரர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள். அபரஞ்சியும் வந்திருந்தாள். அவளைப் பார்த்ததும் எனக்குச் சொல்ல வொண்ணாத சந்தோஷம் உண்டாயிற்று. அப்பா என்னையே துணிகளை வழங்கச் சொன்னார், ஒவ்வொருவருக்கும் துணிகளைக் கொடுத்து வந்தேன். கடைசியாக அபரஞ்சி வந்தாள். அவளுக்கு என்று வாங்கி வந்த புடவையை அவளுக்குக் கொடுத்தேன். புடவையை அவள் வாங்கும்பொழுது அவளுடைய கையைப் பார்க்க வேண்டுமென்று என் மனம் ஏனோ என்னைத் தூண்டிற்று. அவள் கையைப் பார்த்த பொழுது என் மனம் பகீரென்றது. அவள் கையில் என் பெயர் இருந்த இடத்தில் ஒரு நீண்ட வடு இருந்தது. என் மனம் வேதனை யடைந்தது. ஆனால் அபரஞ்சி சிரித்துக் கொண்டே புடவையை வாங்கிக்கொண்டு போய்விட்டாள்.

அதே பழைய களத்து மேட்டில் அவளைச் சந்தித்தேன்.

"உங்க பெயரை மணல், சீக்காய் எல்லாம் போட்டு அழிக்கப் பாத்தேன். பச்சை எங்கேயாவது மறையுமா? என் புருஷன் வூட்டுக்குப் போனபிறகு யென் கையிலே இருந்த பேரைப் பாத்துட்டு யார் பேருன்னு கேட்டான் யென் புருஷன். நடந்த விஷயத்தை யெல்லாம் சொன்னேன். எம் புருஷனுக்கு திடீரென்று கோவம் வந்திருச்சு. என் கையைக் கயத்தாலே கட்டிட்டு, அடுப்பிலே இரும்புக் கம்பியெ வெச்சு காச்சி அந்த பேரு மறையற வரைக்கும் சூடு போட்டான். அப்பா, புழுவா துடிச்சேன்......போனது போச்சு......ஆண்டே, என்ன சௌக்கியமா இருக்கியா? உனக்கு கண்ணாலம் ஆவப்போதுன்னு எல்லாரும் பேசிக்குறாங்களே நிசம்தானா? உம்?" என்று கேட்டாள்.

பழைய சம்பவங்கள் என் மனக் கண்முன் சினிமாத் திரையிலிட்ட காட்சிகள் போல் தோன்றின. என் கண்களில் கண்ணீர் பெருகி இரண்டு சொட்டு கீழே விழுந்தன. அந்த இரண்டு துளி கண்ணீரே அபரஞ்சியிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டதை அறிவிப்பது போலிருந்தது.

# நவீன இலக்கியம்

"ஆர்வி"

இடம் : பத்திரிகாசிரியர் அறை ;

நேரம் : நடுப்பகல்.

பத்திரிகாசிரியர் (மணி அடிக்கிறார்)

ஆசிரியர் : டேய் பையா !

பையன் : சார் !

ஆசி : எங்கேடா போயிருந்தாய் மணி அடிக்க அடிக்க ?

பையன் ; இல்லிங்க ஸார் !......வந்து......

ஆசி : இல்லியாவது ? வந்தாவது ? சரி, 'தினக் கொலை'ப் பத்திரிகை யெடுத்து நம்ப 'கலைக் கொலை' விளம்பரம் வந்திருக்கிறதா சார் !

பையன் : போன வாரமே வந்துடுச்சே இதோ பாருங்க !

[பேப்பரை எடுத்துக் கொடுத்துவிட்டுப் பையன் போகிறான். ஆசிரியர் படிக்கிறார்.]

" கலாசேவை என்பது எல்லோராலும் செய்துவிட முடியாது. ராமாயணம், பாரதம் எழுதினது பழைய யுகத்திலே. நவயுகத்திலே அதைப் போன்ற இலக்கியங்களைக் கொண்டு வருவது அசாத்தியமே தான். ஆனால், அஞ்சா நெஞ்சமும் வீரமும் துள்ளும் வேல் போன்ற பேனாவைக் கொண்டு எந்த அசாத்தியத்திற்கும் இடமில்லாது செய்யும் நமது 'கலைக்கொலை'யின் ஆசிரியர் அந்தக் காரியத்தைச் சாத்தியமாக்கித் தான் விட்டிருக்கிறார். நாம் எழுதுவது அவநம்பிக்கையா யிருந்தால் நாலே அணாக்கள் கொடுத்து 82 பக்கமும் இருபத்தி ஏழே முக்கால் பக்கம் விளம்பரமும் நிறைந்து கண் கொள்ளாக் காட்சியளிக்கும் 'கலைக் கொலை' பத்திரிகை யொன்றை வாங்கிப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்—சகுனி.''

(கீழே ஒரு விளம்பரம் கண்ணில்படுகிறது.) 'கலைக்கொலை'யில் வீசும் கலைமணம் மூக்கைத் தொளைத்து நெடி அடித்து, அதனால் தலைவலி வந்தால் அதற்கு இதோ நமது "விஷாஞ்சனம்" இருக்கிறது. புட்டி ஒன்று 0-15-9 தான்.

ஆசி : ஆஹா ! வெளுத்து வாங்கிவிட்டாரே சகுனி ! அப்படியானால் நேரில் தெரிவித்தபடி 'தினக்கொலை'யைப் பற்றி தலையங்கம் எழுதவேண்டியதேதான் ! (எழுதுகிறார்).

(பையன் வருகிறான்)

பையன் : சார் ! முதலாளி வராங்க !

(ஆசிரியர் 'தினக்கொலை' விமரிசனத்தைப் பிரித்து மேஜையில் கண்ணில் தென்படும்படி வைத்துவிட்டு வரிஞ்சு வரிஞ்சு எழுதுகிறார்).

பத்திரிகை முதலாளி : என்னமோ எழுதறாப்லே இருக்கே ?

ஆசிரியர் : ஆமாம், கடைசி பாரம்; தலையங்கம் எழுதறேன்.

முதலாளி : தலையங்கமாவது ? கால் அங்கமாவது சார் ? அதிலே அரை பாரத்தைக் குறைச்சு ஒரு அரைபாரம் அட்வர்ட்டைஸ்மெண்டு பாரம் எத்தச் சொல்லிவிட்டுப் போனேனே ?

ஆசி : எங்கிட்ட ஒருத்தரும் சொல்லல்லையே ? இப்ப செஞ்சுட்டாப் போச்சு ! ஒரு பேஜ் தலையங்கம் ; ஒரு பேஜ் வசன கவிதை பாக்கியை அப்படியே போட்டுண்டாப் போச்சு !

முத ; சரி, அதான் ! ரீடிங் மேட்டரைப் போல எர்லிங் மேட்டரும் இருக்கணும்னேன் ! அது சரி ; அது என்ன 'தினக் கொலையா ?'

ஆசி : (அலக்ஷியமாய்) ஆமாம் ; நம்ப பத்திரிகையைப் பத்தி ஏதோ விமரிசனம் வந்திருக்கு !

முத : (வாசித்து முடித்துவிட்டு) யார் சார் ! இந்தச் சகுனிங்கிறவர் ? கொலை பண்ணி யிருக்காரே !

ஆசி : (தெரியாதது போல்) யாரோ ஒருத்தர் ! நமக்கென்ன ? பத்திரிகை விளம்பரமாக வேண்டியது ! யாராயிருந்தா என்ன ?

[முதலாளி போகிறார். ஆசிரியர் எழுதிய தலையங்கத்தை ஒரு முறை திருப்பி வாசிக்கிறார்,]

" கலையைக் கொலை செய்பவர்களைக் கண்டதுண்டமாகக் கொலை செய்யும் பத்திரிகை ஒன்று உண்டானால், அது 'தினக் கொலை'ப் பத்திரிகை தான் ! இதைவிட ரத்தினச் சுருக்கமாக, தினக்

கொலையைப் பற்றி எழுதினால் அது விஷயக் கொலையேயாகும். " தினக்கொலை ' என்னும் பெயரிலேயே ஒரு காவிய மணம் சூழா நிற்கிறது —ஆசிரியர்."

(பையன் வருகிறான்)

பையன் : சார் டெலிபோன் !

ஆசி : ஹல்லோ ! ஓ ! தினக்கொலையா ? நமஸ்காரம். ஓஹோ ! சுந்தரநாத முதலியார் வந்திருக்காரா......அப்படியா......அவரை நம்ப காரியாலயத்துக்கு அனுப்புங்களேன்......சரி......நான் இங்கேயேதான் இருப்பேன் ...... உடனே வரச் சொல்லுங்கோ ...... என்ன தலையங்கமா ? அட இத்தனை நேரம் பாரம் அச்சாகி இறங்கிட்டிருக்குமே ! ....., அட இது தெரியாதா ? ..... இரத்தினச் சுருக்கத்தோடே சூரியப்பிரகாசம் செய்திருக்கேன் ...... பத்திரிகையைப் பார்த்தா தெரியறது ..... சரி, நமஸ்காரம்.

## காட்சி 2.

[பத்திரிகாசிரியர் திருக்குறள் பரிமேலழகர் உரையுடன் கூடியதைக் கையில் வைத்து வாசிப்பது போல் பாவனை செய்கிறார்]

ஒரு குரல் : உள்ளே வரலாமா ?

ஆசிரியர் : தா ர ா ள ம ா க ! அடேடே .... வாங்கோ .... வாங்கோ .... நமஸ்காரம் .... உங்களுக்காகத்தான் காத்திண்டிருந்தேன் .... வேலையெல்லாம் அப்பவே முடிஞ்சு போச்சு ! தினக்கொலை யாபீசுலே நீங்க வந்ததாகச் சொன்னார்கள்.

சுந்தரநாதம் : (உட்காருகிறார்) இருக்கட்டும் ; உடம்பு என்ன கொஞ்சம் இளைப்பாக் காட்டுதே. . .

ஆசி : அப்படி யொண்ணும் இல்லையே. எல்லாம் உங்க அன்பு பெரிசாப் போனதும் ....

சுந்தர : (சிரிக்கிறார்).

[ஏதோ பேச்சுக் குரலைக் கேட்டு முதலாளி தன் அறையிலிருந்து வருகிறார்.]

ஆசி : (எழுந்திருந்து சுந்தரநாதரிடம்) இவர்கள்தாம் 'கலைக்கொலை' பத்திராதிபர் ! (முதலாளியிடம்) இவர்கள்தாம் நம்ப சுந்தரநாத முதலியார்.

முத : ஓ ! அப்படியா .... அடடே .... நமஸ்காரம்.

சுந்தர : நமஸ்காரம்.

ஆசி : பரம ரஸிகர் ! இப்போ இந்தக் கலியுக உரையாசிரியர்னு ஒருத்தரைச் சொல்லணும்னா அது இவரைத்தான் சொல்லணும் !

முத : அதான் தெரியுமே எனக்கு ! இவர்கள் தானே அந்தத் திருக்குறள் இடைச் செருகலை பாடுபட்டு எடுக்கல்லேன்னா திருக்குறளே எதுன்னு நீங்க சொல்லியிருந்தேளே ? ....



ஆசி : ஆமா, ஆமாம் ... அவர்களே தான்

சுந்தர : எல்லாம் இவ்விடத்து உற்சாகம் தான் உற்சாகம் சார் !

முத : என்ன பிரமாத உற்சாகம் சார் ! இந்தக் காலத்துலே சார், இந்த மாதிரி பழைய இதுலே ....ம ....ம .... பழைய இலக்கியத்துலே .... வந்து .... போய் .... ஆமாம் .... வந்து ..... இல்லே .... போய். ....

ஆசி : (இடைமறித்து) இன்னுங்கூட அந்த ஒரு இடம் எனக்கு சொப்பனத்துலே மறக்கணும்னாக்கூட மறக்கமாட்டேங்கிறது.

சுந்தர : எந்த இடமுங்க ?

ஆசி : அதான் .... அந்தக் 'களவியல்'லே !

சுந்தர : ஓ ! அதுங்களா ? ஹே ... ஹே ... என்னமோ எல்லாம் உங்க ....

முத : இன்னு மொண்ணு உங்ககிட்டச் சொல்லணும்கிறது .... என்ன ..... இதுதான் இப்ப முடிஞ்சு .... சுந்தரக்குறளா வந்துடுத்தே ..., இந்தச் சங்க இலக்கணம்னா இலக்கியம்னா சொல்றாளே. அதுலே கொஞ்சம் கைவைச்சா என்னன்னு ....?

ஆசி : (அதற்குள்) ஒண்ணு ஒண்ணாத்தானே வரணும் !

சுந்தர : (மெய்ம்மறந்து போய்) எல்லாம் அவ்விடத்து .....

ஆசி : ரஸிக பரம்பரை நீங்க !

சுந்தர : நீங்க ஆசிரிய பரம்பரை !

[இருவரும் உற்சாகமாய் இருக்கிறார்கள். முதலாளி தன் ஆசிரியரின் தகுதியைக் கண்டு பிரமித்துவிட்டுப் போகிறார். இல்லாவிட்டால் அப்படி பாசாங்கு செய்துவிட்டுப் போகிறார்.]

ஆசி : சரி இனிமே நம்பகொஞ்சம் தாராளமாய்ப் பேசலாம் ! வந்து...நீங்க ஏன் இப்ப ஒண்ணுமே எங்களுக்கு எழுதியனுப்பல்லே...

சுந்தர : எங்கே ஒழிவேது ? நீங்களும் ஒண்ணும் அதிகமாய் எழுதக் காணமே ?

ஆசி : எழுதறதுன்னா...கொஞ்சம்...

சுந்தர : ச்ச ! நான் உங்க கிட்டே என்ன சொல்லி யிருக்கேன் ! நீங்க அந்த வெஸ்டர்ன் ஜெர்னலை...அதான் தெரியுமே உங்களுக்கு...?

ஆசி : அது கொஞ்சம் பயமா...

சுந்தர : அட ; நான் தான் இருக்கேனே. ஒரு பத்திரிகை இல்லாட்டா ஒரு பிரசங்க மேடை அல்லது நாலுபேர் பேசற இடம் எங்கேயாவது...உங்களைப்பத்தி..." வசனத்திலேயோ அல்லது மெருகிலேயோ ஒரு அற்புதமான, அழகான எழுத்தாளர்

வேணுமா்னு அது 'கலைக்கொலை' ஆசிரியரான 'இண்டி'தான் "னு சொல்லிப் பிரசாரம் பண்ணிக் கிட்டே வாரேனே...நீங்க ஏன் பயப்படுதிய?

ஆசி: அது சரி; உங்க பேச்சுக்கும் எழுத்துக்கும் அபார மதிப்பு இருக்குன்னு எனக் குத் தெரியாதா?

சுந்தர: அது யாராலே?

ஆசி: பத்திரிகையாலே தான்.

சுந்தர: அங்கேதான் இருக்குது சூட்சுமம்! நீங்க என்னை எழுத வேண்டியது...நான் உங்களை மானுவாரியாச் சொல்லிக்கிட்டு இருக்க வேண்டி யது...இதுதான். உழைப்புக்குத் தமிழ்நாட்டிலே ஏதுங்க மதிப்பு? மதிப்பை நாமல்ல உண்டாக்கிக் கனும்? அதுக்குப் பத்திரிகைதான். பத்திரிகை முதலாளியை நாம் உபயோகப் படுத்திக்கத்தான் வேணும்.

ஆசி: ஆமாம்; அந்த ரேடியோ சான்ஸ் வேறே உங்களுக்கு இருக்குதுபோல இருக்கே; ஏதோ விமரிசனம்!

சுந்தர: ஆமா இருக்குது. அதிலே விமர் சனத்துக்கு உங்க கதை ஒண்ணைக்கூடல்லே எடுத் துக்கிட்டு இருக்கறேன். இந்த 'பிராபகேண்டா வால்யூ' உங்க பத்திரிகைக்குத்தானே ஜாஸ்தி?

ஆசி; சரி; உங்க விமர்சனத்தைப் பேசுங்க... அடுத்த இஷ்யூலெ அதைப் பற்றி ஒரு நாலு பக்கம் இட்டிபிடறேன். சரிதானே அட்டைப் பத்திலே உங்க 'பிளாக்'கைப் போட்டு...என்ன?

சுந்தர: ஏதோ செய்யுங்க. சரி, நேரமாயிட் டுது...பிறகு எப்ப நாம் சந்திக்கலாம்...?

ஆசி: அதான் அடிக்கடி சந்திக்கறோமே?

சுந்தர: அப்ப கியாபகம் வைச்சுக்கிடுங்க, எதை? விமரிசனத்தைத் தான்! நான் வரவா?

ஆசி: நமஸ்காரம்!

(சுந்தரநாதர் போகிறார்.)

## காட்சி 3

[ஒரு வாரம் கழித்து]

[முதலாளி ஆசிரியரைக் கூப்பிட்டுவரச் சொல்லுகிறார்.]

முதலாளி. என்ன அடுத்த இஷ்யூலே என்ன வரது? யார் யார் எழுதியிருக்கா?

ஆசி: 4 கட்டுரை, ஒரு விமரிசனம், மூணு கவிதை, இரண்டு சிறுகதையும் போடலாம்னு... .........மொத்தம்.....

முத: என்னத்துக்கு கட்டுரையும் கவிதையுமா அதிகம்?

ஆசி: அப்பத்தானே கொஞ்சம் 'லிடரரி வால்யூ' இருக்காப்பிலே.....

முத: ஆ! அதெல்லாம் ..... ஜனங்களுக்கு ரொம்ப லேட்டா ... அப்படி இப்படி ஹாஸ்யமா இருந்தாப்போதும் சார். நான் ஒரு கதை யொண்ணு வாங்கி கொடுத்தேனே. அது இந்த இஷ்யூலே வரதோல்லியோ?

ஆசி: அதுக்கு இடம் இல்லையே. அடுத்த துலே வேணு ...மேலும் அதலே ரொம்பப் படு காதலா வர்ணிச்சிருக்கு .... சைகாலஜியே இல்லை .... டெக்னிக்கும் ரொம்ப பழசு.

முத: இங்கே பாருங்கோ ... அந்த சைக்கா லஜியோ டெக்னிக்கோ கொண்டுபோய்த் தூரத் தள்ளுங்கோ .... நமக்கு 'லிடரரிவால்யூ'வை விட பப்ளிக் மெண்டாலிடி தான் ரொம்ப முக்கியம். இப் பல்லாம், "பிஸினஸ் பாயிண்டு ஆப் வியூ" லேருந்து பார்த்தா பப்ளிக் ரொம்ப லேட்டாத்தான் விரும்பறு. இங்கேருந்து செங்கல்பட்டுக்குப் போக ணும்னு போற வரையும் ஏதோ இப்படி ஹாஸ்யமா இல்லாட்டா அப்படி கொஞ்சம் காதலா ஏதானும் இருந்தாத்தான் ரஸிக்கறு. உங்க வீரம், சோகம், உத்வேகம், கவலை முதலிய அழுமூஞ்சிக் கதைக ளெல்லாம் வேண்டியதே இல்லை அவாளுக்கு. லைப் பிலே தான் கஷ்டப்படறு. கதையைப் படிக்கற போதும் கஷ்டப்படணும்னு யாரானும் வாங்கு வாளா பத்திரிகையை? ஆக்ச்சே இந்தக்கதை— இலக்கியம்னு எல்லாம் எழுதறத்தோடே வச்சுண் டால் போறும், என்ன?

ஆசி: (முகத்தைச் சுளித்துக் கொண்டு) அப்ப பின்னு அது ... ரொம்ப இது மாதிரின்னு....

முத: வேணுமானு, அந்தக் கதைகளுக்கு மேலே பெரிசா ஒரு 'நோட்' போடுங்களேன். சரி யாய் போயிடறது.

ஆசி: அப்படி வேணுச் செய்யலாம்!

முத: ஹூம். அந்தமாதிரிச் செய்யுங்கோ' என்ன? ஹாஸ்யமும், காதலும் இல்லேன்னு நிச் சயமா வச்சுக்கோங்கோ—சர்க்குலேஷனை விரல் விட்டு எண்ணிடலாம்!

ஆசி: (தனக்குள்)நீங்க சொல்றமாதிரி செய்தா எண்ண வேண்டிய அவசியமே இருக்காது. (வெளி க்கு) அதுக்கென்ன. நீங்க சொல்றுப்போல செய் தால்தான் சரியாக வரும். நான் வரேன்.

(போகிறார்.)

(இரைந்து கூப்பிடுகிறார்.)

முதலாளி: என்ன மானேஜர் சார்!

மானேஜர்: வந்துட்டேன்.

முத: காதுலே விழுந்ததோல்லியோ?

மானே: விழாமெ என்ன? நீங்கதான் போட் டுட்டேளே ஒரு போடு!

முத: பின்ன என்ன? அவா ஸ'கலைதலை'ன்னு கத்த விட்டாத்தான் இங்கே பணம் புரளும். ஆனால் வெறும் கலைக் கத்தலாத்தான் இருக்க ணுமே யொழிய கலைக்கு சேவை செய்யறதுன்னு இங்கே நமக்கு யாரானும் மானியம் இனியம் விட் டிருக்கிறார்களா என்ன? அவாளை எவ்வளவு உப யோகப் படுத்திக்கணுமோ அவ்வளவு செய்துக் கொண்டாப் போறும். நீங்கள் என்ன நினைக்கிறேள்?

மானே: ஆமாம் சார்! கலையாவது கத்திரிக் காயாவது? ... இதுதான் நவீன இலக்கியம்!

# நியாய வெறி

"சுகி"

அகன்ற நெற்றி; படிந்த கிராப்; வெளுத்த துணிமணி; உயர்ந்த விலையுள்ள சூட், கோட்; இத்தியாதி ஆடை அலங்காரம் நிறைந்த நவநாகரிக வாலிபன், படியிறங்கினான். அவன் முதுகுக்குப் பின்னால் "இதுதான் சாராயக்கடை" என்ற பலகை தொங்கிக்கொண்டிருந்தது. குடி வெறியால் தள்ளாடிக்கொண்டே, மறைவாக நிறுத்தியிருந்த தனது மோட்டாரை நோக்கி நடந்தான். கடைக்குள் நுழையுமுன் மறைவாக நிறுத்தி, பின் வாசல் வழியாக வந்த கௌரவம், இப்போது மறைந்துவிட்டது. கடைக்குள் நுழையும்போது இருந்த மானம் வெட்கம் எல்லாம் இப்போது குடிக்கு அடமானம்!

மோட்டாருக்குள் ஏறி உட்கார்ந்ததும் வேக வெறி உந்தவே, மோட்டார் சிட்டாய்ப் பறக்கலாயிற்று. எதிரே ஊர்ந்து வந்த வண்டிகள், சைக்கிள்கள், நடைப் பிணங்கள் எல்லாம் வேண்டாப் பொருள்களாகக் காட்சியளித்தன புத்தியைப்போல், பார்வையும் இரண்டுபட்டது.

தெருவோரம் போய்க்கொண்டிருந்த கால் நடைப் பிரயாணிகளை அப்படியே சூறையாடுவான் போலப் பறந்தான். ஓரமாக நின்றுகொண்டிருந்த ரோடு இன்சின் மேல் ஒரு 'டாஷ்' கொடுக்க இருந்தவன், பார்வைக் கோளாறினால், கை நடுக்கத்தால் கார் திரும்பவே, ரோடு இன்சின் பிழைத்தது. முனிசிபாலிடியார் செய்த யோகம்!

புழுதிப் படலங்கள் வானளாவ கார் வேகத்தோடு சென்றது. பக்கத்திலே, அழகான சிறு பங்களா. பவளமல்லியின் சுகந்தத்தைக் கட்டியங் கூறிக்கொண்டு நின்றது. கட்டிடத்துக்குள்ளிருந்து பாய்ந்து வந்த வெளிச்சம், மாடியில் நின்ற இளம் பெண்ணின் நிழலாட்டத்தைக் காட்டவே, உற்று நோக்கியவன் காரைச் சுவரின் மேல் மோதவிட்டான். சுவரில் அழகுக்காகப் பதித்திருந்த பன்னீர்ச் சொம்புகள் சிதறி விழுந்தன.

மோட்டாரின் மோதல் கேட்டு, மாடியில் நின்ற பெண் கீழே குனிந்தாள். மோட்டாருக்குள்ளே, தெய்வாதீனமாகப் பிழைத்த அவன், ஒரு சரளைக்கல்லை, மாடிக்கு எறிந்தான். மறு கல்லை அவன் எறிந்த சமயமும், அவளுடைய தந்தை, எட்டிப்பார்த்த சமயமும் ஒன்றாக இருந்த காரணம் ஒன்றினால் மட்டுமே, அவர் வழுக்குத் தலையில் பட்டு உடைந்தது கல்! முதற்கல் கண்ணாடி ஜன்னலில் பட்டிருந்ததால், சிதறிய கண்ணாடித் துண்டொன்று காலையறுத்து ரத்தக் களறி ஆக்கிவிட்டது.

"போக்கிரிப் பயல்; குடித்துவிட்டு அலையும் திமிரா?" என்று கர்ஜித்தார் வீட்டுக்காரர்.

வீட்டுக்காரருக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. மண்டையில் காயமும் வீங்கிற்று. தெருவில் இதற்குள் கூட்டமும் கூடி விட்டது. போவோர் வருவோர் எல்லாம் குடிகாரன்மேல் பரிதாபம் கொண்டனர். நல்லதனமாக சமாதானம் செய்து, புத்தியும் சொல்லி காரை ஓட்டிக்கொண்டு போகும்படி நவநாகரிக பணக்கார வாலிபனை தாஜாச் செய்தனர். வீட்டுக்காரர், குதியாய்க் குதித்தார்.

"இந்தக் குடிகாரப் பயல் மேல் வழக்குத் தொடர்ந்து இவனைப் படாத பாடு படுத்துகிறேன்" என்றார்.

இந்தச் சபதம் குடிகாரனுக்கு உரைக்கவில்லை. சுற்றி நின்ற கும்பல் அனுதாபம் கொண்டு தத்தளித்த சமயம் போலீஸ்புலி ஒருவன் தோன்றி, நிலைமையைச் சமாளித்தான்.

"தெரியாத்தனம். பாவம்! பெரிய இடத்துப் பிள்ளை. குடித்துவிட்டான். விட்டுவிடுங்கள். உங்கள் பிள்ளை இப்படிச் செய்தால், என்ன செய்வீர்கள்?"

போலீஸ் புலியின் இந்த வார்த்தைகள், வீட்டுக்காரர் காதில், கடலில் கரைத்த காயமாகவே பாய்ந்தது.

அவர் வழக்குத் தொடர்ந்தே விட்டார்!

## 2

மோட்டார் புறப்பட்ட ஒரு நிமிஷத்திற்குப் பின்பு, சாராயக் கடை போர்டுக்கு முன்னால் இன்னொரு உருவம் தள்ளாடி வந்தது. அவனுக்கு மானம், வெட்கம் எல்லாம் உண்டு. அவன் நியாயஸ்தன். நியாயமான வழியான முன் வாசல் வழியாகவே போய் முன் வாசல் வழியாகவே வந்தான். அவ்வளவு மானஸ்தன்!

தலையெல்லாம் கலைந்து, எண்ணெய் கிடைக்குமா என ஏங்கிக் கிடந்தன. சட்டையில் அநேக தபால் பெட்டிகள்; கிழிசல் வேஷ்டி! எப்படித்தான் அத்தனைக் கிழிசல்களும் சேர்ந்து ஒரு வேஷ்டியாக இருக்கிறதோ?

அவனுக்கு மோட்டார் வண்டி ஒன்றுமில்லை. கால் வண்டியைத் தட்டிவிட்டான். அது நடக்க மறுத்தது. எதிரே வருகிற லாந்தல் கம்பங்கள் அவனிடம் கவிதை பேசின; நாய்கள் நடனமிட்டன.

பிரகாசமாக எரிந்த லாந்தர் கம்பத்தைக் கட்டிக்கொண்டு கவியாகிவிட்டான்; கற்பனை புரண்டோடியது. "நான் வீட்டுக்குள்ளே வல்லாமா?" அட்டா! என்ன மதுரமான குழைவு! மழலையில் குதலைச் சொல் அல்லவா, பிறக்கிறது?

வேடிக்கை பார்க்க கூட்டத்திற்கு குறைவேது. சிருங்காரமான பாடல்கள்; அதைப் பாடும் பாணியும் வேறு, அவ்விடத்தில் ஏக ரகளை. அவன்மீது இரண்டொரு மலைப் பிஞ்சுகள் விழுந்தன; அதெல்லாம் அவனுக்கு புஷ்ப பாணம்!

போலீஸ்காரன் வந்தவன், "டேய் இது உன் வீடில்லே" என்றான்.

"என் வீடுதான்."

"இந்த வீடு உன் வீடுதான். ஆனால் யாரும் இல்லே, வீட்டிலே."

"பொய் சொல்லாதே. அதோ மாடியிலே வெளிச்சம் தெரிகிறதே!"

அவன் கை தூண்டி, லாந்தர் கம்பத்தின் உச்சியைக் காட்டினான். எல்லோரும் 'கொல்'லென்று சிரித்தனர்.

யாரோ எறிந்த கல் விளக்கை உடைத்தது. எங்கும் இருள். குடிகாரன் அழுதான். அவன் விலாசமும், பெயரும் அறிந்து கொண்டான் போலீஸ் புலி.

தன் மனைவி இறந்து போனதாக அழுதுகொண்டிருந்தான் அந்த இருட்டுக் கம்பத்தின் அடியிலே.

## 3

கோர்ட்டிலே நடந்த இரு வழக்குகளில் ஒரே நியாயாதிபதியின் தீர்ப்பு எப்படி இருக்குமென அறிய ஆசை கொண்டேன். நடந்த விசாரணைகளில், க்த்திய வக்கில்களின் கூச்சல், சாட்சி சம்மன் எல்லாம் கற்கக் கசடறக் கற்ற பின் நிற்க அதற்குத் தக, நின்றவை இதுவே.

முதல் கேஸ் தீர்ப்பின் சாராம்சம்:

"குடி வெறியில் தமது மோட்டாரைக் காம்பவுண்டுச் சுவரில் மோதிய குற்றத்திற்காகவும், கண்ணாடி ஜன்னலை உடைத்ததற்கும், வீட்டுக்காரர் குறிப்பிடும் தொகையை, ரிப்பேர் கிரயத்தை, கொடுத்துவிட வேண்டியது. செலவுடன் தாவா தள்ளுபடி."

என்றோ ஒருநாள், இரண்டாம் குடிகாரனுக்கும் பைஸல் செய்தார்கள். இரண்டாம் கேஸ் தீர்ப்பின் சாராம்சம்:

"குடி வெறியில் லாந்தல் கம்பத்தின் கண்ணாடியை உடைத்து பொது ஜன நடமாட்டத்திற்கு தடை ஏற்படுத்தியதற்கும், பொது ஜன சொத்தை நாசப்படுத்தியதற்கும் ரூ. 150 அபராதமும், ஒரு வருஷக் கடுங்காவலும் விதிக்கப்பட்டிருக்கிறது. அபராதத் தொகை கொடுக்கத் தவறினால் ஆறு மாத கடின கடுங்காவல்."

முதல் தீர்ப்பு ஜட்ஜ் சொல்லி முடித்ததும் மோட்டாரில் வந்த அந்த நவ நாகரிக வாலிபன் காரை விரைவாக விட்டான். வெற்றி ஏற்பட்ட சந்தோஷத்தைக் காட்ட, தானே அனுபவிக்கக் காரை வேகமாகவிட்டான்; ஆம், சாராயக்கடையை நோக்கி!

நடந்து வந்தானே, அவன் இரு போலீசார் கண்காணிப்பில், கிழிசல் உடை சாமரம் வீச, பதினெட்டு மாதம் சர்க்கார் விருந்தாளியாக இருக்க ஜெயிலை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான்.

வாழ்க நியாயம்;
நியாய வெறி வாழ்க.



# இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ், நார்த் பீச் ரோட், மதராஸ்

---

**உள்ளூர் ஆபீஸ்கள்:**

எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்ட்ரோட் மயிலாப்பூர், தியாகராயநகர், புரசைவாக்கம்,

தென் இந்தியாவின் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன.

| | |
|---|---|
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. 60,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | „ 33,48,561 |
| ரிஸர்வ் நிதி | „ 32,00,000 |
| டிபாஸிட்ஸ் | ரூ. 10 கோடிக்குமேல் |

எல்லாவிதமான பாங்கு லாவாதேவிகளும் செய்யப்படும்

பாங்கின் எந்த ஆபீசுக்காவது எழுதி விபரங்களைத் தெரிந்துகொள்ளலாம்.

N. கோபால அய்யர்,

செக்ரெடரி.

## தி வான்கார்டு இன்ஷியூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

சென்னை

---

## அறிவிப்பு

1944-ம் வருஷத்துடன் முடிவடையும் ஆண்டில்

இக் கம்பெனியின் புதிய பிஸினஸ்

# ரூ. 30,00,000க்கு மேல்

எச். டி. ராஜா,

ஜெனரல் மானேஜர்.

# தோற்றத்தின் அழகு
# உழைப்பின் உறுதி





பிரபலமான மைசூரைட் வார்பட சாமான்களுக்கு அவைகளின் உறுதி, நீண்டகால உழைப்பு, அழகான மாதிரிகள், அதி மேன்மையான ரகங்களுக்கும் பெயர் வாய்ந்தது. அவைகள் என்ன விலையாகிறதோ அதைவிட அதிகமாக மிச்சப் படுத்திக் கொடுக்கின்றன.

## மைசூரைட்

— வார்பட சாமான்கள் —

கவர்ன்மெண்ட் எலெக்டரிக் பாக்டரி

பெங்களூர்.

# தி ஸ்டர்லிங் ஜெனரல்
# இன்ஷியூரன்ஸ்

**கம்பெனி லிமிடெட்**

தலைமை காரியாலயம் : நியூ டில்லி

சென்னை பிராஞ்சு அண்டு ரெஸிடெண்ட்

மானேஜர் ஆபிஸ்:-

நெ. 10 லிங்கி செட்டி தெரு, ஜி.டி., சென்னை

| | |
|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ரூ. 50,00,000 |
| வழங்கப்பட்ட மூலதனம் | ரூ. 25,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. 12,50,000 |

**ஆயுள், நெருப்பு, விபத்து முதலிய எல்லாவித இன்ஷ்யூரன்ஸுகளும் செய்யப்படும்.**

உத்தியோகஸ்தர்களாகவும், ஏஜண்டுகளாகவும் நியமனம் பெறத்தகுந்த செல்வாக்கும், கண்யமும் உள்ளவர்கள் தேவை.

**கே. எஸ். ராமமூர்த்தி எம். ஏ.**
ரெஸிடென்ட் மானேஜர்

**எஸ். சுப்பிரமணியம்**
பிராஞ்சு மானேஜர்

# ஆறுதல்

காசீ. ஸ்ரீ. ஸ்ரீ.

**வா**சுதேவ பட்டர் இந்தப் பிராந்தியத்திலே பிரசித்தமானவர். பாஞ்சராத்திர ஆகமத்தில் அவருக்கு ஈடானவர் எவரும் இந்தத் தலைமுறையிலே பிறக்கவில்லை. ஆராதன விஷயத்தில் எவ்விதமான சந்தேகத்துக்கும் அவரிடந்தான் பரிகாரம் கேட்பார்கள். அத்தகைய மகா புருஷருக்கு நான் புதல்வனாகப் பிறந்தது, என் கையால் ஆராதனம் பெறவேண்டும் என்ற பகவானின் திருவுள்ளத்தைப் புலப்படுத்துகிறது. வழிவழியாக எம்பெருமானுக்கு ஆட்பட்ட உயர் குலம் இது. அத்தகைய பெருமை வாய்ந்த குலத்திலே பிறந்த நான் என் தூய்மையைக் காக்க வேண்டாமா?

தந்தையிடம் ஏழுவருஷகாலம் ஆகம சாஸ்திரங்களைப் பயின்றேன். உத்ஸவ விதிகளையும் ஆராதனக் கிரமங்களையும் அவருடைய திருவடி நிழலிலே இருந்து கண்ணாரக் கண்டு, மனத்திலே பதியச் செய்து, தேர்ச்சி பெற்றேன். ஒழிந்த நேரங்களில் ஆகமத்திலுள்ள சிக்கலான வாக்கியங்களுக்குப் பொருத்தமான கருத்துக்களை ஆராய்ந்து கண்டுபிடித்து ஒன்றாகத் தொகுத்தேன். என் உழைப்பு வீண் போகவில்லை. தந்தையின் பாராட்டு மேன்மேலும் என்னை இந்த வழியிலே ஊக்கியது. 'வாசுதேவபட்டர் வேறு யாரிடமும் தோல்வி யுருவிட்டாலும் தனயனிடத்திலே தோல்வியை எதிர்பார்க்கும் காலம் வரும்' என்ற பேச்சு நாளடைவில் பரவலாயிற்று. விரைவிலேயே எனக்குத் தீக்ஷை செய்வித்து, என்னை அர்ச்சகனாக்கி, என் தந்தை தமது மேற் பார்வையிலேயே என்னைப் பழக்க வேண்டும் என்ற அபிப்பிராயத்தையும் சிலர் கூறத் தலைப்பட்டனர். என் தந்தையுங்கூட என்னைத் தம்முடைய ஸ்தானத்தில் நிலை நிறுத்திவிட்டு விலகிவிட வேண்டும் என்று விரும்பினார்.

ஆனால் பெரியவர்கள் இருக்கும்போது, பகவானுக்கு ஆராதனை செய்யும் பெருந்தொண்டை மேற்கொள்ள என் மனம் விரும்பவில்லை. ஆகவே நான் மறுத்தேன். இல்லாவிட்டால் என் ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தவும், தொழில் திறத்தில் பின்னும் தேர்ச்சி பெறவும் வாய்ப்பு இல்லாமற் போகும் என்று நினைத்தேன். ஆயினும் நான் மறுத்த இரண்டு ஆண்டுகளுக்கெல்லாம் அந்தத் தொண்டு மீண்டும் என் முன்னால் வந்து நின்றது. இந்தத் தடவை நான் மறுக்கவே முடியாது. ஏனென்றால், அந்த ஸ்தானத்தில் தேவகுருவைப் போல வீற்றிருந்த என் தந்தையை எம்பெருமான் ஆட்கொண்டு விட்டார்.

பரம்பரை வழக்கப்படி, நான் தீக்ஷை பெற்று, பகவானுக்கு ஆராதனை செய்யும் விரதத்தை ஏற்றேன். நான் கோயிலுக்கு வந்த புதிதில் ஏனோ மற்ற அர்ச்சகர்களும் கோயில் சிப்பந்திகளும் என்னிடம் பயந்தார்கள். பொது மக்களுக்கு என்னிடம் இருந்த மதிப்பும், என் அப்பழுக்கற்ற குணங்களுமே அதற்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும். 'கோவிந்த பட்டர் என்றால் நெருப்பு' என்ற வார்த்தை எத்தனையோ தடவை என் காதில் விழுந்தது உண்டு. அதனால் நான் பெருமை கொள்ளவும் இல்லை; பிறரை விட உயர்ந்தவனாக என்னை மதிக்கவும் இல்லை.

ஆயினும் நாளாக ஆக, மற்ற அர்ச்சகர்களுக்கு என்னிடம் பொறாமை உண்டாவதைக் கவனித்தேன். அதை நான் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. அவர்கள் எந்த எந்தச் செயல்களைப் புண்ணிய காரியங்கள் என்று நினைத்தார்களோ அவற்றை நான் செய்ய மறுத்ததே அவர்களுடைய பொறாமைக்குக் காரணம்.

கோயில் தாசி மரகதத்துக்குக் கோகிலம் என்று ஒரு பெண் இருந்தாள். பருவமடைந்த நங்கை. தனக்குப் பதிலாக அந்தப் பெண்ணையே கோயில் தொண்டுகளுக்கு மரகதம் அனுப்ப வேண்டும் என்று அர்ச்சகர்கள் அவளை வேண்டிக்கொண்டார்கள். அநேகமாக, கோகிலமே கோயிலுக்கு வரத் தலைப்பட்டாள். அவள் கையால் கொடுக்கும் நெய் விளக்கையும் பூர்ணகும்பத்தையும் அர்ச்சகர்கள் தாமே கையேந்தி வாங்கிக் கொள்வார்கள். நான் மட்டும் வேறு பரிசாரகருடைய கையினால்தான் அவற்றை வாங்குவேன். அவளுடைய நாட்டியம் என்றால், மற்ற அர்ச்சகர்கள் எல்லோரும் கும்மாளம் அடித்துக்கொண்டும் பரிகாசச் சிரிப்புச் சிரித்துக் கொண்டும் இளித்தவாறே அவளுடைய மோகன நடனத்தில் மயங்கிக் கிடப்பார்கள். நானோ இவ்வித விஷயங்களைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டேன். கோகிலத்தின் வீட்டுக்குப் போய் வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டு, அந்த வெற்றிலையைக் குதப்பிக் கொண்டே பகவானின் உத்தரிணியை ஸ்பரிசித்து ஆராதனம் செய்வது அவர்களுக்கு சர்வ சகஜமாகிவிட்டது. சுருக்கமாகச் சொன்னால், கோகிலத்துக்குத் தொண்டு செய்வது அவர்கள் லக்ஷ்யம்; பகவானுக்கு ஆராதனை செய்வதே என் லக்ஷ்யம்.

"எவ்வளவு நாளைக்குத்தான் இவன் இந்தப் பரிசுத்த வேஷம் போடுகிறானோ, பார்க்கலாம். இதற்கு முன்பு இவனைப் போல எத்தனையோ அர்ச்சகர்களைப் பார்த்தாயிற்று. வாசுதேவ பட்டராலேயே இதை எல்லாம் விலக்க முடியவில்லை. ஆனால் அவருக்கு மாத்திரம் பையனிடத்திலே ஒரு பயம் உண்டு: எங்கே சாஸ்திரப் பயிற்சியிலே ஆழ்ந்து போய் இவன் உலகையே வெறுத்துவிடுவானோ என்ற எண்ணத்தினால்தான் அவர் சிக்கிரமே இவனுக்கு ஒருகால்கட்டுக் கட்டி வைத்தார்" என்று எனக்குப் பழக்கமான குரல் ஒன்று பேசுவதைப் பின்னால் கர்ப்பக்கிருகத்திலிருந்து வந்துகொண்டிருந்த நான் கேட்டேன். அவர் யதிராஜ பட்டர். அவருக்கு எதிரே உட்கார்ந்திருந்தவர் மாதவ பட்டர்.

மண்டபத்துக் கம்பத்தின் மறைவில் மறைந்திருந்து அவர்களுடைய சம்பாஷணையைக் கேட்க வேண்டும் என்ற ஆவல் ஏனோ எனக்கு உண்டாயிற்று. சில சமயங்களில் நாம் நம்மை அறியாமலே சில காரியங்களைச் செய்து விடுகிறோம். அவ்வாறே அவற்றின் பயனும் நாம் எதிர்பாராத படி நல்லதாகவோ கெட்டதாகவோ ஆகிவிடுகிறது. என்னை அறியாமலே நான் செய்த அந்தக் காரியத்தின் பயனாகத்தான் இன்று என் வாழ்க்கைப் போக்கே மாறியிருக்கிறது.

மாதவபட்டர் குசுகுசுவென்ற குரலில் பேச ஆரம்பித்தார்: "இன்னொரு புது விஷயம்; உமக்குத் தெரியுமா, யதிராஜ பட்டரே?"

"எதைப்பற்றி?"

"அவனுடைய குடும்ப விஷயந்தான்."

"குடும்ப விஷயமா? அவர்கள் மிகவும் ஒற்றுமையான அந்நியோந்நியமான தம்பதிகள் என்பது எனக்குத் தெரியும். ஒரு வயசில் அவனுக்குத் தங்கப் பதுமைபோல அழகாக ஒரு குழந்தை இருக்கிறது. இரண்டு மாதத்துக்கு முன்பு நான்தான் அதற்கு ஆயுஷ்ய ஹோமம் செய்து வைத்தேன்."

"அதெல்லாம் வாஸ்தவந்தான் காணும்! ஆனால், இப்போது கொஞ்ச நாளாக வீட்டிலே ஏதோ புரைசல். பாவம்! அந்தப் பெண் - ராஜி - என் சம்சாரத்தினிடத்திலே வந்து முறையிட்டு அழுதாளாம்!"

"அது என்ன ஐயா விஷயம்?"

"சில நாளாக அவன் வீட்டிலே உபதேசம் செய்ய ஆரம்பித்திருக்கிறானாம்: பகவானுக்கு ஆராதனம் செய்யத் தீக்ஷை கொண்டிருப்பதனால் இந்த உடலைப் பரிசுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டுமாம்! சிற்றின்பம் மனிதனுடைய தேகத்தை மலபண்டமாக்குகிறதாம். பகவான் அந்தக் குழந்தையைக் கொடுத்திருக்கிறானே, அதனோடு அவனுடைய மணவாழ்க்கை பயன் பெற்று விட்டதாம். அந்தக் குழந்தையின் அன்பிலே அந்தப் பெண் தன் ஆயுள் முழுவதையும் கழித்துவிட வேண்டுமாம்! சின்னஞ் சிறிசு; கல்யாணமாகி இன்னும்—"

"இது என்ன ஸ்வாமி, பெரிய அநியாயமாக இருக்கிறதே! இதற்கெல்லாம் காரணம் வேறு; நான் சொல்லுகிறேன், கேளும்: அவன் பெரிய ஆஷாடபூதி. வசந்த உத்ஸவத்தின்போது ஒரு நாள் நான் என் கண்ணால் பார்த்தேன்: அந்தத் தடிச் சிறுக்கி கோகிலம் நமக்கெல்லாம் வசப்படாமல் இருக்கிறாளே, அந்தக் குட்டி அன்று பாதிராத்திரியில் கோயில் மூடுவதற்கு முன்பு அவனைத் தனியே சந்தித்துவிட்டுப் போனாள். ஏதோ உள்ளுக்குள்ளே ரகசியம் இருக்கிறது; இல்லாவிட்டால்—" என்று அவர் கூறும்போது, நான் மண்டபத்தைத் தாண்டி ஏதோ காரியமாகச் செல்வதுபோல விர்ரென்று நடந்தேன். பாம்பைக் கண்ட தவளைகளைப் போல அவர்கள் இருவரும் பயத்தால் ஸ்தம்பித்துப் போனார்கள். உண்மையைக் கண்டால், பாவத்துக்கு எப்போதும் நடுக்கந்தானே!

அன்றிரவு ஆராதனம் முடிய, வழக்கப்படி இரவு பத்து மணி ஆகிவிட்டது. நான் மிகவும் மனக்கொதிப்போடு, பகவானின் மலரடிகளில் தலை கவிழ்த்தேன். ஏதோ தண்ணென்ற உணர்ச்சி என் மனத்துக்கு அமைதியை அளித்தது. "ஸ்வாமி, இங்கே தான் அடியேன் தேவரீருக்கு ஆராதனம் செய்யவேண்டும் என்ற நியமம் இல்லை. இந்தப் பரந்த உலகிலே எங்கு வேண்டுமானாலும் தேவரீரை ஆராதிக்கலாம். இந்தச் சங்கடங்களிலிருந்து விடுபடுவதற்குத் தேவரீர் காட்டும் ஒரே வழியைப் பின்பற்றுகிறேன். அதிலே உள்ள புண்ணியமும் பாவமும் தேவரீரைச் சார்ந்தனவே. இந்தக் கோயிலை விட்டுப் பிரிந்து, தேவரீருக்கு ஏற்ற அழகுக் கோயிலைச் சமைப்பதே என் பணியாகும்" என்று கூறி, கண்ணீர் சோர எழுந்தேன். எனக்கு ஆனந்தமாக விடை கொடுப்பதுபோல மலர்ந்திருந்தது, பகவானுடைய வதனாரவிந்தம்.

எழுந்து திரும்பிப் பார்த்தேன்: எதிரே கோகிலம் நின்றிருந்தாள். வெள்ளைத் துகில் பூண்டு, அவள் தபஸ்வினிபோல விளங்கினாள். ஏதோ ஓர் உருவம் எங்களை எட்டிப் பார்த்து விட்டு மறைந்தது.

"கோகிலம், விடிகாலை நாலு மணிக்கு இங்கே கோபுர வாசலுக்கு வந்துவிடு. மற்றப்படி எல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன்" என்றேன்.

"சரி" என்று தலையசைத்து விட்டு அவள் திரும்பினாள். நானும் வீட்டை நோக்கிப் புறப்பட்டேன்.

* * *

**வ**ழியிலே என் மனம் ஒரு நிலையில் இல்லை. கடந்துபோன சம்பவங்கள் யாவும் என் மனத்திரையில் கிர் கிர்ரென்று சுழன்றன. நான் தீக்ஷை செய்து கொண்ட பின்பு முதல் முதலில் பகவானை ஆராதனை செய்யவந்த அந்தப் புனித நாள்!

பகவானுக்கு அஞ்சலி செய்த வுடனே, என் உடல் ஆதியந்த

மும் அமுத சாகரத்திலே அமிழ்வதுபோன்ற ஓர் இன்பத்தை உணர்ந்தேன். அந்த நிமிஷமே எனது இந்த உடல் தெய்விக உருவை எய்தியதாக எண்ணினேன்.

'இந்த அற்புத உடலை இறைவன் ஒரு குறிப்பிட்ட லக்ஷயத்துக்காகச் சிருஷ்டித்திருக்கிறான். உடலைச் சூழ்ந்த அழுக்குகள் யாவும் ஒரு புறம் இருக்க, என்னைச் சூழ்ந்த இந்த உலகம் என் உடலைப் பின்னும் அசுத்தமாக்கவே வழி காட்டியது. மணம் என்ற சொல்லை என் ஏழாவது வயசிலேயே காதுக்குள் புகுத்தினர் என் உறவினர். பதினொருவது வயசில் அதைச் செய்வித்துத்தான் விட்டனர். மண வாழ்க்கையின் பயன் மகப்பேறு என்றனர் பெரியோர். அதை நான் எய்தினேன். இனியாவது நான் ஆன்மசுத்தியைப் பயின்று புனிதனாகி இறைவனுக்குத் தொண்டு செய்ய வேண்டும்' என்று கருதினேன்.

என்னுடைய இந்தச் சங்கல்பத்தை மனைவிக்குத் தெரிவித்தேன். முதலில் அவள் அதை ஏதோ விளையாட்டு என்று நினைத்திருக்கவேண்டும். ஏனெனில், பின்பு நாலைந்து நாள் கழித்து அவள் காட்டிய அந்த உக்கிர வடிவம் - அவள் கண்களிலே மிதந்த அந்தக் காமத் தழல் -

ஒரு பெண்ணுக்கு இவ்வுலகிலே 'கணவனுக்கு மனைவி' என்ற ஒரே சம்பந்தந்தானா முக்கியம்? அவள் தன் குழந்தைக்குத் தாயாக இருக்கிறாள்; ஊரிலுள்ள அநாதை மக்களுக்கு அன்னமளிக்கும் மாதாவாக இருக்கிறாள். பொது மக்களுக்குப் பல விதங்களிலே உதவக் கூடிய சகோதரியாக இருக்கிறாள். ஆனால், இந்தச் சம்பந்தங்களை எல்லாம் அதிகமாகப் பாராட்டாமல் சமூகம் ஏனோ கணவன் மனைவி என்ற உறவுக்குத்தான் மிகுந்த பெருமையை அளித்திருக்கிறது. அந்தப் பெருமைக்கு உண்மையிலே ஆத்மிக சம்பந்தம் அடிப்படையாக இருக்க வேண்டும். ஆயினும் இன்றை விவகார உலகில் சரீர சம்பந்தமே பலத்த காரணமாக இருக்கிறது. சாலையிலே ஓர் அண்ணனையும் தங்கையையும் கண்டால்கூட, 'இவர்கள் கணவனும் மனைவியுமோ?' என்ற எண்ணந்தான் மக்களுக்கு உடனே தோற்றுகிறது. இத்தனை விகார மனமுள்ள சுற்று வட்டத்தில் வாழ்பவள்தானே ராஜியும்?

இந்த இரண்டு மாதங்களுக்குள்ளே அவள் மனத்தில் என் விஷயமாக உண்டான எரிச்சல் இவ்வளவு அவ்வளவு அல்ல. தன் மனக்குறையை அவள் வெளியிலும் சொல்லியிருக்கிறாள் என்பதையும் அறிந்துகொண்டேன். மகவின்மீதுள்ள அன்புக்கும் அவளுடைய காம இச்சைக்கும் சம்பந்தமே இல்லை. இப்போது என் கடமை என்ன என்று யோசிக்கலானேன். நான் எடுத்துக்கொண்ட விரதப்படி, இறைவனை வழிபடுவதா அல்லது கணவன் என்ற முறையில் மனைவியின் காம இச்சைக்குத் தகுந்த யந்திரமாக இருப்பதா? மற்ற அர்ச்சகர்கள் விஷயத்தில் இரண்டும் ஒருங்கே கைகூடுவதாக இருக்கலாம்; இன்னும் கேட்டால், கோகிலத்தினிடத்திலேகூட அவர்கள் நாட்டம் செல்லக் கூடும். ஆனால் என் விஷயத்தில்—

பகவானுக்குப் பணி செய்வதையே உயர் நோக்கமாகக் கொண்டுவிட்டேன். வீட்டுக்குப் போனதும், ராஜி கதவைத் திறந்தாள். சாப்பாடு ஆனதும் படுக்கையில் வந்து படுத்ததுதான், மனச் சோர்வினாலும் சிந்தனையினாலும் என்னை அறியாமல் தூங்கிவிட்டேன். பாதித் தூக்கத்தில் சுரீலென்று நெருப்புப் பட்டாற்போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. விழித்துப் பார்த்தேன்: ராஜி என் உடலை இறுகப் பிணைத்துக்கொண்டிருந்தாள். என் மனவேதனையைச் சகித்துக்கொண்டேன்; அவளை விலக்க இருதயம் அத்தனை கடுமையாக இல்லை. 'எல்லாம் இந்த ஒரே இரவு; பிறகு விமோசனந்தான்' என்ற முடிவிலே மனத்துக்கு ஓர் ஆறுதல்.

* * *

மறுநாள் வைகறையில் வழக்கம்போல எழுந்து வெளியே கிளம்பினேன். கோபுர வாசலுக்கு வந்தேன். கோகிலம் அங்கே தயாராக இருந்தாள். அப்பொழுதே முதல் பஸ்ஸைப் பிடித்துச் சென்னை வந்து சேர்ந்தேன். அங்கே ஒரு நிமிஷங்கூடத் தங்கவில்லை. கோகிலத்தைத் திருச்சிக்குக் கொண்டுவிடப் புறப்பட்டேன்.

திருச்சியில் மறுநாள் காலைப் பத்திரிகையில் பின்கண்ட செய்தி வெளியாகியிருந்தது:

'அர்ச்சகரின் காலித்தனம்; தாசிப் பெண்ணை இழுத்துக்கொண்டு ஓடினார்!'

அந்தச் செய்தியைக் கோகிலம்தான் எனக்குக் காட்டினாள்; "என்னால் உங்களுக்கு எத்தனை பெரிய அவதூறு!" என்று வருந்தினாள்.

"நான் உனக்குச் செய்த உதவிக்காக எந்த அவதூறையும் ஏற்கத் தயாராக இருக்கிறேன்" என்றேன்.

கோகிலம் மூன்று வருஷங்களுக்கு முன்பு தனக்குப் பாட்டு வாத்தியாராக இருந்தவரின் மகனை மணந்துகொண்டு, குடும்பப் பெண்ணாக வாழ எண்ணினாள். கோயிலின் அந்தச் சூழ்நிலையிலே வசிப்பதை அவள் வெறுத்தாள். தன்னைத் திருச்சிக்குக் கொண்டு விட்டுவிட்டால் எப்படியாவது அவனை மணந்துகொள்ள முடியும் என்று அவள் தெரிவித்தாள். என் சொந்தப் பெண்ணைப் போல நினைத்து, அவளுக்கு அந்த உபகாரத்தைச் செய்தேன். அந்தத் தம்பதிகளை ஆசிர்வதிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. ஆனால், திருச்சியில் இரண்டு நாள் மறைந்திருந்து வெளிக் கிளம்புவதற்குள் என் பாடு போதும் போதுமென்றாகிவிட்டது.

* * *

அங்கிருந்து நேரே பதரிகாசிரமத்துக்கு யாத்திரை செய்தேன். அந்த நீண்ட யாத்திரையில் என் உடலும் உள்ளமும் பரிசுத்தமாயின. கங்கைக் கரையில் கனகலத்தில் நான் என் அழகிய மனக்கோயிலிலே எம்பெருமானை ஸ்தாபித்து, நாடோறும் பகவானின் வாடாத மலரடிகளைச் சிந்

தனை மலர்களால் அர்ச்சித்து வருகிறேன். என் மனம் இப்போது பேரானந்தத்தில் மூழ்கியிருக்கிறது.

ஆகாயத்திலே அதோ பூர்ண சந்திரன் கம்பீரமாகப் பவனி வருகிறான். அவனுடைய அந்த முழு மண்டலத்தைக் காட்டிலும் அவனுடைய மாசைப் பார்ப்பதில் தான் மக்களின் பார்வை செல்லுகிறது. தேவ நதியான கங்கையின் வெள்ளிய நீர் நிலா வெளிச்சத்தில் களகளவென்று அகண்டமாக ஓடுகிறது. அந்த நீர் வெள்ளத்தைப் போலவே பகவானைப் பற்றிய என் சிந்தனைகளும அகண்டமாகப் பாய்ந்தோடுகின்றன. அங்கே, அதோ தொலை தூரத்தில் இணையை விட்டுப் பிரிந்து, பற்றறுத்து வந்த மான் ஒன்று, துறவியைப் போல, என்னைப்போல, மேலே பூர்ண சந்திரனைப் பார்க்கிறது; கீழே நதியின் ஓட்டத்தைப் பார்க்கிறது. அதன் கண்களில்தான் என்ன ஆறுதல் !

பின்னால் இருக்கும் அந்தக் காட்டிற்குள் இந்த மானின் இணையான பெண்மான் பசும் புல்லை மேய்ந்துகொண்டு, உல்லாசமாக வாழ்ந்துகொண்டிருக்கும். ராஜியும் பரம்பரையாக வந்த ஏராளமான சொத்துக்களுக்கு எஜமானியாகி, கேளிக்கை வாழ்விலே மிதந்துகொண்டிருக்கக்கூடும். ஆயினும், என் கடமை—?

என் கடமையைத்தான் தீர்மானித்தாயிற்றே! பகவானுக்கும் எனக்கும் உள்ள இந்தப் பாசத்தை இனி யாராலும் அறுக்க முடியாது. உலகம் என் பாவ புண்ணியங்களைத் தீர்க்கும் நியாயாலயம் அல்ல.

இவ்விதம் முடிவு கட்டியபோதுதான் அந்த மானின் கண்களிலே தென்பட்ட ஆறுதல் என் உள்ளத்தில் உதித்தது. பூர்ண சந்திரனை நோக்கியவாறே, “ஓம் பூர்ணமத: பூர்ணம்” என்ற மந்திரத்தை உச்சரித்தேன். அந்த மந்திர ஒலியைக் கேட்டுக்கொண்டே, கலகலவென்று சிரித்துக்கொண்டே ஓடியது பாகீரதி நதி.

---

# பொங்கல் பெருநாள்

இயற்கை யன்னைதோற்றத்திலே எழில் பொங்கிட
ஏற்றிவைத்த தீபத்திலே சுடர் பொங்கிட
கயற்கண் மங்கை உள்ளத்திலே காதல் பொங்கிட
காராம்பசு மடிதனிலே பால் பொங்கிட

முயற்சி கொண்டு(உ)ழைத்தவர்க்கே பலன் பொங்கிட
முருகவிழ் மலர்களிலே தேன் பொங்கிட
வயற்புறத்தே நெற்கதிர்கள் வதியப் பொங்கலும்
வந்ததுபார் தமிழகத்தார் மனம் களிக்கவே.

பொங்கலென்ருல் தமிழர்களின் உள்ளம் பொங்குதே
புதுமை யெலாம் பொங்கலிலே எழில் பரப்புதே
மங்களம்தான் பொங்கலிலே எங்கும் தங்குதே
மனைகள்தோறும் பால்பொங்கல் மணம் கமழுதே

எங்கள்பெரும் பண்டிகையாம் பொங்கல் பெருநாள்
இனிப்புமிகு செங்கரும்பு ஏற்றங்கொள்ளும் நாள்
தங்க நிற மஞ்சள், இஞ்சி தலைசிறக்கும் நாள்
தனிகையிட்டுப் புதிரும் கொள்ளத் தருந்த திருநாள்.

—கா மு. ஷெரீப்

இசைக் கருவிகளுக்கெல்லாம் ஏற்ற இடம்
நீண்ட காலமாக சங்கீத
வாத்யங்களுக்குப் புகழ்பெற்றது

## ஒலிபெருக்கி அமைப்பு

சௌகர்யமாய் செய்து தரப்படும்
புத்தம் புதிய கிராமபோன் ரிகார்டுகள்
எப்போதும் கிடைக்கும்

சகல சங்கீத வாத்யங்களும்
சிறந்த கவனத்துடன் பழுது பார்த்துத்
தரப்படும்.

**தி சௌத் இந்தியா மியூஸிக் எம்போரியம்**
**3, பிராட்வே, சென்னை.**

பிராஞ்சு :
பாண்டி பஜார், தியாகராயநகர்.

## இந்தியன் மியூச்சுவல்

**லைப் அஸோஸியேஷன் லிமிடெட்**
**10, மவுண்ட் ரோடு, சென்னை.**

மன நிம்மதி : குடும்பப் பாதுகாப்பு

அபாயங்கள் நிறைந்த இந்த யுத்த காலத்திலும் தங்களுக்கு மன நிம்மதியையும், தங்கள் குடும்பத்துக்குப் பாதுகாப்பையும் அளிப்பது இன்ஷியூரன்ஸ்.

விவரங்களுக்கு மேற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

உயர்ந்த சிற்றுண்டிகளுக்கும்
சிறந்த திண்பண்டங்களுக்கும்
குளிர்ந்த பானங்களுக்கும்
— உகந்த இடம் —

## சுசி ருசியான சாப்பாடு

டீ பார்ட்டிகளுக்கும், டின்னர்
பார்டிகளுக்கும் ஏற்பாடு
செய்து தருகிறோம்.

# பாரத் கபே

மவுண்டு ரோடு, சென்னை
போன் நெ. 86009

# கதைக் கோவை

## நான்காம் தொகுதி

**75—எழுத்தாளரின்**
**75—சிறு கதைகள்**

10—2—45க்குள் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்வோர்க்கு—புத்தக விலையில் ஒரு ரூபாய் குறைத்துத் தரப்படும். காகிதப் பஞ்சத்தை உத்தேசித்து அதிகப் பிரதிகள் அச்சிட முடியவில்லை. தங்கள் பிரதிக்கு முந்திக் கொள்ளவும்.

**அல்லயன்ஸ் கம்பெனி,**
மயிலாப்பூர் :: சென்னை.

72A

காலேப் புத்துணர்ச்சி!




பண்டிட். D. கோபாலாச்சார்லுவின்

அருண

உயர்ந்த சூதக டானிக்

ஆயுர்வேதாசிரமம்

கோபதிரோடு, தியாகராயநகர், சென்னை.





சந்தணம்

அழகளிக்கும் தைலம்

சந்தணத்தின் அழகளிக்கும் தன்மை மகாகவி காளி தாஸன் அதைப்பற்றி புகழ்ந்தெழுதிய பாட்டைக்கொண்டு தெரிந்தவிஷயம். சுத்தமான சந்தணத்தைலம் நாகரீக நங்கையர்க் கொவ்வாத அதி மணமுள்ளது. ஆதலின் அவர்கள் அழகு செய்து கொள்ள மைசூர் சந்தண சோப்பையே உபயோகிக்கிறார்கள்.

மைசூர்

சந்தண சோப்

சந்தணம் குறிப்பது குற்றமற்ற குணமே

B-4 தென் இந்தியாவுக்கு ஸோல் ஏஜண்டுகள்:. பெஸ்ட் & கம்பெனி, லிமிடெட்., சென்னை.

# சொல்லும் செயலும்

"ரோகிணி"

பாலா. என்னை மன்னித்து விடு. நான் என்ன செய்வேன். எனது வாழ்க்கைச் சக்கரம் ஓடத் தொடங்கி முதல் பாதை சிறிது தூரம் செல்வதற்கு முன்னாலேயே முள்ளாலும், புதராலும் மறைக்கப்பட்டது. நான் வேறு பாதைக்குத் திரும்பக் கூடாது என்ற உறுதியினால், முள்ளை விலக்கி புதரில் புகுந்து செல்ல முயன்றேன். ஆனால், புதரில் சிக்குண்டு திணறி இனி விதியில்லை வேறு பாதையில் ஓடித்தான் ஆகவேண்டும்" என்ற நிர்ப்பந்தத்தைக் கொடுத்துவிட்டது. வேறு பாதையின் எல்லையில் திரும்பப் போகிறோம் என்ற நிச்சயம் ஏற்பட்டத் தருணம் என் இருதயம் படும்பாடு ஈசன்தான் அறிய வேண்டும். என்னுயுள் உள்ள மட்டும் உன்னைக் கைவிட மாட்டேன். இது எனது சுயநலத்திற்கு என்றாலும், உனது நன்மைக்கும் இது சாதகமாக இருக்கும் என்ற திருப்தியுடனேயே ஒப்புக்கொண்டேன்" என்று, அவ்வீட்டு மாடி அறையில் சாய்மான நாற்காலியில் சாய்ந்து கையில் வைத்திருக்கும் படத்தைப் பார்த்த வண்ணம், மனக்கடலில் தோன்றும் எண்ணற்ற அலைகளினால் மோதுண்டவனாயிருக்கும்பொழுது "ராமு!" என்ற குரல் கேட்டுத் திரும்பினான்.

விசாலி வாசற்படிக்கருகில் நின்றுகொண்டிருந்தாள்.

"விசாலி!" என்றான். மேலே பேசமுடியவில்லை. விசாலி, என்ற அந்த ஒரே சொல்லில், சோகம், பயம், தாபம் எல்லாம் ஒருங்கே முகத்திலும் குரலிலும் பிரதிபலித்தன. அதை அறிந்தும் அறியாதவள போல் அருகில் வந்து படத்தைப் பார்த்துவிட்டு "ராமு! இதென்ன முதலைக் கண்ணீர்? உலகில் "பெண்ஜாதி யிறந்தவன் புது மாப்பிள்ளை" என்று சொல்லுவார்கள். நீயோ அவள் இருக்கும்பொழுதே புது மாப்பிள்ளையாகப் போகிறாய் நிச்சய தாம்பூலத்திற்கு ஏற்பாடாகிறது. இதோ அரை மணிக்குள் மாப்பிள்ளையை அழைக்க வரப் போகிறார்கள். சாயங்கால முதல், ராமு! உனது சொல் என்ன? செயலென்ன? என்று கேட்க என் மனம் துடித்தது. உன்னை நாலு பேர் முன்னிலையில் அவமானப்படுத்த என் மனம் இடமளிக்கவில்லை. சற்றுமுன் நீ மாடிப்படி பக்கம் வந்ததைப்பார்த்துவிட்டு மெள்ள ஒருவர் கண்ணிலும் படாமல் வந்தேன். முந்தாநாள் சாயங்காலம் உன் அண்ணாவின் கடிதத்தைப் பார்த்ததும் தூக்கிவாரிப் போட்டது. நம்பவே முடியவில்லை. பாலாவிற்கு நீ இவ்விதத் துரோகம் செய்வது நியாயமா? "என்ன நேரிட்டாலும் உன்னைக் கைவிட மாட்டேன்" என்று என்னை சாட்சி வைத்துக் கூறினாயே. அது என்ன வாயிற்று? அவள் நோயாளி. அதனால் அறுந்த செருப்பை வீசி எறிவதுபோல் அவளை விட்டுவிடலாம். அதே போல் நீ நோயாளியாக இருந்தால், கூலிவேலை செய்தாவது உன்னுடன் இருக்கவேண்டும். உனது கஷ்டங்களை அவள் அனுபவிக்க வேண்டும். அதுதான் தர்மம். சமூகம் ஒப்பும். அவள் உன்னை விட்டால் சமூகம் அவளுக்கு நல்வரவு கூறாது. என்ன நியாயம்? ஆண்களுக்கு ஓர் சட்டம். பெண்களுக்கோர் சட்டம். பெயர் லாப நஷ்டம் இருவருக்கும் பொது என்பது. சமூகத்திருத்தம் என்று பறை சாற்றும் நவயுக வாலிபர்களின் செய்கையா இது? உன்னைப் போன்றவர்கள் உறுதியைக் கடைப்பிடிக்காத வரை பெண்கள் முன்னேற்றம், சமத்வம் என்பதெல்லாம் பகற் கனவு. சுயநலமே முன் நிற்கிறது. இந்தக் கல்யாணம், உனது சுகத்திற்காக அல்லவென்று சொல்ல முடியுமா?" என்றாள்.

"நல்ல சமயத்திற்கு வந்தாய். விசாலி, அந்த நாற்காலியில் உட்காரு. நாம் இப்பொழுது நியாயம் பேசுவோம்" என்று அவனும் எழுந்து உட்கார்ந்தான்.

"என்ன நியாயம்? ஆண் இனமே இரக்கமற்ற கடின ஹ்ருதயம்"

"விசாலி. அது சொல்லளவில். ஆண்களுக்கும் ஹ்ருதயமுண்டு. இந்த சமயம் என் மனம் படும்பாடு ஈசனே அறிவார். நீறு பூத்த நெருப்பைப்போலிருக்கிறது. மனமும் செயலும், நீ வேறு சொல்லம்புகளை வீசுகிறாய். நான் சொல்லும் விஷயங்களைக் கேட்டுவிட்டு பிறகு நியாயம் பேசு"

"சரி. சொல்லு. உனது நியாயத்தை" என்று நாற்காலியில் உட்கார்ந்தாள்.

"பாலா இவ்விடம் அடியெடுத்து வைத்தது முதல் ஒன்பது வருஷ காலம், நான் அவளுடன் பட்ட கஷ்டம் கொஞ்சமா? எனது சக்திக்கு மீறியே வைத்தியம் செய்தேன். அவளுடைய வியாதியின் காரணமாக வேலைக்காரிகள் தங்கமாட்டேனென்கிறார்கள். இப் பட்டிக்காட்டில் எந்த சமையல்காரன் வருவான். நானே வீட்டு வேலைமுதல் செய்யவில்லையா? அண்ணாவும் அம்மாவும் செய்த உபாயம் எஸ். எஸ். எல். ஸி. ஒரு முறை தவறினதும், சுகமான கிராம காலக்ஷேபம். கிரா

மத்தை விட்டால் பிழைப்பில்லை. சொல்ப சம்பளத்தில் பட்டண வாசங்களில், பாலாவை வைத்துக்கொண்டு காலக்ஷேபம் செய்வது முடியாது. இந்த நினைப்புடன் பொறுமையுடன் இவ்விடத்திலேயே காலம் கடத்தி வந்தேன். விசாலி, ஒரு விஷயம் நினைப்பூட்டுகிறேன். பெண்ணைப் பார்த்துவிட்டு வந்ததும், அம்மாவிடம் "பெண் காம்பீரமாக இல்லையே. சிக்கு ஏதாவது இருக்குமோ" என்றதற்கு, "உன் அத்தை பெண்கள் விசாலி, கமலி, லீலி எல்லோரும் இந்த வயதில் இப்படித்தான் இருந்தார்கள். பிறகு புத்தி யறிந்ததும், வாளிப்பாக வளரவில்லையா? தானே எல்லாம் நன்றாக வளர்ந்துவிடுவாள்" என்றாள். பிறகு தலைவிசை சங்கராந்திக்கு வந்த பொழுது எனக்கு ஸ்நானத்திற்கு வெந்நீர் வைக்க வந்தாள். சிறிய தோண்டியில், ஜலம் கொண்டு வந்து தவலையில் விட்டாள். அப்படியே தவலையைப் பிடித்துக்கொண்டு நின்றாள். மேல்மூச்சு வாங்கிற்று. "சரிதான் இது பாம்பே ஹால் பொம்மை. அழகைப் பார்த்து ஆனந்திக்கலாம்" என்ற முடிவிற்கு வந்துவிட்டேன். ராமுவிற்கு கால்கட்டு போட்டாய்விட்டது என்று அம்மா நிம்மதியாகக் கண்ணை மூடினாள். அக்கா அவள் குடும்பத்தை விட்டு விட்டு எனக்கு உதவிக்கு வரமுடியுமா? ஆகவே எங்களது தனிக் குடித்தனத்தில், பாதிநாள் வீட்டு வேலை என்னைப் பொறுத்ததே. ஆனால், அவள் எழுந்திருந்து வேலை செய்ய முடிந்த நாட்களில் அவ்வளவு நாட்கள் நான் பட்ட கஷ்டங்களை யெல்லாம் அவளது ஒருவேளை பணிவிடை மறக்கச் செய்துவிடும். விசாலி! அப்படியே இருந்து வந்தாலும் என் காலத்தை ஒருமாதிரியாகக் கழித்து விடுவேன். வர, வர படுத்த படுக்கையானாள். வேலைக்காரி உதவியால் அப்படியும் கொஞ்சநாள் கழித்தேன். பிறகு அவள் அப்பா தான் இருக்கும் ஊரில் நல்ல லேடி டாக்டர் வந்திருப்பதாயும், அவளிடம் வைத்தியம் செய்வதாயும் அழைத்துச் சென்றார். நானும் சென்றேன். அவ்விடம் என வரவு திருப்திகரமாய்த் தோன்றவில்லை. பிறகு இங்கும் அங்கும் ஊசலாடினேன். கடைசி போல் லேடி டாக்டர் குணமாகாது என்று கைவிட்டாள். அழைத்துச் செல்லுவதாகச் சொன்னேன்.

"நீ அழைத்துப் போய் என்ன செய்வாய். இவ்விடமே இருக்கட்டும் என்றார் மாமனார். ஆனால் என்னை வந்து போய்க் கொண்டிரு என்று சொல்லவில்லை. பாலா நான் புறப்படும் பொழுது "என்னால் இதுவரை கஷ்டமே. இனியாவது சுகப்படுங்கள்" என்றாள். தனியே சமைத்து சாப்பிட்டேன். விசாலி! எவ்வளவு நாள் அலுப்பினால் பட்டினியாகப் படுத்திருப்பேன் தெரியுமா? பிறகு எனது நிலைமைக்கு இரங்கி, அம்மாஞ்சி ராமையா தன் வீட்டில் சாப்பிடும்படி சொன்னான். சரி யென ஒப்புக் கொண்டேன். பிறகு பந்தநல்லூர் சின்னண்ணா தன் வீட்டிலும் சப்பிடும்படி வற்புறுத்தினார். காய் கறி, பால், அரிசி இவைகளைக் கொடுத்து சாப்பிட்டு வந்தேன். இரண்டு மாதம் சென்றது. எனக்குச் சாப்பாடு போடுவதில் போட்டி வந்து, சின்னண்ணா சம்சாரமும், அம்மாஞ்சி சம்சாரமும், விபசாரப் பட்டங்களுடன் சண்டை போடலானார்கள். நித்ய பிரும்மசாரியாய் காலங் கழிக்கும் என் பெயர் சந்தியில் அடிப்பட்டது. வேலைக்கார அம்மா என்றால், பெண்டுகள் இல்லாத வீட்டில் வரமாட்டேனென்கிறாள். சமையற்காரன், பட்டிக்காட்டிற்கு வர 25 ரூ. கேட்கிறான். அதற்கு என்னிடம் வகையில்லையே. இது விஷயமாக அநேக இன்னல் பட்டுக் கடைசியில், யாவரும் சொல்லிய ஏற்பாட்டிற்கு இணங்க வேண்டியதாயிற்று. அதுவும், பாலாவின், நன்மையைஉத்தேசித்தே,என்னை விரும்பி வரும் பெண்களிடம் "பாலாவை நான் வேண்டாமென்று ஒதுக்கவில்லை. அவள் சிக்காளி. அவளையும் வைத்துக் கொள்ளுவேன். அவளுக்கும் சிசுருஷைகள் செய்யவேண்டும். அவளை கடைசிவரை ஆதரிப்பது என்கடமை' இதற்கு சம்மதித்தால் கல்யாணம் செய்து கொள்ளு. பிறகு இதைப்பற்றி யாதொரு சச்சரவும் கூடாது" என்று நேரிலேயே கேட்டுவிடுவேன். இதனால் சுமாராக உள்ள இடங்களெல்லாம் பின் வாங்கின. இந்தப் பெண்ணிற்கு தாயார் இல்லை. மாற்றாந்தாய் கொடுமையில் நன்றாக அடிபட்டவள். முழுப்பட்டிக்காட்டில் வளர்ந்தவள். சாத்வீகமான சுபாவம். என் கேள்விக்கு ஆக்ஷேபனையின்றி ஒப்புக் கொண்டாள்" முன் வந்தவளை பின் வருபவள் விலக்க முடியுமா? என்று சொல்லி விட்டாள். கல்யாணம் முடிந்ததும் பாலாவை அழைத்து வரப்போகிறேன். உதவிக்கு ஆளிருந்தால் தான் வருவதற்கு ஆக்ஷேபனை இல்லை யென்று சொல்லி யிருக்கிறாள். அதனால் இக் கல்யாணம் பாலாவின் நன்மைக்கே. இக் கல்யாணமில்லாமல் அவளை வைத்துக்கொள்ள, வசதியில்லாமல் இருக்கிறது'

"நீ சொல்லுவதெல்லாம் சரியான காரணம் தான். ஆனால் நான் சொல்லுவது என்னவென்றால். பாலா வியாதி குணமாகாது என்றால் ஆயுளும் அதிக நாளிருக்க முடியாது. அதனால் இவ்வளவு நாள் கஷ்டப்பட்டவன் இன்னும் சிறிது நாள் பொறுக்கக் கூடாதா? என்பதே. ஏன் நீ நிலங்களை ஒருவன் மேல் பார்வையில் விட்டு விட்டு அறுவடை சமயத்திற்கு வந்தால் போகிறது. மற்ற நாட்களில் என்னிடம் கொஞ்ச நாள், அக்காவிடம் கொஞ்சநாள், அண்ணாவிடம் கொஞ்சநாள், பாலாவிடம் கொஞ்சநாள் இவ்விதமாகக் கழிக்கலாமே."

"விசாலி! கிராமத்தைக் கவனியாவிட்டால் பிழைப்பில் மண். மேலும் என் வயதில், என் நிலைமையில் பிற இடங்களில் இருப்பதென்றால் லகுவான விஷயமா? நீங்கள் எவ்வளவோ அன்போடு என்னை ஆதரிக்கலாம். ஆனால் மனம், குரங்கினத்தைச் சேர்ந்தது. சாதாரணமாக நடக்கக் கூடிய விஷயம் உன் மனதிற்கு விரோதமாகத் தோன்றலாம்.

புண்பட்ட என் மனதின் கோளாறு அவ்விதம் தோன்றும். வீண்மனஸ்தாபம் தான் மிஞ்சும். எவ்வளவோ சிந்தனைக்குப் பின் இம் முடிவு.

“ சரி உன்னிஷ்டம். இனிமேல் நான் சொல்வதும் அறிவீனம்தான். ஆனால் ஒரு விஷயம் உன்னை எச்சரிப்பது என் கடமை. முன்னால், நானும் பாலாவும் சேர்ந்து இருக்கும் ஒரு நாள் பாலா “எவ்வளவு நாளைக்கு இந்தக் கஷ்டம். கல்யாணம் செய்து கொள்ளச் சொல்லுங்கள்” என்றதற்கு “புருஷனுக்கு வியாதி என்றால் ஸ்த்ரீகள் கல்யாணம் செய்து கொள்ளுகிறார்களா? அதுபோல் நானும் விதி கடமை என்று காலம் கழிப்பேன். கல்யாணம் என்ற நினைப்பே என்னை ஏசுவது போல் இருக்கிறது” என்றாய். அந்தச் சொல்லை செயலில் காட்ட முடிந்ததா? அதுபோல தான் பாலாவை அழைத்து வருவேன் இவள் செய்வாள் என்பதும் நடக்கும். பாலா இவ்விடம் வரமாட்டாள். அப்படி வருவதால் அவளாக விரும்பும் பொழுது அழைத்து வந்தால் போதும். நீ வற்புறுத்த வேண்டாம். அப்படி செய்தால் அந்த விஷயமும் தோல்வியே. நீ! நினைக்கிறபடி, வருகிற பெண் சொன்னபடி, நடப்பது முடியாத விஷயம்.”

“பாலாவின் நன்மைக்குத் தான் கல்யாணம். பாலாவை அழைத்தே வருவேன். எனது குடும்பம் ஆனந்தமாக நடப்பதை நீ பார்ப்பாய்.”

“ சரி நடக்கட்டும்.”

3

“ என்ன விசாலி அதற்குள் புறப்பட்டுவிட்டாய். இரண்டு நாள் தங்கிவிட்டுப் போனாலென்ன?” என்றார் தமையன் கோபு.

“ இல்லை அம்மாஞ்சி. என் ஓர்ப்படி பெண்ணிற்கு சீமந்தம். அவசியம் போக வேண்டும். ஊருக்குப் போகும் பொழுது, இவ்விடம் வந்து விட்டுப் போகிறேன். எட்டு நாளைக்குள் திரும்பி விடுவேன்.

“ அதற்குள் நாங்கள் ஊருக்குப் போய்விடுவோம். உன் அருமை அம்மாஞ்சியின் புதுக் குடித்தனத்தை வேண்டுமானால் பார்ப்பாய் ” என்றான் கோபு.

“ விசாலி! அவசியம் வர வேண்டும். உன் சொல்லை மறக்காதே ” என்றான் ராமு.

* * *

எட்டுநாளைக் கெல்லாம் திரும்பிவந்தாள் விசாலி.

“ வாருங்கள் அத்தங்கா ” என்று நமஸ்கரித்தாள் புதுப் பெண் விமலா.

“ இந்தா இந்தா அவளை நமஸ்காரம் பண்ணாதே. எனக்கு ஆறு நாட்களுக்குச் சிறியவள் ” என்று சிரித்துக் கொண்டே அவ்விடம் வந்தான் ராமு.

“ அடேயப்பா. ஆறு நாட்களுக்கு பெரியவளென்றால் என்ன பெருமை. ஆற்று மணலால் பிள்ளையார் பிடித்துவிட்டு. பிரதக்ஷண நமஸ்காரம் பண்ணு என்றால் பண்ணிக்கொண்டிருக்கும் விசாலி என்று நினைத்தாயா. நான் குடும்பத் தலைவி. அடுத்த மர்தம் மாப்பிள்ளை வரப்போகிறான்.” என்று சிரித்தாள்.

“ விசாலி! பள்ளிக்கூடத்தில் படிக்கும் நாளும் கள்ளமில்லாமல் விளையாடும் நாளுமே பிறவியில் சுகமனுபவித்த காலம். அந்த நாளின் இன்பத்தில் ஆயிரத்தில் ஒரு பங்கு இப்பொழுது காண முடிகிறதா?”

“ உண்மைதான். இனிமேல் அந்நாளை எதிர்பார்க்க முடியுமா? அதுபோகட்டும். உன்னுடைய துன்பக்கேணியில் இன்ப ஊற்றுப் பெருகிவிட்டதினால் வாழ்க்கையின் தாபம் தீர்ந்துவிட்டிருக்குமென்று நினைக்கிறேன்.” என்றாள்.

“ எனது லக்ஷியம் முழுவதும் கைகூடினாலல்லவோ தாபம் தீரும்.”

“ வீண் கனவு கண்டு நீயும் கஷ்டப்பட்டு பிறரையும் வருத்தாதே. உனது லக்ஷியம் வாயளவில் தான் கைகூடும்.”

“ இல்லவே இல்லை. விமலா வந்த மறுநாளன்றே என்னைப் போகும்படி சொல்லுகிறாள். என் மனம் சற்றுத் தயங்குகிறது.”

“ ஆமாம். அத்தங்கா நீங்கள் பத்துநாள் இவ்விடம் தங்குங்கள். இவர் போய் பாலாவை அழைத்து வரட்டும். நீங்கள் இருக்கும் பொழுதே எங்களுடைய, புதுமை உரை அகன்றுவிடும். பிறகு சமர்தானமாக நீங்கள் ஊருக்குப் போகலாம் ” என்றாள் விமலா.

“ விமலா! நான் சொல்வதைக்கேள். அவளாக வரும் பொழுது நீ அமைதியாகப் பணிவிடை செய். வலுவில்போய் அவளை அழைக்க வேண்டாம். நீ நினைக்கிறபடி நடப்பாய் என்பது சாத்யமல்ல. இயற்கை அது. சொல்லும் செயலும் ஒன்றாக இருந்துவிட்டால் பிறகு மனிதத் தன்மையே அற்றதாய்விடும் கொஞ்ச நாட்களாவது நிம்மதியான வாழ்க்கை நடத்துங்கள்.”

“ அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள். நிச்சயம் நான் தணிந்தே நடப்பேன். அவளை அவசியம் அழைத்துவர வேண்டும் ” என்றாள் விமலா.

“ பிறகு உங்களிஷ்டம். நான் இப்பொழுது தங்க முடியாது. அடுத்த மாதம், அனுராதாவின் கல்யாண விஷயமாக திருச்சி போவேன். அப்பொழுது அம்மாஞ்சியின் சுயநல மற்ற தியாகத்தின் தாம்பத்யதில் பாலாவின் சௌக்கியத்தைக் காண இவ்விடம் அவசியம் இறங்குகிறேன்.”

“ சரி. இதெல்லாம் கிடக்கட்டும். கொஞ்சம் களைப்புத்தீர அதோ விமலா கொண்டு வரும் காப்பியைச் சாப்பிட்டுவிட்டு, ஸ்நானம் சாப்பாடெல்லாம் நடக்கட்டும். இரண்டு நாள் கிராம வாசம் செய்துவிட்டுப் பிறகு ஊருக்குப் போகலாம்.”

“ இந்தக் கிராமத்தில் சிறு குழந்தை முதல் வேண்டிய வாசம் செய்தாய் விட்டது. உங்கள் தாம்பத்தியத்தைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்தால்

என் தாம்பத்தியம் என்னவாவது? இன்று ஒரு நாள் ஹால்ட். நாளைக்காலை வண்டியில் புறப்பட வேண்டும்."

"குசாலாகக் கிளம்பு. உன் தாம்பத்யம் சுகமடையட்டும். உன்னுடைய பத்துநாள் பிரிவைக்கூட சகித்து, குடும்பத்தை நிர்வகிக்கத் தெரியாதவர் உன் கணவன் என்பது உன்ணம். இன்னொரு சமயம் பார்த்தால் 'ஐய இவ்வளவுதானா?' என்று கேட்கிறேன்" என்று சிரித்தான் ராமு.

"உண்மை என்று ஒப்புக் கொள்ளுவார் பாரேன்."

* * *

மறுமாதம் விசாலி வந்தாள்,

"விசாலி! நல்லசமயத்திற்கு வந்தாய். பாலா நாளைய தினம் வரப்போகிறாள்." என்றான் ராமு.

"ரொம்ப சரி. அடுத்த வண்டிக்கு நான் போகவேண்டும். பாலா வந்திருக்கலாம் என்றே போகும் பொழுது இறங்கினேன், நான்கு நாளில் திரும்புவேன். பாலாவைப் பார்க்கிறேன்."

மறுநாள் பாலா மத்யானம் இரண்டரை மணி வண்டிக்கு வந்துவிட்டாள். வாசலில் வண்டிச் சப்தம் கேட்டதும் எழுந்து சென்று கதவைத் திறந்தான் ராமு. பாலா இறங்கினாள். "மாப்பிள்ளை மிகவும் அவசரமான விஷயம். அதனால் தான சொன்ன வண்டிக்கு முன்பே கிளம்ப வேண்டியதாயிற்று. நான் வருகிறேன் மன்னிக்கவும்" என்று ஒரு சிறிய பெட்டியை திண்ணைமீது வைத்து விட்டு சட்டென வண்டிக்குள் ஏறிவிட்டான் பாலாவின் தமையன். "சாம்பு அப்படி என்ன அவசரம் இது நன்றாக இருக்கிறதா" என்று ராமு சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே வண்டி அக்கிரகாரத்து கடைசிக்குச் சென்று விட்டது. இச் செய்கை ராமுவை பிரமிக்கும்படி செய்தது. வண்டி சென்ற திக்கையே பார்த்தபடி நின்றான். "உம்" என்ற பாலாவின் நீண்ட மூச்சு அவன் கவனத்தை திருப்பியது. பெட்டியைக் கையிலெடுத்துக் கொண்டு, "வா பாலா" என்று சொல்லி விட்டு உள்ளே வந்தான். பாலா பின் தொடர்ந்தாள்.

வாசற்படிக்கு அருகில் ஊஞ்சல் தொங்க விட்டிருந்தது, பாலா வாசற்படி தாண்டி ஊஞ்சல் பக்கம் வரும்பொழுது, ஊஞ்சலின் சங்கிலியைப் பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள் விமலா. ஊஞ்சலில் ஒரு தலையணையும் போடப்பட்டிருந்தன.

"வாருங்கள்" என்றாள் விமலா. அவள் குரல் தடுமாறிற்று.

அவளை ஏற இறங்க ஒரு முறை பார்த்து ஊஞ்சலில் போட்டிருந்த தலையணையையும் ஒரு முறை பார்த்தாள். பாலா அவ்வளவே. அவள் கண்களில் நீர் அரும்பிற்று. அவளும், ராமுவும் அந்த ஊஞ்சலில் உட்கார்ந்து எப்பொழுதும் ஆடுவார்கள். அவள் எவ்வளவு கேவலமான நிலைமையிலிருந்தாலும், நன்றாக் உட்கார முடியாத போனாலும், ராமுவின் மீது சாய்ந்த வண்ணமாவது ஊஞ்சலாடுவது வழக்கம். அதுவே அவர்கள் வாழ்க்கையில் இன்பம் தரும் செய்கை. எதிரிலுள்ள ஜன்னலின் வழியாக இயற்கையின் வனப்பில் நிகழும் காட்சிகளையும், சாயங்கால மஞ்சள் வெய்யிலில் பசேலென்ற வயல் பரம்புகளில், ஆதித்தியனும், புவனமும் சேர்ந்து செய்யும் ஜகஜ்ஜால வித்தைபோல் மாறி மாறி வர்ணங்காட்டும் தானிய லக்ஷ்மியின் அற்புதமான காட்சி இன்பத்திலும், தங்கள் கஷ்டத்தை மறந்து, கவனம் செலுத்தி பார்த்தவாறு இருந்த நாட்கள் அவள் மனதில் தோன்றவே அவ்வுரிமை தன்னிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டது, கற்பகக் கனியை அருந்தியவன் காஞ்சிரங்காயை விரும்புவானா? என்ற உணர்ச்சி மேலிடவே துக்கம் அளவு கடந்துவிட்டது. அவள் வரும்பொழுது, தான் இன்ன விதமாக நடக்க வேண்டும், ராமு கல்யாணம் செய்து கொண்டதில் தான் மிகவும் திருப்தி கொண்டவளாக் நடந்து கொள்ள வேண்டும்" என்று எண்ணி வந்ததெல்லாம், ஊஞ்சற் பலகையின் முன் ஆடிக்காற்றில் பஞ்சுபோல் ஆயிற்று. "இந்த அழகான மனைவியுடன் வெட்கமில்லாமல் ஊஞ்சலாடுகிறானே" என்று ஊரார் பரிகாசம் செய்யும் வார்த்தைகளைக்கூட, ராமு "கிடக்கிறார்கள் அவர்கள் என்ன கண்டார்கள்?" என்று சொல்லும அன்பு மொழியை நினைக்க, அவள் தலை சுழன்றது. அப்படியே ஊஞ்சலில் உட்கார்ந்து தலையணியில் முகத்தைப் பதித்துத் தேம்பித் தேம்பி அழலானாள்.

ராமுவுக்கு இச் செய்கை ஏமாற்றத்தை அளித்தது, அவனை மீறி கண்களில் நீர் தளும்பச் செய்தது பாலாவின் தேம்பல். இன்னது செய்வது என்று புரியாமல் தடுமாறினான். பிறகு விமலாவைத் திரும்பிப் பார்த்து விட்டு, பாலாவின் பக்கத்தில் உட்கார்ந்து, அவள் முகத்தைத் திருப்பி, "பாலா என்னை மன்னித்துவிடு. வருத்தப்படாதே. உன் வருத்தம், என் நெஞ்சைப் பிளக்கிறது" என்றான்.

இதைப் பார்த்த விமலா சட்டென சமயலறைக்குள் சென்றாள். பாலா வந்தவுடன் தயங்காமல் "நாமிருவரும் சகோதரி போலிருப்போம், நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். படுக்கையிலேயே இருங்கள். புடவை முதல் துவைத்துப் போடுகிறேன். உங்களுக்குச் செய்ய நான் கடமைப் பட்டவள். உங்கள் மனம் குளிர்ந்தால் தான் எனக்கு நன்மை உண்டு" என்றெல்லாம் சொல்ல வேண்டும் என்று நினைத்திருந்தாள். ஆனால் அவளைப் பார்த்தவுடனே மனதில் சுரீரென்ற உணர்ச்சி தோன்றிற்று, "வாருங்கள்" என்ற சொல்லிற்குமேல் வார்த்தை வெளிவரவில்லை. ராமு அவள் பக்கம் உட்கார்ந்தது, அவள் மனம் நிலைகொள்ளாமல் தத்தளித்தது. உள்ளே சென்றதும், குமுறின துக்கம் பீறிட்டது, பின் வாசல் படியில் உட்கார்ந்து அழலானாள்.

"ஏம்மா அழறே. அது வந்தால் ரொம்ப சந்தோஷம் அப்படிச் செய்வேன் இப்படிச் செய்வேன் என்ருயே, இப்போ அவுங்களைக் கண்டதுமே இப்படி உக்காந்துட்டியே" என்ருள் வேலைக்காரி சுப்பம்மா.

"போடி! உன்னையார் கேட்டா" என்ருளே தவிர ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. இப்படி அரைமணி சென்றது.

"விமலா காப்பி ஆகிவிட்டால் கொண்டுவா" என்ற ராமுவின் குரல் கேட்டு, சட்டென எழுந்து முகத்தை அலம்பிக்கொணடு காப்பி எடுத்துச் சென்ருள்.

## 3

"சற்றுப் பொறுத்து அக்கம்பக்கம் உள்ள ஸ்திரீகள் பாலாவைப் பார்க்க வந்தார்கள். கூடத்தில் ஒரு கான்வஸ் சேரை கொண்டுவந்து போட்டு, பாலாவை அதில் சாய்ந்துகொள்ளும்படி சொல்லிவிட்டு, வந்திருந்தவர்களில் வயதில் பெரியவளான ஸ்திரீயைப் பார்த்து, "சற்று சாதாரணமாகப் பேசிவிட்டுச் செல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அவள் உடம்பு கேவலமாக இருப்பதால், அதிகத் தொந்தரவு கூடாது" என்று சொல்லிவிட்டு ஹாலுக்குச் சென்ருன். தன் இருமனைவிகளிடை இவர்களால் பிளவு கூடாது என்பதற்காக முன் எச்சரிக்கையாக அவர்கள் நெருங்காத விதமாகப் பேசிஞன்.

வந்த அலுப்பில் சற்றுநேரம் கண்களை மூடி அயர்வாகப் படுத்திருந்தாள் பாலா. அதனுல் விமலா அவளிடம் பேச் சந்தர்ப்பம் இல்லை.

அன்று இரவு வீட்டு வேலை முடிந்ததும் பாலைக் கொண்டு வந்து இருவர் பக்கத்திலும் வைத்துவிட்டு உள்ளே சென்ருள் விமலா.

பிரிந்தவர் கூடிஞல் பேசக் கேட்பானேன். பத்துமணி வரை ஏதேதோ விஷயங்களைப் பற்றிச் சிரித்தவாறு பேசிக்கொண்டிருந்தார்கள்.

"பாலா அதோ பார்! ஹாலில் கடைசி அறையில் மூன்று கட்டில்கள் போட்டிருக்கிறேன். நல்ல காற்ருேட்டம். அவ்விடமே படுத்துக்கொள்ளலாம். விமலா ஒரு சமயம் அவ்விடம் படுத்துத் தூங்கியிருப்பாள். அவள் சற்று கும்பகர்ணன் சுபாவத்தை ஆஸ்ரயித்தவள்" என்று சிரித்தான் ராமு.

"அந்த தூக்கத்திற்கு நான் பிரார்த்தனை பண்ணுகிறேன். அவளாவது சுகமாக இருக்கட்டும். நான் ஊஞ்சலில்தான் படுக்கப்போகிறேன். பயமொன்றுமில்லை. நீங்கள் போங்கள்."

"இன்று ஒரு நாளாவது என் சொல்படி செய்யக்கூடாதா?"

"சரி. வருத்தப்படவேண்டாம்."

ராமு வாசல் பக்கம் சென்ருன். பாலா உள்ளே சென்ருள். ஒரு கட்டிலிலும் விமலா தூங்கவில்லை. கூடத்திற்கு வந்தாள். தரையில் படுத்துக்கொண்டு தூங்கிஞள் விமலா.

"விமலா! எழுந்திரு, ஏன் இவ்விடம் தனியாகப் படுத்துக் கொண்டிருக்கிருய். வேலையானதும் அவ்விடம் வரக்கூடாதா?"

பதிலில்லை.

"விமலா எழுந்திரு."

"நான் பிறகு வருகிறேன். நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள்" என்று கண்ணை மூடியபடி எழுந்திராமல் பதில் சொன்ஞள்.

பாலாவின் மனம் துணுக்குற்றது. அறைக்குள் சென்று ஒரு கட்டிலில் படுத்துக்கொண்டாள். ராமு வந்தான். "விமலாவை நான் கூப்பிட்டேன். சற்றுப் பொறுத்து வருவதாகச் சொல்லிவிட்டாள். நீங்கள் அழைத்து வாருங்கள்" என்ருள்.

"எல்லாம் தானே வருவாள்" என்று அவனும் ஒரு கட்டிலில் படுத்துக் கொண்டான். அரைமணி சென்றது.

பாலா தூங்குபவள் போல் படுத்திருந்தாள்.

"பாலா!" என்ருன் ராமு.

பதிலில்லை.

மெள்ள எழுந்து கூடத்துப் பக்கம் சென்ருன் ராமு; பேச்சை உற்றுக் கவனித்தாள் பாலா.

"விமலா, இது என்ன செய்கை. எழுந்து வா?"

"முடியாது. நான் இங்கேதான் தூங்கப் போகிறேன்!"

"உனக்குப் பயமாக இல்லையா?"

"என்ன பயம். அந்தச் சுபாவமிருந்தால் இந்த இடத்திற்கு வருவேஞ?"

"சரி, சரி, உன் விதண்டாவாதம் உன்னுடன் நிற்கட்டும். அவள் என்ன நினைப்பாள். பைத்தியம், எழுந்து வா!"

"நினைக்கிறது என்ன? இன்று............"

"நாவை அடக்கு. நீ சொன்னதென்ன? செய்வதென்ன? என் மானத்தை வாங்கி விடுவாய் போலிருக்கிறதே. மரியாதையாக எழுந்திருக்கப் போகிருயா, இல்லையா?"

"அம்மாடி! இப்போ என்ன சொல்லிவிட்டேன். நீங்கள் பழைய ஞாபகார்த்தங்களைப் பற்றிப் பேசுவீர்கள். விசாலி விளையாடினதைச் சொல்லுவீர்கள். எனக்கு அது விஷயமெல்லாம் என்ன தெரியும். உங்கள் வாயைப் பார்த்தபடி உட்கார்ந்திருக்க வேண்டும். அதனுல் இங்கு சற்றுப் படுத்துக் கொண்டேன். என்னமோ காணுததைக் கண்டுவிட்டாப்போல் பேசுகிறீர்களே!" என்று எழுந்து வந்தாள்.

மறுநாள் முழுவதும் ஒரு மாதிரியாகச் சென்றது. விமலா, 'நாம் நன்ருகச் செய்ய வேண்டும்' என்றுதான் செய்தாள். ஆஞல் அது உகப்பிற்கு என்பதை முகம் எடுத்துக் காட்டிற்று. பாலாவுடன் ஏதோ பேசிஞள். பாலாவும் ஏதோ கேட்க வேண்டுமே என்று கேட்டாள். ராமு பாலா விஷயத்தில் சற்று கவனமாகவே நடந்தான். விமலா, செய்ய வேண்டுமென்று எதிர் பாராமல் அவனே செய்து விடுவான். அவள் செய்வதாக இருக்கவேண்டும் என்பதற்காக அவனையும் எச்சரித்தான்.

மூன்றாவது நாள் சாப்பாடு முடிந்தது. ஹாலில் பாலாவும் ராமுவும் பேசிக்கொண்டே ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தார்கள். சட்டென மார்பை அமுக்கிப் பிடித்தவாறே, "கொஞ்சம் வெந்நீர் கொண்டு வருகிறீர்களா?" என்றாள். எழுந்து சென்றான். கால் மணி சென்றது, வரவில்லை. பாலா மெள்ள எழுந்து சென்றாள். சமையலறை ஜன்னலின் பக்கத்தில் செல்லும் பொழுது, பேச்சரவம் கேட்கவே அவ்விடம் நின்று, இடுக்கு வழியாக உள்ளே எட்டிப் பார்த்தாள்.

வலது கையால் கும்மட்டி அடுப்பை விசிறியவாறு, அவனது துடைமீது தலைவைத்துப் படுத்திருக்கும் விமலாவின் இடது கையினால் கன்னத்தை தடவியவாறு குனிந்து அவளிடம் பேசும் வார்த்தை பாலாவின் செவியில் புகுந்தது.

"கோபமெல்லாம் தீர்ந்ததா?"

"என்ன விதத்தில் என் கோபத்தைக் கண்டுவிட்டீர்கள்?"

"இப்பொழுது கும்மட்டி விசுறுகிறேனே. அது ஒன்றே போருமே!"

"நான் விசிறும்படி சொன்னேனா? தானே பேசாமல் போனால் நடக்கும்".

"இதைப்பார் விமலா. நீ என்னிடம் சொல்லிக் கொண்டிருந்ததை நம்பினேன். 'வெந்நீர் வேண்டும்' என்றேன். பேசாமலிருந்தாய். மேலே கேட்டால் வார்த்தை வளர்ந்துவிடும். அவள் காதில் விழுந்தால் என்னவாகும்? என் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள நான் செய்கிறேன். வந்து இரண்டு நாளைக்குள் இவ்வளவு அலக்ஷியம் என்றால் என்பாடு என்னவாவது? எதற்காக இப்படிச் செய்கிறாய்?"

"எல்லாம் உங்களால் தான். என் மீது நம்பிக்கை இல்லாது போல் அடிக்கடி கேட்கிறீர்கள். நான் சாதம் நன்றாகப் போடுவேனோ மாட்டேனோ என்று, கலத்துச் சாதத்தை எடுத்துக் கொடுத்தீர்கள். என்னை என்ன செய்தாய்? என்றுகூடக் கேட்பதில்லை. சதா பேசுகிறீர்கள். கொம்மாளம் அடிக்கிறீர்கள். யார் வேண்டாம் என்கிறார்கள். உங்களுடைய பரிவெல்லாம் இன்னும் நான்கு நாள் நிலைத்திருக்கும். பிறகு நான்தானே செய்யப் போகிறேன். உரலுக்குள் தலையை விடும்போது உலக்கை விழாது என்றா நினைக்க முடியும்? என் கடமை எனக்குத் தெரியாதா?"

"நீதான் தப்பர்த்தம் செய்கிறாய். உனக்கு நல்ல பெயர் வர வேண்டுமென்றும், உனக்குக் கஷ்டமில்லாமலிருக்க வேண்டுமென்றே நான் நடக்கிறேன். வீணாக புண்படுத்தாதே?"

"கலத்துச் சாதத்தை எடுத்துக் கொடுத்தீர்களே! ஊட்டக் கூடாது? நான் ஒருத்தி நிற்கிறேன் என்றுகூட யோசிக்கவில்லையே?"

"அப்பா, இதற்கு இவ்வளவா? இனி உனக்கும் தருகிறேன். இவ்வளவுதானே? இல்லையேல், மூன்று பேரும் ஒன்றாகச் சாப்பிடுவோம்."

"ஐயோ, போருமே வெட்கக் கேடு. எனக்கு மானமிருக்கிறது. மேலும் ஒன்றாகச் சாப்பிட்டு வியாதியை வேறு ஒட்டிக் கொள்ளலாமல்லவா?

"இந்தா, தாறுமாறாக உளறாதே. பட்டிக்காடு என்பதைக் காண்பிக்கிறாயே. ஐயோ, பாவம் பாலா எவ்வளவு செல்வமாக வளர்ந்தவள் தெரியுமா? அவள் குடும்பம் நடத்தும் பாணியே அலாதி. என்னுடைய துரதிருஷ்டமே வியாதியாக வந்தது. வாழ்நாளில் அவள் கண்ட சுகம் என்ன? அவள் ஆயுளும் கூடிய சீக்கிரம் முடியப் போகிறது. என் கலத்துச் சாதத்தை நான் கொடுத்து அவள் சாப்பிடுவதில் அவளுக்கு ஒருவித திருப்தி. இருவரும் ஊஞ்சலாடுவதே பரம பதம் என்று நினைப்பவள். இது விஷயம்கூட. நீ விட்டுக் கொடுக்காமல் ஆத்திரப்படுவது நியாயமா! சரி, எழுந்திரு. அந்த வெந்நீர்ப்பையை எடு. அவள் ஏன் இவ்வளவு நாழி என்று நினைக்கப்போகிறாள். மார்வலி வேறு தாங்க முடியாது" என்று எழுந்தான்.

கண் கண்ட காட்சியும், காதில் விழுந்த சொற்களும், பாலாவின் மனதில் சொல்லமுடியாத வேதனையை அளித்தன. அந்த இடமே சுற்றுவது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. அவன் வருவதற்குள் ஊஞ்சலுக்குச் சென்றுவிட வேண்டுமென்று திரும்பி ஓர் அடி வைக்கு முன்பே தடாலென விழுந்துவிட்டாள். சப்தத்தைக் கேட்டு ஓடிவந்த ராமு, உணர்வின்றி விழுந்துகிடக்கும் பாலாவைக் குழந்தைபோல் தூக்கி வந்து ஊஞ்சலில் படுக்க வைத்தான். விமலா ஜலம் கொண்டு வந்து கொடுத்தாள். விசிறினாள். ராமு அவளுக்கு சைத்யோபசாரம் செய்யவே கண்ணை விழித்தாள் பாலா. விமலா ராமு இருவரும் தங்கள் சம்பாஷணையைக் கேட்டிருப்பாளோ என்று சிந்தை கலங்கி நின்றார்கள்.

* * *

"நிதிசால சுகமா ராமு" என்று சிரித்தவண்ணம் பாடிக்கொண்டே திடீரென நுழைந்தாள் விசாலி.

"என்ன அத்தங்கா மாப்பிள்ளை வரப்போகிறான். இன்னும் உங்கள் விளையாட்டுப் போகவில்லையோ?" எனச்சிரித்தாள் பாலா.

"மாப்பிள்ளை வரட்டும். அவனுக்கு மாப்பிள்ளைவரட்டும் எனக்கென்ன? தொட்டில் பழக்கம்...... எனக்குப்போகுமா? விமலா! எப்படியிருக்கிறது குடும்ப பாரம்? பாலா! எபபடி யிருக்கிறது உனது நூதன வாழ்க்கை? ராமு! எப்படியிருக்கிறது உனது லக்ஷ்யத்தின் லக்ஷ்யம்?"

பாலாவும் விமலாவும் சிரித்தார்கள். "விசாலி! நமது விளையாட்டுக்களில் கூட எனது லக்ஷ்யம் தவறியதுண்டா?"

"ஓஹோ! அந்தப் பெருமை வேண்டாம். நீ சொல்வதை நான் நம்பமாட்டேன்."

"வேண்டாம் எல்லாவற்றையும் பார்த்தும் கேட்டும் பிறகு நம்பு."

விமலா உள்ளே சென்ருள். விசாலி எதிரிலுள்ள ஜன்னலில் உட்கார்ந்து, "ராமு பரவாயில்லை ஊஞ்சலில் உட்கார்" என்ருள். உட்கார்ந்தான்.

"பாலா, அம்மாஞ்சி உன்னிடம் என்னைச் சாட்சி வைத்துச் சொன்னது ஒன்று, செய்தது ஒன்று. அது போகட்டும் உங்கள் வாழ்க்கைச் சக்கரம் இந்த ரீதியிலேயே சுழலுமாறு பகவான் அனுக்கிரகிக்கட்டும். ராமு! நாளைக் காலை வண்டியில் ஏற்றிவிடு. நான் போகவேண்டும்."

"அத்தங்கா, நாளைக் காலைப் பிரயாணத்தை நிறுத்துங்கள். சாயங்காலம் அண்ணு வருவான். நாம் மூவருமாகச் செல்லுவோம்."

ராமு திடுக்கிட்டான். "என்ன பாலா!" எனப் பதறியவாறு கேட்டான்.

"ஏன் பாலா, காரணத்தைச் சொல்லு" என்ருள் விசாலி.

"அத்தங்கா, உங்களுக்குக் கூடச் சொல்ல வேண்டுமா? இனி எனக்கென்ன பயம்? உள்ளதைச் சொல்லுகிறேன், "உனக்காகத்தான் கல்யாணம் செய்து கொண்டேன் வாவா" என்று எழுதினர். அந்த சௌக்கியத்தையும் அநுபவித்து, நமது ஸ்தானத்தைப் பற்றியவள் எப்படி இருக்கிருள் என்று பார்க்க வேண்டும் என்ற ஆவலினுல், அவர்கள் பேச்சைத் தள்ளிவிட்டு வந்தேன். பெற்றவர்கள் இருக்கும்பொழுது பிறருக்குத் தொந்திரவு கொடுப்பானேன். அண்ணு நாளை சாயங்காலம் நிச்சயம் வருவான். நான் அவசியம் புறப்பட்டு விடுவேன்" என்ருள்.

"பாலா! தொந்தரவு என்று நினைக்கக்கூடாது. உன் வரவு எங்களுக்கு எவ்வளவு ஆறுதலாகவும், ஆனந்தமாகவும் இருக்கிறது தெரியுமா? விமலா மிகவும் ஆவலாக இருக்கிருள்."

"அத்தங்கா இவருடைய கவனந்தான் அனர்த்தத்திற்கு ஆதாரமளிக்கிறது. விமலா செய்யவேண்டும் என்ற அன்போடு தான் செய்கிருள். ஆனுல் இயற்கை மறுக்கிறது. இவர் என்னை விடாமல் சுற்றுவதும், அவளை "அதைச் செய் இதைச் செய்" என்று சொல்லுவதாலும் அவள் மனம் வேதனையுறுகிறது. இவர்மீது வருத்தமோ குற்றமோ ஏதாவது சொன்னுல் இன்னும் எடுக்கும் ஜன்மத்திலும் தான் நன்மை அடையமாட்டேன். பத்து வருஷ காலம் சுகமென்பதை நினைவில்கூட தோன்ருமல் செய்தேன், அவர் நிம்மதியுறும் நாளிலும் நான் வந்து தொல்லை கொடுத்தால் தெய்வ சம்மதமாகுமா? நடக்கும் நிலைமையை என்மனம் அறியாமலிருக்க முடியுமா? இந்த மூன்று நாட்களில் அவர்படும் பாட்டை நினைக்க எனக்கு மிக்க வருத்தமாக இருக்கிறது." என்று நடந்தவற்றை சுருக்கமாகச் சொல்லிவிட்டு "அத்தங்கா, உண்மையை ஒளியாமல் சொல்லுகிறேன், இவ்வளவு கேவலமான நிலைமையிலும், என் சுதந்திரம் பறிபோகிறது என்ற நினைப்பு வரத்தான் செய்கிறது. எனக்கு பிறந்த வீட்டில் வசதியில்லாவிடில் எவ்விதமாயினும். இருந்து தீரவேண்டியதுதான். அது விஷயத்தில் கொஞ்சம் கொடுத்து வைத்தவள் தான்" என்ருள்.

அதுவரை தலை குனிந்தவாறு கேட்டுக்கொண்டிருந்த ராமு, "பாலா என் மனதை நோகச் செய்யாதே. எனது கொள்கையொன்றும் நடப்பது ஒன்றுமாகவே முடிந்தது. புருஷனுடைய கஷ்டத்தை ஸ்திரீ ஆயுள் முழுவதும் அனுபவிப்பது போல், புருஷனும் அனுபவிக்கத்தான் வேண்டும் என்பதை நிலைநாட்ட வேண்டும் என்று நினைத்தேன். உன்னை விடமாட்டேன். நான் உன்மீது வைத்திருக்கும் அன்பை எவ்விதம் எடுத்துக் காட்ட முடியும். இருதயத்தை வேண்டுமானுல் பிளந்து பார்" என்று சொல்லும்பொழுதே துக்க மிகுதியினுல் குரல் கம்மிற்று.

"ஐயோ! உங்களுக்கு என்மீது அன்பில்லை என்று சொல்ல முடியுமா? நான் கொடுத்து வைக்காதவள். என்னைத் தடுக்காதீர்கள். நாளை அண்ணு வந்தால் என்னைவிட்டுச் செல்லமாட்டான். நான் புறப்படுவது நிச்சயம். ஒரு வரம் உங்களை இரந்து கேட்கிறேன். ஒரு சமயம் தெய்வாதீனத்தினுல் நான் பூர்ண சுகமடைந்தால் போட்டி வாழ்வு நடத்த நிச்சயம் வருவேன். அல்லாத நிலைமையில் என் ஜீவன் பிரியும் வரையில் என் அப்பாவை எவ்விடத்திற்கு மாற்றினுலும், தயங்காமல், மாதம் ஒரு முறை உங்கள் முக தரிசனம் கிடைக்கும்படி செய்தால், அதுவே எனது ஆத்மா சாந்தியடையச் செய்யும்" என்று பாலா சொல்லும் பொழுதே கண்களில் நீர் ததும்பி வழிந்தது.

## 5

அன்று இரவு விசாலியின் முயற்சியினுல், நால்வரும் ஒன்ருக உட்கார்ந்து சாப்பிட்டார்கள். பிறகு விமலாவுடன், வீட்டு வேலைகளைக் கொஞ்சம் செய்து விட்டு, "விமலா! வேலையை முடித்து விட்டு, ஹாலுக்கு வா இன்று ஒருநாள்தான், நான் பாலா யாவரும் இருக்கப் போகிருேம். அதனுல் நான்குபேரும், சற்றுத் தமாஷாகப் பேசலாம். கேரம் விளையாடலாம் சீக்கிரமாக வா" என்று சொல்லிவிட்டுச் சென்ருள்.

ஹாலில் ராமு, விமலா, விசாலி மூவரும் சற்று நாழி பேசிக் கொண்டிருந்தார்கள். அரை மணி சென்றது. "விமலா ஏன் இன்னும் வரவில்லை. சற்று இருங்கள். நான் போய்க் கூப்பிட்டுக்கொண்டு வருகிறேன். ராமு! கேரம் போர்டை எடுத்துவை. வந்து விட்டேன்" என்று எழுந்து உள்ளே சென்ருள். பத்து நிமிஷம் சென்றது. விசாலி விமலா இருவரையும் காணவில்லை. ராமு ஹாலின் வாசற்படிக்கு நேராக வந்து பின்பக்கம் பார்த்தான். எதிர்ப்புறம் நடையில் விசாலி நின்றுகொண்டிருந்தாள். ராமுவைப் பார்த்ததும் ஜாடை, காட்டி அவ்விடம் வருமாறு அழைத்தாள். சென்ருன். பாலா சிரித்தவாறு எட்டிப் பார்த்து

விட்டு ஊஞ்சலில் படுத்துக் கொண்டாள்.

நடை தாண்டியதும் ஒரு நீண்ட தாழ்வாரம். அடுத்த வீட்டிற்கும் இவர்கள் வீட்டிற்கும் நடுவில் ஓலைக் கிடுகுகளால் மறைக்கப் பட்டிருந்தது. தாழ்வாரத்தின் கோடியில் அடுத்த வீட்டுச் சுவர் பக்கம் விமலா நின்றுகொண்டிருந்தாள்.

"ஏண்டி அவா இப்போ என்ன செய்யறா."

"கமிட்டி கூடியிருக்கா. 'இன்னிக்கு ஒரு நாள் நாங்கள் சேர்ந்திருக்கோம் கேரம் ஆடவா' என்று அதிகாரம் பண்ணியிருக்கா விசாலியம்மா."

"ஆனா நிச்சியம் நாளைக்குப் போப்போறாளா?"

"போகப் போறாளாம். உடம்பு தேவலையானதும் போட்டி வாழ்வு வாழ வரப் போறாளாம். நான் போகவேண்டாம்னு சொல்லியாச்சு. அவ்வளவு தான், இருந்தா இருக்கா. போனா போரா. நான் என்ன செய்தாலும் நம்பிக்கை யில்லாது போல் படறா. என்னமோன்னு இருந்தேன் "பாலா, பாலா" ன்னு உயிரைத் தான் விடுகிறா. இன்னும் இருக்கிறபடி இருந்தா படுகிறபாடு வேறே. என்னமோ சதா பேசிக்கொண்டே இருக்கா. என்ன தான் இருக்குமோ. அத்துடனு, கலத்தில் சாதம் பிசைந்ததும், குழந்தையைப் போல் உருட்டிக் கொடுக்கிறா. என்னமோ இருக்கிற இருப்பு எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. கண்காணா காட்டிற்குச் சென்று கதற வேண்டும் போலிருக்கிறது.

"கடைசியில் உன் பாடு விடியாத கஷ்டமாக முடிந்து விட்டது."

"மாமி போக்கிட மில்லாவிட்டால் தற்கொலை பண்ணிக் கொண்டு சாவது, அவர் என்னடான்னு, ஒத்துக் கொண்டு தானே வந்தாய்' என்று அடிக்கு ஒரு தரம் குத்திக் காட்டுகிறா. என்ன பிரமாதம் என்று நினைத்தேன். உலகில் எவ்வளவு கேவலமானாலும் சக்களத்தி வாழ்வு மாத்திரம் வேண்டாம். விடிய விடிய நான் உழைக்க வேண்டும், அவள் கும்மாளம் போடவேண்டும். மேலும் சொட்டுச் சொல்வேறு வந்துவிடுமோ என நடுக்கம் வேறு"

"போனால் வேண்டா மென்று தடுக்காதே. இருந்தால்? செய்கையில் காட்டாமல் முகத்தால் காட்டிவிடு. உன்னை என்ன செய்ய முடியும். வேண்டா மென்று தள்ளி விடுவானோ பார்க்கலாம்.

"என்னமோ போங்கள். காலத்தை ஓட்டவேண்டும். அவர் குறுக்கிடாமல் நாமாகச் செய்யும் பொழுது, ஐயோ பாவம் என்று இரக்கம் தோன்றுகிறது. அவர் வந்து அவளுக்காக ஏதாவது கேட்டால் என் மனம் தாங்க முடியாத வேதனையை அடைகிறது. அவர் சொல்லப் போக அவள் மீது ஆத்திரம் வருகிறது. நானும் எவ்வளவோ மனதை சமாதானம் பண்ணிக் கொண்டு தான் நடக்கிறேன். எது விஷயமும் வாயினால் மிகவும் லேசாகச் சொல்லி விடலாம். செயலில் காட்டும் பொழுது தான் தெரிகிறது அதனுடைய அருமை. சக்களத்தி வாழ்வைக் காட்டிலும் ஒரு சாண் கயிறு சுகம் தந்துவிடும்."

"கவலைப்படாதே, பகவான் உனக்கு நல்ல வழி காட்டுவார். அவள் பிழைப்பதேது. கஞ்சி குடிச்சிண்டு கடக்கறான்னு சொன்னான். சாப்பிடுகிறாளா?"

"சாப்பாடு என்ன! அவர் கொடுக்கும் ஒரு கவளம் தான். அதைக்கூடக் கஷ்டப் பட்டுத் தான் விழுங்கறா. காப்பியும் பாலும், ஜவ்வரிசிக் கஞ்சியும் தான்".

"ராமு! உலகம் எப்படி? என்று தெரிந்ததா? உன் சொல்லும் செயலும் என்னவாயிற்று?" என்றாள் விசாலி.

"விசாலி! தோல்வியை ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால் இவளை?"

"என்ன செய்வாய்? வீண் கலகம் செய்யாதே. மூவர் மனமும் புண்ணாகும். பாலா சொன்னபடி செய். மூவருக்கும் விடுதலை. பாலா இனி திரும்புவது வறுத்த பயர் முளைப்பதுபோல் தான். விஷயங்களைப் பிரபலப் படுத்தாமல் லக்ஷ்யத்தை நிறைவேற்றுவது புத்திசாலித்தனம்."

"ஆஹா! என்ன உலகம்! என்ன விதி! மனிதன் சொல்லும் செயலும் ஒன்றாக அமைவது இவ்வளவு துர்லபமா?"

* * *

மூன்று மாதங்கள் உருண்டோடின. ஒரு நாள் காலை, "விசாலி! உன் அம்மாஞ்சி கடிதம் எழுதி யிருக்கிறான்" என்றார் விசாலியின் கணவர்.

"என்ன விசேஷம்?"

"நீயே பார்!" என்று கார்டைக் கொடுத்தார்.

"விசாலி! துன்பக் கூட்டிலிருந்து விடுதலை பெற்றுவிட்டது என் லக்ஷ்யப் பறவை. இருதயப் பண்பை அறியும் சக்தியை ஸ்திரீகளுக்கே ஈசன் அதிகம் கொடுத்தார் போலும். உன் வாக்கு தெய்வீகம் பெற்றது. என் சொல்லும் செயலும் சிதைந்தன. பாலாவின் சொல்லும் செயலும் நிறைவேற்றப்பட்டன. காரணம் விதியா? இயற்கையா? கடைசியில் பாலாவின் முகதரிசனம் கிட்டியதில் திருப்தி.

இப்படிக்கு,

இராமு."



இப்போது தமிழ் நாட்டில் பல இடங்களில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது




80A

உலகமெங்கும் புகழ்பெற்ற
பி. வி. ராஜன் கம்பெனியாரின்
உயர்ந்த
# பட்டணம் பொடி
&
# R. S. சுகந்த மூக்குத்தூள்
எல்லாவற்றிலும் சிறந்தது
விலை விபரங்களுக்கு எழுதவும்
## பி. வி. ராஜன் & கம்பெனி
நெ. 44, கோவிந்தப்ப நாயக்கன் வீதி,
மதராஸ்.
தந்தி விலாஸம்: Nasyam.
தந்சமயம்: Arkonam, N.A.Dt.

## நாடகக்கலை
மேன்மையுற தொடர்ந்து தொண்டாற்றி
● 'பம்பாய் மெயில்' ● 'லக்ஷ்மிகாந்தன்'
● 'ஸ்ரீமத் சம்பூர்ண ராமாயணம்' ● 'விமலா'
முதலிய நாடகங்களை இதுவரை
தஞ்சை ராமநாதஞ் செட்டியார் ஹாலில்
வெற்றிகரமாக நடித்துப் பொது மக்களது அன்பைப் பெற்றுவருகிறோம்
மக்களின் அன்பே எங்கள் உயிர்
உங்கள் ஆதரவை வேண்டுகின்றோம்
ஏராள பொருட் செலவில் தயாராகும்
'வடலூர் திரு அருட்பிரகாச வள்ளலார்'
என்ற
## ஸ்ரீமத் ராமலிங்க சுவாமிகள்
ஜீவிய சரிதையை நடிக்கும்
நந்நாளை எதிர்பாருங்கள்
சென்னை ஸ்ரீ ஜோதி கான சபையார், தஞ்சை.

## ராஜாஜி நூல்கள்
**உலக நிலை** 1—0—0
காலிகோ 2—0—0
உலகத்தின் பல்வேறு தேசங்களின் பொருளாதார நிலைமைகளை, திட்டமான ஆதாரங்களோடும், புள்ளி விவரங்களோடும், ராஜாஜி இந்நூலில் எழுதியிருக்கிறார்.

**அரசியல் விமோசனம்** 0—8—0
தற்போதைய அரசியல் நெருக்கடி தீரப் பலர் பலவிதமான யோசனைகள் சொல்லுகிறார்கள். ஆனால், ராஜாஜி சொல்லும் யோசனை எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்திருக்கிறது. இந்நூலில் அவர் தம்முடைய கட்சியைத் தெளிவாகக் கூறுகிறார்.

**கட்டுரைகள்** 4—8—0
இலக்கியம், சமூகம், அரசியல் சம்பந்தமாக ராஜாஜி பல பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகள் இந்நூலில் அடங்கியிருக்கின்றன. புத்தம் புதிய கருத்துக்கள் நிறைந்தவையாகும்.

**கதைகள்** 3—0—0
ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறப்பாக அமைந்த கதைத் தொகுதி. பல்வேறு விஷயங்களை அழகாகச் சித்தரிக்கின்றன.

**அபேதவாதம்** 0—8—0
அபேதவாதத்தைப் பற்றி ராஜாஜி தம் கருத்தைக் கூறுகிறார். தி. ஜ. ர. ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்திருக்கிறார்.

**கண்ணன் காட்டிய வழி** 1—4—0
எல்லோருக்கும் இலகுவாகப் புரியத்தக்க முறையில் கீதை மொழிபெயர்ப்பும் வியாக்கியானமும் இந்நூலில் அடங்கியிருக்கின்றன.

**உபநிஷதப் பலகணி** 1—0—0
ஹிந்து மதத்திற்குப் பொக்கிஷம்போல விளங்கும் உபநிஷதங்களின் சாரத்தைத் தெளிவான தமிழில் ராஜாஜி விளங்குகிறார்.

தபால் செலவு தனி
**சக்தி காரியாலயம்**
ராயப்பேட்டை : சென்னை
வடக்குவெளிவீதி : மதுரை

# ஒட்டும் உறவும்

வி.ஜி. ஸ்ரீநிவாஸன்.

ஸ்ரீ சிதாராமையரின் செல்வப் புதல்வி சௌபாக்யவதி லீலாவதிக்குத் திருமணம். ஈசுவர கிருபையாலும், பெரியோர்களின் ஆசியாலும் மேற்படி கல்யாணம் ஒரு சுபயோக சுபதினத்தில் இனிது நடந்தேறியது.

இவ்வளவு சிரத்தையுடன், நீட்டி முழக்கி இதைப்பற்றிச் சொல்வதால் நான்தான் மணமகன் என்றோ, முக்ய சம்பந்தி என்றோ நினைத்துவிட வேண்டாம்.

சிதாராமையர் எனக்கு தூர பந்து. அந்த வகையில் அவர்கள் வீட்டுக் கல்யாணத்திற்குச் சென்றிருந்தேன்.

சொந்தக்காரர் வீட்டுக் கல்யாணமோ, தெரிந்தவர் வீட்டுத் திருமணமோ, எதுவாயிருந்தாலும் சரி, என்னை அழைத்திருந்தால், நான் சென்று விடுவது வழக்கம். அங்குபோய் வறிதே நிற்பதில்லை. தண்டச் சோறு தின்ன எனக்குப் பிடிக்காது. இரண்டு பந்திகள் பரிமாறுவது; வந்தவர்க்கட்குச் சந்தண தாம்பூலம் வழங்குவது; கடை கண்ணிகட்குச் சென்று 'தட்டிப்போன' சாமான்களை வாங்குவது போன்ற சிறு சிறு உதவிகள் புரிவது என் இயற்கையோடு ஒட்டி விட்டது.

சாயந்திரம் ஐந்து மணிக்கு மேல் வரவேற்பு. இந்த விவகாரம் என்னிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது.

"அப்பா, சீனு, இதோ இவர்களுக்குத் தாம்பூலம், தேங்காய் சந்தணம் முதலியன வழங்கு" என்று பணித்தார் சிதாராம ஐயர்.

சந்தணப்பேலா மட்டும் அங்கு பந்தலில் இல்லை. உள்ளே "பெண்டிர் உலகி"ல் சுற்றிக் கொண்டிருந்தது.

"ரேழிரூமில் இருக்கிறது; போய் எடுத்துக்கொள்" என்றாள் லீலாவின் தாய்.

ரேழி அறையில் ஏதோ பெண் உருவம் தென்பட்டது. உள்ளே எப்படிப் போவது?

"அந்த சந்தணப் பேலாவை ..........." என்று இழுத்தேன்.

"அலமாரியில் இருக்கிறது; எடுத்துக்கொண்டு போகலாமே" என்று பணித்தது சொல்லிலே தேனைக் குழைத்திசைத்த ஓர் பெண்ணின் இனிய குரல். இந்தத் தீங்குரலிற்குச் சொந்தக்காரி யார் என்று தெரிந்துகொள்வதற்குப் பெரிதும் விழைந்தது என் மனம். உள்ளே சென்றேன். அலமாரியிலிருந்து எடுப்பதற்குள் அவளே சந்தணப்பேலாவை எடுத்து என் எதிரே நீட்டிவிட்டாள்! வெள்ளிப் பேலாதான். "இடிபோல" என்பார்களே, அப்படிக் கனத்தது, பட்டைப்பேலா. இரு பக்கங்களிலும் சிங்கம் வைத்து வளையங்கள் பொருத்தப் பட்டிருந்தன. நல்ல வேலைப்பாடு செய்யப் பட்டிருந்தது. "பாட்டரி" வேலைப்பாடு என்று சொல்லிக் கொண்டார்கள். அது நிறையச் சந்தணம் இருந்தது. நல்ல நறுமணமுள்ள குழம்பு போன்ற சந்தணம்.

அவள் தாங்கலாக இரு கைகளாலும் எடுத்துக் கொடுத்தாள். நானும் இரு கைகளாலும் ஏந்திப் பெற்றுக்கொண்டேன். கைபட்டு விட்டது! என்னவோ தெரியவில்லை, தேகம் புல்லரித்தது; சொல்ல முடியாத மின்சார வேகம் போன்ற உணர்ச்சி உடல் முழுதும் பரவியது. உட்சூடு அதிகரித்தது போலத் தோன்றியது!

அவள் பின்னுக்கு நகர்ந்து வெறித்துப் பார்த்தாள்! நான் ஒரு கணம் 'நாம் ஏதாவது தப்பிதம் செய்து விட்டோமோ?' என்று நினைத்து விட்டேன்! ஆனால் அவள் பார்வையில் கபடமற்ற, கலவரமற்ற தன்மை தெளிவாகத் தெரிந்ததால் எனக்குச் சற்று ஆறுதல் ஏற்பட்டது. தைரியமும் உண்டாயிற்று.

"மன்னிக்க வேண்டும்" என்றேன்.

"இதில் மன்னிக்க என்ன இருக்கிறது? ஏன், மன்னிக்கும்படி ஏதாவது பெரிய தப்பிதம் செய்து விட்டீர்களா என்ன?" என்று குறும்பாகத் தலையைச் சாய்த்துக் கொண்டு கேட்டாள். அவளது கைகள் மார்பகத்தின் மீது தொங்கிக் கொண்டிருந்த பின்னலுடன் விளையாடிக் கொண்டிருந்தது. அந்தக் குறும்புக் கேள்வியில் ஒரு பரிவு தொனித்தது.

இதற்குள்ளாகப் பந்தலில் காத்திருப்போர் ஞாபகம் வரவே சந்தணப் பேலாவைத் தூக்கிக் கொண்டு சென்று விட்டேன். போன வேகத்தில் எனது "தூவெண்" சட்டையில் சந்தணம் தெறித்திருந்ததைக் கூட கவனிக்கவில்லை!

● ●

நாலு நாள் கல்யாணம். அந்த ஆரணங்கை அடிக்கடி சந்தித்துப் பேசிப் பழகச் சந்தர்ப்பம் வாய்த்தது. அந்த நான்கு நாட்களில் நலுங்கு, ஊஞ்சல் முதலியவற்றில் பெரிதும் பாட்டுப் பாடியது அவள்தான்! சிக்ஷை பெற்று முறைப்படி வந்த சங்கிதம்; இனிய சாரீரம். ஆகையால் எதிர் பார்த்த அளவிற்கு மேல் நன்றாகத்தானிருந்தது.

இந்த நாட்களில் அவளைப் பற்றி நான் தெரிந்து கொண்டவை இவைதான். அவள் கனக சபாபதி ஐயருடைய ஏகபுத்திரி; கனக சபாபதி ஐயர் திருச்சி

ஜில்லா ஆடிட்டர். நல்ல சம்பாத்யம். இவள் மாப்பிள்ளைக்குத் தங்கை முறையாக வேண்டும். ஐந்தாவது பார வருடப் பரிக்ஷை கொடுத்திருந்தாள். இன்னும் கல்யாணமாகவில்லை.

கனக சபாபதி ஐயருக்கு 'லீவு' சமயத்திற்குக் கிடைக்காததால் முகூர்த்த தினத்தன்று வர இயலவில்லை. நான்காவது நாள் மட்டும் வந்திருந்தார். பெரிய உத்தியோகம் வகிப்பவராயிருந்தும் கொஞ்சங்கூட கர்வமில்லாமல் சுமுகமாகப் பழகினர்.

அன்றிரவு ஊர்வலத்தின்போது நான் சந்தனப் பேலாவைத் தாங்கிச் சென்று கொண்டிருந்தேன். சிதாராமையரும், கனகசபாபதி ஐயரும் சேர்ந்து போய்க் கொண்டிருந்தார்கள். சிதாராமையர் என்னைக் கூப்பிட்டு கனக சபாபதி ஐயரிடம் அறிமுகப் படுத்தினர். "இவன் நமதூர் ஹெட் அக்கவுண்டன்ட் கணபதி ஐயர் குமாரன்; பி. ஏ. பரீக்ஷை கொடுத்திருக்கிறான்; புத்திசாலிப் பையன்; தங்கக் கம்பி. இப்போது திறந்திருக்கும் மண மார்க்கெட்டில் விலை போய் விடுவான்" என்று சொல்லி விட்டு, பேச்சோடு பேச்சாக "ஏன், உன் பெண் லலிதாவிற்கு இவனைப் பாரேன்" என்றார்.

"அப்படியானல் உன் ஜாதகமிருந்தால் கொடேன்" என்றார் கனகசப்பாபதி ஐயர், என்னைப் பார்த்து.

"என் தகப்பனரைக் கண்டு நீங்களே கேட்பது உசிதம்" என்றேன். "என் பெண் ஜாதகத்தைக் கையோடு கொண்டு வரவில்லை. உங்கள் மேல் விலாசத்தைக் கொடுத்தால் நான் ஊருக்குப் போனதும் ஜாதகத்தை அனுப்பி விடுகிறேன்," என்றார்.

• •

திருச்சியிலிருந்து ஒரு 'கவர்' வந்தது என் தகப்பனர் பெயருக்கு; அதற்குள்ளே அவளுடைய ஜாதகம் தானே இருக்கப் போகிறது! என் தகப்பனர் வெளியே சென்றிருந்தார். அவர் பெயருக்கு வந்த கவரை நான் உடைப்பதா?......கவரைக் கண்டதும் என் சிந்தனை சுழன்றது.

சிதாராமையர் வீட்டுக் கல்யாணத்தின்போது அந்த நான்கு நாட்களில் நாங்கள் சந்தித்துப் பேசிப் பழகியது ஞாபகம் வந்தது.

அந்த சந்தணப்பேலாவில், 'சிதாராமையர் பெண் லீலாவிற்குச் சொந்தமானது இது' என்று குறிக்க ஆங்கிலத்திலே "எஸ். எல்" என்று செதுக்கி யிருந்தது. அதை வைத்துக் கொண்டு அவளுக்கும் எனக்கு முள்ள பொருத்தத்தை நினைத்துப் பார்த்ததுண்டு! ஆம் "ஸ்ரீநிவாஸன், லலிதா" சரிதானே!

நான்காவது நாள் ஊர்வலம் புறப்படும் சமயம்! லலிதா வெகு வாகத் தன்னை அலங்காரம் செய்து கொண்டிருந்தாள். நீல ஜாகட், நீலப் பட்டாடை, நீல ரிப்பன். எல்லாம் ஒரே நீலமயம்! நேவி, மிலிடரி, முதலியவற்றின் நீல "யூனிபாரம்" போல எனக்குத் தோன்றியது! நான் அவளிடம் "என்ன இது ஏக நீலம்; யூனிபாரமோ? நிறபேதம் இருந்தால்தான் எடுப்பாகவும் நன்ருகவு மிருக்கிறது" என்றேன். என்ன ஆச்சரியம்! பச்சை ரவிக்கை, கனகாம்பரப் பட்டுப் புடவை முதலியவற்றுடன் சில நிமிடங்களில் தோன்றினள். என் மனத்தை நன்ருகத் தெரிந்து கொண்டாள் போலும். ஊர்வலத்தின்போது அவள் அந்தக் கோலத்துடன் நடமாடியது என் கண்முன்னே நின்றது.

என் தகப்பனர் வந்து சேர்ந்தார்! 'கவரை' உடைத்து ஜாதகத்தைப் பார்த்தார். பார்த்துக் கொண்டே "என்னடா, இது!" என்று சொல்லி என்னை ஏறிட்டுப் பார்த்தார்.

"என்...ன்......ன........." என்றேன்.

"ஸகோத்திரமடா; நாமும் ஹரிதகோத்திரம், அவர்களும் ஹரிதகோத்திரம்" என்றார்.

என்னை ஒரு சுற்றுச் சுற்றியது. சமாளித்துக் கொண்டேன். எனது ஆனந்தக் கோட்டை தகர்ந்து தூளாகியது. நானும் அவளும் ஒரே ரிஷியின் வழியில் வந்தவர்கள்! ஒரே ரத்தம் எங்கள் உடலில் ஓடுகிறது. அவள் என் சகோதரிபோல!

என்ன இருந்தாலும் இந்தப் பாழும் மனம் இருக்கிறதே, மிகவும் பொல்லாதது! சொன்னல் கேட்கிறதா? இந்த "சகோத்திர" சகோதர ச்கோதரி எண்ணத்தை மீறிக் காதல் பாவத்தை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருந்தது.

• •

ஆம்! சென்ற கோடை, சென்ற கோடைதானே! இந்தக் கோடைக் காலமும் வந்து விட்டது! ஆம், ஒரு வருஷமாகி விட்டது, விளையாட்டுப்போல.

இந்தச் சித்திரையில் எனது நண்பன் விசுவத்தின் கல்யாணத்தின் பொருட்டு திருச்சி சென்றிருந்தேன். பிரபலமான ஜவுளிக் கடையொன்றில் நுழைந்து நண்பனுக்கு ஒதியட் நல்ல அங்க வஸ்திரம் ஒன்றைப் பொறுக்கிக் கொண்டிருந்தேன்.

அதே கடைக்கு வந்திருந்தாள் லலிதா, அவள் கணவனுடன்! அவர்களும் விசுவத்தின் கல்யாணத்தின் பொருட்டுத்தான் வந்திருந்தார்கள்.

அவளைப் பார்த்துத் தெரிந்து கொண்டு நான் பேச்சைத் துவக்குவதற்கு முன் அவளே என்னிடம் வந்து பேச்சைத் துவக்கி விட்டாள்! என்ன பேசினள் தெரியுமா?

"என்ன அண்ணு சௌக்யமா?" என்ற கேள்விதான்!

அவளுடைய "அண்ணு" என்ற புது முறைக் கொண்டாட்டம் என் மனத்தை அழுத்தியது.

"ஆம், அவள் உன் தங்கைதான்: பழைய காதலி அல்ல" என்று எதிரொலித்தது என் மனம்!




அவ்வப்பொழுது சென்னையிலேயே வாசம் செய்ய வேண்டுமென்ற ஆசை கிருஷ்ணசாமி முதலியாருக்கும் அவர் மனைவிக்கும் ஏற்படும். முப்பது வருஷ காலம் வாழ்ந்த இடத்தின் மீது யாருக்குத்தான் அபிமானம் இராது? ஆயினும், தன்னைவிட்டு விலக முடியாமல், ஆரம்பாக்கம் கிராமம் அவர்களை ஒருவிதமாய் மயக்கிவிட்டதென்றே சொல்ல வேண்டும். இதற்குக் காரணம் அவருடைய பெற்றோர்கள் வைத்திருந்த நில புலன்கள் மட்டும் அல்ல. எருக்கு முளைத்து ஆவாரம் பூத்து புஞ்சைக்காடாய்க் கிடந்த சுமார் முப்பது ஏகரா விஸ்தீரணமுள்ள பூமியை, லக்ஷ்மி வாஸம் செய்யும் மாந்தோப்பாகவும், தென்னஞ்சோலையாகவும், நஞ்சைக் கழனிகளாகவும் மாற்றிய வீராசாமிப் பிள்ளைதான் காரணம். வீராசாமிப்பிள்ளை முதலியாருக்கு பாலிய சிநேகிதர். உள்ளூரோடு மிராசுதார் என்ற தோரணையில் கௌரவமாகக் காலம் கழிப்பவர். அவர்களுடைய அந்தரங்க விசுவாசத்தைச் சொல்லி முடியாது. கிருஷ்ணசாமி முதலியார் உப்பு இலாகாவில் நாற்பது ரூபாயிலிருந்து நானூற்றைம்பது வரையிலும் சம்பளத்தைப் பெற்றார். சிக்கனமாக வாழ்க்கையை நடத்தி பணத்தைச் சேகரம் செய்து வந்தார். அவரைக் காண பிள்ளை அடிக்கடி சென்னைக்கு வருவார்.

வரும்போதெல்லாம், தினுசு தினுசாகப் பிளான்களைப் போட்டு பணத்தைப் பெற்றுக் கொண்டு போவார். இச்சமயங்களில் முதலியார் மனைவிக்குப் பிள்ளைமீது ஏற்பட்ட வெறுப்பு கொஞ்ச நஞ்சமில்லை. தன் இஷ்டப்படி பணத்தைச் செலவழிக்க முடியவில்லை என்ற குறை ஒருபக்கம், என்ன மோசம் செய்யப் போகிறாளோ என்ற பயம் ஒருபக்கம். ஆனால், முதலியாரோ, தம் நண்பர் வந்துவிட்டால் தலைகால் தெரியாமல் கூத்தாடுவார். இரவெல்லாம் அவர்கள் பேசிச் சிரித்துக் கொட்டமடிப்பது பத்து அண்டை வீட்டுக்காரர்கள் தூக்கத்தைக் கலைக்கும்.

உபகாரச் சம்பளம் பெற்றுக் கொள்வதற்கு ஐந்து வருஷங்களுக்கு முந்தி ஒரு தடவை முதலியார் தன் மனைவியை ஊருக்கு அழைத்துச் சென்று, வேணுமென்றே ஒரு புள்ளியைக் கூட விடாமல், தங்களுக்குப் பூர்வீகமாக இருந்த ஆஸ்தியையும் இப்பொழுது இருப்பதையும் எடுத்துக் காட்டியபொழுதுதான் அந்தம்மாளுக்குச் சாந்தி ஏற்பட்டது — ஏன், மிகுந்த சந்தோஷமும் கூட.

கடைசியாக, உபகாரச் சம்பளம் பெற்று, உள்ளூரில் நிலைத்துக் குடித்தனம் செய்யவேண்டுமென்ற உத்தேசத்துடன் அவர்கள் வந்தபொழுது, முதலியாரை விட அவர் மனைவிக்கே ஆதனத்தின்மீதும் கோதனத்தின்மீதும் அதிகப் பற்றுதல் ஏற்பட்டதென்று சொல்ல வேண்டும்.

மாட்டுக் கொட்டத்தில் பல கறவைப் பசுக்களைப் பார்க்க அவள் மனம் பூரிக்கும். முப்பது வருஷகாலமாய் நாள் தவறாமல் தண்ணீர்ப் பாலுக்காக இடையனோடு சண்டை போட்டுவந்த அந்த அம்மாளுக்கல்லவா அவைகளின் அருமை தெரியும்! சிலவற்றின்மீது அவளுக்கு ஏற்பட்ட அன்பால், அவைகளை நீண்டகாலம் பிறர் ஆதரவின் கீழ் விடக் கூட அவளுடைய மனம் இணங்கவில்லை.

ஆயினும், எது எப்படியிருந்தபோதிலும், சென்னையின் மோகம் அவள் மனத்தில் ஒரு மூலையில் இருக்கத்தான் செய்தது. இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவையாவது, ஏதோ ஒரு சாக்கை வைத்துக் கொண்டு சென்னைக்குப் போய் வருவாள். முதலியாரைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லை. பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை சென்னைக்குச் சென்று தன் சிநேகிதர்களோடு உல்லாசமாய் இரண்டொரு தினங்கள் கழிக்காவிட்டால், அவருக்குப் பித்துப் பிடித்து விடும்போல் இருக்கும். அவர் மகன் காலேஜில் படித்து வந்ததும் இந்தப் பிரயாணத்துக்கு அனுகூலமாயிருந்தது. போதும் போதாததற்கு அவ

ருக்கும் சென்னை சுகுணவிலாச சபாவுக்கும் ஒரு தலை முறை சம்பந்தம் உண்டு. ஆகவே, சுகுண விலாச சபாவின் ஆண்டுவிழாவுக்கு வரவேற்பு வந்தால் அவர் போகாமலிருப்பாரா? இச்சமயம் அவர் மனைவி அவருடைய பிரயாணத்துக்குச் சம்மதப் படவில்லை. அதற்குக் காரணம், கேவலம் நாற்பதுமைல் ரயில் பிரயாணத்துக்கு அதிகச் செலவாய் விடும் என்ற எண்ணம் அல்ல.

அவர் ஜலதோஷத்தால் பாதை பட்டுக்கொண்டிருந்ததுதான். அதற்கேற்றவாறு மழையும் தூறலுமாகவே இருந்தது. ஆனால், இதற்கெல்லாம் சட்டை செய்பவர் அல்ல முதலியார். இதுவரையிலும் சபாவின் ஒரு ஆண்டு விழாவுக்குக் கூட அவர் போகத் தவறினதில்லை. இப்பொழுது போக முடியாமல் அவருக்கு என்ன வந்து விட்டது அதெல்லாம் முடியாது, போய்த்தான் தீரவேண்டும் என்று ஒரு காலில் நின்றார். கடைசியாக, தன் மனைவியையும் சமாதானப் படுத்துவதுபோல், ஸாக்ஸ், பூட்ஸ், முதலியவைகளை அணிந்து கொண்டார். தலையில் தொப்பியையும் மாட்டிக் கொண்டார். பிளானல் துணியும் கழுத்தில் சுற்றப்பட்டது. பிறகு "எதுக்கும் குடையையும் கையிலே கொண்டு போங்க" என்று, வெகுநாளாக உபயோகப் படுத்தாமல் எங்கோ மூலையில் கிடந்த குடையைத் தேடச் சென்றாள் அந்த அம்மாள். முதலியாருக்குச் சிரிப்பு வந்தது. ஆனால், இப்பொழுது அவள் போன போக்கிலேயே விட்டுவிடுவதுதான் நலம் என்று அவருக்குப் பட்டது. குடையைத் தேடிப் பிடித்துக் கொண்டுவந்தாள். ஆனால், அதைத் திறப்பதும் மூடுவதும் பிரம்மப் பிரயத்தனமாய் இருந்தது. அதனுள் முட்டையிட்டுக் குஞ்சு பொறித்துக் கொண்டிருந்த கரப்பான் பூச்சிகளையும் நாசம் செய்ய வேண்டியதாயிருந்தது. என்ன செய்தும், குடையைப் பூர்த்தியாய் மூட முடியவில்லை. எட்டுக் கம்பிகளும் ஏதோ கட்டுக்கு அடங்குவனபோல் மெள்ள எட்டுத் திசைகளையும் சுட்டிக்காட்டின. முதலியார் அதனுட்புறம் ஒரு முறை முகர்ந்து பார்த்தார்; முகத்தைச் சுளித்துக் குமட்டினார். "இந்த எழவை வேறே கொண்டு போகச் சொல்றயா?" என்று முறையிட்டார்.

"ஆமாம், அதை மோந்து பாருங்க! உங்களுக்குத்தான் தோணுதே! காலம் கெட்டுக் கிடக்குது. நினைச்சால் மழை. இங்கயே இப்படி இருந்தால், பட்டணத்துலே, கொட்டிக்கிட்டுதான் இருக்கும். நனைஞ்சு தலை கால் வலிச்சால் என்ன பண்றது? உங்களுக்கு ஒண்ணும் தெரியாது. குடையை எடுத்துக் கிட்டுப்போங்க. என் பேச்சைக் கேளுங்க" என்று அவள் பிடிவாதமாகச் சொன்னாள். முதலியார், பதில் சொல்ல இஷ்டமில்லாமல், "விதியே" என்று குடையை இடது கையில் மாட்டிக்கொண்டு, வலது கையில் ஒரு சிறு தோல் பெட்டியைப் பிடித்துக்கொண்டு, ரயிலடிக்கு நடந்தார். தூறல் போடாவிட்டாலும், வானத்தில் மேகங்கள் சூழ் இருந்ததால், எங்கே குடையை விரித்துப் பிடித்துக் கொள்ளும்படி உத்திரவு போட்டுப் போகிறாளோவென்று பயந்து, அவர் சற்று விரைவாகச் சென்றார்.

டிக்கட்டை வாங்கிக் கொண்டு, ரயில் வண்டியில் உட்கார்ந்த பிறகுதான் முதலியாருக்கு நிம்மதி ஏற்பட்டது. பிறகு, நிதானமாக, வழக்கம்போல், தன் சிறிய பணப்பையில் ஒரு அறையில் டிக்கட்டை வைத்தார். மற்ற அறையிலிருந்த பணத்தை ஒரு தரத்துக்கு மூன்றுதரமாக எண்ணினார். இவ்வித நடவடிக்கையிலிருந்தே, அவர் எவ்வளவு மிடுக்காய் நடந்துகொண்ட போதிலும், அவருடைய வயோதிகம் நன்கு வெளிப்பட்டது. பணப்பையில், இரண்டு பத்து ரூபாய் நோட்டுகளும், இரண்டு ஒரு ரூபாய் நாணயங்களும், எட்டே முக்காலணா சில்லரையும் இருந்தன. பையைப் பத்திரமாய் ஜோபியில் வைத்துவிட்டு அவர் பக்கத்திலிருந்த மற்ற பிரயாணிகளைக் கவனிக்கலானார். பிறகு, சம்பாஷணைப் பிரியர் ஆனதால், மற்றவர்கள் பேச்சில் தானும் கலந்து கொண்டார். பேச்சு சுவாரசியத்தில் சென்னைக்கு அருகாமையில் வந்தது கூட அவருக்குத் தெரியவில்லை.

எப்பொழுதும் சென்னைக்கு முன் ஸ்டேஷன், பேஸின் வாராவதியில் வண்டியைச் சற்று தாமதித்து, டிக்கட்டுகளை வசூல் செய்வது வழக்கம். இன்றைக்கு எக்காரணத்தினாலோ, சென்னை செண்டிரல் ஸ்டேஷனிலேயே வசூல் செய்து கொள்ளலாமென்று, வண்டி கால தாமதமில்லாமல் விடப்பட்டது. ஆதலால் நிதானமாய்ப் பணப்பையிலிருந்து எடுத்த டிக்கட்டை முதலியார் மறுபடியும் அதில் வைக்க நேரிட்டது.

சென்னை பிளாட்பாரத்தில் வண்டிவந்து நின்றதும், கும்பல் எல்லாம் கலையும் வரையில், முதலியார் இடத்தைவிட்டு நகரவில்லை. மழை இல்லாவிட்டாலும், வானம் இடி முழக்கமாய் இருந்தது. எந்த நிமிஷத்தில் வேண்டுமானாலும் பெய்யலாம். முதலியார் குடையைப் பத்திரமாய் இடதுகையில் மாட்டிக் கொண்டு, தோல் பெட்டியை வலது கையில் பிடித்துக் கொண்டு, டிக்கட்டுகள் வாங்கும் வாசற்படியண்டை வந்தார். பிரயாணிகள் அநேகமாய் வெளிக் கடந்து விட்டார்கள். காத்திருந்தவர்கள் ஏழெட்டு பேர்களுக்குமேல் இருக்கமாட்டார்கள். முதலியார், தோல் பெட்டியை மெள்ளக் கீழே வைத்து, பணப்பையை எடுத்தார். தோல் பெட்டியில் பளுவான சாமான் ஒன்றுமில்லை. அது வெகு இலேசாய்த்தான் இருந்தது. ஆனாலும், அது நசுங்கிக் கசங்கி, அதன் புதுத் தோற்றம் மாறக் கூடாதென்ற ஆசையால் அதை அவர் அவ்வளவு ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்தார். பிறகு, டிக்கட்டை எடுத்து, பணப்பையை வாசற்படி தாண்டினதும் ஜோபியில் வைத்துக் கொள்ளலாமென்ற எண்ணத்தோடு, இடது கையில் இறுகப்பிடித்துக்

கொண்டு, பெட்டி சகிதமாய் வலது கையிலிருந்த டிக்கட்டை, டிக்கட் வசூல் செய்பவரிடம் நீட்டினார். அப்பொழுது பெட்டியைத் தான் சுமந்து வருவதாகக் கெஞ்சிக் கேட்டுக் கொண்ட ஒரு கூலிப் பையனை "வேணாம்டா!" என்று அவர் அதட்டிக் கொண்டிருக்கும்போதே, அவரது இடது முழங்கை எலும்பின் மீது பொறுக்க முடியாத இடிபட்டது. அவர்முன் "விசுக், விசுக்" என்று போய்க்கொண்டிருந்த சோல்ஜரின் மணிக்கட்டுதான் இடித்ததோ, அல்லது வேறு யாராவது வேண்டுமென்று இடித்தார்களோ சொல்வதற்கு இல்லை. ஆனால் அதே க்ஷணத்தில் அவர் இடது கையிலிருந்த பணப்பை (மணிபர்ஸ்.) மட்டும் மாயமாய் விட்டது. அவர் திகைப்பைக் கவனித்த கூலிப் பையனுக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்து விட்டது. முதலியார் ஒரு நொடியில் இடது பக்கம் திரும்பினார். அங்கே நின்றிருந்த மூவர்களில், சரிகை அங்கவஸ்திரம், தலைப்பாவோடு விளங்கிய நாயுடு ஒருவர். மற்றொருவன், நவநாகரிகமே உருவெடுத்தாற் போலிருந்த ஒரு யுவன். சிக்ரெட்டும் கையுமாய் நின்றான். அவர்கள் மீது முதலியாருக்கு எள்ளளவும் அவநம்பிக்கை பிறக்கவில்லை. மூன்றாவது பேர்வழி, அதுவும் மற்றவர்களைவிட அதிக சமீபத்தில் இருந்தவன், ஒரு பரட்டைத் தலையன். அவன் தரித்திருந்த கந்தை நெருப்பில் போட்டாலும் வேகாது. அவனுக்குச் சுமார் பன்னிரண்டு வயது இருக்கும். சுற்றுப் பக்கத்தில் வேறு யாரும் இல்லை. இரண்டு வினாடிகளுக்குள் கண்ணுக் கெட்டாமல் யாராலும் ஓடிவிட முடியாது. பரட்டைத்தலையன்தான் எடுத்திருக்க வேண்டு மென்று அவருக்கு நிச்சயமாகப் பட்டது. சந்தேகமே இல்லை. பல்லைக் கடித்தார். "திருட்டு ராஸ்கல்!" என்று கர்ஜித்து, பிசுக்குப்பிடித்த அவன் பரட்டைத் தலையைப் பிடித்துக் கொண்டார். கூலி கேட்ட பையன் ஓட்டம் பிடித்தான்.

அவன் முதலில் சிரித்து, பிறகு ஓடியது அவருக்குக் கொஞ்ச நஞ்சமிருந்த சந்தேகத்தையும் போக்கடித்தது.

"எடுடா பர்ஸை, ஸ்கௌண்ட்ரல்!" என்று அவன் கழுத்து ஒடிந்து போகும்படி தலையை அசைத்தார்.

"அய்யய்யோ! நான் எடுக்கல்லைங்க, சாமி!" என்று பரட்டைத் தலையன் கதறினான்.

"நீ எடுக்காதே எங்கேடா போகும்? இறக்கை முளைச்சிட்டுதா? எங்கிட்டயா ஜோக் பண்ணுறே?" என்று பல்லைக் கடித்துக்கொண்டு, தலையில் ஓங்கிக் குட்டினார்.

பையன் மட்டும் "எனக்குத் தெரியாது, சாமி! எனக்குத் தெரியாது, சாமி!" என்று கத்தியவாறு இருந்தான்.

"கைதேர்ந்த பசங்களாச்சே! இட்டுக்கிண்டு போங்க போலீஸ் ஸ்டேஷனுக்கு" என்று சொல்லிக்கொண்டே, நவயுவன் அவன் முதுகில் ஒரு அறை கொடுத்தான். அதைப் பொறுக்க மாட்டாமல், பரட்டைத் தலையனுக்கு இருமல் வந்துவிட்டது. மற்றொரு அடிகொடுத்தால் அவன் கூடுகட்டி யிருந்த நெஞ்சு குலைந்து விடும்போலிருந்தது. ஆனால், முதலியாருக்குக் கோபவெறி அதிகரித்துக் கொண்டு போயிற்றே யொழிய குறையவில்லை.

பண நஷ்டத்தை அவர் சட்டை செய்யவில்லை. இவ்வளவு நாளாய் இல்லாமல் இப்பொழுது ஏமாந்தோமே என்ற அவமானம் அவர் ஆவேசத்துக்கு மற்றும் தூபத்தைப் போட்டது. செத்த நாயை இழுப்பதுபோல், அவனைத் "தரதர" வென்று இழுத்துச்சென்றார். நடுக்கத்தால், கால் தவறி பையன் கீழே விழுந்தான். முழங்கால் சிப்பியில் நல்ல காயம் பட்டது. ஆனால், பிடித்த பிடியை முதலியார் விடவில்லை. இதற்குள் மழைகொட்டத் தொடங்கி விட்டது. முப்பது கஜதூரத்திலிருந்த போலீஸ் ஸ்டேஷனுக்கு நனையாமல் போக முடியாதாகையால், குடையைத் தூக்கித் திறக்கும் பொழுது "தொப்" பென்று பணப்பை அதனுள்ளிருந்து கீழே விழுந்தது. முதலியார் பிரமித்து சிலைபோல் நின்றார்; திறந்தவாய் திறந்தபடியே இருந்தது. எல்லாம் சில வினாடிகள் தான். பிறகு சரேலென்று சமாளித்துக்கொண்டு, இரண்டு கைகளாலும் பணப்பையை வாரி ஒளித்துக்கொண்டார். விடுபட்ட ஏழைப் பையன் நொண்டிக் கொண்டே அவரிடமிருந்து ஓடினான். நல்ல வேளையாய் அவர் பணப்பையை எடுத்து மறைத்தது யாருக்கும் தெரியவில்லை. அவர் இருதயம் 'படபட' வென்று அடித்துக் கொண்டது. கைகால்கள் நடுக்கம் எடுத்துக் கொண்டன. உடம்பெல்லாம் வியர்த்து விட்டது. அவ்வேழைப் பையன் வெகு தூரத்தில் சுவரின்மீது சாய்ந்தவாறு, முழங்காலைத் தடவித் தடவி அழுதுகொண்டிருந்தான்.

பையிலிருந்து ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்து, அவனுக்குக் கொடுக்கலா மென்று, அவன் இருக்கும் இடத்தை நோக்கிச் சென்றார். அவருக்கு நாவில் வார்த்தை எழும்பவில்லை. ரூபாயைக் காட்டியவாறு மெள்ள நகர்ந்தார். இதைக் கண்ட சிறுவன் மறுபடியும் தன்னை இம்சை செய்ய வருகிறார் என்று நினைத்து, மழையையும் கவனியாமல் வெளியே ஓடினான்.

முதலியார் இருதயத்தில் தைத்த முள் மற்றும் சிறிது புதைந்தது. அதை இன்றைக்கும் அவர் மறக்க வில்லை.

# கலியாண சங்கடம்

பூவாளூர் - சுந்தரராமன்

இந்த உலகயுத்தம் ஆரம்பித்து ஐந்து வருஷங்களுக்கு மேலாகிவிட்டது. உலகம் முழுவதிலும் எவ்வளவோ மாறுதல்கள் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. ஆனால் என் மனதில் மட்டும் ஒரே ஒரு சம்பவம்தான் நித்தியம் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது. எந்த பத்திரிகையில் அந்த 'யுத்தம்' என்கிற நான்கு எழுத்துகளைக் கண்டாலும், அந்த சம்பவந்தான் நினைவிற்கு வருகிறது.

இந்த 'யுத்தம்' என்ற சொல்லுக்கும் அந்த சம்பவத்திற்கும் அவ்வளவு சம்பந்தம் இருக்கத்தான் இருந்தது. ஆம், அது சென்ற மகாயுத்த காலத்தில் தான் நடந்தது. அது நடந்து எவ்வளவோ வருஷங்களாகி விட்டன. இடையில்—இந்த யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னால்கூட—அதை நான் மறந்து இருந்திருக்கிறேன். ஆனால் இந்த யுத்தம் ஆரம்பித்த அன்றுமுதல் இன்றுவரை, ஒரு நாளாவது மறந்தது கிடையாது; மறக்க முயன்றும் முடியவில்லை. யுத்தம் என்ற சொல் எப்படியோ என்னை மீண்டும் மீண்டும் அந்தப் பழைய எண்ணங்களுக்கே இழுத்துக் கொண்டுபோய் விடுகிறது. பத்திரிகை படிக்க இரவில் விளக்கண்டை உட்கார்ந்தால் நான்கு வரிகள் படிப்பதற்குள் அந்த சம்பவத்தைப்பற்றிய நினைவுகள் கடலலைகள்போல ஒன்றன்பின் ஒன்றாக என் மனதில் மோத ஆரம்பிக்கும். அந்த உள்ளத்தின் நிகழ்ச்சி முடிவில் கடவுளுடைய அபார சக்தியை நினைந்து என்னை அறியாமலே என் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சுரக்க உணர்வேன்.

## 2

கரூர் முருகேச முதலியார் குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் மூன்று நான்கு தலைமுறைகளாக நெருக்கமான நட்பும் பழக்கமும் உண்டு. ஒருவர் வீட்டில் எந்த விசேஷம் நடந்தாலும் மற்றவர் தலைப்பொறியாகப் பத்து நாட்களுக்கு முன்னதாகவே வந்து ஓடி ஆடி எல்லாக் காரியங்களையும் நடப்பித்து வைத்து, பத்து நாட்களுக்குப் பின்தான் தங்களுடைய வீட்டிற்குப் போவார்கள்.

முருகேச முதலியார் கரூரில் பெரிய பணக்காரர். பரம்பரை வைதிகக் குடும்பம்; ஆசாரமென்றால் அவரிடம்தான் பார்க்க வேண்டும். தெய்வ பக்தியும் மதப்பற்றும் அவருடன் கூடப் பிறந்தவை. தங்கமயமான அவருடைய சரீரத்தில் துல்யமான விபூதிப் பட்டைகள் கண்டவர் கண்களைக் குளிர்விக்கும். அவருக்கு ஷண்முக வடிவு ஒரே பெண். அழகுடன் அமரிக்கையான குணமும் சேர்ந்து கொண்டது.

அப்பொழுது சாரதா சட்டமே இயற்றப்பட வில்லை. அதனால் வைதிகக் குடும்ப வழக்கம்போல, ஷண்முக வடிவிற்குப் பன்னிரண்டாவது வயதில் கல்யாணம் நடந்தது. தூரபந்துத்வத்தில் பி.ஏ. பட்டம் பெற்ற சுப்பிரமணியன் என்பவன் அவருக்கு மாப்பிள்ளையாக வாய்த்தான். அந்தக் கல்யாணம் நடந்த ஒரு வாரத்திற் கெல்லாம் மகாயுத்தமும் ஆரம்பித்தது.

கல்யாணம் நடந்த ஆறாவது மாதம் சுப்பிரமணியனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் அவன் பட்டாளத்தில் சேர்ந்து இருப்பதாகவும், தான் சீக்கிரத்தில் திரும்பிவந்து விடுவதாகவும், பம்பாய்த் துறைமுகத்தில் அடுத்த நாள் புறப்படும் கப்பலில் இருந்து கடிதம் எழுதியிருந்தான். உண்மையில் அம்மாதிரியான கடிதத்தை எவருமே எதிர்பார்க்கவில்லை. எல்லாருக்கும் அது ஒரு பேரிடியாக இருந்தது. முதலியாருக்கு மிகவும் வருத்தம். அவருடைய மனதில் எவ்வளவோ பொல்லாத எண்ணங்கள் வந்து குவிந்து அவருடைய அமைதியைக் குலைத்துவிட்டன. மாப்பிள்ளை எப்படியாவது க்ஷேமமாகத் திரும்பி வரவேண்டுமேயென்று முதலியாருக்கு சதா கவலை.

## 3

சுப்பிரமணியன் புறப்பட்டுப் போன ஆரம்பத்தில் பாஸ்ரா, மெஸபடோமியா முதலிய இடங்களிலிருந்து மாதம் ஒருகடிதம் வந்து கொண்டிருந்தது. நான்கு மாதங்களுக்குப் பிறகு அவனிடமிருந்து கடிதமே வரவில்லை. நாளாக நாளாக கவலை அதிகரித்தது. நாட்கள் ஓடி, மாதங்களாகி, வருஷங்களும் உருண்டன. அவனிட மிருந்து கடிதம் வந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. முதலியாருடைய கனவிலும் நனவிலும் விபரீதமான நினைவுகள் வரலாயின. அந்த சமயத்தில் ஷண்முக வடிவு பருவம் அடைந்தாள்.

1916-ம் வருஷம் அக்டோபர் மாதம். ஒருநாள் காலையில் அன்றுவந்த ஒரு கவரை எடுத்துக்கொண்டு முதலியார் என்னிடம் ஓடோடி வந்து, 'ஸார், தலையில் கல்லைப் போட்டு விட்டான்' என்று குழந்தைபோல

விம்மி விம்மி அழுதார். உடனேயே என் மனம் அந்தக்கடிதத்தில் எழுதப்பட்டிருப்பதை ஒருவாறாக ஊகித்துவிட்டது. சுப்பிரமணியத்தின் தாயார் அவன் யுத்தத்தில் மாண்டுபோனதாக செய்தி வந்திருப்பதைக் கண்டு எழுதியிருந்தாள்.

அந்த சம்பவம் என்மனதில் என்றும் மாறாதபடி, மறக்காதபடி அடையாளம் செய்து விட்டது. அதைப்பற்றி நினைத்தாலே மூளை குழம்பிவிடும். முதலியாரைப்போல தெய்வ நம்பிக்கையும் நல்லெண்ணமும் உடையவருக்கா அவ்வளவு பெரிய தாங்கமுடியாத இடி? அதுவும் ஒரே பெண்; அன்று மலர்ந்த அழகிய புஷ்பம் போன்றவளுக்கு இப்படி வந்து விடியலாமா? என்றெல்லாம் நினைத்துப் புழுங்குவேன். அதற்குப் பிறகு முதலியார் வீட்டிற்குப் போவதற்கே எனக்கு மனமில்லை. என்னைக் கண்டதுமே முதலியார் வீட்டில் ஒருவர் பாக்கி இல்லாமல் அழ ஆரம்பித்து விடுவார்கள். இவ்வளவு சின்ன வயதில் வைதவ்ய கோலத்தை அவர்கள் குடும்பத்தில் இதற்குமுன் யாருமே அடைந்தது கிடையாது.

‘காலதேச வர்த்தமானத்தில் இந்த துக்கம் சீக்கிரம் மறைந்து விடும்’ என்று எவரும் எதிர்பார்க்கலாம்; எதிர்பார்க்கவும் செய்தார்கள். ஆனால் ஷண்முக வடிவின் விஷயத்தில் அவ்வாறு இல்லை. நாளாக நாளாக முதலியாருக்கும் அவருடைய மனைவிக்கும் இந்த துக்கம் மாளமுடியாததாகிவிட்டது. வீட்டில் ஸ்வர்ண விக்கிரகத்தை ஒத்த ஒரே பெண், பச்சைப் பசுங்கிளி, எல்லா நல்லதையும் துறந்து வாழவேண்டுமென்றால் என்ன செய்வது? அவருக்கு அந்தப் பெண் குழந்தையே பிறக்காமல் இருந்திருக்கலாம் என்று அவர்கள் நினைத்து அழுதார்கள்.

## 4

முதலியாருக்கு நாளடைவில் எல்லாவற்றின் மீதும் ஒரு வெறுப்புத் தோன்ற ஆரம்பித்தது. தெய்வ நம்பிக்கைகூட சிதைந்துவிட்டது. அவருடைய முகத்தில் அதற்கு முன் நிலவின பிரகாசமும், தேஜஸும் எங்கேயோ போய்விட்டன. உடம்பு மிகவும் இளைத்துவிட்டது. வழக்கமான புன்னகையும் சாந்தமும் கூட அவரிடத்தில் காணவில்லை.

நானும் முதலியாரும் பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது ஷண்முக வடிவு வெற்றிலைத் தட்டை எங்கள் முன் வைத்து விட்டுச் சென்றாள். நான் அவளைக் கண்ணால் கண்ட நேரம் சில விநாடிகள் தானிருக்கும். ஆனாலும் அவளைக் கண்டதும் நானே வாய்விட்டு அலறும் தறுவாயில் இருந்தேன். உண்மையில் இயற்கையின் சதி அந்த இளங் கைம்பெண்ணிடம் நிறைவேறியிருந்த அளவு வேறு எவரிடமும் நிறைவேறி இராது. அவளுடைய வீணை அழகு அவ்வளவு உச்ச நிலையை அடைந்திருந்தது. அவளுடைய பர்வத்தைக் கொட்டிக்கொள்ள வேண்டும் என்றுதானோ என்னமோ, அதற்குமுன் என்றும் கண்டிராத புதுமை அழகு அவள் ஒவ்வொரு அங்கத்திலும் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தது. உடனே என் மனதில் வெகு நாளாக சமாதி கொண்டிருந்த எண்ணம் திடீரென்று விழிப்படைந்து விட்டது.

‘முதலியார்வாள்! நான் ஒரு புது விஷயத்தைச் சொல்லப் போகிறேன். உங்களுக்கு அது எப்படிப் பட்டாலும்......’ என்று முதலில் பீடிகையைப் போட்டேன்.

‘என்ன, விஷயத்தைச் சொல்லுங்களேன்’ என்றார்.

‘நீங்கள் கோபமோ, மனவருத்தமோ அடையவில்லை என்றால் தான் நான் துணிந்து சொல்ல முடியும்.’

‘எனக்கு இன்னமே, கோபமும் வருத்தமும் எதற்கு, ஸார்?’

‘இல்லை, ஷண்முக வடிவின் பிற்கால வாழ்க்கைக்கு............ அவளுக்கு வேறொரு கல்யாணம் செய்து விட்டால் என்ன?’ என்று கேட்டுவிட்டேன்.

முதலியார் அப்படியே உட்கார்ந்து விட்டார். ஆம், அம்மாதிரியான ஒன்றைக் கனவிற் கண்டால்கூட பாவம் என்று நினைக்கக்கூடிய ஆசாரம் உள்ளவர்! எப்படியோ விஷயத்தைத் தைரியமாகச் சொல்லி நிறுத்தினேன்.

‘அதுமட்டும் முடியாது!’ என்று நிதானமாகச் சொன்னார். அவருடைய வெறித்த பார்வையும், பதட்டமற்ற பேச்சும் என் மனதில் இருந்த தீர்மானத்தைப் பறக்க அடித்து விட்டன.

‘முதலியார்வாள், அது ஒன்றைத் தவிர வேறுவழியே இல்லை என்று நினைக்கிறேன். இப்படியே இந்தப் பச்சிளங் கொடியை வைத்துக் கொண்டிருப்பதில் என்ன பிரயோஜனம்? பிற்காலத்தில் அவளுக்கு ஓர் ஆதரவு வேண்டாமா? இந்தக் காலத்தில் அது சிறிது வழி தவறினதாகக் காணப்பட்டாலும், அதனால் பிற்காலம் பெருத்த நன்மை ஏற்படும்’ என்று என்ன என்னமோ சொன்னேன். மூன்று நாட்கள் அதைப்பற்றிச் சாங்கோபாங்கமாக விவாதித்தேன். கடைசியில் முதலியாரை அரைமனதுடன் சம்மதிக்கச் செய்துவிட்டேன். எதற்கும் முதலாவதாக முதலியார் குடும்பத்தைச் சென்னைக்கு மாற்றச் செய்தேன். சென்னையில் பல பேர்களுடன் கலந்து கொண்டால் அவருடைய மனம் மாறும் என்றும் எதிர்பார்த்தேன். நான் நினைத்தபடியே முதலியாரும் திரும்பவும் மாப்பிள்ளை தேட ஆரம்பித்தார்.

## 5

1919-ம் வருஷம் கல்யாணம் கூடிற்று. கண்ணப்பனை முதலியாருக்கு ஒரு விஷயத்தில் தவிர மற்ற எல்லாவிதத்திலும் பிடித்திருந்தது. அவன் ஒரு காங்கிரஸ்வாதி என்பது மட்டும் முதலியாருடைய மனத்தின் ஒரு மூலையில் உறுத்திக்கொண்டே இருந்தது. கடைசியில் ஷண்முக வடிவிற்கும் கண்ணப்பனுக்கும் மறுமணம் நடந்தது. அன்றுதான் நான திரும்பவும் முதலியார் முகத்தில் பழைய புன்சிரிப்பையும், கண்களில் தன்னை அறியாமல் கொட்



டும் ஆனந்த பர்ஷபத்தையும் கண்டேன். அவர் என்னைக் கட்டிக்கொண்டு, 'நீங்கள் சொன்னபடியே எல்லாம் நடந்தது. உங்கள் ஆசிர்வாதம்தான் ஷண்முக வடிவிற்கு பெரிய ஆதரவு!' என்றபொழுது எனக்குக்கூட கரைகடந்த இன்பந்தான் ஏற்பட்டது. திரும்பவும் முதலியாருடைய மனதில் கடவுள் பகதுயும், அன்பும் பெருகிக் கரைபுரண்டு வந்தது.

மாங்கல்ய தாரணம் ஆகி, ஆசிர்வாதம் நடந்து கொண்டிருந்த பொழுது எவரும் எதிர்பாராத ஒன்று நடந்து இவ்வளவு சந்தோஷத்தையும் கெடுத்துவிட்டது.

எங்கள் எல்லோரையும் ஒரேயடியாகத் தூக்கிப் போடும்படி எங்கள் முன் தோன்றினது சாக்ஷாத் அதே சுப்பிரமணியம்தான்! எவன் இறந்து விட்டான் என்று கருதப்பட்டு அதற்காக வைதவ்ய கோலத்தை இரண்டு வருஷங்களாகப் பூண்டிருக்க நேர்ந்ததோ, அதே மனிதன்தான் எங்கள் முன் நின்றான்! ஒருநாள், வேண்டாம், ஒரு ஜாமம் முன்னே வந்திருந்தால்கூட அந்த மணத்தை நிறுத்தியிருக்கலாம். அக்கினிவலம் வந்து, அம்மி மிதித்து பலபேர் முன்னிலையில் மாங்கல்யதாரணமும் ஆய்விட்டது. இப்பொழுது என்ன செய்வது?

இவ்வளவு தடுமாற்றத்திற்கும் காரணம் ஒரே ஊரில் இருந்து ஒரே பெயருடன் இரண்டு பேர்கள் யுத்தத்திற்குச் சென்றதும், வேறு ஒரு சுப்பிரமணியத்தின் மரணத்தைத் தவறுதலாக ஷண்முகவடிவின் கணவனான சுப்பிரமணியத்தின் மரணம் என்று கொண்டதும்தான். காரணத்தைத் தெரிந்துகொண்டதும் எங்களுடைய அவசரத்தாலும் அஜாக்ரதையாலும் இந்த இரண்டாவது மணம் நடந்திருந்தாலும், இனி தவறைத் திருத்திக் கொள்ள வழி ஒன்றும் தெரியவில்லை. நாங்கள் அவனிடம் நடந்த விஷயத்தைச் சொன்னோம். இனிமேல் நடக்க வேண்டியதைப் பற்றி ஆலோசித்தோம்.

சுப்பிரமணியன் ஷண்முகவடிவு தன் மனைவிதான் என்றும் அந்த உரிமையைத் தன் உயிர் உள்ள மட்டும் விட்டுக் கொடுக்க முடியாதென்றும் தீர்மானமாகச் சொல்லிவிட்டான். கண்ணப்பனும் தான் எப்பொழுது அவளைத் தொட்டுத் தாலி கட்டியாகி விட்டதோ அப்பொழுதே தனக்கு உரிமை வந்துவிட்டது என்று அழுத்தமாகச் சொன்னான். இந்த முடிவுகாணாத விவாதத்திற்கு ஒருவழியும் எங்களுக்குப் புலப்படவில்லை.

'என்னய்யா, ஐந்து வருஷங்களுக்குப் பிறகு ஒரே மனதுடன் அவளைக் கூட்டிக் கொண்டுபோக வந்திருக்கிறேன். மேலும் நான் உயிருடன் இருக்கும்பொழுது அவளுடைய மறுமணம் எங்கேயாவது செல்லுமா? அவளை நான் அழைத்தே செல்வேன்' என்று படபடப்புடன் கத்தினான்.

கண்ணப்பன் சந்தர்ப்பத்தைத் தெரிந்துகொண்டவன். அவன் அமைதியாக, 'ஐயா, நானாக வலியவந்து உங்கள் பெண்ணைக் கேட்டு மணம் புரிய

வில்லை. அவளுடைய நிலைமையைச் சொன்னீர்கள். நான் அவளை விதவை யென்றே மறுமணம் செய்து கொண்டேன். இப்பொழுது அதைவிட்டுக் கொடுப்பது என்பதை என்மனம் ஒப்பவில்லை' என்று வர்தாடினன். முதலியார் முகத்தில் ஈயாட வில்லை; தர்ளாத அவமானத்தால் உடல் குன்றி உள்ளே போய்விட்டார்.

ஷண்முகவடிவையே கேட்டுப் பார்த்தோம். அவள் 'நீங்கள் யாரை ஏற்றுக்கொள்ளச் சொல்கிறீர்களோ, அவருடன் வர்ழ்கிறேன்' என்று சொல்லி விட்டாள். கலியாணத்திற்கு வந்திருந்தவர்கள் எவ்வளவு செர்ல்லியும் சுப்பிரமணியனே, கண்ணப்பனே தங்கள் உரிமையை விட்டுக்கொடுக்க ஒப்பவில்லை. கடைசியில் திருமணத்தை அத்துடன் நிறுத்திக் கொர்ண்டு இந்த விவர்தத்தைப்பற்றி முடிவு செய்ய சிறிது காலம் அவசியமென்று செர்ல்லி அன்று தப்பித்துக் கொண்டோம்.

## 6

முதலியாருடைய நிலைமை முன்னிருந்ததைவிட மோசமாகி விட்டது. முன்பிருந்த நிவர்த்திக்க முடியாத துக்கத்துடன், புதிய அவமானமும் சேர்ந்து அவருடைய உடலை மிகவும் சீர்கேடு அடையச் செய்துவிட்டது. தன்னுடைய விஷயத்தில் கடவுள் மிகவும் சோதிக்கிருர் என்று நினைத்து அழுதார். ஒன்றை நினைத்து அதைச் செய்த பிறகு தர்ம் முற்றிலும் எதிர்பர்ராத இவ்வளவு பெரிய அவமானம் வந்துவிட்டதை எண்ணி எண்ணி மனம் கும்மினர்.

ஆறும்ர்தங்கள் சென்று விட்டன. யுத்தம் முடிந்துவிட்டது. யுத்தத்தில் உதவினதற்குப் பிரதியாக அளிக்கப்பட வேண்டிய இந்தியாவின் உரிமையை அளிக்கர்தததால் தேசத்தலைவர்கள் சத்தியாக்ரகம் செய்தார்கள். எங்கு பார்த்தர்லும் அடக்குமுறையும் தடி அடியும் தாண்டவமாடின.

இந்த சந்தர்ப்பத்தை, சுப்பிரமணியன் நன்ருக உபயோகித்துக் கொண்டுவிட்டான். அவனுடைய அதிகார அமுலினல் வெகு சுலபமாக கண்ணப்பன் மீது பாதுகாப்புச் சட்ட விதியின்படி குற்றம்சர்ட்டி, சிறைச்சாலைக்கு அனுப்பிவிட்டான். முதலில் இது சாதர்ரணமாக நடந்த சம்பவம் என்று நினைக்கப்பட்டது. பிறகு ஒருவர்ருக உண்மை தெரிந்ததும், யர்வருடைய அனுதாபமும் கண்ணப்பன் மீது விழுந்தது.

இது நிகழ்ந்து ஒருவாரம் இருக்கும். அதற்குள் உடனே ரர்வல் பிண்டியில் வேலை ஒப்புக் கொர்ள்ளும்படி சுப்பிரமணியனுக்குத் தந்தி வந்து சேர்ந்தது. அவன் அடுத்த நாள் வண்டிக்குப் புறப்பட வேண்டியதர்யிற்று. முதல் நர்ளே முருகேச முதலியாரிடம் வெகு நேரம் பேசி அவரை ஒருவாருகத் திருப்தி செய்து, ஷண்முகவடிவை மறுநாள் அவனுடன் கூட்டிக்கொண்டு போர்கச் சம்மதம் வாங்கி விட்டர்ன்.

ஷண்முக்வடிவிற்கு விஷயம் தெரியவந்தது. சுப்பிரமணியன் செய்த சூழ்ச்சி அவளுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. தன்னை மணந்து கொர்ண்ட பாபத்திற்கர்க அநியாயமர்க்ச் சிறைவாச தண்டனையை அனுபவிக்கும் கண்ணப்பன்மீது அவள் மனம் சென்றது. எப்படியும் இனி கண்ணப்பனையே தன் கணவனுகக் கொர்ள்வது என்று முடிவு கட்டி விட்டாள். அன்று மாலை நடந்த உப்பு சத்தியாக்ரகத்தில் பங்கெடுத்துக் கொண்டதற்காகக் கைது செய்யப்பட்டாள்.

இந்த விஷயம் சுப்பிரமணியன் கர்தில் விழுந்ததும் அவனுடைய மனம் உடைந்துவிட்டது. தன்னுடைய பிரயாணத்தை ஒருநாள் கூட ஒத்திப்போட முடியாத நிர்ப்பந்தத்தில் அவனல் ஒன்றுமே செய்ய முடியவில்லை. இவ்வாறு இடிந்த மனக்கோர்ட்டையுடனும், மனவிரக்தியுடனும் அடுத்தநாள் ராவல்பிண்டிக்குப் புறப்பட்டான்.

ஒரு மர்தம் கழித்து நடந்த விசாரணையில் கண்ணப்பன்மீது சாற்றப்பட்டிருந்த 'வெடிகுண்டு சதிவழக்கு' நிலைக்கவில்லை. அதனல் விடுதலை அடைந்தான். ஷண்முகவடிவு முதல்நாள்தான் விடுதலை அடைந்திருந்தாள். சிறைச்சாலை வாசலில் கண்ணப்பனை அழைத்துச் செல்ல ஷண்முகவடிவே வந்திருந்தாள்.

அடுத்த நாள் பொங்கல் பண்டிகை! நர்ன்கு வருஷங்களர்க்ச்சோகம் குடிகொண்டிருந்த முதலியர்ர் வீட்டில் அன்று ஆனந்தம் துளிருகிறது.

'இன்றைக்கு சக்கரைப் பொங்கல் எப்படி இருந்தது?' என்ருள் ஷண்முக வடிவு.

'உன்......போல இனிப்பர்கத்தர்ன் இருந்தது' என்று கண்ணப்பன் சொன்ன பொழுது அவள் முகம் வெட்கத்தால் சிவந்தது.



# வருங்கால வாழ்வு

புரொபஸர் அ. முத்தையா, எம். ஏ.

நம் தாய் நாட்டின் பழங் காலம் சிறப்பானது. எந்த முறையிற் பார்த்தாலும் நம்முடைய இறந்த கால வாழ்வு மேலானதாகவே இருந்தது. ஆனால் நிகழ் கால வாழ்வே மிகத் தாழ்வானதாக இருக்கிறது. உலகிலேயே மிக ஏழ்மை நாடு நம் நாடு தான். பழைய சிறந்த நாகரிக நாடாகிய நம் பாரதத்தின் நிகழ்காலம் கேவலமாக இருப்பதால் இந்நாட்டின் குடிகளாகிய நம்முடைய நம்பிக்கை எதிர் காலத்தில் தான் இருக்கிறது.

இந்த யுத்த காலத்திலே நம் நாட்டினர் அடையும் கஷ்டம் கொஞ்சமல்ல. எங்கும் பசியும் பிணியும், எங்கும் மனக் கலக்கம் எங்கும் மனச் சோர்வு. அமைதிக் காலத்திலிருந்த ஓரளவு பேச்சுரிமை, எழுத்துரிமையைக் கூட யுத்தத்தின் பெயரால் இழந்துள்ளோம். நாட்டின் தலை சிறந்த தியாகிகளெல்லாரும், சுதந்திர வீரர்களெல்லாரும், உத்தம புருஷரெல்லாரும், நம் நம்பிக்கைக்குப் பாத்திரரெல்லாரும், இன்று யில் கிடந்து வாடி வருந்துகின்றனர்; ஒரு காரியமும் செய்ய இயலாது தவிக்கின்றனர்.

யுத்தம் முடிந்ததும் ஒரு புது யுகமே தொடங்கப் போகிறது என்ற முழக்கம் எண்டிசையிலும் கேட்கிறது. புது உலகமே சிருஷ்டிக்கப் படுமென எங்கும் முரசடிக்கப்படுகிறது. "பூலோக கைலாசம்" நிர்மாணிக்கப் படுமென உறுதி கூறப்படுகிறது. வருங்கால வாழ்வுக்காக இப்போது உடல் பொருள் ஆவிகளை அர்ப்பணம் செய்ய வேண்டுமென உபதேசிக்கப்படுகிறது.

நாமோ "வாழ்வாவது மாயம்: மண்ணாவது திண்ணம்!" என்ற வேதாந்தத்தில் ஊறியவர்கள். அவ்வகை மனோ நிலையிலுள்ள நாம், இப்போது நாமிருக்கும் பொருளாதார, அரசியல்நிலையில், வருங்கால வாழ்வை எண்ணி எண்ணி மகிழ்ச்சி அடையக் கூடிய நிலையில் இல்லை.

இந்த யுத்தம் உலக மக்களின் சுதந்தர வாழ்வுக்காக நடத்தப் பெறுகிறது என்ற சொல் நம் செவியில் அடிக்கடி விழுகிறது. அச்சொல் நம் காதில் விழுந்தும் நமக்கு நம்பிக்கை ஏற்படவில்லை: உணர்ச்சி உண்டாகவில்லை. உற்சாகம் பிறக்கவில்லை: கவலை நீங்கவில்லை: களிப்பு உண்டாகவில்லை. நம்முடைய சூழலைக் கூர்ந்து கவனித்தால் கவலையே உண்டாகிறது.

1935-ம் வருஷ இந்திய ஆட்சிச் சட்டத்தில் நமக்கு இந்தியாவின் உடல் உரிமை தருவதாக உறுதி செய்யப்பட்டது. அவ்வுடல் உயிரற்ற, பயனற்ற, செயலற்ற, ருதிப்பற்ற சவத்தையொத்ததாக இருந்தது. அதனால் நம் நாட்டுத் தலைவர் அதனைப் புறக்கணித்தனர். அது மறைந்து ஒழிந்தது.

யுத்தம் தொடங்கியதும் அதன் பயனாக இந்தியாவின் சுதந்தரம் "மந்திரத்தில் மாங்காய் விழுவதைப்போல" கைக்கு எட்டி விடுமெனக் கொட்டாவி விட்டவர் பலர். அவர்கள் அடைந்தது ஏமாற்றமும் மனக்கசப்புமே.

"மாய மானைப் போல" கிரிப்ஸ் திட்டம் நம் கண்ணெதிரே துள்ளிக் குதித்து விளையாடிற்று. அதுவும் நம் கைக்கு அகப்பட்டபாடில்லை.

கட்டுண்ட நிலையில், மக்கள் அடைந்த ஏமாற்றத்தின் விளைவு பலர் சிறை புகுந்ததும், பொருளிழந்ததும், உயிர் துறந்ததுமேயாகும்.

நாம் நம்பிக்கையை முழுதும் இழந்த விடாமையால், யுத்த காலத்திலேயே ஏதாவது ஒரு தக்க முறையில் இந்நாட்டு ஆட்சியைப் பெறவும் நடத்தவும் புதிய முயற்சி: புதுக் கஷ்டங்களின் பிறப்பு: அரசினரின் ஆசைவார்த்தை.

உள்நாட்டிலோ ஒற்றுமையின் அஸ்தமனம். இருளின் தொல்லை அரசியல் உலகிலே. புதுப்பிரச்சினைகள்—பாகிஸ்தான், திராவிடஸ்தான் முதலியவை. சுதேச மன்னரின் புதிய கற்பனை உலகம் தங்களுடைய நிலையைப்பற்றியும் உரிமைகளைப் பற்றியும். எனவே "இராக்காலம் எப்போது தொலையுமோ? சுதந்தர சூரியன் எப்போது உதிப்பானோ" என்ற புதிய ஏக்கம்.

நம் வருஷங்கால வாழ்வு நாற்பது கோடி மக்களாகிய நம் கையில் தான் இருக்கிறது. "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?" என்ற மொழியை மறவாது, சலியாது, சுதந்தர, முழு வாழ்வைப் பெற வேண்டுமென்று, ஒற்றுமையுடன் உழைத்தாலன்றி வருங்காலம் நிகழ் காலத்தைவிட, சிறந்ததாக இருக்கும் என எண்ணுவது அறிவுடைமை யாகாது.

வருங்காலத்தில் நம் நாடு ஒரே நாடாக இருந்தாலன்றி உலகின் முன்னணியில் நிற்க முடியாது. சின்னஞ் சிறு ஐரோப்பிய நாடுகள் இந்த யுத்தத்தில் பட்டுள்ள

தொல்லைகளைக் கண்ட பிறகும், பெரிய நாடாக இருப்பதால் அமெரிக்க ஐக்கிய நாடுகள் பெறும் பயன்களைப் பார்த்த பிறகும், பரந்த சாம்ராஜ்யத்தின் முடியாக இருப்பதால் பிரிட்டன் அடையும் பெருமையையும் பயனையும் அறிந்த பிறகும், இந்திய நாட்டைக் கூறுபோட விரும்புவர்களை என் என்பது?

உலக மக்கள் அனைவருமே ஒருமித்து வாழ்ந்து உல நாடுகள் அனைத்தும் ஒன்ருக இருந்து, உலகப் பொருள்களையும் பயன்களையும் ஒன்ருகத் துய்த்து வாழ்ந்தால் "இல்லாத தொன்றுமில்லை" என்ற நிலையை அடைந்து, இல்லாமையை இல்லாததாக்கி, வாழ்க்கையைச் சுகமாக்கலாம். அது கூடாதாயின் எக்காரணத்தாலாவது ஒன்ருக இருக்கிற ஒரு பெரிய நிலப்பரப்பிலுள்ள மக்களாவது ஒன்ருக வாழ்ந்தால் தான், பொருளாதார நிலையைப் பொறுத்த வரையிலாவது, சிறப்பு வந்தெய்தும். பெரிய நிலப் பரப்பு ஒன்ருக இருந்தால், பல மூலப் பொருள்களும் எளிதில் கிடைக்கும். பல பொருள்களையும் செய்ய வசதி ஏற்படும். பெரிய உள் நாட்டு மார்க்கெட்டு இந்த இடத்திலேயே உண்டாகும். செல்வம் பெருகும். வாழ்க்கை நலம் பெறும்.

நாடு முழு நாடாக இருக்க வேண்டும். அது மாத்திரம் போதாது: நாம் முழுச் சுதந்தரமும் பெற வேண்டும். ஓரளவு சுதந்தரம் உபயோகமாக இராது. ஏனெனில் அற்ப சுகத்தில் நாம் பூரண சுகத்தை மறந்து விடுவோம். கீழே சர்ப்பஞ் சீற, மேலே ஆலம் விழுதைப் பிடித்துக் கொண்டு பாழுங் கிணற்றுக்குள் தொங்கும் போது, பிடித்துள்ள விழுதை எலி கடித்துக் கொண்டிருக்கும் அவ்வமயத்தில் உயரத்திலிருந்து சொட்டிய தேனைச் சுவைத்து இன்புற்ற ஒரு மனிதனைப் போல, அற்ப சுகத்தில் நாம் அனைத்தையும் மறந்து போகக் கூடும்.

நம் நாட்டை ஆளும் அரசியல் சுதந்தரம் கிடைத்தால் போதாது: பொருளாட்சிச் சுதந்திரமும் வேண்டும். பொருளாதார சுதந்தர மில்லாத ஆட்சி ரத்த ஓட்ட மில்லாத உடலைப் போன்றதே. அரசியல் சுதந்தரத்தை உயிரென வைத்துக் கொண்டாலும், உயிருக்கு ஆதாரமான தோல், தசை, என்பு, இரத்தம் முதலியவைகளைப் போன்றதே பொருளாதார சுதந்தரம்.

யுத்தத்தின் பிறகு போலி அரசியல் சுதந்தரத்தை நாம்பெற்ருலும் பெறலாம். ஆனல் பொருளாதார சுதந்தரம் எளிதில் கிடைக்குமென எண்ணி ஏமாறக் கூடாது. நம் நாட்டுப் பொருளாதார இரத்தத்தை உறிஞ்சி நிற்கும் அட்டைகள் அளவற்றன. அவைகளின் எண்ணிக்கை இப்போது அதிகமாகி இருக்கிறது.

நம் நாட்டில் வேளாண்மை, வாணிபம், கைத்தொழில்கள் சிறப்புற்று விளங்கின. வந்தனர் ஐரோப்பியர். கைப்பற்றினர் நாட்டை, ஆங்கிலேயர். கைத்தொழில்கள் சீர் குலைந்தன. வாணிபம் குறைந்தது. வேளாண்மை கெட்டது.

கடந்த 50,60 ஆண்டுகளில் புதுத்தொழில்கள் தோன்றியுள்ளன. அவைகள் "இந்தியக் கைத்தொழில்கள்" என்று அழைக்கப்படுகின்றன. இந்தியக் கைத்தொழில்கள்! என்ன மயக்கப் பெயர்! என்ன ஏமாற்றுச் சொல்!!

ஏன்? இந்தியத் தொழிற்சாலைகளெனச் சொல்லப் படுபவைகளிற் பல அந்நியரின் தொழிற்சாலைகளே! உடலை வாட்டி கடும்பாடு பட்டுக் குறைந்த கூலிக்கு வேலை செய்பவர் இந்தியர்: அத்தொழிற் சாலைகள் நடக்கும் இடம் இந்தியா: மூலப் பொருள்களைத் தருவது இந்தியா: மார்க்கெட்டாக இருப்பது இந்தியா. இக் காரணங்களால் தான் அவை இந்தியக் கைத் தொழில்கள்: பெரிய சம்பளம் பெறும் அதிகாரிகள் இந்தியராக இருப்பதாலல்ல; கொள்ளை லாபம் இந்தியர்கட்குப் போவதாலல்ல: முதலாளிகள் இந்தியராக இருத்தலாலல்ல. இவ்வாறு இந்திய பசுத்தோல் போற்றியுள்ள வெளி நாட்டினரின் ஆலைத் தொழில்களாகிய புலிக்குக் கூட இந்தியக் கைத்தொழில்களுக்குக் காட்டப்படும் சலுகை விசேஷ பாதுகாப்பு. இந்த மோசடி வேலையை நிறுத்தாத சுதந்தரத்தின் அர்த்தம் தான் என்ன?

இந்தியாவின் ஏற்றுமதியும் இறக்குமதியும் ஏராளம். ஆனல் அவை ஏறுவதும் இறங்குவதும் இந்தியக் கப்பல்களில் அல்ல. அவைகளை ஏற்றுவதும் இறக்குவதும் பெரும்பாலும் இந்தியக் கம்பெனிகளல்ல. அவைகளால் வரும் லாபத்தை அடைவனவும் இந்தியரினவல்ல. அவைகளை இன்ஷியூர் செய்யும் கம்பெனிகளும்பெரும்பாலும் இந்தியருடையவல்ல: அந்த வியாபாரத்தால் ஏற்படும் நாணய மாற்ருல் கோடிக்கணக்காகச் சம்பாதிப்பவையும் இந்திய பாங்குகளல்ல.

இந் நாட்டு மக்கட்கு இந் நாட்டுப் பொருளாதாரத்துறைகளில் விசேஷ சலுகை காட்ட, இந் நாட்டு உரிமைக் குடிகளுக்கு இடைஞ்சலாக இருப்பவரையும் இருப்பவைகளையும் விலக்குவது நியாயமற்ற முறையாம்! இனக் கொடுமையாம்!! நிறக்கொடுமையாம்!!! அநியாயச் செய்கையாம்!!!! இந்தத் தளைகளை அறுத்து எறியாவிட்டால் நாம் சுயேச்சை பெற்றவர்கள் ஆவோமா?

சுதந்தர நாடுகளெல்லாம் நாணய மாற்று விகிதத்தில், காலத்துக்கும் தேவைக்கும் தக்கபடி, வேண்டிய மாறுதல்களைச் செய்து தங்கள் பொருளாதார விருத்தியையும் நன்மையையும் தேடிக்கொள்ளுகின்றன. நமக்கோ அச்சுதந்தரம் தானே கிட்டுவதாகத் தெரியவில்லை. பொருளாதார நன்னிலைக்கு நாணய மாற்று விகிதத்தை வேண்டியபடி கூட்டவோ, குறைக்கவோ உரிமை வேண்டும்.

இந்த யுத்தம் தொடங்கிய பிறகு பட்டினிகிடந்து, பசியால் வாடி, பல்லோர் இறப்ப, இந் நாட்டுச் சாமான்களை—அவசிய மூலப் பொருள்களை உணவுப் பொருள்களை—வெளி நாடுகட்குக்

கொடுத்து, லண்டனில் ஸ்டெர்லிங் கணக்கில் பணம் சேர்த்தோம். அது ஆங்கில நாட்டினர் கொடுக்கவேண்டிய கடனாக இருக்கிறது. கடன் கொண்டார் நெஞ்சம் கலங்கிய காலம் மலையேறி விட்டது. கடன் கொடுத்தவர் கலங்கும் காலம் இது, அதிலும் கடன் கொண்டவர் ஆளுவோர்; கொடுத்தவர் ஆளப்படுவோர். "கொடுத்த கடன் கொஞ்ச நஞ்சமல்லவே, அதைக் கொடுக்க நாம் பட்டகஷ்டம் சொல்ல முடியாததாயிற்றே, அந்தப் பணத்தால் நாம் வருங்காலத்தில் சுகம் பெறமுடியுமா" என்ற ஏக்கமும், கவலையும், ஐயோ!, இப்போதே நம்மை வாட்ட ஆரம்பித்துவிட்டனவே!! கடனை வசூலிக்க நம்மிடத்தில் வலுவில்லையே!!

"ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை" என்று சொல்லுவார்கள். அதைப் போல வெளிநாட்டுச் சாமான்கள் வராத காரணத்தால் உள்நாட்டுச் சாமான்கள் பலவற்றிற்குக் கிராக்கி ஏற்பட்டது. அதனால் சில தொழில்கள் பெருகின; சில உண்டாயின. பெருகிய தொழில்களும், தோன்றிய தொழில்களும் மேலும் மேலும் ஓங்கி, வளர்ந்து செழித்து, இந்நாட்டினரும், இந்நாடும் க்ஷேமம் அடைய வேண்டுமென மிக்கவும் ஆவலாக எதிர்பார்க்கிறோம். சண்டையின் முடிவு தெரிய ஆரம்பிப்பதன் முன்னேயே இந்திய மார்க்கெட்டில் இங்கிலாந்து நாடு ஆதிக்கம் செலுத்துவதா அல்லது அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆதிக்கம் செலுத்துவதா என்பதில் போட்டி தொடங்கிவிட்டதென்று குசு குசுப் பேச்சுகள் கேட்கின்றனவே! இவ்வகைப் போட்டிகட்கு இடையில் நம் கதி என்ன?

இந்தியத் தொழில் முன்னேற்றத்திற்காக முதலாளிகளின் திட்டம்: எட்டிக்குப் போட்டியாக, "ஜனங்கள் திட்டமென்றொரு திட்டம்" தொழில்களை முதலில் விருத்தி செய்யவேண்டுமென்றொரு திட்டம்: விவசாயத்தைத் தான் முதலில் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று மற்றொரு திட்டம். எந்த திட்டத்தையும் சுதந்தர இந்தியாவில் தானே அமுலுக்குக் கொண்டு வரலாம்! அதற்கு முன்பே தகவல்கள் செய்துகொள்வது தோட்டம் நிலைப்பதற்குள் தென்னம்பிள்ளை எத்தனை வைக்கலாம் என்று சண்டையிடுவதை ஒத்து இருக்கிறதல்லவா?

ஐங்காதம் போனாலும் தன் பாவம் தன்னோடு வரும்போல் இருக்கிறது. ஆப்பிரிக்கா போனாலும் ஐயோ என்று அநுதாபம் காட்டுவாரில்லை. கடுமணற் பரப்பிலே, தகிக்கும் அழல் போன்ற வெய்யிலிலே, தூக்கமின்றி, ஓய்வின்றி, கருமமே கண்ணாய் நின்று நம் வீரர் இந்தியப் போர்வீரர் கொடுஞ் சமரிட்டு ஆப்பிரிக்காவிலிருந்து நாஜி அரக்கரை அடித்துத் துரத்தினர். அந்த ஆப்பிரிக்காவிலே அந்த இந்திய வீரரின் சகோதர சகோதரிகட்கு இருக்க இடமும், தங்கக் குடிசையும் தமக்கெனப் பெறுவது, அந்தோ! மிகவும் அரிதாக இருக்கிறதே!! இந்நிலையை யோசித்தால் எங்கே இந்தப் பரந்த உலகில் பல நாடுகளிலும் நமக்கு எதிர்காலத்தில் வாழ்வு இருக்கும்?

நாம் செய்யக் கூடியது ஒன்றே தான். செய்யவேண்டுவதும் அதுவே தான். நாம் அனைவரும் ஒன்று என்பதை உணர வேண்டும்: இந்நாட்டு மக்கள் இந்நாட்டு அரசராதல் வேண்டும் என்ற லட்சியத்தைக் கொள்ளவேண்டும்! "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று உழைக்க வேண்டும். இவ் விந்திய நாடு ஒரே நாடாக, பெரிய நாடாக, சிறந்த நாடாக, சுதந்திர நாடாக, செழித்த நாடாக, உலகில் உயர்ந்து நிற்கச் செய்தல் வேண்டும்.




நாகரிக மங்கையர்களுக்கு ஏற்ற
நாணயமான கொண்டை ஊசிகள்

பெங்கால் கெமிகல்
கோல்டு ஹேர் பின்ஸ்

ஜில்லா ஏஜெண்டுகள் தேவை

தயாரிப்பவர்கள்

பலராம் & கோ

74 ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. மதராஸ்.

# வனப்பேச்சி

ரா. வெங்கடாசலம்

ஆற்றோரம் குளிர்ந்த காற்று வீச ரம்மியமான தென்னந்தோப்பினுள் பெண்கள் தட்டி புனைவதெனில் அவர்களுடைய உற்சாகத்தைப் பற்றி சொல்வானேன். அவர்கள் கூட்டமாகச் சூழ்ந்து உட்கார்ந்துகொண்டு ஓலைமட்டையின் மத்தியில் மண்டியிட்டு ஒரு முழங்காலில் அமுக்கியும் ஓலை மடக்கின்மேல் அடுத்த காலின் பெருவிரலால் அழுத்தியுமாக அவர்கள் தட்டி புனையும் அழகு பிரமாதமானதாகும். இடுப்புச் சேலையை வாரி இறுக்கி மார்புச் சேலை ஒதுங்கிவிடாமல் சொருகிக் கொண்டு கைகளை மாறி மாறிப் போட்டு மடிப்புக்கு மடிப்பு பெருவிரலால் அழுத்தித் தளர்த்தியுமாக ஈடுபட்டிருக்கும் சித்திரம் காண இனிய காட்சியாகும். விசையை முடுக்கிவிட்டதுபோல் அவர்களுடைய கைகள் வேகமாய் மாறி மாறி வருவதும் அப்போது அவர்களுடைய கோதிய கொண்டை பிறழ்வதும் அவர்களுடைய விழிகள் உருண்டு உருண்டு வருவதும் என்ன அழகு! அவர்கள் ஒருத்தி தவறாமல் வாயில் புகையிலையை ஒதுக்கிக்கொண்டு அடிக்கடி சருகுகளின்மேல் புளிச் புளிச்சென துப்பிக் கொள்வதும் வேலையின் அலுப்பை மாற்றிக் கொள்வதற்கென அவர்களுடைய பழக்கம் போலும்!

கைகளும் கால்களும் வேலை செய்யும்போது வாய் அசை போடுவதுடன் மட்டுமா நின்றுவிடும்! ஊர் வம்பென்ன? வீட்டுத் துயரம், கூலி கட்டுமால் இன்னும் என்ன என்னவோ பேசித் தீர்த்துவிடுகின்றனர். இந்தக் கூட்டத்தில் வனப்பேச்சி முதலாவதாக இருந்து அந்தக் கும்மாளத்திற்கே தனிச் சோபை தரக்கூடியவள். இப்போது தனியாக அந்த ஒற்றைத் தென்னை மரத்தடியில் அவளுண்டு அவள் வேலையுண்டுவென மௌனமாக இருப்பது விந்தையே. மற்றப் பெண்கள் அவளை வலியப் பேச்சுக்கு இழுத்தாலும் அவள் ஒதுங்கிக் கொள்வது அவளுடைய அப்போதைய சோகநிலையை எடுத்துக் காட்டக் கூடியதாக விருந்தது.

மாரியப்பன் வனப்பேச்சியை அவளுடைய அப்பன் வீட்டிற்குத் துரத்தி, ஆறு மாதங்களாகியும், இன்னும் என்ன, ஏதுவெனக்கூடத் தேடாமலிருந்தால் அவள் என்ன செய்வாள். அவர்கள் கல்யாணம் செய்து கொண்டதிலிருந்து இணைபிரியாமல் தாம்பத்திய வாழ்க்கைக்கே உதாரணமாக விளங்கி வந்ததாகக் கருதப்பட்டனர். எத்தனையோ ஆண்களும், பெண்களும் அவர்களைப் பார்த்து பொறாமைப்பட்டிருக்கின்றனர் என்பது பொய்யல்ல.

மாரியப்பன் அதிக வளர்த்தியில்லாமல், நிதான வளர்த்தியுள்ளவன். நிறம் கருப்பாக இருந்தாலும் அவனுடைய படர்ந்த முகமும் புன்சிரிப்புத் தவழும் உதடுகளும் கவர்ச்சியானவை. அவனுடைய தொழில் மரம் ஏறி, கள் இறக்குவது. அவன் ஒரு மரத்திலிருந்து அடுத்த மரத்திற்கு நடந்து செல்லும்போது அவனுடைய படர்ந்த கொண்டையும், இடையில் தொங்கும் பாளைக் குடலையும் குலுங்கிக் குலுங்கி அசைவதும், பார்க்க ஒரு சிப்பாய் நடந்து வருவது போல் இருக்கும். மரம் ஏறுவதென்றாலும் சாதாரணமாக இல்லை. ஓய்வு ஒழிவு இன்றி, எத்தனை மரங்களானாலும் ஒரு மூச்சு என்பார்களே, அந்தமாதிரி ஏறிவிடும் நல்ல அனுபவஸ்தன். இது மட்டுமா? ஒரு மரத்தின் உச்சியிலிருந்து அடுத்த மரத்திற்கு அதனுடைய உச்சி தென்னோலையைப் பிடித்தபடியே தாவிச் செல்லும் மகா சமர்த்தன். அவனுடைய சலியா உழைப்பையும் பரபரப்பான சுபாவத்தையும் கண்டு அவனுடைய எஜமானே வியப்பார் என்றால் பிறரைப் பற்றி அதிகம் சொல்லவேண்டியதில்லை. எத்தனையோ இளங்கன்னிகள் அவனுக்காகக் காத்திருந்தனர். கடைசியாக வனப்பேச்சியே அவனுடைய தாலிக்குப் பாத்திரமானாள்.

வனப்பேச்சி கிடைத்ததுபற்றி, மாரியப்பனுக்கு இரட்டைச் சந்தோஷம்தான். அவன் ஏனையப் பெண்களை கழித்துவிட்டபோது அவர்களுடைய பெற்றோர்களும், உடந்தைக்காரர்களும் அவனுக்கு வரப்போகிறவளைப் பார்த்துக் கேலி செய்யக் காத்திருந்தனர். ஆனால், அவர்களெல்லாம் ஏமாறும்படி பூசணிப்பூப் போல் அவனுடைய வீட்டையும் வாழ்க்கையையும் அழகுபடுத்தி வனப்பேச்சி விளங்கினாள்.

வனப்பேச்சியின் அங்க அமைப்பும் அவளுடைய நீண்ட முடியும் யாரும் குறைகள் கண்டுபிடிக்க முடியாததாகும். எந்நேரமும் கெட்டியாக மஞ்சள் பூசிப் பளபளவெனக் காணும் அவளுடைய கன்னங்களும், காந்தசக்தியுள்ள மின்வெட்டுக் கண்களும், பூரித்த புஷ்பம்போல் அவளுடைய அதரங்



களும் பிரமார்தமானவை. கோட்டாலிக் கொண்டையாக உள்ளே உதிரிப் பூக்களைத் திணித்து, எந்நேரமும் 'கமகம' வென் மணக்கும் அவளுடைய முடி சிங்காரிப்பைப் பார்த்துப் பெரு மூச்சு விடாத பெண்களே இல்லையென்றால் ஆண்களைப் பற்றிக் கேட்பானேன்.

இப்படிப்பட்ட ஒருத்தி தனக்கு மனைவியாகக் கிடைத்திருப்பதில் மாரியப்பன் பெருமையடைவதில் அதிசயமில்லைதான். வேலைக்குச் சென்று மர உச்சியிலிருந்தாலும், அவளுடைய நினைவு வந்துவிடும். உடனே அந்த வேலையை அப்படியே நிறுத்திவிட்டு, ஓடோடி வந்து அவளைக் கண்குளிரக் கண்டு திரும்புவான். யாவரும் இந்த மாதிரியைப் பார்த்து, "பெண்டாட்டியே இவனுக்குப் பெரிய தெய்வம்," எனனையாண்டி செய்தாலும் அதில் அவனுக்குக் கொஞ்சமும் வருத்தமோ, கோபமோ ஏற்படாது. "அவர்களுக்கும் அத்தகைய ஒருத்தி மனைவியாகக் கிடைத்திருந்தால் தெரியும்" என அவன் வெளியில் சொல்லாவிட்டாலும், தனக்குள்ளாவது சொல்லிக் கொள்ளுவான்.

அத்தகைய புருஷன் மனைவிக்குள் இப்படிப் பிரிவு உண்டாகியிருப்பது விதியின் கொடுமைதான் எனச் சுற்றிலுமுள்ளவர்கள் கவலைப் பட்டனர். ஆனால், வனப்பேச்சிக்கு மட்டும் அது விளங்கவில்லை. என்ன பிரமாதமான காரணமோ?

வனப்பேச்சியின் நடத்தையில் பேதமாகவோ, மாரியப்பன் குரூரமாய் நடத்தினதாகவோ இருக்க முடியாது. மழை இல்லாமல் கொடிய பஞ்சம் வருகிறது. மழை அமிதத்தினாலேயும் அப்படிப் பஞ்சம் நேரிட்டுவிடுகிறது கண் கூடு. இந்த மாதிரியே வனப்பேச்சியின்மேல் மாரியப்பன் கொண்டிருந்த அளவுகடந்த பிரேமையே அவர்களுடைய பிரிவுக்குக் காரணமாகிவிட்டது.

வனப்பேச்சிக்கு அக்காள் மகன் ஒரு சிறுவன் இருந்தான். அவன் பிறந்த சில மாதங்களில் அக்காள் காலம் சென்றுவிட்டாளாகையால் வனப்பேச்சியே அவனை வளர்த்துத் தாய்க்குத் தாயாக இருந்தாள். ஆனால், மாரியப்பனுக்கு மனைவியானபின் அவனுடைய குடிசையில் அவனுண்டு; தானுண்டு என்றிருந்திருந்தால் இந்த விபரீதம் ஏற்பட்டிருக்காது. அடிக்கடி அந்தப் பையன் நினைவு வருவதும், அவள் அவனைப் பார்க்கத் தந்தையின் ஊருக்கு ஓடிப்போவதுமாக இருந்தாள். தன்னைவிட்டு அவள் கொஞ்ச நேரமும் பிரிந்திருக்க விரும்பாத மாரியப்பனுக்கு அது எவ்வளவோ சங்கடமாயிருந்தது. அப்போதெல்லாம் அவனுடைய கோபம் கட்டுமீறி எழும்பியதில் வியப்பில்லை.

முதலில் கெஞ்சிப் பார்த்தான். சொல்லிப் பார்த்தான். தாயற்ற குழந்தையின் பாசத்தை அவளால் மறக்க முடியவில்லை. கடைசியாக, அவனுடைய கோபம் உச்சமடைந்து விட்டது. வனப்பேச்சிக்கு இரண்டு போடும் கிடைத்தது. அதிலிருந்தே அவள் அப்பன் வீட்டில் வெம்பி, வாடி வதங்கினாள்.

வனப்பேச்சி தன் அக்காள் மகனைப் பார்க்கவும் போகக்கூடாதா என வருந்துகிறாளே தவிர, மாரியப்பனுடைய உள்ள நிலையை அறிய முடிகிறதில்லை. பையனை மறக்க முயன்று பார்த்தும் அவளால் முடியாமல் போகிறது. இந்த உள்ளக் கிளர்ச்சியால் அவள் நைந்து போவதுடன் தன் புருஷன் தன்னுடைய உள்ள நிலையை அறிந்து கொள்ளக் கூடாதா எனும் ஏக்கம் வேறு அவளை வாட்டியது.

இந்தப் போராட்டத்தில் சிக்கிய சாதாரணமான அந்தப் பெண் உற்சாகமாயிருப்பதெங்கே? வாடி வதங்கிய பூவைப் போல், முகதேஜஸும் குறைந்து தலைமயிரும் சடைப் பிடித்து யாருடனும் சரியாகப் பேசுவதும் கூட இல்லாமல் உருகவேண்டியதாயிற்று.

## 2

மாரியப்பன் அவளை அடித்துத் துரத்தி விட்டானென்றால் அவளை அத்துடனேயே மறந்துவிட்டானென்று அர்த்தமில்லை. கொஞ்ச நேரமேனும் பிரிந்திருக்க முடியாத அவனுக்கு இப்படி மாதக்கணக்காய் விட்டுத் தனித்திருப்பது மிகக் கஷ்டமாய்த்தான் இருந்தது. ஆனால், அவள் தன் வார்த்தையையும்மீறி ஓடிப் போனாள் என்ற நினைப்பு வந்துவிட்டால், அவளைக் கூப்பிடவே கூடாது, அப்பன் வீட்டில்தானே கிடக்கட்டும்'' என்று வர்மம்வைத்து கடினப்படுத்திக் கொள்வான்.

என்ன இருந்தாலும் அவளைப் பற்றி அனேக சாமான்களும் சந்தர்ப்பங்களும் ஞாபகத்தைத் தூண்டிவிடும்போது மனுஷன் அப்படியே அதில் பதிந்துவேலையும் ஓடாமல் சோங்கிவிடுவான். இப்போதுகூட இடிந்துபோன குடிசையின் பக்கத்தில் முழங்கால்களைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்து சோர்ந்து போயிருப்பதும் வனப்பேச்சியின் ஞாபகத்தால்தான்.

அவன் மரம் ஏறி பாளை சீவிக் கொண்டிருந்தபோது அவளுடைய நினைவு வந்துவிட்டது. பாளை அரிவாளை அப்படியே குடலையில் போட்டுக்கொண்டு இறங்கி, கொஞ்சம் நீராகாரம் வாங்கிக் குடித்துவிட்டு, அதன் சாக்காக அவளைப் பார்த்து வரலாமென குடிசைக்கு நடந்தான். வழியில் குறுக்கே பறந்த பச்சைக்கிளி அவனுடைய கவனத்தைத் திருப்ப அப்படியே நின்று சுழன்று பார்த்து ரஸித்தான். அப்போது, தோப்பின் கடைசி வேலியை விலக்கிக்கொண்டு இடையில் குடத்துடன் வந்த வனப்பேச்சியைப் பார்த்துவிட்டான். கிளி பறந்து போனதற்கும் வனப்பேச்சி வந்ததற்கும் அவளைக்காண எவ்வளவோ ஆனந்தமாயிருந்தது.

"ஏலா பேச்சி!'' என்று அருமையாகக் கூப்பிட்டான்.

"என்னங்கோ!'' என விஷமச் சிரிப்புடன் வேகமாக வந்தாள். அப்போது அவளுடைய மலர்ந்த நிலைமையைக் காண ரொம்பவும் ஆனந்தமடைந்தான்.

"ஏ குட்டி, கொஞ்சம் நீராகாரம் கொடேன்!'' என்று கொஞ்சுதலாகக் கேட்டான். அப்போது அவனுடைய முகத்தில் மந்தகாசம் ஒளித்தது. என்ன பிரமாதமான காட்சி. ஒரு புக்ளி நிறைய நீராகாரம் ஊற்றி, கரிக்க உப்புப் போட்டு, அவளுடைய கொண்டை குலுங்க, ஒரு சுற்றுச் சுற்றிக் கொடுத்தாள். அவன் அதை ஒரு மூச்சில் காலி செய்துவிட்டான்.

நீராகாரம் குடித்தவுடன் மரம் ஏறப் போனானா, நீராகாரம் குடிக்க வந்திருந்தால் தானே உடனே போவான். அதற்காக வந்தவனா?

அவன், இடைவாரை அவிழ்த்துப் பாளைப் பெட்டியைக் குடிசையினோரம் கீழே வைத்துவிட்டு, அவனும் பேச்சியுமாக அடுத்து அடுத்து உட்கார்ந்துவிட்டனர். இனி கேட்கவா வேண்டும்? பேச்சி உலை வைக்கவேண்டியதை மறந்தாள். மாரியப்பன், பாக்கி மரங்களில் கள்ளிறக்க வேண்டியதையும் மறந்தான். என்ன அவசியமான பேச்சுகளோ! எதுவானாலும் அவர்களுக்கு அப்போது அது ரொம்ப அவசியமானதாகத்தானிருந்தது,

பேச்சுப் பேச்சாயிருந்தாலும், பேச்சிக் காரியத்தை விடமாட்டாள். என்ன உற்சாகமானாலும் வயிறு இருப்பதையும் உலை வைக்கவேண்டிய அவசியத்தையும் அவள் மறக்கவில்லை. உடனே ஞாபகப் படுத்தினாள். அவன் பதறி இடைவாரை இடுப்பில் இழுத்துமாட்டி வேகமாக ஓடினான். போகிற வேகத்தில் பாளை அரிவாளைப் போட்டு விட்டான். பேச்சிதான் அதை எடுத்துக் கொண்டு திரும்பவும் ஓடினாள்.

மாரியப்பன் மரத்தின்மேல் ஏறி பாளை சீவப் போகையில்தான் அரிவாள் ஞாபகம் வந்தது, 'அட்டா' வென கீழே பார்த்தான். வர்ணம் தீட்டியது போல் வெற்றிலைக் காவி ஏறிய அழகிய வரிசைப் பற்கள் தெரிய 'கெக்கே' போட்டு சிரித்தபடியே வனப் பேச்சி நின்றாள். மாரியப்பன் அவளுடைய அந்த உதவிக்குப் பரிசாக அந்த க்ஷணமே அவளுடைய பூரித்த கன்னத்தில் பளீரென ஒரு முத்தம் கொடுத்து ஓடினான். அப்போது அவளடைந்த நாணமும் அவளுடைய, முகத்தை மூடிய வெட்கக் குறியும் இன்னும் அவளுடைய ஞாபகத்தைக் கிளறியது.

மாரியப்பன் இந்த சென்று போன சம்பவத்தை நினைத்து அத்தகைய மனைவியை பிரிந்திருக்க நேரிட்ட தன் விதியை நினைத்தே நொந்துகொண்டான். அந்த நேரத்தில் உடனே போய் கூட்டிவந்துவிடவேண்டும், ரோசம் பார்க்கக் கூடாதென நினைத்தான். ஆனால் வந்தால் திரும்பவும் அந்தப் பையன் நினைவு வந்து ஓடிவிடுவாளே, என்ன இருந்தாலும் இனி அவளுடைய அப்பன் வீட்டிற்குப் போவதில்லையென வந்தால்தான் ஏற்கவேண்டும். இல்லையேல் அங்குதானே கிடக்கட்டும் என மனம்மாறி அவளைக் கடிந்து கொண்டான்.

என்ன இருந்தாலும் அந்தச் சின்னஞ் சிறுசுகள் புருஷன் ஒரு பக்கம், மனைவி ஒரு பக்கம் இப்படி பிரிந்து கிடப்பதை மற்றவர்கள் பார்த்து சகிப்பார்களா? சிலர் மத்தியஸ்தர்களாக மாரியப்பனை சமாதானப்படுத்த வந்தனர்.

மாரியப்பன் தன பிடிவாதத்தில் கொஞ்சமும் தளரவில்லை. 'திரும்ப அவளுடைய அப்பன் வீட்டுக்குப் போகப்படா' தெனும் நிபந்தனையை வற்புறுத்தினான். மத்தியஸ்தர்கள் என்ன செய்வார்கள்! 'அது உன் பிரியமப்பா' என சம்மதித்தார்கள்.

"என்ன, சின்னையா நாடாரே, சொல்லி அனுப்பும்' என மத்தியஸ்தர் பேச்செடுத்தார்.

வனப்பேச்சியின் தகப்பனுக்கு வயது அறுபதுக்கு மேலிருக்கலாம். நரைத்து கட்டையாக இருந்த அவருடைய தாடி வெற்றிலை எச்சில் வடிந்து வடிந்து கறைபட்டு இருந்தது. தோளெல்

லாம் சுருங்கி தளதளத்து மார்பு, உள்ளங்கைகள், கால்கள் எல்லாம் காய்ச்சு கறுத்து வடுக்கள் நிறைந்து அவருடைய தொழில் அனுபவத்தை எடுத்துக் காட்டியது. மனைவியை இளவயதிலேயே இழந்தும் மக்களுக்காகவே மறு மனைவியை மணம் செய்து கொள்ளாமல் காலம் நடத்தினர். கண்மணிபோல் வளர்த்த தோஷத்திற்கு இனி மகளை அவருடைய வீட்டின் நினைப்பே இருக்கலாகாதெனப் பேசுகிறார்கள். இதைக் கேட்க அந்த வயோதிக மனிதன் அடைந்த துயரம் ஆற்றொணாததாகும். அவருடைய கண்களில் கண்ணீர் துளிர்த்தது. உதடுகள் துடிதுடிக்க விம்மி நின்றார். என்ன செய்வது? சிரமத்துடன் மகளை நிமிர்ந்து பார்த்தார். பஞ்சடைந்து, கண்ணீர் படலத்தால் பார்வை மங்கலாக தெரிந்தது.

"ஏத்தா பேச்சி, எப்போ ஒருவனைக் கட்டியாச்சோ அவன் மனம்போலத்தானே போகனும். அக்கா புள்ளையைப்பத்தி நீ கவலைப்படாதே! அவனை அவன் அப்பன் வீட்டுக்கனுப்பி விடுகிறேன், என்னைப் பத்தியும் கொஞ்சமும் விசனிக்காதே. நீ நல்லா இருந்தாப் போதும்." என பேச்சை முடிக்கமுடியாமல் திகைத்தார்.

இந்த உருக்கமான காட்சியில் எல்லோரும் ஸ்தம்பித்து நின்றனர். அப்போது அந்தச் சின்னப் பயல் குதித்துக் கொண்டு ஓடிவந்தான்.

"அக்கா, பொன்னு வண்டு" என ஆனந்தமாய்ச் சொன்னான். வனப்பேச்சி, கூட்டத்தையும் மறந்து அவனை ஆவலாய் வாரி அணைத்தாள். அவனுடைய கன்னத்தை இறுகத் தழுவினாள். அவளறியாமல் கண்ணீர் துளிர்த்தது. இதையெல்லாம் அந்தச் சிறுவனால் கவனிக்க முடிகிறதா? அந்தப் பொன் வண்டை அவனிடம் கையை விரித்துக் காட்டினான்.

"இனி யாருட்டேடா இதெல்லாம் கொண்டாந்து காட்டுவே" எனக் கோவென்று கதறினாள். சின்னைய நாடாரின் கண்ணீர்த் திவலைகள் அவருடைய தாடியில் ஒட்டி உதிர்ந்தன. பையனுக்கு ஒன்றும் விளங்காமல் அவர்களுடைய முகங்களை மாறி மாறிப் பார்த்தான். அந்தச் சோர்வில் அவனுடைய கைவிரல்கள் தளர சமயம் எதிர்ப் பார்த்திருந்த வண்டு குபீரெனப் பறந்து சென்றது.

வனப்பேச்சி, அக்காள் மகனை ஏமாற்றி விட்டு, புருஷனே பெரிதென பின் நடந்தாள். பாதி தூரம் சென்றிருக்கலாம். பெரும் காற்றுப் பேரிரைச்சலுடன் மரம் செடி, கொடிகளை ஆட்டி, அசைத்து, உறுமி வீசியது. அவளுடைய ஆடையும் அந்தக் காற்று வேகத்தில் படபடத்தது. அந்தக் காற்றின் கோர நடனத்தையும் ஒருவாறு சமாளித்துக் கொண்டாள். ஆனால், அவளுடைய மனத்தில் எழுந்த பெரும் குமுறலை அவளால் என்ன செய்ய முடியும்!

முள்ளில்லாத பாதையில்தான் வனப்பேச்சி நடந்து சென்றாள். திடீரென முள் தைத்தவள்போல் நின்று "ஆ, தம்பி!" என மெய்ம் அலறினாள்.

மாரியப்பன் திரும்பிப் பார்த்தான். அவனுடைய கண்கள் கக்கிய கோபக் கனலைக் கண்டு அவள் நடுங்கிவிட்டாள். ஒருவாறு தேறி, "ஒண்ணுமில்லே யுங்க" என அவனைப் பின் தொடர்ந்தாள்.

# அழைப்பு

— பெ. தூரன் —

இளைஞனே எழுந்திரு
தளையெலாம் இன்றே தகர்த்திடு
அரியவும் பெரியவும் புரியவல் லவன் நீ
இளைஞனே எழுந்திரு.

அன்னையும் அழைத்தனள்
இன்னமேன் உறக்கம் எழுந்திரு
பாரதி புவியில் பாரெலாம் தொழுதிடு
இளைஞனே எழுந்திரு.

சோம்பலும் சோர்வும்
போம்படி தோளினைப் புடைத்திடு
வானையும் பிளந்திடும் வலிமைகொண் டவன் நீ
இளைஞனே எழுந்திரு.

சண்டமா ருதம்போல்
எண்டிசை தன்னிலும் ஏகிடு
புதுப்புதுக் கலைகளும் புதுப்புதுப் பொருள்களும்
புதுமையிற் புதுமை சேர்.

பழமையின் உயர்வையும்
அழகையும் நன்றாய் அறிந்திடு
உன்னருஞ் சாத்திரம் உயர்கலை உடையாள்
இளைஞனே எழுந்திரு.

குமரியிற் குடைந்திடு
இமயவான் உச்சியில் ஏறிடு
தாய்தரும் இணையிலாத் தனமெலாம் அடைந்திடு
இளைஞனே எழுந்திரு.

ஞாலமின் புறவே நன்மை செய்
காலம் வருமெனக் காத்திருப்பவன் செய்யான்
இன்றே செய்திட இளைஞனே எழுந்திரு.

96A




உள்ளம் குழையுதடி
வழிப்போக்கன் சொன்னாலும்
வள்ளிக் கணவன் பேரை...
குமாரி பாமாவின்
வள்ளிக் கணவன் பேரை
வழிப்போக்கர் சொன்னாலும்
உள்ளம் குழையுதடி—கிளியே
ஊனும் உருகுதடி
ராஜன்




## அபிநயத் தோற்றங்கள்

மாலை வடி வேலவர்க்கு
வரிசையாய் நானெழுதும்
ஓலை கிறுக்காச்சுதே—கிளியே
உள்ளமும் கிறுக்காச்சுதே

(கிளிக்கண்ணி)

## உதய தாரகைகள்



கலைவாணி லலிதா



மாஸ்டர் விட்டல்தாஸ்

# மாதாவின் முகம்

புரசு பாலகிருஷ்ணன்

**1936**-ம் வருஷம் நான் பம்பாயிலிருந்து சென்னைக்கு மாற்றப்பட்டேன். அச்சமயம் பம்பாய் ஸ்டேஷனில் நான் கண்ட ஒரு காட்சியும் எனக்குத் தோன்றிய எண்ணங்களும் என் மனத்தில் இன்றும் அவ்வப்போது எழுகின்றன.

புறப்படுவதற்கு முந்திய தினமே நான் இரண்டாம் வகுப்பில் ஓர் இடம் ரிஸர்வ் செய்திருந்தேன். ஆயினும் ஸ்டேஷனுக்குச் சீக்கிரம் சென்று விட்டேன். நான் பம்பாயில் ஏகாங்கியாய் வசித்திருந்ததால், எனக்கு வீட்டில் சாதாரணமாய் இருப்புக் கொள்வதில்லை. எனக்கு சிநேகிதர்களும் அதிகமாய்க் கிடையாததால், நான் அநேகமாய் வெளியில் சுற்றிக் கொண்டே இருப்பேன். அவ்வழக்கத்தை யொட்டி நான் வீட்டை விட்டு ரயிலடிக்கு அன்றிரவு சீக்கிரமே சென்று விட்டேன். எனக்குக் கூட்டமான இடங்களில் இருப்பதற்கு எப்போதுமே பிடிக்கும்; நாலைந்து பேர்களைப் பார்ப்பதில் ஒரு திருப்தி; ஜனங்களின் முகங்களை, அவைகளிலும் மனித சக்திகளின் முகார விந்தங்களைப் பார்த்துக் கொண்டிருப்பதில், பொழுதை அநாயாசமாய்க் கழித்து விடுவேன்.

நான் அப்போது தனியாய்ப் பிரயாணம், செய்ததனால், என்னிடம் மூட்டை முடிச்சுகள் அதிகமாயில்லை. வெகு சீக்கிரமே என் படுக்கை, பெட்டி கூஜா, முதலியவைகளை என் கம்பார்ட்மெண்டில் சரிவர வைத்து விட்டு. ஜனக் கூட்டத்தையும் இதரக் காட்சிகளையும் வெறுமனே பார்த்துக் கொள்ளுவதான என் பொழுது போக்கில் இறங்கினேன்.

ஒரு பிளாட் பாரத்தில் ஜனக் கூட்டத்தின் சச்சரவும் பரபரப்பும் எப்போதும் ஒரு தோற்றத்தையே அளிக்கிறது. நேற்றும் இன்றும் நாளைக்கும் அக்காட்சி ஒன்றாய்த்தான் இருக்கும். பிளாட்பாரத்தில் இருக்கும் பொழுது அங்குள்ள எல்லா ஜனங்களின் கருத்தும் ஒன்று தான்—அதாவது, கம்பார்ட்மெண்டுகளில் தங்கள் தங்கள் இடங்களைப் பத்திரம் செய்து கொள்வது என்று நினைத்தேன். அவ்வெண்ணத்தில் மனச்சோர்வு உண்டாக்க எதுவுமில்லை. ஆயினும் எக்காரணத்தினாலோ என் மனம் அதற்கு மேல் ஏக்கமான எண்ணங்களையே தொடர்ந்து சென்றது. ஆடிஸ் அபாபா வீழ்ச்சியுற்றால் என்ன, அபிஸீனியச் சக்கரவர்த்தி ஹைலா ஸிலெஸ்ஸி ஐரோப்பாவிற்கு ஓடி யொளிந்தால் என்ன, இந்தியாவில் நாம் தினசரி செய்து கொண்டிருக்கும் அலுவல்கள் இப்போது இப்பிளாட் பாரத்தில் ஜனங்கள் செய்து கொண்டிருப்பதைப்போல் உபயோகமற்றவை: அர்த்தமற்றவை, அந்தந்த நிமிஷத்திற்குள்ளேயே புதைந்து கிடைப்பவை, என்று நினைத்தேன். பலவீனர்களாகிய இந்த தேசத்தாரில் நானும் ஒருவன்; இந்தப் பலவீனமான மக்கள் பக்கம் தான் நான் சேருவேன், இந்த மக்கள் வறுமையொரு புறமும் பிணி ஒரு புறமுமாக, உயிரையும் உடலையும் சேர்த்துச் சமாளிக்கவே நாள் தோறும் போராடுகின்றனர். ஆகவே "ஆடிஸ் அபாபா முஸ்ஸோலினியிடம் சிக்குண்டால் என்ன? நீகஸ் ஓடியொளிந்தால் என்ன? நம் பொது மக்களுக்கு இது ஒரு பொருட்டில்லை. வாழ்க்கையின் முடிவற்ற கொடுமை என்ற கபந்தன் தன் திறந்த வாயுடன் அவர்களை சதா உற்று நோக்குவதைத் தான் அவர்கள் அறிவர்," என்று நினைத்தேன்.

இம்மாதிரியான உற்சாகமற்ற எண்ணங்களிலிருந்து நான் எதிரே கண்ட காட்சி ஒன்று என்னைத் தட்டி எழுப்பியது. சிறிது தூரத்தில் ஒரு சிறு கூட்டத்தின் நடுவே ஒரு யுவதி நானிருக்கும் திசையைக்குறித்து வந்து கொண்டிருந்தாள். அவள் பச்சைப்புடவை யுடுத்தி, கையில் ஒரு வீணை ஏந்தி யிருந்தாள். அவள் என் ஊரைச் சேர்ந்தவள் என்று எனக்கு எளிதில் விளங்கிற்று. இவ் விஷயத்தை உறுதி செய்து கொள்ள வேண்டிய அளவுக்கு மேல் நான் அவளுடன் கூட வந்தவர்களைக் கவனிக்கவில்லை. என் கவனம் எல்லாம் அவள்மேலேயே சென்றது. அவளுக்குச் சுமார் பதினெட்டு வயது இருக்கும்; அவளை ஒரு கட்டழகி என்று சொல்ல முடியாது; ஆயினும் அவள் முகத்தில் ஒரு வசீகரம் வீற்றிருந்தது; அதில் பிரகா



சித்த தூய்மை அதை அழகாக்கி விட்டது. அவளுடைய குழலழகு என் மனதை விட்டு இன்றும் அகலவில்லை. கரு கருவென்று முழங்கால்கள் வரையில் அவளுடைய பின்னல், தலையிலிருந்து இரு பக்கங்களிலும் பெருகிக் கீழே சேரும் ஒரு நீர் வீழ்ச்சியைப் போல் தென்பட்டது. அவளைப் பார்த்த பொழுதே என் மனத்தில் தோன்றிய இவ்வுவமைதான் அச்சமயம் ரவி வர்மாவின் "வஸந்தா" என்ற சித்திரத்தை எனக்கு நினைவுறுத்தியிருக்க வேண்டும். பூமியில் தளிரையும் பூவையும் பழத்தையும் கொட்டி வழங்கும் வஸந்த லக்ஷ்மியை அத்தகைய கருங்குழல் கொண்ட ஒரு ஸ்திரீ போல் சித்திரக்காரன் சித்திரித்திருக்கிறான். செறிந்து நீண்டு இரு புறமும் பெருக்கெடுத்து விழும் அளகபாரம் தாராளமாய் வழங்கும் குணத்திற்கு ஒரு புறம்புத்தோற்றமாய் அமைகிறது போலும்.

அப்பெண்ணைக் கவனித்தவாறே நான் பிளாட் பாரத்தில் நின்றுகொண்டிருந்தேன். அவள்—வஸந்தா என்றே அவளை அழைப்போம்—கையில் வீணையுடன் திண்டாடிக் கொண்டு ஒரு மூன்றாம் வகுப்பு வண்டியில் ஏறினாள். உள்ளே தக்தக என்று ஜனக்கூட்டம். அவள் வீணையை ஒரு மேற்பலகையின் மேல் வைப்பதற்கு அதைத் தன் தம்பியிடம் கொடுத்தாள். அவளுடன் கூட வண்டியில் ஏறியவர்கள் பலர்: இரு பையன்கள், ஒரு வாலிபன், ஒரு சிறு பெண், விதவைக் கோலத்தில் ஒரு பாட்டி, குடும்பத்தின் தலைவர் எனத் தோன்றிய ஒரு பெரியவர், அவருடைய சஹதர்மிணி எனத் தோன்றிய ஒரு ஸ்திரீ. இவர்கள் அனைவரும் கம்பார்ட்மெண்டில் குழுமியபிறகு அவள் என் கண்களுக்குத் தென்படவில்லை; அவள் மேற்பலகையில் வைத்திருந்த வீணை மாத்திரம் காட்சி அளித்தது. நான் என் கம்பார்ட்மெண்டுக்குத் திரும்பி வந்தேன்.

அங்கு என்னை ஏனோ சோர்வும் அயர்வும் கலந்த ஓர் உணர்ச்சி மெல்ல ஆக்கிரமித்தது.... வீணையுடன் மூன்றாம் வகுப்பில் பிரயாணம் செய்துகொண்டிருந்த பெண் நிச்சயமாய் ஒரு வித்வாஷி அல்ல. ஆயினும் அவள் சங்கீதத்தைப் போற்றுகிறாள். அவளைப்போன்ற சாதாரண ஸ்திரீகளால்தான் நம் சங்கீதம் இன்னும் நிலைத்து நிற்கிறது. பல பயங்கரமான பேய்களிடையே ஓர் அழகான பெண் சஞ்சரிப்பது போல், இன்று நம் நாட்டில், நம் எளிமைக்கும் அரசியல் அடிமைக்கும் மத்தியில் நம் புராதனக் கலைகள் கூடத்தான் காட்சி அளிக்கின்றன என்று நினைத்தேன். அந்த எண்ணத்துடன் என் மனத்தில் பல அரசியல் சாயைகள் அந்தப் பெண்ணைச் சுற்றி எழுந்தன :—கமிஷன்கள், கமிட்டிகள், அவசரத்திட்டங்கள், குண்டாந்தடிப் பிரயோகங்கள். அடக்கு முறைகள், சுரண்டல் முறைகள், இத்யாதி......பல நூற்றாண்டுகளாய் நீடித்திருக்கும் நமது சங்கீதத்தை இந்தப் பிசாச் ரூபங்களுக்கு மத்தியில் நீடிக்கச் செய்வதற்கு இக் கருங்குழலாளும் உதவுகிறாள். இந்த எண்ணத்தில் ஏனோ ஏக்கம் கலந்திருந்தது; மலையைப் பனி மூடுவதுபோல், அடிமை உணர்ச்சி அனைத்தையும் மூடியது.......ரயில் கழனிகளின் நடுவே வேகமாய் ஓடிக்கொண்டிருந்தது. கம்பார்ட்மெண்டுக்கு வெளியே பார்த்தேன். எங்கும் செறிந்த இருள்; ஆங்காங்கு சில குடிசைகளின் விளக்குகள் மாத்திரம் தென்பட்டன.

சாதாரணமாய் ரயில் பிரயாணத்தில் பலருக்குத் தூக்கம் வருவதில்லை; எனக்கு மாத்திரம் ரயிலில் பிரயாணம் செய்துகொண்டு தூங்குவதற்குப் பிடிக்கும். ரயிலின் ஆட்டத்தில் நான், 'குழந்தைக்குத் தொட்டிலின் ஆட்டம் இவ்விதம்தான் இருக்குமோ' என்று நினைத்துக்கொண்டு தூங்குவேன். ஒரு வேளை, டாக்டர்கள் சொல்லுவது போல், என் நரம்புகள் எப்போதும் முடுக்கப்பட்டிருக்கும் வீணைத் தந்திகள்போல் இருக்கின்றனபோலும்; ஆகவே உடம்பின் வெளியாட்டத்தினால் நரம்புகளின் உள்ளாட்டம் சற்று ஓய்கிறது போலும்.

படுக்கையில் படுத்த சிறிது நேரத்தில் நான் தூங்கிவிட்டேன். உடம்பு அயர்ந்ததே யொழிய, மனது அயரவில்லை. தூக்கத்திலும் எண்ணங்கள் குவிந்துகொண்டிருந்தன; கனவுச் சம்பவங்கள் நேர்ந்துகொண்டிருந்தன. நான் என் கம்பார்ட்மெண்டிலிருந்து எப்படியோ மூன்றாம் வகுப்புக் கம்பார்ட்மெண்டுக்குப் போய்விட்டேன்—ஆம், வஸந்தா பிரயாணம் செய்துகொண்டிருந்த கம்பார்ட் மெண்டுக்குத்தான். அங்கிருந்து எப்படியோ வஸந்தாவும் நானும் ஒருவருமில்லாத ஒரு தனியிடத்திற்குச் சென்று விட்டோம். சுற்றும் அமைதி, சாந்தம்......எஞ்ஜினின் ஊதல், நீராவியின் சீறல், இரும்புச் சக்கரங்

களில் உருளல், தண்டவாளத்தின் ஓலம் எல்லாம் போய், ஆத்மாவைப் பூரிக்கச் செய்யும் அமைதியும் சாந்தமும் நிலவுகின்றன. ஒரு மெல்லியநாதம் அந்த அமைதியையே சங்கீதமாக்குகிறது... அது வீணையின் நாதம்......வஸந்தாவின் வீணையிலிருந்து பெருகும் அமுதநாதம்......ஆம், துடிக்கும் வீணைக் கம்பிகளிலிருந்து அவைகளின் ஆத்மாக்களையே அவளுடைய விளக்கைகள் எழுப்புகின்றன போலிருக்கிறது...... நான் அந்த கானத்தைப் பருகிக்கொண்டே அரைத் தூக்கத்தில் ஆழ்ந்தேன். அந்த அரைத்தூக்கத்திலும் என் மனத்தில் வேறு எண்ணங்களும் வேறு காட்சிகளும் எழுகின்றன......நான் அங்கிருந்து எப்படியோ இடம் மாறிவிடுகிறேன். மேலும் அந்தக்காட்சிகள் என் முன் விரிகின்றன. வருஷத்தில் பல மாதங்கள் பகல் வெளிச்சத்தைக் காணா வடதுருவப் பிரதேசம் அது. அங்கு எங்கும் இருள் சூழ்ந்திருக்கிறது. ஆனால் அந்த இருளின் மத்தியில் ஒரே ஒரு காட்சி மாத்திரம் திவ்ய ஜோதியுடன் பிரகாசிக்கிறது. சுமார் நூறடி உயரமுள்ள ஒரு குன்றிலிருந்து ஒரு மெல்லிய அருவி விழுகிறது. அதில் ஒரு விசேஷம். அந்த நீர் வீழ்ச்சியின் பரப்பு முழுவதும் தனித்தனியே தென்படும் திவலைகளாய் இருக்கிறது. அந்தத் திவலைகளின் மேல் மாத்திரம் சூரிய வெளிச்சம் பிரகாசமாய் விழுகிறது; மற்றபடி எங்கும் இருள் நிறைந்திருக்கிறது. இந்தக் காட்சி, மலைக்குன்றின் மறைவிலிருந்து ஒரு தேவதூதன் மாணிக்கங்களையும் வைரங்களையும் வாரிக்கொட்டுவது போல் தோன்றுகிறது. சுற்றியுள்ள இருளில் அந்த மாணிக்கங்களும் வைரங்களும் மாத்திரம் ஒளியுடன் மிளிர்கின்றன......என் அரைத் தூக்கம் கலைவுறும் சமயத்தில் நான் அவ்வைரங்கள் வீணையின் நாதத் தந்திகளின் ஸ்வரங்கள் என்றும், செம்மாணிக்கங்கள் தாளத் தந்திகளின் டங்காரங்கள் என்றும் அறிகிறேன்......

## 2

சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் என் தகப்பனார் எனக்காகக் காத்துக்கொண்டிருந்தார். நான் வண்டியை விட்டு இறங்கி, எங்கேயோ கவனமிழந்து பார்த்துக்கொண்டிருந்ததைக் கண்டு அவர், "என்ன சமாசாரம்? எங்கேயோ பார்த்துக்கொண்டிருக்கிறாயே?" என்று வினவினார். நல்ல வேளையாய் அவர் நான் வீணை ஏந்திசென்றுகொண்டிருந்த வஸந்தாவைப் பார்த்துக்கொண்டிருந்தேன் என்று அறியவில்லை.

அடுத்த நாள் நான் அவருடனும் என் தாயாருடனும் பெண் பார்க்கச் சென்றேன். நான் என் கல்யாண விஷயமாய்த் தான் சென்னைக்கு வந்திருந்தேன். என் பெற்றோர்கள் ஏற்கனவே எனக்கு ஒரு வரன் பார்த்து வைத்திருந்தனர். ஜாதகப் பொருத்தம் லௌகிக விஷயங்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து அவர்கள் எனக்காக முடிவு செய்திருந்தனர். நான் பெண்ணைப் பார்த்து, நானும் அவளும் சம்மதப் படுவதற்குத் தான் எங்கள் பெற்றோர்கள் காத்துக்கொண்டிருந்தனர்.

உபசாரமும் சிறிது சம்பாஷணையும் நடந்த பின்னர், "ஜயா, வந்து நமஸ்காரம் பண்ணு," என்று அவளைக் கூப்பிட்டாள் அவள் தாயார்.

சுமார் பதினெட்டு வயதுள்ள ஒரு பெண் அறைக்குள் நுழைந்து என் தகப்பனாருக்கு நமஸ்காரம் செய்தாள். பிறகு பக்கத்தறையில் ஒரு பாயின்மேல் உட்கார்ந்துகொண்டிருந்த என் தாயாருக்கு நமஸ்காரம் செய்துவிட்டு, தானும் உட்கார்ந்துகொண்டாள். நான் அவளை வெகு நேரம் சரியாகக் கவனிக்க முடியவில்லை; கனகாம்பர வர்ணப் புடவை உடுத்தியிருந்தாள் என்று மாத்திரம் தெரிந்தது. பிறகு நான் அவளை ஒரு முறை கவனித்த பொழுது, அவள் என்னை அச்சமில்லாமல் கவனித்துக்கொண்டிருந்ததை அறிந்தேன். அவளைப் பார்த்தவுடனேயே என் மனத்தில் முடிவு ஏற்பட்டுவிட்டது. கரும்பு தின்னக் கூலி என்பது போல இருந்தது எனக்கு, 'அவளைக் கல்யாணம் புரிந்துகொள்ளச் சம்மதமா' என்ற கேள்வி.

சிறிது நேரம் என் பெற்றோர்களும் அவள் பெற்றோர்களும் அறையில் ஏதோ சம்பாஷணையை நிலவச் செய்ய முயன்றனர். ஆயினும் சம்பாஷணை தடங்கல் இல்லாமலோ, சகஜமாகவோ நடைபெறவில்லை.

அதற்குமேல் "ஜயா, உன் பிடிலைக் கொண்டுவந்து கொஞ்சம் வாசி பார்ப்போம்," என்றாள் அவள் தாயார்.

"கொண்டுவரேன் - ஆனால் நீங்கள் என் வாசிப்பை எவ்வளவோ தரம் கேட்டிருக்கேளே!" என்று விஷமத் துடுக்குடன் மெதுவாய்க் கூறினாள் ஜயா.

"பேச்சில் என்ன சாமர்த்தியம்!" என்று நான் வியந்தேன்.

"நாங்கள் கேட்போம்," என்று சிரித்தார் என் தகப்பனார். ஆனால் அதற்குள் ஜயா பிடிலைக் கொண்டுவர எழுந்துவிட்டாள்.

"அவள் பாடுவளோ, இல்லையோ?" என்று விசாரித்தாள் என் தாயார்.

"வாய்ப் பாட்டை ஒரு வருஷத்துக்கு முன்பு நிறுத்திவிட்டோம்.



அவள் பாடுவதே கிடையாது. பிடில்தான் வாசிக்கிறாள்" என்றாள் அவள் தாயார்.

அதற்குள் ஐயர் பிடிலை எடுத்துக்கொண்டு வந்து விட்டாள். பதினைந்து நிமிஷங்கள் வாசித்தாள்.

"சுமாராய் வில்லைப் போடத் தெரியறது" என்றார் என் தகப்பனார். அவரிடமிருந்து இதையே ஒரு பெரும் புகழ்ச்சி எனக் கொள்ள வேண்டும். ஏனெனில் அவருக்குப் பிடில் வாசிக்கத் தெரியும் என்ற காரணத்தினாலோ எதனாலோ, அவர் சங்கீத வித்வான்களை, அவர்களிலும் முக்கியமாய்ப் பிடில் வித்வான்களை, லேசில் புகழ மாட்டார்.

"மேரு ஸமான" முடிந்தபிறகு ஐயர், "நிந்து வினா" வாசித்தாள். அதன் பிறகு நாங்கள் தாம்பூலம் பெற்றுக் கொண்டு வீடு திரும்பினோம். வழியில் நான் என் பெற்றோர்களிடம் என் சம்மதத்தைத் தெரிவித்தேன். அதன்மேல் அவர்கள் "மேற்கொண்டு நடக்க வேண்டிய" காரியங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தனர். ஆனால், நான் அவ் விஷயங்களைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை; மறுபடியும் யோசனையில் ஆழ்ந்தேன்.

அவள் பிடில் நன்றாய்த்தான் வாசித்தாள். ஆனால், நான் வண்டியில் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்த போது, பிடிலின் சங்கீதத்திற்கு இடையிடையே ஏனோ நான் கனவில் கேட்ட வீணாகானம் ஒலித்தது .........நமக்கு பிடிலைக் காட்டிலும் வீணைதான் பவித்திரமாய் இருக்கிறது. ஏனெனில், வீணை ஆதிகாலந் தொட்டு நம் வாழ்வில் ஊறி, சரஸ்வதியின் வாத்தியமாகிப் புனித ஸ்தானம் அடைந்திருக்கிறது. ஆகவே, பிடிலையும் வீணையையும் பற்றிய நம் வித்தியாச உணர்ச்சி சங்கீத ரசனையைப் பற்றியதன்று; பொது ஹிருதய உணர்ச்சியைப் பற்றியது. நாம் பேனாட்டுப் பிடிலையும் நம் வாத்தியமாக்கிக் கொண்டு, அது நம் சங்கீதத்தைப் பாடும் படிச் செய்து கொண்டு விட்டோம் என்று எண்ணினேன்..... ஆனால், "என்ன பிரயோசனம்?" என்று எனக்குத் தோன்றிற்று. நாம் இவ்விஷயத்திலும் இன்னும் பல விஷயங்களிலும் உலகில் எவ்வளவோ பெருமிதத்துடன் நடந்துகொள்வதற்கு உரியவர்களானாலும், நாம் அடிமைகள். பிடிலை வாசிக்கும் ஐயாவும், அதை ரஸிக்கும் நானும், அடிமை வலையில் விளையாடும் இரு பக்ஷிகள் தாம்.........

ஒரு வாரத்திற்குப் பிறகு நான் என் குறிப்புகளில் பின் வருமாறு எழுதினேன் :

"நாளைக்கு என் விவாக தினம். நாளைக்கு ஐயாவும் நானும் சதிபதிகளாகி விடுவோம். என் படுக்கையில் படுத்துக்கொண்டு நான் இதைப்பற்றி எண்ணுகையில், என் தூக்கம் கலைந்து விட்டது. ஐயாவை அவளுடைய அச்சமற்ற கருவிழிகளுடனும் கனகாம்பர வர்ணப் புடவையுடனும் நினைக்கும்பொழுது. வேண்டாதவை யெல்லாம் என் மனத்தில் தோன்றுகின்றன. ஐயா, நான், எங்கள் பெற்றோர்கள் அனைவர் மேலும் ஏதோ ஒன்று மேகம்போல் படர்ந்து அமுக்குகிறது. அதன் நிழலில் எங்கள் முகமலர்ச்சி மங்குகிறது. இந்தச் சுபமான வேளையில், நாங்கள் சந்தோஷமாய் இருக்கவேண்டிய காலத்தில், நாங்கள் ஆனந்தத்தைத் திருடும் அற்பர்கள்போல் காட்சி அளிக்கிறோம். இவ்விதம் எங்கள் சந்தோஷத்தை எளிமைப் படுத்துவது பாரத மாதாவின் முகத்தில் குடிகொண்டிருக்கும் எளிமையும் துக்கமுமே என்று எனக்குத் தெரிகிறது........."

அர்ஸான் & கோ.,

14, லிங்கி செட்டித் தெரு, ஜி. டி. சென்னை.

மெஸ்ஸர்ஸ் பாரி அண்டு கோ., லிமிடெட், கிர்லோஸ்கார், கல்பகா ஆயில் மில்ஸ் முதலியவர்களின் அத்தாட்சி பெற்ற வியாபாரிகள்.



கிர்லோஸ்கார் மோட்டார்கள் 1 H.P. முதல் 15 H.P. வரை.

கிர்லோஸ்காரின் B. S. S. V. M. S, UP & SL டைப்பு ஸெண்ட்ருகல் பம்புகள்.

கிர்லோஸ்கார் கைப் பம்புகள்.

கிர்லோஸ்காரின் விவசாயக் கருவிகள்




மற்றும் பலவிதமான மெஷினரிகளும் கிடைக்கும்

# ஐப்பசிப் பெருக்கு

• சரஸ்வதி பாசு •

ஐப்பசி மாதத்திய அடை மழை மூச்சு விடாமல் பெய்து கொண்டிருந்தது. பகலென்றும் இரவென்றும் வித்தியாசம் தெரியாதவாறு வானம் மேகங்களாலான போர்வையைப் போர்த்துக்கொண்டிருந்தது. குறவர் பாளையத்தைச் சுற்றிலும் மழைத் தண்ணீர் வெள்ளக்காடா யிருந்தது. குறவர் பாளையத்தை, அதிலிருக்கும் ஆண், பெண், குழந்தை, குட்டி, மிருகங்கள், பட்சிகள் எல்லாவற்றையும் ஒரே மொத்தமாக விழுங்கி விடட்டுமா என்று கேட்பதுபோலிருந்தது.

குறவர் பாளையத்தைச் சுற்றித் தண்ணீர் தேங்கவாரம்பித்தது. வெள்ளப் பெருக்கு இன்னும் எடுக்கவில்லை. ஆனால், செங்கியின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகி கரையாகிய இமைகளையும் தாண்டி பெருக்கெடுத்து அவளுடைய வதங்கிய தாடைகள் மீது வழிந்தோடியது. வானத்தின் குமுறலுக்குச் செங்கியின் மனதிலேற்பட்ட குமுறல் குறைந்ததாக இல்லை. குறவர் பாளையத்தைச் சுற்றித் தண்ணீர் நெருங்க நெருங்க, அவள் மனவேதனை அதிகரித்தது. அவள் தன் குடிசைக்குள்ளிருந்துகொண்டே வெளியே எட்டிப் பார்த்தாள். மழை விடாது இன்னும் பெய்யும் என்று அவளுக்குத் தோன்றிற்று. மனக்கிலேசமடைந்தவளாய் குடிசைக்குள் பார்த்தாள். அவளுடைய நான்கு வயதான மகன் சுரத்தோடு படுக்கையிலிருந்தான். கார்ப்பொரேஷன் ஆஸ்பத்திரியிலிருந்து மருந்து கூட வாங்கிக் கொடுத்தாள். ஆனால், குணமில்லை. வயிற்றுக்கு ஆகாரமில்லாதபொழுது மருந்தைமட்டும் வாங்கிக் கொடுத்தால் சுரம் பறந்து போய்விடுமா?

குழந்தையும் செங்கியும் இரண்டு நாளாகப் பட்டினி. குழந்தை குளிர் தாங்கமாட்டாதவனாய் நடுங்கிக்கொண்டிருந்தான். செங்கி சுற்று முற்றும் பார்த்தாள். தன் மகன் படுத்திருந்த இடத்திற்கு நேராக மேலே தன் கணவனுடைய கிழிந்த வேஷ்டி தொங்கிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும், அவளுக்குத் துக்கம் அதிகரித்தது. அவள் கணவன் இறந்து ஒரு மாதந்தானிருக்கும். அளவுக்கு மிஞ்சிக் குடித்துக் குடித்து அதுவே விஷமாகி கடைசியில் ஒருநாள் செங்கியைத் திக்கற்ற நிலையில் விட்டு விட்டுக் கண்ணை மூடிக்கொண்டான். அவன் என்னதான் குடிகாரனாக இருந்தாலும் கணவனல்லவா? இந்தச் சமயத்தில் அவனிருந்தால் எவ்வளவு உதவியாக விருக்கும்? சிறு தூறல் பெரு மழையாவது போல் அவள் கண்ணீரும் அதிகமாயிற்று. ஒரு பெருமூச்சுவிட்டு விட்டு, அந்தக் கந்தை வேஷ்டியை எடுத்து மகன் மீது போர்த்தினாள்.

மகனுக்கு உடம்பு சரியில்லாததால் செங்கி நாலு நாட்களாக கரிவேப்பிலை விற்கப் போகவில்லை. அவள் கணவன் இருந்தவரையில் வீட்டிற்காகத் தம்படி கூட மிச்சப்படுத்தாமல் குடித்து வந்தான். அவன் இறந்த பிறகு செங்கி பக்கத்திலிருந்த ஊரில் கரிவேப்பிலை விற்று, வயிற்றைக் கழுவி வந்தாள். நாலு நாட்களாக் வெளியே போகாததால் குடிசையில் உணவுப் பஞ்சம் வந்துவிட்டது.

மகன் மீதிருந்த வாஞ்சையினால் வீட்டில் அரிசி கிடையாதென்று அறிந்திருந்தும் தனக்கிருந்த அங்கலாய்ப்பில் மூலை முடுக்குகளிலிருந்த பானைகளை யெல்லாம் ஆராய்ந்து பார்த்தாள், ஒரு பிடி அரிசியாவது அகப்படுமோ வென்று. அவள் தரித்திரம், பானைகள் வெறும் சூன்யமாகத்தான் காட்சி யளித்தன. அவள் மனம் பதைபதைத்தது. தன் மகன் நோயுற்றிருக்கும் பொழுது கூட ஒரு பிடி அன்னம் இல்லையென்றால் தாய் மனம் கொதித்தது. குடிசையைவிட்டு வெளியே பக்கத்துக் குடிசைக்குள் நுழைந்து, அவள் சிநேகிதியிடம், "அக்கா, உனக்குக் கோடி புண்ணியம். உசிரைக் கையிலே பிடிச்சுக்கினு போராடறான் எம்மவன். ஒரு வாய்க் கஞ்சி கொடு", என்று கெஞ்சினாள்.

செங்கியின் துரதிர்ஷ்டம் அவள் சிநேகிதி அப்போதுதான் கஞ்சி வைத்திருந்த பானையைக் கழுவிக் கவிழ்த்தாள்.

"ஐயோ, பாவம். பிள்ளை வாடி வதங்கிப் போயிருக்குமே; அரிசி கூட இல்லையே" என்று கையை விரித்துவிட்டாள்.

ஏமாற்றமடைந்த முகத்துடன் செங்கி குடிசைக்குத் திரும்பினாள். மகன் பஞ்சடைந்த கண்களுடன் அவளைப் பார்த்த பார்வை, "அம்மா, பசிக்குதே" என்று அறிவிப்பது போலிருந்தது. அப்பொழுதுதான் செங்கிக்கு குறவர் பாளையத்தில் பணக்காரனான குப்பனுடைய நினைவு வந்தது. நேரே அவனுடைய வீட்டுக்கு ஓடி, அவன் மனைவியிடம் "ஆத்தா, என் மவன் காயலா விழுந்து கிடக்கறான். நாலு நாளாச்சி, சோத்து முகத்திலே முழிச்சி. கொஞ்சம் சோறு வகு கஞ்சியாலது [illegible]ன். கோடி புண்ணிய முண்டு" என்றாள்.

குப்பன் மனைவி உள்ளே சென்றதும் இருவருடைய சம்பாஷணை செங்கியின் காதில் விழுந்தது.

"அடியே, உன்க்கு வேறே வேலே இல்லே? இது தர்ம சத்ரம்னு நினேச்சே?"

குசு குசு வென்று இரகசியம் பேசும் குரலில் அவன் மனைவி ஏதோ சொன்னுள்.

"ஆமாம், ரொம்ப பாவத்தெ கண்டுட்டே. அவ புருசன் சதா குடிச்சி துட்டு சேக்கலே. அவன் சாக்ரத்துக்கு முந்தி அந்த கர்வங் கண்ட களுதே என்னே குடியன்னு திட்டினுன். அப்படிப் பட்டவன் குடும்பத்துக்கு ஒரு அரிசி கூட கொடுக்க மாட்டேன்" என்ற கர்ஜனை.

இருள் நிறைந்த செங்கியின் மனதை இந்த சொல்லம்புகள் சம்மட்டியால் அடிப்பது போல் தாக்கின. அங்கு நிற்க மனமில்லாதவளாய் மழையில் நனைந்த படி தன் குடிசைக்குத் திரும்பினுள். அவள் ஓடி வந்த வழியில் தேங்கி இருந்த மழைத் தண்ணீர் அவள் கால் பட்டு நாலா பக்கமும், சிதறி மறுபடியும் ஒன்று சேர்ந்தன. ஆனுல் செங்கியின் சிதறிய மனம் மாத்திரம் ஒன்று சேரவில்லை. தன் ஆசையை எப்படியாவது நிறைவேற்றி தன் சிதறிய மனதை ஒன்று சேர்க்க யத்தனித்தாள்.

வீட்டில் மூலேயிலிருந்த கரிவேப்பிலேக் கூடையை எடுத்துத் தலேயில் வைத்துக் கொண்டு நகரத்தை நோக்கி நடந்தாள். அவளுக்கு வாடிக்கையாக கரிவேப்பிலே கொடுக்கும் வீடுகள் பல உண்டு. ஒவ்வொரு வீட்டிலும் அரிசி வாங்கிக் கொண்டு பதிலுக்கு கரிவேப்பிலே கொடுப்பாள். அன்று அவள் குறவர் பாளேயத்தை விட்டு ரோட்டையடைந்த போது வானம் குமுறிக் கொண்டு மழை பன் மடங்கு அதிகரித்தது. அவள் அந்த மழையைப் பொருட்படுத்த வில்லே. அதற்குக் காரணம் அவள் மனதில் படர்ந்திருந்த மாசற்ற அன்பு தான்! மழை அவள் முகத்தில் அடித்தது. அவளோ நிற்கவில்லே. தன் நடையை துரிதப் படுத்தினுள். எப்படியாவது தன் மகன் வயிறு குளிரக் கொஞ்சம் கஞ்சியாவது காய்ச்சிக் கொடுக்க வேண்டும் என்று உறுதி கொண்டாள்.

கொஞ்ச தூரம் சென்றதும், செங்கி குறவர் பாளேயத்தைத் திரும்பிப் பார்த்தாள். அவள் மனம் பகீரென்றது. அவள் கண்ணுக்குக் குறவர் பாளேயத்தைச் சுற்றி ஆழ்ந்திருந்த ஜலம் இப்பொழுது வெள்ளக் காடாக மாறியிருப்பது போல் தென்பட்டது. குடிசைக்குப் போகலாமா வென்று திரும்பி ஓர் அடி எடுத்து வைத்தாள். அவள் மனம் ஒரு நிலேயில் நிற்கவில்லே. "உம்......வெறுங் கையோடு அங்கு போய் என்ன பிரயோசனம்? இதோ ஒரு நொடியில் போய் கரிவேப்பிலே விற்று அரிசி வாங்கிக் கொண்டு வந்து விடுகிறேன்," என்று தனக்குள் சொல்லிக் கொண்டே வேகமாய் நடக்க வாரம்பித்தாள். நகரத்தைச் சேர்ந்ததும் அவளுக்கு மூச்சு கொஞ்சம் தாராளமாய் வரத் தொடங்கிற்று. "எப்படியோ நகரத்திற்கு வந்து சேர்ந்தாய் விட்டது. அவசியம் அரிசி கிடைக்கப் போகிறது," என்று சந்தோஷப்பட்டுக் கொண்டாள். அவள் வாடிக்கையாக கரிவேப்பிலே கொடுக்கும் ஒரு வீட்டை யடைந்து "அம்மா." என்று கூப்பிட்டாள். கவலேயால் அவள் குரலும், குளிரினுல் அவள் உடலும் நடுங்கின.

"அடி, பாவி! இந்த அடை மழையில் எதற்கடி வந்தாய்? புடவை யெல்லாம் நனைஞ்சு போச்சே!" என்ருள் அந்த வீட்டு அம்மாள்.

"ஆமாம்மா, வாராமப் போனு நீங்கள்ளாம் கரிவேப்பிலே இல்லாதே தானம்மா இருக்கணும். அதுக்காகத்தான்ம்மா வந்தேன்" என்ருள் செங்கி. அவள் உதடுகளில் ஒரு வரண்ட சிரிப்பு தோன்றி மறைந்தது.

அந்த அம்மாவுக்காகவே தான் வந்தது போல் சொன்னுல்தானே அந்த அம்மாள் தடை யொன்றும் சொல்லாமல் அரிசி கொடுப்பார்கள் என்பது செங்கியின் எண்ணம்.

அந்த அம்மாவின் சிறிய மகன் வெளியே வந்தான். அவனுக்குக் குளிர் காற்று படாமலிருக்க கம்பளிச் சட்டை, குல்லா முதலியவைகள் போட்டிருந்தார்கள். அவ்வளவு துணிகளே உடுத்தியிருந்த போதிலும் அந்த அம்மாள், 'எண்டா காத்திலே வந்தே; போ, போ; உள்ளே போய் கட்டிலிலே படுத்துக்கோ," என்று பையனிடம் சொன்னபோது செங்கியின் கண்கள் ஆச்சரியத்தினுல், அகல விரிந்தன. அவளுடைய மகனேயும் இந்தப் பையனேயும் ஒப்பிட்டுப் பார்த்தாள்.

அம்மாள் அரை ஆழாக்கு அரிசி கொடுத்த பொழுது செங்கிக்கு அளவற்ற மகிழ்ச்சி யுண்டாயிற்று. அரையாழாக்கு அரிசி தன் மகன் ஒருவனுக்குப் போதும். தனக்கு இல்லாவிட்டாலும் பரவாயில்லே, இன்னும் கரிவேப்பிலே விற்கப் போய் நேரத்தை வீணுக்க மனமில்லாமல் செங்கி நேரே குறவர் பாளேயம் திரும்பினுள். திரும்பும் பொழுது மடியில் வைத்திருந்த அரிசியை ஒரு தரம் பார்த்துக் கொண்டாள். அரிசியை ரத்தினக் குவியலாக அவள் எண்ணினுள். சந்தோஷத்தால் கால்கள் வேகமாக நடந்தன.

அவள் மனம் கற்பனையில் இறங்கி விட்டது. "அந்தக் கோடி வீட்டுக் குப்பனுக்கு என்ன அகங்காரம்? இவன் பணத்தை வெச்சிக்கிட்டு என்ன தான் செய்ய போருனே? என் மவனுக்கு இருக்கும் புத்திசாலித் தனத்துக்கு பெரியவனுகும் பொழுது இவனே விட பணக்காரனுப் போயிடுவான். அப்போ குப்பனுக்குச் சரியான பாடம் கற்பிக்க......" இப்படி அவள் கற்பனை செய்து கொண்டே குறவர் பாளேயத்தை நிமிர்ந்து பார்த்த பொழுது அங்கு ஒரு குடிசையைக் கூட காணவில்லே. எல்லாம் ஒரே வெள்ளக் காடாக இருந்தது. வெள்ளத்தில் குடிசைகளின் கூரைகளும், செடி மரங்களும் சுழன்று சுழன்று ஓடுவது தூரத்தில் தெரிந்தது. இந்தக் காட்சி அவளுடைய கற்பனே மாளிகையை அஸ்திவாரத்தோடு குலுக்கி இடித்து தள்ளியது. திக்பிரமை பிடித்தவள் போல், மடியைக் கையில் பிடித்துக்கொண்டிருந்தவள் மடியை விட்டு விட்டாள். மடியிலிருந்த அரிசியெல்லாம் கீழே விழுந்து நாலா பக்கமும் சிதறியது.

# வாழ்வு விளக்கம்

ராமி

**கோ**புவும் சாரதியும் கலாசாலை நாட்களில் இணை பிரியாத நண்பர்கள். நட்பிற்கு எடுத்துக் காட்டாக இருந்தவர்கள் இருவரும். ஒருவருக்கொருவர் அறியாத ரக்சியமே அவர்களிடம் இல்லை.

கோபு விடுமுறைக்குப் பம்பாய் சென்று மூன்று மாதங்கள் கழித்து அப்பொழுதுதான் திரும்பி வந்தான். சாரதியைப் பார்த்ததும் அவன் கேட்ட முதற் கேள்வி என்ன தெரியுமா? 'கமலா யார்' என்பதுதான். கோபு ஊரில் இல்லாத நாட்களில் சாரதிக்கு 'வாழ்க்கையில் அதி முக்யமான சம்பவம்' என்கிறார்களே, அது நேர்ந்துவிட்டது. அவன் ஒருத்தி பேரில் காதல் கொண்டுவிட்டான். அந்தக் காதலியின் பெயர்தான் கமலா. அவள் யார், என்ன என்பதையெல்லாம் கண்டறிந்து வைத்திருந்தான். தன்னுடைய காதலைப்பற்றி பம்பாயிலிருந்த கோபுவுக்கும் கடிதம் மூலம் தெரிவித்திருந்தான். கடிதத்துக்குக் கடிதம் கமலாவின் புகழ் மாலையாக வந்துகொண்டிருந்தது. அந்தக் கமலா யாரென்று அறிய ஆவலிருப்பது சகஜந்தானே? ஆகவே கேட்டான்; சாரதியும் அவளை கோபுவுக்குக் காண்பித்தான். அவள் லக்ஷணமாயிருப்பாளென்றுதான் கோபு எதிர்பார்த்தான். ஆனால் இவ்வளவு அழகா? கோபுவின் மனதில் என்னென்னவோ உணர்ச்சிகள் அலைமோதின. சட்டென்று அந்தப் பக்கம் திரும்பிய கமலா, தன்னையே பார்த்துக்கொண்டு நிற்கும் இவர்களைக் கண்டாள். சாரதியைத் தெரியும், தன்னுடன் ஒரே வகுப்பில் படிக்கும் மாணவன். ஆனால் பக்கத்தில் நிற்கும் அவர் யார்? இந்தக் கேள்விக்குப் பதில் கிடைக்கு முன்னர் அவர்களிருவரும் தன்னையே உற்று நோக்குவதைக் கண்ட அவள், நாணத்தால் முகம் சிவக்க அங்கிருந்து போய்விட்டாள்.

அவள் போன திக்கையே பார்த்துக்கொண்டு நின்றிருந்தான் கோபு. அவள் உருவம் அவன் மனத்திரையில் பதிந்துவிட்டது. தன்னையும் மறந்து அவன் அப்படி நின்றது சாரதிக்குப் பிடிக்கவில்லை போலும். கோபுவைக் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வகுப்புக்குப் போய்விட்டான்.

*　　*　　*

**அ**ங்கிருந்து 'விர்'ரென்று கிளம்பிப்போன கமலாவின் மனதில் அந்த ஒரே கேள்விதான் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. "அது யார்?". கோபுவின் உருவந்தான் அடிக்கடி அவள் மனத்தில் எழுந்த இந்தக் கேள்விக்குக் காரணம். கோபுவை அவன் நண்பர்கள் 'க்யூபிட்' (மன்மதன்) என்று விளையாட்டாய் கூப்பிடுவார்கள். கோபு ஆஜானுபாகு. நல்ல சிவப்பு. அலைபோன்று சுருண்டு சுருண்டு படிந்திருக்கும் தலைமயிர். பார்வையில் ஒரு கம்பீரம். அவன் கமலாவின் மனதைக் கொள்ளை கொண்டதில் ஆச்சரியமில்லை. தன் தோழிகளை அது யாரென்று கேட்கலாமென்றாலோ, வெட்கம் அதற்கு இடம் கொடுக்கவில்லை. வகுப்பு ஆரம்பித்ததும், அங்கே சாரதிக்குப் பக்கத்தில் அவனைப் பார்க்கவும் அவள் மனதிற்கு ஒரு ஆறுதலாயிருந்தது. தன் சிநேகிதியை ஜாடையாய் விசாரித்தாள். அவனைப்பற்றிய விஷயங்கள் தெரியவந்தது. அவளுடைய மன மண்டபத்தில் அவன் உருவம் அமர்ந்துவிட்டது. அவனைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் அடிக்கடி அவளை உந்த ஆரம்பித்தது. தான் அவனைப் பார்க்கக் கண்ணெடுக்கும் போதெல்லாம் அவனும் தன்னையே நோக்குவதைக் கண்டு வெட்கமுற்று குனிந்து கொள்வாள்.

கமலாவை கோபுவுக்குக் காண்பிக்கும்போது இப்படி வருமென்று சாரதி எதிர்பார்த்திருக்க மாட்டான். அதில்தான் அவன் தவறு இருந்தது. தெரியாமலா ஷேக்ஸ்பியர் "காதலில் மட்டும் நண்பனைத் தூது விடாதே" என்று சொன்னார்? அழகு நண்பனின் உறுதியை உருக்கிவிடும் என்பது உ[illegible]யாய்வி[illegible] அவனையும் மீறி கோபுவின் உள்ளம் அவளை நாடிச்சென்றது. அவளும் தன்னை நோக்குவதைக் கண்ட அவன் உள்ளம் பூரித்தது.

இவ்வளவுக்கும் ஆனந்தமடையாத உள்ளம் ஒன்றிருந்தது. சொல்லவே தேவையில்லை; அது சாரதிதான். இவர்களிருவரையும் கவனித்தான். அவர்களுடைய பார்வைகள் அவன்

மனத்தில் ஈட்டிகள்போல் பாய்ந்தன. "காத்திருந்தவன் பெண்டை, நேற்று வந்தவன் கொண்டு போனால்" பின் எப்படித்தானிருக்கும்?

நண்பர்கள் தாங்கள் நண்பர்கள் என்பதை மறந்தனர். இருவரும் ஒருத்தியைக் காதலித்தனர். ஒருவன் மற்றவன் பேரில் துவேஷம் கொண்டான். அதை மற்றவன் அறியவில்லை.

நாட்கள் சென்றன. காதல் வளர்ந்தது. குரோதமும் வளர்ந்தது. கமலாவின் காதல் பெருகியது. கோபுவின் உள்ளத்தில் உண்டான அந்த ஒளி வளர்ந்தது. சாரதியின் மனதில் உண்டான பொறாமை அவனை ஆட்கொண்டது.

கமலாவுக்கு சாரதி தன்னிடம் ஆசை வைத்தான் என்பதே தெரியாது. கோபுவுக்குத் தெரியும்; ஆனால் தன் உணர்ச்சியைத் தடுக்க முடியவில்லை. சாரதிக்கு அந்த உண்மைக் காதல் விளங்கவில்லை.

* * *

ஒரு நாள் உள்ளூர் சபாவில் 'சகுந்தலா' நாடகம் நடத்தினார்கள். கோபு நாடகத்துக்குச் சற்று தாமதமாக வந்தவன், இருட்டில் தடவிக்கொண்டே போய் ஓர் ஆசனத்தில் அமர்ந்தான்.

முதலங்கம் முடிந்து வெளிச்சம் போடப்பட்டது. தனக்கு நேரே முன் வரிசையில் கமலா உட்கார்ந்திருப்பதைக் கண்டான். அவளையே பார்த்துக்கொண்டிருந்ததில், சாரதி அருகில் வந்ததுகூட அவனுக்குத் தெரியவில்லை. "கோபு, எப்போ வந்தே?" என்ற குரல் அவனை கனவுலகத்திலிருந்து தட்டி எழுப்பியது. கோபுவின் பெயரைக்கேட்டு அவளும் திரும்பினாள். கண்கள் சந்தித்தன.

விளக்குகள் அணைக்கப்பட்டன. திரை மேலெழுந்தது. காட்சி தொடங்கிற்று. காதற் கட்டங்கள்; அவற்றில் இனிமை அதிகம் தென்பட்டது, கோபுவுக்கு.

சகுந்தலை துஷ்யந்தன் மடியில் தலைவைத்துப் படுத்திருக்கிறாள். காதலால் வாடும் காவலன் கவித்வம் பெற்றுவிட்டான்: "கண்மணி, கவி நான்; என் கவிதை நீ. மலர் நான்; அதன் மணம் நீ. இசை நான்; அதன் இனிமை நீ. கண்ணே சகுந்தலா, இகத்திலும் பரத்திலும, இன்பத்திலும் துன்பத்திலும், வாழ்விலும் தாழ்விலும் ஒன்றாகவே இருப்போம்" இந்த இடத்தில் கமலா பின்னே திரும்பினாள். உணர்ச்சி பொங்கும் அவள் கண்களைக் கண்டான் கோபு. அன்பு ஆறு பெருகிய அவர்கள் பார்வையை, விஷவெள்ளம் ஓடும் தன் கண்களால் பார்த்துக் கொண்டிருந்தான் சாரதி. அவனுடைய பொறாமைச் சிறுபொறி பெருந்தீயாக மாறி, நாக்குவிட்டு எரியத் தொடங்கியது. இவர்கள் காதலைக் குலைக்க குட்ரயுக்திகள் செய்யத் தொடங்கினான்.

* * *

நாடகம் நடந்து சில நாட்களாயின. ஒரு நாள் கமலா வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தாள். தபால்காரன் 'மிஸ் கமலா' என்று கூறி, ஒரு கடிதத்தை நீட்டினான். தனக்குக் கடிதம் எழுதுவது யாராயிருக்கக் கூடும் என்று வியப்புடன் தபால்காரனை நோக்கிக் கொண்டே கடிதத்தைப் பெற்றுக் கொண்டாள். உறையிலிருந்து கடிதத்தை எடுத்து படிக்கலானாள்.

கடிதத்தைப் படித்து முடிக்கையில் அவள் முகத்தில் வெறுப்பு கூத்தாடியது. கடிதம் கையில் கசங்கியது. இந்தக் கடிதம் ஒரு கண்ணியமான மனிதன் எழுதக் கூடியதா? என்ன அசிங்கியம்? அதை எண்ணும் போதே அவள் உடல் குன்றியது. கோபுவைப் பற்றி அவள் மனதில் என்னென்னவோ எண்ணியிருந்தாள். அவனும் இவ்வளவு தானா? சாதாரண மனிதனையும் விடக் கேவலமாய் விட்டானே?

இதை அவன் செய்திருப்பானா என்ற சந்தேகம் கிளம்பியது. ஆனால், அதோ அந்தக் கையெழுத்துத் தான் இருக்கிறதே? அவள் மனம் சற்று நேரம் போராடியது. ஆனால் கடைசியில் அந்தக் கையெழுத்து அவளை வென்று விட்டது. அவன் தான் எழுதி இருப்பானென்று திடமாக நம்பலானாள். அந்த எண்ணம் அவள் வெறுப்பைக் கிளறி விட்டது. அவள் கண்களில் நீரை வருவித்தது.

கடிதத்துடன் தன் அறைக்குப் போய் விட்டாள். அதைப் பார்க்குந்தோறும் பெருமூச்சு கிளம்பியது. தான் கட்டி விளையாடும் மண் கோட்டையைத் தவழ்ந்து வந்து தட்டி விட்ட குழந்தையைப் பார்க்கும் சிறுமி போல் அதைப் பார்த்தாள். அவளுக்கு துக்கம் துக்கமாக வந்தது.

அன்று கலாசாலையில் கமலாவைக் கண்ட கோபு திகைத்துப் போனான். அவள் ஏன் அப்படி இருக்கிறாள்? அவளுக்கு என்ன? என்று தன்னையே கேட்டுக் கொண்டான். கமலா அடையாளம் கண்டு பிடிக்க முடியாத வகையில் மாறி இருந்தாள்; உருவத்தில் அல்ல, நடத்தையில் தான். வனமானைப் போல் விளையாடும் அவள் அடங்கி ஒடுங்கி அடி எண்ணி நடந்து சென்றாள். கலீர்கலீரென்று ஒலிக்கும் அவள் சிரிப்பு கேட்பதற்கரிதாகி விட்டது. அவள் தோழிகள் கூட அவளை எவ்வளவோ சீண்டிப் பார்த்தனர். எதற்காவது அவள் மாறினால் தானே? அடிக்கொரு தரம் கோபுவை நோக்கும் அவள் கண்கள் இன்று புஸ்தகத்தை விட்டுப் பெயரவே இல்லை. இந்த மாறுதல் கோபுவை நிலை குலையச் செய்தது. ஆனால் இதுவே சாரதிக்கு ஆனந்தமாயிருந்தது. "இந்த அடக்கம் இரண்டு நாளைக்கு; பின்னர் கோபு இருந்த சிம்மாசனத்தில் தான் ஏறி விடலாம்" என்று கனவு கண்டு கொண்டிருந்தான். ஆனால், அவனுக்கு பெரியதொரு ஏமாற்றம் காத்துக் கொண்டிருந்தது. கமலா ஒரு முறை தான் மாறினாள். மறுபடியும் முன் போல் ஆகவே இல்லை.

கோபுவுக்கு ஆனந்த சூரியன் அஸ்தமித்து விட்டான். அவள் ஏன் இப்படி மாறினாள் என்பது

அவனுக்கு விளங்கவில்லை. நடைப் பிணம் போல் ஆனான். கமலாவின் கவனத்தைக் கவர பன்முறை முயன்றான். ஆனால், அவளோ பார்த்தும் பாராமல் சென்று விட்டாள். என்னென்னவோ செய்து பார்த்தான். ஏதும் பலன் தரவில்லை. உயிரனைய நண்பன் என்றெண்ணி, சாரதியிடம் ஆறுதல் வேண்டி இதைப் பற்றிப் பேச ஆரம்பிப்பான். ஆனால், அவன் இதைத் தவிர மற்ற விஷயங்களெல்லாம் பேசுவான். நேரடியாக அந்த விஷயத்தைப் பிரஸ்தாபித்தாலும், மேலே பேச வொட்டாமல் தடுத்து விடுவான். இவை யெல்லாம் கோபுவின் மனதை முறித்து விட்டன. அவனுக்கு உலகமே கசந்து விட்டது. உணர்வென்பதே இல்லாமல், கலாசாலைக்கு வருவதும் போவதுமாயிருந்தான்.

* * *

நாட்கள் சென்றன. கமலாவின் உள்ளத்தில் விவரிக்க முடியாத எண்ணங்கள் ஓடும். கோபுவை நினைக்கும் போது அவள் மனத்தில் அந்த அன்பு துளிர்க்கும். அந்த இன்பகரமான நாட்கள் நினைவுக்கு வரும் உடனேயே அந்த அசங்கியமான கடிதம் மனக் கண்ணில் தோன்றும் "உருவம் மேலானாலும் உள்ளம் இழானதல்லவா? அந்தக்காதலை வளர்ப்பதா?'' என்ற எண்ணம் தோன்றும்; துளிர்த்த அன்பைத் தூர்த்து விடும்.

"அவனை நீ காதலிக்கிறாய்'' என்னும் ஓர் உள்ளம்.

"அந்தக் கேவலமான எண்ணம் படைத்தவனையா?'' என்று சாட்டை கொடுக்கும், மற்றோர் மனது.

அதைப்பற்றி தீர ஆலோசிக்க எண்ணி அமருவாள். ஆனால் எதிரிடையான எண்ணங்கள் தோன்றிக் குழப்ப, ஒன்றும் புரியாமல் கலங்கி எழுந்து விடுவாள்.

அவன் அன்பு கனிந்த முகம் அன்பையும், அந்த அசங்கியமான கடிதம் அருவருப்பையும் தூண்டிவிடும். இது ஒரு சமயமும், அது ஒரு சமயமும் அவளை ஆட்கொள்ளும். இரண்டிற்குமிடையே நிலையின்றிப் போராடுவாள். ஆனால், வெளிக்கு அந்த மனோயுத்தத்தின் சின்னம் ஏதும் தெரியாது. இப்படியாக நாட்கள் சென்றன.

ஒருவர் மனதை ஒருவர் அறியாமல் உள்ளம் வெதும்பிக் கொண்டிருந்தனர் இவ்விருவரும். இதற்கும் மேலான துன்பத்தை அனுபவித்தான் சாரதி. கடிதம் கிடைத்த சில நாட்களுக்கெல்லாம் அவளுடைய காதல் பிரசாதம் தனக்குக் கிடைக்குமென்று எண்ணி இறுமாந்திருந்தான் சாரதி. ஆனால், கமலா சூழ்ச்சியை அறியாதிருந்தும் இவனை ஏறெடுத்துப் பார்க்கவும் இல்லை. புருஷர்களைக் கண்டாலே ஒரு துவேஷம் வந்துவிட்டது அவளுக்கு. சாரதியின் மனக் கோட்டை இடிந்தது. ஆனால் அவன் அதனால் சற்றும் அதைரியம் அடையவில்லை. வீழ்ந்த கோட்டையைத் திரும்பத் திரும்ப வளர்த்துக்கொண்டே வந்தான். எப்படியும் அவளை அடைந்தே தீருவது என்ற எண்ணம் அவன் சித்தத்தில் உறுதி பெற்றது.

* * *

காலதேவன் கடுகிச் சென்றான். கலாசாலைப் படிப்பு முடிந்தது. திரஸ்கரிக்கப்பட்ட கோபு உள்ளூரில் இருக்க விரும்பாமல் உத்தியோக நிமித்தம் பம்பாய் சென்றுவிட்டான். அவன் சென்ற சில காலத்திற்கெல்லாம் சாரதிக்கு பூனாவில் மிலிடரி அக்கௌண்ட்ஸில் உத்தியோகம் கிடைத்தது; பூனா சென்றான்.

படித்த பையன், பிரம்மசாரி, உத்யோகத்திலிருக்கிறான் என்றால் பெண்ணைப் பெற்றவர்கள் சும்மாவா இருப்பார்கள்? சாரதிக்கு பெண்மேல் பெண்ணாக வந்து குவிந்தது. அவன் தகப்பனார் சில ஜாதகங்களைப் பொறுக்கி சாரதிக்கு அனுப்பினார். ஆனால் இவனுக்கு எப்பொழுதும் கமலாவின் ஸ்மரணை. வெகு நேரம் யோசித்து கடைசியில் ஒரு முடிவிற்கு வந்தான். தான் நேரில் தெரிவிக்க முடியாததை கடிதம் மூலம் தன் தகப்பனாருக்கு அறிவித்தான். முதலில் அவர் சம்மதிக்கவில்லை. கடைசியில் எப்படியோ சமாதானம் அடைந்தார். என்றாலும் தான் நேரில் போய் பெண் கேட்கலாமா? அது இழிவல்லவா? எனவே, மூன்றாம் மனிதர்களின் உதவியை நாடினார். தன் பிள்ளைக்குப் பெண்ணைக் கொடுக்கும்படி கமலாவின் தகப்பனாரைத் தூண்டச் சொன்னார். அந்த மூன்றாம் மனிதர்களும் தங்களாலான உதவியைச் செய்தார்கள். கடைசியில் கமலாவுக்கும் சாரதிக்கும் விவாகம் நிச்சயிக்கப்பட்டது. கமலாவின் அபிப்பிராயம் என்ன என்று கேட்கிறீர்களா? இதில் விருப்புமில்லை; வெறுப்புமில்லை. கோபுவை முதலில் அவள் மனம் நாடியது. ஆனால் அவன் காய் பழுக்குமுன் குண்டாந்தடியால் அடித்துவிட்டானே! இப்பொழுது யாரோ ஒருவர் வந்தாக வேண்டும். அது யாராயிருந்தால்தானென்ன?

கலியாணம் நடந்தது. ஆனால் ஏனோ கமலா உணர்ச்சியற்ற கட்டையாயிருந்தாள்: அவளிடம் மருந்துக்கும் மகிழ்ச்சி என்பது இல்லை. தான் ஒன்று எண்ண, தெய்வமொன்று எண்ணியது துக்கமாக இல்லாமலா இருக்கும்?

கலியாணம் ஆனதும் சாரதி, பின்னர் வந்து கமலாவை அழைத்துச் செல்லும் எண்ணத்துடன் பூனா சென்றுவிட்டான்.

கமலாவை அடைந்த ஆனந்தத்தில் சாரதிக்கு தலைகால் புரியவில்லை. தன் காதலைக் கொட்டி அவளுக்குக் கடிதங்கள் எழுதினான். முதல் கடிதம் கமலாவுக்கு வந்தது. அதைப் பார்த்தாள். அவளுக்கு ஒரு பயங்கர உண்மை வெளியாயிற்று. ஓடோடியும் போய் முன்பொருநாள் தனக்கு வந்த அந்தக் கடிதத்தை எடுத்துப் பார்த்தாள். சந்தேகமேயில்லை, அது சாரதியின் கையெழுத்துத்தான். அவளுக்கு உலகமே சுழன்றது: இது சாரதியின் விஷமம்தான்! ஆனால், ஏனிப்படிச் செய்தான்? காரணம் புரியவில்லை. அவளுடைய கோபம் சாரதியின் பேரில் மூண்டு

வந்தது. ஆனால், என்ன செய்வது? கோபித்துக்கொண்டு என்ன பிரயோசனம்? இப்பொழுது சாரதி அவளுடைய கணவனாயிற்றே?

கமலா தன்னையே நொந்து கொண்டாள். முன்பின் யோசியாமல் கோபுவை வெறுத்ததற்காக இப்பொழுது தன்னையே வெறுத்துக் கொண்டாள். மறுமுறையும் அவளுக்கு உலகம் வேம்பாகியது. ஆனால், என்ன வருந்தித்தான் என்ன பயன்? நிலைமை எல்லை மீறிவிட்டதே?

* * *

இப்பொழுது கமலா சாரதியுடன் குடித்தனம் நடத்துகிறாள். ஆனால் இளம் தம்பதிகள் இருக்கும் வீட்டில் நிலவும் சந்துஷ்டி இல்லை, இன்பம் இல்லை. எப்பொழுதும் தகராறுகள். சிறு சிறு விஷயங்களிலும் கூட இருவருக்கும் மனவேற்றுமைகள். எப்பொழுதும் கமலா 'உம்' மென்று உட்கார்ந்திருப்பாள். சிரித்துப் பேசும் வழக்கமே இல்லை.

அவனே வாழ்க்கையைப் பற்றி நவநவமான எண்ணங்கள் கொண்டவன். சதா இப்படி வாழவேண்டும். அப்படி வாழ வேண்டும் என்று மனக்கோட்டை கட்டுபவன். அவனுக்குச் கமலா அவ்விதம் இருப்பது பிடிக்கவில்லை. அவளுக்கோ சாரதி சொல்வது, செய்வது எல்லாவற்றிலும் ஒரு குற்றம் காணப்பட்டது. சாரதியைப் பார்க்கும் போதெல்லாம் அவன் ஒரு குற்றவாளி என்ற எண்ணம் அவள் மனதில் தோன்றும். சிலசமயம் கோபுவின் அழகான முகம் அவள் அகக் கண்ணில் தோன்றும். பழைய சம்பவங்கள் ஞாபகம் வரும். ஆனால், மறு கணத்தில் தான் அக்கினி சாட்சியாக ஒருவனைக் கைப் பிடித்தவள் என்ற எண்ணம் தோன்ற, கடமையின் முன் காதல் கருகிவிடும். தான் சாரதியிடம் காதல் செலுத்த முடியாமலிருப்பதை உணர்ந்தாள். "என்ன இருந்தாலும், அவன் என்னுடைய கணவன் ......" இந்த ஒரே எண்ணமே அவளுடைய வாழ்க்கைத் தேருக்கு அச்சாக இருந்தது.

சாரதி கவனித்துக்கொண்டே வந்தான். முதலில் அவள்பேரில் அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது. ஆனால், அதை வெளிப்படக் காட்ட முடியவில்லை. அவனுக்குச் செய்யவேண்டிய எந்தக் காரியத்திலும் அவள் குறை வைப்பதில்லை. அவனோடு சல்லாபமாக இருக்கவில்லை என்பதைத் தவிர, வேறு ஒரு குறையும் கூறமுடியாது. நாட்கள் செல்ல, அவன் மனதில் குழப்பம் மிகுந்தது. தான் அவளைக் கலியாணம் செய்துகொண்டதுதான் தவறோ என்ற எண்ணம் உதிக்க ஆரம்பித்தது.

"ஆனால், அதெப்படித் தவறாகும்? நான் காதலித்தவளை மணந்து கொண்டது தவறா? அவளுக்காக எவ்வளவு ஏங்கி இருப்பேன்? அவளை அடைய விரும்பி, அடைந்தது எவ்வாறு தவறாகும்?"

"நீ அவளை விரும்பினாய்! ஆனால், அவள் உன்னை விரும்பினாளோ?"

"அவள் எண்ணம் கோபுவின் பேரில் இருக்கிறது. அதனால் என்னை வெறுக்கிறாளோ? அந்த ஆசையை மாற்றத்தான் அந்தக் கடிதம் எழுதினேனே? ஒருவேளை நான்தான் அதை எழுதினேனென்று தெரிந்திருக்குமோ? தெரிந்திருந்தால் அவள் அப்பொழுது கோபுவை ஏன் அலக்ஷியம் செய்தாள்? என்னை மணக்க எப்படிச் சம்மதித்தாள்? ஆனால், இங்கே பெண்ணின் சம்மதத்தை யார் கேட்கிறார்கள். அவளைக் கேட்காமலே, அவளுடைய சம்மதமில்லாமலே எனக்குக் கலியாணம் செய்து கொடுத்திருப்பார்களோ? அப்படியானால் இதுவரை அந்த விஷயம் தெரிந்ததாகவே அவள் காட்டிக் கொள்ள வில்லையே!"

இதைப்போன்ற எண்ணங்கள் அவனை உலுக்கி, அவன் நிம்மதியைக் குலைக்க ஆரம்பித்தன. தான் அவளை மணந்துகொண்டது தவறுதான் என்று நம்பலானான். ஆனால், கலியாணம் செருப்பா என்ன, கடித்தால் கழட்டி எறிய? தன் தவறின் பலனை அனுபவிக்க நேர்ந்தது. நாளுக்கு நாள் தம்பதிகளுக்குள் இருந்த மனவேற்றுமை பெரிதாகிக் கொண்டே வந்தது. இந்த வேற்றுமை, வாழ்க்கையின் இனிமையை மாற்றிவிட்டது. சாரதி மீள முடியாத குழியில் விழுந்து விட்டான். சில நாட்களாக கமலாவின் முகம் வெளுத்து வருவதை அவன் கவனித்தான். அவன் மனம் எல்லையற்ற வேதனையடைந்தது. ஆயிரம் ஊசிகள் அதே சமயத்தில் அவன் இருதயத்தைக் கிழித்தன. மனவேதனை தாங்கமுடியாமல் கடைசியில் அவளையே கேட்டு விடுவதென்று எண்ணினான். ஆனால், தைரியம் வரவில்லை. இப்படி சில நாட்கள் கழிந்தன.

கடைசியில் ஒருநாள். அன்று அவனுக்குத் தலைவலி. வழக்கத்தை விடச் சற்று சீக்கிரமாகவே ஆபீஸிலிருந்து வந்து விட்டான். கமலா சமையலறையில் ஏதோ வேலையாக இருந்தவள் இவன் வருவதைக் கவனித்து வெளியே வந்தாள்.

"ஏன் இன்று இவ்வளவு சீக்கிரம்?"

"ஏதோ தலைவலி."

"காப்பி கொண்டு வரட்டுமா?"

"உம்" என்ற ஒரு சிறு சப்தம் தான் சாரதியிடமிருந்து வந்தது.

கமலா பேசாமல் திரும்பவும் சமயலறைக்குள் சென்று விட்டாள். சாரதிக்கு யோசனை எங்கெங்கோ ஓடியது. "தலைவலி என்று கூறியும் மேலே ஒன்றும் கூறாமல் போய்விட்டாளே! என்ன அலட்சியம்! ஒருவேளை கோபுவாக இருந்திருந்தால்....." அதை எண்ணும்போதே அவன் மனதில் ஒரு கரகரப்பு தோன்றியது. சரி, இன்று அவளையே நேரில் கேட்டுவிடுவதென்ற தீர்மானத்திற்கு வந்தான்.

சற்று நேரம் கழித்து, கமலா காப்பியுடன் அங்கே வந்தாள். "இதோ, காப்பி, சாப்பிடுங்கோ. நான் இதோ வரேன்" என்று திரும்பினாள்.

"கமலா!" சாரதி கூப்பிட்டான்.

"ஏன்?" என்று கேட்டுக்கொண்டே வெளியே போகக் கிளம்பினவள் திரும்பினாள்.

"உன்னிடம் ஒன்று கேட்க வேண்டும்."

"தாராளமாய்க் கேளுங்களேன். ஏன் இவ்வளவு பீடிகை?" அவன் ஆரம்பிப்பதைக் கண்டு அவள் சற்று பயந்து போனாள்.

"என்னை விவாகம் செய்து கொண்டது உன் மனதிற்குப் பிடித்தமில்லையா?"

அவள் திடுக்கிட்டாள். "ஏன் இந்த அர்த்தமற்ற கேள்வி?" என்றாள்.

"ஆம், அர்த்தமற்ற கேள்விதான். அவளை விவாகம் செய்துகொண்டு இவ்வளவு நாட்களாயிற்று. இப்பொழுது கேட்டால் அதற்கு அர்த்தமேது". சாரதிக்கு தன்னையே குத்திக் காட்டுவதுபோல இருந்தது. தடுமாறிக்கொண்டே, "இல்லை, நான் உனக்குத் தீங்கு செய்து விட்டேன்" " என்றான்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? ஒன்றும் புரியவில்லையே!"

"புரியாமலென்ன, கமலா. நான் உன்னைக் கலியாணம் செய்து கொண்டதுதான். கோபு உன் பேரில் ஆசை வைத்திருந்தான். உனக்கும் இஷ்டம்தான்." இந்த இடத்தில் கமலா பதறிப் போனாள். அவள் உடல் நடுங்கியது. "பயப்படாதே. நான் உன்னைக் குற்றம் கூறவில்லை. நான்தான் உன்னைக் கோபுவுக்குக் காண்பித்தேன். நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று தெரிந்தும், தன்னையும் மீறி உன்னைக் காதலித்தான். அந்த உண்மைக் காதல் எனக்கு விளங்கவில்லை. என் உயிருக்குயிரான நண்பன்தான், என்றாலும் அவன் உன்னைக் காதலித்ததும் நீயும் அப்படியே இருந்ததும் என் பொறாமையைக் கிளறிவிட்டன. உண்மைக் காதலை உணராமல் உங்கள் பிரியத்தைக் கலைத்து விடவேண்டுமென்று பொறாமையால் எண்ணினேன். கோபம் கொள்ளாதே! நான் செய்தது பெரிய தவறுதான். உன்பேரில் எனக்கென்ன உரிமையிருந்தது? ஒன்றுமில்லை. ஆனால், அதை இப்பொழுதுதானே நினைக்கிறேன். அப்பொழுதிருந்த மனோநிலையில் அதை உணர முடியவில்லை. மனித ஜாதிக்கே அது வழக்கமாயிற்றே! தப்பிதம் செய்யும்போது அதைத் தப்பென்று உணருவதில்லை. செய்தபின் எண்ணி வருந்துவதுதான் வழக்கம். நான் மாத்திரம் விதிக்கு விலக்காவது எப்படி? குரோதத்தினால் பல சூழ்ச்சிகள் செய்தேன். கடைசியில் கோபு எழுதினது போல் ஒரு கேவலமான கடிதம் உனக்கு எழுதினேன்" என்று ஒரே மூச்சில் கூறினான். அவள் முகம் உணர்வற்றிருந்தது. அதில் கோபமோ, ஆச்சரியமோ ஏதும் தென்படவில்லை. அவன் நிறுத்தியதும் நிதானமாக, "ஆமாம், அதற்கென்ன இப்பொழுது?" என்றாள்.



"அந்தக் கடிதம் கோபு எழுதினதென்று தானே நீ நினைத்துக் கொண்டிருந்தாய்?"

"இல்லையே"

"அப்படியானால், அதை எழுதியது நான்தானென்று உனக்கு முன்பே தெரியுமா?"

"தெரியாமலென்ன? கலியாணத்திற்கப்புறம் நீங்கள் கடிதம் எழுதினீர்களே, அப்பொழுதே தெரிந்து கொண்டேன்."

"அப்படியானால் நீ ஏன் என்னிடம் அதைப்பற்றிக் கேட்கவில்லை?"

"கேட்டு என்ன பிரயோசனம்?"

"என்னை மன்னித்து விடு, கமலா, அறியாமையினால், காதலின் போக்கை அறியாததனால் இந்தத் தவறு செய்துவிட்டேன். மென்மையான மலரைப் பலவந்தமாகக் கசக்கி முகரப் பார்த்தேன். கசங்கிய புஷ்பத்தில் மணம் கமழவில்லை; அது வாடுகிறது. உன் வாழ்வில் நான் தலையிட்டது தவறு. உன்னை மணந்துகொண்டது மகா பாதகம். ஆனால், காதல் குருடென்பார்கள். நானும் உன் பேரில் கொண்ட காதலால் தான் குருடாகி இந்தத் தவறை இழைத்தேன். நான் உன்பேரில் கொண்டிருந்த அளவிறந்த ஆசை என்னை மற்ற விஷயங்களில், ஏன் உன்னுடைய நலனில் கூட, குருடாக்கி விட்டது. எப்படியும் உன்னை அடைந்தே தீருவதென்றெண்ணி மித்ர துரோகம் செய்தேன். என் பெற்றோரிடம் கூறி நானே முன்வந்து உன்னை விவாகம் செய்துகொண்டேன். அதன் பயன் இன்று நம்மிருவர்

வாழ்க்கையும் நரகமாக இருக்கின்றன. உன்னுடைய குதூகலமும் குறுகுறுப்பும் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டன. சன்யாசினிபோல் பற்றற்று நிற்கிறாய். ஆயினும் உனக்குத்தான் என்ன பொறுமை? இவ்வளவுக்கும் நானல்லவா காரணம்? நான் வலியவந்து உன்னை விவாகம் செய்து கொண்டிராவிட்டால்?"

மேலே பேச முடியாமல் நிறுத்தினான் சாரதி. இந்நாள் வரை எண்ணாத ஒரு விஷயம் கமலாவுக்கு இன்று புலப்பட்டது. தன் பேரில் எவ்வளவு ஆசை கொண்டிருந்தால் அவர் இப்படி எல்லாம் செய்திருப்பார்? தன் உயிரனைய நண்பன், அவனுக்கே துரோகம் செய்து, வெட்கத்தை விட்டு, தானாகக் கேட்டு என்னைக் கலியாணம் செய்துகொள்ள வழி செய்தாரே? என்னை அடைய வேண்டிய அவா எவ்வளவு தூரம் இவர் மனதில் பதிந்திருந்தால் இவரை இவ்வளவும் செய்யத்தூண்டும்? இவரை விவாகம் செய்துகொள்ள நேர்ந்த பின்னும் இதை அறியாமல் எதையோ எண்ணி அசட்டையாக இருந்து விட்டேனே! அவர் மனம் என்ன பாடு பட்டிருக்கும்? அவரை மணந்து கொண்டிருக்கக் கூடாது. கலியாணம் செய்து கொண்டால் பின்பு மனப்பூர்வமான பக்தி செலுத்த வேண்டும். இல்லா விட்டால் என் பெண்மைக்குத்தான் பயனேது? பெருமையேது? ஸ்திரீ தர்மத்தையே அல்லவா அசட்டை செய்துவிட்டேன்!" என்று எண்ணிப் புழுங்கினாள். மனம் விட்டு அவன் எல்லாவற்றையும் கூறியதனாலோ என்னவோ, அவளுடைய பரிதாபம் கிளறப்பட்டது. பெண்மையின் அன்பு மூண்டு எழுந்தது; அதன் இனிமையும் தூண்டிவிடப்பட்டது. "போனதை எண்ணி இருவர் வாழ்வையும் நாசமாக்கிக் கொள்வதில் என்ன லாபம்? அவர்பேரில் குற்றமில்லை. எல்லாம் விதி!" என்றெண்ணலானாள்.

இவள் மௌனம் சாரதியின் பச்சாதாபத்தை மேலும் தூண்டியது.

"கமலா, உணர்ச்சி வசப்பட்டு என்னை மறந்து இத்தவறுகளை இழைத்தேன். உனக்குப் பெரிய தீங்கு செய்தேன். இருந்தாலும் என்னை விட்டுக் கொடுக்காமல் என் மானத்தைக் காப்பாற்றினாய். எண்ணறிய துன்பங்களையும் சகித்துக்கொண்டு வெளியிட்டுக் கூறாமல் மூடிக்கொண்டிருந்தாய். உன் பெண்மையைச் சோபிக்கச் செய்து என்னை கடையன் என்று காட்டி விட்டாய். என்னை மன்னித்து விடு. இனி நீ உன் இஷ்டப்படி இரு. நான் தொந்தரவு செய்ய மாட்டேன்" என்றான். அவன் கண்களில் நீர் பெருகியது.

இதைக் கண்டு பெண்ணினத்திற்கேற்ற பெருமிதத்துடன் கலீரென்று சிரித்தாள் கமலா.

"நன்றாயிருக்கிறது நீங்கள் பேசுவது. எல்லாம் ராஜா வந்தால் சரியாய்ப் போகும்" என்று அவன் பக்கத்தில் வந்தாள்.

"என்ன? ராஜாவா, யாரது?" என்றான் திகைப்புடன். அவள் கோபம் கொள்வாள் என்று எண்ணினது போக அவள் சிரித்தது அவனைப் பிரமிக்கச் செய்தது.

அவள் முகத்தில் நாணம் கலந்த புன்னகை தென்பட்டது. வாய் திறக்காமல் எதிரே யிருந்த ஒரு படத்தைச் சுட்டிக் காண்பித்தாள்; அது தவழ்ந்து விளையாடும் ஒரு குழந்தையின் படம். சற்று நேரம் சென்று தான் விளங்கியது. அப்பொழுதுதான் அவள் உடல் வெளுத்திருப்பதின் காரணமும் அவனுக்கு விளங்கியது.

"நிஜமாகவா?" சாரதி எழுந்து அவள் முகத்தை நிமிர்த்தினான். 'குப்' பென்று சிவந்த அவள் முகத்தின் ஜோதியில் அவர்கள் வாழ்வைக் கப்பியிருந்த கன இருள் அகன்றதுபோல் தென்பட்டது.

சாரதி தன் விவாக தினத்தன்று போல் மனமகிழ்ந்து அகம் நெகிழ்ந்தான்.



# அங்கம்மா

ஜி. சதாசிவம்

ஊருக்குக் கிழக்கே ஒதுக்குப் புறமான அந்த மைதானத்தில் தம்பங் கூத்தாடிகள் கூடாரம் போட்டிருந்தார்கள். அதில் நாட்டப்பட்டிருந்த 'கழை'யை அண்ணாந்து பார்ப்பதற்கே பயமாயிருந்தது. அந்தக் கூத்தாடிச்சி அங்கம்மா அதன் உச்சியில் ஒரு வீரனைப்போல, உலகத்திற்கே சவால் விடுவதைப்போல நின்றுகொண்டு விளையாடப் போகிறாள் என்று எண்ணுகையிலேயே நம் மனம் திடுக்கிடுகிறது. கால்கள் நடுங்குகின்றன. ஆனால் அவளோ உயிரைத் துச்சமாக எண்ணி எவ்வளவு ஒய்யாரமாக அதிலே நி விளையாடுகிறாள்! வயிற்றுப் பிழைப்புக்காக தன் உயிரைக்கூட லக்ஷியம் செய்யவில்லை. அவள் அதிலிருந்து தலை கிழர்க விழுந்து விட்டால் எலும்பைப் பொறுக்கவேண்டியதுதான் என்பதை எண்ணும்போதே நமக்குக் குலை நடுங்குகிறது. ஆனால் அவள் அப்படி பயப்படுகிறாளா? தான் அந்தக் கம்பத்தில் ஏறும்பொழுது விழுந்து விடுவோமோ என்ற எண்ணமே அவளுக்கு ஏற்படுவதாகத் தெரியவில்லை. அதற்கு நேர் மாறாக அவ்வளவு உயரத்திலிருந்து, தலை கிழாகத் தொங்குவதில் அவளுக்குத்தான் எவ்வளவு பெருமையும், மகிழ்ச்சியும் ஏற்படுகிறது! கழைக்கூத்தாடிதான் அவள் தந்தை. அவன் கூட்டத்திற்கும், குடும்பத்திற்கும் தலைவன். தலைவனின் முரசொலி அவளுடைய பயத்தைப் போக்கி தைரியத்தையும், ஊக்கத்தையும் ஊட்டுகிறது. அப்படி அடிக்கிறான் அவன்.

அந்தக் கூத்தாடிக் கும்பலில் மொத்தம் ஆறு பேர்கள். அங்கம்மாவைத்தவிர மற்றவர் ஆண்கள். அதில் மூவர் அங்கம்மாவின் சகோதரர்கள். கிராமம் கிராமமாகச் சென்று கூடாரம் போட்டு தங்கள் வித்தைகளைக் காட்டி, கிடைப்பதைக்கொண்டு திருப்தியுடன் காலங் கடத்திவந்தார்கள். அவர்களுடைய வாழ்விலே அவர்களுக்குச் சலிப்பு ஏற்படுவதில்லை. அவர்கள் முகத்திலே வீரமும், தெளிவும் விளங்கின. ஒரு கிராமத்திலே கூடாரம் போட்டதும் ஊரிலுள்ள பெரிய மனிதர்களைப் போய்க் கண்டு, கும்பிட்டு, "எஜமானுங்க உத்திரவு கொடுக்கணும்" என்று கேட்பார்கள். அவர்களிடமெல்லாம் பெருமையும், பொருளும் பெற்றுக்கொண்டுதான் அந்தக் கிராமத்தை விட்டுக் கிளம்பிப் போவார்கள்.

அந்தக் கும்பலில், அதோ நிற்கிறாளே, சண்டைக்குப் போகத் தயாராயிருப்பவளைப் போல சேலையை வரிந்து கட்டிக் கொண்டு, அவளைப் பாருங்கள்! அவளுடைய உடம்பில்தான் எவ்வளவு 'வலு' இருக்கிறது. கருங்கல் போன்ற உறுதியான உடம்பு. தேக்கு மரத்தைப் போன்ற பளபளப்பான தேகம். காதுகளிலே எண்ணெய் ஏறிய கம்மல்கள் மங்கலாக ஜொலிக்கின்றன. அடர்ந்த கூந்தலை நேராக நன்றாக இழுத்து வாரி, இறுகலாக் கொண்டை போட்டிருக்கிறாள். கையிலே தினுசு தினுசாக பச்சை குத்திக்கொண்டிருக்கிறாள். அவள் நடப்பதைப் பார்த்தால் ஒரு போர்வீரனுடைய நடை அதற்கு ஈடாகுமா வென்றே தோன்றுகிறது. வீரனுடைய நடையில் வீரம் மட்டுமேயிருக்கும். அவளுடைய அன்ன நடையிலோ வீரமும், தளுக்கும், ஒய்யாரமும் ஒருங்கே அமைந்திருந்தது. அவள் நடக்கும் போது, எப்பொழுதோ வாங்கி ஒளி குன்றிய கால்சிலம்புகள் அவளுடைய நடைக்குத் தக்கபடி தாளம் போட்டன.

அவள் பெயர், அவள் தந்தையான அந்தக் கழைக்கூத்தாடியானவன் வாய் நிறைய அன்புடன் அழைப்பதுபோல, அங்கம்மாதான். "உன் பெயர் என்ன?" என்று அவளை நெருங்கி யாரும் கேட்க முடியாதுபோல் இருக்கிறது. அவளுடைய வாய்த்துடுக்கைப் பார்த்தால்தான் பயமாயிருக்கிறதே! 'குறுகுறு' வென்று பார்க்கும் அந்தப் பார்வைதான் நம்மைப் பின்னடையச் செய்கிறதே!

அதோ வித்தைகள் ஆரம்பமாகிவிட்டன. கழைக்கூத்தாடி அடிக்கும் முரசின் ஒலி நாலா பக்கத்திலிருந்தும் எதிரொலிக்கிறது.

"ஏ......அங்கம்மா"

"ஏ......ன்"

"இந்தக் கிராம தேவதையை நினைச்சு"

"ஆ......" என்று அடுக்கி நீட்டுகிறான் கிழவன். அவளும் பதில் நீட்டி முழக்குகிறாள். அவர்களுடைய பேச்சில் ஒரு ராகம், இழுப்பு, ஏற்றம், இறக்கம், நடுநடுவில் 'டம டம்' வென்ற முரசொலி இவ்வளவும் கலந்து அந்த சம்பாஷணைக்கே ஒரு கவர்ச்சியைக் கொடுக்கின்றன.

தரையில் செய்யும் வித்தைகள் முடிந்ததும் அங்கம்மா, கால்களையும் கைகளையும் நிலத்தில் ஒரு தேய்ப்புத் தேய்த்துக் கொண்டு கைகளைத் தட்டி உதறிக்கொண்டு வரிந்து கட்டியுள்ள சேலை அப்படியேயிருக்கிறதாவெனப் பார்த்து, கூடியிருக்கும் கூட்டத்தாருக்கு ஒரு பெரிய கும்பிடு போட்டு விட்டு, கம்பத்தை இடது கையால் பிடித்து ஒரு உலுக்கு

உலுக்கி, வலது கையை இடுப்பில் வைத்துக் கொண்டு 'கழை'யை அண்ணாந்து பார்க்கிறாள். திரும்பி கூத்தாடிகளுடன் முகம் செத்து நின்று கொண்டிருக்கும் அந்த வாலிபக் காளையைப் புன் முறுவலுடன் நோக்குகிறாள். அவளுடைய பார்வையிலிருக்கும் கம்பீரம் அந்த வாலிபனின் சோர்ந்த முகத்தை சிறிது பிரகாசப் படுத்துகிறது. அவள் கம்பத்தின் மேலே ஏறுகிறாள். அப்பொழுது தான் மற்ற கூத்தாடிகள் மிகவும் கவனத்துடன் அவளையேநோக்குகின்றார்கள். கூடியிருக்கும் ஜனங்களும் வாய் திறந்து வைத்த கண் வாங்காது பார்க்கின்றனர்.

அவள் கம்பத்தின் உச்சியை அடைந்து விட்டாள். தலை கீழாக நிற்கிறாள். ஊஞ்சல் ஆடுகிறாள் அந்தக் 'கழை'யிலே. ஐயையோ, விழுந்து விடப் போகிறாளே! என்று தான் எல்லோருடைய மனதிலும் பயமும் பரிதாபமும் கலந்து நிற்கிறது. அந்த பதினெட்டே வயதான மங்கை, அப்படிக் கூசாமல், யோசியாமல், அலக்ஷியமாக, ஒய்யாரமாக அவ்வளவு உயரத்தில் ஊஞ்சலாடுகிறாள் ஒரு தேவ கன்னிகையைப் போல்.

கும்பலிலுள்ள எல்லாத் தலைகளும் அண்ணாந்து நிற்கின்றன.

அவளுடைய காந்தம் எல்லோரையும் அப்படிப் பிடித்து இழுத்து வைத்துக் கொண்டிருக்கிறது. இந்த சமயத்தில் மற்ற கூத்தாடிகளின் நடுவில் வச்சிர சரீரம் படைத்த, 'லங்கோடு' கட்டிக் கொண்டு நிற்கும் அந்த வாலிபன் மட்டும் யாருக்குமில்லாத அவ்வளவு பயமும் திகிலுங் கொண்டு, வைத்த கண் வாங்காது அவளையே பார்ப்பானேன்? மற்ற யாருக்குமே, அவள் தங்கைக்குக் கூட ஏற்படாத குழப்பம் அவன் மனதிலேற்பட்டிருந்ததென்பதை அவனுடைய பீதியடைந்த முகம் நன்றாக எடுத்துக் காட்டிற்று. கூர்மையாக அண்ணாந்து பார்த்தபடி அடிக்கடி, "ஜாக்கிரதை, ஜா க் கி ர தை" என்று எச்சரித்துக்கொண்டிருக்கிறான்.

அவள் 'கழை' மீது ஆட்டமெல்லாம் முடிந்து 'சர்...' என்று, வேகமாகத் தரையை நோக்கி வரும் நீர் விழ்ச்சியைப் போல, நக்ஷத்திரம் பாய்ந்து உதிர்வதைப் போல கம்பத்தின் வழியே தலை கீழாக இறங்குகிறாள். அவள் கம்பத்தில் தொங்குகையில் அவன் மனம் அறுபட்டுத் தொங்குவதைப் போலத் துடிக்கிறது. அவள் தரையை அடைந்தவுடன் அவனுக்குத் திடீரென்று ஒரு மகிழ்ச்சி, பூரிப்பு, புன்னகை. அவள் எவ்வித ஆபத்துமின்றி தரையை அடைந்ததைக் கண்டு ஒரு பெருமூச்சு, மனதில் உழன்றுகொண்டிருந்த பயங்கரத் திகிலையெல்லாம் உதறித்தள்ளிக்கொண்டு வெளியேறுகிறது. அவள் அந்த வாலிபனைப் பார்க்கிறாள். அந்தக் கனிவுப் பார்வையில்தான் எத்தகைய உணர்ச்சிகள்! அவனும் பார்க்கிறான். உலகையே வென்று ஏகச் சக்கரவர்த்தினியான எண்ணத்துடன் கூடிய ஒரு வெற்றிப் புன்னகை அவளிடமிருந்து வெளிப்படுகிறது.

கடைசியில் ஒரு நீண்ட பேரிரைச்சலுடன் கூடிய வெற்றி முரசுக் கொட்டு. சுபமாக ஆட்டம் முடிவடைந்தது என்று குதூகலத்துடன் அடிக்கிறான் தலைவன். கூட்டம் அங்கம்மாவின் வித்தைகளை வியந்து புகழ்ந்தபடியே கலைந்து போகிறது.



அந்த வாலிபன் பரம்பரைக் கூத்தாடியல்ல. அவன் பெயர் கருப்பண்ணன். பாதி வாழ்க்கையில் கூத்தாடியானான். அதற்கு முன் ஒரு விவசாயியாயிருந்தான். தாலி கட்டி மணந்த மனைவி ஒருத்தி அவனுக்கு இருந்தாள். இந்த அங்கம்மா கூட்டத்தார் நான்கு வருஷங்களுக்கு முன்பு அவனுடைய கிராமத்தில் கூடாரம் போட்டு, தங்கள் வித்தைகளைக் காட்டி வந்தார்கள். உயர்ந்த கம்பத்திலிருந்து அவள் ஆடிய ஆட்டங்களில் அவன் லயித்து மயங்கிவிட்டான் அவளிடம். அப்பொழுது அவளுக்கு வயது பதினான்கு. நாகரீக அலங்காரம் எதுவும் கிடையாது. அவளுடைய இறுகிய தேகக் கட்டும், அதில் மிளிர்ந்து நின்ற காந்தியும் கருப்பண்ணனைப் பித்தனாக்கி விட்டன. அவளுடன் நெருங்கிப் பழகலானான். கருப்பண்ணன் அந்தப் பக்கத்துக்கே ஒரு பெரிய 'பயில்வான்!'. அவள் யாருடனும் சங்கோசமின்றிப் பேசுவாள். அந்த விஷயத்தில் அவள் பெண்மை குணம் படைத்தவளல்ல. ஆண்மகனின் பிரதிபிம்பம். அவளும் மற்றவர்களிடம் பேசுவதை விட கருப்பண்ணனிடம் நெருங்கிப் பேசுவதில் ஒரு சொல்ல முடியாத இன்பத்தைக் கண்டாள்.

அவளுடன் பழக்கமானதிலிருந்து அவனுக்கு ஊணும் உறக்கமும் போய்விட்டது. எந்த நேரமும் அந்தக் கும்பலிலேயேயிருந்தான். அங்கம்மாவுடன் ஆனந்தமாகப் பேசிப்பேசிப் பொழுதைப் போக்கினான். அவர்கள் அவ்வூரிலிருந்தவரை அவன் தன் வேலையை அடியோடு மறந்து போனான். உழவுக்குப் போக வேண்டிய மாடுகள் வீட்டிலே கொட்டிலோடு கொட்டிலாக அசை போட்டுக்கொண்டு படுத்துக் கிடந்தன. மனைவி பேசினால் எறிந்து விழுந்தான். சதா காலமும் அங்கம்மா அவன் மனதில் புகுந்துகொண்டு அவனை வாதை

செய்தாள். தன் நிலைமை, தான் இருக்கவேண்டிய முறை, அவளுடைய குலம் தொழில் யாவற்றையும், அவள்மீது அவனுக்கிருந்த அளவற்ற ஆசையில், மறந்தான்.

கூத்தாடிகள் அந்த கிராமத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய் விட்டார்கள். அங்கம்மாவுக்கு அவனைப்பிரிந்துபோக மனமில்லை தான். ஆனால் வயிறு ஒன்றிருக்கிறதே! கருப்பண்ணனின் உள்ளத்திலே ஒரு வரட்சி; ஒரு பயங்கரப் புயல். "உன் வாழ்வு கெடும்" அவளை மறந்துவிடு" என்று அவன் மனச்சாட்சி அடிக்கடி இடித்துக் காட்டிக்கொண்டிருந்தது. அவன் எதையோ இழந்துவிட்டவன்போல தவியாய்த் தவித்தான். ஏதோ ஒரு பெரிய நீங்காத குறை அவனை உறுத்திக்கொண்டிருப்பதாக உணர்ந்தான். அவனால் அங்கம்மாளைப் பிரிந்திருக்க முடியவில்லை. அவளில்லாத வாழ்க்கை சூன்யமாகப் பட்டது அவனுக்கு. அவளுடைய மானஸீக உருவம் அவனை "வா" என்று அன்புடன் அழைத்தது. அந்த அழைப்பு ஒருபுறம், அவன் மனைவியின் பரிதாபகரமான அழுகுரல் ஒரு பக்கம் அவன் மனதைப் புரட்டிப் புரட்டித்தாக்கின.

பக்கத்துக் கிராமத்தில் அவள் ஆட்டம் நடப்பதைக் கேள்விப்பட்டான். தன் மனைவி துக்கத்தை மறந்து தூங்கும் சமயம் ஒன்றும் யோசியாமல் வீட்டை விட்டுக் கிளம்பிவிட்டான். ஆம், அவளிடந்தான். அது முதல் அவன் அங்கம்மாளைவிட்டுப் பிரியவில்லை. "கூத்தாடி வேலையெல்லாம் பழகிக்கொண்டால்தான் நாம் 'சேர்ந்து'கொள்ள முடியும்" என்று அவள் சொன்னாள். அவனும் மிகவும் கஷ்டப்பட்டு எல்லா வித்தைகளையும் கற்றுக்கொண்டு கூத்தாடியாகிவிட்டான்.

எவ்வளவோ முறைகள் அவனுடைய மனைவியும், சுற்றத்தார்களும் வந்து தங்களுடன் வந்துவிடும்படி கேட்டார்கள். அதெல்லாம் வீண் முயற்சியாகிவிட்டது. அவன் மனதைத் திருப்ப முடியவில்லை. அந்தப் 'புயல்' அவனை அவனுடைய மனிதர்களிடமிருந்து அடித்துக்கொண்டு வந்துவிட்டது. சில காலத்திற்குப் பிறகு அவனுடைய மனிதர்கள் அவனைத் தங்கள் சாதியை விட்டு விலக்கியதோடு அவனைப் பற்றியே மறந்து போனார்கள். ஆனால் அவன் அதற்காகக் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை.

இப்பொழுது அங்கம்மாளும் அவனும் ஊருராகச் சுற்றும் ஜோடி; காதல் கனிகள். காட்டிலும், மேட்டிலும், வெய்யிலிலும், மழையிலும் இன்பத்தையும் துன்பத்தையும் பகிர்ந்துகொண்டார்கள். அவள் கம்பத்தின் உச்சியில் ஏறி நின்று, ஆட்டம் ஆடி இறங்கும் வரைக்கும் அவன் உயிர் அவனிடம் இருக்காது. அப்படித் துடிக்கும் அவன் உள்ளம். மற்ற சமயங்களில் தாங்கள் சுவர்க்கத்திலிருப்பதாகவே அவர்கள் எண்ணம்.


இண்டோ கமர்ஷியல் பாங்க்
லிமிடெட்
ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்.....மாயவரம்
ஸெண்ட்ரல் ஆபீஸ்.....மதராஸ்..
R.B.S.

# வாழ்வின் வெற்றி

சம்பத்

உச்சிவேளை. நிழல் செறிந்த அந்தச் சாலை வழியாக ஒரு யாத்ரிகர் கூட்டம் வந்துகொண்டிருந்தது. கௌதமனும் அவர்களில் ஒருவன். அவன் அந்தக் கூட்டத்தில் சேர்ந்தது ஒரு விசித்ரம். கௌதமன் வாழ்க்கையில் அதிகம் அடிப்பட்டவன். பலவிதமான இன்னல்களுக்கும் பாத்திரமாகிவந்தவன். சில காலமாக அவன் மனம் மரணத்தை நாடியது. மனம் இச்சை கொள்ளும் எதையும் வெல்ல வேண்டுமென்பது அவன் நோக்கம். எனவே மரணத்தை வெல்லும் வழியைத் தேடி அலைந்துகொண்டிருந்தான். அப்பொழுது இந்த யாத்ரீகர் கூட்டம் கிளம்பவே, இவர்களுடன் செல்லும் வழியில் எங்காவது தன் எண்ணம் ஈடேறுமோவென்ற சபலத்தால் அவர்களுடன் கூடிக்கொண்டு புண்ய ஸ்தலங்களைத் தரிசிக்கப் புறப்பட்டான்.

நாமாவளிகள் பாடிக்கொண்டு நகர்ந்து சென்றது அக்கூட்டம். சற்று தூரத்தில் அந்தப் பாதையில் இடது புறமாக ஒரு கிளை பிரிந்தது. இதுவரை கூட்டத்தோடு ஒத்து வந்த கௌதமன் பின் தங்கலானான். "இந்தக் கூட்டம் முழுவதும் ஓர் வழியே செல்கிறது. நானும் ஏன் அதே வழியில் செல்ல வேண்டும். உலகத்தில் ஒருவன் செய்கிறான் என்பதற்காக நாமும் அதே காரியத்தை ஏன் செய்யவேண்டும்? அவனவன் மனத்திற்கு படும் உண்மையை அல்லவா கடைப்பிடிக்க வேண்டும். நான் வேறு மார்க்கமாகச் சென்றாலென்ன?" என்றெண்ணி சட்டென இடதுபக்கம் திரும்பும் பாதையில் செல்லத் தலைப் பட்டான். மற்றவர்கள் இவன் பிரிந்து செல்வதைக் கவனித்து "கௌதமா, வழி இந்தப் பக்கம் இருக்கிறது. இப்படிவா" என்று கூப்பிட்டனர். ஆனால், தனிமை மனப்பான்மை கொண்ட கௌதமன் அவர்களை லக்ஷியம் செய்யாமல் தன் வழியே செல்லலானான்.

பலவிதமான எண்ணங்களுடன் கௌதமன் சென்றுகொண்டிருந்தான். அவன் செல்லச் செல்ல முன்பின் அறியாத இடமாக வந்துகொண்டே இருந்தது. கருத்தைக் கவரும் வனப்பு வாய்ந்த பிரதேசங்கள். அவைகளின் எழிலில் மயங்கி ஈடுபட்டு கௌதமன் சென்றான்.

திடீரென்று கண்ணுக்கெட்டிய தூரம் வரை விரிந்திருந்த ஒரு பரந்த வெளிவந்தது. அவன் நிழல்கள் நீண்டு எப்பக்கமும் விழலாயின. முதலில் சற்று சிரமம் தோன்றியது. ஆனால் அதை அலக்ஷியம் செய்து மேலே போய்க் கொண்டே இருந்தான். அவனை அறியாமலே அந்தப் பாலைவனம் கடந்து விட்டது. அந்தி மங்கும் நேரத்தில் அழகானதொரு சோலையின் நடுவில் அமைந்திருந்த ஒரு குடிலை அடைந்தான். அக்குடிலின் வாயிலில் ஒரு கிழவன் உட்கார்ந்திருந்தான்; மிகவும் வயது சென்றவன் நரைத்த தலை, நல்ல அனுபவத்தைக் காட்டும் தெளிவான முகம்; எதையோ தொடர்ந்து ஆலோசிப்பவன் போல் எதிரேயிருந்த சூன்யத்தை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். கௌதமன் அண்டையில் வந்ததும், ஏனென்று கேட்பவன் போல் ஏறிட்டுப் பார்த்தான். அவன் முகத்தைக் கண்டதும் கௌதமனுக்கு என்ன தோன்றியதோ என்னவோ, தன் மனத்தில் வெகு நாளாக ஊறியிருந்த ஆவலை பூர்த்தி செய்துகொள்ள முடியும் என்ற நம்பிக்கை தோன்றியது, அவர்களிடையே சம்பாஷணை ஆரம்பித்தது; சற்று நேரத்தில் கௌதமன்,

"பெரியவரே, நான்மரணத்தை வெல்லவேண்டும்: அதற்கு வழி என்ன?" என்றான்.

"ஏதப்பா, உனக்கு ஏன் இந்த அபூர்வ ஆசை-"

"என் மனது மரணத்தையே விரும்பி அதைப் பற்றியே எண்ணிக்கொண்டிருக்கிறது. அதனால்தான் அதை வெல்ல வழி தேடுகிறேன்."

"ஓஹோ! பொன்னாசையைத் துறந்தாயோ?"

"துறந்துவிட்டேன்."

"புகழ் வேண்டுமென்று நினைக்கிறாயோ?"

"புகழில் எனக்குப் பற்றில்லை."

"ஒரு வேளை பெண்ணிச்சையாவது இருக்கும்!"

"அதுவும் கிடையாது, ஸ்வாமி!"

"இம் மூன்றையும் எப்படித் துறந்தாய்?"

"எல்லாம் சம்சயத்தினால் தான்."

"அதெப்படி!" என்று அவ்வயோதிகன் கேட்டதுதான் தாமதம், கௌதமன் தன் வாழ்க்கை சரிதத்தை ஒப்புவிக்க ஆரம்பித்துவிட்டான்.

“நான் என் வாலிபத்தில் வியாபாரம் செய்வதில் ஈடுபட்டிருந்தேன். முதலில் என் வருமானம் சிறிதளவே இருந்தது. என் ஊக்கத்தாலும் ஆர்வத்தாலும் அதை விருத்தி செய்ய முற்பட்டேன். பணத்தை ஏராளமாகச் சேர்த்து வைக்கவேண்டுமென்ற ஆசை என்னுள் ஓங்கி வளர்ந்தது. காசோடு காசாகக் கணக்கு பார்த்துச் சேர்க்கலானேன். என் தனம் விருத்தியடைந்தது. அது மட்டுமா, என் கவலைகளும் அதனுடன் சேர்ந்தே வளர்ச்சி பெற்றன. நாளுக்கு நாள் விசாரம் மேலிட்டுக் கொண்டிருந்தது. சேரும் தனத்தைக் கள்வர்களிடமிருந்தும் மற்றும் விரயங்களிலிருந்தும் காப்பாற்ற வேண்டும்! இதைச் செய்வது எப்படி? சதா இதுவே என்னுடைய சிந்தனை. இரவு பகல் தூக்கம் கிடையாது. கவலை, கணக்கிலடங்காமல் போகவே, என் தனத்தை மற்றொரு வணிகனிடம் பாதுகாப்புக்காகக் கொடுத்து வைத்தேன். அது என்னிடமிருந்த பொழுது கூட அதைப் பிறன் பொருளைப் போலவே பாவிப்பேன். அதில் சிறிதும் எடுத்து உபயோகிக்க மாட்டேன். அது மேலும் மேலும் வர வேண்டும் என்பதே என் நோக்கம். தவிர, அது எதற்காக என்று நான் எண்ணியதும் இல்லை. என்னுடையதல்லவென்று பாவித்து வளர்க்கப்பட்ட அந்தப் பொற்குவியல் ஒருநாள் என்னுடையதல்லாததாகவேபோய்விட்டது. கடன்காரனாகிவிட்ட அந்த வணிகன் என் பொருளை உபயோகித்து விட்டு எங்கோ மறைந்து விட்டான். ஐயோ, ரத்தத் துளிகள்போல் அரும்பாடு பட்டுச் சேர்த்த அந்தத் திரவியம் முழுவதும் அநியாயமாய் போய்விட்டது.

இதை யறிந்த என் மனம் எப்படித் துடித்திருக்கும் என்று வாயால் கூறமுடியாது. அன்ன பானம் உள்ளே செல்லவில்லை. கண் இமையோடு இமை சேரவில்லை. தற்கொலை செய்து கொள்ளலாமா என்று கூடத் தோன்றியது. பைத்தியம் பிடித்துவிடும்போல் ஆய்விட்டது. படுக்கை கொள்ளாமல் இரவு பூராவும் அங்கும் இங்கும் அலைந்தே கழித்தேன்.

மறுநாள் காலை வீட்டு வாயிலில் நின்றுகொண்டிருந்தேன். பிச்சைக்காரன் ஒருவன் பிச்சை வேண்டி என் வீட்டின் முன் வந்து நின்றான். அவனைக் கண்டதும் என் ஆத்திரம் எல்லை மீறியது. “என்னுடைய சர்வ சொத்தும்தான் போய்விட்டதே? இன்னுமா என்னிடம் பிச்சை கேட்க வருகிறாய்?” என்று கத்திவிட்டேன். என் குரலைக் கேட்டு பிச்சைக்காரன் நிமிர்ந்து பார்த்தான். அவன் பார்வையில் இரக்கம் தோன்றியது. திடீரென்று தன் ஓட்டிலிருந்த அரிசியில் பாதியை என்னிடம் எடுத்துக் கொடுத்தான். நான் ஒன்றும் புரியாமல் விழிப்பதைக் கண்டு, “உன் பசியைத் தணித்துக்கொள்” என்றான். நான் வெட்கித் தலை குனிந்தேன்.

“உண்ணவும் உடுக்கவும் போதுமானது இருக்கிறது. நான் அதிகப்படியாக சேர்த்து வைத்திருந்த தனம் தான் போய்விட்டது” என்றேன்.

அதைக் கேட்டு அவன் ஏளனச் சிரிப்புடன் வெளியே செல்லத் திரும்பினான். திரும்பினவன் மறுபடியும் என்னைப் பார்த்து, “ஏழ்மையில் இருக்கும் இன்பம் ஏராளமானது. அறிந்தார்க்கே அதன் சுவை தெரியும்” என்று சொல்லிச் சென்றான்.

அவன் சென்றதும், நான் சிந்தனையில் மூழ்கினேன். “இதுவரை நான் நடத்திய வாழ்க்கை சரியானதா? தர்மப் பாதையில் தான் இதுவரை ஒழுகி வந்தேனா? ஒரு ஏழை, பிச்சைக்காரன் அன்றாடம் காய்ச்சி தன்னுடைய உணவைப் பகிர்ந்து கொள்ள மனமுவந்து முன் வருகிறான். ஆனால் நான்? பணக்காரனாயிருந்தாலும் இதுவரை எள்ளளவு ஈகைக்கும் என் மனம் சம்மதித்ததில்லை. எறும்பு அரிசி சேர்ப்பதுபோல் சேர்த்துச் சேர்த்து வைத்தேன். இருக்கிறது இருக்கிறது என்றெண்ணி சந்தோஷமடைந்து வந்தேன். இன்றோ, எல்லாம் போய்விட்டன. பணக்காரன் என்ற சொல் எனக்கொவ்வாது, நான் சாதாரண மனிதன்தான். ஆனால், பணம் இருந்த போது மட்டும், பணக்காரன் என்ற சொல்லுக்கேற்ப நடந்து வந்தேனா? இன்று இருப்பது போல்தானே அன்றும் இருந்தேன். ஏழையைப் போல் குறைந்த வசதிகளுடன் தானே அப்பொழுதும் வாழ்ந்து வந்தேன். எங்கு செலவழிந்துவிடுமோ என்ற பயத்தில் அதைப் பிறன் சொத்துபோல் பாவித்துத்தானே வைத்திருந்தேன். நம்மிடமே இருந்தால் அது செலவழியுமோ என்று அஞ்சி அந்த வணிகனிடம் கொடுத்து வைத்திருந்தேன். எனக்கு உபயோகப்படாமல் என்



னுடையது என்ற பெயருடன் மட்டும் பிறன் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த அந்தப் பொருள் நஷ்டமாகிவிட்டால் அது என்னை எந்த விதத்தில் பாதிக்கப் போகிறது. என் வாழ்க்கை நிலை அப்படியேதானே இருக்கிறது. இதற்காக மனதைக் குழப்பி வீண் கலக்கங்களுக்கு இடம் கொடுப்பானேன்.''

அதுபோன்ற எண்ணங்கள் என் மனதில் அமைதியைப் பரப்பின. சிறிது காலத்தில், மறுபடியும் சிறிய முறையில் ஒரு வியாபாரத்தைத் தொடங்கினேன். உழைப்பிற்கேற்ற ஊதியம் வந்து கொண்டிருந்தது. நாட்கள் செல்ல, மறுபடியும் ஒரு சங்கை என் உள்ளத்தே எழலாயிற்று. முன்பு பட்டு அனுபவித்த மனமல்லவா? ''இப்பொழுது இருக்கும் உடமைகளும் ஒரு நாள் கைதவறுவதாக வைத்துக்கொள்ளுவோம். அப்பொழுது, முன்னிலும் அதிகமாகவல்லவா மனக்கசப்பு ஏற்படும். ஏதோ ஒரு பொருள் நம்மிடம் இருப்பதாக எண்ணிக் கொண்டிருந்தால்தானே, அது நம்மிடமிருந்து பிரியும்போது துன்பம் உண்டாகிறது? நம் பொருளையெல்லாம் நாமே துறந்துவிட்டால், செல்வத்தின் கடைசிப் படிக்கு நாமே போய்ச் சேர்ந்தால், இனி ஒன்றையும் நம்மிடமிருந்து பறிக்க முடியாது என்ற எளிய நிலையை நாமே ஏற்படுத்திக்கொண்டு விட்டால், அப்போது இந்த மாதிரி துன்பங்களும் மனமுறிவுகளும் வாழ்க்கையில் ஏற்படாதல்லவா?''

இம்மாதிரி மனோவாதங்களின் பயனாக என் மனம் சர்வத்தையும் துறந்துவிட நிச்சயம் கொண்டது. எல்லாவற்றையுமே விட்டு நகருக்கு வெளியில் ஒரு குடிசை போட்டுக் கொண்டு வேதாந்த விசாரணைகளில் ஈடுபடலானேன். என் துறவி வாழ்க்கையும், வேத ஆராய்ச்சியும் ஜனங்களுக்கு என்பால் ஒரு கவர்ச்சி, ஒரு பக்தியைத் தந்தன. இதையறிந்த நான் என் வாழ்க்கை வரம்புகளை இன்னும் கடுமையாக்கிக் கொண்டு, இருமடங்கு ஊக்கத்துடன் வேதாகமங்களைப் படிக்கலானேன். நாளடைவில் என் ஞானம் விருத்தியடைந்தது. அந்தப் பக்கங்களில் அறிவில் என்னை மிஞ்சவோ, தர்க்கத்தில் என்னை வெல்லவோ ஆள் இல்லை. என் முதிர்ந்த அறிவின் அடையாளமாக என் இடுப்பைச் சுற்றி ஒரு இரும்பு வளையம் அணியும் கௌரவத்தைப் பெற்றேன். என் புகழ் எட்டெட்டுத் திக்கும் பரவியது. நாட்கள் சென்றன. இதற்கும் ஒரு இறுதிவைக்க எண்ணினான்போலும் ஈசன். வெளி நாட்டு அறிஞன் ஒருவன் இந்த நாட்டைத் தேடிவந்தான். அவன் அறிவிலும் தர்க்கத்திலும் சிறந்தவன் என்று பேசிக்கொண்டனர். அவன் எங்கள் நகரில் தங்கியிருந்த காலையில் எனக்கும் அவனுக்கும் ஓர் விவாதம் ஏற்பாடு செய்யப்பட்டது. நான் என் அறிவில் தீவிர நம்பிக்கையுடன்தான் சென்றேன். அவனும் ஒரு சிறந்த அறிவாளி என்பது விவாதத்தின் போது புலனாயிற்று. வாதம் பலத்துக்கொண்டே வந்தது. நடுவில் 'ப்ரம்மத்தின் உயர்ந்த ஸ்தானம் எது?' என்ற பிரச்னை எழுந்தது. வாதம் பிரதிவாதம் என்று போய்க்கொண்டிருந்தது. அந்தப் பண்டிதனுக்கு பதிலுரைக்கையில் என் விடைகளாலும், என் வார்த்தைகளாலும நான் எக்கச்சக்கத்தில் மாட்டிக்கொண்டேன். மிகவும் திண்டாட்டமானதொரு நிலைமை ஏற்பட்டது. சமாளிக்க முடியாது என்று தோன்றவே, பொய் சொல்லி தப்பித்துக் கொள்ளலாம் என்று தோன்றியது. பொய்யென்றதும் என் மனம் சற்றுத் தயங்கியது. பொய் சொல்வதா, கூடாதா என்று என் மனம் போராடிக் கொண்டிருந்தது. என் மனத்தில் உதித்த இந்த எண்ணத்தை அவன் எப்படி அறிந்துகொண்டானோ தெரியவில்லை. ''அதோ உன் தலைக்குமேலே ஜோதிப் பிழம்பான தேவன் ஒருவன் கையில் வாளேந்திநிற்கிறான். பொய்யுரைத்தால் உன் தலை துண்டிக்கப்படும்'' என்று கடுமையான யான குரலில் கூறினான். அதற்கு மேல் என்னால் துணிந்து கூற முடியவில்லை. அந்த வாதப் போட்டியில் நான் தோற்றுப் போனேன். என் பெயரும் புகழும் நிமிடப்போதில் அடியோடு அழிந்தன. அவமானம் சூழ்ந்து கொண்டது. என்னால் அதற்கு மேல் அங்கே ஒரு க்ஷணம் கூட நிற்கமுடியவில்லை.

தட்டுத்தடுமாறி என் குடிசையை அடைந்தேன். ஆத்திரம் கோபம் துக்கம் எல்லாம் என்னை வாட்டி எடுத்தன. நெற்றியில் வியர்வைத் துளிகள் துளிர்த்து ஓடலாயின. பக்கத்தில் ஒரு விசிறி கிடந்தது. அதை எடுத்து வீசிக் கொள்ளலானேன். அது முன்னும் பின்னும் அசையும்போது அதிலிருந்து குளிர்ந்த காற்று கிளம்பி என் முகத்தின் மீது பட்டது. காற்றின் குளிர்ச்சியினால் என் ஆத்திரம் படிப்படியாய்க் குறைந்துகொண்டே வந்தது. நான் யோசிக்கலானேன். ''இந்த விசிறி முன்னும் பின்னும் நகர்வதால்தான் இந்தக் காற்று உண்டாகிறது. விசிறி சிறியது; காற்றும் குறைவாக இருக்கிறது. உலகத்தில் காற்றுக்கள் அடிக்கின்றன. அதை இந்திரனின் செய்கை, வருணனின் செய்கை என்று குறிப்பிட்டாலும் கூட, அதற்கு ஏதாவதொரு காரணமிருக்கவேண்டுமல்லவா? காரணமில்லாமல் எந்தக் காரியம்தான் நடக்கும்? உலகத்தில் செய்கை இருந்தால்தானே அதற்கான பலன் ஏற்படும்? போதி மரத்தடியில் புத்துயிர் பெற்ற புத்தர்பிரான் கூறுவதுபோல், உலகத்தில் செய்கைக்குப் பலனாக தொடர்ந்து வருவதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. எனவே, தெய்வத்தின் தனிச் செய்கை கிடையாது. கர்மத்தின் பலன் கர்த்தாவால் அனுபவிக்கப்படுகிறது''.

—

எனக்கு இந்தத் துயரமும் அவமானமும் ஏன் ஏற்பட்டன? இது நிச்சயமாக ஏதோ ஒரு செயலின் பலன்தான். ஆனால், அந்தச் செய்கை யாது? நான் புகழில் பற்று வைத்ததாகத்தான் இருக்கவேண்டும். புகழை ஏன் விரும்பினேன்? பெயருக்காக ஏன் ஆசைப்பட்டேன்? அவைகளினாலல்லவா இன்று எனக்குத் துயரம் சம்பவித்தது. துறவியாக இருந்தும் மண்ணுலக

விஷயங்களில் பற்றுக்கொண்ட பாவச் செயலின் பலன்தான் இந்த அவமானம். அதைத் துறந்தாலன்றி அமைதி கிட்டாது.

ஆனால், இதுவும் ஒரு அவமானமா? இன்னதென்று இருவரும் திட்டமாக அறியாத ஒரு நிராகார, நிர்க்குண, நிஸ்ஸங்கமான பொருளைப் பற்றி விவாதித்தோம். "ப்ரம்மத்தை அவனும் கண்டதில்லை. நானும் கண்டதில்லை. அதைப்பற்றிய விவரத்தில் நான் தோற்றால்தான் என்ன? வீணே இதற்காக மனதைப் புண்படுத்திக் கொள்வானேன்" என்றெண்ணி சமாதானமடைந்தேன்.

என் மனதில் "இந்தப் புகழைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டி ஒரு பொய்யும் சொல்லத் தூண்டப்பட்டோம்; சுத்தாத்மாவைத்தேடும் எனக்கு அது மகா பாபமாயிற்றே" என்ற எண்ணம் தோன்றி உறுத்திக் கொண்டே யிருந்தது.

அப்பொழுதே அந்த வாழ்க்கையையும் துறந்தேன். என் இடுப்பில் இருந்த கௌரவச் சின்னமாகிய இருப்பு வளையத்தைக்கழற்றி எறிந்தேன். அந்தக்குடிலை நீத்து கண்காணாத ஓரிடத்திற்குச் சென்று, அங்கு சிறுவர், சிறுமிகளுக்குக் கல்வி கற்பித்து காலந்தள்ளலானேன். தடாகத்துத் தண்ணீர் போல் என் வாழ்க்கை அமைதியுற்றிருந்தது.

காலதேவனுக்கு அது பொறுக்கவில்லை. நான் சும்மா இருந்தாலும், என்னைப் பற்றிய கர்மம் சும்மாவிருக்கவில்லை. என் வாழ்க்கைப் பாதையில் மேலும் இடறு கட்டைகளைத் தள்ளிற்று.

நான் வசித்தது ஓர் கிராமம். அங்கு வந்த சில காலத்திற்குப் பின்னர் ஒரு பெண்ணைச் சந்தித்தேன். மஹா ரூபவதி அவள். அவளைக் கண்டு நான் மையல் கொண்டேன். அவளை அடைய வேண்டுமென்ற அவா என்னை உந்த ஆரம்பித்தது. பலவிதங்களில் முயன்றேன். அவளுடைய தகப்பன் நான் ஏழை என்ற காரணத்தால் எனக்கு அவளை மணம் செய்துகொடுக்க மறுத்து விட்டான். அவளை அடைய வேண்டுமென்றால் நான் பணம் சேர்க்க வேண்டும். மறுபடியும் செல்வவானாக வேண்டும். முன்பு வெறுத்த பணத்தை மறுபடியும் அடையவேண்டும். இதைச் செய்வதா? அந்தப் பெண்ணின் மீது நான் கொண்ட மோகம் என்னை அதற்கும் ஊக்கியது. எனவே, மீண்டும் தனம் வேண்டி வியாபாரத்தில் இறங்கினேன். சிறிது சிறிதாகச் சேர்த்தேன். கொஞ்ச நாட்களில் நான் பொருள் சேர்த்து அந்தப் பெண்ணிற்கு ஒரு அட்டிகை வாங்கியளித்து அவளை வேண்டினேன். அவளை எனக்கு மணம் செய்து கொடுப்பதாகக் கூறினான் அவள் தகப்பன். நான் அகமகிழ்ந்தேன்.

சின்னாட்களுக்குப் பின்னர் அந்த ஊரின் வழியாக ஓடிக் கொண்டிருந்த ஆறு வழக்கத்திற்கு மேலாக பெருக்கெடுத்தது. இரண்டொரு நாட்களில் ஊரில் ஜலம் புக ஆரம்பித்தது. கிராமம் ஜலத்தில் மூழ்கி விடும் என்று தோன்றியது. ஆனால் அம்மாதிரி ஒன்றும் நடக்கவில்லை. அன்று இரவு ஜலம் வடிய ஆரம்பித்து விட்டது.

மறுநாள் காலை நான் கிராமத்துக்கு வெளிப்பக்கமாகச்சென்று கொண்டிருந்தேன். ஆற்றங்கரையோரமாகச் செல்லும்போது அங்கு ஓர் உருவம் பாதி தண்ணீரிலும் பாதி கரையிலுமாகக் கிடந்தது. அது ஒரு பெண். அவள் குப்புற விழுந்து கிடந்தாள். அவிழ்ந்து நிலையில்லாமல் அலைப்புண்டு கிடந்த கூந்தல் அவள் முகத்தை மறைத்தது. பரிதாபமான அந்தக் காக்ஷியைக் கண்டு என் மனம் துடித்தது.

அவளைத் தூக்கிக் கரை சேர்க்கலாம் என்றெண்ணி அண்டையிற் சென்றேன், அப்பொழுது அவள் கையில் பிடித்திருந்த ஒரு பேழை கண்ணில் தென்பட்டது. திடீரென்று கெட்ட புத்தி என் மனத்தைக் கவ்வியது. "பேழையைப் பார்த்தால் விலையுயர்ந்த நகைகள் கொண்டதாயிருக்கும் போலிருக்கிறது. இதைப் பற்றிக் கொண்டால் என் காதலியைச் சட்டென அடையலாம்" என்ற எண்ணம் தோன்றவே, உடனே அப்பெட்டியை உணர்வற்றிருந்த அவள் கையிலிருந்து பிடுங்கிக்கொண்டு அவளைத் தண்ணீரில் உருட்டி விட்டேன். தண்ணீரில் புரண்டு விழும் போது அவள் கூந்தல் விலக அவள் முகம் தெரிந்தது. ஐயோ! அவள்தான் என் காதலி! என் தலையில் ஒரு பேரிடி விழுந்தது போல இருந்தது. இவளுக்காகத் தானே இவ்வளவு பாடுபட்டேன்!

சட்டென்று பாய்ந்து அவளைப் பிடித்துக்கொண்டேன். சுழித்துச் சுழித்து ஓடும் அந்த வெள்ள வேகத்தில் [illegible] செய்வது சுலபமாயில்லை. மிகவும் கஷ்டப்பட்டு அவளுடன் கரை சேர்ந்தேன். பக்கத்தில் சென்று கொண்டிருந்த சிலரைக் கூவியழைத்து அவர்கள் உதவியால் அவளை வீட்டிற்குத் தூக்கிச் சென்றேன். அங்கு நெடுநேரம் சைத்யோபசாரம் செய்து, அவள் நினைவு பெற்றது பெரும் கஷ்டமாயிருந்தது.

அன்று நான் வீடு திரும்பினேன். என் மனம் அன்றைய சம்பவங்களை எண்ணியே சுழன்றது. என் மனச்சாக்ஷி என்னைக் குத்திக்கொண்டே யிருந்தது. நான் அனுபவித்த அந்த மனவேதனை எழுத்திலடங்காது. இரவு முழுவதும் தூக்கம் பிடிக்காமல் புரண்டுகொண்டிருந்தேன்.

"என்ன கோரம்! குற்றுயிராயிருந்த ஒரு பெண்ணைக் கொலை செய்யத் துணிந்தேனே! எல்லாம் ஒரு பெண்ணின்மேல் கொண்ட மோகத்தாலல்லவா? அந்த மோகம் என்னைக் கொலைகாரனாக்கிவிடவல்லவா பார்த்தது? கொலை செய்தும் கூடவா ஒரு பெண்ணை அடையவேண்டும்? நான் இம்மாதிரி நடந்துகொண்டேன் என்று தெரிந்தால் அவள் என்ன எண்ணுவாள்? இதையெல்லாம் அவளிடம் கூறிவிடலாமா? அது நல்லதா? இந்த முகத்துடன் நாளை அவளை எப்படிப் பார்ப்பேன்? நானும் அந்த ஆற்று வெள்ளத்தில் விழுந்து விட்டுமா?" என்றெல்லாம் என் மனது திண்டாடியது.

"இந்தக் காதலில் அவ்விதம் என்ன தான் இருக்கிறது? அதற்காக இவ்வளவெல்லாம் செய்ய வேண்டிய அவசியம் என்ன?" என்ற கேள்வி என் மனத்தே எழுந்தது. இந்த சந்தேகத்தை வைத்துக்கொண்டு அந்தக் காதலை ஊடுருவிப் பார்க்கத் தொடங்கினேன். அப்பொழுது எனக்கு அதன் அநித்தியத் தன்மையும், துன்பங்களும் தெரிய வந்தன. இப்பொழுது என்னுள்ளிருந்த ஆசையெல்லாம் போய் விட்டது. இவற்றையெல்லாம் நான தெளிவாகப் பார்க்க முடிந்தது. என் மனத்திலிருந்த காமமெல்லாம், பெருந்தீ ஒன்று [illegible]யை அழிப்பது போல், என் மனம்பட்ட வேதனையால் அழிந்து விட்டது. மனத்தில் காமமுள்ளவர்களுக்கு உண்மை விளங்காது. அந்த மோகம் மூடு பனிபோல் விஷயங்களை மறைக்கும்.

இம்மாதிரி ஒரு ஆசையை நான் விடாமல் பிடித்துக்கொண்டிருக்கிறேனென்று எண்ணும்போதே எனக்கு அவமானமாக இருந்தது.

விடிவதற்குள் நான் ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்டேன். "இந்தப் பெண்ணாசை மிகவும் கெடுதலானது. இதை விட்டு விடவேண்டும். காலையில் இந்த ஊரைவிட்டுக் கிளம்பி எங்காவது சென்றுவிட வேண்டும்." இதுவே நான் செய்துகொண்ட தீர்மானம்.

காலையில் அவளுடைய தகப்பனும் ஊரிலுள்ள இன்னும் சில ஜனங்களும் என்னைத் தேடிக் கொண்டு வந்தனர். "தன் உயிரையும் அலக்ஷியம் செய்து வெள்ளத்தில் குதித்து அவளைக் காப்பாற்றின தீரன்" என்று அவ்வளவு பேரும் என்னைக் கொண்டாடினார்கள். அவளுடைய தகப்பன் என்னை வெகு நேரம் புகழ்ந்து, நான் அவளை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று வேண்டினான். "இதோ பார், இவளும் உன் பேரில் ஆசையாயிருக்கிறாள். வெள்ளத்திற்குப் பயந்து வெளியே ஓடும்பொழுது அந்தப் பெட்டியில் உன்னுடைய கடிதத்தையும் நீ கொடுத்த அட்டிகையையும் மட்டும் எடுத்துக்கொண்டு போனாள். இவளை நீ ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும்" என்றான். நான் பதிலே கூறவில்லை. என் உள்ளக் குத்தல் எனக்கல்லவா தெரியும்? வாயைத் திறக்காமல் ஊரை விட்டு வெளியேறினேன்.

ஒரு யாத்ரிகர் கூட்டம் சமயத்தில் கிளம்பவே அவர்களுடன் நான் சேர்ந்து கொண்டேன்.

மரணத்தினால் தான் உள்ள வேதனை அடங்கும் என்றுதோன்றியது. எனவே, என் மனம் மரணத்தை எதிர் பார்த்து ஏங்கியது. மரணம் வேண்டும் என்ற ஆசை தான நான் தற்பொழுது நடப்பதற்குக் கூட ஆதாரம். அதுவே என் வாழ்க்கையில் பிடிப்பாக இருக்கிறது. இதை நான் அறிந்த வுடனேயே எனக்கு மரணத்தை வெல்ல வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது. ஏனென்றால், ஏதாவது ஒரு ஆசை இருக்கும் வரையில் எப்படி நான் அமைதியாய் வாழ்வது? நான் பெண்ணாசையை விட்டால் என்ன? பொன்னாசையை விட்டால் என்ன? இன்னும் ஏதாவது ஒரு ஆசை இருக்கும் வரையில் வாழ்க்கையில் துன்பம் தான் இருக்கும். ஆசை தான் சகல துன்பங்களுக்கும் ஆதாரம் என்று அறிந்து கொண்ட நான், ஆசையை ஒழித்தால் தானே அதன் பயனாலேற்படும் துன்பம் என்னைப் பிடியாது விலகும்?

எனவே தான் மரணத்தை வெல்ல வேண்டுமென்று நான் ஆவலாயிருக்கின்றேன். அதற்கு நீங்கள் ஒரு வழி கூற முடியுமா?"

"சரி, இங்கேயே என்னுடன் இருந்து மூன்று வருஷகாலம் என் குடிலைக் கூட்டி சுத்தம் செய்து கொண்டும், எனக்குப் பணி விடைகள் செய்து கொண்டும் இரு. அப்பொழுது கூறுகிறேன்" என்றான் கிழவன்.

"மூன்று வருஷங்களா? அவ்வளவு நீண்ட காலம் காத்திருக்கவா? காலன் எப்பொழுது வருவானோ? இன்றிருப்பார் நாளைக்கும் இருப்பார் என்பது என்ன நிச்சயம்? உடனே தெரிந்து கொள்ள வேண்டும். காலன் அருகில் வருவதற்குள் அவனைவெல்ல வேண்டும்" என்றெண்ணி, "மூன்று வருஷங்கள் என்றால் காத்திருக்க முடியாது. காலன் எப்பொழுது வருவானோ? அதற்குள் அவனை வெல்லும் வழியை அறிந்து கொள்ள வேண்டும்" என்றான் கௌதமன்.

"உன் விருப்பம் அப்படியானால், மேரு பர்வதத்திற்குச் சென்று அங்குள்ள அந்த பெரிய மனிதரைக் காண்பாய்."

"அங்கே செல்வது எப்படி?"

"இங்கிருந்து நேர் வடக்காகச் சென்றால் கங்கைக்குப் போய்ச் சேரலாம். அங்கிருந்து கங்கையைப் பிடித்துக்கொண்டு அதன் மூலஸ்தானத்தை நோக்கிச்செல். கடைசியில் மலையின் பிளவாகிய இரண்டு பாறைகளுக்கு இடையிலிருந்து கங்கைபெருகுவது தெரியும். அங்கே மேருவைக் காணலாம்."

"ஆனால் மேருவை நான் அறிந்துகொள்வது எப்படி?"

"அதைக் கண்டதுமே நீ அறிந்துகொள்வாய்."

"அந்த மனிதரை எப்படி அடையாளம் கண்டுகொள்வது?"

"அவர் உன்னைப் பார்க்கும் போது நீயும் அவரைப் பார்ப்பாய்."

"அப்படியானால் நான்சென்று வருகிறேன்."

கௌதமன் நாலடி சென்றதும் அந்தக் கிழவன் மீண்டும் அவனைக் கூப்பிட்டான்.

"மனித சஞ்சாரமுள்ள பிரதேசங்களைத் தாண்டினதும் நீ இங்கிருப்பது போல் இருக்கக் கூடாது. இந்த சிவப்பு உடையை தரிக்கக் கூடாது. ஓடும் உதவாது. வாய்திறந்து உரக்க பேசக் கூடாது. கையிலுள்ள இந்தக் கைத்தடியை மட்டும் வைத்துக் கொள்ளலாம். மேருமலை தென்பட்டதும் உன் கண்களை மூடிக் கொண்டுவிட வேண்டும். கண்ணைத் திறக்காமல் சென்றால் தான் அதை நெருங்க முடியும். கண்ணை விழித்துப் பார்த்தால்,

மேரு பர்வதத்தை சிக்கிம அடைய முடியாது. ஒவ்வொரு தரம் நீ கண்ணை விழிக்கும் போதும், அம்மலை தொலைவில் சென்றுகொண்டேயிருக்கும். நீ வாய்திறந்து பேசினால், பனி பெய்யும்; புயற்காற்று வீசும். ஜாக்கிரதையாய்ப் போ" என்று எச்சரித்து வழியனுப்பினான்.

* * *

**கௌ**தமன் தன் பிரயாணத்தைத் தொடங்கினான். அவன் வழியில் பலவிதமான ஜனங்களைச் சந்தித்தான். அவர்கள் எல்லோரும் வாழ்க்கையின் உண்மை சொரூபத்தை அறியாதவர்களாகவும், வீண் காலம் போக்கும் பைத்தியக்காரர்களாகவுமே தோற்றினார்கள். கடைசியில் கங்கையை அடைந்து, அதன் ஓட்டத்திற்கு எதிர் திசையில் செல்லலானான். மனித சஞ்சார மற்ற பிரதேசங்களை அடைந்ததும், கிழவன் சொற்படி, தன் சிவந்த அங்கி, ஓடு இவைகளை விட்டு விட்டான். ''மனிதர்களே இல்லாத இடத்தில் நான் ஏன் பேசப்போகிறேன். அதுவும் சரியாய்விடும்'' என்றெண்ணி மேலே சென்றான். கடைசியில் நீல நிறமானதொரு மலையின் ஒரு பிளவிலிருந்து இரண்டு பாறைகளுக்கு நடுவாக கங்கை வெளிவரும் இடத்தை அடைந்தான். சுற்றிலும் மலைகள் இருந்தன. கௌதமன் பார்த்துக்கொண்டே இருக்கும்போது இவைகளில் ஒன்று விண்ணை எட்ட வளர்ந்துகொண்டே இருந்தது. அதுதான் மேரு பர்வதம் என்று அவன் அறிந்து கொண்டான்.

உடனே அதை நோக்கி நடக்கலானான். ஆனால், அது பின்னால் போய்க்கொண்டே இருந்தது. சற்று நேரம் சென்றதும் அதன் காரணம் அவனுக்குப் புலனாயிற்று. கிழவன் கூறியதை இவன் மறந்துவிட்டானல்லவா? உடனே கண்ணை மூடிக்கொண்டு மறுபடியும் நடக்கலானான். சில தப்படிகள் நடந்திருப்பான்; அதற்குள் "மலையை அடைந்துவிட்டோமோ" என்றெண்ணி கண்ணைத் திறந்தான். கண் விழித்த அந்தக்ஷணத்தில் அம்மலை வெகு தூரத்தில் போய்விட்டது. "இன்னும் அதை அடையவில்லை" என்றெண்ணி மறுபடியும் கண்ணை மூடிக்கொண்டு நடக்கலானான். ஆனால் மறுபடியும் "இப்படி நடந்தால், நான் மேருவை அடைந்து விட்டேனா, இல்லையா வென்று எப்படி கண்டுகொள்வது'' என்ற எண்ணம் தோன்ற மறுபடியும் கண்ணை விழித்தான். இப்படி பன்முறையும் அவசரப்பட்டுக் கண்ணைத் திறக்க, அத்தனை தடவைகளும் மேரு பின்னே போய்க்கொண்டே இருந்தது. இதனால் ஏமாற்றமும் அதனால் கோபமும் அடைந்த கௌதமன், கிழவன் தன்னை ஏய்த்ததாக எண்ணி அவனை நினைந்து ஆத்திரத்துடன் "அயோக்யன்'' என்று கத்திவிட்டான். உடனே வந்தது புயல்! பனியும் ஏராளமாய் பெய்ய ஆரம்பித்தது. கௌதமன் தங்க இடம் இல்லாமல் தவித்தான். கீழே குப்புற விழுந்தான். காற்று அவனையே தூக்குவதுபோல அடித்தது "இந்தக் காற்று நம்மைப் புரட்டி எங்காவது பள்ளத்தில் தள்ளிவிட்டாலும் தள்ளிவிடும்'' என்று எண்ணினான். அப்போது, "அங்ஙனமாவது ஆகட்டும்; சட்டென ஒரு முடிவு ஏற்படும்'' என்ற தீர்மானத்துடன் எழுந்து தைரியமாய் நேரே கண்ணை மூடிக்கொண்டு நடக்கலானான். திடீரென்று காற்றும், பனியும் நின்றன. கௌதமன் சென்ற பாதை 'வழவழ' வென்று இடையூறுகளே இல்லாததாக ஆகிவிட்டது. "இப்படி இருந்தால், எப்பொழுதும் கண்ணை மூடிக்கொண்டே நடக்கலாம்'' என்று கூடத் தோன்றியது அவனுக்கு. உற்சாகத்துடன் மேலும் மேலும் செல்லலானான். அப்படி எவ்வளவு நேரம் சென்றானென்று அவனுக்கே தெரியாது. அவன் மிகவும் களைத்துக் கீழே படுத்தான்.

அவன் உறங்கிக் கண் விழிக்கும்போது எதிரே மேருபர்வதம் இருந்தது. சற்று தூரத்தில் ஒரு வயோதிகன் கிழிந்த துணி ஒன்றைத் தைத்துக்கொண்டிருந்தான். "மேருபர்வதம் வந்துவிட்டோம்; அம்மலையில் இருக்கும் மனிதர் எங்கே என்று இவனைக் கேட்கலாம்'' என்றெண்ணி கேட்க வாயெடுத்தான். இவன் வாயைத் திறக்கு முன்னரே அந்தக் கிழவன் ஆரம்பித்துவிட்டான்.

''நீதான் கௌதமனா?,' என்றான்.

அவன் வாய்திறந்து பேசியதுமே அவன்தான் மேருமலையிலிருக்கும் இந்த மனிதனென்று கௌதமன் உணர்ந்துகொண்டான்.

"ஆம், அடியேனுடைய பெயர் தான் கௌதமன் என்பது. நான் தங்களை நாடித்தான் வந்தேன். மரணத்தை வெல்ல வேண்டுமென்ற அவா எனக்கு மிகவும் இருக்கிறது. அதற்குரிய வழியைத் தாங்கள் அறிவீர்கள் என்று கேள்விப்பட்டேன். அதை அறியவேண்டியே தங்களைத் தேடி வந்திருக்கிறேன். தயை செய்யவேண்டும்.'' என்றான்.

"ஓ ஹோ! உலகத்தில் மற்றவற்றை நீ துறந்துவிட்டாயோ? பொன், புகழ், பெண் இவற்றில் எதன் பேரிலாவது உனக்கு இச்சை இருக்கிறதோ? அவைகளை உன்னால் எப்படித் துறக்க முடிந்தது? என்று அவர் கேட்டபோது, தன் வாழ்க்கைச் சரிதத்தையே அவரிடம் கொட்டிவிட்டான்.

ஆதிமுதல் அந்தம் வரை கேட்டபின் நிதானமாகச் சிரித்தார் அந்தக் கிழவர்.

"இவ்வாசைகளை வென்றாய், உண்மை! ஆனால் வாழ்க்கையை வென்றாயோ? வாழ்வை வெல்லாமல் சாவை வெல்வது முடியாதே!''

"வாழ்வை வெல்வதா? அந்த வாழ்வு என்பது யாது?''

அவரால் சிரிப்பை அடக்க முடியவில்லை. நகைத்துக் கொண்டே.

"நீதான் வாழ்வு!'' என்றார்.

கௌதமனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"அப்படியானால், நான் யார்?"

"உன்னைப்பற்றிய ஆசையே, உன் பேரிலேயே கொண்ட அபிமானமே நீ. மறலியை வெல்ல வேண்டுமானால், இதைத்தான் முதலில் ஜயிக்கவேண்டும்.

"ஸ்வாமி, அதெப்படி என்று தயவு செய்து கூறுங்கள். நான் அதை செய்து முடிக்கிறேன்." என்று வேண்டினான் கௌதமன்.

அந்தக் கிழவர் எங்கிருந்தோ மூன்று புறாக்களை எடுத்தார். "இந்தா, இவற்றை எடுத்துக் கொண்டு செல் [illegible] அவைகளிடம் என்ன மாறுதல் காண்டாயென்று தெரிவி. பின்னர், சாவை வெல்லும் வழியைக் கூறுகிறேன்" என்று கூறி அப்புறாக்களை கௌதமனிடம் தந்தார்.

அந்தப் புறாக்கள் கன்னங்கரேலென்று பார்ப்பதற்கு அசங்கியமாயிருந்தன. அவை ஒன்றோடொன்று சண்டையிட்டுக்கொண்டும், விகாரமான குரலில் கூவிக்கொண்டும் இருந்தன. கௌதமன் அவைகளைப் பெற்றுக் கொண்டு திரும்பினான்.

மறுநாள் காலையில் எழுந்ததும் முதல் காரியமாக அப்புறாக்களைக் கூர்ந்து கவனித்தான். ஒவ்வொன்றின் உடலிலும் ஒரு வெள்ளை இறகு தோன்றியிருந்தது. அகமகிழ்ந்து ஓடினான் அம்மலைக் கிழவரிடம். நடந்ததைத் தெரிவித்தான்.

"இப்படியே ஒவ்வொரு நாளும் அவைகளின் உடலில் ஒரு வெள்ளை இறகு தோன்றும். கருப்பு மறைந்து விடும். அவைகளின் நிறம் மாறி தூய வெண்ணிறம் வந்ததும், அவைகளைக் கொன்று சமைத்து உண்பாயாக. அவ்விதம் செய்தால் நீ சாவை வென்றவனாவாய்?" என்று கூறி அவர் கௌதமனைத் திருப்பி அனுப்பினார்.

நாட்கள் சென்றன. தினே தினே அந்தப் புறாக்கள் வெண்மை நிறத்தை அடைந்துகொண்டிருந்தன. முதலில் அவைகள் சட்டென்று நிறம் மாறிவிடாதா என்று தோன்றியது. ஆனால் அவைகள் நாள் தவறாமல் அதிக வெண்மையை அடைந்து வருவதைக் கண்டு தன் ஆவலை அடக்கிக்கொண்டான்.

நாட்கள் சென்றன. புறாக்களின் நிறத்தில் மட்டுமல்ல; அவைகளைப் பொருத்த எல்லா விஷயங்களிலுமே மாறுதல் ஏற்பட்டுக்கொண்டிருந்தது. அவைகள் முன்போல் தங்களுக்குள் சண்டையிடுவதில்லை. அவைகளின் குரலிலும் இனிமை ஏறிக்கொண்டிருந்தது. அவைகள் மூன்றும் சேர்ந்து குலவும்; இன்பமாய்ப் பாடும் இசையெல்லாம் கண்ட கௌதமனுக்கு நாட்கள் போவது தெரியாமல் போய்க் கொண்டிருந்தன.

வருஷங்கள் ஆறு ஓடி மறைந்தன. ஒரு நாள் அப்புறாக்கள் மூன்றும் தம்முடைய கடைசி கருப்பு இறக்கையையும் உதிர்த்து வெண்மை பூண்டன. தூய வெண்ணிறமாய், நாளெலாம் பார்த்துக்கொண்டேயிருக்கலாம் போல் இருந்தன. அவைகளைப் பார்க்கும் போது கௌதமன் மனம் பூரித்தெழுந்தது.

" சரி, முற்றும் வெண்மையாய் விட்ட இவைகளைக் கொல்ல வேண்டிய காலம் வந்துவிட்டது. இவைகளைக் கொன்று தின்றுவிட்டால் நான் சாவை வெல்லலாம்." என்ற எண்ணம் தோன்றியது. ஆனால் அழகுக்கு எடுத்துக் காட்டாக இருக்கும் இவைகளையா கொல்வது? ஒவ்வொரு அணுவிலும் ஜீவன் ததும்பித் துடிக்கும் இவைகளைக் கொல்ல வேண்டுமா? இன்னிசையெழுப்பி இன்பத்திலாழ்ந்திருக்கும் இவைகளின் இன்பத்திற்கு இறுதி வைக்கவா? அழகிய மூன்று ஜீவன்களை அழித்தாவது நான் மரணத்தை வெல்ல வேண்டுமென்பது என்ன பயங்கரமான ஆசை! சை, ஏன் இந்த ராக்ஷச எண்ணம். வேண்டாம், இவைகளைக் கொன்று ஏற்படும் இஷ்டபூர்த்தி வேண்டாம். நான் மரணத்தை வெல்ல வேண்டி வந்ததென்னவோ உண்மை, ஆயின், இப்பிராணிகளின் உயிர்களைப் போக்கியாவது என் இஷ்டத்தை சாதித்துக் கொள்ள வேண்டுமா? நான் சமத்வ எண்ணத்தில் வாழ்ந்தாலென்ன? வாழ்வையும் சாவையும் சமமாக மதிக்கக் கூடாதா? நான் ஆசைப் பட்டு சலித்து விட்டேன்.

நான் மரணத்தை வெல்ல முடியாமற் போனால் போகட்டும். நான் இவைகளைக் கொல்ல மாட்டேன்" என்றெண்ணி, அவைகளிருந்த கூட்டின் கதவைத் திறந்துவிட்டான். விடுதலையடைந்த பக்ஷிகள், பகபகவென்று சிறகையடித்து வான வீதியில் பறந்து சென்றன. கண்ணுக்கு மறையும் வரை அவைகளையே பார்த்துக்கொண்டு நின்றான். திடீரென்று அம்மேரு மனிதரின் ஞாபகம் வரவே, அவரிடம் தான் செய்தவற்றைக் கூறவேண்டுமென்று எண்ணி அவ்விடம் நாடிச் சென்றான்.

ஆனால், அங்கு அம்மனிதரைக் காணவில்லை. அவர் இருந்தவிடமும் தென்படவில்லை. அதற்குப் பதில், இதுவரையில்லாததொரு புதிய ஏரி இருந்தது. அமைதியான அந்த ஏரியின் நடுவே ஓர் அன்னம், இறக்கையின் அடியில் தன் தலையை மறைத்துக் கொண்டு, மிதந்து கொண்டிருந்தது. தெள்ளிய நீரின் வழியாக அடித்தலத்தில் இருந்த அழகான கூழாங்கற்கள் தென்பட்டன. அவ்விடத்தின் எழிலும் அமைதியும் அவனைக் கொள்ளை கொண்டன. அந்த அபூர்வ அழகில் ஈடுபட்டு அவன் வெகுநேரம் அங்கேயே உட்கார்ந்திருந்துவிட்டான். அன்றுபோல் அவன் என்றுமே சந்தோஷப் பட்டதில்லை.

அவன் தன் சுய உணர்வு பெறும்போது சூரியன் மலைவாயில் இறங்கி வெகுநேரம் ஆகிவிட்டது. எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. கௌதமன் எழுந்து நேரே அந்த குடிசைக் கிழவனைத் தேடிச் சென்றான். முற்றும் இருள் கவிந்துகொண்டிருந்தும் வெளிச்சம் இருப்பது போலவே சென்றான். முன்பு இவனைப் பாராமலே இருந்த அந்தக் கிழவன், இன்று கௌதமன் தூரத்தில் வரும்பொழுதே புன் சிரிப்புடன் வரவேற்றான். கௌதமன் தனக்கு நேர்ந்தவைகளையெல்லாம் ஆதியோடந்தமாகச் சொல்ல ஆரம்பித்து "நான் இப்பொழுது சமத்வ அமைதி

யுடன் வாழ்கிறேன்'' என்று முடித்தான். முற்றும் கேட்ட அக் கிழவன் கௌதமனைத் தட்டிக் கொடுத்தான்.

“வாழி நீ, மரணத்தை நீ வென்றுவிட்டாய்''.

மலர்ந்த முகத்துடன் கௌதமன் மறுபடியும் தான் பிரிந்து வந்த மார்க்கத்தை நோக்கிச் சென்று அங்கே வலது பக்கம் திரும்பி அந்த பெரிய பாதையில் நடக்கலுற்றான்.

அப்பொழுது எதிரே அந்த யாத்ரீகர் கூட்டம் திரும்பி வந்து கொண்டிருந்தது. முன்பு அவனைப் பைத்தியக்காரன் என்று பரிகசித்த அதே ஜனங்கள் இன்று கௌதமனை யாரோ மகான் என்று வரவேற்று கொண்டாடினர்கள். அவனை யாரும் அடையாளம் கண்டு கொள்ளவே இல்லை.

கௌதமனும் பரமானந்தத்தில் லயித்துத் தன்னை மறந்தான்.

> நன்மை செய்வோன் நன்மையே செய்க; மேலும் மேலும் செய்க. அப்படிச் செய்வதிலே மகிழ்ச்சி கொள்க. நன்மை சேரச் சேர மகிழ்ச்சி பெருகும்.
>
> தீமை செய்வோன் மகிழ்ச்சியுடனிருப்பதுபோல் காணப் படும். அம்மகிழ்ச்சி எதுவரை தெரியுமோ? அவன் செய்யும் தீமை அதன் பலனைத்தர ஆரம்பிக்கும் வரையில்தான். தீமை பலன் தர ஆரம்பித்ததும் கிட்டுவது துன்பமே.
>
> நன்மை செய்பவனோ முதலிலேதான் செய்யும் நன்மை துன்பமாகக் காணலாம். அது எதுவரை தெரியுமோ? நன்மை பலன்தர ஆரம்பிக்கும் வரை. நன்மை பலன்தரத் தொடங்கியதும் அவனுக்கு வருவது ஆனந்தமே.
>
> — தம்ம பதா

இது கற்பனையில் கிளைத்த தோர் கதையாகும். எனினும் இதற்கு இருபொருள்கள் உள்ளன. ஒன்று, இதுவரை நீங்கள் படித்த இந்த சரித்திரம். மற்றது இதில் மறைவாயிருக்கும் விசேஷப் பொருள். விசேஷப்பொருளை இங்கு விரித்துரைப்போம். யாத்ரீகர்களுடன் வந்துகொண்டிருந்த கௌதமன் இடது பக்கம் திரும்பி மற்றவர் செல்லாத மார்க்கத்தில் செல்லுகிறான் அல்லவா? இது மனிதன் தனிமையை நாடிச் செல்வது. மனிதனுக்கு நன்மை பயக்கும் அனைவத்திற்கும் இதுவே ஆரம்பம். கௌதமன், தான் இதுவரை கண்டிராத பிரதேசங்களை அடைவது, மனிதன் தான் அதுவரை காணப்பெறாத இன்பங்களை தனிமையில் காண்பதாகும்.

கௌதமன் கண்ட அந்தப் பரந்த வெளி, ஏதும் இடைஞ்சல்கள் இல்லாத அந்த மைதானம், உலக விஷயமான எண்ணங்களிலிருந்து விடுபட்டதை அறிவிக்கிறது. ஆங்கு விழும் அவனது நிழல்கள்தான் அவன் மனசாக்ஷி. திறந்த தெளியில் நம் நிழலின் முழுமையையும் காண முடிவது போல், உலகத்தைவிட்டு விலகிச் செல்லும்போது நம் மனசாக்ஷியின் முழு சக்தியையும் அறிகிறோம். சூரியனின் நிலை மாற்றத்தால் நம் நிழல் சில சமயங்களில் நமக்கு முன்பாகவும், மற்றும் சில சமயங்களில் நமக்குப் பின்னுமாக விழுவது போல், நம் மனசாக்ஷி சென்ற காலத்துச் சம்பவங்களுக்கும், வரப்போகும் காலத்து விஷயங்களுக்கும் இடையில் ஓடி நம்மையே நமக்கு விளக்குகிறது.

கௌதமன் மாலை நேரத்தில் அந்தக் குடிலில் ஒரு கிழவனைக் கண்டானல்லவா? அந்தக் கிழவன் நமது நியாய புத்தியின் உருவகம். இந்த நியாய புத்தி, இக் லோகத்திலுள்ள பற்றால் நம் மனத்தில் இருக்கும் குழப்பங்களும் கொம்மாளங்களும் அடங்கினால்தான் பேச ஆரம்பிக்கும். அதுதான் நமக்கு நல்வழி காட்டும்.

கங்கையாவது மானிடர்களுக்கு உண்டாகும் துன்பங்களின் தொடர்ச்சி. நாம் உயர்வை அடைய வேண்டுமானால் அவைகளைப்பற்றி, ஆராய்ந்து அவைகளின் மூலத்தை அடையவேண்டும். அந்த மூலம் தான் நம் துன்பங்களுக்கு பிறப்பிடம்.

சிவந்த உடை காமம், சிற்றின்ப இச்சை இவற்றிற்கு அடையாளமானது.

திருவோடானது கர்வத்தையும், தன்னைப்பற்றி மிக உயர்வான எண்ணம் கொண்டிருத்தலையும் குறிக்கும். உரத்த பேச்சு கோபத்தையும், வெறுப்பையும் அறிவிக்கும். முக்தியை நாடும் மனிதன், சிற்றின்பம், கோபம், அகங்காரம் இவற்றை கொண்டிருத்தல் கூடாது என்னும் விஷயத்தை வெளிப்படுத்தவே கௌதமனை சிவந்த உடை, ஓடு, சப்தம் இவைகளை விட்டு விடும்படி கூறப் பட்டது. அவைகளை அகற்றாத மனிதன் முக்தி எய்த முடியாது.

மனித சஞ்சாரத்தைத் தாண்டி வெளிச் செல்வது, உலக போகத்தை விட்டு 'நான்' என்ற ஆத்ம விசாரணையில் இறங்குதல். நேர்மையான எண்ணமே அவன் கைத்தடி. அந்த நேர்மையான எண்ணமே மேன்மைக்கு வழி காட்டும். மேன்மை சிந்தனையின் பலனாய் கிடைக்கும் சித்தி.

கௌதமன் உணர்ச்சி வசப் பட்டு கோபத்திற்கு இடங் கொடுத்த போது அவனைத் தாக்கும் புயலும் பனி மழையும் மனசாக்ஷியின் குற்றச்சாட்டுகள்; மனதைத் துளைக்கும் பாணங்கள். அவன் மனசாக்ஷியென்னும் மஹா சக்தியே அவன் தவறுக்காக அவனைத் தண்டிக்கிறது. முக்தியை நாடிச்செல்லும் வழியில் ஜீவாத்மா அறியாமல் தவறு செய்து, துன்பத்திற்குப் பின்னர் திருந்துவதையும் இது குறிக்கிறது.

நம்முள் புனிதமான தெதுவோ அதுதான் மேரு. அதுதான் நம்மை நம்முடைய இழிநிலையை

விட்டு மேன்மையின் படிகளில் தூக்கிவிடும். அதைத் தேடிக் கண்டு பிடிப்பது அவ்வளவு சிரமமானது. மிகவும் அதிகமான பற்றும், ஊக்கமும் இருந்தாலன்றி அதைக் கண்டுகொள்ள முடியாது. கண்டுவிட்டால், பின்னர் அது எங்கும் வியாபிப்பதைக் காணலாம். கௌதமன் பார்த்ததும் மேரு, நிலையில்லாமல் வளர்ந்து விண்ணை எட்டி அவன் பார்வை முழுவதிலும் பரவிற்றல்லவா? அப்படியே நம்முள்ளிருக்கும் அந்த புனிதமான பொருளை நாம் கண்டுகொண்டால் பின்னர் அது சர்வ வியாபியாக நிற்கும். நம் ஆத்ம விஷயங்களிலெல்லாம் அது தலை தூக்கி நிற்கும். எங்கு நோக்கினும், அதுவே காக்ஷி கொடுக்கும். அதை அறிந்துவிட்டால், நம் அறிவு முழுமையும் அதிலேயே நிற்கும்.

மேருவிலுள்ள அந்த மனிதன் நம்மிலுள்ள அந்த புனிதப்பொருளின் குரல். அதன் வார்த்தையே சத்யம். கூறப்பட்ட வார்த்தையின் உண்மைக்கும் அதுவே சாக்ஷி.

அதை நாம் கிரியைகளால் அடைய முடியாது. கிரியைகளிலிருந்து விடுபடுவதனாலேயே அறிய முடியும். இதனால்தான், மேருவையடைய கௌதமன் மூடிய கண்களுடன் செல்கிறான். கிரியைகளிலிருந்து முற்றிலும் விலகி, செயலற்ற நிலையில் இருந்தால்தான், அந்த சுத்தாத்மா தன்னை நமக்கு வெளிப்படுத்திக் கொள்ளும். அந்த மூன்று கரும்புருக்களும் மூன்று தலையான அகங்காரத்தின் ஸ்வரூபம். ஒன்று, சுயாபிமானம்; தன்னிடமே அபாரமான ஆசை. இரண்டு, பிறனிடம் துவேஷம்; பிறரைப்பற்றிய கெட்ட நினைவுகள். மூன்றாவதும் முக்யமானதும் ஆவது, இவை இரண்டும் நியாயமானவை, இயற்கை என்ற நினைப்பு. மேருவை அடைந்த கௌதமனின் கையிலகப்பட்ட இப்புருக்கள் தினை தினை தங்கள் கருமையை யுதிர்த்து வெண்மை பூண்டது போல், தன்னைப்பற்றிய உண்மையைக் கண்டு கொண்டவனின் இந்த மூன்றுவிதமான அகங்காரம், சிந்தனையினாலும் கவனத்தினாலும் மலம் மடிந்து பரிசுத்தமாகும்.

யாருக்கு இந்த அகங்காரம் இறந்துவிட்டதோ அவனுக்கு அதற்குமேல் மரணம் என்பதே கிடையாது. அவன் மரணத்தை வென்றவனாவான். சுத்தாத்மாவுக்குச் சாவு கிடையாது.

தெள்ளிய நீருடைய அந்தத் தண்குளம் தான். எல்லாம் வென்றவனின் தெளிந்த மனமுடைய இன்ப நிலை. அதன் நடுவில் தன் இறக்கையில் தலையைப் புதைத்துப் படுத்திருக்கும் அன்னம்போல், கிரியைகளிலிருந்து விலகி நிற்பது அதற்குரிய பலனை தனக்குள்ளேயே அடக்கிக் கொண்டு நிற்கிறது. செய்கைகளிலிருந்து விடுபடுதலால் செய்கையும் செய்கைக்குப் பலனும் அதுவே.

தன்னுள் இருக்கும் உயிரின் உண்மையை உணர்ந்துகொண்டவன் உள்ளத்தொளி நிறைந்தவன்; அவனுக்குப் புறவொளி தேவையே இல்லை. அதனால்தான் கௌதமன் யாதொரு ஒளியின் உதவியுமின்றி இருட்டில் வழி நடந்து அங்கிருந்து திரும்பினான்.

கௌதமன் திரும்பவும் தன்னிடத்திற்கு வருகிறானல்லவா? எவ்வளவு தூரம் உயரச் சென்றாலும், அந்தத் தன்னிடத்திற்கு திரும்பித்தானாக வேண்டுமென்பது உண்மை. ஆனால், அவன் திரும்பும்போது தன்னுடன் தான் அடைந்த நிலையிலிருந்து, சென்ற இடத்திலிருந்து, ஏதோ ஒரு மகத்துவத்தைக் கொண்டு வருகிறான். அதனால் அவனுக்கு மற்றவர்கள் தலை வணங்குகின்றனர். கௌதமன் திரும்பியதும் முன்பு இவனிடமிருந்து பிரிந்து சென்ற யாத்ரீகர் கூட்டம் இவனை அடையாளம் கண்டுகொள்ளவில்லை; ஆனால் மரியாதையாய் வரவேற்கிறது. ஆரம்பத்தில் அரைப் பைத்தியம்; அந்தியில் அறிஞன்.

ஆகவே, ரகஸ்யார்த்தமான கதை: மற்றவைகளுடன் சேர்ந்து சென்றுகொண்டிருந்த ஒரு ஜீவாத்மா பிரிந்து தனிமையை நாடிச் செல்லுகிறது. தனிமையில் ஆனந்தம் காண்கிறது; மனசாக்ஷியின் சக்தியை அறிகிறது.

பின்னர் நியாய புத்தியால் தூண்டப்பட்டு, துன்பங்களின் ஆரம்பத்தை அறிந்து, சிற்றின்பம், கோபம், அகங்காரம் இவைகளைவிட்டு தன்னிலுள்ள மேன்மையைத் தேடிச் செல்லுகிறது. வழியில் தவறுகள் செய்து திருந்தி, கடைசியில் அதை அடைகிறது. அதை அடையவே, மரணத்தையும் வென்று ஜோதி வீசத் திரும்புகிறது.

ஒரு ஜீவாத்மா பரிசுத்தத் தன்மை அடைவதுதான், உருவகப் படுத்தி மேலே எழுதப்பட்ட கௌதமன் மரணத்தை வென்ற வரலாறு.


**அர்ஸான் & கோ.,**

**14, லிங்கி செட்டித் தெரு, சென்னை.**

**கொச்சி, கல்பகா ஆயில் மில்லின் அத்தாட்சி பெற்ற வியாபாரிகள்**

★

**கல்பகா வாஷிங் பார் சோப்புகள், டுவின்ஸ், சிங்கில், டாய்லட்டுகள், கல்பகா 'கார்பாலிக்' பார்கள், டுவின்கள், டால்கம் பவுடர்கள், பினைல் முதலிய யாவும் கிடைக்கும்.**

★

**நயம்! நியாய விலை!! நாணயம்!!!**

# நிர்மலா

கு. ரா.






## 1. புயல்

இரவு ஒன்பது மணி இருக்கும். வீதிகளில் ஜன நடமாட்டமே யில்லை. 'ஹோ! ஹோ!' என்று காற்று பேரிரைச்சல் செய்து கொண்டிருந்தது. 'விர், விர்' என்று வீசிய அப்புயற் காற்றின் முன் நிற்க முடியாமல் அனேக மரங்கள் முறிந்து விழுந்த ஓசை அடிக்கடி கேட்டுக்கொண்டிருந்தது. வான வெளியில் கரு மேகங்கள் அங்குமிங்கும். சிதறிய வண்ணம் இருந்தன. சற்று நேரத்திற்கு ஒரு முறை 'பளீர்' என்று ஒரு மின்னல் ஒரு திசையில் புறப்பட்டு, மற்றொரு திசையில் சென்று மறைந்த வண்ணமிருந்தது. வான முகடே பெயர்ந்து விழுந்து விடும்படி இடி இடித்துக் கொண்டிருந்தது. நடுநடுவே பௌர்ணமிச் சந்திரன் தன் தலையைக் காட்டிக் கொண்டிருந்தான்.

அறையில் தன்னந் தனியனாய் உட்கார்ந்திருந்தேன். என் மனதில் பெரிய - புயல்! மேஜை மேலிருந்த கண்ணாடியில் என் முகத்தைப் பார்த்தேன். ஐயோ! என்ன கோரம்? எவ்வளவு விகாரம்? நான் எவ்வளவோ முறைகள் கண்ணாடியில் கண்ட என் அழகை - என் முகத்தின் எழிலை இன்று காண முடியவில்லை. அதில் பயங்கரம் தான் குடி கொண்டிருந்தது.

என் மனம் என்னைச் சபித்துக் கொண்டிருந்தது.

"பாவி! உத்தம நண்பனுக்கல்லவா துரோகம் செய்ய நினைத்தாய்? ஒரு பாவமுமறியாக் கன்னியின் வாழ்க்கையைப் பாழ் செய்ய அல்லவா எண்ணினாய்?" என்று இடித்துக் காட்டிற்று.

ஐயோ! அதை நினைத்தாலும் எவ்வளவு பயங்கரமாய் இருக்கிறது. என் உடல் எப்படி நடுங்குகிறது? வேண்டாம்! இந்தக் கடும் பழி எனக்கு வேண்டாம்! உத்தம நண்பனுக்குத் துரோகம் செய்ததாக அவப் பெயர் எனக்கு வேண்டவே வேண்டாம்.

ஹே, பகவானே! இவ்வளவு நாட்கள் என்னை ஏன் குருடனாகச் செய்திருந்தாய்? ஏன் இரக்கமற்றவனாக - கல் நெஞ்சனாக - துரோகியாக நடக்கச் செய்தாய்? நான் என்ன பாவம் செய்தேன்?

நினைக்க நினைக்க பைத்தியம் பிடித்து விடும்போலல்லவா இருக்கிறது. ஐயோ! ஏன், என் மனம் இப்படித் துடிக்கிறது? 'மர்மம்', 'ரகசியம்', 'கொடுமை' என்றெல்லாம் ஏன் அலறுகிறது?

'படார்' என்று ஜன்னல் புயல் வேகத்தில் அடித்துக் கொண்டது. என் தலையில் யாரோ சம்மட்டியை எடுத்து 'படார்' என்று அடித்ததுபோல் இருந்தது. வெளியில் இயற்கையன்னை புரிந்து கொண்டிருந்த திருவிளையாடல் என் மனநிலையையே பிரதிபலித்தது என்பதுகூட எனக்குத் தெரியவில்லை.

கண்களில் ஜலம் பெருகிக் கொண்டிருந்தது.

"ஸ்வாமி! பகவானே! எனக்கு வேண்டாம் நிர்மலா.....வேணுவே எடுத்துக் கொள்ளட்டும். அப்போதுதான் எனக்கு நிம்மதி

ஏற்படும்" என்று பிரார்த்தித்தேன்.

என் மனக்கண் முன், சென்ற இரண்டு வருடங்களில் நிகழ்ந்த சம்பவங்கள் சினிமாப் படம்போல் தோன்றின. புயலைப் போல் 'விரு விரு'ப்பாக ஓடின. என்னையே மறந்து அதில் ஈடுபட்டேன்.

## 2. நட்பு

'லக்ஷ்மியும், சரஸ்வதியும் ஒன்று சேருவதில்லை' என்று சொல்லுகிறார்கள் அல்லவா? அந்த விதிக்கு விலக்காகப் பிறந்தவன் நான். குருவிமலை ஜமீன்தாரின் மகனாகப் பிறந்த நான் 'படித்துவிட்டு ஒரு வேலை தேட வேண்டிய அவசியம் என்ன?' என்று எல்லோரும் எண்ணினர். என் தகப்பனாருக்கோ தன் மகன் படித்துப் படித்து இளைத்துப் போவானே என்ற கவலை!

ஆனால் நான் சும்மா யிருக்க முடியுமா? 'படிக்க வேண்டும்; படிக்க வேண்டும்' என்று துடி துடித்துக்கொண்டிருந்த என்னை - என் அவாவை - என் பெற்றோர் எப்படித் தடுக்க முடியும்? அவர்களுடைய ஒரே பிள்ளையான என் விருப்பத்தின்படி அவர்கள் நடந்து கொண்டதன் விளைவாக நான் 'எஸ். எஸ். எல். ஸி.' பரீக்ஷையில் தேறினேன்.

மேல் படிப்பிற்காக எங்கள் ஜமீனுக்கு அருகில் இருந்த திருச்சிக்குச் சென்றேன். 'இண்டர் மீடியட்' வகுப்பில் சேர்ந்தபோது எனக்குப் பதினேழு அல்லது பதினெட்டு வயதிருக்கலாம்.

* * *

கல்லூரியில் நான் சேர்ந்த பதினைந்து நாட்களுக்குப் பிறகு தான் வேணுகோபாலன் வந்து சேர்ந்தான். அவனும், நானும் ஒரே வகுப்புதான்.

முதல் சந்திப்பிலேயே இருவரும் ஒன்றாகி விட்டோம். நான் 'வேணு! வேணு!' என்று உயிரை விடுவேன். அவன் 'வசந்த்! வசந்த்!' என்று உயிரை விடுவான்.

நான் கல்லூரியுடன் இணைக்கப் பெற்றிருந்த ஹாஸ்டலில் இருந்தேன். அவன் ஊருக்குள் ஒரு அறை எடுத்துக் கொண்டு தனியே வசித்து வந்தான்.

வேணு என்னைவிட ஏழு வயது பெரியவன். 'வேணு படிப்பில் பூஜ்யமோ? அதனால்தான் இத்தனை வயதில் கல்லூரியை எட்டிப் பிடித்திருக்கிறானோ?' என்று முதலில் சந்தேகப்பட்டேன். 'அப்படி இல்லை' என்று பின்னால் வேணுவின் மூலமாகத் தெரிந்தது.

அவன் ஏழை. தாய், தந்தையரைப் பிரிந்து பன்னிரண்டு



வருடங்களுக்கு மேலாகிறது. அவனுக்கு உதவி செய்வாரோ கிடையாது. கஷ்டப்பட்டு 'எஸ். எஸ். எல். ஸி.' வரை படித்துவிட்டான். பின்னர் ஒரு வேலையில் அமர்ந்து, ஏழு வருடங்கள் அதில் நிலைத்திருந்தான். அவ் வேழு வருஷங்களில் அவன் சிறுகச் சிறுகச் சேர்த்து வைத்திருந்த பொருளைக்கொண்டு கல்லூரியில் சேர்ந்தான். தற்சமயம் மூன்று 'டியூஷன்'களும் வைத்துக் கொண்டிருந்தான்.

மேற்படி விவரங்களைக் கேட்ட பிறகு, நான் அவனை ஒன்று கேட்டுக்கொண்டேன்: "வேணு! பேசாமல் நீ 'டியூஷன்'களை நிறுத்தி விடு. நான் உனக்கு வேண்டிய பணம் தருகிறேன். என்னுடைய அருமையான நேரத்தில் ஏன் நான்கு மணி வீணாக வேண்டும்."

ரொம்பவும் யோசித்த பிறகு, அவன் இரண்டு 'டியூஷன்'களை நிறுத்திவிட்டு, ஒரு 'டியூஷனை' மட்டும் நிறுத்திக்கொண்டான் - என்னிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு.

"எதற்கு அந்த ஒரு 'டியூஷன்' மட்டும்?" என்று கேட்டேன்.

"அதை நீ தயவுசெய்து கேட்காதே."

"கண்டிப்பாக நீ சொல்லித்தான் ஆகவேண்டும்."

"எனக்கு உபாத்தியாயர் தொழில் என்றால் ஆசை. இப்பொழுது முதல் கொண்டே அதற்கு வேண்டிய பயிற்சி செய்து கொள்ளுவது நல்லதல்லவா?" என்று கூறித் தப்பித்துக் கொண்டான். ஆமாம்! அவன் கூறிய காரணம் உண்மையல்ல என்பது பின்னால் வெளிப்பட்டது.

இவ்விதம் ஏழு மாதங்கள் சென்றன.

## 3. நாட்டியம்

வேணுவின் கையிலிருந்த நோட்டீஸை வாங்கிப் பார்த்தேன்:

"ஸ்பெஷல் ஏற்பாடு"

இன்று மட்டும்! தவறவிடாதீர்!
குமாரி நிர்மலாவின் நாட்டியம் இன்று (மனோகரா) - நாடகத்தில் - ஒரு விசேஷ கட்டம். இன்று மட்டும்தான் இது நடக்குமாதலால் ஏமாற்றமடையாதீர்!"

நோட்டீஸில் ஒரு சிறு படமும் வெளியிடப்பட்டிருந்தது. "படத்தைப் பார்த்தால் நாட்டியம் ஜோராக இருக்கும்போலிருக்கிறதே" என்றேன்.

"இன்று கண்டிப்பாகப் போக வேண்டியதுதான்" என்றான் வேணு. அவன் நோட்டீஸை என்னிடம் கொண்டுவந்து காட்டி

யதே என்னை நாட்டியக் கச்சேரிக்கு இழுக்கத்தானே !

* * *

### நிர்மலா!

எங்கு பார்த்தாலும் இதே பேச்சுத்தான். யாரைச் சந்தித்தாலும் அவளுடைய நடனத்தைப் பற்றியே பேசினார்கள். பத்திரிகைகளிலெல்லாம் அவளுடைய படத்தை வெளியிட்டு, அவளுடைய நடனத்தைப் பற்றி விமர்சனமும் எழுதி யிருந்தார்கள்.

அன்று தியேட்டரில் எள் போட்டால் எண்ணெய் கிடைக்கும்படியான கூட்டம். நாடகம் ஆரம்பமாயிற்று. சில நிமிஷ நேரத்திற்குள் 'போதும், போதும்' என்றாகிவிட்டது. நடிகர்கள் அழுது வடிந்தார்கள்.

"உள்ளே போ !" "டான்ஸ்காரியை வரச் சொல் !" என்று ஜனங்கள் கூச்சலிட்டனர்.

மறு தட்வை திரை தூக்கப்பட்டபோது......... எல்லோரும் மெய்மறந்து 'ஹா ! ஹா !' என்றார்கள். மேடை அலங்காரத்திடையே ஒரு சிலை போன்று நின்றிருந்தாள் நிர்மலா. திரை தூக்கப்பட்டதும் சபைக்கு வணக்கம் செய்துவிட்டு நடனத்தை ஆரம்பித்தாள். பிறகு நாடகம் நடக்கவே யில்லை !

எனக்கு 'தியேட்டரில் இருக்கிறோம்' என்ற ஞாபகமே இல்லை. பக்கத்தில் வேணு இருந்ததும் மறந்து விட்டது. ஒரே யடியாக நிர்மலாவின் நாட்டியத்தில் மூழ்கினேன்.

அன்று தியேட்டரை விட்டு வெளியே வரும்போது, நிர்மலா நாட்டிய மாடிக்கொண்டே என் இருதயத்தில் இறங்கி யிருந்ததை உணர்ந்தேன்.

* * *

"என்னடா வசந்த் ! அப்படி வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாயே ? நாட்டியங்கூட அவ்வளவு பிரமாதமாக இல்லையே" என்றான் வேணு.

"என்ன சொன்னே ? நாட்டியம் பிரமாதமாக இல்லையா ? உனக்கென்ன தெரியும், அதன் மகிமை" என்றேன்.

"அநன் மகிமையா ? அவள் மகிமையா ?" என்று கூறிச் சிரித்தான் வேணு. என் மனதில் விவரிக்க இயலா உணர்ச்சியொன்று உண்டாயிற்று. பதில் சொல்லாமலிருந்தால் அவன் கேலி செய்வான் என்று நினைத்து, "ஆமாம், அவள் மகிமைதான் ! உங்களுக் கெல்லாம் அவள் தான் பெரிசு. உங்களைப் போன்றவர்கள் இருப்பதால் தான் நமது கலைகள் உருப்படுவதில்லை." என்று ஒரு போடு போட்டேன். அவன் முகத்தில் ஈயாடவில்லை.

"சரி ! அப்படித்தான் வைத்துக் கொள்" என்று கூறி நிறுத்திவிட்டான்.

"வேணு ! அவள் யாரென்று தெரியுமாடா ?" என்று அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு கேட்டேன்.

"அவள் யாராக இருந்தால் என்ன ? உனக்கு அவள் நாட்டியம் தானே பிரதானம்" என்றான்.

"அதற்கில்லை, வேணு. அவள் தகப்பனார் யாரென்று தெரிந்தால், நேரில் பார்த்து, இரண்டு வார்த்தைகள் சொல்லி நமது சந்தோஷத்தைத் தெரிவிக்கலாமல்லவா ?" என்றேன்.

"ஆகட்டும்,விசாரித்துச் சொல்லுகிறேன்" என்று கூறிவிட்டு வேணு போய்விட்டான்.

* * *

அன்று இரவு மற்று மொரு முறை நிர்மலாவின் அற்புதமான நாட்டியத்தைக் காணும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. ஆமாம், கனவில்தான் !

## 4. காதல்

நிர்மலாவை நேருக்கு நேர் சந்தித்தேன். என் சுதந்திரமும் பறிபோயிற்று. அவளுக்கு அடிமையாவதில் யாருக்குத்தான் விருப்பமிருக்காது ?

நாடக தினத்தன்று தூர இருந்து பார்த்தேன். சுற்றிலும் மேடை யலங்காரம். அதுவன்றி பகட்டான உடை இயற்கை அழகை மறைத்து விட்டிருந்தது. இன்று அவைகளெல்லாம் எங்களிடையே வரவில்லை. உண்மையான நிர்மலா என்முன் இரண்டே நிமிஷங்கள் நின்றுவிட்டு மின்னல்போல் மறைந்தாள். அந்த இரண்டு நிமிஷ நேரத்தில்தான் நான் என் சுதந்திரத்தை இழந்து அவள் அழகுக்கு - அவளுடைய கரு விழிகளுக்கு - ஏன் ? அவள் அபிநயத்திற்கும் - அடிமையானேன்.

அவள் மறைந்ததும் என் சுய நினைவைப் பெற்றேன். எங்கள் எதிரே ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்த ராமசுவாமி ஐயர் - நிர்மலாவின் - தந்தை - எங்களைப் பார்த்து பல்லை இளித்தார்.

"நாட்டியம் ரொம்ப நன்றாக இருந்தது" என்றேன். நிர்மலா சற்று முன் செய்த அபிநயத்தையும் சேர்த்துத்தான் சொன்னேன்.

"என்னமோ உங்களைப்போல் ரஸிகர்கள் இருப்பதை உத்தேசித்தே இந்த ஏற்பாட்டிற்கு ஒப்புக் கொண்டேன். அவளுக்கு என்னமோ இஷ்டமே யில்லை. நடுக்கம் வேறே" என்றார்.

"அப்படி என்ன வயசாகி விட்டது ? சிறியவள்தானே. இன்னும் இரண்டு கச்சேரிகள் நடந்தால் சபைக் கூச்சம் எல்லாம் தன்னாலே பறந்து விடாதா ?" என்றேன்.

"ஹூம் ! அவள் எங்கே ஒப்புக் கொள்ளப் போகிறாள். இந்த ஒரு தட்வை செய்ததற்கே என்னை எவ்வளவு கடிந்து கொள்ளுகிறாள் தெரியுமா ?"

"இன்னும் இரண்டு மூன்று கச்சேரிகளுக்காவது ஏற்பாடு செய்ய வேண்டியது உங்கள் பொறுப்பு. ஏன், வேணு ! நீயும் அவருக்கு ஒத்தாசை செய்ய வேண்டும், தெரியுமா ?" என்றேன் நான்.

"ஆகட்டும்" என்றான் அவன்.

* * *

வேணு முதலில் என்னைக் கூப்பிட்டு, "வசந்த்! இன்று மாலை தயாராக இரு. நிர்மலாவின் வீட்டிற்கு அழைத்துப் போகிறேன்'' என்று கூறிய போது, எனக்கு வியப்பாக இருந்தது.

"உண்மையாகவா? அவள் தகப்பனார் யார் என்று கண்டு பிடித்து விட்டாயா?'' என்று கேட்டேன்.

"அந்தக் கவலை யெல்லாம் உனக்கெதற்கு? என் பின்னோடு வா. உன்னை அழைத்துப் போகிறேன். ஆனால் இரண்டு வார்த்தைகளை மட்டும் முன்னதாகத் தயார் செய்து கொள்'' என்றான்.

அன்று மாலை நாங்கள் அவர்கள் வீட்டிற்குச் செல்லும்போது நான் தூண்டித் தூண்டிக் கேட்ட பிறகு, வேணு உண்மையை வெளியிட்டான். அவன் பிடிவாதமாக விடாமல் வைத்துக் கொண்டிருந்த 'டியூஷன்' நிர்மலாவுடையதுதான்!

நிர்மலா ஐந்தாவது பாரத்தில் படித்துக் கொண்டிருந்தாள். வயது பதினான்கு இருக்கும். அவள் தகப்பனாருக்கு சப்-கலெக்டர் ஆபீஸில் குமாஸ்தா வேலை. சம்பளம் எண்பது ரூபாய். பெரிய குடும்பம். நிர்மலாவுடன் கூடப் பிறந்தவர்கள் நான்கு பேர். இரண்டு பையன்கள்; இரண்டு பெண்கள். நிர்மலாதான் எல்லோருக்கும் மூத்தவள். தாயோ நோயாளி. வீட்டு வேலையில் பெரும் பகுதியை இவள்தான் செய்து வந்தாள்.

வீட்டு வேலை; படிப்புக்குப் படிப்பு; இவ்வளவுக்கு மிடையே நாட்டியத்தில் இவ்வளவு அபூர்வ தேர்ச்சி யடைந் திருப்பதை எண்ணி வியப் படைந்தேன். இவ்வளவு விவரங்களையும் வேணுதான் எனக்குச் சொன்னான்.

"அவர் கண்டிப்புப் பேர்வழி. குடும்ப பாரம் தாங்க முடியாமல் குழந்தைகளை அடிக்கடி கடிந்து கொள்ளுவார். நிர்மலாவை சில சமயம் அடித்து விடுவதும் உண்டு'' என்று முடித்தான் வேணு.

அவளுடைய வாழ்க்கையை எண்ணி எண்ணி பரிதாபப் பட்டேன். அவளிட முள்ள கலை இப்படி அழிந்து பாழாய்ப் போகிறதே என்று வருத்தப்பட்டேன். அவளை நான் மணந்து கொண்டால் அவளிடமுள்ள கலையை வளர்க்கலாமல்லவா என்ற ஆர்வம் என் உள்ளத்தில் பொங்கியது. என் பிதா எனக்குச் சேமித்து வைக்கும் செல்வத்தைக் கொண்டு என்னதான் செய்ய முடியாது? ..............மனக் கோட்டையின் அஸ்திவாரம் அமைந்த பிறகு கட்டிடம் எழுப்ப எவ்வளவு நேரம் ஆகப்போகிறது?

என் மனோரதம் ஈடேறுவது அவ்வளவு கடினமல்ல என்று என் மனதில் ஒரு நம்பிக்கை உண்டாயிற்று. என்னைப்போல் நல்ல பணக்கார, அழகிய படித்த (படிக்கும்) வாலிபனை மாப்பிள்ளையாக அடைவதில் அவருக்கு என்ன தடையிருக்கப் போகிறது?

அவருடைய சிநேகிதத்தை வளர்த்த நிச்சயித்தேன். வேணுவின் உதவி இவ் விஷயத்தில் எனக்கு நிச்சயமாகக் கிடைக்கும் என்று நம்பினேன்.

நம்பிக்கை பலப்பட்டது.

காதல் விருக்ஷமும் தழைத்தோங்கியது.

## 5. விவாக ஏற்பாடு

நானும் வேணுவும் படித்து வந்த கல்லூரியுடன் இணைக்கப் பெற்ற உயர்தரக் கலாசாலையில்தான் நிர்மலா வாசித்து வந்தாள். சென்ற எட்டு மாதங்களாக மற்ற பெண்களுடன் அவளும் ஒருவளாகக் கலாசாலைக்கு வந்து கொண்டும், போய்க் கொண்டும் இருந்தாள்.

இப்பொழுது என்னுடைய கண்கள் அவளை மட்டும் தேடித் திரிந்தன. யாராவது பெண்கள் 'கல்லூரி காம்பவுண்டு' வழியாகப் பள்ளிக் கூடத்திற்குச் சென்றால் "அது நிர்மலாவோ?'' என்று என் கண்கள் திருட்டுத்தனமாகக் கவனிக்கும். நிர்மலா இன்னும் நான்கைந்து மாணவிகளுடன் சேர்ந்து வந்தாலும் அவளை மட்டும்தான் என் விழிகள் கவனித்தன.

ராமசாமி ஐயர் என்னுடைய நெருங்கிய நண்பராகி விட்டார். வேணு பாடம் சொல்லிக்கொடுக்கச் செல்லும் போது அவனுடன் செல்வது போல் செல்வேன். நாளடைவில் நானே தனியாகச் செல்லும் தைரியத்தை யடைந்தேன். வேணு இல்லாமல் நானும், ராமசாமி ஐயரும் எவ்வளவோ மாலைகளைக் கழித்திருக்கிறோம். நான் வந்து விட்டது தெரிந்தால் அவர் 'ஆபீஸ்கட்டு'களைக்கூடப் போட்டு விட்டு என்னுடன் உலாவ வந்து விடுவார்.

என் வேண்டுகோளுக் கிணங்கவும், வேணுவின் பலவந்தத்தின் பேரிலும் நிர்மலாவின் நடனம் இன்னும் இரண்டு மூன்று முறை நடைபெற்றது. நாளுக்கு நாள்--கச்சேரிக்குக் கச்சேரி--அவள் பெயர் உயர்ந்தோங்கியது. கல்லூரி அரங்கத்திலும் ஒரு நடனக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்திருந்தோம். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அவளுக்கு 'டான்ஸ் பாப்பா' என்ற பெயர் ஏற்பட்டது. பிள்ளைகள் தூரத்தில் அவளைக் கண்டால், "டான்ஸ் பாப்பா வருகிறாள்'' என்று கூவி விட்டு ஓடி விடுவார்கள். அவர்களை யாரால் தடைசெய்ய முடியும்? எனக்கென்னமோ கோபம் கோபமாக வரும். "என் கையில் அகப்பட்டால் நசுக்கி விடுவேன்'' என்று பற்களைக் கடிப்பேன். ஆனால் என் கையில் அகப்பட்டால்தானே!

* * *

கல்லூரி மூட இன்னும் பதினைந்தே நாட்கள் இருந்தன. இந்த இரண்டு மூன்று மாதங்களுக்குள் நான் எவ்வளவோ மாறியிருந்தேன். என் மனது வெகுவாகக் கெட்டு விட்டது. அதற்குத்தான் எவ்வளவு சுதந்திரம் கொடுத்துவிட்டேன்?

என்னுடைய ஆருயிர் நண்பனான வேணுவின் மீதே நான் சந்தேகம்—அவநம்பிக்கை—கொண்டேன் என்றால் என் மனநிலை எப்படி இருந்திருக்க வேண்டும்? வேணு ஒரு சமயம் எனக்குப் போட்டியாக வரக்கூடுமோ என்ற சந்தேகம் எனக்குண்டாயிற்று. அவன் உதவி பெற்று

என் மனோரதத்தை ஈடேற்ற எண்ணியிருந்தேனல்லவா? அவ்வெண்ணத்தை அறவே மறந்து விட்டேன். மண விஷயமாக அவனைக் கலந்து கொள்வது கூடாது என்று நிச்சயித்தேன். ராமசர்மி ஐயர் என் பேச்சுக்கு ஏன் மாறு சொல்லப் போகிறார்?

அந்த இரண்டு மூன்று மாதங்களில் நானும், வேணுவும் முன் போல் நெருங்கிப் பழகவில்லை.

ராமசர்மி ஐயர் என் விருப்பத்திற்கு இணங்கினார். நிர்மலாவை எனக்கு மணமுடிப்பதாக வாக்களித்தார். அவருக்கு அதில் பரம திருப்தி. என்னுடைய பூர்வோத்திரங்களைக் கேட்ட அவர், என்னை மாப்பிள்ளையாக அடைவதில் ஒரு பெருமையைக் கண்டார். பெண்ணைக் கேட்க வேண்டிய அவசியங்கூட இல்லை என்று கூறினார்.

முதலில் என் மனம் இதை ஒப்ப மறுத்தது. அவள் விருப்பமின்றி மணந்தால் அவள் வாழ்க்கை பாழாகி விடாதா என்றெண்ணினேன். ஆனால் ராமசாமி ஐயரின் வாக்குறுதியும் என்னைப் பற்றி நான் கொண்டிருந்த அபிப்பிராயமும் சேர்ந்து அவ்வெண்ணத்தை அழித்தன.

நான் ஊருக்குப் போனதும் அப்பாவிடம் சொல்லி விவாகத்திற்கு ஏற்பாடு செய்வதாகவும், பிறகு எங்கள் ஜமீனிலேயே கல்யாணத்தை வைத்துக் கொள்ளலாம் என்றும் சொன்னேன்.

இருவருக்கும் ஒரு கவலை தீர்ந்து மன நிம்மதி உண்டாயிற்று.

“கல்யாணப் பத்திரிகை போடு முன் விஷயத்தை ஒருவருக்கும் சொல்ல வேண்டாம். எல்லாம் உங்களுடனேயே இருக்கட்டும்” என்று மறக்காமல் சொல்லிவைத்தேன். இதைச் சொன்னபோது என் உள்ளத்தில் வேணுவின் ஞாபகம்தான் இருந்தது. அவனுக்கு இவ்விஷயம் முன்னதாகத் தெரியக் கூடாது என்றுதான் இப்படிச் சொன்னேன்.

‘என் உயிர்த் தோழனுக்குக் கூடத் தெரியக் கூடாது’ என்று எண்ணும்படி என் மனம் மாறி விட்டதை நினைத்தால் ......., ஐயோ! எவ்வளவு பயங்கரமாக இருக்கிறது? இப்படிப் பட்ட துரோகத்திற்கும் இடம் கொடுக்கும்படி செய்து விட்டதே அந்தக் காதல்.

காதல் என்னைக் குருடனாக்கியது. என் வேணுவைக் காண முடியாமல் செய்து விட்டது. அவன் மனதை அறியும் சக்தியை இழந்தேன். ஆனால் அப்பொழுது நான் அதைப் பொருட்படுத்தவில்லை.

## 6. மின்னல்

நேற்றைய தினம் நானும் வேணுவும் உலாவச் சென்றிருந்தோம். விடுமுறை ஆரம்பமாக இன்னும் இரண்டு நாட்களே இருந்தன. ஆகவே, அவன் கூடவே சுற்றிக் கொண்டிருந்தேன்.

ஆனால் நேற்று அவன் பழைய வேணுவாக இல்லை. எப்பொழுதும் குறுகுறுப்பாக, ஏதாவது வேடிக்கை செய்து கொண்டே வரும் அவன் நேற்று உன்மத்தனாய் என்னுடன் நடந்தான். அவன் கண்கள் கலங்கியிருந்தன. அவனுடைய கையில் ஒரு தமிழ்ப் பத்திரிகை இருந்தது.



நான் எவ்வளவோ பேச்சுக் கொடுத்தும் அவன் சரியாக பதிலளிக்கவில்லை. ஓரிரு வார்த்தைகளுடன் நிறுத்திக் கொண்டான். அப்படியே சிறிது தூரம் சென்றவுடன் நாங்கள் வழக்கமாக உட்காரும் கற்பாறை வந்தது. அதன் மீது அமர்ந்தோம்.

வேணு பத்திரிகையைப் பிரித்தான். ஏதோ ஒரு பக்கத்தையே விசேஷ கவனத்துடன் படித்துக் கொண்டிருந்தான். எனக்குக் கோபம் வந்து விட்டது.

“இது என்ன வேணு, இப்படியாகி விட்டாய்? இன்னும் இரண்டு நாட்களே இருக்கின்றன. என்னுடன் கூடப் பேசாமல் என்ன பத்திரிகை வேண்டியிருக்கிறது” என்றேன்.

வேணு பேசினான். அவன் குரல் தழுதழுத்திருந்தது, “வசந்தா! இதோ பார். இங்கே, சிகப்புக் கோடு கிழித்திருக்கும் வாக்கியத்தைப் படி. அது சொல்லும், நான் ஏன் இப்படியிருக்கிறேனென்று” என்று கூறிப் பெரு மூச்சு விட்டான். பத்திரிகையை என்னிடம் நீட்டினான்.

நானும் பார்த்தேன்.

“உங்கள் பொருள் பறிபோகப் போகிறது.” ஏதோவொரு கதையிலிருந்த வாக்கியமது. இன்னும் சற்றுத் தள்ளி இன்னொரு வாக்கியத்தின் அடியிலும் கோடு கிழிக்கப் பட்டிருந்தது.

“என்னைக் கைவிடப் போகிறீர்களா? .....உம்! என்னைப்போல் உங்களுக்கு நூறு பேர் அகப்படக்கூடும்.”

விஷயத்தை அர்த்தம் புரிந்து கொள்ள எனக்குச் சற்று நேரமாயிற்று. நான் சந்தேகப் பட்டது போல்தான் நிகழ்ந்திருக்க வேண்டும். ஆயினும், நான் புரிந்து கொள்ளாதவனைப் போல், “வேணு! இவைகளின் அர்த்தமென்ன?” என்று கேட்டேன்.

“வசந்த்! நான் இந்நாள்வரை உன்னிடம் சொல்லாமலிருந்த ஒரு விஷயத்தை இன்று சொல்லி விடப் போகிறேன். உன்னால் முடியுமானால் எனக்கு ஏதாவது யோசனை சொல்.” என்றான்.

அதற்குப் பிறகு அவன் சொல்லி வந்தவை நான் நினைத்ததற்குச் சரியாகத்தான் இருந்தன.

வேணுவும் நிர்மலாவும் ஆறு வருஷங்களாகப் பழகி வந்திருக்கிறார்கள். வேணு, ஐயர் உதவியால்தான் வேலை பெற முடிந்தது. அவருடைய உதவிக்காக வேணு அவருடைய பெண் நிர்மலாவுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து வருவது வழக்கம். ஒரு வருட

காலம் வேணு அவர்கள் வீட்டி லேயே வசித்து வந்தான். அப் போது அவளுக்கு ஒன்பது வயது தான் இருக்கும்.

இருவரும் வெகு சகஜமாகப் பழகி வந்தனர்; நிர்மலாவுடன் அவளுடைய தம்பிகள் இருவரும் பாடம் கற்றுக் கொள்ளுவார்கள். ஆனல் வேணு நிர்மலாவிடம் தான் அதிக அக்கரை காட்டு வான். இதனல் நிர்மலாவுக்கும், அவளுடைய தம்பிகளுக்கும் சண்டை நடப்பது முண்டு.

நாளாக ஆக இருவரிடையே அன்பு கனிந்து வந்தது. ஐய ருக்கு வேணுவை நன்கு பிடித்துப் போயிற்று. பையன், தான் ஏதோ சந்தடிச் சாக்கில் செய்து வைத்த வேலைக்காக தன்னிடம் எவ்வளவோ பணிவுடன் நடந்து கொள்வதில் அவருக்கு சந்தோ ஷம்; பெருமை. அவருடைய சம் சாரத்தின் பெருமையைப் பற் றியோ கேட்க வேண்டியதில்லை. வேணு அவர்கள் வீட்டுச் சாமான் களை அடிக்கடி வாங்கி வருவது வழக்கம்.

இவ்விதம் வேணு அவ் வீட்டி லிருந்தவர்களைக் கவர்ந்து விட் டான். தம்பதிகள் இருவரும் சேர்ந்து நிர்மலாவை வேணுவுக் குக் கல்யாணம் செய்துகொடுத்து விடுவதென்று தீர்மானித்தனர். நிர்மலா 'எஸ். எஸ். எல். ஸி.' வரையாவது படித்த பிறகு விவா கத்தைச் செய்து விடலாம்என்று முடிவு செய்தனர். வேணுவுக்கு இது சம்மதம் எனச் சொல்லவும் வேண்டுமா?

ஆனல் இன்னும் மூன்று வரு டங்கள் பொறுக்க வேண்டுமே என்று அவனுக்கு வருத்தமா யிருந்தது. அந்த மூன்று வரு டங்களுக்குள் அவர் மனம் மாறி விட்டால் என்ன செய்வது? ஆனல் நடப்பது நடந்துதானே தீரும் என்று பொறுத்து வந் தான். அவன் எண்ணியபடியே ஆயிற்று.

சென்ற வருஷம் ராமசாமி ஐயர் மனைவி படுத்த படுக்கை யாகி விட்டாள். இந்த ஆறு வரு ஷங்களில் அவருக்கு மேலும் இரண்டு குழந்தைகள் பிறந்து விட்டன. இரண்டும் பெண்க ளாகவா இருக்க வேண்டும்?

யுத்தம் வேறு வந்து விட்டது. பஞ்சம் பிடித்து வாட்டி யது. சாமான்களின் விலை ஒன்றுக்கு நான்கைந்து மடங்கு கள் பெருகியும், அரசாங்கத்தார் பத்து, பன்னிரண்டு ரூபாய் கூட் டிக்கொடுத்தால் அது எப்படிப் போதும்? மனைவியின் மருந்துச் செலவு நாளுக்கு நாள் அதிகமாகி வந்தது.

குடும்பபாரம் தாளாது தத்த ளித்தார் ராமசாமி ஐயர். செல வில் மிச்சம் பிடிக்க தன் மகள் நிர்மலா நாட்டியம் கற்று வருவ தையும் நிறுத்தி விட்டார். "பிழைத்துக் கிடந்தால் பார்த் துக் கொள்ளலாம்" என்று சொல்லி விட்டார். தரித்திரம் உண்டானல் வேதாந்த நினைவும் கூடவே வருவது இயற்கை தானே!

எடுத்ததற் கெல்லாம் 'சள்' ளென்று விழத் தொடங்கினர். கடன் தொல்லையும் அதிகரித் தது. ஆபீஸிலும் தொல்லை; வீட் டிலும் தொல்லை. மனைவியின் உடம்பு தேறுவதாகத் தோன்ற வில்லை.

இவ்வித கஷ்டங்களிடையே அவர் எண்ணங்களும் மாறத் தொடங்கின. ஆம்! தம் பெண் ணைப் பற்றிய எண்ணங்கள்தாம்.

"வேணுவோ பரம ஏழை சொத்து சுதந்திரமில்லாதவன். அவனுக்கு உறவினர்களோ, வேண்டியவர்களோ இல்லை. இருப்பதாகவும் தெரியவில்லை. அவனுக்கு நிர்மலாவைக் கொடுப் பதில் என்ன லாபம்? பிறந்த வீட் டில் தான் கஷ்டம். புகுந்த இடத் திலும் கஷ்டம் என்றால் நிர்மலா வுக்கு எவ்வளவு மனக்கசப்பு ஏற் படும்.

"அவளுடைய அழகுக்கு எவ் வளவோ பணக்காரப் பிள்ளைகள் கண்டிப்பாகக் கிடைப்பார்கள். ஒன் றிரண்டு வயது கூடயிருந்தாலும் கொடுத்து விடலாம். அவளும் சுகமா யிருப்பாள். நமக்கும் அத ஞல் ஏதாவது சௌகரியம் ஏற் படலாம்."

இவ்வித முடிவுக்கு வந்தார், அவர். "வேணு இப்போது தான் கல்லூரியில் சேர்ந்திருக்கிறன். இன்னும் நான்கு வருடங்களுக்கு அவனல் ஒன்றும் செய்ய முடி யாது. அதற்குப் பின் அவன் வேலை தேடி எப்பொழுது குடும் பம் வைப்பது?...... வேண் டாம்..... அவனிடம் சொல்லி விட வேண்டியது தான்" என்று வேணு விஷயமாகத் தீர்மானம் செய்து கொண்டார்.

[இவ்வளவும் அவருடைய செயல்களிலிருந்தும், சில சம்பா ஷணைகளிலிருந்தும் வேணு ஊகித் தறிந்து கொண்ட விஷயங்களா கும்.

இவ்விடத்தில் வேணு சற்று நிறுத்திப் பெருமூச்சு விட்டு, மறுபடியும் தொடங்கினன்.]

"ஆனல் நிர்மலாவுக்கு இவை யொன்றையும் அறிந்து கொள்ள முடியவில்லை. என்னைத்தான் கல் யாணம் செய்து கொள்ளப்போவ தாக எண்ணியிருந்தாள். எங்க ளிருவருடைய எண்ணங்களிலும் இடி விழுந்தது.

"இன்று 'டியூஷ'னுக்குப் போயிருந்தபோது என்ன நடந் தது தெரியுமா?" என்று கூறி விட்டு முகத்தை மூடிக் கொண்டு விம்மினன்.

என் வயிற்றைக் கலக்கியது. ஒரு வேளை ராமசாமி ஐயர் விஷ யத்தை வெளியிட்டிருப்பாரோ என்றெண்ணி பயந்தேன்.

"ஐயோ! அந்தக் காட்சியை எப்படிச் சொல்லுவது?" என்று பொருமினன் வேணு.

"என்ன நடந்தது, வேணு?" என்று கேட்டேன்.

சிறிது நேரம் சென்ற பிறகு, "இன்று பாட புஸ்தகங்களுடன் இதையும் கொண்டு வந்திருந் தாள். இந்தப் பக்கத்தைத் திருப்பி என்னிடம் காட்டினாள். அதைப் படித்ததும் எனக்கு விஷயம் விளங்கிற்று. அவள் முகத்தை நோக்கினேன். ஐயோ! அதில்தான் எவ்வளவு சோகம்! என்னை உற்றுப் பார்த்தாள். அவளுடைய கண்களிலிருந்து ஜலப் பெருக்கு ஓடியது. மறு க்ஷணம் உள்ளே போய் விட்டாள். சிறிது நேரம் பொறுத்திருந்தும் அவள் வரவில்லை. பையன் களும் வீட்டிலில்லை. ராமசாமி ஐயரும் ஆபீசிலிருந்து திரும்ப வில்லை. உள்ளே போனேன்.

தோட்டத்தில் அழுதுகொண்டு நின்றிருந்தாள் நிர்மலா. நான் வந்ததைக் கண்டு, கண்களைத் துடைத்துக் கொண்டாள். 'அம்மாவுக்கு விவரம் தெரியும். கேட்டுத் தெரிந்து கொண்டு உடனே ஏதாவது வழி செய்தால் தான் பயனுண்டு. இல்லாவிட்டால் . . . . .' என்று நிறுத்தினாள். நான் அவளை நெருங்கப் போனேன்.

'முதலில் விஷயத்தைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள். அப்புறம் . . . .' அவள் அங்கு நிற்கவில்லை. உள்ளே ஓடி விட்டாள். அங்கிருந்து நேராக வந்து விட்டேன்.'' என்று முடித்தான், வேணு.

''நாளைக்குப் பார்க்கலாம்'' என்று கூறி விட்டு அறைக்குத் திரும்பினேன்.

அன்று இரவெல்லாம் யோசித்தேன். எவ்வளவு தூரம் மண்டையை உடைத்துக் கொண்டும் சுய நலம்தான் முன் நின்றது. நிர்மலாவின் நாட்டியத் தோற்றம் என் மனக் கண்முன் தாண்டவமாடியது. வேணுவால் அவளை வைத்து ஆதரிப்பதே சிரமமாயிற்றே. அவன் அவளுடைய நாட்டியத்தை எப்படி அபிவிருத்தி செய்ய முடியும் என்றெண்ணினேன்.

அவ்விருவரிடையே இருந்த காதலைப் பற்றி என்னால் அதிகமாக நினைக்க முடியவில்லை. எனக்கு அவளிடமிருந்த கலையே பிரதானமாகத் தோன்றியது.

ஒரு வேளை அவளுக்கு நான் தான் மாப்பிள்ளை என்பது தெரியாமலிருக்கலாம். இது தெரிந்தால் ஏன் ஆக்ஷேபிக்கப் போகிறாள் என்று நான் என்னையே சமாதானம் செய்து கொண்டேன்.

இரண்டு உள்ளங்களைத் தவிக்க விட்டு விட்டு நான் நிம்மதியாகத் தூங்கினேன். அதுவும் எனக்கு மிகவும் பிரியமான இருவர்!

## 7. இடி

இன்று காலை எழுந்தவுடன் என் மனதில் நேற்று நடந்த விஷயங்கள் தோன்றின. ஆனால் அதை உடனே மறந்து விட்டேன். நேற்று இரவுதான் அதைப் பற்றி நிச்சயித்து விட்டேனே. நிர்மலாவை எப்படியாகிலும் நான் மணந்தேயாக வேண்டும். என் கண் எதிரே அவளுடைய கலை அழிவதைப் பார்ப்பதா?

ஆனால் அவளுடைய கலையும் அழியாமல், காதலும் நசிக்காமல் இருக்க வேறொரு வழியிருந்ததை நான் அப்போது உணரவில்லை. சுயநலம் என்னை ஞான சூனியனாக்கிவிட்டது.

* * *

பிற்பகல் மூன்று மணிதான் இருக்கும். வேணு என் அறையில் அவசர அவசரமாக நுழைந்தான். அவன் முகத்தைக் கண்டு நான் திடுக்கிட்டேன். நேற்றைக்கு இன்று எவ்வளவு மாறுதல்? முகம் வெளுத்திருந்தது. கண்கள் சிவந்திருந்தன. வாய் முணு முணுத்துக் கொண்டிருந்தது. தலையும் பரட்டையாக விடப்பட்டிருந்தது. ஏதாவது விசேஷம் நடந்திருக்க வேண்டும் என்று ஊகித்தேன்.

''வேணு! ஏன் இப்படியிருக்கிறாய்? இன்று ஏதாவது நடந்ததா?'' என்று கேட்டேன்.

''வசந்த்! எல்லாம் விசாரித்துத் தெரிந்து கொண்டேன். யாரோ ஜமீன்தார் பிள்ளைக்குக் கொடுக்கப்போகிறாராம். அவரை நேரில் கேட்டேன். இதைத் தவிர வேறு சொல்லக் கூடாதென்று மாப்பிள்ளையின் உத்தரவாம். கடைசியில் நிர்மலாவின் கதி இப்படியாகும் என்று நான் நினைக்கவேயில்லை. நான் என்ன செய்ய முடியும்? ஒரு ஜமீன்தார் எங்கே? ஏழை நான் எங்கே? ராமசாமி ஐயரும் நன்றாகச் சொல்லிக்காட்டி விட்டார். என்னை 'யோக்கியதையற்றவன்' என்று வெளிப்படையாகச் சொல்லாத குற்றம்'' என்று சொல்லிவிட்டு முகத்தை மூடிக் கொண்டு விம்மினான்.

என் கல்மனமும் கொஞ்சம் இளகத் தொடங்கிற்று. ''வேணு! ஏன் பெண்போல் அழுகிறாய்? வேண்டாம். நான் வேண்டுமானால் அவரைக் கேட்டுப் பார்க்கிறேன்'' என்றேன், ஆறுதலாக.

அப்பொழுது அவன் கூறிய பதில் என்னைத் திடுக்கிட வைத்தது.

''வசந்த்! நீ அவரிடம் போக வேண்டாம். நான் அதையும் கேட்டுவிட்டேன். எனக்கில்லாவிட்டாலும் உனக்காவது நிர்மலாவைக் கொடுக்கும்படி கேட்டேன். முடியாது என்று கூறி விட்டார்.'' என்றான் வேணு. எனக்கொன்றும் விளங்கவில்லை. நம் ரகசியத்தைக் காப்பாற்ற இப்படிச் சொன்னாரா, அல்லது உண்மையாகவே மூன்றாமவன் எவனுக்காவது ஏற்பாடு செய்து விட்டாரோ என்று என் மனது அடித்துக்கொண்டது. இவ்விரு கேள்விகளுக்கும் பதில் விளங்காமல் திகைத்தபோது, அவன் தொடர்ந்து பேசினான்:

''வசந்தா! அவருக்குப் பணத்தாசை பலத்து விட்டது. பெண்ணை பணத்திற்கு விற்கப் போகிறார். நான் ஏழை தானே என்று என்னை அவர் உதாசினம் செய்துவிட்டார். ஆனால் உண்மையில் நான் ஏழையில்லை என்று அறிந்தால் அவர் இப்படிச் செய்வாரா?'' என்றான்.

''வேணு! நீ சொல்வதொன்றும் எனக்கு விளங்கவில்லையே. நீ உண்மையில் பணக்காரனா? இவ்வளவு நாட்கள் என்னிடம் ஏன் சொல்லவில்லை? உன் உண்மைச் சரிதத்தை இப்போதாவது சொல்லமாட்டாயா?'' என்று அவன் கைகளைப் பற்றிக் கொண்டு கேட்டேன்.

''வசந்த்! சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன். நானும் ஒரு ஜமீன்தாரின் பிள்ளைதான். என் தாயாரையும், என்னையும் எவ்வளவோ அன்புடன் கவனித்து வந்தார் என் தந்தை. ஆனால் என் துரதிருஷ்டம், என் தாயார் என் சிறுவயதிலேயே காலமாகி விட்டாள். அதன் பின் என் தந்தை பல பேருடைய தொந்தரவின் பேரில் மறுமணம் செய்து கொண்டார்.

''என் சிற்றன்னையும் என்னிடம் அன்பாகவே நடந்து வந்தாள். ஆனால் அவளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்ததும் அவ்வன்பு குறைந்து வந்தது. நானும், என் தம்பியும் (சிற்றன்னையின் மகன்) ஒன்றாய் இருப்பதை அவள் விரும்பவில்லை. அவனுக்கு அப்போது நான்கு

வயது. எனக்கு அவன் மீது எவ்வளவோ ஆசை.

"நாளுக்கு நாள் சிற்றன்னைக்கு என் மீது இருந்த துவேஷம் வளர்ந்து வந்தது. தன் பிள்ளையின்.......சொத்துக்குப் பங்கு கேட்க வந்து விடுவேனோ என்றெண்ணி என்னைத் துரத்த முயற்சிகள் செய்தாள். நானும் அவைகளைச் சகித்துக்கொண்டு வந்தேன். நாளடைவில் என் தந்தையின் மனமும் மாறி விட்டது.

"துரதிருஷ்டம் என்னை மோசம் செய்தது. அந்த வருஷம் - சுமார் பதின்மூன்று வருடங்களுக்கு முன் - இரண்டாவது பாரத்தில் 'கோட்' அடித்தேன். 'கல்தா' கிடைக்குமுன் வீட்டை விட்டு வெளியேறினேன். எப்படியோ கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தேன்.

"நான் மட்டும் என் பங்கு ஆஸ்திக்கு உரிமை கொண்டாடுவதானல் இந்த நிலையிலா இருப்பேன்? என் நிர்மலாவுக்கு ஒரு வழி செய்ய வகையற்று நிற்பேன்? அவளை அவள் தகப்பனர் விற்க முயற்சிப்பதைப் பார்த்துக் கொண்டு சும்மா யிருப்பேனு?" என்று ஆவேசம் வந்தவனைப் போல் கூறினன்.

என் உடலெல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தது. என் மனது 'மர்மம்! ரகசியம்!' என்றெல்லாம் கூவிக் கொண்டிருந்தது.

"வசந்த்! என்ன செய்யலாம். நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். இப்போது நிர்மலாவைப் பார்க்கப் போகிறேன். அந்த ஜமீன்தார் மகனையே - அவனுக்கு என்ன வயசோ?— விவாகம் செய்து கொள்ளச் சொல்லப் போகிறேன். என் பலவீனத்தை ஒப்புக்கொண்டுதானே ஆகவேண்டும்?" என்று கூறி விட்டு எழுந்து சென்றான். அவனைத் தடுத்து நிறுத்தி எவ்வளவோ சந்தேகங்களைக் கேட்க வேண்டும் போலிருந்தது. ஆனல் தேகத்திலிருந்து ஒரு சக்தி அவ்விதம் செய்வதினின்று என்னைத் தடுத்து விட்டது.

"வேணு! வேணு! நான் உனக்குப் போட்டியாக வரமாட்டேன்" என்று மட்டும் என் வாய் முணு முணுத்தது. ஆம், அதற்குள்—அவ்வளவு சிக்கிரத்தில்—என் மனது இளகி என் முடிவை அடியோடு மாற்றி விட்டது.

மனம் இளக வேறொரு காரணமும் இருக்கத்தான்செய்தது. அது என் இருதயத்தில் இருந்து கொண்டு "ரகசியம்! மர்மம்!" என்று அலறிக் கொண்டிருந்தது.

## 8. அமைதி

மாலை எங்கும் வெளியே செல்ல முடியவில்லை. சாப்பாட்டிற்கும் போகவில்லை. இந்த நான்கு ஐந்து மணி நேரமாக நான் உட்கார்ந்த இடத்திலேயே இருக்கிறேன். மண்டையை உடைத்துக் கொண்டு அந்த ரகசியத்தை வெளிவரச்செய்யமுயன்று வெற்றியும் கண்டேன்.

அது மட்டும் உண்மையாகி விடுமானல் எனக்கு எவ்வளவு அவமானம்! 'அம்மாவுக்கேற்ற பிள்ளை' என்று உலகம் தூற்றாதா? உயிர் நண்பன் மேல் சந்தேகங்கொண்டு, அவனிடமிருந்து மறைத்து வைத்து விவாக ஏற்பாடு செய்தது எவ்வளவு கொடூரமான செய்கை? இளங் காதலர் இருவரை—ஆறு வருட காலமாக தூயகாதலைவளர்த்து,போஷித்து நம்பிக்கையுடன் இருந்த இருவரைப் பிரிக்க எண்ணி ஏற்பாடுகள் செய்தது எவ்வளவு பாதகம்?

நிர்மலாவுக்கு நான்தான் மாப்பிள்ளை என்று தெரிந்தால் எப்படி யிருக்கும்?

வேணு இன்று சொல்லியதை நினைக்க நினைக்க என் மனது ஏன் இவ்விதம் அடித்துக் கொள்ளுகிறது? 'ரகசியம்' என்று ஏன் அலறுகிறது?

......................................

உண்மையில் அவன் — வேணு என் சகோதரன் தானே ?

இந்த சந்தேகம் எனக்கு ஏற்பட்டதற்குக் காரணம், என் நினைவிற்கு வந்த ஒரு பழைய சம்பவந்தான். என் சிறு வயதில் வீட்டில் ஏதோ கலவரம் நடந்ததாக எனக்கு ஞாபகம். அப்போது எனக்குப் பிரியமானவர்கள் யாரோ ஒருவர் என்னைப் பிரிந்து சென்றது போல் இருந்தது. அவ்வளவுதான். அதை வைத்துக்கொண்டு எப்படி நிர்ணயிப்பது?

அது மட்டும் உண்மையாக இருந்து விட்டால் எவ்வளவு கேவலம்? அவன் முகத்தில் எப்படி விழிப்பது? அண்ணனுக்கே துரோகம் செய்யவா? தந்தையும் தாயும்தான் கொடுமைப் படுத்தி வீட்டை விட்டுத் துரத்தினார்கள். தம்பியாகிய நானும் அவன் வாழ்வைக் கெடுக்க வேண்டுமா? அவனுக்குப் பிரியமானவளின்— ஏன்? எனக்கும் பிரியமானவளின்—மனதை நோக அடித்து பெண் பாவத்தைக் கட்டிக் கொள்ளுவதா?

சசா! வேண்டாம். வேண்டவே வேண்டாம். நான் ஒருவர் கண்ணிலும் படாமல் ஊருக்குப் போய் விடுகிறேன். அவர்கள் சுகமாயிருக்கட்டும்!

கதவு 'தட தட' வென்று இடிக்கப்பட்டது. எனது மனக் கலக்கத்தில் அதை 'இடி இடிக்கிறது'என்று நினைத்துக்கொண்டு பேசாமலிருந்தேன்.

"வசந்த்! வசந்த்!" என்று இரைந்து கத்துவது கேட்டதும் என் நினைவு வந்தது. போய்வாசற் கதவைத் திறந்தேன். உள்ளே பாய்ந்து வந்த வேணு என்னைத் தழுவிக்கொண்டான்.

"தம்பி வசந்த்! நீதான் என் தம்பி என்று தெரிந்து கொள்ளும் சக்தி இல்லாமற் போயிற்றே உனக்குத்தான் நிர்மலாவை ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிந்தது. அவள் தான் சொன்னாள். அப்புறம் விவரம் விசாரித்ததில் தாய்தந்தையர் பெயர் வெளிப்பட்டது. வசந்தா! நீ அதிருஷ்டசாலி. அவளை மணந்து கொண்டு சுகமாயிரு". என்றான் ஒரே மூச்சில்.

நான் அப்படியே உணர்வற்று அவன் காலடியில் விழுந்து விட்டேன். பிறகு கண் விழித்த போது நான் படுக்கையில் படுத்திருப்பதையும், பக்கத்தில் வேணு என் அருமை நண்பன், உத்தம சகோதரன்-கண்களில் பெருகும் நீருடன் உட்கார்ந் திருப்பதையும் உணர்ந்தேன்.

நான் கண் விழித்ததைக்கண்டு வேணு, "வசந்த்! ஏன் மயங்கி விழுந்து விட்டாய்? உடம்பை என்ன செய்கிறது?" என்று சகோதர வாத்ஸல்யத்துடன் கேட்டான். என் கண்களிலிருந்து

ஜலம் வழிந்தோடியது. பேச முடியாமல் தொண்டை அடைத்தது. சிரமப் பட்டுப் பேசினேன்.

"அண்ணா! அண்ணா!! என்னை மன்னித்தேன் என்று சொல்லு. மன்னித்து விட்டேன் என்று சொல்லு!" என்று அவன் கைகளைப் பற்றி, என் மார்பில் சேர்த்தணைத்துக் கொண்டேன்.

"வசந்த்! இதென்ன பேச்சு? நான் உன்னை மன்னிக்கும்படி நீ என்ன தவறு செய்தாய்?" என்று கேட்டான்.

"அண்ணா, வேணு! உனக்குத் தெரியாது. அப்பாவும், அம்மாவும் தான் உனக்கு துரோகம் செய்து, கொடுமைப் படுத்தி வீட்டை விட்டுத் துரத்தினார்கள். நான் கூடவா அதே பாதகத்தைச் செய்யவேண்டும்? முடியாது. மேலும், என் அண்ணாவுக்குக் கல்யாணமாகாமல் நான் செய்து கொள்வதா? அண்ணா! என்னை மன்னித்து நீயே நிர்மலாவை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்றேன்.

என் மனதிலிருந்த புயல் அடங்கிவிட்டது. வெளியிலும்புயல் நின்று விட்டது. மேகங்கள் கலைந்து பௌர்ணமிச் சந்திரன் தன் பதினாறு கலைகளுடன் புவனி வந்து கொண்டிருந்தான். ஜன்னல் வழியாக நிலவு ஒளி அறைக்குள்ளே விழுந்தது.

நான் படுக்கையை விட்டு எழுந்து. "அண்ணா! வா, போகலாம், உலாவுவதற்கு" என்றழைத்தேன். இருவரும் வெளியே சென்றோம்.

நாங்கள் வழக்கமாக உட்காரும் பாறைமேலுட்கார்ந்து, அந்த அற்புதமான நிலவொளியில் பேசிக் கொண்டிருந்தோம். நான் நடந்த யாவற்றையும் கூறிவிட்டேன், அவன் என்னை மன்னிக்காமல் இருப்பானா?

இனி உலகில் எங்கள் மனோபீஷ்டத்தைத் தடை செய்பவர் யார்? எங்களுக்கு ஏற்பட்ட மனச் சாந்தி நிர்மாவுக்கு வேண்டாமா? அவள் என்ன பாடுபட்டுக்கொண்டிருக்கிறாளோ? அவள் மனம் எப்படித் துடித்துக் கொண்டிருக்கிறதோ? சீக்கிரத்தில் போய் அவளுக்கும் அமைதியை அளிக்க வேண்டி, அண்ணனும் தம்பியுமாக கைகோத்துக் கொண்டு, கொம்மாள மடித்துக் கொண்டு இந்த அமைதியான — அற்புதமான — தெய்விகமான இரவில் அவள் வீட்டிற்குச் சென்று கொண்டிருக்கிறோம்.

## இந்தக்காதல்

நாவற்குழியூர் நடராஜன்.

1

காதல், எதற்கிந்தக் காதலோ ?—இன்று
கண்ட தெதிலும் இக் காதலேன் ?
காதல் சிறப்புடைத் தாயினும்—அன்னை
கன்றி மடிகையிற் காதலா ?

2

காதை கவிதையும் 'காதலே'—என்னும் !
கண்ட உடன் ஒரு காதலாம் !
பாதை தவறிவிட் டோமடா !—இன்னும்
பாழும் வழியினிற் போவதா ?

3

காதற் கதைஎதற் கிங்கடா ?—இது
காலம் அதற்கல ! எங்கடா
மாதர் பெருமையும் மாட்சியும்—தமிழ்
மன்னர் திறமையும் ஆட்சியும்,—

4

கோடிக், கோடியர்செய் கோன்மையும்—எமைக்
கொண்டு பிழைத்திடும் ஆண்மையும்—சொல்லி
முடிக் கிடக்கின்ற மொய்ம்பெனும்—தணல்
மூட்டி விடும்கவி, காதைகள் ?

5

வேண்டிய திங்கது அல்லவோ ?—இந்த
வேளையி விற்பிற நல்லவோ ?
ஈண்டொரு காதலென் றின்புற—எங்கள்
இன்னல்கள் யாவும் ஒழிந்தவோ ?

6

அன்னை விலங்குகள் அற்றவோ ?—இங்கு
அன்னியர் சூழ்ச்சிகள் உற்றவோ ?
முன்னை இருந்தசெல் வாக்கெலாம்—தமிழ
முற்றும் மறுபடி பெற்றதோ ?

7

கஞ்சிக்குக் கூக்குரல் இல்லையோ ?—மாறிக்
கட்டத் துணிக்கிரப் பில்லையோ ?—எமை
வஞ்சிக்கும் மாந்தர்இங் கில்லையோ ?—செல்வம்
வாரிச் செலுவோரும் இல்லையோ ?

8

கூண்டுக் கிளிவாழ்வு போனதோ ?—பின்னர்
கும்மாளம் கொட்டுறீர், ஏனதோ ?
தூண்டும் கருவிகள் இல்லையேல்—சுடர்
சோபை கெடுவதும் காணீரோ ?

9

வீழ்ந்த உணர்ச்சி விளக்கிலே—இனி
வீரக் கனலினை மூட்டுவோம் ;
தூண்டும் கருவிபல் லாயிரம்—அதைச்
சூழ அமைத்தொளி கூட்டுவோம் !

10

காதல் வழிந்தஎம் நாட்டினில்—அது
கண்ணை மறைத்தஇம் மூட்டினில்,
காதற் கதையெதற் கின்னமும்—அட !
கண்ணைக் கெடுத்திட எண்ணமோ ?

# ஆனந்தன்

எம். எஸ். கமலா

"கருணா!

உன் அன்புள்ள கடிதம் கிடைத்தது. நம் சேர்க்கையின் அறிகுறியான பொங்கல் புனித நாளை மறக்கக் கூடுமோ? நாம் மறந்தாலும் அந்நந்நாளை உலகம் முழுதும் உற்சாகத்துடன் கொண்டாடும் நாளாகிவிட்டதினால் நம்மையறியாமலே நாம் அதில் பங்கு பெறவேண்டி இருக்கிறது. அதற்காக லீவு கேட்க வேண்டியதில்லை. ஆனால் எனக்கு ஒருநாள் தங்கிப்போவதில் இஷ்டமில்லாததால் ஒரு மாதம் லீவு கேட்டிருக்கிறேன். லீவு போட்டால் கண்டிப்பாய் மாற்றிவிடுவார்கள். அதனாலல்லவா? ஒரு மாதம் உன்...... ஆனந்தன் எப்படி இருக்கிறான்? மற்ற விஷயங்கள் நேரில்

இப்படிக்கு
உன் மோஹன்"

என்ற கடிதத்தை டாக்டர் கருணா படித்துக்கொண்டிருந்தபோது அவள் புடவைத் தலைப்பை இழுத்தபடி ஆனந்தன் "அம்மா!" என்றழைத்தான். ஐந்தே வயது நிரம்பிய ஆனந்தனை எடுத்து முத்தமீந்து "ஆனந்த்! உங்கப்பா வர்ரார்டா." என்று தன் ஆனந்தம் முழுதும் வெளியிட்டு ஒரு குதி குதித்து கீழே இறக்கினாள். ஆனந்தன் கையிலிருக்கும் சிறிய மோட்டார் வண்டிக்கு சாவி கொடுத்தபடியே

"வருவாரே
எங்கப்பா:
வாத்தேரிலிருந்து
வருவாரே:
திங்க பிஸ்கட்
தருவாரே
திரும்ப முத்தம்
தருவாரே!"

என்று கூத்தாடிக்கொண்டே சொல்வதை கேட்டு, மருந்து கலந்துக்கொண்டிருந்த 'கம்பௌண்டர்' பக்கென்று சிரித்துவிட்டான். அதையனுசரித்து வேலைக்காரனின் சிரிப்பும் சேர்ந்து ஒலித்தது. கருணாவுக்கும் சிரிப்பு வந்தது. கூடவே சற்று வெட்கமும் தோன்றவே, சட்டென்று அவன் காதைப் பிடித்துக்கொண்டு

பிரப்பம் பழமும்
தருவாரே"

என்று சிவந்த கன்னங்கள் குழிவிழச் சொல்லி தன் அறைக்குள் சென்று அமர்ந்தாள். அவள் ஏதோ இன்ப யோசனையிலாழ்ந்தாள். 'ட்ரிணிங் ட்ரிணிங்' என்று போன் அலறியது.

"ஹல்லோ!"

"எஸ்! ஆம். நான்தான். ஊம்... என் அஸிஸ்டெண்ட் இல்லையே! எனக்கு வேலை சரியாயிருக்கிறது. விஷயத்தைச் சொல்லுங்கள். ஊம்......சரி......விளங்கிற்று...... ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள். இவ்விடம் டிஸ்பென்ஸரியில்...அஸிஸ்டெண்டை அனுப்புகிறேனே!.....அப்படியா? பத்து நிமிஷத்தில் வருகிறேன்" என்று உடை அணிந்துகொண்டு காரில் சென்றாள். மத்தியானம் மணி இரண்டு ஆகிவிட்டது தன் வேலையை முடித்துக்கொண்டுவர. ஆயாசத்துடன் சாய்வு நாற்காலியில் சாய்ந்து அலுப்பு தீர கண்களை மூடினாள். அவள் முன் நினைவுத் திரை மெல்ல ஒன்றன் பின் ஒன்றாய் ஓடிக்கொண்டிருந்தது.

* * *

அவள் தந்தையின் விருப்பப் பிரகாரம் சிரத்தையாய் படித்து டாக்டராகிவிட்டாள். அதிருஷ்டமும் பிரயத்தனமும் ஒன்று சேர்ந்து ஓர் பெரிய வைத்திய சாலையில் டாக்டராய் எடுத்துக் கொள்ளப்பட்டாள். ஒரு வார்டின் பொறுப்பு அவளிடம் விடப்பட்டது. அங்கிருந்த பலதிறப்பட்ட நோயாளிகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். ஆனாலும் அவள் முழு சிரத்தையும் அவ்விடத்திலிருந்த யுவகனான நோயாளிமேல்தான் அதிகமாயிருந்தது. எதற்காக அவன்மேல் மாத்திரம் சிரத்தை என்று அவளுக்கே தெரியாது. அந்த நோயாளியை சிரத்தையுடன் கவனிப்பவர்கள் இருவர். ஒருவர் நோயாளி வேலையாயிருந்த மில்லின் முதலாளி. மற்றொருவர் அவள் மகள் 'லீலா'. அவள் கல்யாணமாகாத நல்ல கட்டழகி.

அவள் நோயாளியைப் பார்க்க வரும்போது கருணா நோயாளியினருகில் வீற்று உபசரித்துக் கொண்டிருந்தால் சாதாரணமாயிருந்தாள். பிறகு சந்தேகமாய் பார்க்கத் தலைப்பட்டாள். இது அவள் முகத்தோற்றத்தில் பளிங்கென தெரிந்தது. டாக்டர் கருணாவுக்கோ எப்படியாகிலும் அவனருகில் வீற்று ஓரிரண்டு பேச்சாகிலும் பேசினால்தான் மனதிற்குச் சாந்தியளிக்கும். அவன் சுந்தரமான உருவம் அவள் மனதில் நிலைகொண்டது. அதைப் பெயர்த்தெறிய முடியவில்லை. அவளும் அகற்றவில்லை. அவனுக்கும் அவளுடன் பேசுவதென்றால் மிகவும் சந்தோஷம். நோய் எவ்வளவு கடினமாயிருந்தாலும் 'கருணா'

ளைக் கண்டால் தன் உடல் நிலையைப்பற்றி பன்முறை சொல்வான். அவள் தனிப்பட்ட சிரத்தையாலும், நல்ல மருந்துகளை யளித்ததாலும் அவன் குணமடைந்துகொண்டு வந்தான். குணமடையும் அவனைக் கண்டால் ஒரு புறம் சந்தோஷமும் மறுபுறம் விசனமும் தோன்றும். ஏனென்றால் குணமானால் அவன் தனக்கு தூரமாகி விடுவானன்றோ?

அவன் அவளுடன் பேசும்போதெல்லாம் காதல் நிறைந்த பார்வையுடன் பேசுவதுமன்றி, தான் இனிமேல்தான் 'லீலை'யை மணப்பதாய் உத்தேசமென்றும் சொல்வான். அவன் சொற்கள் அவள் இதயத்தை நூறு வாட்கொண்டு குத்துவதைப் போல் தோன்றும். ஆனால் அவள் இதயத்தைத் திறந்து காட்ட அச்சமயம் அவளுக்கு இயலவில்லை. அப்படி இருந்தும் அவனைப் பார்த்துக் கொள்வதில் அசிரத்தையாய் இராமல் அதிக சிரத்தையுடன் கவனித்துக் கொண்டாள். அவனுக்கு குணமாக ஆக 'லீலை'யின் முகத்தில் சந்தோஷம் சொல்லத் தரமன்று. லீலையின் முகம் பூரிக்கப் பூரிக்க கருணையின் மனதில் வேதனை தாண்டவமாடத் தொடங்கியது. இத் துர்பலமான வேதனையைப் பொறுக்க சக்தியற்று சுற்றிவந்தாள் கருணை.

இச்சமயத்தில் அவள் தாய்க்கு உடம்பு சரியில்லை என்று தெரிந்தது. தாயின் உடல் நிலையை கவனிப்பதற்காக அவள் செல்ல வேண்டியிருந்தது. அதை அவனிடம் அறிவித்தாள். ஏதோ ஓர் விதமான அதிருப்தி அவன் முகத்தில் நிலவியது. அவன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். ஆனால் சொல்ல சக்தியற்றவனானான். மனதில் நிலை பெற்ற இக்காதல் நோயுடன் ஊருக்குப் போனாள். சில நாட்களில் தாயும் இறந்தாள்.

தாய் இறந்த துக்கம் ஒருபுறம். அவன்மேல் காதல் ஒருபுறம். இவ்வளவிற்கும் மேல் 'லீலை'யின் சந்தேகப் பார்வை ஒருபுறம் அவள் மனதைத் துளைத்துக் கொண்டிருந்தது. இப்படி மனோ வேதனையில் ஆழ்ந்திருந்தபோது அவனை வேறோரிடத்திற்கு மாற்றியிருப்பதாகத் தெரிந்தது. இதே வேதனையால் இரவும் பகலும் கழித்தாள். ஒருநாள் தூங்கும்போது அவன் எங்கோ அபாயத்தில் சிக்கி மறுபடியும் வைத்திய சாலையில் இருப்பதாகவும், அவன் பிழைப்பது துர்லபமென்றும் கண்ட கனவினால் திடுக்கிட்டு எழுந்தாள். லீவிலிருந்தவள் வைத்திய சாலைக்கு போய்ப்பார்த்தாள். அங்கில்லை. அங்கிருந்து அவன் வேலை செய்யும் இடத்தில் போய் விசாரித்தாள். அவன் 'லீலை'யை மணப்பதற்காக வேறோர் ஊருக்குச் சென்றிருப்பதாகச் சொன்னார்கள். இதைக் கேட்டதும் நொந்திருக்கிற மனது மறுபடியும் முள்ளால் குத்தி காயப்படுத்தியதைப் போல் வேதனை தந்தது.

சில நாட்களில் சஸ்திர சிகிச்சையில் விற்பன்னையாக மேல் நாடுகளுக்குச்சென்றாள். அதுவும் பாஸ் செய்து, அங்கு பெரிய பெரிய வைத்தியசாலையில் வேலை பார்த்தாள். இப்படியே எத்தனையோ மாதங்களைத் தள்ளினாள். ஆனால் ஒவ்வொரு சமயம் அவளையும் அறியாமல் அவன் நினைவு வந்துவிடும். அவள் இப்பொழுது பெரிய ஆஸ்பத்திரி சர்ஜன். ஒருநாள் வைத்திய சாலையிலிருக்கும் நோயாளிகளையும் கர்ப்பிணி ஸ்திரீகளையும் பார்த்துக்கொண்டு வரும்போது அங்கொரு கர்ப்பிணி, "டாக்டரம்மா! என்ன? என்னைத் தெரிகிறதா?" என்றாள். அவளைப் பார்த்ததும் அவள் 'லீலை' என்றறிந்தாள். அங்கு நிற்கவும் மனம் பொறாது முன்னோக்கி நடக்கும்போது அவள் மறுபடியும் "டாக்டர் கருணையயி! அவரும் இன்றோ நாளையோ வருவார்" என்று மனதைத் தகர்க்கும் சொற்களை வீசினாள். அச்சமயம் அவள் மனம் பட்டபாடு சொல்லத் தரமல்ல. நேராய் அவளறைக்குச் சென்று தன்னை மறந்து வீற்றிருந்தாள்.

"அம்மா! யாரோ உமக்காகக் காத்திருக்கிறார்" என்ற ஆயாவின் குரலைக் கேட்டு, போய்ப் பார்த்தாள். "அ..வ..ர்...அவர்."

அவளுக்கு அவனைப் பார்க்க சகிக்கவில்லை. முகத்தில் முந்திய புன்சிரிப்பில்லை. மனதும் சாந்தியாய் இருப்பதாய் தோன்றவில்லை. வெகுநேரம் இருவரும் பேசாமல் மௌனமாய் நின்றிருந்தனர். இருவர் மனத்திடையே நடக்கும் போராட்டத்தை நான்கு கண்களும் நன்கறிந்தன. ஆழ்ந்த மௌனத்தை அவனே முதலில் கலைத்தான். அவள் முகத்தைக் கூர்ந்து நோக்கியபடியே "லீலையால் உன் விஷயங்கள் முழுவதும் அறிந்தேன்" என்றான்.

அவள் வாய் அசைக்காது கம்பீரமாய் நின்றிருந்தாள். அச்சமயம் 'லீலை' வெகு அவஸ்தைப் படுவதாகவும், அவரைப் பார்க்க ஆவலுறுவதாகவும் நர்ஸ் வந்து தெரிவித்தாள்.

அவன் பரிதாபமாய் அவளைப் பார்க்க வரும்படி அழைத்தான். கருணைமயி போகக்கூடாதென்று தான் நினைத்தாள். ஆனால் பெண் மனம் கேட்கவில்லை. அவனைப் பின் தொடர்ந்தாள். போய்ப் பார்ப்பதற்குள் அவள் பிரசவ அறைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தாள். அவன் முகத்தோற்றத்திலிருந்து அவளுடன் அவன் எவ்வளவோ பேசவேண்டுமென்றிருந்தும் உதட்டை இறுக அழுத்தி மூடிக்கொண்டிருப்பது தெரிந்தது.

ஒரு மணி நேரத்திற்குப் பின் லீலைக்கு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை அவளருகில் படுத்திருந்தது. எல்லாம் அவனைப் போலவே இருந்தது. லீலையின் முகம் மாத்திரம் கருப்பாயிருந்தது. அவள் வெகு அபாய ஸ்திதியிலிருந்தாள். அவள் (லீலை) அவளையும் அவனையும் மாறி மாறிப் பார்த்து 'கட கட' வென்று சிரித்துக் கொண்டே "கருணை! என் ஆசை இன்றாகிலும் நிறைவேறியதே! இப்படி நடக்க வேண்டுமென்று நான் எத்தனை நாளாய் விரும்பினேன். ஒருக்கால் இன்றே நான் இறந்தாலும் நீ மாத்திரம் 'மோஹனை' என் ... மோஹனை அடைய மாட்டாய். அடைய முடியாது. தெரியுமா?" என்று பயித்தியக்காரியைப் போல் பேசத் தொடங்கினாள்.

அவன் புறம் திரும்பி, விகாரமான குரலில், "சொல்லுங்கள். நான் இன்றைக்கு உம்மை விட்டகன்றாலும் நீங்கள் என்னை உங்கள் ஹிருதயத்திலிருந்து அகற்றமாட்டேனென்று சொல்லுங்கள். என் மேல் உங்களுக்கு காதல் இருக்கும் பக்ஷத்தில் . . . . . . .இந்த கருணாமயியை மணப்பதில்லை என்று சொல்லுங்கள். ஒரே வார்த்தை சொல்லுங்கள். இதோ அதிருஷ்டஹீனனான இக்குழந்தையை உங்களிடம் விட்டுச் செல்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே அழ ஆரம்பித்தாள். மோஹன் அவளைச் சமாதானப் படுத்த முயன்றான். அவள் செவி சாய்க்கவில்லை.

பிறகு அவன், "லீலா! உனக்காக எது வேண்டுமானாலும் செய்வேன்" என்று குரல் தழு தழுக்கச்சொன்னான். அவர்களிருவரின் பேச்சும் கருணாவை இம்சைப் படுத்தியது. அவள் மனம் அவளிடமில்லாமல் வீற்றிருக்கும்போதே 'லீலை'யின் பிராண வாயு லீலையாய் மறைந்தது. இச் சங்கடத்தைப் பார்த்துக்கொண்டு அங்கிருக்க முடியவில்லை. டாக்டர் கருணா தன் விடுதிக்குச் சென்றுவிட்டாள்.

மாலை நேரம். ஜன்னலின் திரைச்சீலை சிறிய தென்றலில் அசைந்தாடிக் கொண்டிருக்கிறது. முன்புற மேஜையின்மேல் பற்பல வைத்திய சஞ்சிகைகள் கிடக்கின்றன. டாக்டர் கருணா ஏதோ சிந்தித்தபடி கையிலிருந்த பேனாவை உதட்டின் நுனியில் பதியவைத்து ஆகாயத்தை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள். காலையில் தான் வைத்திய சாலைக்கு சென்றது முதல் நடந்த விஷயங்கள் அவளைத் திகைப்படையச் செய்திருந்தது. எதை சிறுகச் சிறுக மறந்துகொண்டிருந்தாளோ அது இன்று எதிர்பாராமல் கண்முன் நாட்டியமாடியது. அவள் அருகில் அவன் வந்து மௌனமாய் அமர்ந்தான். பீறிக்கொண்டு வரும் துக்கத்தை தடை செய்ய சக்தியற்றவனாய் விட்டதால் அவன் கண்கள் மடை திறந்தாற்போல் அருவியைப் பாயவிட்டது. ஏதோ பேச வேண்டுமென்று முயன்றான். ஆனால் ஒன்றும் பேசாமல் குழந்தையை அவள் எதிரில் மேஜை மேல் படுக்கவைத்துச் சென்றான். அன்றையலிருந்து குழந்தையின் பராமரிப்பு அவள்மேல் விழுந்தது. "இக்குழந்தை யார்? யாருக்காக நான் விசாரப்பட வேண்டும்? யாருக்காக இக்குழந்தையின் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ள வேண்டும்?" என்ற யோசனை அலைகள் அவள் மூளையில் தோன்றும். அக்குழந்தையைக் கூர்ந்து பார்க்கும்போது கோமளமான அவன் முக கமலத்தை தோற்றுவிக்கும் அச்சிசுவின் கண்ணோட்டம் அவளை இழுத்து தன் வசம் செய்துகொண்டதை அவள் அறியவில்லை.

அக்குழந்தையின் சாக்காய் அவரை அடிக்கடி பார்க்கலாமென்று நினைத்து, குழந்தையைப் பார்த்துக்கொள்ள ஆயாவை ஏற்படுத்தி அவளையும் வீட்டிலேயே வைத்துக்கொண்டாள். சிசு சம்ரக்ஷணை காரியங்களையும் சிரத்தையாய் செய்து தன் தொழிலையும் நேர்மையாய் செய்துகொண்டிருந்தாள். இதெல்லாம் யாருக்காக? என்ற கேள்வி குறுக்காய் வந்து நின்றாலும் அதைரியப்படாமல் தைரியமாய் இருந்தாள். ஆறு மாதங்களாயிற்று. திடீரென்று அவன் ஒருநாள் வந்து குழந்தையை எடுத்துக்கொண்டு போய்விட்டான்.

அதிலிருந்து அவளுக்கு வாழ்க்கையின் மேல் வெறுப்புத் தட்டியது. லீவு எடுத்துக் கொண்டு ஊர் ஊராய்ச் சுற்றத் தலைப்பட்டாள். ஆனால் அவள் உள்ளத்தில் சாந்தியில்லை. அவள் தந்தையின் அந்தியகால ஆக்ஞையின்படி டாக்டராகி பிரஜா சேவை செய்கிறாள். என்ன சேவை செய்தாலும் உள்ளத்தில் சாந்தியில்லையே; தன் ஏமாந்த உள்ளத்தை ஒரு நிலைக்குக் கொண்டுவர சிசு சம்ரக்ஷணை தான் உகந்ததென்று மறுபடியும் தொழிலில் இறங்கினாள். இரண்டு வருடம் ஓடிச் சென்றது. ஒருநாள் மோஹன் குழந்தையுடன் அவள் வீட்டிலிருக்கும்போது வந்தான். வந்ததும் குழந்தையை அவளிடம் அளித்து கண்ணீர் வடித்தான் மௌனமாய். எதிர் பாராமல் வந்த மோஹனைப் பார்த்த அவளுக்கோ அளப்பரிய ஆனந்தம் மேலிட்டது. அப்படி இருந்தும் அதை வெளிக்குக் காட்டாமல் அவனை உற்று நோக்கினாள். இளைத்த சரீரம். சுருங்கிய தாடைகள் குழி விழுந்த கண்கள். உலர்ந்த உதடு இவைகளைப் பார்த்ததும் அவளுக்கு துக்கம் தொண்டையைப் பிடித்தது. என்ன பேசுவது என்று தோன்றாமல் விழித்தாள். பிறகு அவனே "கருணா! என் குழந்தை கடும் நோயால் பீடிக்கப் படுகிறான். என்று உன்னிடமிருந்து எடுத்துக்கொண்டு போனேனோ அன்றிருந்து இன்றுவரை என் தோளின்மேல் சுமக்க வேண்டியதாய் இருக்கிறது. அவன் நடப்பதில்லை. எத்தனையோ டாக்டர்களிடம் காண்பித்தேன். எல்லோரும் உன்னிடம் சென்றால்தான் குணமாகும் என்று சொன்னார்கள்".

"ஏன்; என்னைவிட சஸ்திர சிகித்சையில் நிபுணர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் சென்றால் நல்லதல்லவா?

"இருக்கலாம். தற்சமயம் நான் நிர்க்கதிகன் (கதியற்றவன்). குழந்தையின் காரணமாக எந்த வேலையும் செய்ய இயலவில்லை" என்று கண்ணீர் சோரவிட்டான்.

குழந்தையின் அபாய நிலைமையும் அவன் துரதிருஷ்டமும் சேர்ந்து அவளை ஊமையாக்கிவிட்டது. ஜடப் பொருளைப்போல் வீற்றிருந்தாள். அவளையும் அறியாது அவள் வாய் அசைந்தது. "பார்க்கலாம். என்னாலானமட்டும்......ஒரு வேளை இவ்வியாதி அனுகூலமாகாவிடில்......உங்கள் மனதிற்கு அதிக கஷ்டம் ஏற்படுவதுமன்றி எனக்கும் அதிக வேதனையும் அபகீர்த்தியும் உண்டாகும்......" என்று தொழில் முறைமையிலும் தன் சொந்த மனோ விஷயத்தையும் பொருத்திச் சொல்லிவிட்டாள். அவன் குழந்தையை அவ்விடமே விட்டு மறுபடியும் வருவதாகச் சொல்லி சென்றுவிட்டான்.

 132 A



இசைமணி குமாரி கமலா



எல். சாம்பசிவன்



இசைமணி ராமச்சந்திரன்



டி. வெங்கடேசன்



குமாரி சந்த்ரிகாப்ரியதர்சி



ஏ. டி. கல்தான்



மாஸ்டர் சேதுராமன்



இசைமணி டி. அமிர்தவல்லி



குமாரி ரத்னம்



பழனிசாமி ரவிதாஸன்

132B



வி. வி. தனலக்ஷ்மி



வி. பெருந்தேவி



என். ஏ. சுந்தரம்



என். ரகுஜாரஞ்சனி



வி. லக்ஷ்மி

உதய தாரகைகள்



குமாரி லலிதா எஸ். ராம்.

குழந்தையை 'எக்ஸ்ரே' எடுத்துப் பார்த்ததில் முதுகெலும்பில் வித்தியாசமிருந்தது. பின்புறம் பிடரியின் மேல் மூளையினருகில் சஸ்திர சிகித்ஸை செய்து சரிப்படுத்தவேண்டும். அபாயகரமான சிகித்ஸை. பலிதமுண்டாகுமோ இல்லையோ என்ற சந்தேகம். இதனால் குழந்தைக்கே ஆபத்தாகி விடில்......மோஹனை அதிக வேதனையி லாழ்த்தியவளாவாள். அவள் இதே கவலையுடனிருந்த போது 'மோஹன்' வந்தான். அவனுக்கு குழந்தையின் விஷயத்தைத் தெரிவித்தாள். அவன் ஒரே வார்த்தையில் "எல்லாம் உன்னுடையதென்று" சொல்லிவிட்டான்.

குழந்தையை ஆபரேஷனுக்காக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றாள். ஆபரேஷன் பெஞ்சியின்மேல் குழந்தையை படுக்கவிட்டனர். அவன் முகத்தைப் பார்த்தாள். ஒருபுறம் புன்சிரிப்பு முகம். மற்றொருபுறம் பளபளவென்று மின்னும் சஸ்திரங்கள் (ஆயுதங்கள்) அவள் கண்களைக் குத்தின. மற்றொரு புறம் மோஹனின் வேதனை நிறைந்த முகம். இவைகளால் அவள் மனம் நாற்புறங்களிலும் அலையத் தொடங்கிற்று. ஆயுதங்களை எடுத்தாள். ஒருமுறை குழந்தையைப் பார்த்தாள். கைகள் நடுங்கின. கண் இருண்டது அப்படியே கீழே விழுந்தாள். அதிக நேரம் கழித்து எழுந்தாள். எல்லாம் அப்படியே இருந்தது. நர்ஸ்களின் தைரிய பேச்சினாலும் குழந்தையின் அன்புப் பார்வையினாலும் தைரியமாய் ஆபரேஷன் செய்யத் தொடங்கினாள். அவள் வேலை முடிந்ததும் குழந்தையை நர்ஸ்களிடம் ஒப்படைத்து வெளியில் வந்து பெருமூச்சு விட்டுக் கொண்டே "இதெல்லாம் யாருக்காக?" என்றாள். மோஹனின் மனதும் ஓர் நிலையிலில்லாது துடிப்பதையறிந்தாள்.

"குழந்தை இன்னும் தெளியவில்லை" என்று நர்ஸ்கள் சொன்னார்கள்.

"வருகிறேன்" என்றுமோஹன் பரபரவென்று எழுந்து சென்றான். குழந்தையின் போஷணை பாரம் அவளுடையதாகிவிட்டது. அவள் மனோ வேதனை எல்லாம் அக்குழந்தையின் சிரிப்பில் மறையத் தொடங்கியது. ஆறு மாதங்களில் குழந்தை நடக்கத் தொடங்கியது.

அன்று பொங்கல். மோஹன் குழந்தைக்கு வேண்டிய உடைகள் முதலியவைகளை வாங்கிக் கொண்டு வந்தான். கருணா குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு சிரித்த முகத்தையும் கவர்ச்சியுள்ள நீலக் கண்மணியையும் உற்றுப் பார்த்தாள் ஆனந்தத்துடன் குழந்தை "அம்மா!" என்று அவள் மார்பில் சாய்ந்து கலகல வென்று சிரித்துக் கொண்டே அவள் கழுத்தில் தொங்கும் முத்தாரங்களைப் பிடித்து இழுத்தான். அச்சமயம் மோஹன் வந்தான். அவன் வருகை அவளுக்கு ஆனந்தத்தையளித்தது. அவன் முகத்திலும் ஆனந்தம் பொங்கியது. அவள் முகத்திலும் ஆனந்தம் பொங்கியது. ஆனாலும் அதில் வியோக வேதனை நன்றாய் தெரிந்தது. அவளுடைய மனதை அப்பொழுதாகிலும் வெளியிடலாமா என்று யோசித்தாள். அவனே அவள் முகபாவத்தைக் கண்டு "கருணா! உண்மையாய் என்னை நேசிக்கிறாயா? நிர்க்கதியாய் இருக்கும் எனக்கு ஆசிரயம் அளிக்கிறாயா? எனக் காகிலும்.........இக் குழந்தைக்காகிலும்..,....."என்று சொல்லிக் கொண்டே அவள் மடியிலிருக்கும் குழந்தையை எடுத்தான். அவள் பதில் அளிக்காமல் திக்பிரமையாய் வீற்றிருந்தாள். குழந்தை வீறிட்டழுதான். அவன் குழந்தைக்கு முத்த மீந்து "அம்மாவிடம் போக வேண்டுமா?" என்று அவன் ஆசையையும் ஆர்வத்தையும் குழந்தையின் சார்பாய் வெளியிட்டான். நான்காண்டுகளாய் அவள் உள்ளத்தை உருக்கிக் கொண்டிருந்த விரக வேதனை அவன் ஆனந்த சொற்களினால் திருப்தி யடைந்தது. "ஆனந்த்" என்று குழந்தையை அன்புடன் எடுத்தணைத்தாள். எண்ணை தேய்த்து குளித்ததினால் பறந்து அவள் முகத்தில் தொங்கும் கூந்தலைமோஹன் மோஹ பூரிதனாய் கோதினான்.

* * *

"என்ன கருணா! ஸ்டேஷனில் எதிர் பார்த்தேன். வரவில்லை. கருணையில்லையா? ஆனந்த் எங்கே?" என்று ஆசையுடன் அவள் கன்னங்களை வருடினான். அவள் யோசனை கலைந்து திடுக்கிட்டு ஏற இறங்க மோஹனைப் பார்த்தாள்.

"டாக்டர்! எந்த உலகத்திலிருக்கிறீர்கள்?" என்று தோளைப் பற்றி குலுக்கினான். கருணாவின் முகம் வெட்கத்தால் சிவந்தது.

"சென்ற 'பொங்கல்'களை கணக்கு எண்ணிக் கொண்டிருந்தேன்." என்றாள் கண்களில் குறும்பு தோன்ற.

"சென்ற பொங்கலில் சுகமிருந்ததா? இல்லையே! கருணா!! இந்தப் பொங்கலை நலம்பெற நன்கு கொண்டாடலாம்.....என்ன"? என்று அவள் முகத்தில் முத்திரையிட்டான். அதே சமயம் "அம்மா!" என்று அழைத்துக் கொண்டே உள்ளே வந்தான் குழந்தை. மோஹன் தன் நினைவு பெற்று "ஆனந்த்" என்று சிறுவனை எடுத்து முத்தமீந்தான்.

"அப்பா! பேரம்பு பழம் கொண்டுவந்தையா? கொரட்டாவிலே அதிக்கமாத்தியே?" என்று மழலைச் சொல்லால் கேட்டான். மோஹன் திகைத்து கருணாவின் முகத்தைபார்த்தான். கருணா சிரித்தபடியே காலை நடந்ததை சொன்னாள்.

"ஆனந்த்! அம்மாளுக்குத்தான் அது இரண்டும். உனக்கு பப்பிரமிண்ட் பிஸ்கட்ஸ் எல்லாம்" என்றான்.

"அம்மாளுக்கு என்றான்' ஆனந்தன் காதலரிருவரும் கலீ' ரென்று சிரித்தனர்.

# நந்தி வர்மன்

- ரா. ஆறுமுகம் -

ஹிரண்யவர்மன் ஆட்சிக்கு வந்து எத்தனையோ வருடங்கள் கடந்து விட்டன. அந்தச் சிம்மாதனத்தில் ஏறி அமர்வதற்குள் அவன் தொடுத்த போர்களும், பட்ட கஷ்ட நஷ்டங்களும் எண்ணற்றவை. ஆனால் அந்தக் காலங்களில் கூட - எத்தனையோ இரவுகளைத் தூக்கமின்றித் துக்கத்திலேயே கழித்த அந்த நாட்களில்கூட - அவன் மனம் இவ்வளவு அல்லல் படவில்லை. அவனையுமறியாமல் அவன் கண்களில் நீர் வடிந்தது. மற்றவர்கள் பார்த்துவிடும் முன் அதை மறைக்க முயன்றான்; முடியவில்லை. காஞ்சி மந்திரி கண்டு விட்டான்.

“பிரபோ. உங்களுக்கு இவ்வளவு துன்பத்தைக் கொடுத்ததற்காக நாங்கள் மிக்க வருந்துகிறோம். ஆனால் எங்கள் மன்னாதி மன்னர் பரமேஸ்வரர் அகால மரணத்திற்குப் பின் பல்லவ ராஜ்யம் பகைவர் கையில் சிக்கி, சின்னா பின்னமாகப் போவதைக் காண எங்கள் மனம் சகிக்காது. அதற்காகவே உங்களை நாடி உதவி கோருகிறோம். நீங்கள் மனம் வைத்தால் முடியாத காரியம் ஒன்றுமில்லை. கருணை கூர்ந்து எங்களுக்குச் சந்தோஷமான செய்தி கூறியனுப்புங்கள்” என்று பல்லவ பிரதம மந்திரி வேண்டி நின்றான்.

சபையில் எங்கும் நிசப்தம். ஹிரண்யன் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தான், அவனுடைய குமாரர் நால்வரும் அங்கே தானிருந்தார்கள். அவர்களை யெல்லாம் ஏற்கெனவே ஹிரண்யன் தனியாகக் கலந்து ஆலோசித்துவிட்டான். ஆகையால் அவர்களிடமிருந்து இனி எவ்விதமான பதிலையும் அவன் எதிர் பார்க்கவில்லை. ஆனால் அந்த நால்வரில் கடைசிக் குமாரன் சுற்றிலும் ஒரு பார்வை பார்த்துவிட்டு, தன் மூத்த சகோதரர்களின் குறிப்பையும் யூகித்துவிட்டு, எழுந்தான். ஹிரண்யன் ஆவலோடு அவனை நோக்கினான்.

“அப்பா, இதற்காக ஏன் இப்படிக் கவலைப்படுகிறீர்கள். நான் சொல்லுகிறேன் தைரியமாக. என்னைப் பற்றிய தகவல்கள் அடிக்கடி உங்கள் காதுக்கு எட்டிக் கொண்டிருக்கும். சந்தோஷமாக உத்தரவு கொடுத்தனுப்புங்கள்” என்றான்.

சபையில் ஒரு கலகலப்பு ஏற்பட்டது. தரணி கொண்ட பூசர் அங்கே எதிர் பாராத விதமாகப் பிரவேசித்தார். தன் குருவைக் கண்டதும் ஹிரண்யன் சிம்மாசனத்தை விட்டெழுந்து, “குரு மகராஜ், இப்படி அமருங்கள்” என்று வரவேற்று உபசரித்தான்.

“என்ன ஹிரண்யா, இன்று என்ன சபையில் இவ்வளவு அமைதியும், ஏக்கமும் ?”

“சுவாமி, தாங்கள் நேற்றுத் தெரிவித்தபடியேதான் நடந்துவிட்டது. என் மூத்த மைந்தர்கள் மூவரும் காஞ்சிக்குப் போக மறுத்துவிட்டார்கள். கடைசியாக என் இளங்காளை, நந்திவர்மன் இப்போது ஒப்புக்கொண்டான்.”

“சபாஷ்! அவன்தான் வீரன். எனக்குத் தெரியும். சிறுவன் என்று நீ நினைத்துக்கொண்டிருக்கிறாய். உன் புகழை நிலைநாட்ட வந்திருப்பவன் அவன் ஒருவன் தான்......”

“பிரபு, இன்னும் 14 வயதுகூட முடிவு பெறாத இப் பாலகன் அவ்வளவு பெரிய ராஜ்யத்தில் போய் என்ன செய்துவிட் முடியும்? போர்க்களத்தை வேடிக்கைக்காகவேனும் கூட ஒரு முறை வந்து பார்த்ததில்லையே. இவனை நான் எப்படி அனுப்புவது. என் அன்பிற்குப் பாத்திரமானவர்களைப் பிரிந்து நான் இங்கே எப்படி இருப்பேன்!”

“ஹிரண்யா, இப்போது காஞ்சியில் யுத்தமா நடக்கப் போகிறது? பரமேஸ்வரன் திடீரென்று இறந்துவிட்டான். அவனுக்குச் சந்ததியில்லை. நீயோ அவனுக்கு வேண்டியவன். அதனால் உன்னையடுத்து வந்திருக்கிறார்கள் பல்லவர் மந்திரிகள். அவர்களைத் திருப்திப் படுத்துவதால் உன் வம்சத்திற்கே பெருங் கீர்த்தியல்லவா ?”

“ஒப்புக் கொள்ளுகிறேன் சுவாமி. ஆனால் அந்தக் கீர்த்திக்கு என் பாலகனைப் பலி கொடுப்பதா?”

“அதைத்தான் நான் சொல்ல வந்தேன். காஞ்சியைப் போல சமாதானம் நிலவும்நாட்டை நான் கண்டதே இல்லை. மேலும் இப்போது வெளி நாடுகளிலிருந்து துணிந்து படையெடுத்து வரக்கூடியவர்களும் இல்லை. ஏதேனும் உள்நாட்டுக் கலகங்கள் ஏற்படலாம். பல்லவ மக்களே இப்படித் திரண்டுவந்து அழைத்துக் கொண்டு போகும்போது அம்மாதிரிக் கலகங்களுக்கு இடமேது? ஆகையால் ஒன்றையும் யோசிக்காமல் நந்திவர்மனை அனுப்பிவிடு வேண்டுமானால் உன் யோசனைத் தலைவன் உதய சந்திரனை ஒரு சிறு சேனையுடன் துணைக்கு அனுப்பு. அவனை எதிர்த்து நிற்கக்கூடிய

வீரன் இந்தப் பிரதேசத்தில எவனும் கிடையாது......''

ஹிரண்யவர்மன் மறு வார்த்தை பேசாமல் தன் குரு சொன்னபடி செய்யச் சம்மதித்தான்.

பல்லவ மந்திரி பிரதானிகள் மிக்க மகிழ்ச்சியடைந்தனர். தாங்கள் கோரிவந்த காரியம் வெற்றி பெற்றதென்று. அன்றிரவே தங்கள் நாட்டிற்குப் புறப்பட ஆயத்தம் செய்துவிட்டார்கள்.

ஹிரண்யவர்மனும், தரணி கொண்ட பூசரும் அவர்களை வழியனுப்பினார்கள்.

* * *

நந்திவர்மனைத் தங்களோடு அழைத்துக்கொண்டு தெற்கு நோக்கிச் சென்ற பல்லவர்கள், கடவேச ராஜ்யத்தைவிட்டு, காஞ்சிக்குப் போய்க் கொண்டிருக்கும் வழியில் ஐந்தாம்நாள், பிரயாண சிரமத்தைச் சற்று தணித்துக் கொள்வதற்காக விந்திய மலைப் பிரதேசத்தின் மத்தில் கூடாரமிட்டு இரண்டு நாள் தங்கினார்கள்.

அன்று பௌர்ணமி. சுமார் ஐயாயிரம் பேர்களடங்கிய கூட்டத்திற்கு இருநூறு கூடாரங்கள் அடிக்கப்பட்டிருந்தன. பூரண சந்திரனின் வெள்ளிக் கிரணங்களின் கீழ் வானளாவிய விந்திய பர்வதங்களின் மத்தியில், அக்கூடாரங்களெல்லாம் சிறு சிறு வெள்ளிக் குன்றுகளாகவே காட்சி யளித்தன. நந்திவர்மன் தங்கியிருந்த கூடாரம் மற்றவற்றை யெல்லாம் விட்டுத் தனியே கீழ்க் கோடியில் மலையடிவாரத்திலிருந்தது. சற்று தூரத்தில் தான சேனாதிபதி உதய சந்திரன் தங்கியிருந்தான். இவ்விரண்டு கூடாரங்களைச் சுற்றிலும் இருபது வீரர்கள் உருவிய கத்தியுடன் காவல் புரிந்து நின்றனர். நடு நிசி. அடிக்கொரு முறை பாரா மாற்றும் வீரர்களின் சப்தம் மாத்திரம் நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டிருந்தது, எங்கோ வெகு தூரத்திலிருந்து சில வன்மிருகங்களின் கர்ஜனைகளும், உறுமல்களும் இடை இடையே பயங்கரத்தை அதிகப்படுத்தின.

நெடிய பிரயாண அலுப்பினால் நந்திவர்மன் ஆழ்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தான். அவன் தூங்குவதை யறிந்த மெய்காப் பாளர்களில் நாலவர் அவர்களுக்குள்ளேயே ஏதோ பேசிக்கொண்டார்கள். அவர்கள் பல்லவ நாட்டினர். என்ன காரணத்தாலோ திடீரென தூக்கம் கலையப் பெற்ற நந்திவர்மன் தன் கூடாரத்தினருகிலிருந்து வரும் பேச்சைக் காது கொடுத்துக் கேட்டான்.

ஒருவன் :—"சிறு பையன், வயசு பதினாலுக்குமேல் இருக்காது. இவன் வந்து எப்படி அவ்வளவு பெரிய ராஜ்யத்தைக் கட்டி ஆளப்போகிறானோ?''

மற்றவன் :—"அதுவும் நம் நாட்டில் அரச சந்ததியில்லை யென்று தெரிந்த வெளி நாட்டரசர்கள் போருக்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் இச் சிறுவன் எப்படிச் சமாளிக்கப் போகிறானோ?''

மூன்றாமவன் :—" ஹிரண்யவர்மன் பெரிய படைப் பலம் கொண்டவனாயிற்றே என்று எண்ணிய நம் மந்திரிகள் அவனையடுத்து உதவி கேட்டார்கள். அவனோ இவர்களுடைய வேண்டுகோளை மறுக்கமுடியாமல் தன் இளைய மகனை அனுப்பிவிட்டான். அவனுக்கென்ன கவலை? இந்த மகன் போர்க்களத்தில் மடிந்தால் இன்னும் மூன்று புத்திரர்கள் இருக்கிறார்கள். அதனால் தான் ஒருவனைத் தியாகம் செய்யத் துணிந்து அனுப்பிவிட்டான். ஆனால் நம் நாடு பிறன் கையில் போய்விடுமே யென்று அவன் சற்றேனும் சிந்தித்திருந்தால், தன் மூத்த மைந்தர்களில் புஜ பலமும் புத்தி தீக்ஷண்யமும் பொருந்திய ஒருவனை அனுப்பியிருக்க மாட்டானா?''

நான்காம் ஆள் :— "அடேடே! இரவு நேரம். அக்கம்பக்கம் பார்க்காமல் இப்படிப் பேசிக்கொண்டிருக்கிறீர்களே! யார், யார் எங்கெங்கே யிருந்து மறைந்து கேட்கிறார்களோ? பெரிய இடத்துப் பொல்லாப்பெல்லாம் நமக்கெதற்கு? போதும். இதோடு நிறுத்துங்கள்!'' என்று அவர்களை அடக்கிவிட்டான். அவர்களும், அவன் சொன்னது 'சரி' யென்று ஒப்புக்கொண்டு, அதுவரை தங்கள் வேலையை மறந்திருந்துவிட்டபடியால், உடனே எழுந்து கூடாரத்தைச் சுற்றிச் சுற்றி வந்து காவல் புரிந்து நின்றனர்.

கடைசியாகப் பேசியவன் சொன்னதைக் கேட்ட நந்திவர்மன், ஒரு சமயம் அந்த மனிதன் தான் விழித்துக் கொண்டிருப்பதைக் கண்டுவிட்டானோ என்று சந்தேகித்தான். அவனுக்கு நித்திரை கொள்ளவில்லை. அவர்கள் பேசிக்கொண்டிருந்ததைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான்,

'பிற நாட்டு மன்னர்கள் போருக்கு ஆயத்தம் செய்கிறார்களாம். நான் சிறுவனும். ஆம், உண்மைதான். என்னால் என்ன செய்ய முடியும்? போர்க்களம் என்பதே இன்னதென்றறியாத நான் எப்படித் திடீரென வரப் போகும் யுத்தத்தை நடத்த முடியும்? இதையெல்லாம் யோசித்துத்தான என் தமையன்மார்கள் மூவரும் மறுத்துவிட்டார்களோ? ஏன், என் தந்தை கூடத்தான் என்னைத் தடுத்தார். ஆனால் என் பிடிவாதமே அவரை இணங்கும்படி செய்தது. இவர்கள் பேசிக்கொண்டது போல என் தந்தை என்னைப் பலியிடத் துணிந்தே அனுப்பியிருப்பாரோ?... சே, இருக்காது. நான்தானே அவருடைய அன்பிற்குப் பாத்திரமானவன்.... யார் கண்டது? அவரோ பெரிய அரசர். எத்தனையோ யுத்தகளங்களில் ஆயிரம் ஆயிரமாய், குவியல் குவியலாய் மாண்டு கிடந்தவர்களை அடிக்கடி கண்டு சாவைப் பற்றிய சிந்தனையே அற்று இருப்பவர். அவருக்கு என் ஒருவனுடைய சாவு பெரிய நஷ்டமாகத் தெரியுமா?....

இவ்விதம் நந்திவர்மன் தன் முடிவைக் குறித்துக் கவலை கொண்டு, தான் மிக்க ஆபத்தான நிலைமையில் வந்து சிக்கிக் கொண்டதாக எண்ணி, அதை விட்டு உடனே தப்பிச் செல்ல தீர்மானித்துவிட்டான்! ஆனால்

எப்படித் தப்புவது? கூடாரத்தைச் சுற்றிலும் யுத்த வீரர்களிருக்கிறார்களே! அவனுக்கு ஒரு யோசனை உதயமாயிற்று.

கூடாரத்தை விட்டு வெளியே வந்தான். காவல் வீரர்களெல்லாம் அவனைச் சுற்றி வந்து வணங்கி நின்றார்கள். அவர்களில் ஒருவனைப் பார்த்து, "நீ போய் என் குதிரைக்கு உடனே சேணமிட்டு இங்கே கொண்டு வா" என்று கட்டளையிட்டான். காவலாளியும் விரைந்தோடினான்.

"எனக்கு இங்கே தூக்கம் பிடிக்கவில்லை. இந்நிலவின் ஒளியில் இம் மலைப் பிரதேசத்தின் வனப்பைக்காண என் மனம் நாடுகிறது. ஆகையால் நான் சிறிதுதூரம் அப்படியே போய்ப் பார்த்துவிட்டு விடியும் முன் திரும்பி விடுகிறேன். சேனாதிபதி வந்து கேட்டால் சொல்லுங்கள்" என்று மற்றவர்களிடம் பேசிக்கொண்டிருந்தான். அதற்குள் வணங்கி வழிவிட் அவன் குதிரைமீதேறிப் புறப்பட்டான். கூடாரங்களின் எல்லையைத் தாண்டுமட்டும், மற்றவர்கள் கண்டு சந்தேகம் கொள்ளாவண்ணம் குதிரையை மெதுவாகச் செலுத்திக் கொண்டே சென்று, எல்லையைக் கடந்ததும் காற்றினும் கடிய வேகத்தில் தூண்டிவிட்டான். தன்னை யாரேனும் பின் தொடர்கிறார்களா வென்று அடிக்கடி திரும்பிப் பார்த்துக்கொண்டே காட்டிற்குள் சென்று மறைந்தான்.

* * *

சுமார் இரண்டுகாத வழிதான் சென்றிருப்பான். விடிவதற்கு இன்னும் வெகுநேரம் இருந்தது. தன்னை இனி யாரும் பின் தொடர்ந்து வந்து பிடிக்க முடியாதென யூகித்து, குதிரையை மெதுவாகச் செலுத்திக் கொண்டே ஒரு நல்ல இடத்தைத் தேடித்திரிந்தான். கடைசியாக ஒரு சிற்றோடையைக் கண்டு, குதிரையை மரத்தடியில் கட்டிவிட்டு, ஓடையில் இறங்கி கைகால்களைச் சுத்தம் செய்துகொண்டு மரத்தடியில் வந்தமர்ந்தான். அவனையுமறியாமல் கண் இமைகள் சொருகின. அயர்ச்சியின் மிகுதியால் தூக்கம் அழுத்த அப்படியே சாய்ந்துவிட்டான்.

"நந்திவர்மா, என்ன காரியம் செய்துவிட்டாய்! கடவேச வம்சத்திற்கே ஒரு இழுக்கையல்லவா உண்டுபண்ணத் துணிந்துவிட்டாய். வாழ்வும் சாவும் மனிதனுக்கு இயற்கை. அதற்காக பயந்து ஓடலாமா? உன் தந்தையின் ராஜ்யத்தில் உனக்குக் கையகல இடம்கூடக் கிடைக்காதே. உன் மூத்த தமயன் தானே பட்டத்திற்கு உரியவன். அங்கே உனக்குப் புகழோ பெருமையோ ஏற்படவே ஏற்படாது. காஞ்சியில் உனக்காக எவ்வளவோ பெருமைகள் காத்துக் கிடக்கின்றன. நீ பட்டம் ஏற்ற பதினைந்தாம் வருஷத்தில் புகழ்வாய்ந்த சாளுக்கிய சக்ரவர்த்தி விக்கிரமாதித்யன் உன்னோடு யுத்தத்திற்கு வருவான். அதில் அவனே வென்றாலும், உன் உயிருக்கு அபாயம் இல்லை, அவனை எதிர்த்து நின்றதால் உன் வீரம் உலகமெங்கும் பேசப்படும். எழுந்திரு உடனே புறப்படு. உன் சைந்நியத்தை நடத்திக்கொண்டு காஞ்சிக்கே செல். விடிவதற்கு முன் கூடாரத்திற்குப் போய்ச்சேர்ந்துவிடு. வீரர்கள் கூட உன் கோழைத் தனத்தைக் கண்டு நகைக்க இடம் கொடுத்துவிடாதே. உம் எழுந்திரு, இன்னுமா தூக்கம்! அதோ வனப் பக்ஷிகள் கூடுகளை விட்டுக் கிளம்பி விட்டன. விடிய இன்னும் நேரமிருக்கிறது. அதற்குள் நீ திரும்பிவிடலாம். நந்தி வர்மா புறப்படு......"

நந்திவர்மன் சட்டென எழுந்து உட்கார்ந்து சுற்றிலும் பார்த்தான். ஒருவரையும் காணவில்லை. "என்ன இது? நான் கண்டதுகனவா? எங்கள் குலகுரு தாரணி கொண்ட பூசர் தட்டி எழுப்பினாரே. எங்கு சென்றார்? .........ஆம், அவர் சொன்னது உண்மைதான். சாவிற்காகப் பயந்து ஓடும் நான் அதிலிருந்து என்றைக்கும் தப்ப முடியாது. என்றோ ஒரு நாள் அது வந்தே தீரும், என்ன மடமை? எனிப்படி பேடிபோல் ஓடிவந்தேன். இதோ இன்னும் நாலு நாழிகையில் கூடாரம் போய் விடுகிறேன். என் குருவின் கட்டளையை நிறைவேற்றி, என் தந்தைக்கும் மங்காத கீர்த்தியை உண்டுபண்ணுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே மரத்தடியில் கட்டியிருந்த குதிரையை அவிழ்த்து, ஏறியமர்ந்து வந்த வழியே திரும்பிவிட்டான்.

அவன் கூடாரத்தை அடையும் சமயம், விடியும் நேரமாயிருந்தது. கிழக்கே வானத்தில் மங்கலான வெளிச்சம் பரவியிருந்தது. சந்திரன் தன் ஒளி குன்றி மேற்கே மலைகளுக்குப் பின் மறைந்து கொண்டிருந்தான்,

குதிரையை விட்டிறங்கியதும் அவன் சேனாதிபதி உதய சந்திரன் அவனைவந்து வணங்கி, "இளவரசே. இன்று கூடாரங்களைப் பிரித்துக்கொண்டு காஞ்சி செல்ல ஏற்பாடு செய்யவேண்டும். தங்கள் பிரியம் எதுவோ?" எனக் கேட்டான்.

"உடனே செய். இனி இங்கே தாமதிக்கவேண்டாம்." என்று கட்டளையிட்டான் நந்திவர்மன்.

அன்று மாலையே சேனைகள் தெற்கு நோக்கி காஞ்சி நகர்ப் பக்கம் புறப்பட்டன. அதனால் கிளம்பி எழுந்த செம்மண் தூசி அந்திவானத்தின் செந்நிறத்தோடு போய்க் கலந்தது.





**உங்கள் குழந்தை!**
**மிகவும் சந்தோஷமாகத்தானிருக்கிறான்**
**நீங்கள் பெருமையும் கொள்கிறீர்கள்**

## ஆனால்

இவனது வருங்கால
சந்தோஷத்தைப்பற்றி
சிந்தித்தீர்களா? இவனது
படிப்புக்காக என்ன வழி
செய்திருக்கிறீர்கள்?

யுனைடெட் இந்தியா உங்களுக்கு ஒத்தாசைசெய்யும்

**'சில்ரன்ஸ் டிபர்டு அஷ்யூரன்ஸ்'**
**'எஜுகேஷனல் அன்யுடி பாலிஸி'**
முதலியவை சம்பந்தமான விவரங்களைக் கேளுங்கள்

## யுனைடெட் இந்தியா
## லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி
## லிமிடெட்

"யுனைடெட் இந்தியா பில்டிங்ஸ்" எஸ்பிளனேட், சென்னை



# இந்தியன்
# ஓவர்ஸிஸ் பாங்க்
## லிமிடெட்

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்று வழங்கப்பட்ட மூலதனம் | ... | ரூ. 50,00,000 |
| செலுத்தப்பட்டது | ... | „ 26,43,420 |
| ரிஸர்வ் நிதி | ... | „ 7,42,500 |

சேர்மன்:
**தி ஹானரபிள்**
**எம். ஸி. டி. எம். சிதம்பரம் செட்டியார்**

தலைமை ஆபீஸ்:
**யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்,**
எஸ்பிளனேட், மதராஸ்.

**கிளை ஆபீஸ்கள்:**

| | |
|---|---|
| ஆலப்பிழை | தேவகோட்டை |
| பம்பாய் | காரைக்குடி |
| பெங்களூர் ஸிடி | மதுரை |
| கள்ளிக் கோட்டை | நாகப்பட்டினம் |
| கண்ணனூர் | புதுக்கோட்டை |
| கோயம்புத்தூர் | சேலம் |

சிவகங்கை.

**கரண்ட் அக்கவுண்டு** உண்டு, ஒரு லக்ஷம் ரூபாய் வரை தினசரி இருப்புக்கு வருஷ வட்டி ¼ %.

**பிக்ஸெட் டிபாசிட்டுகள்** பெற்றுக்கொள்கிறோம், ஒரு வருஷத்துக்கு 2¼%, இரண்டு வருஷத்துக்கு 2½%,

**சேவிங்க்ஸ் பாங்க் அக்கவுண்டு** வைத்துக் கொள்ளலாம், செக் மூலம் பணம் வாங்கலாம், குறைந்தபக்ஷ மாதாந்தர இருப்பின்மீது 2½%

**பில்கள்** வாங்குகிறோம், வசூலிக்க எடுத்துக் கொள்கிறோம்.

**கடன், ஓவர் டிராப்டுகள்** அங்கீகாரம் பெற்ற ஈடுகளின் மீது கொடுக்கப்படும்.

**வெளிநாட்டு எக்சேஞ்சுகள்** செய்து கொடுக்கிறோம்.

**சேப் டிபாசிட் லாக்கர்கள்** எட்டு ரூபாய் முதல் கிடைக்கும்.

**எஸ். டி. சதாசிவன்,**
ஜெனரல் மானேஜர்.


136A



ORIGINAL | SHOP

SRB

## கலியாண காலத்திற்கு நூதன சேலைகள் & பட்டு ஆடைகள்

நம் சொந்த தறியில் தயார் செய்யப்பட்டு, ஸ்பெஷலாகக் கைவசம் வந்து குவிந்திருக்கும் பட்டு சேலைகள், நூல் சேலைகள், பாவாடைகள், தோத்திகள், பஸ்கானுக்கள், வெண்பட்டுகள், இன்னும் எண்ணிலடங்காத பெங்களூர் ப்லேசர் சில்கு சேலை ரகங்கள், இவ் வருஷம் புத்தப் புதிய நூதன அமைப்புள்ள நவீன தினுசுகளாகும் இவைகளில் பற்பல

## சேலைகள்

இதுவரையில் வெளிவந்திராத நூதன தினுசுகளாகும். இவற்றை நேரில் வந்து பார்த்தால்தான் விளங்குமேயொழிய எவ்வளவு வர்ணித்தாலும் இவற்றின் அழகைக் குறிப்பிட முடியாது. ஆகையால், சீக்கிரம் குடும்ப சகிதமாய் இங்கு விஜயம் செய்யுங்கள்.

மிகவும் உயர்ந்த ரகங்கள் நியாயமான விலை; கெட்டிச் சாயம், நீண்ட கால உழைப்பு இவைகளுக்கு உத்தரவாதம். நாணயத்திற்கும், நம்பிக்கைக்கும் ஒருங்கே பொருந்திய இடம்:—

**S. R. B. குப்புசாமி அய்யர் & ஸன்**

**(Formerly) S. R. பாலுசாமி அய்யர் & சன்ஸ்**

மதுரை, காசி, கராச்சி, பட்டு ஜவுளி வியாபாரிகள்

**83,** நயினியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.
போன் நெ. **3506.**

நெ. **230,** கீழ்மாரெட் வீதி, மதுரை.
போன் நெ. **36.**

## நியூ கிளென் டீ

மணத்துக்கும், மன உற்சாகத்துக்கும் இதைவிடச் சிறந்தது ஒன்றுமில்லை. 'தேயிலைத் தோட்டத்'திலேயே 'பாக்' செய்யப்படுகிறது. புகழ்பெற்ற 'ஹைகுரோன்' டீ.

---

**தி நியூ கிளென் மார்கன் எஸ்டேட்ஸ் லிமிடெட்**

நியூகிளென் மார்கன் போஸ்டு

**நீலகிரி, தென்னிந்தியா**

---

சென்னை ஆபீஸ்:

**யுனைடெட் இந்தியா பில்டிங்ஸ்**

**எஸ்பிளனேட், சென்னை**

## தி நியூ கார்டியன் ஆப் இந்தியா லைப் இன்ஷியூரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.

---

**டைரக்டர் போர்டு:**

தி ஆனரபில் ஸ்ரீ எம். ஸி. டி. எம். சிதம்பரம் செட்டியார் அவர்கள்

கே. ஓப். அடிகா, பி.ஏ., பி.எல்.

ஓ. ஏ. ஓ. கே. ஆர். எம். அருணசலம் செட்டியார்

ராய்பகதூர் கேதாரநாத் கந்தர்வால், பி.ஏ., எல்.எல்.பி.

எஸ். டி. சதாசிவன், எம்.ஏ.

---

**பாலிஸிதார் டைரக்டர்:**

எஸ். சட்டநாதக் கரையாளர், எம்.ஏ., பி.எல்.

டி. ஆர். எம். டி. எஸ். டி. தின்னப்ப செட்டியார்.

---

**இந்தக் கம்பெனியில் பாலிஸி எடுப்பது நல்லது.**

**ஏஜன்ஸி எடுப்பது சிறந்த வியாபாரத் தொடர்பு.**

# பாரியின் பரி

சு. குருசாமி. பி.ஏ., எல்.டி.

## காட்சி 1.

பறம்புமலை அதிபதியும் கடையேழு வள்ளல்களில் ஒருவனுமான பாரி கொலு வீற்றிருக்கிறான். நல்லிசைப் புலமை மெல்லியலாளாகிய ஔவையார் மண்டபத்திற்குள் நுழைகிறார்.

ஔவையார்: *பறம்பு மலை வேளே! இன்று போகலாம்; நாளைப் போகலாம் என இதுகாறும் நாட்களைக் கடத்திக்கொண்டு வந்து விட்டீர். உம்முடைய பேரன்பை உணர்கிறேன். இனி என்னால் ஒரு கணமுந் தாமதிக்க முடியாது. இன்று கட்டாயம் நீர் எனக்கு விடை கொடுத்தனுப்ப வேண்டும்.*

பாரி: *அப்படி என்ன அவசரம் நேர்ந்ததோ?*

ஔவை: *உடனே புறப்பட்டு வருமாறு அதியமான் எமக்கு ஓலை அனுப்பி யிருக்கிறார்.*

பாரி: *அதியமான் ஓலை அனுப்பி யிருக்கிறார். மூவேந்தர்களுக்கு மஞ்சாத பறம்புமலை யதிபனும் பாவலர்க்கு எளியனுமாகிய பாரியோ, இன்னும் சிலநாள் இங்கு தங்கிவிட்டுச் செல்லுமாறு உம்மை நேரில் வேண்டிக்கொள்கிறான்.*

ஔவை: *அரசே! உமது வேண்டுகோளை மறுக்க எமக்கு இஷ்டமில்லை. ஆயினும், அதியமான் ஓர் அவசர காரியத்தின் நிமித்தம் என்னை அழைத்திருக்கிறார்.*

பாரி: *நான் உம்மை இருக்கச் சொல்வதும் ஓர் அவசியத்தின் பொருட்டே.*

ஒவை: *அவசியத்திலும் தாரதம்மிய முண்டு. ஓர் அரசாங்க அலுவலின பொருட்டு அவர் என்னைத் தம்மிடம் வரச்சொல்கிறார்.*

பாரி: *அரசர்க்ள் சம்பந்தப்பட்டது எல்லாம் அரசாங்க அலுவல்கள்தானே?*

ஔவை: *நடுச்சபையில் இதை வெளியிட வேண்டாமென்றிருந்தேன். தமக்கு ஏதோ ஒரு பேராபத்து நேரவிருப்பதாகவும், என்னை வேற்றரசன் ஒருவனிடம் தூதனுப்ப விரும்புவதாகவும், நான் சென்றால் அவ்வாபத்து நீங்கலாம் என்றும் அதியமான் குறிப்பிட்டிருக்கிறார். இனி என்னால் தாமதிக்க முடியாது, தயவுசெய்து விடை கொடுக்க வேண்டும்.*

பாரி: *(சிரித்துக்கொண்டு) உம்மைப்போன்ற நல்லிசைப் புலவர்களைத் தம்பாலிழுப்பதற்கு அரசர்கள் செய்யும் சூழ்ச்சிகளில் இது ஒன்று. இந்த ஒரு விஷயத்தில் மட்டும் அரசர்கள் பொய் சொல்லப் பின் வாங்குவதில்லை. அதியமானும் அதில் இளைத்தவரல்ல. ஆகையினால், ஔவைப்பிராட்டியாரே! சூழ்ச்சி வலையில் சிக்கிக்கொள்ள வேண்டாம்.*

ஔவை: *அரசே, அப்படியல்ல, அதியமான் என்னிடம் மனம் விட்டுப் பேசக்கூடியவர். இல்லாதது ஒன்றைச் சொல்லமாட்டார்.*

பாரி: *நீர் போகவேண்டாம் என்று நான் சொல்லவில்லை. நீர் பறம்பு மலைக்கு மட்டுமல்ல, தமிழகத்திற்கே, ஏன் இந் நிலவுலகத்திற்கே உரியவர். உம்மைப் பாரியின் சமஸ்தானத்தில் அடைத்துவிட முற்படேன், இன்னும் சில நாட்கள் இங்கு தங்கிவிட்டுச் செல்லுமாறு வேண்டிக் கொள்கிறேன்.*

ஔவை: *(பரபரப்புடன்) பாரிவேளே! மன்னிக்க வேண்டும், அதியமானுக்கு 'ஆபத்து' என்பதை அறிந்தவுடன் என் மனம் ஒரு நிலையில் இல்லை. என்னென்ன வெல்லாமோ எண்ணி, எங்கெங்கோ அலைகிறது. நான் உடனே புறப்பட வேண்டும்.*

பாரி: *உம்முடைய மனநிலையை நான் உணர்கிறேன். இன்னும் இரண்டு நாட்கள் தங்கிவிட்டுப் போகலாம்.*

ஒவை: *மலையுடைவேளே! புலவருக்கு நீர் கொடை கொடுப்பதாக இக் குவலயம் முழுதும் போற்றுகிறது. அவர்களுக்கு விடை கொடுத்தும் நீர் பழக வேண்டும். நான் விடையிரந்து நிற்கிறேன். கருணை புரியவேண்டும்:*

பாரி: *(புன்சிரிப்புடன்) அத் துறையில் நமது ஆற்றலின்மையை நாம் ஒப்புக் கொள்கிறோம். இன்னும் ஒரு நாளாவது அடியேனுடன் தங்கிவிட்டுச் செல்லவேண்டும்.*

ஔவை: *அரசே! இதற்குமேல் நான் என்ன கூறுவேன். (கண்களில் நீர் ததும்ப) யான் அதியமானுடைய அன்பிற்குப் பாத்திரப்பட்டவள். அப்பூமானுக்கு ஆபத்து நேர்ந்திருக்க, நான் அரைக்கணமேனும் இங்கு தங்கியிருத்தல் அறமாகாது.*

மேலும் என் உள்ளம் இசையவில்லை. இன்னே விடை கொடுத்தருளவேண்டும்.

பாரி : இப்பொழுதே புறப்பட வேண்டுமா ?

ஔவை : ஆம், அரசே !

பாரி : (நாக்குழற) உம்மைப் போன்ற புலவர் பெருமக்களைத் தகுந்தபடி சன்மானிக்க, இக் குவலயம் முழுதும் ஒரு குடைக்கீழ் ஆளும் சக்கரவர்த்தியாலும் இயலாது. அடியேனோ ஒரு குறுநில மன்னன். நான் கொடுக்கும் பொருள்களின் விலை மதிப்பைப் பொருட்படுத்தாது, அன்பையே பெரிதாக மதித்து, பெற்றருள வேண்டும் (யானைகள், தந்தம், பொன்போன்ற குறிஞ்சி நிலப் பொருள்களும், முத்து, பவளம் போன்ற நெய்தல் நிலப் பொருள்களும், மருதநிலப் பொருளாகிய ஆனிரைகளும், பாலைநிலப் பொருள்களாகிய அசுவங்களும், ஒட்டகங்களும் வரையின்றி வழங்குகின்றான்).

ஔவை : (அப் பொருள்களைக் கண்டு பிரமித்து) அரசே ! உமது வள்ளன்மையைப் போற்றுகிறேன். நானோ பாணன் மகள், எனக்கெதற்கு இவ் விலையுயர்ந்த பொருள்களெல்லாம் ? பசியுறும் போதெல்லாம் ஒரு பாட்டுப் பாடிக் கூழ் குடித்து வழி நடப்பவள் நான். எமக்கு யாதும் ஊரே, யாவருங் கேளிரே ! நாளை என் செய்வோம் என்ற கவலை நாவலர்க்கு ஏது ? இந்த யானைகளும், குதிரைகளும், பொன்னும், மணியும் அழியுந் தகைமையின, ஆனால் நீர் எம்மீது வைத்த அன்போ என்றும் அழியாதது. அது ஒன்றையே பெரும் கொடையாகக் கொண்டு நாம் செல்ல விரும்புகிறோம்.

பாரி : மகளிர் நாயகமே ; மன்னிக்கவேண்டும். பாரியிடம் வந்தோர் வெறுங் கையாய்ச் சென்றனர் என்ற பழிச்சொல் நமக்கு ஏற்படக்கூடாது.

ஔவை : வீண் பற்றுக்களுக்கும், துன்பங்களுக்கும் என்னை இடமாக்குகிறீர். ஆயினும் நீர் பேரன்பு கொண்டு எனக்கீந்த பொருளானமையால், ஏற்றுக் கொள்கிறேன். விடைபெற்றுக் கொள்ளட்டுமா ?

பாரி : ஒரு விஷயம். வழியில் கள்வர் பயமிருக்கலாம். ஆகையினால் கவனமாய்ச் செல்லவேண்டும். எதற்கும் உம்முடன் துணைக்காக என் வீரர்கள் சிலரை உடனனுப்புகிறேன். மலை நாட்ல்லவா!

ஔவை : (அலக்ஷியப் புன்னகையுடன்) கலைச் செல்வத்தையே பெருஞ் செல்வமாகக் கொண்ட எம்மைக் கொள்ளையடிக்க வல்லார் யார் ?

பாரி : நான் அதைச் சொல்லவில்லை. மற்றதைக் குறிப்பிட்டேன்.

ஔவை : இன்றிருந்து நாளை அழியக்கூடிய அப் பொருளை நாங்கள் பொருளாகவே மதிப்பதில்லையே !

பாரி : எதற்கும் என்வீரர்களை உமக்குத் துணையாக அனுப்புகிறேன்

ஔவை : நான் விடைபெற்றுக் கொள்கிறேன்.

பாரி : தமிழ்ப் பெருமகளே ! இன்று நீர் நம்மை விட்டுப் பிரிந்த போதிலும் கூடிய சீக்கிரம் உம்வரவால் நம்மை மகிழ்விப்பீர் என்ற நம்பிக்கையுடனே தான் உமக்கு விடைகொடுக்கிறோம். அடியேனை மறந்துவிடவேண்டாம்.

ஔவை : அதிய மானிடம் என் வேலை முடிந்ததும், பறம்புமலையை நோக்கியே என் கால்கள் புறப்படும். உம்மை எப்படி மறக்கமுடியும் ?

பாரி : (புன்சிரிப்புடன்) அதற்கு முன்னால் இல்லை ! சரி !

## காட்சி 2.

அதே நாள் மாலை. கபிலரும், பிரதானிகளும் புடை சூழப் பாரி வீற்றிருக்கிறான். அவன் யாரோ ஒருவரை எதிர் பார்த்துக் கொண்டிருப்பதுபோல் தோன்றுகிறது. சேவகன் உள்ளே நுழைகிறான்.

சேவகன் : (வணங்கி) ஔவையார் வந்திருக்கிறார்.

பாரி : (ஆச்சரியத்துடன்) ஔவையாரா ! என்னடா உளறுகிறாய் ?

சேவ : ஆம், அரசே ! ஔவையார் தான் வந்திருக்கிறார்.

பாரி . அவருடைய வரவு என்றும் நமக்கு மகிழ்ச்சி தரக்கூடியதே ! ஆனால் இவ்வளவு சீக்கிரம் எதிர் பார்க்கவில்லையே. என்ன விசேடமோ? (அவரை வரவேற்கச் சிம்மாசனத்தினின்றும் எழுந்து செல்கிறான். அதற்குள் ஔவையார் மண்டபத்திற்குள் வந்துவிடவே, யாவரும் எழுந்து நிற்கிறார்கள்).

பாரி : வரவேண்டும் ! வரவேண்டும் ! இவ்வளவு சீக்கிரம் நமக்கு இப் பாக்கியம் கிடைக்குமென்று கனவிலுங் கருதவில்லை. (புன்சிரிப்பு) மிக்க மகிழ்ச்சி.

ஔவை : ஆனால் நான் கூறப்புகும் விஷயம் உமக்கு மகிழ்ச்சி யூட்டக்கூடியதாயிராது என்று அஞ்சுகிறேன்.

பாரி : அப்படியாது விசேடமோ ?.........அதியமானுக்கு.........அப்படியானால் இன்றே நமது படைகளைத் திரட்டுவதற்கு நான் உத்தரவிடுகின்றேன்.

ஔவை : அப்படி யொன்றுமில்லை. நீர் கொடுத்த பொருள்கள்...........

பாரி : ஆம், அவை உம்முடைய கௌரவத்திற்கும், புலமைக்கும் போதாவென்பதை நான் நன்கு உணர்வேன். அதைப்பற்றி நான் முன்பே குறிப்பிட்டேன். ஆயினும் என் பிழையைப் பொறுத்தருளவேண்டும். இன்னும் தங்களுக்குப் பிரியமானது என்னென்னவோ, அவைகளை என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஔவை : அரசே ; சற்று நிதானமாய்க் கேட்க வேண்டும். நீர் கொடுத்த பொருள்கள் அனைத்தையும் கள்வர் கொள்ளையிட்டுக் கொண்டனர். அதை உம்மிடம் முறையிடவே வந்தேன்.

பாரி : ச் ! இவ்வளவுதானா ! யர்ன் என்னவோ என்று அச்சமுண்டேன். யானைகளுங் ஒட்டகங் களும் குதிரைகளும், பசுக்களும் இறக்குந்தன்மை யன. பொன்னும், மணியும், பவளமுந் தந்தமும் அழியும் நீர்மையன ! அவைகளுக்சாக வருந்த வேண்டாம், ஔவைப் பிராட்டியார்ரே! (அவனுடைய இதழ்களில் ஒரு புன்சிரிப்பு).

ஔவை : இந்த உபதேசத்தைப் பெறுவதற் கர்க நர்ன் உம்மிடம் வரவில்லை.

பாரி : (ஔவையின் வார்த்தைகளைக் கவனி யர்ததுபோல்) செல்வம் நிலையாது. அது இன் றிருந்து நாளை அழியக் கூடியது. ஏன் ? இப் பொழுதிருந்து, இன்னுஞ் சற்று நேரத்தில் அழியக் கூடியது ! உதாரணமாக இப்பொருள்களையே எடுத்துக்கொள்ளலாம். இன்று காலை அவை என்னிடமிருந்தன. பிறகு உம்மிடம் வந்தன. இப் பெர்ழுது யார் யாரிடமோ சென்றுவிட்டன ! இது தர்ன் நிலையற்ற பொருள்க்ளின இயற்கை !

ஔவை : என் முன்னால் இதோ இங்கு வீற் றிருப்பது பர்ரிதர்னா ? என்னை இங்ஙனம் ஏளனம் செய்வது பறம்புமலை வள்ளல்தானா ? புலவர்களால் போற்றப்படும் பர்ரிவேளர் என்னிடம் இங்ஙனம் வர்ர்த்தை யாடுவது ? நர்ன் கனவு காண்கிறேனா ?

பாரி : ஔவைப்பிரர்ட்டியர்ரே ! நீர் கனவு கர்ண வில்லை. உமக்குச் சந்தேகமாயிருந்தால், பக்கத் தில் கபிலர் வீற்றிருப்பதைப் பார்த்தாவது சந்தே கம் தெளியலாம்.

ஔவை ; கபிலரே ! நீரும் பக்கத்தில் இருந்து இவையெல்லாம் பார்த்துக்கொர்ண்டு மௌனமாக வர் இருக்கிறீர் !

கபிலர் : "நீரிற்குமிழி இளமை செல்வம் நீரிற் சுருட்டும் நெடுந்திரைக்ள்." ஆகையினால் அழியும் இப்பொருள்களுக்காக அல்லலுறல் அழகன்று.

பாரி : (உரத்தசிரிப்புடன்) பேஷ் ! பேஷ் ! நன்றாய்ச் சொன்னீர் !

ஔவை : (மிகுந்த கோபத்துடன்) பாரி ! கேவ லம், நீர் கொடுத்த யானைகளுங் குதிரைகளும் பறி போயினவே என்று முறையிடுவதற்காக நான் வர வில்லை. தமிழகத்தில் இது யாங்கணும் நடக்கர்த தோர் நிகழ்ச்சி !

பாரி : எது ?

ஔவை : புலவர்க்ள் கொள்ளையடிக்கப்படுவது! அதுவும் புலவர்களுக்கெல்லர்ம் புரவலனாக விளங் கும் உமது நர்ட்டில் அது நடந்ததென்றால் அது உமக்கு அவமானமர்க இல்லையா ?

பாரி : சரி, போனால் பேர்கிறது. முற்றுந் துறந்த முனிவர்களுக்கும் பொருளாசை ஏற்படு வது சகஜமே. நீர் இப்பொழுது என்ன சொல் கிறீர் ?

ஔவை : (மிகுந்த கோபத்துடன்) எனக்கு அவமர்னமிழைத்த அக்க்ள்வர்களை இப்பொழுதே பிடித்துக்கொண்டு வந்து, தகுந்த தண்டனை விதிக்கவேண்டும். இல்லையானால் என் மனம் ஆறாது !

பாரி : ஆறுவது சினம் ! (சபையில் கொல் லென்ற சிரிப்பு !)

ஔவை : (உதடுகள் துடிக்கக் கன்னங்கள் சிவக்கக் கோபக்கனல் தோன்ற விழிக்கிறார்.)

பாரி : (புன் சிரிப்புடன்) பிறர்க்கு உபதேசம். செய்வது எவர்க்கும் எளிது. அதன்படி நடப்பது தான் கடினம். சரி, இப்பொழுது உம்முடைய வழக் கைச் சொல்லும். முறைப்படி விசாரிக்கலாம்.

ஔவை : பறம்பு மலைக் காடுகளினூடே நானும் என் பரிவாரங்க்ளும் சென்றுகெர்ண்டிருக்கையில் சில கள்வர்கள் வந்து என் பொருள் யர்வையும் கொள்ளை யிட்டுச் சென்றனர். அவர்களைத் தேடிப் பிடித்து விசாரிக்க வேண்டுகிறேன்.

பாரி ; இப்படி யெல்லாம் நேரும் என்றுதானே நான் கவனமாய்ப் போர்குமாறு எச்சரித்தேன் !

ஔவை : இப்பொழுது நடந்ததற்குப் பரிகா ரம் கேட்கிறேன்.

பாரி : உம்முடன் துணைக்குச் சில வீரர்களை அனுப்பினேனே, அவர்கள் என்னவானார்கள்?

ஔவை : அவர்களா? ஆம், அவர்களைப் பற் றிச் செர்ல்ல மறந்துவிட்டேனே. ஆண்களிடையே கூட அத்தகைய கோர்ழைகளை நான் இதுவரை பார்த்ததில்லை.

(சபையில் யர்வரும் நகைக்கிறார்கள்)

கபிலர் : (புன் சிரிப்புடன்) உம்முடைய குறும்பு இன்னும் போகவில்லையே !

பாரி : (சிரித்துக்கொண்டு) இத்தகைய சல்லா பத்தில்தானே மோகங் கொண்டோம்! ஆமாம், அவாகள் என்னதான் செய்தார்கள் ?

ஔவை : கள்வர் தோன்றியதுதர்ன் தாம தம். அவர்கள் வெயர்த்து விறுவிறுத்து, கால்க ளும் கைகளும் 'வெலவெல' வென நடுங்கக் 'குய் யோ முறையேர்' எனக் கூவிக்கொண்டு, நாலர் திசைகளிலும் ஓடி விட்டர்ர்கள்.

பாரி : சிறந்த நடிகர்கள்! அவர்களுடைய் திறமையை மெச்சுகிறேன். நீர் என்னென்னவோ வீரமாய்ப் பேசுகிறீர்' வீரமர்ய்ப் பாடுகிறீர்; உண் மையில் உம்முடைய தைரியம் எப்படி இருக்கிற தென்று பரிசோர்திப்பதற்காகவே அப்படி ஓடி யிருக்கிறார்கள்!

ஔவை : ஆமர்ம் மரப் பொர்ந்துகளிலும் பர்றை யிடுக்குகளிலும் என்னுடைய வீரத்தை இன்னும் பரிசோதித்துக் கொர்ண்டே இருக்கிறார்கள் போ லும்! அத்தகைய வீரசிகாமணிகளை வைத்துக் கொண்டு நீர் மூவேந்தரை எப்படி எதிர்க்கப்போகி றீரோ யாம் அறியோம்! (இச்சமயம் பாரி ஒரு சமிக் ஞை செய்யவே, ஔவையுடன் சென்ற வீரர்களெல் லாம் மண்டபத்திற்குள் நுழைந்து வரிசையாய் நிற்கிறார்கள்)

ஔவை : (ஆச்சரியத்துடனும் ஏளனத்துடனும் அவர்களை நோக்கி) இதோ வந்து விட்டனர் அவ்வீரமணிகள் !

பாரி : அதிருக்கட்டும். உம்மைக் கொள்ளையடித்த கள்வர்களை இப்பொழுது கொண்டுவந்தால், நீர் அடையாளங் கண்டுகொள்ள முடியுமா?

ஔவை : ஓ! நன்றாய்!

பாரி : சேவகா! அக்கள்வர்களை எல்லாரைங் கொண்டுவந்து நிறுத்து.

ஔவை : )ஆச்சரியத்துடனும் சந்தோஷத்துடனும்) அவர்களைப் பிடித்துவிட்டார்களா.உமது வீரர்கள் !

பாரி : அதைவிட அவர்களுக்கு வேலை?

ஔவை : பேஷ் ! இதுவன்றோ பாரிக்கழகு! (கள்வர்கள் வரிசையாக நிறுத்தப் படுகிறார்கள்)

ஔவை: (ஆனந்தத்துடன்) இவர்களே தாம். நன்றாகத் தண்டிக்க வேண்டும். தண்டனை குறையக்கூடாது. புலவர்களைக் கொள்ளையிடுவது எத்தகைய பெருங் குற்றம் என்பதை யாவரும் அறிய வேண்டும்.

பாரி : (கள்வர்களை நோக்கி) நீங்கள் இப்பெருமகளைக் கொள்ளையிட்டது உண்மைதானா?

கள்வர்கள் : (அனைவரும் ஒரே குரலில்) ஆமாம்!

ஔவை · பாரும் அவர்களுடைய அகந்தையை. மரண தண்டனை கூட அவர்களுக்குப் போதாது !

பாரி : (கள்வர்களை நோக்கி) உமது சேவையை மெச்சினோம். நீங்கள் இன்றே நமது உண்மைத் தொண்டர்களானீர்கள் ! நீவிர் கொள்ளையிட்ட பொருள்கள் யாவும் உம்மையே சேரும் !

ஔவை , (ஆத்திரத்துடன்) என்ன! என்ன! உமது நீதி வெகு அழகா யிருக்கிறது! பாரீ!

கபிலர் : நாட்டின் உண்மையான தொண்டர்க்கு உகந்த பரிசளிப்பது அரசருடைய கடமை இல்லையா?

ஔவை : ஆனால் இவர்கள் ?

கபிலர் : நாட்டுப் பொருள்களை நாட்டிற்கப்பால் போகவிடாது காத்தது சிறந்த தொண்டில்லையா?

ஔவை : ஓஹோ அப்படியா? (மிகுந்த கோபத்துடன்) உமக்கும் அக்கொள்ளையில் பங்குண்டோ? நீரும் அக்கொள்ளைக் காரர்களில் ஒருவர் தாமோ ?

பாரி : அவர் மட்டுமல்ல. யானும் அதில் சம்பந்தப்பட்டவனே '

ஔவை : (ஆச்சரியத்துடன் பிரமித்து) பாரீ !

பாரி : (சிம்மாசனத்தினின்றும் எழுந்து ஔவையின் முன்னால் முழந்தாளிட்டுக் குரல் தழுதழுக்க) புலமைமிக்க பெரியோய்! நமது தமிழறிவில் நாம் கொண்ட காதலினால் இக்காரியத்தைச் செய்யத் துணிந்தோம். மன்னித் தருளவேண்டும் ! உம்மைப்போன்ற பெரியோர்களைப் பிரிந்து, பாரி எங்ஙனம் உயிர் வாழ்வான் ! உம்மை மீண்டும் வரவழைப்பதற்கே இதை ஏற்பாடு செய்தோம், எம்மை மன்னிப்பீரா ?

ஔவை : பாரீ ! இன்றுதான் உம்முடைய கொடையின் முழுத்திறனையும் நான் உணர்ந்தேன். கொடுத்துப் புகழ்கொண்டோர் இப்புவியில் அனந்தம்! ஆனால் பறித்துப் புகழ்கொண்டோன் பாரி ஒருவனே ! இச்செயலுக்காக உம்மை உலகம் முழுதும் போற்றும் ஒரு காலத்தை யான் என் எதிர்காலக் கண்களால் பார்க்கிறேன். தமிழ்மீதும் தமிழ்ப் புலவர்மீதும் இத்தகைய பேரன்புகொண்ட ஒரு வள்ளலின் வேண்டுகோளைக் கொஞ்சமேனும் மதியாமல், உதாசீனம் செய்துவிட்டுப் போனேனே. அதை நீர் மன்னிப்பீரா ?

பாரி : (மௌனமாய் ஆனந்தக் கண்ணீருகுத்துக்கொண்டு நிற்கிறான்).

ஔவை : நீர் மன்னித்து விடுவீர். அது உமக்குப் பெரிதல்ல. ஆனால் உலகம் என்னை மன்னிக்காது. கள்வர்கள் என் பொருளைப் பறித்துவிட்டார்கள் என்று உம்மிடம் முறையிட வந்தேன். ஆனால் நீர் எனது உள்ளத்தையே பறித்து விட்டீர்? இதை யாரிடம் முறையிடுவது ?

பாரி : ஔவைப்பிராட்டியாரே, மன்னிக்கவேண்டும் ?

ஔவை : இனி நீர் என்னைப் 'போ, போ!' என்று பிடரியைப் பிடித்துத்தள்ளினாலும், உம்மை விட்டு அகலுவதற்கு எனக்கு எங்ஙனம் மனம் வரும்? இனி நான் உமது அடிமை !

பாரி : பிராட்டியாரே! இன்றே நான் பிறவிப் பயனை எய்தினேன்! உம்மைப்போன்ற நல்லிசை மிகப் பெரியோர் எப்பொழுதும் நம்மைச் சூழ்ந்திருக்க வேண்டுமென்பது நமது அவா. உம்மைப் பிரிந்து நான் எங்ஙனம் வாழ்வேன்? ஆயினும் நான் எனது கடமையை உணர்கிறேன். நீர் அதியமானுடைய ஓலையை எங்ஙனம் மதிக்கிறீரோ, அதைப் போல நாமும் கௌரவிக்கிறோம். அதியமானுக்கு வந்த ஆபத்து நமது ஆபத்தே! ஆகையால் எமது ஆவலைப் பூர்த்தி செய்வதற்காக, இன்னும் சில நாட்கள் இங்கு தங்கியிருந்துவிட்டு நீர் செல்லலாம் எனது பேதமையினால் ஏற்கனவே ஒரு சூரியனைப் பறம்புமலை நிழலில் அடைத்துவிட்டேன். இன்னொரு சூரியனையும் அடைக்க முயலமாட்டேன்! (பாரியின் கண்களில் நீர் ததும்புகிறது.

ஔவை : (கண்களில் நீர் ததும்ப நாக்குழற) பாரீ! உமது தியாகத்தின் திறனை நான் இப்பொழுதுதான் முற்றிலும் உணர்கிறேன். இதுவே நீர் கொடுத்த கொடைகளில் எல்லாம் பெருங்கொடை !

(திரை)

(பின்னணிச் சங்கீதம்)

பாரி பறித்த பறியும் பழையனூர்க்
காரி கொடுத்த களைக் கோட்டும் - சேரமான்
வாராய் என வழைத்த வாய்மையும் இம் மூன்றும்
நீலச் சிற்றாடைக்கு நேர்.

# கடைசி சந்திப்பு

◆ சுந்தரம் ◆

சரி, ஐந்து நிமிஷம்! அங்கே அவர் இரும்புக் கம்பிகளுக்குப் பின்னால் கையில் விலங்குடன். இங்கே எனக்கு ஐந்து நிமிஷத்திற்குச் சந்திப்புக் கிடைத்தது. அதுவும் முடிந்துவிட்டது.

* * *

காலக்கண்ணாடியைச் சற்று நோக்கினால்—ஆ, என் இருதயமே ஈட்டியால் குத்தப்படுகிறது. என் கதையை யாரிடம் சொல்லுவேன்? கேட்பார் யாருமில்லை. கேட்டாலும் "அது உன் கர்மம். கடவுளை நம்பு. அவர் ஆதரிப்பார்" என்று கூறி நழுவி விடுகிறார்கள்.

அநாதையை ஆதரிக்க ஈசுவரன் வருவதில்லை. பாபப் படுகுழியை நோக்கிச் சென்றுகொண்டிருப்போரை ஆதரிப்பதில்லை. பசியாளர்களுக்கு அன்னம் அளிக்க அவன் என்ன உதவி செய்கிறான்? அழுகிறவர்களை ஆதரிக்கிறானா? இல்லை. அவன் சுவர்க்கம் என்னும் மைதானத்தில் ஆடி ஓடுகிறவன். தனது மனைவியின் கட்டளைக்கு கீழ்ப்படிந்தவன். லக்ஷ்மி வாசம் செய்யுமிடத்தில் அவனும் வசிக்கிறான். என் போன்ற ஏழையின் பால் அவன் ஏன் இரக்கம் கொள்ளுகிறான்! ஏழைகளுக்கு ஈசுவரன்—அவர்களின் துர்பாக்கியந்தான்! துரதிர்ஷ்டசாலியான நான் ஏன் ஈசுவரனை அழைக்கவேண்டும்? கூப்பிட்டாலும் எனது துர்பாக்கியத்தைத்தான் கூப்பிடுகிறேன். அது வருகிறது. ஏதோ ஒரு மலையை 'தடார்' என்று என் தலைமேல் போடுகிறது. ஆனந்தமாக ஆடி ஓடிவிடுகிறது.

முதல் தடவை கூப்பிட்டேன். ஒரு ஏழைப் பட்டதாரியிடம் என்னை ஒப்படைத்தது. மறு தடவை அழைக்கும்போது இரண்டு குழந்தைகளைக் கொடுத்தது. மூன்றாம் தடவை கதறும்போது எனது ஆசைக் கணவனுக்குத் தூக்குத் தண்டனை அளித்துச் சென்றது. காரியம் அனைத்தும் முடிந்துவிட்டது. இன்னும் ஏன் கூப்பிடவேண்டும்?

* * *

இதோ இருக்கிறது சர்க்காரிடமிருந்து வந்த கடிதம். எனது கணவர் என்னோடு கடைசியாகச் சந்திக்க விரும்புகிறாரென்றும், அவர் நாளைக்கு 'தூக்கு' தேவியைச் சந்திக்கப் போகிறாரென்றும், எனது குழந்தைகளையும், என்னையும் பார்க்க ஆசைப்படுகிறாரென்றும் எழுதப்பட்டிருக்கிறது இக்கடிதத்தில். அவரின் கழுத்திற்குக் கயிறு திரித்தாய் விட்டது. அவரின் பிணத்தை மூடத் துணியும் வாங்கியாய் விட்டது. இருந்தாலும், நானும் நீங்களும் எப்படி இப்பொழுது உயிரோடிருக்கிறோமோ அதே போல் அவரும் உயிரோடிருக்கிறார்.—என்ன ஆச்சரியம்!

அவர் காலனின் வேட்டையாக உட்கார்ந்திருக்கிறார். அவரின் 'ஆவி நாளை ஓடிவிடும்' அவரின் கழுத்து சொர சொரப்பான கயிற்றால் இறுக்கப்பட்டுவிடும்.

நான் சட்டத்தைத் தப்பிதம் என்று சொல்லவில்லை. நியாயத்தை அநியாயம் என்று அழைக்கவில்லை. ஆனால், மனுஷ்யத்துவத்திடம் கேட்கிறேன்—சகோதரி! சொல்லு. ஒரு தடவை சொல்லு. நியாயம் ஊமையாயிருக்கிறது. செவிடாயிருக்கிறது. குருட்டாயிருக்கிறது. அதன் முன் யாரை நிறுத்துகிறோமோ அவரைப் பரீக்ஷித்துப் பார்க்கும் அது. ஆனால் உன்னிடமோ ஹிருதயமிருக்கிறது. என் பக்கம் பார்த்து இரண்டொரு வார்த்தை சொல்லேன்.

"அவரின் பாத கமலங்களை முத்தமிடட்டுமா? ஏ! தேவனே! என்னையையும் எதிர்பார்ப்பாயா? மறந்துவிட மாட்டாயே? துரதிர்ஷ்டசாலியான இவள் உமது உன்னதமான வாலிபத்தில் தகிக்கிற நெருப்பைக் கொட்டிவிட்டாள். உமது வாலிபமென்ற பரிசுத்தமான தட்டில் கொடிய விஷத்தைக் கலந்துவிட்டாள். மன்னிக்கவும். மன்றாடிக் கேட்கிறேன். இவை உமது குழந்தைகள். வாத்ஸல்யமென்ற குளிர்ந்த தண்ணீரால் இக்குழந்தைகளை ஒரு தடவை குளிப்பாட்டிவிடும் என்றெல்லாம் அவரிடம் சொல்லலாமென்று நினைத்தேன். சற்று நேரத்திற்கெல்லாம் ஜெயிலை நோக்கி நடக்கத் தொடங்கினேன். மடியில் குழந்தை கோபு இருந்தான். "அம்மா, எங்கே போகிறாய்?" என்று கேட்டான். என்ன பதில் சொல்லட்டும்? என்ன சொல்லி என் துக்கத்தை அவனுக்குத் தெரியப்படுத்தட்டும்?

"குழந்தாய், அப்பாவைப் பார்க்கப் புறப்படு. அவர் உன்னைப் பார்க்க விரும்புகிறார்" என்றேன்.

"அம்மா, ரொம்ப நாளாய் அப்பா வரவில்லையே. அவர் எங்கே இருக்கிறார்? அவரிடம் பொம்மை வாங்குவேன். பைசாக் கேட்பேன். மீனாவுக்கு ஒரு பொம்மையும் கொடுக்க மாட்டேன். எனக்குத்தான் அப்பா அவர்.

மீனாவுக்கு என்ன வேண்டும் அவர்?" என்று கோபு ஆனந்தமாகச் சொன்னான். இதைக் கேட்ட என் இதயம் வசமற்றுப் போய்விட்டது.

"குழந்தாய்! உனது அப்பா யமனின் மடியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். வாழ்க்கையின் நாட்களை விரல்களால் எண்ணிக்கொண்டிருக்கிறார். குழந்தாய்! பகவானை நினை" என்று என்னையே நான் திடப்படுத்திக் கொண்டு சொன்னேன்.

"அப்பா எப்பொழுது வருவார்? கூடவே கூட்டிக்கொண்டு வருவேன். கோவிந்தனின் சைக்கிளைப்போல் எனக்கும் அவர் சைக்கிள் வாங்கிக்கொடுப்பார். கோவிந்தன் சைக்கிளைத் தொடக்கூட விடமாட்டேனென்கிறான். ஒடிந்து போகுமென்கிறான். மீனாவை என் சைக்கிளை தொட விடமாட்டேன். கோவிந்தன் சிலேட்டை உடைத்துவிட்டான். அப்பாவிடம் அவனைப்பற்றிச் சொல்லுவேன்" என்று கோபு என்னுடைய முந்தாணியைப் பிடித்துக்கொண்டே சொன்னான்.

* * *

"கூட்டிக் கொண்டு போ" என்று ஜெயிலர் உத்திரவு கொடுத்தான். ஒரு வார்டனின் பின்னால் சென்றேன். இரு பக்கங்களிலும் இருண்ட அறைகள். பருமனான இரும்புக் கம்பிகளுக்கப்பால் கடவுளின் சர்வ சிரேஷ்ட சிருஷ்டி - மனிதன்! இரண்டு மூன்றல்ல. ஆயிரக் கணக்கில். உலகில் நான் மாத்திரம் அபாக்கியவதியல்ல. ஆயிரக் கணக்கானவர்களிருக்கிறார்கள் போலும்!

ஓர் இருட்டு அறைக்கு முன்னால் நான் நிறுத்தப் பட்டேன். கோபாலன் பயந்து என் கால்களைப் பலமாகப் பற்றிக் கொண்டான்.

"பிரகாசம்" என்று வார்டன் அழைத்தான். அது தூக்கிடுபவர்களை அடைத்து வைத்திருக்கும் சிறை. வாழ்க்கையின் கடைசி நிமிஷத்தைக் கழிக்கும் கைதிகள் இங்குதான் வசிக்கிறார்கள். அந்த அறைக்குப் பேசும் சக்தி கிட்டிவிட்டால், உலகத்தோர் இதுவரை படியாத ஓர் மகோன்னத இலக்கியத்தைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. அந்த அறையின் ஒவ்வொரு செங்கலிலும் எத்தனை கூக்குரல் படிந்திருக்கிறதோ! அதன் தரையில் சிந்திக் காய்ந்து போன கண்ணீரை எல்லாம் ஒன்றாய்க் கூட்டினால் இன்றைய நாகரிக அபிமானிகளில் பாதிப் பேர் அதில் மூழ்கிப் போய் விடுவார்கள். இந்த அறையும் சாவும் எவ்வளவு அன்புடனிருக்கின்றன, அடடா!

அறையின் நடுவிலிருந்து சப்தம் வந்தது. ஒரு ஒல்லிய, களைப்படைந்த வாலிபர் வாசற்படியில் வந்து நின்றார். இவர்தான் அந்த இருட்டுக் கிடங்கில் வசித்து வந்த "பிரகாசம்." எனது இருட்டு மயமான எதிர்காலத்தின் "பிரகாசம்." எனது கோபுவின் பிரகாசம், குழந்தை மீனாவின் 'பிரகாசம்'!

"ஐந்து நிமிட நேரம், பேசிக் கொள். ஆம். சிக்கிரம். நேரத்தைக் கடத்தாதே" என்றான் வார்டன். சற்று விலகி நிற்க உத்திரவிட்டான். நான் கைதிக்கு - என் கணவருக்கு - ஏதாவது கொடுத்து விடக்கூடாதென்ற பயம் அவனுக்கு! எண்ணெய்க்கு ஏமாறின, கருண்ட சுருள் படிந்த ரோமங்களால் சூழப்பட்ட அவரின் முகத்தையும், நீண்ட தாடியையும் கண்டேன். கண்கள் குழி விழுந்து விட்டன. சரீரம் காய்ந்து முள்ளாய்ப் போயிருந்தது.

"கோபு, அப்பாவை நமஸ்காரம் செய்" என்றேன். ஒன்றுமறியாத கோபு பூமியில் விழுந்து நமஸ்காரம் செய்தான். அரைகுறையான இருட்டில் அவர் அப்பக்கத்தில் நின்று கொண்டிருந்தார்.

"சுகமாயிருங்கள். இது எனது கடைசிச் சந்திப்பு, கடைசி வாழ்த்து, கடைசிச் சம்பாஷணையுங்கூட. நாளைக் காலையில் வந்து எனது பிணத்தை எடுத்துக் கொண்டு போ. நான் ஜெயிலரிடம் சொல்லிவிட்டேன்." என்று அடைபட்ட தொண்டையில் மெதுவாகச் சொன்னார்.

இதைக் கேட்ட நான் மயங்கினவளாய் அப்படியே பூமியில் உட்கார்ந்துவிட்டேன்.

"அப்பா, புறப்படவில்லையா" என்றான் கோபு. கோபுவின் இந்த வார்த்தை என்னை ஒரே அடியாய்க் குழப்பத்தில் தள்ளி விட்டது.

"குழந்தாய், நான் மறு உலகப் பிரயாணி. நீ நன்றாகப் படி. அம்மாவைக் கஷ்டப் படுத்தாதே" என்றார் அவர். கற்சிலை போல் நின்று கொண்டிருந்த அவரது கண்களிலிருந்து கண்ணீர் தாரை தரையாய் ஓடிக்கொண்டிருந்தது.

"மீனா, என் சிலேட்டை உடைத்து விட்டாள். வேறு ஒரு சிலேட் வாங்கிக் கொடு" என்றான் கோபு.

"ஸரசு. கேட்கிறாயா-கோபுவின் சிலேட் உடைந்து போய் விட்டதாம். இவனுக்கு இன்னொரு சிலேட் வாங்கிக் கொடு" என்று பெரு மூச்சு விட்டுக்கொண்டே சொன்னார் என் பக்கம் பார்த்து.

"சந்தோஷமாயிரு. குழந்தைகளை அன்பாக வைத்துக்கொள். கோபாலனை நன்றாகப் படிக்கவை. நானோ இதோ போய் விட்டேன். ஆனால், கோபுவை வைத்து விட்டுப் போகிறேன். கவலைகொள்ளாதே. ஆகவேண்டியது, ஆய்விட்டது." என்று மறுபடியும் சொன்னார்.

"பிறகு......பிறகு......பிறகு" என்றேன். தொண்டை அடைத்துக் கொண்டது. இருதயத்தின் ரத்தம் கண்ணீர் மயமாய்க் கண்களின் வழியாய் வெளிவந்தது.

"சரி, ஐந்து நிமிஷமாகி விட்டது. புறப்படு." என்றான் வார்டன்.

"நல்லது...பிரிவு! ஆம் ஒரு தடவை என் சார்பாக கோபுவை முத்தமிடு. நான் கண்ணாலாவது பார்க்கிறேன். அடுத்த ஜன்மத்தில் சந்திப்போம்" என்றார் அவர். "சிக்கிரம். நேரம் முடிந்து விட்டது. புறப்படு" என்று உறுமினான் வார்டன்.

(ஹிந்தியிலிருந்து)

# பிரச்னை

சியாமளா பாலகிருஷ்ணன்

**த**னம் சட்டியில் மிஞ்சியிருந்த அரைப்படி நொய்யைப் போட்டு, கஞ்சி காய்ச்சிக் கொண்டிருந்தாள். அவளருகில் பத்து மாதமான பெண் குழந்தை ஒன்று கையைத் தரையில் தட்டி விளையாடிக் கொண்டிருந்தது. அடுப்பிற்கு அருகில் ஒரு சிறிய காடை விளக்கு எரிந்து கொண்டிருந்தது. நான்கு சட்டிப் பானைகள், இரண்டு டப்பாக்கள், ஒரு கொடியில் சில கிழிந்த துணிகள், மூன்று பழைய பாய்கள், இவைகள்தாம் அந்தச் சிறிய குடிசையிலிருந்த சாமான்கள். எலும்பெடுத்துப் போய் கருத்திருந்தாலும் அந்த மங்கிய வெளிச்சத்தில் தனத்தின் முகம் லக்ஷணமாகவே காணப்பட்டது. அவளைப் போலவே அக் குழந்தையும் வறுமையினால் எலும்பும் தோலுமாக இருந்தது.

கஞ்சியை இறக்கி, வென்னீருக்காக அடுப்பில் ஜலம் வைத்துவிட்டு, தனம் இடுப்பில் குடத்தை எடுத்துக் கொண்டு வாசற்பக்கம் வந்தாள். அங்கு கந்தனும் பொன்னியும் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

“அக்கா, அம்மா செத்துப் பூடுச்சா? கந்தனும் முனுசாமியும் சொல்லுது” என்று விம்மினாள் பொன்னி.

தனத்திற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவள் தாயார் இறந்து எட்டு மாதங்கள் கடந்துவிட்டன. பொன்னி விவரமறியாத மூன்று வயதுக் குழந்தையாக இருந்ததால், தாயார் ஊருக்குச் சென்றிருப்பதாக அவளிடம் கூறி வந்தாள்.

“அவுங்க பேச்சைக் கேக்காதே. பொன்னி! இருட்டிப் போவுது. வா. நோக்கு கஞ்சித் தாரேன். குடிச்சுட்டு படுத்துக்க” என்று சொல்லி அவளை உள்ளே அழைத்துச் சென்றாள்.

குடத்தைக் கீழேவைத்துவிட்டு இரண்டு கிண்ணிகளில் கஞ்சியை ஊற்றினாள். கந்தனும குழந்தையை எடுத்துக்கொண்டு உள்ளே வந்தான்.

“ஏ மூதேவி, ஒங் கெட்டிக்காரத் தனத்தெ அதுங்கிட்ட காட்டறயோ? இந்த மாதிரி எதுனாச்சியும் திரும்பிப் பேசினே, அப்பங்கிட்டே சொல்லி ஒதை வாங்கி வச்சிடுவேன். இந்தக் கஞ்சியைக் குடி. வா” என்றாள்.

“சொன்னா என்ன வந்திடுச்சி?” என்று கூறிக்கொண்டே கந்தன் கஞ்சி குடிக்க உட்கார்ந்தான்.

குழந்தைக்குக் கொஞ்சம் கஞ்சியைப் போட்டிவிட்டு அதைத் தூங்க வைத்தாள். பொன்னியையும் படுத்துத் தூங்கச் சொல்லிவிட்டு, வாசற் பக்கம் வந்து எட்டிப் பார்த்தாள். நன்றாக இருட்டிவிட்டது. அவள் தகப்பன் இன்னும் வரவில்லை. அப்படியே வாசலில் உட்கார்ந்தாள். அவளருகில் கந்தனும் வந்து உட்கார்ந்தான்.

“அக்கா?”

“என்ன?”

“நீ கஞ்சி சாப்பிட்லே?”

“அப்பா சாப்பிட்டதுங்காட்டியும் நான் சாப்பிடுவேன்.”

“நீ கொஞ்ச நாளா சரியாவே சாப்பிடறது இல்லே. சில நா சாப்பிடாமையே படுத்துடறே. நிறைய சாப்பிட்டாத்தான் ஒன் இருமல் போவும்னு எல்லாரும் சொல்லறாக”

“நா எல்லா சரியாத்தான் சாப்படறேன். நீ போய்ப் படுத்துத் தூங்கு போ.”

“நானும் அப்பா வர்றமட்டும் குந்தியிருக்கேனே?”

“சரி, நேரமாவுதேன்னு சொன்னேன். பாவம்! நாள் முழுக்க அலையறாரு. இன்னிக்கி ஏதானாச்சியும் கடெச்சுதோ இல்லையோ. இன்னம் இரண்டு வருஷம் போச்சுன்னா நீயும் ஏதாச்சியும் வேலைக்கிப் போவலாம்.”

“இன்னெக்கி முனியனோடே குத்துச்சண்டை போட்டேன்: தோத்துட்டு மூக்காலே அழுதான். நாளைக்கி என்னே தோக்கடிப்பானா”

“நீ இந்த மாதிரி விளையாடக் கூடாது. கையெக் காலே, ஒடச்சுக்கிட்டேயானா யாரு படறது. அவரு ஒருத்தரு சம்பாரிக்கறது அரை வவுத்துக் கஞ்சிக்கிப் போதலையே. வயித்தியத்துக்கு எங்கே போறது.” பேசி முடிப்பதற்குள் இருமல் வந்து அவளை ஒருநாழி தவிக்கச் செய்தது.

“அக்கா ஒனக்கு இப்புடி இருமுதே?”

“என்னா செய்றது. தலெவிதி. நீ போய்த் தூங்கு. நேரமாவுது.”

கந்தன் உள்ளே சென்று படுத்துத் தூங்கிவிட்டான். தனம் தனியாக உட்கார்ந்து ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தாள். எவ்வளவு நேரம் அப்படி உட்கார்ந்திருந்தாள் என்று அவளுக்கே தெரியாது. தெருக் கோடியில் இரண்டு விளக்குகளைக் காணவே அவளுக்குத்

தூக்கத்திலிருந்து விழித்தாற் போல் இருந்தது.

கிழவன் விட்டு வாயிலில் வண்டியை நிறுத்தி விட்டு, உள்ளே வந்தான்.

''என்ன தனம், நீ தூங்கலே? ரொம்ப நேரம் ஆயிடுச்சே. இவ்வளவு நேரம் சுத்தியும் இண்ணைக்கி நாலணுத்தான் கெடச்சுது.''

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் தனத்திற்கு அடிவயிற்றை என்னவோ செய்தது. பேசாமல் ஒரு மூலையில் போய் உட்கார்ந்து விட்டாள், கிழவன் கைகால் அலம்பி வந்ததும், அவனுக்கு முக்கால் வாசிக் கஞ்சியையும் ஊற்றிக் கொடுத்துவிட்டு மிகுதியைத் தான் குடித்துப் படுத்துக் கொண்டாள். அவளுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. இருமல் வேறு ஒரு புறம் பாதித்தது. கிழவனும் புரண்டு படுத்தான்.

''அப்பா!''

''என்னம்மா?''

''வூட்டுலே ஒரு மணி அரிசி கூடக் கிடையாது.''

''நீ வேறே ஒரேயடியா இருமறே, வவுத்து சோறுக்குப் பஞ்சமா இருக்கச்சே, மருந்துக்கு எங்கே போவட்டும்? தடிப் பசங்க கிழவனுலே ஓட்டமுடியாதுன்னு என் வண்டிலே ஏறமாட்டேன்கிறுனுக.''

* * *

**அன்று** ஞாயிற்றுக்கிழமை. ரிக்ஷா ஸ்டாண்டை நோக்கி ஒரு ஸோல்ஜர் வந்தான். கிழவனைத் தவிர ஸ்டாண்டில் வேறொருவரும் இல்லை. ஆனாலும் எங்கிருந்தாகிலும் ஒருவன் தனக்குப் போட்டியாக முளைத்து விடுவானே என்று அவனுக்குப் பயம். ரிக்ஷாவை இழுத்துக்கொண்டு ஓடிப்போய் ஸோல்ஜரினருகில் நிறுத்தினுன். ஸோல்ஜர் வாடகை பேசாமல் வண்டியில் ஏறி உட்கார்ந்தான்.

அவன் போகச்சொன்ன இடங்களுக்கெல்லாம் கிழவன் போனுன். நான்கு மணிக்கு ஏறியவன் இருட்டிப்போயும் ரிக்ஷாவை விடுவதாக இல்லை. கிழவனுக்குக் கால்கள் துவண்டு விட்டன. ஸோல்ஜர் ரிக்ஷாவை விட்டு இறங்கினுல் போதுமென்று வேண்ட ஆரம்பித்தான்.

கடைசியில் ஸோல்ஜர் ஒரு ஹோட்டலெதிரில் வண்டியை நிறுத்தச் சொல்லி, இறங்கியதும் ஒரு ஐந்து ரூபாய் நோட்டைக் கிழவனிடம் விட்டெறிந்துவிட்டு, ஹோட்டலுக்குள் சென்றுன்.

கிழவன் அதைக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

''இண்ணெக்கு யார் முவத்துலே முழிச்சேனே. இவனே குடுச்சுட்டு வந்திருந்தான்னுக்கே ஒரு பைசா கூட குடுத்திருக்க மாட்டான்'' என்று எண்ணிக் கொண்டே வீட்டை நோக்கி நடந்தான்.

தெருக்கள் சந்தடியற்றிருந்தன. ரிக்ஷாவை குடிசை வாயிலில் கொண்டுவந்து நிறுத்தினுன். கிழவன். வழக்கம் போல் தனத்தை அங்கு காணுததால் ''தனம்!'' என்று கூவிக்கொண்டே உள்ளே நுழைந்தான். எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். தனம் கவிழ்ந்து படுத்து சுவரின் பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்தாள். அவளை எழுப்பலாம் என்று சென்ற கிழவன் அவளருகில் நிறைய ரத்தம் கொட்டி இருந்ததைக் கண்டு திடுக்கிட்டான்.

''தனம், தனம்!'' என்று அவளைக் குலுக்கினுன். அவள் நினைவிழந்திருந்தாள். மூச்சு மட்டும் லேசாக வந்துகொண்டிருந்தது. கிழவன் என்ன செய்வதென்று புரியாமல் சற்றுத் திகைத்தான். பிறகு அருகிலிருந்த டாக்டர் வீட்டை நோக்கி ரிக்ஷாவை இழுத்துக்கொண்டு ஓடினுன்.

கொஞ்சநேரம் கதவைத் தட்டியபின் ஒருவர் வந்து கதவைத் திறந்தார்.

''என்னப்பா வேணும்?''

''டாக்டர் இருக்காருங்களா!''

''நான்தான் டாக்டர். என்ன வேணும்னு சட்டுனு சொல்லு.''

''எம் மவ ரெத்தமா வாந்தி எடுத்துட்டு நெனவில்லாமெ கடக்கராளுங்க. தயவு பண்ணி என்னேடே வாரனுங்க.''

''காத்தாலே வரேன் போ.''

''இல்லே சாமி. ஏழெமேலே தயவு பண்ணனும். உங்களுக்கு ரூபா நான் கொடுத்திடறேன்.''

''உன்னுலே எப்படி முடியும்? எனக்கு ராத்திரீலே வர அஞ்சு ரூபா பீஸ் ஆச்சே.''

''நான் தரேனுங்க. எம் மவ பொழச்சா போறும்.''

''வரேன் இரு.''

அரைமணி நேரத்துக்குப் பின் டாக்டரை ரிக்ஷாவில் இழுத்துக் கொண்டு குடிசைக்கு வந்து சேர்ந்தான் கிழவன்.

தனத்தை நிமிர்த்திப் போடச் சொல்லி சோதனைக் குழாயை வைத்துப் பரீட்சித்தார் டாக்டர். பிறகு பெட்டியிலிருந்து ஏதோ மருந்தை எடுத்து இன்ஜெக்ஷன் செய்தார். ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் தனம் புரண்டு படுத்தாள்.

''இன்னமே அவளுக்கு நினைவு வந்துடும். இன்னி ராத்திரி நிம்மதியா தூங்குவ. இது ஒரு மாதிரியான க்ஷயம். இரத்தம் நின்னூடும். அப்புறம் நிறைய தயிரும் பாலும் கறிகாயும் சாப்பிடணும் .........''

கிழவன் பதிலொன்றும் சொல்லாமல் அவரை வீட்டில் விட்டுவிட்டு, மடியிலிருந்த ஐந்து ரூபாய் நோட்டை அவர் கையில் கொடுத்துவிட்டு, தன் குடிசையை நோக்கித் தள்ளாடி நடக்கலானுன்.

அவன் வீடுவந்து சேர்ந்த பொழுது தனம் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள்.

கிழவன் இரண்டு கைகளாலும் தலையைப் பிடித்துக்கொண்டு அவளருகில் உட்கார்ந்து ''தயிர் பால், கறிகாய் எவ்விதம் கிடைக்கும்?'' என்ற தீராத பிரச்னையில் ஆழ்ந்தான்.

# ஸ்ரீலஸ்ரீ வாசகர் ஸ்வாமி

## கி.ரா.

நான் நரகலோகத்துக்குப் போனேன்.

ஏன் போனேன், எப்படிப் போனேன் என்ற விஷயங்கள் ஒன்றும் தெரியவில்லை. ரெயில் வண்டியில் போனேனா, பஸ் வண்டியில் போனேனா, கார்ப்பரேஷன் லாரியில் போனேனா, ஏரோப்பிளேனில் போனேனா என்று யானும் யோசனை செய்து பார்க்கிறேன், தெரியவில்லை.

ஏன் போனேன் என்ற கேள்வியே என் மனத்தில் இப்போது எழவில்லை. எங்கோ, நாம் இயற்கையாகப் போகவேண்டிய இடத்துக்குப் போனதைப் போல்தான் தோன்றிற்று.

நரகத்திற்குப் போனால், அங்கே ஆலையில் போட்டுத் திரிப்பார்கள். எண்ணைக் கொப்பறையில் போட்டு, அப்பளத்தைப் போல் பொரிப்பார்கள், என்றெல்லாம் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம் அல்லவா? அவ்வளவும் சுத்தப் பொய் என்று தெரிந்துவிட்டது. ஏனெனில், அந்தமாதிரியான பயங்கரச் சின்னங்களே அங்கே கிடையாது.

சுத்தமான நவீன கட்டிடங்கள்; இந்த சிமிண்ட் கம்பெனி விளம்பரங்களில் பார்த்திருக்கிறோமே அந்த மாதிரியான பளபளப்பான கட்டிடங்கள். வழுக்கிவிடும் படியான சலவைக் கல்தரை; நிழல் பார்த்து நெற்றிக்கு வைத்துக் கொள்ளும்படியான பேஷனுடன் சுவர்கள். பார்க்கப்போனால், அங்கேயிருப்பவர்களுக்கு நம்முடைய நாகரீகமான சென்னைப் பட்டணம்தான் நரகமாகத் தோன்றும் என்றால், பார்த்துக் கொள்ளுங்களேன்.

ஆனால் அதுதான் நரகம் என்று என் மனத்திற்கு நிச்சயமாகத் தெரிந்தது. இல்லாத போனால் தவறிப்போய் நாம் சுவர்க்கலோகத்துக்குத்தான் வந்துவிட்டோமோ என்றுதான் நினைத்துக்கொண்டிருப்பேன்!

அங்கே போனதும் நான் சுற்றுமுற்றும் பார்த்து விழித்தேன். எமதர்மன் எங்கேயென்று தேடிப் பார்த்தேன். எமதர்மனுடைய வாகனமான எருமை மாட்டைக் கூடக் காணவில்லை. இவ்வளவு நாகரீகமான கட்டிடத்துக்குள் எருமை மாட்டை எங்கே கட்டி வைப்பார்கள் என்று பார்க்க வேண்டும் என்று எனக்கு ஆசை.

ஆனால் நான் நினைத்தபடியேதான் இருந்தது. எருமையே கிடையாது. எமனும் கர்நாடகமான எமனாக இல்லை. சினிமாவில் நாடக மேடைகளில் பார்த்திருக்கிறோமே, அந்த மாதிரி கூட இல்லை.

என் எதிரில் இருந்த சுவர் திடீரென்று நகர்ந்தது, அதற்குள்ளிருந்து தர்மராஜன் வந்தான். அவன் எப்படியிருந்தான் என்று நினைக்கிறீர்கள்? நல்ல மடிப்புப் பிரியாத சூட், கோட்; தலையில் உல்லாசமான தொப்பி; வாயில் ஒரு 'நேவி' சிகரெட்! "டக் டக்" கென்று நடந்து "ஹல்லோ" என்று கையைக் குலுக்கினான். ஆஹா! வழவழப்பான அவனுடைய முகத்தில் என்ன சுமுகமான புன்னகை.

என்னை ஜாடையாக எதிரில் இருந்த சோபாவில் உட்காரச் சொன்னான். நான் உட்கார்ந்தேன். உடனே மேஜைமேலிருந்த ஒரு பொத்தானை அமுக்கினான்.

அப்போது, எனக்கு எதிரிலிருந்த தரை விலகிற்று. அதற்குள்ளிருந்து சோபாவுடன் ஒரு ஆசாமி மேலே கிளம்பி வந்தார். அவருக்குப் பக்கத்தில் தரையிலிருந்து ஒரு மேஜையும் கிளம்பி வந்தது. அது நிறைய ஏராளமான புஸ்தகங்கள் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன.

நான் எதிரில் இருந்த புது ஆளைக் கவனித்தேன். அவரை எங்கோ பார்த்த ஞாபகமாக இருந்தது. அவருடைய உடலெல்லாம் முற்றி முதிர்ந்திருந்தது; ஆனால் முகம் மட்டும் விசித்திரமாகக் குழந்தையைப்போல் இருந்தது,

திடீரென்று யமன் அவரைப் பார்த்துக் கேட்டான்:

"உமக்கு இவரைத் தெரியுமா?"

"ஓ, தெரியுமே. ரொம்ப நன்றாகத் தெரியும். இவர்தான் பஞ்சாங்கக்கட்டு என்ற பத்திரிகையின் உதவி ஆசிரியர்; நடுநிசிப் பிதற்றல் துணை ஆசிரியர்; சஞ்சல கேசரி உப ஆசிரியர்; கோழிக்குப்பை என்ற கட்டுரைத் தொகுதி, ஏமாவிராயர் என்ற நாவல், ஒப்பாரி மோகம் என்ற கவிதைத் தொகுதி, ரயில் கத்தாழை என்ற கதைக்கொத்து; மிளகுத் துவையல் என்ற விமர்சன நூல் எல்லாம் எழுதியிருக்கிறார்".

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. நம்முடைய அகிருத்தியங்களையெல்லாம் ஒன்றுவிடாமல் கணக்கு எடுத்துவைத்திருக்கிறானே, இவன் யார் என்ற யோசனை எழுந்தது. உண்மையில் நம்முடைய பாபங்களையெல்லாம் கணக்கெடுப்பதற்காகவே உத்தியோகம் வகிக்கும் சித்திரகுப்தனால்கூட நான் செய்தவற்றை முழுவதும் கணக்கெடுப்பது சாத்தியமில்லையென்று நான் இறுமாப்புடன் இருந்தேன். உண்மையைச் சொல்லப்போனால், ஒரே ஒரு ஆசாமிக்குத்

தான் தெரியும் என்று நான் நினைத்திருந்தேன். அதுதான் என்னுடைய சகதர்மிணி.

ஆனால் இந்த ஆசாமி என்னுடைய மனைவியையும் மிஞ்சியவனாய் இருக்கிறானே!

அதோடுவிடவில்லை அந்த ஆசாமி! ஒவ்வொரு புத்தகமாக எடுத்துப் படிக்கத் தொடங்கிவிட்டார்.

"பஞ்சாங்கக்கட்டு" என்ற பத்திரிகைத் தொகுதி மொத்தம் பதினைந்து புஸ்தகங்கள். ஒரு பக்கம் விடாமல் அவர் படிக்கத் தொடங்கினார்.

எனக்குத் தூக்கம் வந்தது. கண்ணை மூடினேன். மறுவினாடியே திடுக்கிட்டு விழித்துக் கொண்டுவிட்டேன். ஏனெனில், அந்த ஆசாமியின் குரல் நின்றுவிட்டது.

எமன் புன்சிரிப்புடன் என்னைப் பார்த்தான். "சிகரெட்?" என்றான். நான் வேண்டாம் என்று தலையை அசைத்தேன். உடனே "பார்த்தீரா! மறந்து போய்விட்டேன். இவர்தான் உங்கள் நண்பர்! அந்த லோகத்திலே" என்று அறிமுகம் செய்தான். 'இவர் பெயர்தான் வாசகர் ஸ்வாமி.'"

அந்தப் பாவி மனுஷன் மீண்டும் ஆரம்பித்துவிட்டார். அவருக்கு வாய்தான் வலிக்காதோ!

ஓயாமல் வாசித்துக்கொண்டே போனார். நான் பூலோகத்தில் செய்த பாபமெல்லாம் என் கண் எதிரே தலைவிரித்தாடத் தொடங்கின. எனக்கு எழுந்து ஓடிவிட வேண்டுமென்று தோன்றிற்று. ஆனால் அந்த எமனைப் பார்த்ததும் எழுந்துபோகத் தைரியம் வரவில்லை. என்ன மரியாதை! என்ன புன்சிரிப்பு!

ஒரு வழியாக வாசிப்பு முடிந்தது. அதற்குள் அநேக நாட்கள் கடந்திருக்க வேண்டும் என்று தோன்றிற்று. எமனுடைய முகத்தில் இரண்டு அங்குல தாடி வளர்ந்திருந்தது ஆனால் பூலோகத்தில் அநேக யுகங்கள் ஆகியிருக்கவேண்டும். அநேகமாக, கலியுகம் முடிந்து, கிருதயுகமும் வந்து, ராமாவதாரம் நடந்திருக்க வேண்டும்.

இத்துடன் முடிந்ததே என்று நான் திருப்தியுடன் எழுந்திருக்கப் போனேன். யமன் என் குறியை யறிந்து கையை அமர்த்தினான்.

"ஒரு நிமிஷம் இரும். ஷேவ் செய்து கொண்டு வந்துவிடுகிறேன்" என்று "டக் டக்" கென்று மறைந்தான்.

எனக்குத் தலை ஒரே சுற்றாகச் சுற்றிற்று. அருவருப்பு உணர்ச்சி தோன்றிற்று. அதோடு, பசி வேறு ஆரம்பித்தது.

"டக் டக்" சத்தம் கேட்டுத் திரும்பினேன். எமன்! என்ன சத்தம்! என்ன பளபளப்பு!

என்னுடைய கஷ்டத்தை உணர்ந்தவன் போல் "உமக்குப் பசியாயிருக்குமே?" என்று கேட்டுக் கொண்டே வந்தான். நான் தலையை அசைத்தேன். உடனே இன்னொரு பொத்தானை அமுக்கினான்.

என்ன ஆச்சரியம்! ஒரு பிரமாண்டமான மேஜை எங்கிருந்தோ முளைத்தெழுந்தது! அதில் என்ன இருந்தது என்று நினைக்கிறீர்கள்! தட்டுத் தட்டாக இட்டிலிகள்; தோசைகள்; பூரிகள்.

நான் ஆவலுடன் ஓடினேன்.

"ஊம்! பொறும்!" என்றான் எமன். அப்போது எங்கிருந்தோ வாசகர் ஸ்வாமியும் வந்து சேர்ந்தார். அவருக்குச் சைகை செய்தான் எமன்.

என் பக்கத்தில் வந்த வாசகர் ஸ்வாமி மறுபடியும் ஆரம்பித்தார்.

"இந்த இட்டிலிகள் அவ்வளவும் உம்முடைய பஞ்சாங்கக் கட்டுகளை அறைத்துச் செய்தவை' நடுநிசிப் பிதற்றல்தான் தோசைகள்! ஒப்பாரி மோகத்திலிருந்துதான் சட்னி! கோழிக்குப்பை பூரிகளாகியிருக்கிறது... எல்லாம் நான் கிட்ட இருந்து தயார் செயதவை......"

"ஆமாம்! அத்தனை புஸ்தகங்களையும் கொண்டுவர இரண்டு விமானங்கள் போதவில்லை". இது எமனுடைய வியாக்கியானம்.

அட பாவிகளா! இவ்வளவையும் சாப்பிட்டாக வேண்டுமா?... என் மனம் பகிரென்றது...

திடுக்கிட்டு விழித்துக் கொண்டேன். கனவுதான்.

ஆனால் அந்தக் கனவினால் ஏற்பட்ட பீதி இன்னும் என் மனத்தைவிட்டு அகலவில்லை.

என்னைப் பழிக்குப்பழி வாங்க இந்த வாசகர் ஸ்வாமி இப்படிக் கங்கணம் கட்டிக்கொள்வானேன்! நான் எழுதுவது கோழிக்குப்பைதான்; அதைப் படிக்கும்படி இவரை யார் கட்டாயப்படுத்தினது? நான் தமிழிசைத் தம்பட்டம் முதல் தயிர் வடை ஆராய்ச்சி வரையில் எழுதும் அத்தனை கட்டுரைகளையும் படிக்கும்படி அவரிடம் சொன்னேனா?

போகிறது; அப்படியேதான் படித்தாரே; என்னிடம் வந்து ஒரு நாளைக்காவது அதைப்பற்றிக் குறைப்பட்டுச் சொல்லியிருப்பாரா? அதுமட்டுமில்லை; நேர் மாறாக, "அத்தனையும் அற்புதமாக யிருக்கிறது! ஆஹா! ஊஹூ!" என்று எனக்கு நாள் தவறாமல் கடிதங்கள் வேறு எதற்காக எழுதவேண்டும்!

இருக்கிறவரையில் என்னை 'சிண்டைத் தட்டிவிட்டு' வேடிக்கையும் பார்த்துவிட்டு, அங்கேயும் வந்து எமனுடன் சேர்ந்து சதி செய்வது நியாயமா என்றுதான் கேட்கிறேன். சர்வதேசப் பிரமுகர்கள் அடங்கிய ஒரு மத்தியஸ்த சபை விசாரிக்கவேண்டிய விஷயமில்லையா, இது?

அப்படியே யிருக்கட்டும்; இவரை நான் பழி வாங்குகிறேன் என்றே வைத்துக்கொள்வோம், ஐயா. அதற்கு இவர் பதிலுக்குப் பதில் என்ன செய்யவேண்டியது? உடனே தானே ஒரு பத்திரிகையை ஆரம்பித்து' என்னைத் தண்டிக்கலாமல்லவா?

அதற்கும் வசதியில்லையானால், என்ன! நமக்குத்தான் மறுஜென்மம் இருக்கிறதே. அப்போது இவர் பத்திரிகை போட்டால் நான் படிக்காமலா போய்விடப் போகிறேன்?

நான் சொல்வதில் நியாயம் இருக்கிறதா, இல்லையா, நீங்களே சொல்லுங்கள், வாசகர் ஸ்வாமி?

# மீண்டும் வருமா?

பார்வதி சோதரன்

பாரதியாரின் 'குயில்' பாட்டைப் படித்துக் கொண்டிருந்தேன், 'மனித உரு நீங்கிக் குயிலுருவம் வாராதோ" என்ற வரிகளை வாசித்ததும் என் கண்களில் நீர் துளிர்த்தது. மேலே புஸ்தகத்தைப் படிக்க முடியாமல் மூடி வைத்தேன். வாஸ்தவத்திலேயே இந்த நான்கைந்து வருஷங்களாக என் மனமும் ஏதோ ஒன்றை நாடியலைந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது பலவித விகாரங்களினால் மாசடைந்த என் இதயத்திலே ஆழங்காண முடியாத இடத்திலே ஓர் எண்ணம் தலைதூக்கிக் கொண்டிருந்தது.

குழந்தைப் பருவத்து, பால் போன்ற மாசற்ற உள்ளம், வயது ஏற ஏற, பலவித எண்ணங்களாலும் விகாரங்களாலும் தாக்கப்பட்டு, எவ்வித உணர்ச்சியுமற்ற ஜடமாய் விடுகிறது. இது என் அனுபவத்தில் சொன்ன வார்த்தை.

* * *

திண்ணைப் பள்ளிக்கூடத்திலே படித்துக்கொண்டிருந்தேன். வீட்டிற்கு எதிரிலே ஒரு பாழடைந்த பிள்ளையார் கோவில். கர்ப்பக்கிரஹத்திலுள்ள விநாயக பிம்பத்தைத் தவிர, மற்ற யாவும் க்ஷீணமடைந்து கிலமாய்விட்டது. வெளி மதில் இடிந்து தெருப்பக்கமாய்ச் சாய்ந்து மேடாக இருந்தது. ஊர்க் குழந்தைகள் எல்லோரும் அங்குதான் விளையாடுவோம். கோவிலுக்கு குருக்கள் ஒருவரும் இல்லை. கோடியகத்து சுந்தர சர்மா மட்டும் எப்பொழுதாவது வந்து பிள்ளையாருக்கு அபிஷேகம், பூஜை முதலிய சைத்யோபசாரங்களை செய்துவிட்டுப் போவார். மற்றப்படி அது யாரும் கவனிக்காத அனாதைக் கோயில் தான்.

"என்ன இருந்தாலும் பெரியவாளுக்கு இரக்கமே கிடையாது. இருந்தால், இப்படி பிள்ளையாரைக் கவனிக்காமல் இருப்பார்களா? மேலத் தெரு சிவன் கோவிலுக்கு மட்டும் எல்லோரும் போகிறாகள். திருநாள் என்றும், உற்சவம் என்றும் நடத்துகிறார்களே, என் பிள்ளையாருக்கு மட்டும் ஒன்றும் கிடையாதா? இருக்கட்டும். நானும் பெரியவனாய் சம்பாதிச்சு நிறைய பணம் சேர்த்து என் பிள்ளையாருக்கு பெரிய கோவில் கட்டி விடுகிறேன்" என்று என் குழந்தை உள்ளம் எண்ணமிட்டுக் கொண்டிருந்தது.

* * *

அரைப் பரீக்ஷை முடிந்து லீவு விட்டு விட்டார்கள். பள்ளிக்கூடத்திலிருந்து ஓடிவந்து வீட்டில் புஸ்தகத்தை விட்டெறிந்துவிட்டு, கோவிலுக்குள் நுழைந்தேன். பிள்ளையாரைச் சுற்றிலும் வாடிய பூமாலைகள் கிடந்தன. அவசர அவசரமாக அவைகளை எடுத்துவிட்டு, மேலத் தெரு தோட்டத்திற்கு ஓடினேன். தோட்டத்துக் காவல்காரன் யமன் மாதிரி நின்றுகொண்டிருந்தான். வாசல் கதவு வழியாகப் போனால் அவன் பிடித்துக் கொண்டு விடுவான். என்ன செய்வது?

பின்புறத்து மதில் சுவரில் ஏறிக் குதித்தேன். அங்கிருந்த கொன்னைப் புஷ்பங்களையும் வாடா மல்லிகையையும், மடி நிறையக் கட்டிக்கொண்டு, மீண்டும் என் பிள்ளையார் கோவிலுக்கு ஓடி வந்தேன்.

வரும்வழியில் என் சகாக்களும் சேர்ந்துகொண்டார்கள். எல்லோருக்கும் பரீக்ஷை முடிந்து சந்தோஷம் தலைக்கேறி யிருந்தது.

ஒருவன் ஜலம் கொண்டுவந்து பிள்ளையார் தலையில் கொட்டி அபிஷேகம் செய்தான். கொன்னைப் பூ மாலைகள் பிள்ளையார் கழுத்தைத் தழுவின - ஆனால் பிள்ளையாருக்கு வஸ்திரம்? நெஞ்சிலே ஓர் எண்ணம் உதித்தது. ஆனால், அம்மா அடிப்பாளே ..., உம்! பரவாயில்லை' என்று மனதைத் தேற்றிக்கொண்டு, வீட்டுக்குப் போய் அம்மாவுக்குத் தெரியாமல் தீபாவளிப் பட்டை எடுத்துவந்து பிள்ளையாருக்குக் கட்டினேன். தகர டப்பா மேளதாளம், திருடிக்கொண்டு வந்த சீடை, முறுக்கு நைவேத்யம். இவைகளால் என் பிள்ளையார் உற்சவம் நடந்தது.

அன்று இரவே அதற்கான பலனும் கிடைத்தது. என் அம்மாவிடம் என் முதுகு பட்ட அவஸ்தையை விவரிக்க வேண்டியதில்லை.

* * *

அடிப்பட்டதினாலும், சுவர் ஏறி கொன்னைப்பூப் பறித்த போது கீழே விழுந்து அடிபட்டதினாலும் ஜுரம் வந்துவிட்டது. கடுமையான ஜுரத்திலும் என கற்பனையில் பிள்ளையார் உற்சவம் நடந்து கொண்டிருந்தது - ஆனால் வெகு சீக்கிரத்தில் என கற்பனை கலைந்துவிட்டது. அம்மாவும், அடுத்தவீட்டு மாமியும் பேசிக்கொண்டிருந்தார்கள். "குழந்தைகள் பண்ணற இம்சை

பொறுக்க முடியவில்லை"......... "ஆமாம், பேசாமே பிள்ளையார் கோவிலுக்கு ஒரு கதவு போட வேண்டியதுதான்." "பண்ணை ஜயராமய்யர் நாளைக்கு தச்சர்களை வரச் சொல்லிவிட்டார்." இவைதான் என் காதில் விழுந்தது. அப்புறம் எனக்குப் பிரக்ஞையில்லை.

* * *

பிள்ளையார், சுந்தர குருக்கள் ஸ்வப்பனத்திலே தோன்றி, தனக்கு யாரும் கோவில் கட்டி, கதவுபோட்டு தன்னை அடைத்து விட வேண்டாமென்றும், தன் பிரிய குழந்தைகளின் சைத்யோபசாரமே தன் மனதுக்குப் பிடிக்கிறதென்றும் சொல்லிவிட்டதாக, மறுநாள் சுந்தர குருக்கள் எல்லோரிடமும் சொல்லிவிட்டார். அவர் வார்த்தைக்கு மதிப்பு உண்டாகையால், கதவு போட்டு எங்களைப் பிள்ளையாரிடமிருந்துப் பிரிக்கும் கைங்கரியம் முளைப்பதற்கு முன்பே அழிந்து விட்டது.

* * *

காலதேவனுக்குக் கண்ணில்லையே! என்றும், நான் குழந்தையாகவே இருக்கக்கூடாதோ? வயதும் ஆய்விட்டது. இப்பொழுது ஒரு உத்தியோகத்தில் நல்ல சம்பாத்தியம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், பிள்ளையார் உறவு மட்டும் விட்டுப் போகவில்லை.

ஒரு மாதம் ரஜாவில் ஊருக்கு வந்தேன். என் கண்களில் முதல் முதல் பட்டது பிள்ளையார் கோவில் தான். முன்னைவிட அதிக மோசமான நிலைமையில் காணப்பட்டது. என் மனது மிகவும் வேதனையடைந்தது. முன்னைப் போல் வாசல் மேட்டில் குழந்தைகள் விளையாட வரவில்லை ஏனோ தெரியவில்லை. விசாரித்ததில் விளையாட வரும் குழந்தைகள் யாருமில்லையென்றும், எல்லோரும் உத்தியோகத்திற்கும், காலேஜிகளில் வாசிப்பதற்கும் சென்று விட்டதாக தெரிய வந்தது.

கையிலே ஆயிரம் ரூபாய் ரொக்கமாக இருந்தது. அக்ரகாரத்து மேஸ்திரியிடம் சென்று கோயிலுக்கு சொற்ப செலவில் கதவு போடும்படியும் வெளி மதிலைப் பழுது பார்க்குபடியும் சொல்லிவிட்டு வந்தேன்.

அன்று இரவு. நிலவு காய்ந்து கொண்டிருந்தது,

என் மனதில்சந்தோஷம் நிரம்பியிருந்தது. என் பிள்ளையாருக்கு என் செலவில் காரியங்கள் நடத்த வேண்டிய நிலைமையை ஏற்படுத்தியதற்காக பிள்ளையாரை வணங்கினேன். தூக்கம் வரவில்லை. எழுந்து கோவில் திண்ணையில் உட்கார்ந்தேன் மனக் கண் முன் கற்பனை சித்திரம் உருவாகிக் கொண்டிருந்தது. ஊர் உறங்கி விட்டதால் ஒரே நிசப்தம்.

"அம்பி" என்ற சப்தம் என் ஏகாந்தத்தைக் கலைத்தது.

யார் அவ்விதம் கூப்பிட்டது!...... ஆம் விக்ரஹத்திலிருந்து தான் அந்தத் துவனி வந்திருக்க வேண்டும். என் தேகமும், இருதயமும் நடுங்கின. கண்கள் நீரை வர்ஷித்தன. சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தேன. என் தேகம் ஸ்மரணையற்றிருந்தது. ஆனாலும் உள்ளுணர்வு மங்காமல் தெளிவாக இருந்தது.

"அம்பி. உனக்கு மங்களம் உண்டாகட்டும்! நீ எனக்கு செய்யும் தொண்டு என் மனதிற்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது. ஆனால் உனக்கு ஒரு விஷயம் சொல்ல வேண்டும், குழந்தைகள் இருக்கும் இடந்தான் எனக்கு சுவர்க்கம். அவர்களுடைய மலர்க்காங்கள் என் மேல் பட்டால் என் தேகம் புளகாங்கிதம் அடைகிறது. அவர்களுடைய தகர டப்பா மேள ஓசை என் செவிகளுக்கு தேவகானம். அவர்கள் என் முன்னே ஆசையுடன் ஓடி வருவது, எனக்கு தேவ மனிதரின் கந்தர்வ நடனத்தைக் காட்டிலும் மேலாகத் தோன்றுகிறது. அவர்கள் திருடிக் கொண்டு வந்து தரும் சீடையும் முறுக்கும் என் பசிக்கு அமிர்தம் போன்றவை.

அவர்களை என்னிடமிருந்து பிரிக்காதே. உன் குழந்தைப் பருவத்தில் என்னை உன்னிடமிருந்து பிரிக்க எண்ணிய போது நானே வலுவில் அவர்களைத் தடுத்தேன். ஆனால் இன்று நீயே என்னை......! பரவாயில்லை. நீ என் குழந்தை. எழுந்திரு! கோயில் கட்டி என்னை சிறைப் படுத்தாதே. உனக்கு மீண்டும் ஆசி கூறுகிறேன்." என்று நிறுத்தினர்.

என் தலை சுழன்றது "என்னை மீண்டும் குழந்தையாக்கி விடு. என்னை பாபியாக்காதே" என்று விக்ரஹத்தின் முன் அலறினேன். ஆனால் மீண்டும் கல்லுப் பிள்ளையார் பேசாமல் இருந்து விட்டார். கண்களிலிருந்து விழுந்த நீர்த்துளிகள் என் கர்வத்தையும், அல்ப ஆசையையும் கரைத்து விட்டன.

* * *

பொங்கல் புது நாளில் ஊருக்கு மீண்டும் வந்த பொழுது, சின்னஞ் சிறு குழந்தைகள் தம் மனம் போனபடி பிள்ளையாரை ஆட்டிவைத்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். அந்தக் காட்சியைக் கண்ணுற்றதும் ஓர் பெருமூச்சு வந்தது. கண்கள் நீரை உகுத்தன.

"நானும் அக் குழந்தைகளுடன் ஒரு குழந்தையாகி விட மாட்டேனா? அப்பழைய நாட்கள் மீண்டும் வருமா" என்று ஏக்கமுற்றேன்.

# கதைக் காதல்

நாடகமணி-எம். என். எம். பாவலர்

"நீங்கள் எப்போதும் ந்ர்டகங்கள் தான் எழுதுகிறீர்களேயன்றி, உங்களிடமிருந்து கட்டுரை, அல்லது கதை கிடைப்பது அரிதாயிருக்கின்றது. தயவு செய்து நல்லதாகவும், சுருக்கமாகவும் ஒரு கதை எழுதி அனுப்புங்கள். காதல் கதையாக இருந்தால் வாசகர்கள் பெரிதும் ரஸிப்பார்கள். எங்களால் தக்க சன்மானமும் அளிக்கப்படும். தாங்களனுப்பிய நாடகத்தை திருப்பி அனுப்பியிருக்கின்ருேம். தயவு செய்து வருத்தப்படாமல் உடன் காதல் கதை ஒன்று அனுப்பி வைக்கவும்; எதிர் பார்க்கிருேம்" என்று ஒரு பிரபல பத்திரிகையின் ஆசிரியர் சமீபத்தில் கடிதமொன்றுடன் ந்ர்ன் அனுப்பிய நாடகத்தையும் அனுப்பி வைத்தார். "நாடகம்" என்ருல் பிரசுரிப்பதற்கு மிகவும் சங்கடப்படும் பத்திரிகாசிரியர் பலரில் மேற்க்ண்ட் ஆசிரியரும் ஒருவர் என்பதைத் தெள்ளத் தெளிவாக அறிந்தேன். "நவசக்தி", "தினசரி", "ஹிந்துஸ்தான்" போன்ற குறிப்பிடத்தக்க பத்திரிகைகள் நல்ல நாடகங்களைப் பெரிதும் வரவேற்கின்றன என்பதை உணரும்போதுதான் என் போன்ற நாடகப் பித்தர்களின் உணர்ச்சி குன்ருமலிருக்கின்றது.

கதை - காதல் கதை - ஒன்று எப்படியேனும் எழுதி அப் பத்திரிகையில், என் பெயரால் பிரசுரம் செய்யப்படல் வேண்டும். ஏனெனில் அக் காதல் கதையை ரஸிகர்கள் பெரிதும் ரஸிப்பார்கள், அல்லவா? எனக்கு ஆசிரியரின் சன்மானமும் கிடைக்கும். ஆகிய இத்யாதி காரணங்கள் என் மனதை அடிக்கடி வ்ர்ட்டிக் கொண்டிருந்தன. எப்படி காதல் கதையைத் தொடங்குவது? என்ற ... பலநாள் சிந்தித்துப் பார்த்தேன். தனியாக ஓர் அறையில் புகுந்துக்கொண்டு மனதை ஒரு வழி அடக்கிக் காதல் கதைக்கு அடிப்படை தேடினேன். இரவு நேரங்களில் உட்கார்ந்துகொண்டு சிந்தித்தேன். என் மனைவி எனக்குப் புத்தி சுவாதீனமில்லை யென்று புரளி செய்தாள். ந்ர்ன் என்ன செய்தும் எவ்வளவு நாட்கள் முயன்றும் காதல் கதை தவிர, மற்ற எல்லா கதைகளுக்கும் அஸ்திவாரம் தோனறியது, வெறுங் கற்பனைக்குக்கூட காதல் ஒளி எட்டவில்லை. கனவிலும் தோன்றவில்லை காதல் கதையின் உருவகம்.

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்ற தத்துவப்படி என் சிந்தனையின் முடிவு காதல் கதையின் கரை காணுவிடினும், "காதல் கதை" ஏன் எழுதமுடியவில்லை என்ற உண்மை ஒருவாறு லேசாகப் புலனுயிற்று. எவ்விதம்? "காதல் பண்பாட்டினை என் ஆயுட்காலத்தில் இதுவரை அனுஷ்டித்ததுமில்லை, அனுபவித்ததுமில்லை யாதலால், எனக்குக் க்ர்தல்கதை எழுத முடியவில்லை" என்ற உண்மை இப்போது நிச்சயம்ர்கத் தெரிந்தது. இனிமேல் காதல் பிரச்னைக்கும் எனக்கும் பொருத்தமில்லை யென்ருலும், கதை யெழுதுவதற்காக வேனும், காதல் உலகத்தில் புகுந்து, அனுபவப்பட்டு, ஒரு காதல் கதை எழுதவேண்டுமென்ற சித்தாந்தத்திற்கு வந்து சேர்ந்தேன். கதைக்காகக் காதல் கொள்ள வேண்டுமென்ற அவா என்னைப் பிடர் பிடித்தாட்டியது.

அடுத்தபடி, எக்காலத்தில்? ய்ர்ரிடம்? எம்முறையில் காதல் கொள்ளுவது? காதல் ஒரு தரப்புக் காதலா? இரு தரப்புக் காதலா? அல்லது எதிர்ப்பு முறையில் காதலா? நட்பு முறையில் காதல் கொள்ளுவதா? என்றப் பிரச்னை தலைதூக்கிற்று. எந்தப் பிரச்னை தலைதூக்கினுலும் சரி, கழுத்தைத் தூக்கினுலும் சரி, கதை யெழுதுவதற்காக, "ஒரு மங்கையைக் காதலிப்பது, அவ்விதம் காதலித்து, அதனுல் அடையும் காதல் அனுபவத்தை, அப்படியே படம் பிடித்தாற்போல சிறிய நடையில் அப் பத்திரிகைக்குக் காதல் கதையாக எழுதிவிட வேண்டியதுதான்" என்ற முடிவிற்கு வந்தேன்.

### சம்பவம்

கா தலுக்குக் க...
முன், மற்ருேர் ச...
மனதில் குடி புகுந்...
கும் காதலியிடம் எ...
காதல் கொள்ளுவ...
சந்தேகந்தான் அது...
என்னைக் க்ர்தலித்து, ந...
அவளை, க்ர்தல் முறைப்படி காதலிக்காவிட்டால் கேலிக் கூத்தாக முடியுமல்லவா? அதனுல் காதலன், காதலி சந்திப்புகளையும், காதல் சம்பாஷணைகளையும் காதலர்களிடம் நேரில் பார்க்கவும், கேட்கவும் விரும்பினேன். அதற்காக ஒரு பிரபல ஸ்டுடியோவிற்குள் சென்று காதலர் காட்சிகள் படம் பிடிப்பதைக் கூர்ந்து கவனித்தேன். பலநாள் க்வனித்தேன். படப் பிடிப்பாளர் என்னை அப்புறம் போகச் சொன்னுலும், நான் போகாமல், காதலர் பேச்சுகளை அப்படியே ஒரு டயரியில்
நோட் எடுத்து...ண்டேன்
நான் க்ர்தலியிட...
காதலன் படக...
யும் அபிநயங்களை...
களையும் அப்படி...
யடித்துக் கொண்...

நான் இருப்ப...
படப் பிடிப்பிற்கு...
இருக்கிறதென்று...

டர் அடிக்கடி இறைந்தார். அதனல் செட்டிங்கிற்கப்புறம் மறைவாக இருந்து அவர்கள் பேசுவதைக் குறிப்பெடுத்துக் கொண்டும், கவனித்துக்கொண்டு மிருந்தேன். ஒரு தினம் ஸ்டுடியோவில் உயர்ந்த காதல் கட்டக் காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது, அருமையான - காதல் சித்திரம் - மறுமலர்ச்சி நடையில் திளைத்த சம்பாஷணைகள். அச் சம்பாஷணையின் ஜீவனல் காதலி தன்னை மறந்து புளகாங்கிதங் கொண்டிருந்தாளென்றல், சம்பாஷணையின் ருசிகரத்தைப் பற்றி எடுத்துக்கூற இயலாதல்லவா? ......காதலி!.........என் காதல் மிகுந்த காதலீ!! "நூலிழை போல் ஊசலாடி ஓடி உன் பாதத்தில் பட்டு, தன்னைச் சுத்தப் படுத்திக் கொள்ளுகிறன் தென்றலென்பவன் - உனது நேத்திரங்களை கண்ணாடியென்று நினைத்து

அழகைப் பார்த்துக்

னது நேத்திரங்களை

றன கூட்டங் கூட்ட

ரங்கள்.........

எழுத்துக்

வாயால் உச்சரித்துக்

ட நோட்டெடுத்துக்

...டிருந்த என் கழுத்தில், படாரென்று ஒரு அடி விழுந்தது - கையிலிருந்த குறிப்புப் புஸ்தகம் பறிமுதலாய்விட்டது. பரபரவென்று வெளியே இழுத்துவரப் பட்டேன். பலவித சஹஸ்ரநாமங்கள் அர்ச்சிக்கப்பட்டன.

"யாரடா நீ? எங்கள் சம்பாஷணைகளை எழுதிக் கொண்டுபோய், எங்களுக்குப் போட்டியாக எடுக்கும் படக்காரரிடம் கொடுக்கப் போகின்றனையா? உளவாளிப் பயலே! உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று அந்த டைரக்டர் பாவி இங்கிலீஷிலும் ஹிந்தியிலும் உளறினன். பல

த்தில் நடிக்கும்

என் எதிரில்

முறுத்தினர்கள்.

கச் சம்பாஷணை

பெடுத்தேன்"

கூற என்னல்

என்னென்னவோ

முடிவில் அன்று

தம்பிரான் புண்

ணியமாய்விட்டது. நாலைந்து நாட்கள் முதுகிற்கு வெந்நீர் ஒத்தடம் கொடுத்து உடம்பை ஒருவாறு தேற்றினேன்.

இனியும் இந்த முயற்சியில் இறங்கலாமா? என்ற யோசனையில் அலைபாய்ந்தது என் மனம். "முயற்சி திருவினை யாக்கும்" என்று யாரோ, எப்பவோ சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. மேலும் முயற்சி செய்தேன்.

## சம்பவம் 2

பலநாள் பீச்சிற்குச் சென்று காதல் கண்களோடு பல நாரீமணிகளைப் பார்த்தேன். "காணமலே காதல் கொள்ளும் இவ்வுலகத்தில், என் பக்கம் கண்டதும் காதல் கொள்ளும் பாக்கியவதி ஒருத்தியாவது கிடையாளா" என்று மனோராச்சியம் செய்தேன். மனோராச்சியமாகவே என் ஆசை முடிந்துவிடும்போலிருந்தது. பலநாள் தவம் வீணகிவிடுகிறதே? என்று மனமுறிந்து போகும் சமயம் ஒரு மாதரசை சந்தித்தேன் கடற்கரையில். கண்டதும் காதல் என்ற வித்தை என் வரையில் பலிதமாய் விட்டது. அவள் மனம் எப்படி? என்று கண்டறிய தினசரி அவள் உட்காருமிடத்திற் கெதிரில் நான் உட்கார்ந்து வந்தேன. அவள் என்னைப் பார்த்ததும் பாராதது போல் இருந்தாளே யன்றி, அவள் கருத்து என்ன என்பதைப் பற்றி அறிய முடியவில்லை. அவள் தப்பித் தவறி கைக்குட்டையையோ, குடையையோ போட்டுப் போவாள்; "நான் எடுத்துக் கொடுக்கும் சந்தர்ப்பமாகப் பேச்சுக் கொடுக்கலாம்" என்று எண்ணினேன். நடைபெறவில்லை. ஒருநாள் காற்று கொஞ்சம் பலமாய் அடித்தது. "காற்று அதிக பலமாய் வீசி, மண்ணைக் கிளப்பி, அவள் கண்களில் கொட்டினல், அவள் 'ஐயோ! யாரும் உதவி செய்வாரில்லையா?' என்று அலறுவாள். நான் போய் உதவிசெய்து அவளின் அன்பைப் பெறலாம்" என்று கூட எண்ணினேன். கடவுளையும் வேண்டினேன். இந்தப் பாழும் உலகத்தில் நாம் எண்ணு

கிறவிதமா காரியங்கள் நடைபெறுகின்றன? வேறு உபாயத்தைக் கையாள முயற்சித்தேன். நான் சிறு வயதில் படித்த மனோவசிய வித்தைகள் என் ஞாபகத்திற்கு வந்தன. அதில் கூறியுள்ள பிரகாரம், பிரதிதினமும் அவளுக்கெதிராக உட்கார்ந்து முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். மனத்தை அவள் பால் லயிக்கச் செய்து அவள் மனதைத் திருப்ப முயற்சித்தேன். சில நாட்களில் என் முயற்சி பலிதமாகும்போல் தெரிந்தது. அவள் என்னை அடிக்கடி பார்த்துச் சிரித்தாள். அவள் புன்னகை ஒன்றிற்கு கோடி பொன் காணிக்கைச் செலுத்தலாம். ஆனல் என்னிடம் இல்லையே!

நாளுக்கு நாள் நேரம் சென்று அவள் வீட்டிற்குச் சென்றுள். "கண்ணொடு கண் நோக்கினல், வாய்ச் சொற்கள் பயனிலையே?" ஒரு தினம் அதிக நேரமாய் விட்டது. பூரண மதி மேகத்தில் மறைந்ததனல் இருள் இவ்வுலகைக் கவ்விற்று. அவள் மனமும் இளகிற்று. "ஐயா! தயவு செய்து என் வீட்டுவரைக் கொண்டுவந்து விட்டுப் போகிறீர்களா? இருட்டாய்விட்டது" என்று கொஞ்சும் மொழியில் கூறினள். அவ்வளவுதான். அவளுக்கடிமையானேன்! இவ்விதம் பலநாள் நான் அவளுக்குக் காவலாகினேன் - காதலனகவும் மாறிவிட்டேன். காதல் சம்பாஷணைகள் மெதுவாக ஆரம்பமாயிற்று. காதல் கனிந்த மொழிகளையும் பரிமாறிக்கொண்டோம்.

எங்கள் நட்பு - இல்லை காதல் எவ்வளவு உச்ச நிலைக்குப் போய் விட்டதென்பதைச் சுருங்கச் சொல்ல வேண்டுமானல் இந்த ஏட்டுப் பிரதிகள் இடங் கொடுக்காது. பரிசுத்தமான காதல் கொண்டோம். "அவளின் காதலின் றேல் சாதல்" என்ற தத்துவம் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்கிற்று. பலநாள் சென்றது போலவே, ஒருநாள் "காதல் பொக்கிஷம்" என்ற ஆங்கில சினிமா பார்க்க இருவரும் சென்றோம். அச் சினி... ஒரு

காட்சி: காதலர்கள் முத்தம் பரிமாறிக் கொள்ளும் காட்சி காணப்பட்டது. அதனைப் பார்த்ததும் என் மனம் பரவசப்பட்டு, அவள் மோவாய்க்கட்டையை அழுத்திப் பிடித்தேன். "ஐயோ!" என்று அலறினாள் அவள். அவள் வாயிலிருந்த பற்கள் என் கைமேல் விழுந்தன. "என்ன இது?" என்று என் இடது கையை தூக்கின சமயம், அவள் கூந்தலில் என் கைபட், கூந்தல் என் கையோடு வந்துவிட்டது. திடீரென இடைக்கால வெளிச்சம் போடப்பட்டது. அட கடவுளே! அவள் பல்லும் பொய். தலை மயிரும் பொய். அவள் தலையில் வெளிச்சம் பட்டு கண்ணாடி போல் மண்டை பிரகாசித்தது. அசல் கிழவியாகக் காட்சி அளித்தாள் என் காதலி - செயற்கைக் காதலி. அடுத்த நிமிஷம் ஒரே ஓட்டமெடுத்தேன். அவள் என்னை அழைத்துக்கொண்டே ஓடி வந்தாள். காதலியின் காதல் என்னை விட்டால் போதுமென்று கருதித் திரும்பிப் பார்க்கவும் பயந்து அங்கு பிடித்த ஓட்டம் என் வீட்டருகில் வந்து நின்றேன். அன்றையிலிருந்து காதல் பறந்து போயிற்று. அவள் காதலைவிட் சாதல் மேலாகக் காணப்பட்டது, இனிமேலும் கதைக்காகக் காதல் கொள்ள எண்ணம் வருமா எனக்கு?

## சம்பவம் 3.

ஆனால் வந்தது மீண்டும் அவ்வெண்ணம். எதிர்பாராமல் ஒரு நாள் பெரிய ஆஸ்பத்திரிக்குப் போய் கொண்டிருந்த ஒரு 'பெண் என்னைப் பார்த்துப் புன்னகை செய்தாள். சிலதினம் தொடர்ந்தாற்போல் இச் சம்பிரதாயங்கள் நடைபெற்றன. மெதுவாக ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து வார்டிற்குச் சென்று பார்த்ததில் அவள் வயிற்று வலி வார்டில் இருக்கும் பெரிய நர்ஸ். என்றறிந்தேன். என் காதல் நோக்கமும் சற்று அந்தஸ்துள்ள இடத்தில் பரவியது. நல்ல காலந்தான். இவளைக் கொண்டு எனது அந்தரங்க நோக்கமான காதல் கதையை எழுதி முடித்து விடலாமென்று மனப்பூர்வமாக நம்பிக்கை கொண்டேன். அவள் ஸ்பரிச உணர்ச்சியை முதலில் அடைந்து, பிறகு அதன் மூலம் காதலை ஏற்படுத்திக் கதை எழுதலாமென்ற நல்லெண்ணம் பளிச்சென்று தோன்றியது எனக்கு.

ஒரு தினம், "வயிற்றுவலி எனக்கு" என்று கூறி ஒரு சீட்டை வாங்கிக் கொண்டு முதல் பரீட்சை டாக்டரிடம் போன பிறகு, அந்த இலாகா பெரிய டாக்டரிடம் சென்றேன். என்னைக் கூப்பிடும் சமயம், வயிற்று வலியால் மிகவும் உபாதையடைந்தவன்போல் பாவம் செய்து நடித்தேன். அந்தச் சுந்தரி என்னைக் கைப்பிடித்தழைத்துப் போவாளல்லவா? அதனால், என் கருத்துப்படியே அவ்விளமங்கை என் சீட்டைக் கையில் வாங்கிக் கொண்டு, கைலாகு கொடுத்து அழைத்துச் சென்றாள். பல ஆறுதல் வார்த்தைகளைக் கூறினாள். அவ்வளவும் கனிந்த மொழிகள். எனது சீட்டைப் பார்த்ததும், பெரிய டாக்டர் அலறி என்னமோ கூவினார் பலமாக. என் நிலைமையைக் கண்டு பரதவித்தார். அடுத்த க்ஷணம் நான் ஆபரேஷன் ரூமிற்குக் கொண்டு போகப்பட்டேன். அங்கு பார்த்ததும் கதி கலங்கிப் போனேன். "ஐயோ! கடவுளே! எனக்கொன்றுமில்லையே! சும்மா இங்கு வந்தேன். வயிற்றுவலியில்லையே!-சார்! டா... சார்!" என்று பலங்கொண்டமட்டும் கத்தினேன். என் வார்த்தையைக் கேட்பாரில்லை...... அவள் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தேன்......என் கண்கள் மங்கிவிட்டன. வாயடைத்துப் போயிற்று.....மயக்கம் கொடுத்துவிட்டார்கள் போலும்!

மறுதினம் எனக்குப் பிரக்ஞை வந்தது. வயிற்றை ஆபரேஷன் செய்து, தைத்துக் கட்டு கட்டப்பட்டிருந்தது. நான்கு தினம் சென்று, அந்தச் சுந்தரி என்னிடம் நெருங்கி, "என்னு மேன்!...... சுத்த முட்டாளாயிருக்கிறே! நீ வயிற்றுவலி என்று துடிச்சே! உன் கேஸ் டேஞ்சர் சே... ...ல்லு நீ வைத்திரு... எழுதி இருந்தது.... டர்......உடனே ... செய்து பார்த்தா... ஒன்றுமில்லை. அப்பு... தால், வேறே ஒரு ... கொடுத்த சீட்டை... எடுத்து வந்துட்டே... - வீட்டுக்கு சு... என்று ... துரத்திவிட்டாள் ... சின்ன டாக்டர் மே... இருந்த வேறொ... நான் அவசர... எடுத்து வந்துவிட்டது போதுதான் ஞாபகத்திற்கு ... தது! இன்னும் ஆபரேஷன் காயம் ஆறவில்லை.

ஆசிரியர் அவர்களே! நான் காதல் கதை எழுதி அனு... வேண்டுமா? என்பதை இ... தாவது தயவுசெய்து ... யுங்கள்.

**குறிப்பு:**—இக்கதையில் ... பாரா தவிர ... கற்பனை.


151

## செந்தமிழ்

செந்தமிழ் ! வாழ்க நற்றமிழர் !

த் திருநாடு !

வருத்தும் இன்னல்கள் மாய்க !

க ! தீதெலாம் நலிக!

ந தேயத்தினர் நாடோறும் உயர்க !

வந்தேமாதரம்! வந்தேமாதரம் !

பாரதியார்

